# DHARMAMBAL

AN

INTERESTING TAMIL NOVEL

BY

Pandit V. K. SUBRAMANIA SASTRY.

THE SHANMUGA VILAS BOOK DEPOT,

G. T., MADRAS.

1917

 [Price Rs. 1-2-0

S. Murthy & Co., Printers, Madras.

# DHARMAMBAL

AN

INTERESTING TAMIL NOVEL

BY

Pandit V. K. SUBRAMANIA SASTRY.

THE SHANMUGA VILAS BOOK DEPOT,

G. T., MADRAS.

1917

 [Price Rs. 1-2-0

S. Murthy & Co., Printers, Madras.

# த ர் ம ா ம் ப ா ள்

ஓர் இனிய தமிழ் நாவல்

இது

பண்டித வி. கே. சுப்பிரமணிய சாஸ்திரியார்

இயற்றியது.



ஷண்முகவிலாஸ புஸ்தகசாலை

ஜியார்ஜ் டவுன், மதறாஸ்.

1917.



[விலை ரூபா. 1-2-0.

(ONE TO FOUR FORMS) PRINTED BY

S. MURTHY & CO., AT THE "KAPALEE PRESS."

305, THUMBU CHETTY STREET, MADRAS.

# முகவுரை.

தர்மத்தினாலேயே இந்த உலகம் தன் நிலையிலிருக்கின்றதென்பது அறிஞர் அறிந்ததாகும். எங்கும் நிறைந்தருளும் இறைவனால் வரையறுக்கப்பட்ட காலத்திற்கு ஒரு கணமேனும் முன் செல்லாமலும் ஒரு கணமேனும் பின் செல்லாமலும் சூரிய சந்திராதியர் தருமத்திலே கட்டுண்டு உதயாஸ்தமனமடைகின்றனர்; கடல் கரை கடவாமல் அடங்கி நிற்கின்றது. இவற்றாலும் உலகம் நிலைத்திருக்கின்றது. இவ்வாறே அக்னி வாயு முதலிய தேவர்கள் அநேகர் உலகத்தின் ஸ்திதிக்குக் காரணமாகின்றனர். இவைகட்கெல்லாம் பிரதானமான காரணம் தர்மம் ஒன்றேயாம்.

இத்தகைய மகிமைவாய்ந்த தர்மத்தை நிலைநாட்டக் கருதியே கருணையங் கடலாகிய ஸ்ரீ வான்மீகி முனிவர் இராமாயணம் என்னும் இதிகாசரத்தினத்தை இயற்றி அதன் வாயிலாக ஸ்திரீ புருஷர்கள், வேந்தர்கள் ஆகிய இவர்களுடைய தர்மங்களை வெளியிடுவாராயினர். தர்மம் ஒன்றைக் கைக்கொண்டியற்றுவதே, தர்மம், அர்த்தம், காமம் என்னும் மூன்றுபுருஷார்த்தங்களுக்கும் காரணமாகின்றதென ஸ்ரீராமபிரான் கூறியதாக ஸ்ரீமத் ராமாயணத்திலே அயோத்யா காண்டத்திலே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட தர்மம் இன்னதென்றும் அதனை யநுஷ்டிக்கவேண்டிய வழியிப்படிப்பட்டதென்றும் கூறுவது தெய்வீகமான வேதமேயாம். அந்த வேதம் எளிதிலறிதற்கரியதாதலால், அதனை அருணிறைந்த முனிவர்கள் மந்தபுத்திகளான இக்கலியுகத்தவர் உணர்ந்துய்யுமாறு தர்மசாஸ்திரங்களாக வெளியிடுவாராயினர். அவற்றின் கண் முக்காலத்தையும் அறிய வல்ல

வர்களாகிய முனிவர்கள் தங்களுடைய நுட்பமான அறி வால் வேதப்பொருளையே விளக்கியுள்ளார்கள். காலத்தை யேனும் தேசத்தையேனும் அல்லது தங்கள் விருப்பத்தை யேனும் அநுசரித்து அவர்கள் ஒன்றும் எழுதவில்லை. அப் படிப்பட்ட தர்மங்கள் தற்காலத்தே தோன்றும் நவீன நாக ரிகர்களால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு துணிந்து புறக்கணிக்கும் அன்னோர், பிறருக் கும் தமது கொள்கையைப் போதிக்க முற்பட்டுத் தர்மத்தைப் பாழ்படுத்துகின்றனர்; தங்கள் விருப்பம்போல மாற்றிக் கொள்வதும் ஆதாரமின்றியே செய்யப்படுகின்றது; காலத் தையொட்டி நாங்கள் மாற்றிக்கொள்கின்றோமென்று அவர் கள் யுக்திகள் கூறுகின்றனர்.

இயற்கையிலே கலிகாலக்கொடுமையால் மலினமடைந் துள்ள மனம், இப்படிப்பட்ட உபதேசங்கள் செவியி லேறியவுடன் தர்மத்தினின்று நழுவி விடுகிறது. நெருப்புப் பிடித்த சமயம் சூறுவளியும் சேர்ந்து கொண்டது போலத் தற்காலத்தில் இவ்வுலகம் நாவல் ரஸாநுபவ ஆநந்தத்திலே மூழ்கும் ப்ரவிர்த்தியை யடைந்திருப்பதால், வேத விலக் கான அதர்மங்களைத் தர்மங்களாகப்போதிக்கும் அநேக நாவல்கள் தோன்றுகின்றன. அவைகளின் உபதேசத்திற் கட்டுண்டவர் பலவர் பெரும்பான்மையராவர். உலக விவகா ரமும் தர்ம நியாயமும் உணர்ந்தவர்கள், உலகத்திற்கேற்பன செய்ய நினைப்பின், அவர்கள், உலகம் விரும்புவதுபோலவே நாவல்களெழுதி அவைகளிலே இலக்கண இலக்கிய வழுக்க ளின்றி இகபர சௌகரியத்திற்கேற்ற நற்போதனைகளைக் கதைப்போக்கின் இடை இடையே தோன்றும்படி செய்து தமக்கும் பிறருக்கும் பயன் படும்படியான நிலையிலே உழைப் பின் மேன்மை பெறுவார்கள். ஒவ்வொருவனும் தன்னு

டைய புத்திக்கும் கர்மவாஸனைக்கும் தக்கப்படி அதர்மத்தில் தானாகவே பிரவர்த்திக்கின்றான். அப்போது அறிஞர் அறிவூட்டுதலெதற்கு; இது நன்மை தரத்தக்கதென்றுணராத மாந்தர்க்கு, இதுதான் நன்மை பயக்கத்தக்கதென்று எடுத்துக்காட்டுவதல்லவா கற்றோர்க்கழகு? அப்படியிருக்கின்றமையின், தர்மவிரோதமான கொள்கை லோகோபகாரமாகாதென்று கருதிய அநேக ஸ்திகசிரோமணிகளின் தூண்டுதலுக்குட்பட்ட சாஸ்திரிகளவர்கள், தர்மாம்பாளென்னும் இந்த நாவலை யியற்றி இதன்கண் தர்மமகிமையை வெளியிட்டிருக்கின்றாரென்றறியலானோம்.

இந்த நூலாசிரியராகிய பிரஹ்மஸ்ரீ பண்டித வி. கே. சுப்ரமணிய சாஸ்திரிக ளவர்கள் ஸம்ஸ்கிருதத்தில் அநேக சாஸ்திரங்களிலே பாண்டித்யம் பெற்றவர்; ஸம்ஸ்கிருத பாஷையில் அநேக கிரந்தங்கள் இனிய ரஸபாவத்துடன் வெளியிட்டுக் கவிமணி யென்னும் புகழ்பெற்றவர். இந்நூலாசிரியர் நாகரிகத்தை முற்றும்விலக்கவேண்டுமென்னும் கருத்துடையவரல்லர். கேவலம் சாஸ்திரவிரோதமான காரியங்களை மாத்திரம் விலக்குந்தன்மையராவர். இந்நூலின் போக்கு மேற்கூறியவைகளைப் போதிப்பதாகும். இந்நூலிலே பிரவேசமாகும் ஒவ்வொருவரும் படித்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். கதாநாயகியான தர்மாம்பாளுக்கு இளம்வயதிலேயே ஸம்ஸ்கிருத ஞானம் ஏற்பட்டிருப்பதாகக் காட்டி வர்ணித்திருப்பதுவெகு மனோகரமாகவிருக்கின்றது. இதனால் சாஸ்திரிகள் பெண்கல்வியை வெறுப்பவரல்லவென்று நன்கு புலப்படுகிறது. இவர் தேவபாஷை யாகிய ஸம்ஸ்கிருதத்திலே தேர்ச்சி பெற்றவராதலின் அச்சுவையை யூட்டுமாறு அந்த பாஷா ஸம்பந்தமான சில சாதாரணமொழிகளை ஆங்காங்கு வாக்கியங்களிலே உபயோகித்திருக்கின்றார். அவைகளிற்

கஷ்டமான சில, இப்புத்தகம் பதிப்பித்தவராகிய பிரஹ்மஸ்ரீ ராஜா சாஸ்திரிகளால், விளக்கப்பட்டிருக்கின்றன. இவை சாலப்பொருத்தமான தென்றே கருதுகின்றேன். கதாநாயகி நாயகனுடைய ஸம்பாவிதங்கள் உலக வாழ்விலே சுகமும் துக்கமும் நிலையுடையவையல்ல, அவை சகடக்கால்போல மாறி மாறி வருவன என்பவற்றை விளக்குகின்றன. கஷ்டம் வந்தபோதும் நிலை தவறாமல் தர்மத்திலேயே நிற்பவர்கட்கு முடிவிலே சுகமும் அதர்மத்திலே பிரவேசிப்பவர்கட்குத் துக்கமும் சம்பவிக்குமென்பதை இந்நூல் செவ்வனே போதிக்கின்றது. அன்றியும் இக்கதையிலே நவரஸமும் சொற்சுவை பொருட்சுவையோடு வெகு இனிமையாக விளக்கப்பட்டிருக்கின்றன.

கடைசியாக இந்நூலில் நாம் கண்டது படிப்பின் சிறப்பே யாதலால் இந்நூல் சிறுவர் சிறுமியர் படித்தற் குரிய இன்றியமையாத நூல்களுள் ஒன்றென்பதிலையமினரும்.

25-11-16.
சென்னை. வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி.

# தர்மாம்பாள்

## முதலாவது ஆச்வாஸம்.

### அனுராகோற்பத்தி.

தையீ 2-ம் தேதி காவேரியாற்றில் சிற்சில இடங்களில் முழங்காலளவு தொடையளவு தெளிவான ஜலம் ஓடுகின்றது. ஜலம் நீருண்டமேகம்போலக் கறுத்திருக்கிறது. சிற்சில இடங்களில் மணற்றிட்டுகளிருக்கின்றன. சாயங்காலமானதால் பெருமணற்றிட்டுகளில் அநேக வாலிபர்கள் பலியடிப்பது பச்சைக்குதிரை தாண்டுவது ஆகிய இவைபோன்ற அநேக விளையாட்டு விளையாடுகிறார்கள். அன்றையதினம் இந்தத் தக்ஷிண தேசத்தாருக்குப் பெருத்த பண்டிகைகளில் ஒன்றாகிய கனுவானதால் ஸ்திரீகளெல்லோரும் அதிலும் பிராமண வகுப்பார் எல்லோரும் ஆடையாபரணங்களாலும் சந்தன புஷ்பாதிகளாலும் அலங்கரித்துக்கொண்டு விதம் விதமான அன்னங்களுடன் ஆற்றிற்கு வந்து குழந்தைகளுக்குக்கொடுத்துப் பரம குதூகலத்துடன் தாங்களும் சாப்பிடுகிறார்கள். சிறு குரலும் பெருங்குரலுமான அவர்களுடைய அழகான கண்டத்துவனிகளை ஆங்காங்குள்ள வாலிபர்கள் ஆனந்தத்துடன் கேட்டுச் சந்தோஷிக்கிறார்கள். நவரத்தினங்களு மிழைத்த அனேக திவ்யாபரணங்கள் பூண்ட அவர்களின் திருமேனிகளால், கறுத்த நிறமுள்ள அழகிய நதிஜலமானது, இந்திரசாபத்தாலும் ஸ்திரமான கொடிமின்

னல்களாலும் அலங்கரிக்கப்பட்ட மேகமண்டலம் போல் பிரகாசிக்கிறது. அப்படிப்பட்ட அவர்களைக் காப்பதற்காகவும் அக்குதூகலத்தைக் கண்ணுற்று ஆனந்த மடைய வேண்டியதற்காகவும் வந்த ஆடவர்கள் கரைகளிலும் படிக்கட்டுகளிலும் பூர்ணமாய் நின்றுகொண்டிருந்தனர். அக்காலம் குளிர்காலமானதால் எப்போதும் சட்டை போடாதவர்கூட மேலுக்குச்சட்டையும் தலைக்கு உலன் டவல்களையும் அநேகமாய் எல்லாரும் அணிந்திருந்தார்கள். சிற்சிலர் நாநாவர்ணமுள்ள சால்விப்போர்வைகளையும் மேலே போட்டுக் கொண்டிருந்தார்கள். இவைகளை யெல்லாம் பார்க்கச் சூரியனும் தன்னுடைய வாருணிதேவி பச்சிம ஸமுத்ரதீரத்தில் சாப்பிடுவதைக் குதூகலத்துடன் பார்க்க விரும்பித் திவ்ய பீதாம்பரத்தைத் தரித்தவர்போல் பொன்னிறமான தேஜஸ்ஸுடன் மேற்றிசையில் இறங்குகிறார். வெயில்பொன்னிறமாய்ப் பிரகாசித்து அந்தத் தீர்த்தத்தில் படிந்திருந்தது. அது குங்குமப்பூ கலந்த சந்தனத்தால் அலங்கரிக்கப் பட்ட ஸ்ரீராமருடைய அழகிய திருமேனியை ஒத்துத் துலங்கியது. பக்ஷிகள் ஆகாசத்தில் கலகலவென்று கத்திக்கொண்டு பறந்தன.

இத்தருணத்தில் அந்தசிந்தாமணியில் காவேரிப் பாலத்திற்கு மேற்புறத்திலுள்ள படிக் கட்டில் ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். அவன் பத்தரைமாற்றுத் தங்கத்தைக் காட்டிலும் அதிக மேனியுள்ள சரீரவண்ணம் பொருந்தினவனாயிருந்தான். காதுவரையில் நீண்டு ழுமேலும் கருத்துக் கம்பீரமான பார்வையுள்ள அவனது கண்கள் அந்தியில் அப்பொழுதுள்ள காட்சிகளைக் களிப்புடன் கவனித்துக் கொண்டிருந்தன. அவனது முகத்திலுள்ள தேஜஸ்ஸானது அவனையறிய விரும்பாதவர்களுக்குக் கூட

அவனை நல்ல*வித்யா ஸம்பன்னனென்றும் கம்பீர ஸ்வபாவமுள்ளவனென்பதையும் காமக்குரோதாதிகளுக்கு அபாத்திரனென்பதையும் மகாபுருஷனென்பதையும் போதித்தது. அவனுடைய முகத்தில் அரும்பியிருக்கின்ற மீசையானது அவனைச்சுமார் இருபது அல்லது இருபத்திரண்டு வயதுக்கு மேற்படாத வயதினை யுடையவனாக மதிக்கச்செய்தது. அவன் அங்குள்ள படித்துறையில் ஒரு கல்லில் வடமேற்கு முகமா யுட்கார்ந்து நிச்சலனுயிருந்ததை நோக்கினால் ஏதோகொஞ்சம் குதூகலாகிராந்தனாக இருந்தது தாய் நினைக்கவேண்டியதாயிருந்தது. அப்போது, இடுப்பில் பஞ்சகச்சம்கட்டின பட்டுவேஷ்டியும் மார்பில் நிர்மலமான லாங்க்ளாத்ஷர்டும் தோளில்காஞ்சிபுரம் அங்கவஸ்திரமும் தரித்த ஸமான வயதுள்ள மற்றொருவாலிபன் அவன் பின்னால் மெதுவாக வந்து அவனுக்குத்தெரியாமல் அவனுடைய இரண்டு கண்களையும் தனது செந்தாமறைபோன்ற கைகளால் மூடினான். உடனே உட்கார்ந்திருந்த வாலிபன் தன் கண்களின் மேலுள்ளகைகளை ஒருவாறு தடவிப்பார்த்துவிட்டு "காமேசுவரா! உனக்கின்னம்சிறுபிள்ளைத்தனம் போகவில்லையா? நீ எத்தனைகாலம் குழந்தையாய் இருக்கலா மென்று நினைக்கிறாய்" என்றான்.

காமே:—நண்ப! தர்ம! என்னைக் கிழவனென்று நினைத்துவிட்டாயா.!

தர்ம:—தோழா! அத்யாபி நீ உன்னைக் குழந்தை யென்றே மதிக்கிறாய் போலும்! இன்னம் இரண்டொரு மாதங்களானால் நீ ஒரு குழந்தைக்குத் தகப்பனாய் விடுவாய் என்பது உன் மனதிற் கெட்டவில்லையா?

காமே:—உனக்கும் உன் தகப்பனார் சரியான காலத்தில் கலியாணத்தைச் செய்து வைத்திருந்தாரானால், இந்நாளெல்

* கல்வியிற்றேர்ந்தவன்.

லாம் நீயும் 2-3-பிள்ளைகளுக்குப் பிதாவாக ஆயிருப்பாய், நீ இங்கிலீஷ் வாசிப்பதில் சுருக்காயிருந்த படியால் அவர் பணத்திற்கு ஆசைப்பட்டு உன்னை இன்னும் பிரம்மசாரியாகவே வைத்திருக்கிறார்; எனக்கு அப்படியில்லாமையால் அப்படிப்பட்ட பண அதிர்ஷ்டம் இல்லையென்று அறிந்த எனது பிதா எனக்கு பாலியத்திலேயே விவாகம் செய்து வைத்து விட்டார்.

தர்ம:—மித்ர! உன்பேச்சில் * வக்ரஸ்வபாவமே மேலிட்டிருக்கிறது, உன்னைப்போல் எனக்கும் பாலியத்தில் விவாகமாகாமலிருப்பது ஒரு பெரிய துரதிர்ஷ்டம் என்றே உனது கொள்கைபோல் விளங்குகிறது. வித்யாக்ரஹண காலத்தில் யௌவன சுகத்தை யனுபவிப்பது வித்தைக்கு இடையூறு என்பதை நீ யறியாய்போலும்; மேலும்...

காமே:—மித்ர! நீ சொல்வது வாசாலய வசனம்; மனதைப் போன போக்கெல்லாம் விடாமல் எப்பொழுது எந்தக் காரியத்தில் செலுத்தவேண்டிய நியாயமோ அப்படிச்செலுத்தி வருபவனுக்கு ஒன்றும் ஒன்றுக்கும் விக்கினமாகாது. நீயப்படிப்பட்ட ஜிதேந்திரிய னென்பதே எனது தாத்பரியம்; எனக்கும் யௌவன ப்ராரம்பத்தில், அதாவது பதினைந்தாவது வயதில் காந்தா சம்பந்தம் ஏற்பட்டது. நான் அப்போது அலங்காரங்களை முடித்துத் தர்க்க சாஸ்திரம் வாசித்துக்கொண் டிருந்தேன். பிறகு ஐந்து வருஷமாகின்றதல்லவா? இதற்குள் தர்க்கத்தில் பஞ்சவாதமும் முடித்து வியாகரணத்திலும் பாண்டித்யம் ஆய்விட்டது. சென்ற நவராத்திரியில் புதுக்கோட்டைக்குப் போய் வியாகரணம் முதலியதுப்பின் பரீக்ஷைகொடுத்து ஸம்பாவனையும் வாங்கி வந்துவிட்டேன். மேலும் செங்காப்பட்டியிருந்து

* கோணல்.

வந்த கோபாலன் உன்னுடன். S. P. G. காலேஜில் 1-வது வகுப்பில் சேர்ந்தானே அவனுக்குத்தான் இன்னும் கலியாணமாகவில்லையே, நீ B. A பாஸ்பண்ணி உயர்தர ரிவனியூ கிரிமினல் டெக்ஸ்டில் முதல்வகுப்பில் பாஸ் பண்ணிவிட்டு வந்துவிட்டாய். உனக்கு இனி டிப்டி கலெக்டர் வேலை வரையில் கிராசேக்ஷபமாய்க் கொடுப்பார்கள். அவனின்னமும் F. A. சமுத்திரத்தைக் கடந்தானில்லையே. நீ சொன்ன காரிய காரணபாவத்துக்கு * அன்வய வ்யபிசாரம் ‡ வ்யதிரேக வ்யபிசாரம் இவ்விரண்டையும் காண்பித்தேன், இனிநீ சொல்வதைச் சொல்.

தர்ம:—நீ காட்டிய வ்யபிசாரத்வயமும் சரிதான். ஆனாலும் உனக்குச் சாதாரண காரணமாகிய அதிர்ஷ்டமும் கோபாலனுக்கு அதின்பாவமும் கூடியபடியால் நீ இவ்வாறு சொல்லலாயிற்று.

காமே:—அப்படி யறிந்த நீ எனிப்படித் தாறுமாருய்க் காரிய காரணபாவங்களைக்கற்பித்து என்னிடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிருய்.

தர்ம:—சரி, எனது வாக்யபத்தைப் பூர்வபக்ஷமாய்ச் செய்துக் கேயஜயத்தை யடைந்ததாய் ஒப்புக் கொள்ளுகிறேன் நீ சொன்ன மற்ெருரு விஷயம் எனக்குப் பிடிக்கவில்லை.

காமே:—நான் உனக்குப் பிடிக்காம லிருக்கும்படி சொன்ன காரியமென்ன? விசதமாக உரை.

தர்ம:—ஏதோ பணத்தாசையால் எனது பிதா எனக்கு இதுவரையில் கலியாணம் பண்ணிவைக்கவில்லை யென்ருயே.

---

* காரணமிருந்தும் காரியமுண்டாகாமை.

†காரணமின்றிக் கார்ய உற்பத்தி.

காமே:—அதுவா? அது உலகத்தின் தற்கால ஸ்திதியை யனுசரித்துச் சொல்லப்பட்டது. உனது பிதா லோகாதீதரான மகா புருஷனென்பது எனக்குத் தெரியும். காலமப்படியல்லவா இருக்கிறது. சென்ற ஆனிமாதத்தில் ரூ—5000 கொடுத்து உன் தங்கை ருக்மிணியை உனது பிதா ஒரு B. A. க்குக் கொடுக்க வில்லையா? உனக்கு என்னைப்போல் 14-வது வயதில் கலியாணமாயிருந்தால் உயர்ந்தது ரூ1000 எதிர் ஜாமீன் அதாவது வரசுல்கம் கொடுப்பார்கள். இப்போதானால் 5-அல்லது 6-ஆயிரம் தட்டலாம்.

தர்ம:—இப்படி வரசுல்கம் வாங்குவது தான் பெருத்த கௌரவமென்றும் * யசஸ்கர மென்றும் நினைக்கிறாய்; இதனால் விழலுக்கிறைத்த ஜலம்போல் உனதாசாரியன் இவ்வளவு படிப்பையும் உனக்களித்திருக்கிறார் என்று நம்புகிறேன்.

காமே:—நீயும் நானும் பேசிவருகையில் எனதாசாரியனையேன் உனது உபாலம்பம் தொடுகின்றது. நீ உலகநடையைக் காணாமல் சுத்தப்படிப்பில் மாத்திரம் புத்திசெலுத்தி வந்தவனாதலால் இவ்வாறு பேசுகிறாய். இக்காலத்தில் கோவில்பரிசாரகன்கூட குறணிப்பணமில்லாமல் பெண்ணைக்கலியாணம் செய்வதில்லை யென்கிறான். நீ எனக்கு தர்மோபதேசம் செய்கிறாய்.

தர்ம:—ஆம், இப்போதைய ஜகத்ரீதியைநானறிவேன்; இப்போது மாப்பிள்ளைகளுக்குப் பணம்கொடுப்பது மாத்திரத்தினால் குடிகள் கெடவில்லை. அனாவசியமாகக் கலியாணங்களில் அதிகச்செலவுகள் செய்து குடிகளழிகின்றன.

காமே:—அதற்கு யாரென்ன செய்யலாம். கச்சேரி ஒன்று 30 ரூபாய்க்குப்பாடிக்கொண்டிருந்த சங்கீதவித்வான்

---

* கீர்த்தியையளிப்பது.

களும் 15 ரூபாய்க்குக் கைதபண்ணிக்கொண்டிருந்த பாகவதர்களும் இப்போது ரூ. 200,300 என்று கேட்கிறார்கள். அதில்லாமலும் கலியாணம் நிறக்கவில்லை.

தர்ம:—நீ யிப்போது விட்டுக் கொடுக்காமற் பேசுவதை யாலோசித்தால், இப்போது கர்ப்பத்திலுள்ள உனது குழந்தை ஆணாகப்பிறந்து ஆறாவது வயதில் அதற்குபநயனம் செய்வித்து எட்டாவது வயதில் வயதுக்கணக்குப்படி 8000 ரூபாய் வரதக்ஷிணை வாங்கவேண்டிய எண்ணமுன்னிடமிருக்கிறதாக என்மனதில் உதிக்கிறது.

காமே:—உதிக்கும். நீ சர்வக்ஞனைப்போல் எல்லா மறிவாய். நானுமிவ்விஷயத்தில் உலகத்தைவெறுக்கிறேன். இப்போது உலகத்தில் பரவிவரும் ஆசாரசீர்திருத்தச்சங்கத்தார் செய்துவரும் காரியங்கள் எல்லாம் சாஸ்திரவிரோதமாயும் பிராசீன சிஷ்டாசாரத்திற்கு விரோதமாயும் இருந்தாலும் அவர்கள் இவ்விஷயத்தில் தலையிட்டுக் கொண்டிருப்பதில் எனக்கு மிகச் சந்தோஷம்; மேலும் எனக்குப்பிறக்கும் பிள்ளைக்கு எப்படி வரசுல்கம் கிடைக்கும் இங்கிலீஷ் படித்தாலொழிய நம் ஜாதியில் காலணாக்கூட வரசுல்கம் கிடைக்காது. எங்கள் பரம்பரையில் இங்கிலீஷ் படிக்கவைப்பதுமில்லை நான் மாத்திரம் என் பிதாவினுடைய அப்ரீதியையும் கவனியாமல் மாதுலகிருகத்திலிருந்துகொண்டு 3 பாரம் வரையில்படித்தேன். வெகுநாள்வரையில் என்பிதா என்னை நிந்தித்துக்கொண்டேயிருந்தார். இரண்டு வருஷத்திற்கு முன் என் பிதாவிற்கு ஒரு தந்தி கிடைத்தது. நானந்தச் சமயத்தில் வீட்டிலில்லை. அது அஸ்தமனவேளை. தெருவிலும் ஒருவரும் கிடைக்கவில்லை. அவரதை வாசிக்க அலைந்துகொண்டிருக்கையில் நான் யதிருச்சையாய் வீட்டிற்குத்திரும்பினேன். முற்காலத்தியஜனங்களுக்குத் தந்தியென்றால் திகில். ஜாஸ்தியான

படியால் அவர் விசனக்குறியுடனிருப்பதைக்கண்டு அவரை விசாரித்து அந்தத் தந்தியை வாசித்துக் காட்டினேன். உடனே அவர் மகிழ்ந்து அன்றுமுதல் இங்கிலீஷ் படித்த தற்காக தூஷிப்பது கிடையாது. அப்படியிருக்க எங்கள் பத்தில் வரசுல்கத்தை யெப்படி யெதிர்பார்ப்பது?

தர்ம:—கவலைப்படாதே; உன்பிதாவுக்கு இப்போது தான் இங்கிலீஷ் பாஷையின் அருமை தெரியவருகிறது. உன் பிள்ளை படிக்கவருங்காலத்தில் அவர் கட்டாயம் இங்கிலீஷ் ஸ்கூலுக்கே அனுப்புவார்; அதிருக்கட்டும், ஆசாரத்திருத்த சங்கத்தார் தலையிட்டுக்கொண்டிருப்பதால் இந்த வரசுல்கமென்கிற துராசாரம் சீர்திருத்தத்திற்கு வந்து விடுமென்று நினைக்கிறாயோ? அது குதிரைக் கொம்புதான். ஆசாரத் திருத்த சங்கத்திற்கு நியாயமான மெம்பர்களா யுள்ளவர்களெல்லாம் சங்கத்தில் பாலியவிவாகம் கூடாது, கூடாது, என்று சொல்லிக்கொண்டே தங்கள் தங்கள் குழந்தைகளுக்கு [illegible] வயதிற்குள்ளே கலியாணத்தை முடித்து விடுகிறார்களே உனக்குத் தெரியாதா?

காமேச:—தெரியும், அவ்விதம் சுருதி ஸ்மிருதி விருத்தமாய்ப் பேசமாத்திரந்தான் கலிபுருஷன் இப்போது தைரியம் கொடுத்திருக்கிறான். நடத்த தைரியத்தைக் கொடுக்க இன்னும் கொஞ்ச காலம் செல்லவேண்டும்.

தர்ம:—கலி முற்ற முற்ற தர்மங்களெல்லாம் தாமாகவே மாறுதலை யடையப்போகிறது. இவர்களின் பிரயாஸம் அனாவசியந்தான். ஆனால் புருஷப் பிரயத்தனம் வேண்டுமென்பது அவர்கள் கொள்கை. அதுவும் நியாயந் தான். முன்காலங்களில் தர்மலோபங்களை யகற்றுவதற்காக ஆங்காங்கு சபைகளேற்பட்டுத் தர்மபரிபாலனம் செய்து வந்ததாய் இதிகாசங்களில் கேள்விப்படுகிறோம். இப்போது

அந்தஸ்தாநத்தில் அதர்மாபிவிருத்தியை யுத்தேசித்து சபைகளேற்படுகின்றன. அஹோ கலியின் பலமேபலம்.

காமே:—நீ இக்கலியில் பிறந்தவனே இல்லையோ வென்பது எனக்குச் சந்தேகம்; அல்லது பரீக்ஷித்துமகாராஜன் போல் கலியை ஜயித்துவிட்டாயோ, இருக்கட்டும்; இன்னம் எத்தனையோ நூதன சம்பவங்களை நமது ஆயுளில் பார்க்கலாம் பார்ப்போம்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் சூரியனும் மேற்றிசையில் மறைந்தான். காவேரி ஜலத்தைக்கணங்களாக்கியெடுத்துக்கொண்டு ஜிலீரென்று காற்று வீசிற்று பக்ஷிகளெல்லாம்தன் கூண்டுகளை நோக்கி விரைவில்போய்க் கொண்டிருந்தன. காவேரிக்குச் சாப்பாட்டுக்காகவந்த ஸ்திரீ ஜனங்களெல்லாம் உண்டு சந்தனம் பூசி தாம்பூலதாரணம் செய்துகொண்டு வீட்டிற்குத் திரும்பினார்கள். சிலர் நடந்து போனார்கள். சிலர் ரோட்டுவரையில் நடந்துபோய் அவ்விடத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற தங்கள் தங்கள் வண்டிகளிலேறிக்கொண்டு போனார்கள். சிலர் தங்கள் சௌபாக்கியத்தைப் பிரசம்ஸை செய்துகொண்டும் சிலர் தங்கள் குறைகளைச் சொல்லிக்கொண்டும் போய்க்கொண்டிருக்கிறார்கள். சிலர் வேடிக்கையாய் லீலாவசனங்களைச் சொல்லிக்கொண்டு சிரிப்புடன் உல்லாஸமாய் நடக்கிறார்கள். சிலர் தங்கள்வண்டிகளில் குழந்தைகளை மாத்திரம் ஏற்றிவிட்டு சாயங்கால வேளைநடையில் ஒருவித ஆசையால் தங்கள் தோழிகளுடன் நடந்தே செல்லுகின்றார்கள். இவ்வாறு அவர்கள் சென்றுகொண்டிருக்கையில் அவர்களுடைய தலையிற்றடவியுள்ள உயர்ந்தவாசனைத்தைலத்தையும் அப்போதுஅவர்கள் பூசிக்கொண்டிருந்த சந்தனத்தையும் தலையிலணிந்திருந்த ஜாதி முதலிய புஷ்பங்களையும் வாயிலுள்ள தாம்பூலரஸத்

லையும் தொட்டு பரமஸௌகந்தமான காற்று வீசிற்று. அது எப்படிப்பட்ட ஆடவர்களின் புலன்களையும் அபகரித்தது. அதனால் புருஷார்த்தினனாகிய நமது கதாநாயகனை தர்மனும் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருந்து கரையை நோக்கிக்கொண்டிருக்கின்றான். தாமோதரனும் அவன் தோளிற் கைபோட்டுக்கொண்டு இமைபிரியாமல் நின்றான்.

இவ்வாறிருக்கையில் அப்பெண் கூட்டத்தின் கடைசியில் துலங்கின பாத்திரங்களைக் கையிலெடுத்துக்கொண்டு சுமார் 35-வயதுள்ள ஓர் அங்கஹீனமான் மேற்கிலிருந்து வந்துகொண்டிருந்தாள். அவளுக்குப்பின், பெருகிட்ட தங்கம்போல் பளபளப்பான திருத்தசரீரத்துடனும் வாரிப் பின்னியிருக்கும் தலையில் சூட்டப்பட்டிருக்கிற ஜாதிப் புஷ்பத்துடனும் சுகந்த வஸ்துக்களால் பூரணமான தாம்பூல சர்வணத்தால் இரட்டித்த சிவப்புள்ள உதடுகளுடனும் லோக சுந்தரியான ஒருபெண் மெல்லமாய் நடந்து வந்துகொண்டிருந்தாள். அவள் உடம்பைப்புக்குத் தக்கபடி யோசித்தால் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயது இருக்கலாம். அவளுடைய கழுத்திலும் காதுகளிலும் கைகளிலும் மூக்கிலும் ஸ்திரீகள் அணியக்கூடிய சகல ஆபரணங்களும் ரத்தினங்களால் பிரகாசித்துக்கொண்டிருக்க திருமாங்கல்யம் எனப்பெயர்வழங்கும் ஒருவிதமான ஆபரணம் மாத்திரம் அவள் கழுத்தில் காணாததால் அவளுக்கு அந்தக்ஷணம் வரையில் கல்யாணமாகவில்லையென்பது விளங்குமாயிற்று. இப்படிப்பட்ட சிங்காரத்தினளை அனுரூப புருஷனுக்கே மணம் செய்விக்கவேண்டுமென்று சொல்லுகிற பெரியோர்வசனப்படியான் அந்தக்ஷணத்தில் அவளுடைய சரீர பரிமளத்தைப் பெற்றுக்கொண்டிருந்தது தர்மனிடம் வந்தார். அவ்வழகிதைத்தைப் பெற்றவள்போல நமது தர்மனும் தெ

த்தியங்கமும் அவளை ஆலோகனம் செய்தான். அவனுடைய கண்கள் மலர்ந்தன. புத்தி பிரமித்தது. தேகம் சிலிர்த்தது. முகம் வேர்ந்தது. புத்திக்கு விஷயாந்தரங்களில் பிரவேசம் கொடுக்காமல் ஜீவலோகத்தைத்தன் மயமாகவே நினைத்தான். பின்வருமாறு மனதில் சிந்திக்கலானான்.

கன்யாரத்னங்களை எண்ண ஆரம்பித்தால் இவளல்லவோ சுண்டுவிரலுக்கு யோக்கியம். இவளைப் போலுள்ள பெண்கள் லோகத்தில் ஜனிப்பதனாலே நான் விவேகிகள்கூட ஸம்ஸாரத்தை விரும்புகின்றார்கள். அழகுவாய்ந்த பெண்களை மணக்காதபடியால் அல்லவா உலகத்தில் புருஷவியபிசாரம் அதிகமாயிருக்கிறது? இவளுடைய முகத்திலுள்ளஜர் விஜாதீயமானதேஜஸ்ஸைக் கண்டால் இவளுக்குநல்லபடிப்பும் புத்தியும் அமைந்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது "ரூபமே மகிமையைச்சொல்லும்" என்கிறவேதவாக்கியப்படி இவளுக்குப் பொருந்தியிருக்கும் அழகுக்குத்தக்கப்படி குணங்களும் கூடியிருக்கவேண்டுமென நினைக்கிறேன். நாம் தர்மத்தை நம்பியிருக்கிறது வாஸ்தவமேயானாலும் நமது பிதுருபிதாமஹாதிகள்செய்திருக்கிற தவம்ஸபலமாவது நிஜமென்றாலும் இவளதுபிதா நமது பிதாவைநாடி அவருமொப்ப நமக்கிந்தப் பெண்ணைபாணிக்கிரகணம் செய்துவைக்கவேண்டும். இவளையன்றி வேறெந்தப் பெண்ணை மணந்தாலும் நமக்கிந்த ஸம்ஸாரமென்பது நரகந்தான்.

இவனிவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கையில் அந்தப் பெண்ணும் மெள்ள இவனிருக்குமிடத்திற்கு நேராய் வந்தாள். சுற்றிலும் கண்ணைவைத்து வேடிக்கை பார்த்து வந்த அந்தப்பெண் நமது தர்மனை யும் நோக்கினாள். அவனுடைய தேகத்தில் விழுந்த அவளுடையகண் அவனுத்தி

வன்றியில் *ஆபாத மஸ்தகம் அவளுடைய சரீரத்தில் சஞ்சரித்தது. அவளும் அந்தக் கண்ணைத் திருப்பிக் கொண்டுவர முயன்றாள். அது திரும்பிவரச் சம்மதிக்கவில்லை. அவளதை ஏன் திரும்ப உன்னிருப்பிடம் வர இச்சிக்கிறா யில்லையென்று கேட்டாள். எந்த இடத்திற்குப் போனால் நானெடுத்த ஜனனம் சபலமாகுமோ அந்த இடத்திற்கு நானிப்போதுதான் வந்தேன். இனி நீ யென்னைக் கூப்பிடலாகாது, என்னை அவரிடமே விட்டு விட்டு நீ உன்னிருப்பிடம் போகலாமென்று அது விடையளித்தது. அவளும் அதற்காக க்ஷண காலம் † ஸ்தப்தமாய் நின்றாள். உன்னைத்தாராளமான வழியிலே செல்ல விட்டாலல்லவோ திரும்ப மாட்டேனென்கிறாய் உன் வழியை மறிக்கிறேன் என்று கருவிழியை கடைக்கண்ணில் வைத்து கடாக்ஷங்களாக வர்ஷித்தாள். இந்த வியவஹாரத்தையறியாத கூடவந்த அவளது சிறியதாயார் என்னடி தர்மி! நிற்கிறாய், இதுவரையில் பார்த்த வேடிக்கை போதாதா? இருட்டிப் போகிறதே, இன்னம் ஒரு ஜாமையில் போகவேணுமே வீட்டிற்கு, வண்டிக்காரன் காத்திருப்பானே; என்று படுத்தாள். இதைக் கேட்ட நமது கதாநாயகியான தர்மாம்பாள் கவலையடைந்து "ஐயோ என்ன செய்வேன்; கண் ஓரிடமிழுக்கின்றது, இவள் ஓரிடம் அழைக்கின்றாள். நமதங்கங்களிலொன்றாகிய நமது கண் நமது ஸ்வாதீனத்தி லிருக்கின்றதென, இதுவரையில் எண்ணிமோசம் போனேன், துஷ்டக் குதிரையைக் கூடத்திருப்பலாம், நமதங்கமாகிய நமது கண்ணைத்திருப்பிக் கொண்டுவர எனக்குச் சக்தியில்லையே, ஏதாவது ஒரு வ்யாஜபம் சொல்லி அதுபோய்ச் சேர்ந்த இடத்திற்குப் போய் அதை யெடுத்துக்கொண்டு எனது சிற்றன்னையுடன் நான்

*கால் முதல் தலைவரையில் † அசையாமல்.

போகிறேன்'' என்று கடைசியாகத் தீர்மானித்து, அம்மா, நான்வரும்போது காலே ஏதோ கொஞ்சம் சேற்றில் வைத்து விட்டேன், கால்களை அலம்பி சுத்திசெய்துகொண்டு வருகிறேன்''என்று சொல்ல "காலலம்ப என் கையிலுள்ளபாத்திரத்தில் ஜலமிருக்கிறது, நீ எங்கும் போகாதே, இருட்டுகிறது'' என்று தனதுசிற்றன்னை சொல்லும் வார்த்தைகளைக் கேட்டும் கேட்காதவள்போல அவளது கண் தங்கியிருக்கும் இடத்திற்குச் சரியாய் ஆற்றில் இறங்கிக் கால்களை யலம்புவது போலப்பாசாங்கு செய்து திரும்பி வரும்போது தன் கைகளில் அகப்படாமல் அப்புருஷ மணியினங்கம் முழுமையும் அலைந்து கொண்டிருக்கும் தனது கண்ணை எவ்வாறு முயன்றும் திருப்பிக்கொண்டு வரமுடியாமல் கடைசியாய் அதை யவ்விடமே விட்டுவிட்டுத் தனது சிற்றன்னையினிடம் வந்தாள். பின் தனது சிற்றன்னையுடன் மெல்ல மெல்லத் திரும்பிப்பார்த்துக் கொண்டே நடந்து வண்டியேறி விடுபோய்ச் சேர்ந்தாள்.

அவ்வாறு அவள் போனதும் பணம் பறிகொடுத்த ஏழைபோல் கலங்கின மனதுடன் நிற்கிற நமது தர்மனைப் பார்த்து காமேசுவரன் "என்ன? உன்னைப்பார்த்தால் ஏதோ பறிகொடுத்தவன் போல் தோன்றுகிறது. உனது உடம்பின் தற்காலஸ்திதியைக் கண்டால் ஏதோ வியாதியடைந்தவன் போல் காணப்படுகிறதே''

தர்ம:—ஆம் ஒரு விபரீதமான வியாதியு மிருக்கிறது;என்னுடைய முக்கியமான ஒரு பதார்த்தம் அபகரிக்கப் பட்டுப் போய்விட்டது.

காமே:—(சிரிப்புடன்) எந்த வியாதி மணிமந்திர ஔஷதங்களி லொன்றாலும் நிவர்த்திக்க முடியாமல் தனதபீஷ்டகாந்தா கரஸ்பர்சத்தால் மாத்திரம் உபசமனம்பண்

னாக்கூடியதோ அப்படிப்பட்ட மதனவியாதி உனக்குண்டாய் விட்டதென்றும் உனது அருமையான பதார்த்தங்களுள் முக்கியமான சித்தம் என்னும் பொருள் அபகரிக்கப் பட்டதென்றும் அறிந்துகொண்டேன். உனதபிப்பிராயத்தைத்தெளிவாய் தெரிவித்தாயானால் உன்வியாதியை நிவர்த்திக்கவும் கெட்டுப்போன பொருளைத் திருடனைக்கொண்டே திரும்பவுங் கொண்டுவந்து கொடுக்கும்படிக்கும் நான் ஏற்பாடு செய்வேன்.

தர்ம:—(இலஜ்ஜையால் மறுமொழி கூறவில்லை.)

காமே:—நண்பா! உன்முகத்தைப் பார்த்து நீ லஜ்ஜாக்ராந்தனாயிருப்பதாய்த் தெரிந்துகொண்டேன்; என்னிடத்தில் நீயப்படி யிருக்க நியாயமில்லை.

ஆபிரம்மகீடம் அக்கொடியோனாகிய மன்மதனிடம் அகப்படாதவரில்லை; பிராம்மண்யத்தைச் சம்பாதிக்கத் தவம் செய்யப்போன விசுவாமித்திரர் கூட மேனகையுடன் அநேக வருஷம் கூடியிருந்து சகுந்தலையைப் பெற்றெடுக்கவில்லையா? துஷ்டர்களான அசுரர்களை வஞ்சிப்பதற்காக ஸ்திரீயுருவங் கொண்ட மகாவிஷ்ணுவைக்கண்டு மோகித்துப் பரமசிவன் துரத்தவில்லையா? ஸர்வக்ஞரான பரமசிவனுக்குக்கூட ஞானோபதேசம் செய்த குமார குருவானவர்காட்டில் வள்ளி யென்ற ஒரு பெண்ணைக்கண்டு மோகிக்க வில்லையா? ஆகையால் காமனை ஜயித்த தென்பது கேவல புராண வாக்கியமே தவிர ஒருவருக்கும் இச்சிருஷ்டியில் ஆத்யந்திகமாகக்கிடையாது. அப்படியில்லாமலிருந்தால் இவ்வுலகமே அற்றுப்போய்விடும், மேலும் எப்படிப் பட்ட இரகஸிய சமாசாரத்தையும் ஸுஹிருத்துக்களுடன் சொன்னால் காரியம் எப்படியும் ஸித்தி பெறும் என்பதில் ஐயமில்லை. அக்கினி மித்திரமாகா

ராஜன் தனக்கு மாளவிகையினிடமிருந்த அநுராகத்தைக் கௌதமனென்னும் தனது நண்பனிடம் சொன்னதின்பேரில் அவன் அநேக உபாயங்களால் அரசனுக்கு மாளவிகையைச் சேர்த்து வைத்தானென்பதை நீ மாளவிகாக்னிமித்திரம் வாசித்ததிலிருந்து தெரிந்து கொள்ளவில்லையா? ஆகையால் லஜ்ஜையை விட்டு உன்னிடம் உள்ளபடி உன் மனோரதத்தைச் சொல்.

தர்ம:—அப்பா மித்ரமணே! என்ன பிரமாதமான ரகஸ்யம். இந்தத்துறையில் காலலம்பவந்தபெண் அதிகவயசாகியும் விவாகமாகாதவளாகக் காணப்பட்டாள். அவளுடைய அழகும் அவள் முகக்குறியால் ஊகிக்கத்தக்க ஸகுணங்களுக்கும் ஏனிதுவரையில் விவாகமாகாமலிருக்க வேண்டுமென்று சற்றே யாலோசித்தேன். அதற்குள் உனது உபன்யாசத்திற்குப் பாத்திரனாக ஆனேன்.

காமே:—ஆம் வாஸ்தவமா யிருக்கலாம். ஊரிலுள்ள பெண்களுக்குக் கல்யாணம் ஆகாவிட்டால் நீதானே கவலைப்படவேண்டும். இருக்கட்டும், நீதான் அவளுக்கு விவாகமாகவில்லையேயென்று கவலைப்படுகிறாயே; நீயே அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்வாயா? அப்படிச் செய்வாயானால் நீ கவலைப்பட்டது சபலமாகும், அப்போது உனது கருணாகுணம் விளங்கும்.

தர்ம:—பிரியமித்ர! நானவளைப் பரிக்கிரகம பண்ணிக் கொள்வதப்புறமிருக்கட்டும். அவளுடைய ஜாதி குலம் கோத்திரம் எல்லாம் உனக்குத்தெரியுமா?

காமே:—ஜாதி குலம் விசாரியாமலே எல்லாரும் எல்லாப்பெண்களையும் விவாகம்செய்து கொள்ளலாமென்று தீர்மானமாகிற இக்காலத்திலேகூட நீ இக்கேள்விகளைக் கேட்கிறாய்.

தர்ம.—பிரியநண்ப! சாஸ்திரத்தைமீறிநடப்பவர்களுக்கு நரகமுண்டென்பது எனது நம்பிக்கை. நீ எல்லாம்படித்தும் எனிப்படிப் பிதற்றுகிறாய். படித்தவர்களும் பாமரரைப் போல் பேசினால் படிப்பு வியர்த்தமென்றே நினைக்க வேண்டியதாகவரும்.

காமே:—இப்போதுள்ள ஜகத்ரீதியை உனக்குச்சொன்னேனே யல்லது உனக்கும் எனக்கும் சொன்னது அல்ல.

தர்ம:—அஃதிருக்கட்டும், நான் கேட்ட கேள்விக்கு உத்தரம் சொல்.

காமே:—சொல்லுகிறேன், அந்தப்பெண் நமது வகுப்பைச் சேர்ந்த பெண்தான்; அவளுடைய பிதாவின் பெயர் புருஷோத்தமய்யர். அவருடைய வாசஸ்தலம் மதுரை மாசிவீதி. அவருக்கு வருஷம் 1-க்கு சுமார் 50000-ரூபாய் நிலங்களிலிருந்தும் லேவாதேவியிலிருந்தும் வரும்படி வருகிறது. உன்னுடன் படித்தவனும் இவ்வருஷம் B. A. பரீக்ஷைக்குப் போயிருப்பவனுமான சுந்தரேசனும் இந்தப்பெண்ணும் அவருடைய பிரதமதாரத்தின் குழந்தைகள்.

தர்ம:—நமது M. P. சுந்தரேசனுக்குத் தங்கையா? அப்படியானால் நாமதிலே பிரவர்த்திக்கக்கூடாது.

காமே:—அதென்ன அப்படிச் சொல்லுகிறாய். அதிலேதான் நாம் பிரவேசிக்கலாம். அவனே உனதருமையான யோக்கியதையைப் பூராவாக அறிவான். சிநேகிதரின் தங்கையைக் கலியாணம் பண்ணலாகாதென்று ஒரு ஸ்மிருதியும் பேசவில்லையே.

தர்ம:—நான் சாஸ்திரவிரோதமென்று சொல்லவில்லை. அவன் எதாவது நினைப்பான். ஒவ்வொருவரின் மனம் ஒவ்வொரு விதமாய் இருக்குமல்லவா? அதிலும் ஸ்திரீவிஷயங்களில், முக்கியமாய் அவனுடைய மனஸ்தாபத்தை நாமடையக்கூடாதல்லவா?

காமே:—நீ கவலைப்படவேண்டாம். பெண்ணை யெப்படியும் ஒருவனுக்குக் கொடுக்கவேண்டியதுதானே. அவனப்படியெல்லாம் நினைக்கும் வக்கிரபுத்தியுள்ளவனல்ல. உனக்கு அப்பெண்மணிதான் ஈசனால் அமைக்கப்பட்டிருக்கிறாளென்று நினைக்கிறேன். அதனாற்றான் நீ F. A. பாஸ் பண்ணி B. A. வகுப்பில் சேர்ந்தவுடன் என் தங்கையை உனக்குக் கொடுக்கவேண்டுமென்று என் பிதா உன் தகப்பனாரை எவ்வளவோ கெஞ்சிக்கேட்டும் அவர் சம்மதிக்கவில்லை. என் தங்கை பாகீரதி அழகிலாவது புத்தியிலாவது குணத்திலாவது படிப்பிலாவது குறைந்தவளா? அல்லது என் தகப்பனார் பணத்திற்குச் சோம்பினவரா?

தர்ம:—அஃதிருக்கட்டும். என்மனோரதத்தைப் பூர்த்தி செய்விக்கிறேனென்றாயே, அதற்கென்ன வுபாயம்?

காமே:—எனக்குத் தெரியும், இராத்திரியே செய்கிறேன்.

தர்ம:—மதுரை புருஷோத்தமய்யர் பெண் இந்தத் திருச்சினாப்பள்ளிக்கு வரக்காரணமென்ன?

காமே:—குளித்தலை கோபாலசாமி அய்யர் புத்திரனாகிய நீ இவ்விடம் ஏன் வந்தாய்? எல்லாம் பரஸ்பரஸங்கடனார்த்தந் தான்.

தர்ம:—நான் நான் எனதாருயிர்த் தோழனாகிய உனது ஸீமந்த கல்யாணத்திற்காக வந்தேன். அப்படியே யவளும் வந்ததாகத் தெரியவில்லை.

காமே:—காமபாணத்தால் அடிபட்டவனுக்குக் கொஞ்சம் புத்திகுறைவு என்பது ஸத்தியமே. M. P. சுந்தரேசனுக்கு இந்த ஊர் மாதுலகிருகமென்பது உனக்குத் தெரியாதா? அப்பெண்ணுக்கு அந்தவீட்டிப் பாக்கியமில்லையா? உண்மையில் சொல்லுகிறேன் கேள். இந்தப் பெண்பிறந்த எட்டாம் நாள் இவள் தாயார் பரகதியடைந்து விட்டாள்.

அநேககாலம் இவளுடன் கூடவந்திருக்க இவளது சிற்றன்னை ஒரு பெண்குழந்தையை ஈன்றாள்; அது இறந்துபோயிற்று. அப்போது முதல் இந்தப்பெண்ணை இவளே பால்கொடுத்து வளர்த்தாள். இவளுக்கு வேறு குழந்தை இல்லாதபடியால், இவளைத் தனது புருஷன் கிருகத்திலும் வைத்துக்கொண்டு வளர்த்துவந்தாள். இந்தப் பெண்ணின் 5-வயதில் அவள் புருஷனை இழந்து சுமார் 5000-ரூபாய் பெறுமானநகைகளுடனும் ரொக்கம் ரூ. 15000-த்துடனும் பிறந்தவீடு வந்துசேர்ந்தாள். இவளுடைய சொத்துக்கள் முழுமையும் இவளே வைத்துக்கொண்டு அவைகளை இந்தப் பெண்ணுக்கே கொடுப்பதாகக் கருதி இருக்கிறாள். இவளுடைய குணதோஷ பரீக்ஷையின்படி இதுவரையில் வரனகப்படாமையால், இந்தப்பெண்ணுக் கிதுவரையில் கல்யாணமாகவில்லை. இவளுடைய அப்பான் நல்லகவி; சாஸ்திரக்ஞன். இப்பெண்ணுக்கு இதற்குள்ளே நாடகாந்தம் ஸம்ஸ்கிருதம் சொல்லிக்கொடுத்திருக்கிறார். அவர் இவளை பாலியத்தில் மெட்ரிவரையில் படிக்கவைத்துவிட்டு, பிறகு தாமே ஸம்ஸ்கிருதம் சொல்லிக்கொடுத்துவிட்டார். இப்பெண்ணிப்போது அநேக ஆக்யானங்களைப் படிப்பதிலும் மநுஸ்மிருதி முதலிய தர்மசாஸ்திரங்களைப் பார்ப்பதிலும் காலம் கழிக்கிறாள். இவளுக்கும் இவளது சிற்றன்னைக்கும் ஸம்ஸ்கிருதம் படியாதவர்களுடன் பேசக்கூட மனமிராது. நீ இங்கிலீஷிலேபோல் ஸம்ஸ்கிருதத்திலும் ஞானத்தால் கிராஜுவேட்டாய் உன்னையிவள் மணப்பாள்; மேலும் எனக்கந்தப்பெண் ஒருவிதமான உறவு; என் தாயாருக்கு அவள் தாயார் அத்தையின்பெண். ஆதலால் நானவ்விடம் அடிக்கடி தாராளமாய்ப்போவதும் அப்பெண்ணுடன் ஸம்பாஷணையில் பேசுவதும் வழக்கமுண்டு, பிராஸங்கிகமாய் உன்னைப்பற்றியும் அடிக்கடி சொல்லியிருக்கி

றேன். அந்தப்பெண்ணுக்கு தகப்பன்வீடே தெரியாது. இவளுடன்கூடவந்த இவளது சிற்றன்னை சம்மதித்து விட்டால், கலியாணமாயிற்றென்றே சொல்லலாம். இவள் தகப்பனுக்கு இவளொரு பெண் இருப்பதாக ஞாபகங்கூட இராது. அவர் துர்த்தையான இளையாள் மோகத்தில் மயங்கியுழல்கின்றாரெனக் கேள்வி. இவளுடைய அம்மானுக்கும் 2-லக்ஷம் ரூபாய்க்குமேற்பட்ட சொத்திருக்கிறது. ஆகையால் உனக்கந்தப் பெண்ணே யோக்கியமான மனைவியாவாள். மேலும் அவளுன்னழகைக் கண்டு மயங்கித்தான் காலில் சேறுபட்டுவிட்டதாய் வ்யாஜம் சொல்லிக் காலலம்பவந்து, உன் முகத்தையும், கூந்தலையும், மற்றுமுள்ள உனதங்கங்களையும் பார்த்துவிட்டு, திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டேபோனாள். நானப்போதவள் காலைக் கண்டேன். சேற்றின் பரமாணுக்கூட அதிலில்லை. ஆகையால் உன்காரியம் ஜயமே தவிர சந்தேகமில்லை.

இவர்களிவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் மற்றொரு வாலிபன் காவேரியிலிருந்து இவர்களை நோக்கிவந்துகொண்டிருந்தான். காமேசுவரன் மிகவும் இங்கிதக்ஞனாகையால் நர்மனுக்குக் கண்ஜாடைகாட்டிப் பேச்சை நிறுத்தச்சொன்னான்.

வந்த வாலிபனுக்குச் சுமார் பத்தொன்பது வயதிருக்கலாம். சிவந்த நிறமும் மலர்ந்த முகமும் கொஞ்சமெலிந்ததும் அதிக உயரமில்லாததுமான சரீரமுமுள்ளவன். மேனுக்கு ஒரு ட்வில்ஷர்ட்டும் அதற்குமேல் ஜரிகைபோட்ட பட்டுருமாலையும் தரித்திருந்தான். அவனோடோடியும் கிட்டவந்து, "எனது அன்பிற்குரிய நர்மா! இவ்விடம் நீ வந்திருப்பதாய்க் கேள்விப்பட்ட நான் பல இடங்களிலே தேடினேன்; கடைசியில் இங்கு கண்டேன்" என்றான்.

காமே:—ஸகே-சுந்தரேச! நீ இவனை இல்லாத இடம் இன்னதென்று தெரிந்துகொண்டு பிறகு அவ்விடமெல்லாம் தேடினய்போலும்.

சுந்த:—காமேசுவர சாஸ்திரிகளே! மன்னிக்கவேண்டும்; தங்களை கிருஹத்தில் பார்க்க சாத்தியப்படவில்லை.

காமே:—ஏனோ சாத்தியப்படவில்லை; என்னிடமிருக்கிற அபிமானம் ஸத்தியமானல் வந்திருக்கலாம்; எங்களையும் கனப்படுத்தியிருக்கலாம்; நண்பனையும் கண்டிருக்கலாம்.

தர்ம:—கலியாணச் சாப்பாடும் சாப்பிட்டிருக்கலாம்.

சுந்த:—எல்லாம் சரிதான் கலியாணத்திற்கு நீ என்னைக் கூப்பிட்டாயா?

தர்ம:—நீ அப்படிச்சொல்லக்கூடாது; தன் கல்யாணத்திற்கு அதிலும் ஸீமந்த கல்யாணத்திற்குத்தானே கூப்பிடுவார் யாராவதுண்டோ? அவன் பிதா அழைத்திருப்பார்.

சுந்த:—அப்படியானல் எனது மாமா கலியாணத்திற்கு வந்திருந்தார். தன் கலியாணத்திற்குத்தானே ஒருவரையும் கூப்பிடுவதில்லையென்பதில குருவும் சிநேகிதர்களும் விலக்கல்லவா? அதிருக்கட்டும், உனக்குப் பிறக்கப்போகிற குழந்தையின் கல்யாணத்திற்காவது வந்து சாப்பிட்டுவிடுகிறேன். தர்ம! இன்றையதினம் ராத்திரி நீ என்னுடனிருக்க வேண்டும்.

காமே:—நீ வராவிட்டாலும் கல்யாணத்துக்குவந்தவனையும் நீ யழைத்துப்போவது மிகவும் அநாகரீகம்.

சுந்த:—என்னப்பா அநாகரீகம்? மூன்றுநாள் உனக்குக் கல்யாணம். மூன்றுநாள் உன் வீட்டிலே சாப்பிட்டாய்

விட்டது. இன்னமும் ஏன் அவனை நிர்ப்பந்தம் பண்ணு கிறாய்?

காமே:—இதற்கு மேல் சாப்பாடுபோட எனக்குச்சக் தியில்லை யென்று சொல்லுகிறாயா?

சுந்த:—இப்போது உனக்குச்சக்தியுண்டு; நீ பெரிய பிரபுவின்பிள்ளை நான்; ஆனாலும் உனக்குக்கல்யாணமில்லா விடில் உன்னையும் சேர்த்தே யழைத்துப்போவேன். இவ னுக்கு மாத்திரமாவது நீ யனுமதி கொடுக்கவேண்டும்.

தர்ம:—சகே சுந்தரம்! நீ யேனவனை வற்புறுத்துகி றாய்? நான் நாளையதினம் இவ்விடமிருக்கிறேன்; நான் உன் வீட்டிற்குத் தானே வருகிறேன்.

சுந்த:—சரி உனதிஷ்டம். இருட்டிப்போகிறதே, சந்தி யாவந்தனம் செய்து கொண்டு திரும்பலாமா?

அப்படியே செய்வோமென்று மூவரும் தமது உடுப்பு களைக்களைந்து கரையில் வைத்துவிட்டு ஸாயம் ஸந்தியா காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பினார்கள்.

காமே:—மித்திர தர்ம! சுந்தரத்தைக்கண்டு வெகுநா ளாயிற்று. அவனுடன் சில வார்த்தைகள் பேச வேண்டிய தாயிருக்கிறது. நீ நமதகத்திற்குப் போய்க் கொண்டிரு; 5-நிமிஷத்தில் நானும் வந்து விடுகிறேன்.

இதைக் கேட்டவுடன் தர்மனுக்கு முன் பேசிக்கொண் டிருந்த சங்கதிகள் ஞாபகத்திற்குவரவே "சரியப்படியே ஆ கட்டும்" என்று சொன்னவுடன், இருவர் ஒருவழியும், மற் றொருவன் வேறு வழியுமாகப் பிரிந்து சென்றார்கள்.

---

# இரண்டாம் அத்தியாயம்.

## விவாகப் பிரயத்தனம்.

ஆண்டார் வீதியில் ஒரு மெத்தைவீட்டில் ஓரறையில் நான்குபுறமும் நிலைக்கண்ணாடிகளும் சுவரில் நானாவித தெய்வங்களின் ரவிவர்மா படங்களும் அமைந்திருந்தன, அதில் ஒரு பக்கத்தில் ஒரு சிறுமேஜையும் அதனருகில் ஒருசிறுபீரோவும், அம்மேஜையின்மேல் இருந்த புஸ்தகங்களிற் சில பிரித்தும் சில பிரிக்கப்படாமலும் வைக்கப்பட்டிருந்தன. சமீபத்தில் நான்கல்லது ஐந்து லேடிசேர்களும் (கைப்பிடியில்லாத நாற்காலிகள்) ஒரு பெஞ்சும் போடப்பட்டிருந்தன. ராத்திரிகாலமானதால் 20 காண்டில் பவருடைய ஒருலைட்டும் எரிந்துகொண்டிருந்தது. அப்படிப்பட்ட அவ்வறையில் ஒருபெண் ஒருநாற்காலியில் உட்கார்ந்து ஒரு கையில் ஏதோ ஒரு புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டு மற்றொரு முழங்கையை மேஜையில் ஊன்றி அதில் முகத்தைத் தாங்கி ஒருவாறான திருஷ்டியுள்ளவளாயிருந்ததைத் நோக்க அவளேதோ கவலையுள்ளவள்போலத் தோன்றிற்று. அவளொரு புஸ்தகத்தைப் பார்ப்பதும் நிமிர்ந்து கண்ணாடியைப் பார்ப்பதும் திரும்பி பீரோவைப்பார்ப்பதுமான காரியங்களால் அவள் காதுகளிலும் மூக்கிலு மணியப்பட்ட சிவப்புக்கல்நகைகள் பளிர்பளிர் என்றுஜ்வலித்துக்கொண்டிருந்தன. ராத்திரி 8-மணியிருக்கலாம். அவ்வறைக்கு வேறொருஸ்திரீ கையில் வெள்ளிடம்ளரில் பாலையெடுத்துக்கொண்டு உள்ளேவந்து அப்பெண்ணினருகில் மேஜையின் மேல் அப்பாற் பாத்திரத்தைவைத்துவிட்டு "என் தங்கமே கண்மணி தர்மா! ஏன் என்னவோபோல உட்கார்ந்திருக்கிறாய்?" என்றுசொல்லி அவளை எழுப்பித் தனது மார்போடணைத்து

"குழந்தாய், இந்தப்பாலை ஆறிப்போவதற்குள் சாப்பிடு, நீ ஏதோ கவலையுள்ளவள்போலிருக்கிறாய்; அதன் காரணத்தையும் சொல்லு, என்றவுடன், அவளந்தப் பாலையருந்தினாளே தவிர வேறொன்றும் பகன்றாளில்லை.

ஸ்திரீ:—குழந்தாய் தர்மம்! நான் ஒவ்வொருநாளும் ராத்திரி இன்னேரத்திற் கிவ்விடம் வந்தவுடன் கலகலவென்று எத்தனையோ சமாசாரங்களையும் எத்தனை புஸ்தகங்களிலுள்ள தாத்பரியங்களையும் சொல்வாய், இன்றேன் மௌனம் சாதிக்கின்றாய்?

தர்மா:—கொஞ்சம் தலை குனிந்துகொண்டு அப்படியொன்றும் விசேஷத்தைக் காணோம்.

ஸ்திரீ:—நீயேன் எப்போதும்போல் இல்லை.

தர்மா:—இப்போதென்ன எனக்குப் புதிதாய்க் கர்வம் வந்திருக்கிறது.

ஸ்திரீ:—கர்வம் வந்தாலும் அதை யென்னிடம் காட்டுவதில் என்ன பயன்?

தர்மா:—வேறு யாரிடம் காட்டலாம்?

ஸ்திரீ:—அகமுடையானிடத்தில் காட்டினால் அவன் அதனால் களிப்புறுவான்.

தர்மா:—(புன்முறுவலுடன்) நீ யெல்லாமறிந்த ஸ்திரீ யென்று நினைத்திருந்தேன்.

ஸ்திரீ:—நீ அப்படி நினைத்திருந்தால் அது பிசகுதான் உன்னைப்போல் நான் வித்யைகற்றிருக்கிறேனா? நானொரு மூடம், அதிருக்கட்டும் நீயேனப்படிச்சொன்னாய்.

தர்மா:—(மந்தஸ்மிதத்துடன்) அம்மா ஜனஸமான்யத்துக்கே கர்வமென்பது அனர்த்தகாரி? அதிலும் பெண்ணாகப்பிறந்தவர்களுக்கு உதவாது. தத்ராபி அந்த கர்வத்தைப்

பர்த்தாவினிடம் காட்டுவது கூடாது; அப்படிக்குப்படிப்பினாலாவது அழகினாலாவது கர்வத்தைப் படைத்த பெண்கள் தனது கர்வத்தைத் தனது நாயகனிடம் காட்டுகிறவர்கள் காண்டாமிருகத்துக்கொப்பானவர்கள். அவர்களைக்கட்டிக் கொண்டுகாலந்தள்ளும் புருஷர்களுக்கு வீட்டைவிட வனமே சுகமாகும். கேகயமகாராஜனுடைய பத்னி கர்வத்தால் தனது பர்த்தா சிரித்த காரணத்தைக் கேட்டு அது சொல்லத் தகாதென்று சொல்லியும் நிர்ப்பந்தத்தினால் அவளை அவர் காட்டிற்குத் துரத்தவில்லையா?

ஸ்திரீ:—சரியம்மா! நான் அப்படிச் சொல்லி யிருக்கக் கூடாதுதான். இப்படிப்பட்ட விவேகம் வாய்ந்த உன்னை எந்த பாக்கியசாலி கட்டியணைந்து களிக்கப் போகிறானோ:

இதைக்கேட்ட அக்கன்யாரத்தினம் மறுபடியும்மந்த காசத்துடன் தலைகுனிந்து ஏதோ புஸ்தகத்தைப் பார்ப்பது போலிருந்தாள்.

ஸ்திரீ:—என்ன புஸ்தகம் படித்துக்கொண்டிருக்கிறாய்?

தர்மா:—அம்மா! இது தமயந்தி ஸ்வயம்வரம்.

இதைக்கேட்ட அம்மாது சிந்திக்கலானாள். இவள் சாயந்திரம் ஆற்றங்கரையில் நம் ஸோமேசுவரனுடன் நின்று கொண்டிருந்த ஒரு வாலிபனை நோக்கி வழியில் ஈரமே இல்லாமலிருக்கக் காலைச் சேற்றில் வைத்து விட்டதாகச் சொல்லி கால் சுத்தி செய்யப் போகிறவள்போல் அவனருகு போய் அவனை ஏற இறங்கப்பார்த்துத் திரும்பி வருகையிலும் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டு வெகு நிர்ப்பந்தத்தின் மேல் வீட்டிற்கு வந்தாள். இப்போது தமயந்தி சுயம்வரத் தைப்பார்க்கிறாள். இவளுமவனிடத்தில் காதல்கொண்டு மனதினால் வரித்திருப்பாள்போலத் தோன்றுகிறது. அவனுடைய குலகோத்திரங்கள் ஒன்றும் தெரியவில்லை; இதென்ன [illegible]

தனம்? இதனுற்றான் பெரியோர்கள் பெண்ணுக்கு எட்டு வயதிலேயே கலியாணம் செய்து விடுகிறார்கள். இருக்கட்டும், ஆழம் பார்ப்போம்.

ஸ்திரீ:—குழந்தாய்! ஸ்வயம்வரமென்பது க்ஷத்திரியர்களுக்கு மாத்திரந்தானே, பிராமணர்களுக்கு முண்டோ?

தர்மா:-அம்மா! அது க்ஷத்திரியப் பெண்களுக்குத்தான் இயல்பாய் ஏற்பட்டது, அவர்களைப்போல் பிரகாசமாக மண்டபம் ஜோடித்துப்புருஷனை வரிக்கப் பிராமணப்பெண்களுக்கு அதிகாரமில்லை. ஏனெனில், இவர்களுக்கு யௌவனம் அங்குரிப்பதற்கு முந்தியே விவாகம் விதிக்கப் பட்டிருப்பதால் அது அசாத்தியம்; ஆனாலும் ஒரு யுவா அவள் மனசுக்குப் பிடித்திருந்தால் அதை அவளுடைய பெரியோர்கள் முடித்து வைக்கலாம்.

ஸ்திரீ:-குலகோத்திரம் கெடுதலான ஒரு புருஷன்மேல் அவளாசை யடைந்தால்;—

தர்மா:—ஒருநாளுமில்லை. ஒரு பெண் தானொரு புருஷனை மனதால் வரிக்குமுன் அவன் தனக்கு எல்லாவிதத்திலும் அர்ஹனா அநர்ஹனா என்பதை விளங்கத்தெரிந்துகொண்டுதான் அவ்வாறு துணிவாள்; அப்படி முன்யோசனையில்லாத பெண்ணை எவ்வளவு திருத்தினாலும் அவள் எந்நாளும் உதவாதவளே.

ஸ்திரீ: (பெண்ணின் முகத்தை ஒருகரம் தடவிக்கொடுத்து வத்ஸே! நீயப்படி யாரையாவது வரித்திருக்கிறாயோ?)

தர்மா:—(லஜ்ஜையினால் கொஞ்சம் தலைவணங்கி) அம்மா நான் பொதுவான நியாயத்தைச் சொன்னால் நீ என்னிடமே எல்லாவற்றையும் அந்வயிக்கிறாயே. படிப்பும் குணமுமில்லாத புருஷனை மணந்து உனது அத்தங்காள் கப்பு

வைப்போல் கஷ்டப்படாமல் எல்லாம் பொருந்திய புருஷனைத் தெரிந்து மணந்தால் சுகமுண்டென்பதுதான் எனது கருத்து.

ஸ்திரீ:—சுப்புவின் கஷ்டத்தை நீ எப்படி யறிந்தாய்? நீதான் இந்த அறையுண்டு நான் உண்டு என்றிருக்கிறாயே?

தர்மா:—(சிரித்துக்கொண்டு) நம் அம்மாமி யிடமிருந்து அவள் ஏதோ கொஞ்சம் நெய் வாங்கிக்கொண்டு போயிருந்தாளாம். அதைத் திரும்ப வாங்கிவரும்படி அம்மாமி ஒருநாள் என்னை யனுப்பினாள். நான் அந்த வீட்டிற்குப் போகும்போது அவள் தன் கணவனுக்குப் பரிமாறிக்கொண்டிருந்தாள். நானதற்காகச் சற்று நின்றேன். அப்போதவர் அவளைப்பார்த்து "குழம்புக்கு உப்புயார் போட்டாள்" என்று கேட்டார். அதற்கவள் "ஏன் நான்தான்" என்றாள். உடனே அவர் எழுந்திருந்தார்; நடுச்சாப்பாட்டில் எழுந்திருக்கிறாரே என்ன விசேஷமோ என்று நான் பிரமித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவருடனே சுடச்சுடப் புகைந்துகொண்டிருக்கும் கொழும்பு கற்சட்டியை எடுத்துவந்து அந்தக் கொழும்பை அவள் தலையில் கொட்டிவிட்டார்; அன்றையதினம் அவள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் பண்ணியிருந்தாளாகையால் தலைமயிர் பின்னப்படாம லிருந்தது; அந்தக் கொழும்பால் தலை மயிரெல்லாம் நனைந்து உடம்பும் நனைந்தது. அவர் உடனே "வேறு குழம்பு செய்துவிட்டு என்னைச் சாப்பிடக்கூப்பிடு" என்று சொல்லிவிட்டு வெளியிற்போய் விட்டார். எனக்கப்போது பயத்தினால் உடம்பு நடுங்கிற்று; அவளுடனே என்னிடம் வந்து "குட்டி என்னமலைக்கிறாய்; இன்றையதினம் எண்ணெய்தேய்த்து ஸ்நானஞ் செய்தேன்; தலையில் சிக்கு ஜாஸ்தியாய் இருந்ததால் அப்போது அரப்புத் தேய்க்கச் சாவகாசமில்லை. இப்போது அந்தச் சிக்குப்

போய்விடும்; நான் மறுபடி ஸ்னனம்செய்துவிட்டுக் குழம்பு காய்ச்சவேண்டும்; போகிறேன். நீ நெய்க்காக வந்தாய்போலிருக்கிறது; நான் சாயந்திரம் கொண்டுவந்து கொடுப்பதாய் உன் அம்மாமியிடம் சொல்லு" என்றாள். நானதைக் கேட்டவுடன் திரும்பி வந்துவிட்டேன்.

ஸ்திரீ:—அந்த பிராமணர் அதிக கோபிஷ்டர். அதிருக்கட்டும், நாம் சாயந்திரம் காவேரியிலிருந்து வரும்போது பாலத்துக்குச் சமீபத்தில் நம் காமேசுவானுடன் கூட ஒரு பையன் நின்று கொண்டிருந்தானே. அவன்யார் உனக்குத் தெரியுமா?

தர்மா:-நீயும் நானும் சேர்ந்துதானே வந்தோம், நீயேன் என்னைக் கேட்கிருய்?

ஸ்திரீ:—நான் கவனிக்கவில்லை.

தர்மா:—கவனிக்காமல் அவன் நின்றதுமாத்திரம் எப்படித்தெரிந்தது? நானும் கவனிக்க வில்லை.

ஸ்திரீ:—குழந்தாய்! நீ தெரியாமல் பேசுகிருய். நீ இன்னம் கொஞ்சநாள் வரையில் வீதியில் எல்லாவற்றையும் பார்க்கவும் யாரையும் கவனிக்கவும் நியாயமுண்டு; வயது வந்தஸ்திரீகள் அதிலும் என்னைப்போல் அதிர்ஷடம் கெட்டவர்கள் புருஷர்களை கவனித்துப் பார்த்தால் எத்தனையோ வம்புப் பேச்சுகளுண்டாகும்; அதனால்தான் நானுன்னைக் கேட்கிறேன்; மேலும், நீ கவனிக்கவில்லை யென்றும் சொல்லக் கூடாது, ஏனெனில், அவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு இரண்டடி சமீபமாய் நீ காவேரியில் இறங்கிக் காலலம்பவும் போனுய்.

தர்மா:—நீயேன் கேட்கிருய்; உனக்குத் தெரியாதபுருஷனையறிய எனக்குமாத்திரம் நியாயமென்ன விருக்கின்றது?

ஸ்திர்:—நியாயமிலாவிடில் வாய்க்கால் கரையில் நடந்து வந்தவள் சேற்றையலம்பப் போகவும் மாட்டாய், நான் கேட்கவுமாட்டேன்.

தர்மா:—நீ என்னவோ மனதில் நினைத்துக் கொண்டு பேசுகிறாய்? என்னால் விடையளிக்க முடியாது.

ஸ்திர்:—அடி யென் கண்மணி! உண்மையைச் சொல்லுகிறேன்கேள். நானுன்னைப் பரிகாசம் பண்ண இவ்விடம் வரவில்லை, தத்வமறியத்தான் கேட்கிறேன்; நீஎன்னுடன் சாதாரணமாய் வந்ததும் அந்த யுவனை நீ கண்டு பிரமித்ததும் காலில் தூசுகூட இல்லாத சமயத்தில் காலிலுள்ள சேற்றை யலம்ப அவனுக்கு மிகவும் சமீபத்திற் போய் நீ கவனித்துப் பார்த்துவந்தபிறகும் திரும்பித் திரும்பிப்பார்த்துக்கொண்டு வந்ததும் நானறிவேன்; நீவயதான பெண்ணாக யிருப்பதால் நீயாகவே உத்தேசித்து ஒரு புருஷனை வரிக்கலாம்; ஆனால் அவன் நமது ஜாதி மதாசாரங்களுக்கு ஒத்தவனாக இருக்க வேண்டுமே என்பதுதான் என்கவலை; எப்படியும் முன்னே இவ்வருஷம் வாழ்க்கைப் படுத்தவேண்டிய தவசியமல்லவா?

தர்மா:—நானிவ்வளவு புஸ்தகங்களைப் படித்தும் குலகோத்திரம் தெரியாத ஒருவனிடம் மனதை வைப்பேனா? இருக்கட்டும் நீ அப்படி நினைக்கலாமா? அவர் நல்ல குலத்தினரென்றும் மஹா சற்குணங்களுள்ளவரென்றும் ஏராளமான சொத்துள்ளவரென்றும் நமக்குசிதமான ஜாதிவகுப்பைச்சேர்ந்தவரென்றும் முக்கியமாய் கீர்வாணபாஷையிலும் இங்கிலீஷிலும் கரைகண்டவரென்றும் குளித்தலை கோபாலசாமி அய்யரென்னும்வக்கீல்பிரபுவுக்கு புத்திரரென்றும் நம் ராஜசேகர அண்ணாவுக்குப் பிரியஸ்நேகிதர் என்றும் அவர் யாக்ஞேஸ்வரா கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் சொன்னது முழுமையும் என்னை யுத்தேசித்தே என்று நான் கருதி அவரைப்பார்க்கவேண்டுமென்று வெகுநாளாய்

நினைத்திருந்தேன். இப்போது இருவரும் இணைபிரியாமல் நிற்பதைக்கொண்டும் அவரழகை யேற்கனவே நான் கேட்டதைக் கொண்டும் அந்த மகாபுருஷனைத் தானிருக்கலாமென நினைத்துக் கவனித்தேன். அவர் நான் நினைத்த மகாபுருஷனேயானால் என்னைச் சீக்கிரத்தில் அவர் கையில் சேர்ப்பிக்க வழிதேடுங்கள்; வேறெந்தப் பாழுங்கிணற்றிலாவது தள்ளிவிடாதேயுங்கள்; என்னைக்காட்டிலும் வயதில் சிறிய பெண்களெல்லாம் கலியாணமாய் அதற்குசிதமான அழகான புடவைக்கட்டுடன் திருமங்கல்யமும் கழுத்துமாய் பிரகாசிக்க நான் இந்தரீதியில் இருப்பது எனக்கு மிகுந்த வெட்கத்தை யுண்டுபண்ணுகிறது; இந்த அறையுண்டு நானுண்டு என்றிருப்பதற்குக் காரணமிதுவே.

ஸ்திரீ:—கண்மணி! எனக்குப் பரமசந்தோஷம்; இந்த விவரமறியத்தான் நான் இவ்வளவு தூரம் சிரமப்பட்டேன்; அவனைப்பற்றிய எல்லா விவரங்களையும் நீ யறிவாயா?

தர்மா:—எனக்குத்தெரியும். ஆனாலும், அண்ணா அவருடன் ஒரே கிளாஸில் படித்தவரானதால் அவரைக் கேட்டால் நன்கு விளங்கும்.

ஸ்திரீ:—ஆனால் சுந்தரத்தைக் கூப்பிடட்டுமா? அவனுடைய மனோபாவத்தையு மறிகிறேன்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்றவ்வறையில் சுந்தரமுந்தோன்றினான். நாம் முன்னத்தியாயத்திற் கூறிய சுந்தரேசனென்கிற நமது கதாநாயகியின் தமயனுக்கு வீட்டில் வழங்குகிற செல்வப் பெயர் சுந்தரமென்பது, ஆகையால், நாமும் அவனைச் செல்வத்துடனே வ்யவஹரிப்போம். நாம் முன்னத்தியாயத்திற் கூறியபடி காமேசுவரன் சுந்தரத்துடன் தனியாய்ப்போன காரணம் இன்னதென்று விவரம்சொல்லாமலே வாசகர்களுக்குக் கதா

தோரணையால்விளங்கும். ஆனாலும், நமது கடமையை நாம் செலுத்தவேண்டியதினிமித்தம் மீண்டும் இங்கொருமுறை கூறுகின்றோம். காமேசுவரன், சுந்தரத்தைத் தனியாயழைத்துப் போய் காவேரிக் கரையில் நடந்த யாவத் விருத்தாந்தங்களையும் நாயிகா நாயகர்களின் அநுராகோற்பத்தியையும் கூறி, எப்படியாவது தன் சிறு தாயார், மாமா, முடிவில் தகப்பனார் இவர்களைச் சம்மதிக்கச்செய்து இவ்விவாகத்தை அடுத்த பங்குனி யல்லது சித்திரை மீ த்தில் முடித்துவிடவேண்டியதெனச் சொல்லச் சுந்தரம் தானுமகிழ்ந்து கூடிய வரையில் எல்லாரையும் சரிப்படுத்திக் கலியாணத்தை முடித்துவிடுவதாய்க் காமேசுவரனுக்கு வாக்களித்து விட்டு ராத்திரி இதைத் தனது தங்கையினிடத்திலும் சிற்றன்னையினிடத்திலும் சொல்லி அவர்களுடைய ஹிருதயத்தை ஆராய்வதற்காகத் தனது சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவ்வறைக்கு வந்தான். நமது தர்மாம்பாளுக்கு அன்றைய தினத்தின் ராத்திரிசாப்பாடு சாயங்காலமே ஆய்விட்டபடியால் முன்னமேயே அவள் தன்னறைக்கு வந்து தன் சிற்றன்னையுடன் பேசிக்கொண்டிருந்ததைத் தற்செயலாய்க் கேட்ட சுந்தரம் அவ்விடத்தில் கொஞ்சநேரம் மறைவாய் நின்று அவர்களுடைய ஸம்வாதங்களைக் கேட்டு முடிவில் தன் பிரஸ்தாபம் வந்தவுடன் நேரில் தோன்றினான்.

அவனைத் திடீரென்று கண்ட இருவரும் கொஞ்சம் பிரமித்தார்கள். நமது தர்மாம்பாள் பரபரப்புடன் எழுந்திருந்தாளென்றாலும் வந்தவனை வரவேற்று உட்காரச்சொல்ல அவளுக்கு நாவெழவில்லை. அதன் காரணத்தை உத்தம நாயிகா குணங்களையறிந்த உங்களுக்குச் சொல்ல வேண்டியதனாவசியமானாலும் சிலகாரியத்தை உத்தேசித்துச் சொல்லாமலே விடுகிறோம். நமது தர்மாம்பாள் அவனைக்கண்டதும் எழுந்திருந்து அவ்வறையின் ஓர் மூலையில் முந்தா

லத்திய நாட்டுப்பெண்கள் போல நின்று "நமதண்ணா நம்மிடம் எப்போது வந்தாலும் "தர்மீ" என்று கூப்பிடாமல் வரவேமாட்டார். இன்று நான் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகளுக்கேற்றபடி இவர் திடீரென்று தோன்றியிருக்கிறபடியால் நமது பேச்சுகளை ஒருகால் கேட்டிருப்பாரோ என்னவோ வென்று நெஞ்சங்கலங்குகின்றது. கேட்டிருந்தாரானால் "இவளென்ன நாணங்கெட்ட நாயானாளே" என்று ஸ்திரீகளுக்கு முக்கியகுணமாகிய இலஜ்ஜையை தியாகம் செய்த குற்றத்தை என்மேல் சுமத்துவாரோ, அல்லது புருஷஸான்னித்தியம் இல்லாத ஓரிடம் தனது தாயாருடன் இவள் பேசிக்கொண்டிருந்ததைப் பொருட் படுத்தக் கூடாதென்று மன்னிப்பாரோ, நானென்னசெய்வேன்; என்றிவ்விதம் குனிந்தமுகத்துடனும் வெட்கக்குறி பயம் இவைகளுடன் தன்னையறியாமல் அபிநயித்துக்கொண்டு இவள் நின்றகோலத்தைக்கண்ட ஜானகியம்மாள், (நமது சுந்தரம் தர்மாம்பாள் இவர்களுக்கு சிற்றன்னை) அப்பா சுந்தரம்! உட்காரு, இன்றென்ன திருடனைப்போல் திடீரென்று நீ இவ்வறையில் தோன்றினாய்?

சுந்த:—(அங்கிருந்த ஓர் நாற்காலியில்மர்ந்து) ஏதோ ஒரு முக்கியமான காரியத்தை மனதில் நினைத்துக்கொண்டே வந்ததால் வழக்கப்படி தர்மியைக் கூப்பிட மறந்தேன்.

ஜானகியம்மாள்:—என்னப்பா அந்தக்காரியம் எங்களுக்குச் சொல்லலாமோ இல்லையோ?

சுந்த:—தர்மீ! நீ ஏன் நிற்கிறாய் உட்காரு.

தர்ம:—அண்ணா! பாதகமில்லை நான் நிற்கிறேன்.

சுந்த:—நீயேன் இன்று ஒரு மாதிரியாய் நிற்கிறாய்?

ஜானகி:—குழந்தாய்! நீயேன் நிற்கவேண்டும் உட்காரு என்று சொல்லி தன்னுடன் பெஞ்சில் உட்காரவைத்துக்கொண்டாள்.

சுந்தரம்:—அம்மா! நம் தர்மி ஏனின்றைக்கு ஒருவிதமாகக் காணப்படுகிறாள்?

ஜானகி:—ஒன்றும் விசேஷத்தைக் காணோம். அதைப் பற்றிப் பிறகு விசாரிப்போம். நீ நினைத்துவந்த காரியமென்ன சொல்லு?

சுந்த:—நீங்களென்ன சமாசாரம் இங்கு பேசிக்கொண்டிருந்தீர்கள், அதைச் சொல் முன்னே?

ஜானகி:—அப்பா சுந்தரம்! நான் கேட்டால் நீயும் கேட்கிறாய், இருந்தாலும் பாதகமில்லை. உன்னிடத்தில் சொல்லக் கூடாத சமாசாரம் எதை நாங்கள் பேசப்போகிறோம். சாதாரணமாய் இவளுடைய கலியாணத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தேன்.

சுந்த:—கலியாண பிரஸ்தாபமானால் இவளுடன் என்ன பேச்சிருக்கிறது; இவளுத்தரவின் பேரில்தான் நாம் வரன் சம்பாதிக்கவேண்டுமோ?

ஜானகி:-அப்படி யவசியமில்லை; ஆனாலும், சாஸ்திரப் படி 8-வது வயதிலேயே நாமிவளைக் கன்யகாதானம் செய்திருந்தால் இவளைக் கேட்கவேண்டியதில்லை. 12-வயது முடிய நாம் இவளை வாழ்க்கைப்படுத்தாமல் வைத்துக்கொண்டிருந்த பெருங்குற்றத்திற்காக நாமிப்போது இவளையும் கொஞ்சம் கலக்கத்தான் வேண்டும்; அவள் மனதுக்கும் பிடித்தால்தானே கலியாணம் சிறக்கும்; மேலும் இவளுக்கு ஏறக்குறைய படிப்பும் ஊட்டிவிட்டோம்.

சுந்த;—அம்மா! நீ சங்கிக்காதே, நான் வேடிக்கையாய்ச் சொன்னேன். அவளைக் கேட்காமலும் அவளுடைய சம்மதத்தைப் பெறாமலும் நாமுத்தேசித்த வரன் தேவராஜனாயிருந்தாலும் இவளையவனுக்குக்கொடுக்க நான் சம்மதப் படேன்.

ஜானகி:—அப்படியானால் நீ யாரையாவது உத்தேசித்திருக்கிறாயா சொல்லு, இவளையும் கேட்போம்.

சுந்த:—நீயாரை யுத்தேசித்துப் பேசிக்கொண்டிருந்தாய், அதை முதலிற் சொல்?

ஜானகி:—அப்பா சுந்தரம்! நீயென்ன எல்லா சங்கதிக்கும் என்னையே ஆழம்பார்க்கிறாய், நான் சொல்லமாட்டேன். நாங்கள் என்ன ஏற்பாடு செய்தாலும் "அபலைகளின் சொல் அம்பலமேறுமா" என்றபடி பெண்பிள்ளைகள் வார்த்தை எதுக்குதவும்; நீ உன் தங்கையின் அருமை யறிந்தவனாதலால் நீ செய்கிற ஏற்பாடு பழுதாகாது; ஆதலால், நீ நினைத்த வரனைச் சொல்லு. பிறகு நாங்கள் பேசிக்கொண்டிருந்ததையும் சொல்லுகிறேன்.

சுந்த:—அம்மா! நான் சொல்லியென்ன செய்வேன்? முதலில் நீ சம்மதிக்கவேண்டும்; நமது தம்பி ஒப்புக்கொள்ளவேண்டும், நமது மாமாவும் அம்மாமியும் அனுமதி கொடுக்கவேண்டும்; கடைசியாய் எங்கள் தகப்பனார் நடத்தவேண்டும்; மேற்கண்டவர்களில் ஒருவருடைய மனதுக்காவது சரியில்லாமற்போனால் என் வார்த்தை எடுபட்டுப் போய்விடும். அதனாற்றான் நான் பயந்து நீங்கள் பேசிக்கொண்டிருந்த வரனைக் கேட்கலானேன்.

ஜானகி:—பாதகமில்லை நீ சொல்லு, நீ தெரியாதவனல்ல விவேகமில்லாத சிறுவனாக உன்னை நாங்கள் யாராவது பாவிப்போமா? நீ சொல்லுவது எனக்கும் உன் தங்கைக்கும் மாமா அம்மாமிக்கும் சம்மதமாயிருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் உன் தகப்பனார் என்னையென்னவோ அவருக்கு அந்ததேவி (இளைய சம்சாரம்) உத்தரவு செய்தால் தான் சம்மதிப்பார். அவரையேன்

நாம் கவனிக்க வேண்டும்; அவருக்குத்தான் இவளொரு பெண் இருப்பதாய்க்கூட ஞாபகமில்லையே.

சுந்த:—அம்மா! அப்படிச் சொல்லாதே. அவரன்றி நாம் எதையும் நடத்துவது அழகன்று.

ஜானகி:—அப்பா சுந்தரம்! கேள் நீ பிறந்த ஏழாம் வயதில் இவ்விடம் வந்தாய்; இவள் பிறந்தது முதல் தகப்பன் வீட்டையறியாள். உன் படிப்புக்காவது பணங்கொடுத்தாரா? அருமையான இந்தத் தாயில்லாத குழந்தைக்கு ஒரு பாவாடையாவது, ஒரு திருகாணியாவது வாங்கிக் கொடுத்தாரா? அவர்க்குத்தான் வருஷத்துக்கு 50-60-ஆயிரத்துக்குமேல் வரும்படி வருகிறதே, இளையாளுடைய உடம்பு முழுமைக்கும் வைரநகைகளால் கவசம்போடவில்லையா? அந்த இளையாளுக்காவது குழந்தைகளிருக்கின்றனவா? அவர்களுக்குச் செய்கிறார் என்றாவது சொல்லலாம்; சகல சொத்தையும் அந்தப்பட்டி முண்டை யபகரிக்கிறாள். அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். நீங்களிருவரும் அவருடைய குழந்தைகள் தானே, அங்கே வரவழைத்து வளர்க்காவிட்டாலும் அடிக்கடி இவ்விடம் வந்தாவது பார்த்துவிட்டுப் போகிறாரா, இன்னம் நான் சொல்லவேண்டிய தெவ்வளவு இருக்கிறது தெரியுமா? உனக்கு ஆயாசமாயிருக்கலாம் என்று நிறுத்திவிட்டேன். நீ உத்தேசித்த வரனைச் சொல்லு.

தர்ம:—தன் இளையாளிடமுள்ள மோகத்தால் ஸ்ரீ ராமனைத் தன் சிம்மாஸனம் ஏறக்கூடாதென்று தடுத்து வனத்துக்குப்போகும் பிள்ளையை உபேக்ஷித்த தகப்பனுக்கும் அவ்விளைய தாயாருக்கும் கெடுதி நினையாமல் அந்த ஸ்ரீராமஸ்வாமி தபஸ்வியினால் உத்தமமான ஸ்தானத்தை பரதனிடம் பெற்றும் மறுபடி நகரம்வந்து பிரஜையும்

அந்த இளைய தாயாரையும் வணங்கி அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டிருந்தாரா இல்லையா?

ஜானகி:—ஆமாம் இருந்தார்.

சுந்த:—ஸ்ரீராமர் ராவணனைக் கொன்றபிறகு தனது பிதா தசரதமகாராஜனைக்கண்டு நமஸ்கரித்தவுடன் அவர் வேண்டிய வரனைக் கேட்டுக்கொள்ளென்று சொல்லுங்காலத்தில், தன் ஹஸ்தகதமான ராஜ்யத்தைவிட்டுத் தன்னைக்காட்டுக்குப் போகச்சொன்ன கைகேயியினிடத்தில் அவருக்கு உள்ள கோபத்தை விட்டுவிடும்படி வரம் கேட்கவில்லையா?

தர்மா:—ஆம் கேட்டார்.

சுந்த:—இவைகளால் நீ என்ன அறிந்துகொண்டாய்?

தர்மா:—மாதா பிதாக்கள் எவ்விதக் குற்றங்கள் செய்யினும் பிள்ளைகள் அவர்களுக்கு அதிருப்திகரமாய் நடந்து கொள்ளக் கூடாது என்பதுதான்.

சுந்த:—ருக்மிணியின் காரியமெப்படி சொல்லு பார்ப்போம்.

தர்மா:—தனக்குக் கிருஷ்ணனுடைய பாணிக்கிரகணம் நடக்காமலிருக்கும்படி துரோகம்செய்த தமயன் ருக்மியைத் தனது பர்த்தாவாகிய கிருஷ்ணனிடம் சிபார்சு செய்து பிராணபிக்ஷை கொடுத்ததுந்தவிர அவன் பெண்ணையும் பிரீதித் தன்னுடைய பிள்ளைக்குக் கலியாணம் பண்ணிக் கொண்டாள்.

சுந்த:—அம்மா உன் சித்தத்தைத் தர்மியின் வார்த்தைகளாகிய அமிர்தப் பெருக்கினால் சுத்தம்பண்ணிக்கொள்.

ஜானகி:—நீங்கள் படித்தவர்களப்பா. நானோ மூடம் உங்களையே நம்பியிருக்கிறேன். வீண்பேச்சு என் பேச வேண்டும். அதெப்படியே ஆகட்டும், உன் உத்தேச வரனைச் சொல்லு.

தர்மா:—யாரோ வருகிறார்களென்று நினைக்கிறேன்; மாடிப்படி ஓசைகேட்கிறது.

ஜானகி:—யார்வருவார், இன்றைக்கு தை வெள்ளிக் கிழமையாகையால் கோவிலிலிருந்துவந்த அம்பாள்குங்குமப் பிரசாதத்தை உன் நெற்றியிலிட உனது மாமி வருவாள்.

சுந்த:—இல்லையம்மா மெதுவான பேச்சுக் கேட்கிறது. அவள் தனியாக வருவதாய்த் தோன்றவில்லை.

ஜானகி:—அண்ணாவும் வருகிறாரோ என்னவோ, அவரிப்போது இங்கு வரமாட்டாரே இங்கென்ன காரியம் அவருக்கிப்போது?

தர்மா:—இல்லையம்மா, சிலநாள் ராத்திரி 10-மணி சுமாருக்கு மாமா இவ்விடம் வந்து நான் வாசித்துக்கொண்டிருப்பதைக் கேட்டுவிட்டு ஏதாவது சிலவற்றைப் பரீக்ஷை செய்து விட்டுப்போவதுண்டு.

ஜானகி:—இருக்கலாம்; எல்லாம் சொல்லிக்கொடுத்த குருவோவில்லையோ; படிப்பினருமை அவருக்குத் தானே தெரியும்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அவ்வீட்டுப் பிரபுவாகிய வல்லபசாஸ்திரிகள் மெழுகுவர்த்தி தீபத்தைக் கையிலேந்தி வணக்கத்துடன் முன் செல்லும் தனது தர்மபத்தினி கௌரியம்மாளுடன் அங்குவந்தார். இவருக்குச் சுமார் 40 வயதிருக்கலாம். பொன்னை ஜயிக்கும் தன்மையுள்ள நிறமும், முழந்தாள்வரையில் தொங்குகிற கரங்களும், சந்திரனைப் பழிக்கும்படியான முகமும், உள்ளவர். இவர் பாலியத்தில் 14-வயதிற்குள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினார். அக்காலத்திலே இவருக்கு மாதிரு பிதிருவியோகம் வந்துவிட்டது. சுமார் 30000-ரு வருஷ வரும்படி வரக்கூடிய நிலங்களைத் தாமே பார்க்கும்படி

நேரிட்டது. பிறகு சதுச்சாஸ்திர பண்டிதரான ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளென்னும் ஓர் மகானைத் தனது வீட்டில் வரவழைத்து வைத்துக் கொண்டு ஸமஸ்கிருதம் கற்று வியாகாண சாஸ்திரம் பூராவாகவும் தர்க்கத்தில் சிலபாகமும் வேதாந்த சாஸ்திரத்தில் பூராவாகவும் படித்துத் தேர்ந்தனர். அந்த மகான் நல்ல விவேகியானதால் தனது குடும்ப காலக்ஷேபத்திற்கு வேண்டிய அளவுமட்டும் இவரிடம் பிரதிக்ரஹம் செய்துகொண்டு இவர் வீட்டிலேயே ஒருபக்கம் வசித்துவந்தார். அவருக்குப் புத்திரனில்லை, ஒரு பெண்மாத்திரந்தான்; அவளும் பிரசவித்து இறந்தனள். அப்போதே அந்த மகான் ஸன்யாஸம் பூண்டு எங்கேயோ சென்றனர். அவர் ஸம்சாரம் பிறந்தகமேகினளென்றாலும் அத்யாபி அவளுக்கு வல்லப சாஸ்திரிகளே காலக்ஷேபத்திற் கனுப்பி வருகிறார். அவர் ஸன்னியாஸம் வாங்கிக்கொண்டகாலம் நமது தர்மாம்பாள் 5-வது வயதில் தனது சிற்றன்னையுடன் தனது அம்மான் கிருகம் வந்தகாலம், இந்த வல்லபசாஸ்திரிகள் நல்ல வித்வத்வம்சத்திற்பிறந்தவர். பரம்பரையாய்ப் பிரபு. அற்ப சுவபாவமே தெரியாதவர். அவருக்கு யாதொரு குறைவும் பகவான் வைக்கவில்லை. ஆனால் அவர் ஸம்சாரத்திற்கு சுமார் 35-வயதாகியும் இது வரையில் புத்திர பாக்கியமில்லை அவர்களிருவரும் நல்லொழுக்கத்தில் அருந்ததி வசிஷ்டர்களென்றே சொல்லலாம். வல்லப சாஸ்திரிகளுக்குத் தமது மனைவியினிடம் அன்பு அதிகம். ஏனெனில் அவள் நல்ல புத்திமதியானதால் அவரால் கற்பிக்கப்பட்ட ஸமஸ்கிருத பாஷையைச் சுமார் 2-3 வருஷங்களுக்குள் ஸ்வாதீனமமாய்ப் பயின்று இப்போது சாதாரணமாய் ஸமஸ்கிருதத்தில் வாக்கிய விவஹாரம் செய்யச் சமர்த்தையாயிருக்கிறாள். கௌரியம்மாளுக்குந் தனது பர்த்தாவிடம்

அன்பு ஜாஸ்தியாகையால் சிறிது லஜ்ஜையைக்கூடப் பாராமல் எப்போதும் அவருடன் இருப்பதும் பேசுவதுமாக இருப்பாள். அவரும் அதை ஸந்தோஷ கரமாகவே நினைப்பார். இவர்களிருவரும் தங்களுக்குத் தர்மாம்பாளே பெண், சுந்தரமே பிள்ளை யென்று நினைத்து வளர்த்து வருகிறார்கள்; கடைசியாக அவர்களிருவரும் தர்மாம்பாள் சுந்தரம் இவ்விருவருக்குள் யாருக்கு முதலில் புத்திரன் பிறந்தாலும் அதைத் தாங்கள் பரலோகஹிதார்த்தம் எடுத்துக்கொள்வதாய்த் தீர்மானித் திருக்கிறார்கள். இவர் தான் அவ்விருவருக்கும் தேவபாஷையை அதி பாலியத்தில் புகட்டினவர். அப்படிப்பட்ட இவரைக் கண்டவுடன் அதி மேதாவிகளாகிய நமது தர்மாம்பாளும் சுந்தரமும் எவ்விதம் நடந்துகொள்வார்களென்பது நாம் சொல்லாமலே இதை வாசிப்பவர்களுக்கு விளங்கும். இதுநிற்க, வல்லப சாஸ்திரிகளையும் கௌரியம்மாளையும் கண்டவுடன் சூரியனைக்கண்டதும் மலர்ந்த தாமரைப் புஷ்பத்திலிருந்த வண்டுகளைப்போல் எல்லாரும் திடீரென்று எழுந்திருந்தார்கள். தர்மாம்பாள் மிகுந்த பக்தியுடன் ஒரு மூலையில் ஒதுங்கி நிற்க, பரபரப்புடன் சுந்தரம் எடுத்துப்போட்ட நாற்காலியிலுட்கார்ந்த தமையனைப்பார்த்து ஜானகியம்மாள், "அண்ணா! ஏது இந்த அகாலத்தில் மனைவியுடன் இவ்விடத்தில் விஜயம்செய்தீர்?"

வல்லப:—நான் வாரத்துக் கொருமுறை அல்லது இருமுறை ராத்திரி சாப்பிட்டானதும் தர்மாம்பாள் தூங்குகின்றாளா வாசித்துக் கொண்டிருக்கின்றாளா என்று பார்த்துவிட்டு, அவள் வாசித்துக்கொண்டிருந்தால் அவளை யேதாவது சில கேள்விகளைக் கேட்டுவிட்டுப்போவது வழக்கமுண்டு. மேலும், இன்று தை பிறந்து 2-தேதியாகிறபடியாலும், இன்று வெள்ளிக்கிழமை யானதாலும் வேறொரு சமா

சாரமும் பேசவேண்டுமென்பது என் கருத்து; அவளேதோ அம்பாளுடைய குங்கும பிரஸாதத்தைத் தன்கையாலேயே குழந்தைக்கு நெற்றியிலிடவேண்டுமென்று வருவதாய்ச் சொன்னாள்.

உடனே எல்லாரும் மிகவும் ஸந்தோஷமென்று மெச்சினவுடன் கௌரியம்மாள் தர்மாம்பாள் நெற்றியில் மேற்கண்ட குங்குமத்தை இட்டு அம்பாளுக்குச் சாத்தியிருந்த புஷ்பத்தையும் தலையில் வைத்து ஒருதரம் கட்டி முத்தமிட்டாள்.

வல்லப:—ஜானகியைப் பார்த்து அவர்கள் ஏதாவது வாசிப்பதற்கு விரோதமாய் நீ இங்கு வந்து என்ன வம்பு பேசுகின்றாய்.

ஜானகி:—நான் குழந்தையின் வாசிப்புக்கு விரோதமாய்வம்புக்குவரவில்லை. அவளுக்கு இன்றையதினம்சாயந்திரமே காவேரியில் சாப்பாடு ஆய்விட்டபடியால் அவளுக்குக் கொடுக்கவேண்டிய பாலைக்கொடுத்து விட்டுப்போக இப்படி வந்தேன்; அவளேதோ புஸ்தகத்தைவைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்; அதன்மேல் நாலு வார்த்தை வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தேன், அதற்குள் சுந்தரம் வந்தான்.

வல்லப:—தர்மாம்பா! என்ன புஸ்தகம் வைத்துக்கொண்டிருந்தாய்?

தர்மா:—(குனிந்த தலையுடனும் மிருதுவான குரலுடனும்) வந்தவுடன் மேலேவைக்கப்பட்டிருந்தது தமயந்தீ ஸ்வயம்வரமாயிருந்தது; அதைப் பார்த்துக்கொண்டிருக்கையிலே தான் அம்மாள் வந்தாள்.

வல்லப:—(கொஞ்சம் சிரிப்புடன்) தையும் பிறந்திருக்கிறது. வெள்ளிக்கிழமையாயுமிருக்கிறது என்று கலியாண

புஸ்தகத்தை கையில் எடுத்துக்கொண்டாப்போல் இருக்கிறது. அதுவும் வேண்டியதுதானே. உன்னை யிதுவரையில் ஒருவனிடம் ஒப்பிவிக்காதது எங்கள் குற்றந்தானே; அதை ஞாபகப் படுத்துகிறாய்; அதற்கு நாமென்னசெய்யலாம்? இதுவரையில் பர்த்தாவை படையாமலிருப்பது உன் அம்மாள் ஜானகியாலேதான்.

எல்லாரும் புன்முறுவல்கொண்டார்கள். தர்மாம்பாள் மறைவில் ஒளிந்தாள்.

ஜானகி:—அண்ணா! ஏன் என்னைமட்டும் குற்றவாளியாக ஒதுக்கி நீங்களெல்லாரும் நல்லவர்களாக ஆகப் பார்க்கிறீர்கள்?

வல்லப:—நீதானே நாங்கள் எந்தவரனையுந்தேசித்தாலும் அது கோணல் இதுகுறுக்கல் இதுகம்மி அது ஜாஸ்தி என்று தோஷம் சொல்லி இதுவரையில் இவளைக் கன்யாசிற்றாடையுடன் நிறுத்தியிருக்கிறாய். இவ்வருஷமும் அப்படிச்சொல்கிறாயா பார்ப்போம்.

ஜானகி:—என்ன அண்ணா நீங்கள்கூட இப்படிச் சொல்கிறீர்கள். நாமின்று முன்பின்யோசியாமல் குழந்தையை ஒருவனுக்குக் கொடுத்துவிட்டால் நாளை அவன் கண்ணும் கண்ணீருமாய் நம்மிடம் குறைகூறவந்தானானால் அப்போது நாமென்ன செய்யக்கூடும்? மாற்றக்கூடிய காரியமா? இவ்வாறு சிந்தித்துத்தான் என்மனதிற்குத் தோன்றியதைச் சொன்னேன்; என்னையேன் நிராகரித்து நீங்கள் அவளுக்கு மணமுடித்திருக்கக்கூடாது.

வல்லப:—உன்னை நிராகரிக்க, உன் குழந்தையோ என் குழந்தையோ?

ஜானகி:—(சிரித்து) ஆம் என் குழந்தைதான், எனக்கு உள்ள பாத்தியம் உங்களுக்கில்லாமல்தான் இப்போதிவ்விடம் வந்திருக்கிறீர்கள்.

வல்லப:—நான் பார்த்த வரனுக்குத்தான் நீ தோஷம் சொல்லுகிறாயே! நீயாகவே இவ்வருஷத்திற்கு ஒருவரன் சொல்லுபார்ப்போம், நான் தோஷம் சொல்லாமல் நிச்சயம் செய்துவிடுகிறேன்.

ஜானகி:-நன்றாயிருக்கிறது, தலையிருக்க வாலாடுமோ?

வல்லப:—குற்றமில்லை, தலைசம்மதித்தால் வாலுமாடலாம்.

ஜானகி:—சரி, நான் சொன்னால் தோஷம் சொல்லாமல் நடத்துவது நிஜமா? (ஸ்திரீ புத்தி ப்ராணஹாரிணீ) என்று தள்ளிவிடாமல் நடத்துகிறீர்களா?

வல்லப:—தோஷமிருந்தால் சொல்வேன்தான்.

ஜானகி:—இல்லாவிட்டால்;

வல்லப:—நானென்ன புரோபாகியா?

ஜானகி:—ஆனால் சொல்லலாமா?

வல்லப:—இன்னுமென்ன அனுக்ஞை கேட்கிறாய்.

ஜானகி:—குளித்தலை கோபாலசாமியய்யர் என்னும் ஒருவக்கீல் பிரபுவின் புதல்வன் ஒருபையன் நம் சுந்தரத்தோடு காலேஜில் வாசித்தானும்; அவனுக்கு நம் தர்மாம்பாளைக் கொடுக்கலாமென்று நினைக்கிறேன்.

வல்லபசாஸ்திரிகள் இதைக்கேட்டவுடன் "இன்று மாலை ஸ்ரீ மாதுரு பூதேசுவரஸ்வாமி கோவிலில் நம் காமேசுவரனிடம் எந்தவரனைக்குறித்துப்பேசி ஒருவாராக முடி

வுக்கு வந்திருக்கிறானோ அதே வரனை இவளும் குறிப்பிடுகிறாள். ஒருக்கால் அவன் இங்குவந்து இவளுடனும் சொல்லியிருக்கிறானோ என்னவோவென்று நினைத்து.

ஜானகி! நம் காமேசுவரன் இன்று இவ்விடம்வந்தானோ? தர்மாம்பாளுக்கு இதைக்கேட்டவுடன் முகத்தில் ஒருவித பயம் உதித்தது. இதை ஜானகியம்மாள் மாத்திரம் கவனித்தாள்.

ஜானகி:-அண்ணா! இதென்ன திடீரென்று அவரைக்கேட்கிறீர்கள். எனக்குத் தெரிந்து நம் அகத்திற்கு வரவில்லை.

இதைக்கேட்ட வல்லப சாஸ்திரிகள் அவனும் இவ்விடம் வாராமலிருக்க இவளெவ்விதம் அவ்விதம் திடீரெனக் குறிப்பிடமுடியும்? வரவர அறிவோம், ஜானகியைப்பார்த்து,

நீ எவ்விதம் அந்தப்பையனைத் தகுந்த வரனென்று கண்டுபிடித்தாய்; சுந்தரம் ஏதாவது உன்னிடம் சொல்லியிருக்கிறானோ?

ஜானகி:—நான் கண்டுபிடித்த விதத்தை இப்போது சொல்லமுடியாது; தங்களுக்குச்சொல்லாமலுமிருந்து விடமாட்டேன், பிந்தித் தெரிவிக்கிறேன். இப்போது எனக்கு வாக்குக்கொடுத்தபடி இந்த வரனைப்பற்றித் தாங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயத்தைத் தெரிந்துகொண்டு அவனுக்கே குழந்தையைப் பாணிக்கிரகணம் செய்துகொடுக்கும்படியான ஏற்பாடுகள் செய்வது தங்கள் கடமை.

வல்லப:-அவனைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள நானெவ்விடம் போகப்போகிறேன்; நீயே எல்லாவற்றையும் சொல்லிவிடு.

ஜானகி:—அண்ணா! நான் சொல்லவுங்கூடாது; சொன்னாலும் நம்பிக்கைவராது. தங்களுக்கவசியமானாலும் நமது

சுந்தரத்தைக்கேட்டால் அவன் விசதமாய்ச் சொல்லக்கூடும்; அவனுக்கவன் கிளாஸ்மேட். (பள்ளித்தோழன்).

சாஸ்திரிகள்:—சுந்தரம்! உனக்கு அவனைப்பற்றி என்ன தெரியும் சொல்லு பார்ப்போம்.

சுந்தரம்:—இப்படிகேட்டால் நான் என்னபதிற்சொல்வது? ஏதாவது சிலவிஷயங்களைக் குறிப்பிட்டுக் கேட்டால தெரிந்தமட்டில் பதில் சொல்வேன்.

சாஸ்திரிகள்:—சரி-முதலில் அவன்பெயரென்னசொல்லு?

சுந்த:—அவன் பெயர் தர்மராஜன்.

சாஸ்திரி:—அப்படியா? பெயருக்கு அர்த்தமுண்டோ?

சுந்த:—சந்தேகமென்ன? அவன் அத்யந்தம் ஆஸ்திகன், பாபத்தில் மிகவும் பயமுண்டு, கூடியமட்டில் கர்மானுஷ்டானத்தைக் காலத்தில் செய்துமுடிப்பான்; பையன்களோடு பேசிக்கொண்டே இருப்பான். அவர்களை அப்படியேவிட்டு விபூதியைக் கட்டுக்கட்டாய் போட்டுக்கொண்டு சந்தியாவந்தனஞ் செய்துவிட்டுவருவான். எல்லாரும் நகைப்பார்கள். ஆனால் அதைப்பொருட்படுத்தமாட்டான்.

சாஸ்திரி:-சந்தேகமென்ன? கலியின் ஆளுகையோ இல்லையோ? ஸத்காரியங்களெல்லாம் உபஹாஸ்யமாகத்தான் இருக்கும். இருக்கட்டும், இக்காலத்திய புதிய ஏற்பாடுகளைப் பற்றியமட்டில் அவனபிப்பிராயம் எப்படி?

சுந்த:—அவனதை வெறுக்கிறான்; அவைகளெல்லாம் நரகப்ரதமென்றும் வைதிகர்கள் அவைகளைக் காதாலேகூட கேட்கக்கூடாதென்றும் சொல்வான்.

சாஸ்திரி:—சந்தோஷம், அவன்வயதென்ன தெரியுமா?

சுந்த:—அவன் சென்றவருஷம் பி.ஏ,க்கு அப்ளிகேஷன் செய்துகொண்டகாலத்தில் 21 - வயது எழுதியிருக்கிறான்.

சாஸ்திரி:—சரி இப்பொழுதிருபத்திரண்டு. அவனுடைய அழகைப்பற்றி நீசொல்லவேண்டாம், எனக்கே தெரியும். அவன் தகப்பனாரையும் எனக்குத்தெரியும். நானவரிடத்தில் ரூ 30000-க்கு ஒரு வியாஜ்யமும் 15000-க்கு ஒரு வியாஜ்யமும் கொடுத்திருந்தேன். நமக்கு ஷை நம்பர்கள் ஜயிக்கவே ஜயிக்காதென்று எல்லாரும் சொன்னார்கள், அவர் எப்படியோ அநேக சிடுக்குகளை நிவர்த்தித்து எனக்கு ஜயித்துக் கொடுத்தார். அவருக்குப்பூர்விக சொத்துக்கள் என்னவோ தெரியவில்லை.

சுந்த:—எனக்கும் நன்றாய்த் தெரியாதுதான். அவனைக் கொண்டே கேள்விப்பட்டதைக்கொண்டு சொல்லுகிறேன். வருஷம் 1-க்கு சுமார் ரூ. 15000க்குக்குறையாமல் 20000க்கு மேற்படாமல வரும்படி வரக்கூடிய பூமிகளிருக்கின்றனவாம். அது தவிர வக்கீல் தொழிலில் ஏராளமாய் சம்பாதிக்கிறார், கைமுதலும் இருக்கலாம்.

சாஸ்திரி:—கைமுதல் இல்லாவிட்டாலும் வேண்டாம். பையன் புத்திசாலிதானே?

சுந்த.—அதைக்கேட்கவும் வேண்டுமா? இதுவரையில் அவன் ஒவ்வொரு பரீக்ஷையிலும் இராஜதானிக்கு முதல் அல்லது இரண்டாவதாய்த் தேறியிருக்கிறான்; ஸமஸ்கிருதத்திலும் நல்ல ஞானமுண்டு; நன்றாய் வ்யவகரிக்கிறான்.

சாஸ்திரி:—ஸமஸ்கிருதத்தை அவன் யாரிடம் வாசித்தான்?

சுந்த:—கடயம் ரெங்கனாத சாஸ்திரிகளிடத்தில்.

சாஸ்தி:—சரி அவர் நல்லவித்வான்; நன்றாய் போதித்திருப்பார்; அவனுக்குத் தாயாரிருக்கிறாளோ?

சுந்த:—இல்லை; அவருக்கு இவன் இரண்டாவது பத்னியின் பிள்ளை; மூத்தவளுக்கு ஒருபெண் இருக்கிறாள்; அவளுக்கிப்போது வயது முப்பத்தைந்திருக்கலாம். அவள் கோயம்புத்தூரில் ஒரு வக்கீலுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறாள். அவளுக்குப் பேரன் பேத்தியெல்லாம் உண்டாயிருக்கின்றன. இப்போது மூன்றாவது ஸம்சாரம் இருக்கிறாள்; அவளுக்கும் ஒரே பெண்; அவளைச் சென்றவருஷந்தான் சிங்கம்பட்டி ஜமீன்தாரிடம் வேலையிலிருக்கும் திவான் முத்துசாமி அய்யருடைய பிள்ளைக்கு 5000 ரூபாய் வரதக்ஷிணை கொடுத்துக் கலியாணம் செய்து கொடுத்தார்.

சாஸ்திரி:—குட்டி! தர்மாம்பாள்! உனக்கு மாமியார் ஹிம்சைகூட இல்லையாம் என்று சொல்லிச் சிரித்தார்.

தர்மா:—புன்முறுவலுடன் தலைகுனிந்தாள்.

ஜானகி:—என்ன மாமியார் என்கிறீர்களே கலியாணத்தை முடித்துவிட்டீர்களோ?

சாஸ்தி:—நான்தான் சொல்லிவிட்டேனே, நீ சம்மதித்தால் எனக்கும் சம்மதந்தானென்று.

ஜானகி:—அப்படியா, அதில் ஒன்றும் தோஷம்சொல்ல இடமில்லை, சம்மதித்தீர்கள்.

வல்லப:—அப்படிச் சொல்லாதே; தோஷம் சொல்ல வேணுமென்றால் வேண்டியமட்டில் சொல்லலாம். உன

க்குக்கொடுத்த வாக்கினாலும் காரியம் இப்படியே தாமதித்துப் போகிறதே என்ற அவசரத்தினாலும் ஒப்புக்கொண்டேன்.

ஜானகி:—ஒப்புக்கொண்டது ஒப்புக்கொண்டதாகவே இருக்கட்டும்; எனக்கும் தெரியலாமென்றால் உங்கள் மனதிலிருக்கிற தோஷத்தைச்சொன்னால் நானும் தெரிந்துகொள்ளுகிறேனே.

வல்லப:—என்னதோஷம், வக்கீல் கோபாலசாமி அய்யர் படாடோபம்ஜாஸ்திதான்; கடன் இருக்கிறதாய்க்கேள்வி.

ஜானகி:—அதில் எனக்குக் கவலையில்லை; அவன் ஆயுளோடு இருந்தால் அவன் படிப்பே பத்துலக்ஷரூபாய்க்குச் சமானம்.

வல்லப:—சுந்தரம் உன் அபிப்பிராயம் எப்படி?

சுந்தரம்:—நீங்கள் செய்கிற காரியத்தில் எனக்கென்ன தடை?

வல்லப:—இந்த உபசார வார்த்தைகளிருக்கட்டும்; அவளை உனது தங்கை, தகப்பனையே யறியாள். ஆகையால் உன் சம்மதம் வாங்கவேண்டியது முக்கியந்தான்.

சுந்தரம்:—எனக்குத் தங்களால் செய்யப்படும் காரியம் அகாரியமாயினும் தடைசொல்ல இஷ்டமில்லை. அதிலும் இதிலென்ன தடையிருக்கிறது. எனக்கு இதில் பூரணசம்மதந்தான். இதைச்சொல்ல நாணிக்குவந்தேன்.

வல்லப:—ஜானகி நாமெல்லாம் சம்மதித்துவிட்டோம். தர்மாம்பாள் அகமுடையானை நேரில் பார்த்துச் சரியென்று ஒப்புக்கொண்டால் தானே காரியம் முடிக்கலாம். நாளை மறுதினம் அவனை இங்கே நமது வீட்டிற்கு வரவழைத்துப் பார்ப்போமா?

ஜானகி:—தர்மாம்பாள் சம்மதத்துக்கு நான் ஜாமீன் அவனை நமது கிருகத்திற்கு வரவழைப்பதற்கு யாதொரு தடையுமில்லை.

வல்லப:—அதெப்படி நீ ஒப்புக்கொள்ளலாம்; இந்தக் காலத்திய பெண்கள் புருஷனை நேரில் பார்த்து அழகாய் இருப்பதாய் அவர்கள் மனதிற் பட்டால் கலியாணம் நிறைவேறும்; நாம் மாப்பிள்ளை அழகென்றுசொல்வது போதாது; கண்ணுக்குக் கண் வித்தியாசமுண்டு. எத்தனையோ கலியாணங்கள் மாலைகூடப் போட்டானபிறகு இந்தக் காரணத்தால் நின்றுபோயிருக்கின்றன.

ஜானகி:—ஆம் அதெல்லாம் எனக்கும் தெரியும்.

𑌕𑌨𑍍𑌯𑌾 𑌵𑌰𑌯𑌤𑍇 𑌰𑍂𑌪𑌂 𑌮𑌾𑌤𑌾 𑌵𑌿𑌤𑍍𑌤𑌂 𑌪𑌿𑌤𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂
𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌃 𑌕𑍁𑌲𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌮𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌨𑌮𑌿𑌤𑌰𑍇 𑌜𑌨𑌾𑌃 ॥

என்கிற சுலோகத்தை படிக்கடி நமது தர்மாம்பாளே சொல்லி யிருக்கிறாள். ஆனாலும் அவளைப்பற்றியமட்டில் நான் ஜாமீன்.

வல்லப:—சரி, இந்தவரனை நீயாகவே முதலில் எடுத்து விட்டதைக்கொண்டும் நீ யவளுக்கு ஜாமீனாக இருப்பதைக் கொண்டும் ஏதோ நடந்திருக்கிறதாக நினைக்கிறேன். அதை நீயாவது தர்மாம்பாளாவது சொல்லித்தான் தீரவேண்டும். ஆனால் நானதைத்தெரியாமற் கேட்கிறேனென்று நினைக்காதே. நீங்களே சொல்லிவிடுங்கள்; அவள் கொஞ்சம் லஜ்ஜையினாலே சொல்லமாட்டாள்; நீதான் சொல்லவேண்டும். நீ தானாகவே சொல்லாவிட்டால் அவளையே நேரில் கேட்டு விடுவேன்; நான் கேட்டால் அவள் சொல்லித்தானாகவேண்டும். என்ன சொல்லுகிறாய். நீ சொன்னபிறகு உன் மதினியின் சம்மதம் கேட்கவேண்டும்.

கௌரி:—(மெதுவான குரலுடன் ஜானகியைப் பார்த்து) என்சம்மதத்தைக் கேட்கவேண்டாம்; எப்படியாவது குழந்தைக்கு உடம்பு நிறைய 10,000-ரூ. நகை போடக்கூடிய மாப்பிள்ளையாயிருந்தால் போதுமானது.

வல்லப:—ஜடமே! இப்போது குழந்தை காதிலும் மூக்கிலும் ஒன்றுமில்லாமல் மூளியாயிருக்கிறாளோ? வேண்டுமானால் உன் நகைகளெல்லாம் கழற்றிப்போடேன், இன்னம் நீ நகை போட்டுக்கொண்டு மினுக்கவேண்டுமோ?

ஜானகி:—அண்ணா! மன்னியை அப்படிச்சொல்லாதேயுங்கள்; மன்னி நீ கவலைப்படாதே; குழந்தைக்கு என்நகைகளெல்லாம் இருக்கின்றன; நீ சொன்ன தொகைக்கு மேலாகவே மாப்பிள்ளையும் நகை போடக்கூடிய யோக்கியதையுள்ளவன்தான்.

வல்லப:—என்ன நான் கேட்ட கேள்விக்குப் பதிலேயில்லை?

ஜானகி:—தங்களுக்குத் தெரிந்திருந்தால் அதுவே போதுமே, நானும் எதற்கு ஒருதரம் சொல்லவேண்டும்?

இச்சமயத்தில் மாடிப்படியில் யாரோ ஒருவர் வருவதாய்த்தெரிய, 2-நிமிஷத்திற்கெல்லாம் காமேசுவரன் தோன்றினான். இவனைக்கண்டவுடனே தர்மாம்பாள் கௌரியம்மாளுடன் "எனக்குத் தூக்கம்வருகிறது; நான் கீழேபோய்ப் படுத்துக்கொள்ளுகிறேனென்று" புறப்பட்டதைக்கண்ட வல்லபசாஸ்திரிகள், குட்டி தர்மாம்பாள் காமேசுவரனைக் கண்டவுடன் ஏனிப்படி வெட்கப்படுகிறாய்? அவனெல்லாவற்றையும் சொல்லிவிடுவானென்றுதானே பயம்; யோசிக்காதே, இன்னொரு 5-நிமிஷம் நில் என்று கூறிவிட்டு காமேசுவர சாஸ்திரிகளை வரவேற்று இந்த ராத்திரியில் வந்த சங்கதி என்னவென்று வினவ,

காமே:—தாராளமாய்ச் சொல்லலாமோ?

வல்லட:—தாராளத்துக்கென்ன குறைவு, பேரளம் வரையிலேதான். நமது வத்ஸை தர்மாம்பாள் காவேரியில் சாப்பிட்டுவிட்டு வருங்காலத்தில் மழையைக்கண்டு 3-மாதமான காலத்தில் அறியாத்தன்மையால் முழங்காலளவு சேற்றில் காலைவைத்து அதைக் காவேரியில் அலம்பப்போனதும், நீ சுந்தரத்தைத் தயார் பண்ணிவிட்டதும், மற்றுமெல்லாருடைய பேச்சுகளும் எனக்குக் கோவிலில் நீ சொல்வதற்கு முந்தியே நம் உபாத்தியாயர் நீலமேகசாஸ்திரிகள் சொல்லிவிட்டார். காரியம் சரியானகாரியமானதால் நானொன்றும் தெரியாதவன்போலவே நடித்துவந்தேன்,

இதைக் கேட்டவுடன் நமது தர்மாம்பாளுடைய தேகமும் மனமும் எப்படியிருந்திருக்கும் என்பதை இதைவாசிப்பவர்கள் தாமாகவே ஊகித்துக்கொள்வார்களென நம்பி அதைப்பற்றி இவ்விடம் ஜாஸ்தியாய் நாம் விவகரிக்கவில்லை.

வல்லட:—காமேசுவரா! வந்த விஷயத்தைச் சொல்?

காமே:—விஷயமென்ன ஒன்றும் பிரமாதமாக இல்லை. நான் நாளைதினம் அழைத்து வருவதாய்ச் சொல்லி யிருந்தேனே இல்லையோ ........

சாஸ்திரிகள்:—யாரை? எல்லாருக்கும் புரியும்படிக்கு விசதமாய்ச் சொல்லு.

காமே:—நம் தர்மனை நாளையதினம் தங்கள் கிருகத்திற்கு அழைத்துவருவதாய்ச் சொல்லியிருந்தேனல்லவா? அவனை ராத்திரி டிரெயினிலேயே அழைத்து வரும்படி அவன் தகப்பனார் மனுஷியனை பனுப்பியிருக்கிறார்.

சாஸ்திரி:—என்ன விசேஷம்? அவ்வளவு அவசரத்திற்கு?

காமே:—நாளைய தினம் காலையில் அவருக்கு ஏதோ ஒரு கொலைக்கேஸ் விஷயமாய்ச் சென்னை போகவேண்டியதாயிருக்கிறதாம்; வீட்டில் ஏதோ ஒரு அவசரமான எழுத்து வேலையிருக்கிறதாம். அதற்கு இவனை ஏற்படுத்திவிட்டுப் போகவேண்டுமாம்?

சாஸ்திரி:—சரியவன் போகட்டும். நீ இதை ராத்திரியே சொல்ல வந்ததற்குக் காரணம்?

காமே:—என்னையொரு நாணய விஷயமாய் ஸ்ரீரங்கம் போய்வரும்படி என் பிதா ஆக்ஞாபித்திருக்கிறார். ஒருக்கால் நான் வர 9-மணிக்கு மேலாகலாம். நீங்கள் காத்திருப்பீர்கள், அதனால் இப்போது வந்து சொல்லிப்போகலாமென்று வந்தேன்.

சாஸ்திரி:—நாமெப்போது குளித்தலை போகவேண்டும்?

காமே:—அவர் பட்டணத்திலிருந்து வரட்டும், ஒருநாள் பார்த்துக்கொண்டுபோவோம், எல்லாவற்றிற்கும் நீங்கள் மதுரைக்கு மனுஷியாளை யனுப்புங்கள், நான் போய்வருகிறேன்.

உடனே மணி பதினொன்றடித்தது: அவரவர்கள் தங்கள் தங்கள் ஸ்தானத்திற்குப் படுக்கப்போனார்கள்.

இதுவரையில் ஒருத்தியாகவிருந்த தர்மாம்பாள் இன்று மனதில் தரிக்கப்பட்ட வேறொரு புருஷனுடன் கூடியிருக்கிறாள் என்று அறிந்த நித்திராதேவி என்னும் சகி நாயிக்குச் சமயம் அவளருகிற் செல்வது அநாகரிகமென்று நினைத்து அந்த ராத்திரி முழுவதும் அவளைவிட்டு விலகியே நின்றாள். தர்மாம்பாளுக்குத் தனது காவேரிக்கரை காரியங்களெல்லாம் வெளியானதைக்கொண்டு உண்டானவெட்கம் ஒருபுற

மும் பயம்ஒருபுறமுமாய் இருந்துகொண்டு இரண்டு கண்க ளுக்கும் தூக்கத்துக்கு இடங்கொடுக்காமல் இரவு முழுமை யும் காத்துக்கொண்டிருந்தன.

---

## மூன்றாவது ஆச்வாசம்

---

### காரிய நிச்சயம்.

சூளிக்கலேயில் ஒரு பெரிய அழகியமாளிகையில் இரவு சுமார் 9-மணிக்கு ஒரு தூணில் சாய்ந்துகொண்டு ஒருவர் ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தார். அவர் கண்களிரண்டு கருவிழிகளும் உயரிமையின் நடுவே ஏறிப் பார்வையற்றிருந் தன. உடம்பு சலனமன்றியும் முகம்வெளுத்து மிருந்ததைப் பார்த்தால் அவர் ஏதோ நீங்காத மனக்கவலேயி லாழ்ந்தவ ரென்று அவர் முகம்சொல்லாமலே விளக்கிற்று. சற்றுநேரத் திற்கொருதரம் அவர் விடும் பெருமூச்சியி னுஷ்ணத்தால் அவருதடுகள் சற்றே கறுத்த நிறமுள்ளவைகளாயிருந் தன. அவர் முகத்தின் தன்மையை நோக்குங்கால் அவருக் குச் சுமார் 30-வயது இருக்கலாம். சுருங்கின நெற்றியுடன் அயராழ்ந்த யோசனேயி லிருப்பதைக் கண்டால் ஏதாவது கொஞ்சம் துஷ்டர்களின் செய்கைகளிற் சம்மந்தப்படும் எண்ணமுள்ள வரென்று காணப்பட்டது. அக்தருணத்தில் அங்கொருமாது வந்து நின்றபடியே அவர் முகத்தை உற்று நோக்கினுள். அவள் தன தங்கத்தி லணிந்திருக்கிற நகை களிலுள்ள வைரங்களின் தேஜஸ்ஸால் நிசியிலும் சூரியோ தயமுண்டோ என்னும் சங்கையை யுண்டுபண்ணினுள்.

அவள் அவரைச் சற்றுநேரம் உற்றுப் பார்த்துவிட்டு,- அண்ணு! நான் வந்து நிற்பதைக்கூடக் கவனியாமல்

என்ன அசாத்தியமான ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருக்கிறாய்! என்றாள் (அவர் விழித்துப்பார்த்தார்)

அம்மாள்:—அண்ணா! நீ வந்தது முதல் கலகலப்புடன் பேசாததைக் கொண்டும் இப்போதிருக்கும் இத்தஸ்திதியைக் கொண்டும் நீ யேதோ நீங்காத துயரத்தில் மூழ்கிப் புத்தியை யிழந்திருக்கிறாயெனத் தோன்றுகிறது.

அவர்:—அம்மா சாவித்ரீ? எனக்குக் கவலைக்கென்ன குறைவு; நம் அப்பா என்னை ஏராளமான கடனுடன் அதி வாலிபத்தில் 4 பெண்களுடன் குடும்பபாரத்தைச் சுமக்கும்படி விட்டுப்போன துக்கமும், அந்தப் பெண்களைக் கலியாணம் பண்ணிக் கொடுத்து இன்னமும் கடன் ஜாஸ்தியாய்ப் பெருகிக் கடைசியாய்ச் சகல பூமிகளையும்விற்று கடன்காரர்களுக்குக் கடன் கொடுத்து இப்போது மிகுந்திருக்கும் ஸ்வல்ப பூமிகளில் வருகிற வரும்படியால் காலக்ஷேபம் செய்ய முடியாமலும், கௌரவத்தை விட்டுக்கீழ்போக முடியாமலும் மேல் இருக்க சக்தியில்லாமலும் நான் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பது உனக்குத் தெரிந்திருக்க, ஒன்றும் தெரியாதவள்போல் என்னவோ என்னைக் கேட்கிறாயே? எனக்கு நீ இரண்டு மூன்று வயதுதானே சின்னவள்; உனக்கு என்ன சங்கதி தெரியாது. உங்கள் நான்கு பேர்களையும் நல்ல இடத்தில் கொடுக்க நான் 15-வது வயதுமுதல் என்ன பாடுபட்டேன்; அவ்வளவு கஷ்டம் நான் படாதவரையில் நீ யிப்படி லக்ஷருபாய் நகை போட்டுக்கொண்டு பெட்டி வண்டி சவாரி செய்வதெப்படி?

சாவித்ரீ:—அண்ணா! அந்தப் பழைய சமாசாரத்தை யெல்லாம் இப்போது சொல்வதில் என்னபயன்? அப்போது அவ்வளவு சிரமப்பட்டு எங்களை நல்லஸ்திதியில் உள்ள மாப்பிள்ளைகளுக்குக் கொடுக்காவிட்டால் இப்போது எங்க

ளுக்கும் எங்கள் குடும்பங்களுக்கும் நீதானே சாதம்போட வேணும்; அது போகட்டும் இப்போதைய சமாசாரத்தைச் சொல்லு கேட்கிறேன்.

அவர்:—சாவித்ரீ! உங்களாலேதானே நானிந்த ஏழ்மை ஸ்திதிக்கு வந்தேன்.

சாவித்ரீ:—அதென்ன அண்ணு! அதையே திரும்பித் திரும்பி சும்மா சொல்லுகிறுய்; எங்களாலேயா சொத்தழிந்தது. எங்களையெல்லாம் இரண்டாவது இளையாளாகவும் மூன்ருவது இளையாளாகவும் வயது சென்றவர்களுக்குத் தள்ளி விட்டு ஆயிரம் பிரண்டாயிரம் வாங்கிக்கொண்டாயே யல்லது எங்களால் குடும்பத்தி லிருந்து நீ ஒன்றும் செலவழிக்கவில்லே. நீ சொத்திழந்ததற்குக் காரணம் நீ தலையிட்டுக்கொண்ட பொய் வியாஜ்யங்களும் பொய் வழக்குகளும் துர்மார்க்கங்களுமே யன்றி வேறுகாரணங்களில்லே. அது போகட்டும் இப்போது உன் கவலேயைச் சொல்லு.

இதைக்கேட்ட அந்தப்புருஷன் முகம் கொஞ்சம் சிவந்தது, உடம்பு படபடப்புகொண்டது, இம்மனிதன் யாரென்றும் இவருடன் பேசிக்கொண்டிருந்த பெண்மணி யாரென்றும் உங்களுக்கு அறிய விருப்பமிருக்கலாம். அவ்விருப்பம் மேல்வரப்போகிற ஸம்வாதங்களால் தானே அகற்றபடுமென்ருலும் அம்மட்டில் பொறுக்காத சிலபேர்களே யுத்தேசித்துக் கொஞ்சம் சூசனம் செய்கிறேம்; இவருக்கிருப்பிடம் கோயம்புத்தூருக்குச் சற்று வடக்கேயுள்ள இராமாபுரம் என்னும் ஒரு சிறு கிராமம். இவர் தகப்பஞர் துரைசாமி அய்யர் என்று அவ்வூரில் சுமார் நான்குலக்ஷரூபாய் பெறுமானமுள்ள பூமிகளுக்குப் பிரபுவாய் ஒரு ஜமீன்போல் அதிகாரத்துடன் இருந்தார். அவருக்கு இவர் ஒரே குமாரன்.

இவர்பேர் பட்டாபிராமய்யர்; இவருக்கு நான்கு தங்கைகள். இவர் கோயம்புத்தூரில் நான்காவது பாரத்தில் படித்துக்கொண்டிருக்கும்போது இவர் பிதா தேகவியோகமாயினர்.

இவர் உடனே படிப்பை நிறுத்தி ஊர்வந்து குடும்பத்தைக் கவனித்துத் தனது முதலாவது தங்கையாகிய சாவித்திரியைக் குளித்தலை வக்கீல் கோபாலசாமி அய்யருக்கு மூன்றாவது இளையாளாகக் கலியாணஞ்செய்து கொடுத்தார். (இப்போது அவளுடன்தான் குளித்தலையில் பேசிக்கொண்டிருக்கிறார்.) பிறகு ஒரு வருஷத்துக்கெல்லாம் இரண்டாவது தங்கையான மீனாக்ஷியை மதுரை புருஷோத்தமய்யருக்கு இரண்டாவது இளையாளாகக் கொடுத்தார். அதற்கடுத்தவருஷம் மூன்றாவது தங்கையாகிய கலியாணியை இப்போது தாராபுரம் தாசிலாகவிருக்கும் சுப்பராமய்யருக்கு மூன்றாவது இளையாளாக பாணிக்கிரஹணம் செய்து கொடுத்தார். அதனடுத்த வருஷம் நான்காவது தங்கையாகிய ரத்னவல்லியை உள்ளூரிலேயே ஒரு கிழவனுக்கு நான்காவது இளையாளாகக் கொடுத்தார். அந்தப் பெண்ணுக்கு மாத்திரமே கன்யாசுல்கம் ரூபா 5000 வாங்கினார்; மற்ற பெண்களுக்கெல்லாம் 1000, 2000, தான்.

பெண்விற்றகாசும் மண்விற்ற காசும் உருவாகாதென்று சொல்லும் உலகச் சொல்லுக் கேற்றவாறு அவருக்கு அத்தனை பணங் கிடைத்தும் கஷ்டந் தீரவில்லை, ஏனெனில் அவருக்குத் தகப்பனார் இறக்குங் காலத்தில் இருந்த கடன் சுமார் 70000 ரூபாய்; ஆனால் அவருடைய சொத்து அது தாங்காத கடனல்ல; ஆனாலும் அக்கடன்களை மோசஞ் செய்யவேண்டியதாகச் சில தஸ்தாவேஜிகளை யழித்தும் சிலவற்றைச் சிருஷ்டனை செய்தும் அவைகளாலுண்

டான வியாஜ்யங்களில் ஏராளமானபொருட்களைக் கடன்வாங்கிச்செலவழித்துவிட்டுக் கடைசியாய் ஒன்றும் பலனில்லாமற்போய் பழையகடன்கள் புதுக்கடன்கள் எல்லாவற்றையுந்தீர்க்கத் தனக்குள்ள பூமிகளை விற்றுக்கொடுத்து சுமார் 20,000 ரூபாய் பெறுமானமுள்ள பூமிகளை மீதியாக்கிக்கொண்டார். அவற்றில் கிடைக்கும் சுமார் 1000-ரூபாய்க்கு மேற்படாத வருஷ வரும்படியைக்கொண்டு பழைய கௌரவத்தை விடாமல் காலக்ஷேபம் செய்ய முடியாதபடியால் மறுபடி பதினாயிர ரூபாய்க்கு மேற்பட்ட கடனுண்டாயிருக்கிறது. இத்துடன் 12 வயதுக்கு மேற்பட்ட ஒருபெண் இவருக்கிப்போது கலியாணம் பண்ணிக்கொடுக்கவேண்டிய ஸ்திதியிலிருக்கிறது.

இவருக்கிப்போது கைப்பொருளுதவி யில்லாதபடியாலும் இவருடைய குணங்கள் பெரும்பாலும் வெறுக்கத்தக்கவையாயிருப்பதாலும் அந்தப் பெண்ணை நல்ல உயர்குல குடும்பத்துள் ஒரு பிள்ளைக்குக்கொடுக்க வியலவில்லை, ஆகையால், இந்தச்சமயம் நமது தங்கை சாவித்திரி பெருத்த பணக்குவியலிற்படுத்திருக்கிறபடியால் இவளிடமிருந்து அக்கலியாணத்திற்குவேண்டிய செலவிற்காக ரூ10000 பெற்றுப்போவோம், அல்லது அவளுதவியால் அவளது மூத்தாள் குமாரனாகிய தர்மனுக்காவது இந்தப் பெண்ணை கலியாணம் செய்து கொடுப்போம் என்பதாய் நிச்சயித்துக்கொண்டு அதற்காக நாலாயிரம் ஐயாயிரம் பரித்துப்போவோமென்று இந்தப்பட்டாபிராமய்யர் குளித்தலைக்கு வந்திருக்கிறார். இச்சந்தர்ப்பத்தில் நாம் ஸ்பெஷலாய் அறிந்துகொள்ளவேண்டியவிஷயம் ஒன்றுண்டு. அதாவது தமக்கையின் மூத்தாள் குமாரன் நமது தர்மன். தங்கையின் மூத்தாள் குமாரி நமது தர்மாம்பாள் என்பதே. சாவித்ரி மதுரையிலிருக்கும்

தனது தங்கை மீனாக்ஷியின் வீட்டிற்குச் சிலகாலங்களிற்போயிருந்தாலும் தர்மாம்பாளும் சுந்தரமும் திருச்சியில் அம்மான் வீட்டிலேயே இருந்தபடியாலும் தனக்கும் அந்தக் குழந்தைகளுக்கும் வேறுவிதமான நெருங்கிய பாத்தியமில்லாமையாலும் அவர்களைப் பார்த்ததே கிடையாது. மீனாக்ஷிக்கும் தனது தமக்கைக்கு மூத்தாள் பிள்ளையாயிருக்கிறான் என்பது தெரிந்திருந்தும் அவனைச் சென்றவருஷம் சாவித்ரி பெண் கலியாணத்தில் அடிக்கடி கண்டவளாயிருந்தாலும் தனக்குயாதொருவிதமான பாத்யமில்லாதபடியால் அவளவனை விசேஷமாய் அறிந்திலள்: நமது தர்மனுக்கு இவ்வளவும் தெரிந்திருந்தாலும் தர்மாம்பாளுக்கு இச்செய்தியே தெரியாது. அவள் தகப்பன் வீட்டையே அறியாதவளல்லவா? சென்ற அத்தியாயத்தில்கூட இவர்களைப் பிரஸ்தாபிக்காத காரணம் அத்தங்கை தமக்கைகளுக்கும் குழந்தைகளுக்கும் யாதொரு பாத்தியமுமில்லாமைதான்.

இது நிற்க:—சாவித்திரியின் தீரமான வார்த்தையைக் கேட்டுக் கொஞ்சம் கோபங்கொண்ட பட்டாபிராமய்யர் தனது கோபம் தான் வந்திருக்கிற காரியத்தைக் கெடுத்து விடுமென்பதைச் சற்றுக்கவனித்து அவளுடைய வார்த்தைகளைக் காதிலேபடாததுபோல் தள்ளிவிட்டு அவளுடைய கடைசி வார்த்தைக்குமட்டும் விடைகூறுகிறான்.

பட்டாபி:—ஆமாம் என் கவலையைச்சொன்னால் என்னைக் காட்டிலும் ஆயிரமடங்கு நல்ல ஸ்திதியிலிருப்பதால் நீ அதைத் தீர்க்க யத்தனிப்பாயா?

சாவித்ரி:—அண்ணா! இதென்ன இப்படி யாரன் கேட்கிறாய்? எத்தனை தடவை அவருக்குத் தெரிந்தும் தெரியாமலும் உன்காரியங்களை பூர்த்தி செய்திருக்கிறேன்.

பட்டாபி:—இந்தச் சமயம் வந்திருக்கிற காரியம் முன் தடவைகளில் வந்த காரியம்போலில்லாதது.

சாவி:—அது எப்படியிருந்தாலும் சொன்னுற்றுனே முடியுமா முடியாதாவெனச் சிந்திக்கலாம்.

பட்டாபி:—அது கட்டாயம் உன்னுல் முடிக்க முடியும், முடித்துவைக்கிறேனென்று தைரியமாய்ச் சொல்லமாட்டே னென்கிருயே.

சாவி:—சங்கதி இன்னதென்று தெரியாமல் எப்படி நான் உனக்கு வாக்குக் கொடுப்பேன்? முடிந்தால் நடத்தத் தடையில்லை; இதுவரையில் நீஎன்னிடமிருந்து அவருக்குத் தெரிவித்தும் தெரியாமலும் அடைந்திருப்பது சுமார் பதி னுயிர ரூபாய்க்குமேலிராதா. அப்போதெல்லாம் நீ என்னிட மிம்மாதிரி வரன் கேட்கவில்லையே; இப்போதும் அப்படிப் போல் தைரியமாய் உன்கவலையைச்சொல்.

பட்டாபி:—கவலையா நமது குட்டி கமலத்துக்கு வயது 13- ஆகிறதல்லவா? அவளையுத்தேசித்துப் போகாத இட மில்லை, பார்க்காத ஜாதகமில்லை, ஓர் உபயோகமற்ற குடும் பத்திற் பிறந்தவன்கூட ரூ 5000 வரதக்ஷிணை கேட்கிறுன்.

சாவி:—அதற்கென்னசெய்கிறது; இக்காலம் அப்படிக் கெட்டுப்போய்விட்டது. இன்னம் கொஞ்சநாளில் இவ்வர தக்ஷிணைப்பெருக்கால் எப்படிக் கெடப்போகிறதோ தெரிய வில்லை; இப்போதே அனேக குடும்பங்கள் இதனுல் சீரிழந்து தவிக்கின்றன. அதற்குத் திருஷ்டாந்தம் வேறுவேண்டாம். இந்த அகத்தின் புருஷனுக்குச் சொத்தில்லாமற்போக வில்லை. மாசம் ஆயிரரூபாய்க்குமேல் சம்பாதிக்கிறுர். எல்

லாம் குதிரைக்காரனும் வண்டிக்காரனும் சாப்பிடத்தான் சரியாயிருக்கிறது. இவருக்கு சம்பாத்தியம் இருப்பதும் சொத்திருப்பதும் பார்த்து எல்லாரும் மலைக்கிறார்கள். இவருடைய சொத்தெல்லாம் என்மேலுள்ள சுமார் லக்ஷரூபாய் மதிப்புள்ளநகைகள்தான். ஏதோ ஒரு அனந்தரவார்சு வியாஜ்யத்திற்காக லக்ஷரூபாய்க்குமேல் கடன்வாங்கிச் செலவு செய்திருக்கிறார். கடைசியில் அது கிடைக்காதுபோலிருக்கிறது. போனவருஷம் என் பெண் ஸ்வர்ணாம்பாளுக்குக் கடன்வாங்கி பதினாயிரரூபாய் செலவிட்டுக் கலியாணம்பண்ணிச்சென்ற கார்த்திகைமாதத்தில் பதினாயிரரூபாய்க்கு சீருடனும்பதினாயிரரூபாய்க்கு அவளுக்குநகையுடனும் சாந்திக் கலியாணம்பண்ணிப் புருஷன் வீட்டிற்கவளை யனுப்பினோம். இதில் அவர்களுக்கும் சீர்போதாதென்று அதிருப்தி. பெண்ணுக்கும் நகை போதாதென்று மனஸ்தாபம். அதற்காகக் கடைசியில் அவள் அப்பாவுக்குத்தெரியாமல் என் வைர ஒட்டியாணத்தை அவளிடுப்பிற்போட்டு போகச்சொல்லி யிருக்கிறேன். இப்படியிருக்கையில் நீ எப்படி இந்தக்கஷ்டத்திலிருந்து மீளப்போகிறாய்.

பட்டா:—இதுமாத்திரமா? அந்தப்பெண் பெரிசாய் விட்டதென்று புரளிநடக்கின்றதாம்.

சாவி:—அதுவும் நடக்குந்தான் நம் பொல்லாதவேளை; போனவருஷமே அவளைப்பார்த்தால் அப்படிச்சொல்லும் படியாயிருந்தது. இப்பால் பத்துமாசமாய்விட்டதல்லவா? அதற்கென்னசெய்கிறது. அந்தப்பெண்ணின் தேகவளர்ப்பு அப்படிப்பட்டது. போனவருஷமே நான் அடிச்சுக்கின்டேனே, நம் கோபாலவைத்தியர் பிள்ளைக்குக்கொடுத்துவிடு என்றதற்கு நீ சம்மதித்திருந்தால் இந்த ஆத்துக் கலியா

ணத்தோடு உன் கலியாணத்தையும் நடத்தியிருக்கலாம். வரதக்ஷிணை 1000ரூபாய்தான் உனக்குச் செலவு; அதையும் நான் மெள்ளச் சிபார்சுபண்ணி அவரைக் கொண்டே செலவோடு செலவாக கொடுக்கச் சொல்லியிருப்பேன். நீ அப்போது வானம்பார்த்தாய்; அவன் அழகாயில்லை; வைதிகன் விட்டுப் பிள்ளையென்றாய். உன் பெண்ணின் அழகை நீ கவனிக்கவில்லை. அந்தப்பையனுக்கு அடுத்த வைகாசிமாசத்தில் 3000 ரூபாய் வரதக்ஷிணையோடு அப்ஸாஸ்போல் அதிசுந்தரியான பெண் கலியாணமாய்விட்டது.

பட்டா:— அந்தவரனை நானு வேண்டாமென்றேன். உன்மதினி குறுக்கே படுத்துக்கொண்டாள்; எல்லாம் பெண்களால்தானே உலகம் கெடுகின்றது.

சாவி:—பெண்களால் என்கெடும்? புருஷனுக்குத் திரத்துவம் இருந்தால் இப்போது திண்டாடுகிறது பார். இருக்கட்டும் என்னிடம் வந்த காரியத்தைச்சொல்.

பட்டா:—வந்தகாரியமா? உன் மூத்தாள்பிள்ளை தர்மனுக்கு நமது கமலத்தைக் கொடுத்துவிடுவோமென்று தீர்மானித்திருக்கிறேன். நீயதைமுடித்துக் கலியாணச்செலவுக்குக் குறைந்தது 2000ரூபாயாவது கொடுக்கும்படியாய்ச் செய்யவேண்டும்; இதுதான் நான்வந்த காரியம்; நீ மனம்வைத்தால் அந்தக் காரியம் முடியும் என்பது என் தீர்மானம்.

சாவி:—இதைக்கேட்கஎனக்குச்சிரிப்புவருகிறது. அழகில் மன்மதனை ஜயித்த தர்மனுக்கு உன் கோணமூஞ்சிக் கமலத்தைக்கொடுக்கத் தீர்மானித்தேன் என்கிறாயே. நான் ஒப்புக்கொண்டாலும் உலகம் ஒப்புக்கொள்ளுமா? மேலும் அவன் படிப்புக்கும் குணத்துக்கும் பதினாயிரரூபாய் வேண்டுமானாலும் வரதக்ஷிணைகொடுத்துப் பெண்கொடுப்

பாரே. நீ அப்படிப்பட்டபிள்ளைக்குப் பெண்கொடுக்க இரண்டாயிர ரூபாய் கன்யாசுல்கம் கேட்கிறாய். அவனென்ன அவிசாரிபிள்ளையா? எப்படியாவது நல்லகுலத்தில் கலியாணமானால் போதுமென்பதற்கு; மனுஷியர்களுக்குச் சொத்து குறைந்தால் புத்தியும் குறையுமென்று கேள்விப்பட்டிருக்கிறேன், அதற்கு நீ தான் பிரதம திருஷ்டாந்தம்.

பட்டா:—இந்தப் பிரசங்கத்தை இங்கு உன்னிடம் கேட்கத்தான் நானிவ்விடம் வந்தேனோ?

சாவி:—பின் நான் என்னசெய்யவேண்டுமென்கிறாய்? தஞ்சாவூர் கோபுரத்தையும் கும்பகோணம் கோபுரத்தையும் ஒன்றாகச்சேர்க்க முயல்கின்றாயே?

பட்டா:—(தளர்ந்த குரலுடன்) சாவித்திரி! நானோ சொத்தில் குறைந்துபோய்விட்டேன். கௌரவத்தையோ விட மனமில்லை. நான் கொஞ்சம் கீழாகப்போக நினைத்தாலும் எனக்கு வாய்த்திருக்கிற பெரிய காளி என்னை உயிருடன் தின்று விடுகிறாள்; உன் புத்திசாலித்தனத்தில் நாற்றிலொன்றுகூட அவளுக்கில்லை. உனக்குக் கிட்டத்தட்ட 30 வயதாயும் என்னிடத்திலேகூட நீ எவ்வளவோ அடக்கமாய்ப்பேசுகிறாயே; அவள் நடுத்தெருவில் வந்து நின்று தொண்டையைத் திறந்தாளானால் ஊரைவிட்டுப் பேய்பிசாசுகூட ஓடும் "வேறு பெண்ணில்லை பிள்ளையில்லை, இந்த ஒரு பெண்ணைக்கூட நல்ல இடம்பார்த்துக் கலியாணம் செய்து கொடுக்க முடியாத நீ இருந்தென்ன இறந்தென்ன? முடியாவிட்டால் இந்தக்கிணற்றில் விழுந்துவிடு நான் என்பெண்ணை ஒரு பெரிய ராஜா வீட்டுப் பிள்ளைக்குக் கலியாணம் பண்ணிக் கொடுக்கிறேன்" என்கிறாள் தெருவில நின்று.

சாவி:—நீ பாலியத்தில் அவளையடக்காமல் இஷ்டப்படி விட்டுவிட்டுக் கண்ட குச்சுக்காரிகளுடனே திரிந்துகொண்டு வீட்டைக் கவனிக்காமலிருந்துவிட்டாய். இப்போது உதைத்துக்கொள்ளுகிறாய். என்னசெய்யலாம்? நம் அம்மா அவளிடத்தில் என்னபாடுபட்டாள், அப்ப! அவள் செத்தாளோ, பிழைத்தாளோ.

பட்டா:—சாவித்ரி, பெண்களுக்கு நல்ல குணத்தையும் அடக்கத்தையும் புருஷன் போதித்து உண்டுபண்ணுவதென்பது உன் புத்திக்குறைவு. உனக்கு இவ்வளவு தூரம் அடக்கத்தை உன் புருஷனா உபதேசித்தான். அப்பப்ப! பெண்களுக்கு சட்டத்திலாவது சாஸ்திரத்திலாவது ஸ்வாதந்திரியத்திற்குக் கொஞ்சமேனும் ஆதாரமில்லாதகாலத்திலேயே இந்தக் கஷ்டம் இப்படியிருக்கிறது. இப்போது வாதாடுகிற நவீனநாகரிககாரருடைய கோட்பாட்டின்படி அவர்களுக்கு ஸ்வாதந்திரியம் கொடுத்துவிட்டால் புருஷர்களெல்லாம் அகாலமரணத்தை யடையவேண்டியதுதான்.

சாவி:—அண்ணா! நின்வம்பு என்னத்திற்கு, உனது முடிவான அபிப்பிராயத்தைச் சொல்லு?

பட்டா:—நான்தான் என் அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டேனே.

சாவி.—சாதாரணமாகவே உன்னுடைய சிலநடத்தைகளால் உன்னைக்கண்டால் இந்த கிருகத்துப்புருஷாளுக்குப் பிடிக்கிறதில்லை. அதிலும் இதைப்பற்றி நான் சொன்னால் எனக்கவமானம் வருமென்றே நினைக்கிறேன். போனவருஷம் உன் பெண்ணை, இங்கேவந்திருக்கையில் அவாள் பார்த்திருக்கிறார்கள். அப்படியிருக்க அதைப்பற்றி நான் சொன்னால் கேட்பார்களா?

பட்டா:—இல்லாவிட்டால் ஒரு பதினையிரரூபாயாவது எனக்கு எப்படியாவது இந்தச்சமயம் கொடு, நான் வேறு எங்காவது பார்த்து ஒரு வரனுக்கு இந்தமாசத்திற்குள் கொடுத்துவிடுகிறேன். பொன்னேரி நிலங்களை முழுமையும் உனக்கே எழுதித் தந்துவிடுகிறேன்.

சாவி:—நீ கோயம்புத்தூர் ஜில்லாமுழுமையும் எழுதிக்கொடுத்தாலும்சரி, என்னிடம் ஒருரூபாய்கூடப் பணம்கிடையாது. என்கையில் பணமிருந்தகாலமெல்லாம் முன்காலம். நான் அப்போது உனக்கும் கொடுத்தேன், இப்போது குழந்தைக்கு ஒரு ரவிக்கைத்துண்டு வாங்கவேண்டுமானல் அவாள் பணங்கொடுத்தாலுண்டு, இல்லாவிட்டால் இல்லை.

பட்டா:—இல்லையானல் ஒருநகையாவது கொடு, நான் எப்படியாவது பார்த்துக்கொள்கிறேன்.

சாவி:—நீ இவ்விதமெல்லாம் கேட்பதானது எனக்கு வெறுப்பைத்தருகின்றது. என்பேரிலுள்ள நகைகளின்பேரில் அவாளுக்கிப்போது நிகா நிரம்ப ஜாஸ்தி.

பட்டா:—அப்படியானல் நான் வெறுங்கையாய் ஊருக்குப்போகவேண்டியதுதானே?

சாவி:—இப்போது ஊருக்குப்போ. எங்கேயாவது பார்த்து ஒருவரனைத் திட்டம்பண்ணு, நான் அவாளுக்குக் கூடியமட்டில் சொல்லி ஏதாவது கொடுக்கும்படிக்கு ஏற்பாடுசெய்கிறேன்.

பட்டா:—ஏதாவதென்றல் அதற்கு என்ன அர்த்தம்?

சாவி:—அதற்கெல்லாம் அர்த்தம் இப்போது சொல்ல முடியாது, கொடுக்கும்போதுதான் தெரியும்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் மணி 11 அடித்தது. வாயிலில் வண்டிவந்துநின்ற சத்தம்கேட்டது. வேலைக்காரன் கதவைத்திறந்தான். உடனே அவ்வீட்டின் யஜமானராகிய கோபாலசாமி அய்யர் வீட்டிற்குள் நுழைந்தார். பின்னோடு வண்டிக்காரன் ஒரு கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டுவந்து உள்ளேவைத்துவிட்டு வண்டியை ஓட்டிச்சென்றான். சாவித்ரீ அவரை இரண்டாவது வாயிற்படியின் சமீபத்தில் நின்று வரவேற்றாள். அவர் உடனே அறையில் ஒரு சாய்வான நாற்காலியில் வீற்றிருக்க சாவித்ரீ நின்றபடியே தணிந்தகுரலுடன் கேட்கிறாள்.

சாவி:—நாலுநாள் செல்லுமென்றுப்போயிருந்தீரே.

கோபா:—அப்போது அப்படித்தான் நினைத்திருந்தேன், போனவுடன் அவ்விடத்திய வக்கீல் தயாராக இருந்தார். உடனே கேஸை அவரிடம் ஒப்புவித்துவிட்டு நேற்றி ராத்திரியே திரும்பிவிட்டேன்.

சாவி:—அப்படியானால் இன்று காலையிலேயே வந்திருக்கலாமே.

கோபா:—ஆம் வந்திருக்கலாந்தான். காலமே கோட்டை ஸ்டேஷனில் நம் காமேசுவரசாஸ்திரிகள் கண்டார்; அவர் திருச்சிக்கு அழைத்துச்சென்றார். பகல் முழுமையும் அங்கிருந்தேன்.

சாவி:—என்னவிசேஷம், ஏதாவது கச்சேரிக்காரியமோ?

கோபா:—நம் தர்மனெங்கே?

சாவி:—அவனெதற்கு, இந்த ராத்திரியில் அவன் படுத்துத் தூங்குகிறான், வேணுமானால் அவனை எழுப்புகிறேன்.

கோபா:—அவனுமிருந்தால் நல்லதென்று நினைத்தேன், இருந்தாலும் பிந்திப் பார்த்துக்கொள்வோம்

சாவித்ரி:—என்ன விசேஷம் திருச்சிறைப்பள்ளியில்?

கோபால:—உன் தங்கை மீனாக்ஷியின் மூத்தாளுக்கு இரண்டுக்குழந்தைகளுண்டே உனக்குத்தெரியுமா?

சாவித்ரி:—இதுகூடத்தெரியாதா? ஒருபெண்ணும் ஒரு பிள்ளையும் இருக்கிறதாய்த்தெரியும். ஆனால் அவர்கள் திருச்சியில் அம்மானுத்தோடு இருக்கிறபடியாலும் அவர்களுக்கும் நமக்கும் அடிக்கடி போக்குவரவு இல்லாததாலும் நான் அவர்களைச் சமீபத்தில் பார்த்ததில்லை.

கோபால:—அக்குழந்தைகளின் அம்மான் வல்லப சாஸ்திரிகள் அடிக்கடி நம்மிடம் வருவாரே, அவர் திருச்சிறைப்பள்ளி டிஸ்ட்ரிக்டு கோர்ட்டில் கொடுக்கவேண்டிய கேள்களைக்கூட அங்கிருக்கிற வக்கீல்களைத் தள்ளி நம்மிடம்வந்து கொடுப்பார்.

சாவித்ரி:—தினம் எத்தனையோ கக்ஷிக்காரர்கள் வருகிறார்கள்; நானவர்களையெல்லாம் கவனிக்கிறேனாஎன்ன?

கோபால:—சரி. அப்படியானால் சொல்லுகிறேன்கேள். அவ்விரு குழந்தைகளில் பெண்தான் இளையவள்; அவளுக்கிப்போது வயது 12 நிரம்பி 13-வது நடக்கின்றது; அவளை பால்யத்தில் பால்கொடுத்து வளர்த்தவள் அவள் சிறிய தாயார்; அவளிப்போது கணவனையிழந்து பிறந்த வீட்டேயிருக்கிறாள்; அவளுக்கிருந்த சுமார் 5000 அல்லது 6000 ரூபாய் பெறுமான நகைகளை இந்தப் பெண்ணுக்குப் போட்டிருக்கிறாள்; அந்தப் பெண்ணைப்போல் அழகுள்ள

ஸ்திரீ உருவத்தை நான் என் வயதில் பார்த்ததில்லை. அதிருக்கட்டும், அழகுள்ள பெண்கள் அனேக இடங்களில் இருக்கலாம்.

சாவித்ரி:—குணமும் ரொம்ப சிலாக்கியமாயிருக்கிறதாக்கும்.

கோபால:—அதுவும் சரிதான்; அதுவும் எனக்கு ஆச்சரியமில்லை; எத்தனையோ பெண்கள் குணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். நீ இல்லையா ஒரு குணமுள்ள பெண்?

சாவித்ரி:-(நகைப்புடன்) என்குணந்தான் இருக்கிறதே, அந்தப்பெண்ணிடம் தாங்கள் பார்த்து ஆச்சரியப்பட்ட விசேஷத்தைச் சொல்லுங்கள்.

கோபால:—அவளுடைய வித்தைதான் எனக்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணிற்று.

சாவித்ரி:—இதுதானா ஆச்சரியம், இக்காலத்திய பெண்களில் வாசிக்காதவர்களு முண்டோ?

கோபால:—வாசிப்பு என்றால் என்ன. நீ மதனகாமராஜன் கதையை வாசித்து விடுகிறாயே, அதுதான் வாசிப்பென்று நினைத்திருக்கிறாய்போலும்.

சாவித்ரீ:—எதற்கும் நான்தான் அசடு இருக்கிறேனே, என்னையேன் திருஷ்டாந்தம் கொடுக்கவேண்டும், அந்தப் பெண்ணின் சாமர்த்தியத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.

கோபால:— அந்தப்பெண் ஸம்ஸ்கிருத பாஷையை அஸாத்தியமாய்ப் படித்து ஸரஸ்வதியைக்கூட வெல்லக் கூடிய சாமர்த்தியத்தை யடைந்திருக்கிறாள். தானாக சுலோ

கம் எழுதுகிறாள். மல்லிகைப்புஷ்பம் தொடுத்தாற்போல் அழகிய ஸம்ஸ்கிருத ஸப்தங்களால் உபந்நியாஸஞ்செய்கிறாள். அவள் புத்தியை என்னால் சொல்லத் தரமில்லை. பிறர் பேசும் ஸம்ஸ்கிருத பதத்திலும் தமிழ் பேச்சுகளிலும் அதிஸூக்ஷ்மமான அர்த்தங்களைக் கண்டுபிடிக்கிறாள்.

சாவித்ரி:—ரொம்ப சரி, எனக்கும் இது ஆச்சரியமாய்த் தானிருக்கிறது; தாங்கள் அந்தப் பெண்ணைப்பார்க்க நேர்ந்த காரணமென்ன?

கோபா:—அந்தப்பெண்ணை நம் தர்மனுக்குக் கொடுப்பதாய் நிச்சயித்துக்கொண்டிருக்கிறார்கள்; கற்கண்டு சர்க்கரை பழம் பாக்கு வெற்றிலை முதலிய மங்கள திரவியங்களுடன் அவர்கள் நான் ஊருக்கு வந்ததைத் தெரிந்துகொண்டு நம்மிடம் வரத் தயாராயிருக்கிறார்கள். இப்படியிருக்க இடையில் என்னை ரெயில்வே ஸ்டேஷனில் தற்செயலாய்க் கண்ட காமேச்வர சாஸ்திரிகள் இவ்விஷயங்களை என்னிடம் சொல்லிப் பெண்ணைப் பார்க்கவேண்டியதற்காக என்னைக் கோட்டைக்குள் அழைத்துச் சென்றார். மத்யானம் சுமார் 3-மணிக்கு நமது சாஸ்திரிகளுடன் அவ்விடு சென்றேன்; அப்போது இதெல்லாமறிந்தேன்.

சாவித்ரி:—தங்களை இன்னாரென்றும் இன்ன காரியத்திற்காக வந்தீர்களென்றும் தெரிந்தும் தங்களிடத்தில் தன்னிடமிருக்கிற வித்தையைக் காட்டினளா அந்தப்பெண்?

கோபால:—சீ மற்ற பெண்களைப்போல் நீ அவளையும் மானம் லஜ்ஜையில்லாதவளென்று தீர்மானித்துவிட்டாய் போலும்; அப்படியில்லை. நம் சாஸ்திரிகள் அப்பெண்ணிருக்கு மறைந்து அடுத்த அறையில் என்னை வாய்பேசாமல் அமர்த்

திவிட்டு அவரவளிருக்கிற அறை சென்று ஸம்வாதம் செய்துகொண்டிருந்தார். இரண்டு சாஸ்திரங்களை ஸமர்மகமாய்க் கற்றறிந்து இராஜாங்கத்தில் பரீக்ஷை கொடுத்த காமேசுவர சாஸ்திரிகள்கூட அவளுடன் அவ்வளவு வேகமாயும் அதிக மிருதுவாயும் அர்த்தபுஷ்டியுள்ளதுமான சப்தங்களுடனும் வாதாடினரென்று சொல்ல என் மனம் துணியவில்லை. அவருக்கும் அப்பெண்ணுக்கும் சமீப உறவுண்டானபடியால் அவர் வெகு தாராளமாய் அந்த போய் பேசினர். அவளும் அண்ணு அண்ணுவென்று கூப்பிட்டுக்கொண்டு தாராளமாய்ப் பேசினுள். அப்போது அடுத்த அறையிலிருந்த நான் மெய்மறந்திருந்தேன். பிறகு எல்லாருடனும் போய் அவளைப் பார்த்துவந்தேன். அவள் லஜ்ஜையு மடக்கமும் ஒருவருக்குமிரா.

ஸாவித்ரி:—நாதா! நான் மிகவும் களிப்படைந்தேன். தாங்கள் சொல்வதைக்கேட்டால் எனக்கு அந்தப்பெண் இப்போதே நாட்டுப்பெண்ணாக அகத்திற்கு வந்துவிட வேண்டுமெனத் தோன்றுகிறது. பிறகு லௌகிகப்பேச்சு ஏதாவது நடந்ததுண்டோ?

கோபா:—உன் தாசானுச உன்னைவிட்டகன்றுற்றுன் உன்னைப்பிடித்த பீடை விலகும்.

ஸாவித்ரி:—இதென்ன இப்படிச் சொல்லுகிறீர்களே, நம்மிடம் வந்தவர்கள் நம்மை இலகுவில் விட்டார்களா? லோகவழக்கத்தை நடத்துவதில் நமக்கேதேனும் குறையுண்டா?

கோபால:—சரி, நீ எத்தனைரூபாய் கொடுத்தால் அந்தப்பெண்ணை நாட்டுப்பெண்ணாகச் செய்துகொள்ள சம்மதிப்பாய்?

ஸாவித்ரீ:—அதற்கு நானா யஜமானி, தங்களிஷ்டம்.

கோபால:—நான் உன்னை அவர்களிடம் பேசில் கேட்கச்சொல்லவில்லை. என்னிடஞ்சொல் உன் அபிப்பிராயத்தை.

ஸாவித்ரீ:—நான் சொல்லுகிறேனென்று கோபித்துக்கொள்ளாமேதயுங்கள்; நாம் போனவருஷம் நம் பெண்ணுக்குக்கொடுத்த ரூபாயும் அதேமாதிரி நகையும் சீரும் நமக்குக் கொடுத்தால் போதும்.

கோபால:—சரி, நீ போனவருஷம் என்ன கொடுத்தாய்?

ஸாவித்ரீ:—ரூ-5000 கொடுத்தீர்கள்.

கோபால:—அவர்கள் நமக்கிப்போது ரூ7000 கொடுக்கிறார்கள்.

ஸாவித்ரீ:—நகையும் சீரும்.

கோபால:—நீ நகையும் சீரும் எப்போது செய்தாய்?

ஸாவித்ரீ:—சாந்திகல்யாணத்தில்.

கோபால:—அப்போது அதைப்போல் இரண்டுபங்கு அவர்களும் செய்யத் தயாராயிருக்கிறார்கள். அவளது சிற்றன்னை ரூ5000-க்கு மேற்பட்ட நகைகளை இப்போதே அவளுக்குப் போட்டிருக்கிறாள்! மேலும், அவளிடம் ரொக்கம் 20 - ஆயிரத்துக்கு இருக்கிறதாம். அதுவும் இந்தப் பெண்ணுக்குத்தான் அவள் வைத்திருக்கிறாள்.

ஸாவித்ரீ:— ஆம் நியாயந்தானே, தாயில்லாக் குழந்தையைப் பால் கொடுத்து வளர்த்தவளோ இல்லையோ: ஆம் எல்லாம் சரிதான், ஜாதகம் பார்த்தீர்களா?

கோபால:—அது பார்க்காமலா இவ்வளவும்? நான் அவ்விடம் போனதும் காமேசுவரசாஸ்திரிகள் ஜாதகத்தைக் கேட்டார்; எனக்கு முகஸ்தமா யிருக்கிறபடியால் சொன்னேன்; உடனே அவர் பெண்ஜாதகத்தையும் வரவழைத்துத் தற்செயலாய் அவர் வீட்டுக்கலியாணம் விசாரிக்க வந்திருந்த லாலுகுடி முத்துஜோஸியரிடம் காண்பித்தார். அவர் பொருத்தங்கள் சர்வசிலாக்கியமாய் இருப்பதாய்ச் சொன்னார்.

ஸாவித்ரீ:—ஜோஸியர்களை நம்பலாகாது. முந்தியே இந்தப்பிள்ளை ஜாதகத்தை யுத்தேசித்து இடுப்பில் ஒரு பவுன் சொருகியிருந்தால் அசிலாக்கியமாயிருந்தாலுங்கூட சிலாக்கியமென்றே சொல்லிவிடுவார்களே.

கோபால:—அடி பயித்தியமே, எல்லாரையும் அப்படியே சொல்லலாமா? முத்துஜோஸியர் நம்மிடம் வாஸ்தவமான அபிமானமுள்ளவர். போனவருஷம் நம் சுவர்ணம் பாளுக்கு அவர் சொன்னபிறகுதானே அந்த வரனை நான் ஒப்புக்கொண்டேன்.

ஸாவித்ரீ:—எல்லாம் சரிதான். நமது தர்மன் அந்தப் பெண்ணைப்பார்த்து சம்மதிக்கவேண்டாமா?

கோபால:—அந்தப் பெண் நமது தர்மனை நேரில் பார்த்து சம்மதிக்கவேண்டாமா?

ஸாவித்ரீ:—அதுவும் வேண்டியதுதான் இந்தக் காலத்துப் பெண்களுக்கு. நான் எதைக்கேட்டாலும் அதிலுள்ள விஷயத்தைத் தெளிவாய்ச் சொல்லாமல் ஈட்டிக்குப் போட்டியாய்ச் சொல்லுகிறீர்களே, மூன்றுவது இளையாளாக வாழ்க்

கைப்பட்ட நான் வரனை நேரில்பார்த்துத்தான் சம்மதித்தேனே? அந்தக் காலம் அப்படி இந்தக் காலம் இப்படி.

கோபால:—மூன்றாவது இளையாளாக வாழ்க்கைப் பட்ட உனக்கு என்னமை குறைவு ஏற்பட்டுவிட்டது? வார்த்தையோடு வார்த்தையாய்க் குத்திக்காண்பிக்கிறாய்.

ஸாவித்ரீ:—(கை கூப்பிக்கொண்டு) நான் சொல்வதைக் கேட்டு கோபிக்கலாகாது. அந்தந்தக் காலத்திய லக்ஷணங்களைச் சொன்னேனே தவிர வேறில்லை. என்பேரில் தப்பிருந்தாலும் மன்னிக்கவேண்டும். எனக்கொரு குறையையும் தாங்கள் வைக்கவில்லையென்பது நானறிவேன்.

கோபால:—நான் சொல்லுகிறேன்கேள். நம் தர்மனும் காமேசுவர சாஸ்திரிகளும் பரஸ்பரமித்திரர்களல்லவா?

ஸாவித்ரீ:—ஆம்! அதில் என்ன சந்தேகம்? அதனாற்றான் அவர் சீமந்த கலியாணத்திற்குக்கூட இவன் போயிருந்தான்.

கோபால:—போயிருந்தா னல்லவா? அப்பொழுது ஒரு நாள் சாயங்காலம் அவர்களிருவரும் காவேரிக்கரைக்குப் போனார்களாம். அன்று கனவாம். (என்றிவ்விதமாரம்பித்து முதலத்தியாயத்தில் நடந்த சங்கதிகளைச் சுருக்கமாய்க் கூறினார்.)

ஸாவித்ரீ:—யாரிவ்வளவையும் தங்களுக்குச் சொன்னது?

கோபால:—கூடவிருந்த காமேசுவரசாஸ்திரிகள்.

ஸாவித்ரீ:—அவர்தான் இதில் கடகர்போலிருக்கிறது.

கோபால:—கடகராயிருந்து அவர் தாகு வாங்கப் பார்க்கவில்லை. நம் தர்மனுக்கு நல்ல ரூபவதியான பெண்ணைக் கலியாணம் பண்ணிவைக்க வேண்டுமென்ற எண்ணம் இவருக்கு.

ஸாவித்ரீ:—ஸரி ரொம்ப சந்தோஷம்.

கோபால:—முடித்துவிடுவோமா ?

ஸாவித்ரீ:—எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. இன்னொரு விசேஷம் எனக்கு, என் தங்கை மீனாக்ஷியே எனக்கு சம்மந்தியாய் வருகிறாள்.

என்றிவ்வாறு பேசும்போது மணி ஒன்றடித்தது. அவரவர்கள் படுக்கச் சென்றார்கள்.

இந்த தம்பதிகளிருவரும் பேசிக்கொண்டிருந்த சங்கதிகளனைவற்றையும், வண்டிவந்தவுடனே அடுத்த அறையில் படுத்திருந்து தூக்கம்விழித்துக்கொண்ட நமது தர்மனும், சமீபத்திற்போய்த் தெரியாமல் ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்த பட்டாபிராமய்யரும் மறுபடியும் இராத்திரி தூங்கினார்களில்லை. அதற்குக்காரணம் தர்மனுக்குத் தன் உத்தேசம் நிறைவேறுவதினால் ஆநந்தமிருந்தாலும் தனது காவேரிக்கரை ரகஸியம் வெளியானதில் கொஞ்சம் லஜ்ஜை. பட்டாபிராமய்யருக்கோவென்றால், தாம் வந்த காரியம் நிறைவேறாமற்போனதைக்கொண்டு வேறு எவ்விதத் தியச்செயலாவது செய்து காரியத்தை முடிக்கவேண்டுமென்பதாம்.

## நான்காவது ஆர்வாஸம்.

### விபரீதசம்பாவனம்.

இராத்திரி மணி பதினொன்றடித்தது. மதுரைமாநகர் முழுமையும் நிச்சப்தமாய் அலையில்லாக் கடல்போல் விளங்கிற்று. முனிசிபல் லாந்தர்கள் மாத்திரம் சிறிது மங்காமல் எரிந்து கொண்டிருந்தன. அப்படிப்பட்ட காலத்தில் ஒரு மனிதன் மாசிவீதியில் மெதுவாய் நடந்து கொண்டிருந்தான். அவனுடைய வாடின முகமும் சுருங்கின நெற்றியும் அவனைச் சிந்தைக் கடலிலாழ்ந்திருப்பதாய்ச் சொல்லின. அவன் பின் வருமாறு மனதில் தர்க்கித்துக்கொண்டே மெதுவாய்ச் செல்லுகின்றான்.

நமக்கு இன்றைபதினம்போல் பாபபலத்தைக் கொடுக்கும் தினம் நமதாயுஸ்ஸில் வந்ததில்லை. மாதம் 1-க்கு தன்னாலும் தன் பிள்ளைபடிப்பாலும் சுமார் ரூபா 15-க்கு மேல் நம்மிடம் பறித்து வருகிற அந்த முண்டைக்கு, நமக்கும் நமது பையனுக்கும் சமையல் செய்து போடுவது ஒரு பெரிய தர்மமாகத் தோன்றுகிறதே தவிர அவ்வாறு செய்யத் தான் கட்டுப்பட்டிருப்பதாய் அவள் நினைக்கிறாளில்லை. எந்தப் பேச்சுப் பேசினாலும் இனி என்னால் முடியாது, நானெங்காவது போய்விடுகிறேனென்கிறாள். இந்த அகட்டலுக்கு இனி பயந்து முடியாது. எனக்கும் இன்று தாங்காத கோபம் பெருகி வாய்க்குவந்தபடி பேசி அடித்தும்விட்டேன். கட்டாயம் நாளையதினம் அவளிங்கிராள். ஆ! ஆ! நமது முட்டாள் தனத்தை என்னென்று சொல்லலாம். 5000 ரூபாய் பெறுமானமுள்ள நிலம் வீடு முதலிய சொத்துகளோடுவந்த பெண்ணை இந்தப்பாவி மீனாக்ஷியின் வார்த்தையைக்கேட்டு

கலியாணம் பண்ணாமல் மறுத்து விட்டேன். எனக்கோ வயது ஆகிறது. இனி யார் பெண்ணைக் கொடுப்பார்கள்? எத்தனை நாள்தான் சாப்பாட்டுக்கு இப்படிக் கஷ்டப்படுகிறது. நாளை தினமே ஏற்பாடுபண்ணி ஒரு பெண்ணைக் கலியாணம் பண்ணிவிடவேண்டியதுதான்

என்றிவ்வாறு யோசித்துக்கொண்டு இவன் வீதியோடு போகுங்காலத்தில் அங்கொரு மாளிகையின் வாயிற்படியில் தெருவையே நோக்கிக் கொண்டிருந்த ஒரு பெண்மணி இவனைப்பார்த்தாள். கொடிமின்னலைப்போன்ற அவளுடம்பில் விசுவகர்மா என்னும் தேவசிற்பியால் தனதுபெண் சம்க்ஞா தேவிக்காகச் செதுக்கி யுதிர்க்கப்பட்ட ரவி மண்டலத்தின் தூள்களோவெனச் சந்தேகிக்கத்தக்க சிமைக் கமலங்களால் இழைக்கப்பட்ட பூஷணங்களின் காந்தியாகிற வலையானது வீதியில் விரிக்கப்பட்டிருந்தமையால் அதிலகப்பட்டவன் போல் அந்த மனிதன் அப்புறம் போகமுடியாமல் நின்று விட்டான். உடனே அந்தப்பெண்மணி "ஏது இன்றைக்கு நாழிகையானதோடு வீடுகூட அடையாளந் தெரியவில்லை போலிருக்கிறது" என்று மிக மெதுவாயும் இனிப்பாயுமுள்ள குரலுடன் சொல்லித் தளுக்காய்த் தெருவில்வந்து அம்மனிதனைக் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு வீட்டினுட் சென்றாள். உடனே இருவரும் அங்கோரறைக்குட்சென்றார்கள். அவ்வறையில் ஒரு பவர்லைட் எரிந்துக்கொண்டிருந்தது. ஒரு இரும்புக் கட்டிலில் படுக்கை விரிக்கப்பட்டிருந்தது. ஒரு வெள்ளிச் செம்பில் காய்ச்சப்பட்ட பாலும் அதன்மேல் மூடப்பட்டுள்ள டம்ளருமிருந்தன. ஒரு வெள்ளிப்பேலாவில் குங்குமப்பூ கலந்த சந்தனம் கரைத்து வைக்கப்பட்டிருந்தது. ஒரு வெள்ளித்தட்டில் வெற்றிலை பாக்கு சாமான்

கள் தயார் செய்யப்பட்டிருந்தன; இருவரும் அக்கட்டிலில் உட்கார்ந்தார்கள். உடனே முற்கூறியபடி சிந்தையினால் வாடின அப்புருடனின் முகத்தைப்பார்த்து அப்பெண்மணி அவனை இறுகத்தழுவி முத்தமிட்டு மொழிந்ததாவது:—

ஹே பிரிய சுந்தரா! இன்றைக்கேன் இவ்வேழையின் மேல் இவ்வளவு கருணை; மணி பதினொன்றாயிற்றே; இன்னும் ஒரு மணி நேரத்திற்கெல்லாம் அவர் எழுந்திருந்து கீழே வந்து விடுவாரே; வெகுநாழிகையாய் நான் காத்துக்கொண்டிருந்தும் வராமையால் வாயிலில் வந்து பார்த்துக் கண் பூத்துப்போய்விட்டதே.

சுந்தரன்:—கண்மணி மீனாக்ஷி! இன்றைக்கு என் வீட்டில் ஒரு விசேஷம் நடந்தேறியது; அதனால் நானின்றைக்கிவ்விடத்திற்கு வரவே முடியாது; ஆனாலும் நீ கவலைப்படுவாயே என்று நிர்ப்பந்தமாய் வந்தேன்.

வாசகர்களே! இவ்விருவரில் பெண்ணைப்பற்றி அவளின்னாளென்று நாம் சொல்லாமலே பூர்வாத்தியாய கதா விசேஷங்களை யோசித்து நீங்களறிந்துகொள்வீர்கள்; புருடனைப்பற்றி உங்களுக்கு நாம் சொல்லவேவேண்டும்; மாது தர்மாம்பாள் சுந்தரம் இவர்களுடைய தகப்பனார் புருஷோத்தமய்யருக்கு இரண்டாவது சம்சாரமும் இராமபுரம் துரைசாமி அய்யர் இரண்டாவது குமாரியுமாகிய மீனாக்ஷி இவள்தான். இந்தப் புருஷோத்தம அய்யருடைய சொத்து விபரம் முதலத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவரது குடும்பத்தில் இரண்டு கணக்கர்களும் இரண்டு காரியஸ்தர்களும் வீட்டில் வேலைபார்க்கிறார்கள். இவர்களைத்தவிர கிராமங்களிற் பலரிருக்கிறார்கள்; இந்த சுந்தரனென்பவன் வீட்டு கணக்கர்களிலொருவன்; இவனழகிற் சிறந்தவன்; இவ

னுக்கு வயது முப்பத்தைந்துக்கு மேலிராது; இவனுக்கு சுமார் ரூபா 3000 - க்கு மேற்படாத சொத்துக்களிருக்கின்றன. இவனது மனைவி சுமார் 4-ஸ்ருஷத்திற்கு முன் காலஞ்சென்றனள். அப்போதே இவன் மறுவிவாகஞ் செய்யவேண்டியதற்காக தனது யஜமானனை இறைஞ்சிகேட்டான். தனது கணவனுடைய சம்பர்க்கத்தால் திருப்திபடையாத மீனாக்ஷி இவனது அழகைப்பார்த்து மோகித்துத் தனது தன் வலையில் இவனைச் சிக்கச்செய்து தன் வசப்படுத்திக்கொண்டாள். அவளழகில் இவனும்பிரியப்பட்டு இனித் தான் விவாகஞ்செய்து கொள்வதில்லையென்றுப் பிரமாணம் செய்து கொடுத்திருக்கிறான்.

இவனுக்கொரு புத்திரனுண்டு. இவனழகிற் ஆயிரத்திலொரு அம்சத்தைக்கூட இவனுடைய புத்திரனுக்குக் கொடுக்க பிரம்மா மறந்துபோய் காக்கையினிடமிருந்து நிறத்தையும், கரியினிடமிருந்து குரலையும், எருமையினிடமிருந்து புத்தியையும், நாயினிடமிருந்து பசியையும், சர்ப்பத்தினிடமிருந்து க்ரௌர்யத்தையும் இவைபோலுள்ள இன்னும் அநேக குணங்களை அநேக பதார்த்தங்களிலிருந்து எடுத்து அவனைச் சிருஷ்டிசெய்திருக்கிறார். இவனையும் இவன் தகப்பனையும் நேரில்கண்டால் ஒருவராவது அவன் பிள்ளை இவனென்று சொல்லமுடியாது. ஆனல் பையனுடைய தாய் உத்தமஸ்திரி. சுந்தரன், வீட்டில் சமையல் முதலிய ஸ்திரி கைங்கரியங்களுக்காகக் கணவனிழந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த சுப்புவென்ற தனது அம்மான் பெண்ணை வீட்டிற்குக்கொண்டுவந்து வைத்துக்கொண்டு, அவளுடையபுத்திரன் 15-வயதுள்ள பையனை ஹைஸ்கூலிற் படிக்கவைத்துச் சம்பரக்ஷணஞ்செய்து வருகிறான். அதற்கு வேண்டிய உதவிகளை மீனாக்ஷி செய்துவருகிறாள்.

சுப்புவிற்கு நன்றாய்ப் படிக்கத் தெரியும். இந்தச் சுந்தரன் ஒருநாள்கூட இரவில் வீட்டிற் படுக்காமல் வெளியே போவதும், இவன் சுப்புவை மட்டுமீறி அதிகாரஞ் செய்வதும் அவளுக்கு வெறுப்பாயிருந்தன. அவள் சந்தேகத்திற் கேற்ப சுந்தரத்துக்கு மீனாக்ஷியால் எழுதப்பட்டுள்ள ரகஸியம் நிறைந்த ஒரு லெட்டர் தற்செயலாய்ச் சுந்தரம் கைதவறி விட்டுச் சுப்புகையிலகப்பட்டது. அதனாலவள் தெரிந்துகொள்ள வேண்டியவைகளெல்லாம் தெரிந்துகொண்டு அந்த மீனாக்ஷியாரென்றறிய ஒருநாளிரவு சுந்தரம் போஜனமானபின்பு வெளிப்புறப்பட்டதும் அவனையறியாமல் அவன்பின்னால் போய் அவன் போனவிடமும் பேசிய பெண்ணும் இவள்தானென்று நிச்சயித்து, அன்று முதல் இவன் எஜமானதுரோகியென்றும், யஜமான பத்னி தாய்க்கு ஒப்பானவளாகையால் அவளைப் பெண்டாடுபவன் பஞ்சமகா பாபிகளிலொருவனென்றும் அறிந்து, இவனிடம் அன்பில்லாதவளாகவே யிருந்தாள். 4 வருஷத்திற்கு முன் 1-வது பாரத்தில் படித்துக்கொண்டிருந்த சுப்புவின் பிள்ளை இப்போது 5-வது பாரத்திற் படிக்கிறான். அவன் தக்கபுத்திசாலி; அவனுடன் 1-வது பாரத்தில் சேர்ந்து படித்த சுந்தரம் புத்திரன் இன்னும் 2-வது பாரத்தில் படிக்கிறான். அதனால் சுந்தரத்திற்கு சுப்புவின் பிள்ளையினிடம் மிகுந்த அசூயை உண்டு. அந்நிமித்தமாய் அந்தப் பையனோடு இன்று ராத்திரி சுந்தரம் காரணமில்லாமலே கோபத்துடன் பேசிக்கொண்டிருக்கையில், சுப்பு குறுக்கேபுகுந்து சுந்தரத்தையும் தூஷித்து அவனுடைய லெட்டர் ரகஸியங்களையும் வெளிப்படுத்தி கர்ஜித்தாள். அதுபொறுக்காத சுந்தரம் அவளைத் திட்டியும் அடித்தும் ஹிம்ஸை செய்துவிட்டு அதிக தாமதமாய் மீனாக்ஷி வீடுவந்தான், சுந்தரம். இனி நாம் பிரகிருதத்தை யனுசரிப்போம்.

மீனாக்ஷி:—(பரபரப்புடன்) என்ன, என்ன, சொல்லு கேட்போம்?

சுந்தரன்:—அந்த முண்டைக்கும் எனக்கும் இன்று பிரமாதமான சண்டை; அதனாற் கடைசியாய் அவளை வாய்க்குவந்தபடி திட்டி நாலைந்து அடி அடித்தும் விட்டேன்.

மீனா:—யாரை உன தம்மங்காளையா?

சுந்த:—ஆம், அம்மங்காள் இந்த முண்டைக்கு முறை கூடவா?

மீனா:—என்ன காரணம் சண்டைக்கு?

சுந்த:—அந்த முண்டைக் கதியற்று இங்குவந்து சோறு தின்கின்றோமென்பதையும் நமதுபிள்ளை வாசித்து முன்னுக்கு வருகிறானென்பதையும் நினையாமல் வெறுப்புடன் எப்பொழுதும் பேசுகிறாள்.

மீனா:—பிள்ளைக்கு சொளை சொளையாய் சம்பளம் கொடுத்தும் அவளுக்கும் வேண்டியபோதெல்லாம் வேண்டிய பணம் கொடுத்தும் வருகிறோமல்லவா? அது நம்பேரில் குற்றம். இருக்கட்டும் இன்று நடந்த விஷயம் என்ன சொல்லு?

சுந்த:— அந்தப்பயல் இருக்கிறானே இல்லையோ அவள் பிள்ளை, அவனும் நமது கிட்டுவும். 4 வருஷத்துக்கு முன் ஒரே கிளாஸில் படித்தார்கள். இப்போது அந்தப் பயல் 3 கிளாஸ் மேலே போய்விட்டான். அவன் விளக்கின் கீழ் உட்கார்ந்துகொண்டு கிட்டுவுக்கு இடங்கொடாமல் ஹிம்சை செய்தான். அதற்காக நானந்தப்பயலை கோபித்

துக்கொண்டேன். அதற்கந்தமுண்டை பரிந்து வந்து என்னை நானாவிதமாய்த் தூஷித்ததுந்தவிர உனக்குமெனக்குமுள்ள சிநேகத்தைப்பற்றியும் அரைமைலுக்குக் கேட்கும்படி உரத்த குரலுடன் என்னை இகழ்ந்தாள்.

மீனா:—நம்முடைய ஸ்நேகம் எவ்விதம் அவளுக்குத் தெரிந்தது?

சுந்த:—அதை இதுவரையில் நானுமறியேன்; அவளே இன்று சொல்லோடு சொல்லாய்ச் சொல்லிவிட்டாள்.

மீனா:—என்ன சொன்னாள்?

சுந்த:—சென்ற வைகாசிமாதத்தில் நாம் திருக்குற்றாலம் போகவேண்டியதைப்பற்றி அதற்காக நான் முன் செய்யவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றியும் நாமிருவரும் அங்கிருக்கவேண்டிய தினங்களைப்பற்றியும் நீயெனக்கொரு கடிதம் அனுப்பியிருந்தாயல்லவா? அந்த லெட்டர் அவள் கையில் சிக்கிவிட்டது, அவளுக்குப் படிக்கத்தெரியும்.

மீனா:—உனது கையிலேயே நேரில் கொடுத்துவரும்படியல்லவா வேலைக்காரி சின்னாத்தாளிடம் அனுப்பினேன்; அவள் அப்படியே கொடுத்துவந்ததாய்ச் சொன்னாளே; ஒருகால் அதையவள் அந்த முண்டையினிடம் கொடுத்துவிட்டாளோ?

சுந்த:—இல்லை என்னிடந்தான் கொடுத்தாள்.

மீனா:—பின்னை எப்படியது அவளிடம் போயிற்று?

சுந்த:—எனக்குந் தெரியவில்லை காரணம்; ஆனால் நான் அந்த லெட்டரை ஒருபுத்தகத்தினுள் வைத்திருந்தேன்; அப்புஸ்தகத்தை கையில் வைத்துக்கொண்டே

இரண்டு மூன்றுதரம் கொல்லையிலும் வாயிலிலும் போக வேண்டியிருந்தது: அப்போது எங்காவது தவறிக் கீழே விழுந்திருக்கலாம். அவளதைக் கண்டெடுத்திருக்கலாம்.

மீனா:—அந்த லெட்டர் காணாமற்போயிற்றென்று நீ என்னிடம் இதுவரையில் சொல்லவில்லையே.

சுந்த:—சொல்லியென்ன பிரயோஜனம்? அதிலுள்ள சங்கதி தெரிந்துகொண்டாய்விட்டது. இனி அது இருந்தாலென்ன போனாலென்னவென்று அலக்ஷியமாயிருந்துவிட்டேன்.

மீனா:—அலக்ஷியமா? நல்ல புத்திசாலி; அது அவளிடம் அகப்பட்டதுபோல் என் கணவனிடமாவது வேறுயாரிடமாவது அகப்பட்டிருந்தால்—

சுந்த:—அகப்பட்டாலென்ன? அதில் கையெழுத்துச் செய்திருக்கிற மீனாக்ஷி நீதானென்றும், விலாசப்பக்கத்தில் காணப்பட்ட சுந்தரன் நான்தானென்றும் நிச்சயிக்க யாது காரணமிருக்கிறது?

மீனா:—அந்த சப்புமுண்டை இதை எவ்விதம் அறியலானாள்.

சுந்த:—அந்த வியவகாரத்தையுங் கேள். இராத்திரி நான் புறப்பட்டு வெளியிற் போகும்போது பின்னாடிவந்து இந்த மீனாக்ஷியைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று நிச்சயித்து அவள் ஒருநாள் நான் சாப்பிட்டுவிட்டு இவ்விடத்திற்கு வரும்போது என்னையறியாமல் என் பின்னோடு வந்தாளாம். இந்தவீட்டின் வாயிலில் வந்தவுடன் நீ வந்து என்னை அழைத்துப்போவதையவள் பார்த்துவிட்டாளாம். நீதான் அனேகமாய் வாயிற்படியில் நிற்கின்றாயே யொழிய உள்ளோடிருப்பதில்லையே.

மீனு:—அந்த முண்டை அந்தக் கடிதத்தை யாருக்காவது காட்டக்கூடாதவர்களுக்குக் காட்டிவிட்டால் என்ன செய்வேன். அவளிடமிருந்து அந்தக் கடிதத்தை முதலில் அபகரிக்காமல் அவளைத் திட்டியும் அடித்தும் அவளுடைய விரோதத்தைப் பலமாய் சம்பாதித்துக்கொண்டாயே; எனக்கிவ்விஷயம் பெருத்த கவலையைக் கொடுக்கின்றது.

சுந்தரம்:—(ஒருதரம் முத்தமிட்டு) கண்மணி! யேன் கலங்குகின்றாய். என்ன தப்பிப்போய்விட்டது. நாளையதினம் காலையில் அக்கடிதத்தை யவளிடமிருந்து வாங்கிக்கொண்டு அவளை வீட்டைவிட்டுத் துரத்திவிடுகிறேன்.

மீனு:—துரத்திவிட்டால் அப்புறம் சாப்பாட்டுக்கு,

சுந்த:—அதுதான் யோஜிக்கவேண்டியதாயிருக்கிறது. இருந்தாலும் இனி அந்த முண்டையை என் வீட்டில் வைத்துக்கொள்ள இஷ்டமில்லை.

மீனு:—இஷ்டமில்லாவிட்டால், சாப்பாட்டுக்கு வேறு பாரையாவது பார்த்திருக்கிறாயா ?

சுந்த:—வேறு யாரிருக்கிறார்கள்? ஒருவரும் கிடைக்காமற்றானே இவளது குணங்களை யறிந்திருந்தும் இவளை யழைத்துவந்தேன்.

மீனு:—பின்னை யென்ன செய்வாய் ?

சுந்த:—நானொருகாரியம் உத்தேசித்திருக்கிறேன்; அது முடிந்தால் சாப்பாட்டுக்குக் கவலையில்லை. அந்தக் காரியத்தை உனது உதவியன்றியில் முடிக்கமுடியாது. நீ என்ன சொல்லுகிறாய் ?

மீனு:—நானிதுவரையில் எவ்வளவோ உன் விஷயத்தில் உதவிசெய்து கொண்டிருக்க இப்போது மாத்திரம்

என்னை யேன் வரன் கேட்கிறாய்; உனக்கு வேண்டிய உதவியை நான் திவ்வியமாய்ச் செய்கிறேன், காரியத்தைச் சொல்லு பார்ப்போம்.

சுந்த:—நீ யுதவிசெய்வதாய் வாக்குக் கொடுத்தாற்றான் நான் சொல்லத் துணிவேன்.

மீனு:—என் அன்பிற்குரிய சுந்தரா! (இறுகத்தழுவி முத்தமிட்டு) என்ன என்னிடங்கூட நீ அவ்வளவு அவநம்பிக்கை யடைகிறாய். இருந்தாலும் உனதிஷ்டத்தை யனுசரிக்கிறேன். நிச்சயமாய் நீ உத்தேசிக்கிற காரியத்திற்கு உதவி செய்கிறேன். இது ஸத்யம்.

சுந்த.—ஸத்யந்தானே.

மீனு:—(சிரித்துக்கொண்டு) இதிலேதோ விசேஷமிருக்கிறாப் போலிருக்கிறது நீ கேட்கிற உறுதியைப் பார்த்தால்—

சுந்த:—அதெல்லாம் ஒரு விசேஷமும் இல்லை. சாப்பாட்டுக்குச் சௌகரியம் சம்பாதிக்கவே இம்முயற்சி.

மீனு:—சரி யப்படியானால் சொல்லு.

சுந்த:—திருமங்கலத்தில் ஒருவருக்கு ஒருபெண் இருக்கிறது; அவர்கள் மிகுந்த ஏழை; அந்தப்பெண் சுமாரான அழகுள்ளவள்தான்; வயது பதினைந்து; வீட்டு வேலையில் தேர்ந்தவள்; அந்தப்பெண்கையில் 500-ரூபாயும் நகைகளாக ரூ 500-ம் கொடுத்தால் அந்தப்பெண்ணை எனக்குக்கொடுத்து விடுகிறார்களாம்; வீட்டில் சாப்பாட்டு அசௌகரியத்தை யுத்தேசித்து அந்தப்பெண்ணைக்கலியாணம் செய்துவிடுவோமென நினைக்கிறேன். அதற்கு நீ ஆயிரூபாய் கொடுத்து உதவவேண்டும்.

மீனு:—என்னசொன்னுய் கலியாணம் செய்துகொள்ளுகிறாயா? ரூபாய் வேண்டுமோ ஆயிரம்? கட்டாயம் கொடுக்க வேண்டியதுதான்; உனக்கு நாக்கு ஒன்றோ இரண்டோ? அன்றைக்கு மீனாக்ஷியறிய வேறு கலியாணம் பண்ணுகிறதில்லை என்று பிரமாணம் பண்ணினையே? வெகு ஒழுங்கு, நல்ல உறுதிக்காரனாயிருக்கிறாய்?

சுந்த:—மீனாக்ஷியறிய வேறு கலியாணம் பண்ணுவதில்லையென்று சொன்னேன் அதிற் சந்தேகமில்லை, இப்போ தவளறியாமற் கலியாணம் செய்துவிடுவேன்; இஷ்டமில்லாததினால் மீனாக்ஷிக்குச்சொன்னேன்.

மீனு:—நீ பேச்சில் கெட்டிக்காரனென்று நானறியாதவளல்ல. நீ யன்று சொன்ன சொல்லுக்கு விரோதமாய் இன்று நடத்துவதற்கு நானிசைந்து விடமாட்டேன்.

சுந்த:—நானன்று என்ன சொல்லிவிட்டேன்.

மீனு:—உனக்கு ஞாபகம் இல்லையா? நாமிருவரும் தான் தம்பதிகளாயிருக்க யோக்கிய மென்று ஈசன் கருதி அனுரூபமான அழகும் உசிதமான பரஸ்பரானுராகமும் கொடுத்ததுந் தவிர பேர்களையும் மீனாக்ஷியென்றுஞ் சுந்தரனென்றும் அமைத்திருக்கிறார்; ஆகையால் நானும் இனி விவாகம் செய்து கொண்டாகிலும் வேறு எவ்விதத்தாலும் இதர ஸ்திரீயை யபேக்ஷிக்கிறதில்லை, நீயும் என்னைத்தவிர வேறொருவனையும் நிமிர்ந்துகூடப் பார்க்கக்கூடாது, இதற்கு சாக்ஷி மீனாக்ஷி என்று நீ சபதம் செய்யவில்லையா?

சுந்த:—ஆம் செய்தேன், இப்போதுநான் அநுபவிக்கிற கஷ்டம் உனக்குத்திருப்தியாய் இருக்கிறதா?

மீனு:—திருப்தியாயில்லை; அதற்கு வேறு பரிகாரமில்லையா?

சுந்த:—நீ என்ன பரிகாரஞ்செய்தாலும் சம்மதம்தான்.

மீனு:—அந்த முண்டையை நல்லவார்த்தை சொல்லி எப்படியாவது வைத்துக்கொள்ளக்கூடாதா?

சுந்த:—அவளையா ஒரு நிமிஷங்கூட இனிச் சரிப்படாது; நம்மிருவருடைய மர்மங்களை வெளிப்படுத்த வாரம்பித்த அந்த முண்டையை இனி உயிருடன் வைப்பதே அயுக்தம்; அதிலும் வீட்டிலா வைத்துக்கொள்ளச்சொல்லுகின்றாய்?

மீனு:— இப்பொழுது ஒரு பரிசாரகனை வைத்துக் கொண்டு உன் பிள்ளைக்கு நீ பார்த்திருக்கிற பெண்ணை கலியாணம் செய்துவிட்டால் ஆறு மாதத்திற்குள் நாட்டுப் பெண் வந்து சமைத்துப்போடுவாள், பிறகு கவலையேயில்லை.

சுந்த:—என்ன? என் பிள்ளைக்கா? அவனுக்கு ரூபா 2000 வரதக்ஷிணை வாங்கிக்கொண்டு கலியாணம் பண்ணநான் கார்த்திருக்க ரூபா ஆயிரம் செலவழித்துக் கலியாணம் செய்யச்சொல்லுகிறாயா.

மீனு:—ஆம் அதுவும் வாஸ்தவந்தான். நம் கிட்டுவுக்கென்ன குறைவு. வயது 16 ஆகிறது. இங்கிலீஷ்படிக்கிறான்; உனக்குச்சொத்து மிருக்கிறது, ஏக புத்திர விஷயம்.

சுந்த:—அப்படியிருக்க என்னவோ சொல்லுகிறாயே?

மீனு:—அப்படியானால் வேறு என்னயோசனை?

சுந்த:—நானொரு யோசனை செய்திருக்கிறேன் அதை நீ மனம் வைத்து முடித்தால் கவலையில்லை.

மீனு:—சொல்லு கட்டாயம் முடிக்கிறேன்.

சுந்த:—ஆம் இப்போது நீ சத்தியம் செய்து கொடுத்த படி முடித்து விட்டாயே?

மீனு:—அது ஏற்கனவே நீ செய்து கொடுத்த சத்தியத்திற்கு விரோதமானதால் நானும் சத்தியம் தப்பவேண்டிய

தவசியமாயிற்று. அப்படிப்போல் மற்ற காரியங்களிலும் இருப்பேனென்று நினைக்காதே.

சுந்த:—உனது மூத்தாள் குமாரி தர்மாம்பாளென்று ஒரு பெண்ணிருக்கிறாளல்லவா, அந்தப்பெண்ணை நம் கிட்டுவுக்குக் கொடுத்துவிட்டாயானால் நம்மிருவருடைய ஸ்னேகம் ஒருகாலும் பங்கமடையாமலிருக்கும்; பையனுக்கும் வேலையில்லை. பெண்ணுக்கும் கவலையில்லை.

மீனு:—அடடா! நேற்றே நீ யிதைச் சொல்லலாகாதா? எனக்குமிது தோன்றவில்லை. இன்றுதான் காலையில் திருச்சியிலிருந்து ஒரு பிராமணன்வந்து தர்மாம்பாளைக் குளித்தலையிலிருக்கும் என் தமக்கை சாவித்திரியின் மூத்தாள் பிள்ளை தர்மராஜனுக்குக் கொடுப்பதாய் அவள் அம்மாள் தீர்மானித்திருக்கிறதாகவும், கலியாணத்தைத் திருச்சியிலேயே நடத்திவிடுவதாயும் ஏற்பாடு செய்திருப்பதாய்ச் சொல்லி எங்காத்துக்காரரை அவ்விடம் ஒருவாரம் முன்னமேயே வரும்படியழைத்தார். அவரும் சரியென்று சொல்லிவிட்டார். இந்த மாதம் 30-ம்வ வெள்ளிக்கிழமை முகூர்த்தமாம்.

சுந்த:—ஆம் எனக்குந் தெரியும். பெண்களெல்லாம் தகப்பனுக்குச் சுவாதீனமா? மாமனுக்குச் சுவாதீனமா? உன் கணவன் பார்த்து அந்தப்பெண்ணை யாருக்குங் கொடுத்தாலும் யார் தடுக்கமுயலலாம். நீ பார்த்துயாருக்குங் கொடுக்கச்சொன்னாலும் அவரும் தடைசொல்லார்.

மீனு:—எனதாசைக்குரிய சுந்தரா! (முகத்தில் முத்தமிட்டு) நீ சொல்வது மிகவும் மெச்சத்தக்கதாகவே இருக்கிறது. இருக்கட்டும் அப்படியே முடிக்க யத்தனஞ்செய்து பார்க்கிறேன்.

சுந்த:—நீயப்படிச் சொல்லக்கூடாது. முடித்துவிடு கிறேனென்று சொல்லு; உன்னிடத்தில் உன் கணவனுக்கு மிகுந்த தாக்ஷிண்யமுண்டு; நீ சொன்னால் தட்டமாட்டார். எனச் சொல்லி (ஒருதரம் இறுகத் தழுவி முத்தமிட்டான்) இவர்களிவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அவ்வறைக்கு வெளியில் யாரோ ஒரு பிராணி பெருமூச்சுவிட்டதுபோ லும் "அப்படியா" என்றொருவார்த்தை மெதுவாய்ச் சொன்னதுபோலும் இவர்கள் காதுக்குத்தோன்றியது.

தன் கணவன்தான் மாடியிலிருந்து கீழே வந்துவிட் டாரோவென்று உடனே திகிலடைந்த மீனாக்ஷி வெளியே வந்து பார்த்ததில் வெளிச்சமிராத அவ்வறையின் சமீபத்தி லிருந்து அவ்வுருவம் தெருப்பக்கமாய்ப்போய்க்கொண்டிருந் ததாய்த் தோன்றிற்று. உடனே வாயிலில் வந்து பார்த்த தில் ஒன்றையும் காணவில்லை. அவளுடனே உள்ளேபோய் எனது அபீஷ்டமணியனான சுந்தரா! நானின்று உன்னைக் கொஞ்சம் தாமதத்தின்பேரில் பார்த்ததால் உள்ள குதூக லத்தால் வாயிற்கதவை சாற்றாமல் வந்துவிட்டேன். யாரோ ஒருவர் நமதறைக்குச் சமீபத்திலிருந்து வெளியே போவது போலக் கண்டேன். வாயிலிற் போய்ப்பார்த்தேன், ஒருவ ரையும் காணேன்.

சுந்த:—இவ்வர்த்த ராத்திரியில் இங்கார் வரக்காத்திரு க்கிறார்கள். எல்லாமுனது பிரமையாயிருக்குமென்று பேசிக் கொண்டார்கள். மணி 12 அடித்தது உடனே யவர்கள் கட்டிக் குலாவி அமர்ந்து நித்திரை போனார்கள். நாமும் இந்த அயோக்ய சகவாசத்தாலுண்டான பாபத்தைக் கொஞ் சம் ஸத்ஸகவாஸம் செய்துதொலைக்க வழிதேடுவோம்.

---

# ஐந்தாம் ஆச்வாஸம்.

## அஸதீவிஜயம்.

எறும்பின் கண்ணைப்போலச் சிறு கண்களையுடையவனுக்கு விசாலாக்ஷியென்றும், கண்ணால் பார்த்தமாத்திரத்தில் கர்ப்பங்கலங்கிப் போகச்செய்யும் விகாரரூபத்தையுடையவளுக்குச் சுந்தரியென்றும், புருஷர்களில் அதமாதமனான புருஷனுக்குப் புருஷோத்தமனென்றும் பெயர் வழங்குவதுண்டு. அப்படிப்பட்ட கணக்கில் நமது புருஷோத்தமய்யரைச் சேர்க்கக்கூடாது. குணநிதிகளான தர்மாம்பாள் என்கிற கன்யாரத்தினத்தையும் சுந்தரனென்கிற புருஷசிம்மத்தையும் ஈன்றவரல்லவா இவர்? இவரழகிற்போல் அறிவிலும் அத்விதீயர். குருவைத்தேடாமலே அநேக சாஸ்திரமர்மங்களைக் கண்டுபிடித்தவர். இவருடைய சொத்தை யெவரறிய ஒருவன் அபகரித்துச்சென்றாலும் லக்ஷியப்பண்ணும் ஸ்வபாவம் இவருக்கில்லை. அதற்குக் காரணம் பெருந்தன்மையேதவிர வேறில்லை. இவர் தனக்கு மனப்பூர்வமாய்க் குற்றம்செய்பவனையுங்கூட தீர்க்காலோசனையின்றி குற்றவாளியென மதிக்கமாட்டார். இவர் இளகியமனமுடையவராதலால் பலர் இவரை இனிய சொற்களால் வஞ்சித்துத் தங்கள் காரியத்தை முடித்துப்போவார்.

இவரது இவ்வற்புத குணங்களே மீனாக்ஷியின் தூர்க்குணங்களுக்கும் எஜமானத்துரோகியான கணக்கன் சுந்தரத்தின் தைரியத்திற்கும் ஹேதுவாம். இவருக்கு மீனாக்ஷியினிடம் அந்தரங்க விசுவாஸமுண்டு. அவளும் தன்னை மனப்பூர்வமாக நேசிக்கிறாளென்பதாகவே இவர்

அபிப்பிராயம். அதற்குக் காரணம் அம்மாயக்காரி மீனாக்ஷியின் பிரேமாபினய புரஸ்ஸரமான வார்த்தைகளே. அதனாலவளுடம்பிற் கிவர் செய்துபோட்டிருக்கும் நகைக்கோ ரளவில்லை. மீனாக்ஷிக்குத்தனது சரீரத்தில் இனி நகைபோட்டுக் கொள்ள இடமில்லையே யென்கிற கவலையே தவிர, இந்த அங்கத்தில் நகைபோட்டுக்கொள்ளக்கிடைக்கவில்லையே யென்கிற ஏக்கமில்லை. மீனாக்ஷிக்குச் சிலரைப்போல் சில முக்கிய காலங்களில் மாத்திரம் எல்லாநகைகளையும் தரித்துக்கொள்வதும் சாதாரணமாய் மற்றக் காலங்களில் சில முக்கியமான நகைகளை மாத்திரம் தரித்துக்கொள்வது என்கிற ஸ்வபாவம் கிடையாது. அதுவுமோர் காரணம் புருஷோத்தமய்யருக்கவளிடமிருக்கு மதியாவன்புக்கு அவளது சிரித்த முகமும், மெலிந்த உடலும், கறுத்தகூந்தலும், இனித்தகுரலும், நிர்மலமான முறுவலும், கண்ணாடிபோலுள்ள கன்னமும், சடைபுரித்த கருநாகம் போலுள்ள பின்னலும், அன்னத்தைப் பழிக்கும்படியான நடையும், அடிக்கடி அபிநவமான உடையும், ஜிதேந்திரியர்களான யோகிகளைக்கூட மனங்கலங்கச் செய்யுமென்றால், புருஷோத்தமய்யர் அவளுடைய மோக வலையிற் சிக்குண்டிருப்பது குற்றமாய் நமக்குத் தோன்றலாமா? ஆனால் அப்படிப்பட்ட சௌந்தரியத்திற்கு அந்தப் பாபி தனது கற்பைக்காப்பாற்றிக் கொண்டிருந்தாளானால் எல்லாருக்குமவள் பிரசம்ஸா பாத்திரமாக இருப்பாளென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

இந்தச் சங்கதி நம் புருஷோத்தமய்யரறியாததற்குக் காரணம் அவர் அவளிடத்திலும் சுந்திரனிடத்திலும் வைத்திருக்கும் பூர்ணமான நம்பிக்கையே. அவ்விருவரும் ஏகாந்தமாய்ப் பேசிக்கொண்டிருப்பதை அவர் ஒரு சமயம் பார்த்தாலும் அவர்களிடம் அவர் வைத்திருக்கும் நல்ல

அபிப்பிராயத்தால் விகற்பமான எண்ணங்கொள்ளார். இவரது நல்ல குணங்களையும் கபடம் தெரியாத ஸாத்விக ஸ்பாவத்தையும் அறிந்தபடியாற்றான் இவரனுமதியின்றி வல்லப சாஸ்திரிகள் இவர் பெண்ணுக்கு வரன் திட்டஞ் செய்து மரியாதைக்கு மாத்திரம் இவருக்கு ஒரு பிராமணன் மூலமாய்த் தெரியப்படுத்தினார். அந்தப் பிராமணன் சங்கர சாஸ்திரிகள் ஒரு நாள் காலமே மதுரைக்கு வந்து புருஷோத்தமய்யரிடம் சொல்லவேண்டிய சமாசாரங்களைச் சொல்லிக் கடைசியாய் சம்மந்திகளின் அபிப்பிராயப்படி கலியாணம் திருச்சினாப்பள்ளியிலேயே நடத்தப்படவேண்டுமென்றும் 10 நாள் முந்தியே நீர் வேண்டிய வளவு திரவியத்துடன் அங்குவந்து சேரவேண்டுமென்றும் சொல்லிமுடித்தார். புருஷோத்தமய்யரும் கபடம் தெரியாதவரானதால் பெண்வளர்ந்த வீட்டிலேயே கலியாணம் நடத்தவேண்டிய தவசியமென்றும் தன்னுடைய வேலைகளை மற்றொருவர் ஒப்புக்கொண்டதில் தனக்கு மிகவும் சந்தோஷமென்றும் சொல்லி அவ்வாறு சரியென ஒப்புக்கொண்டு பிராமணனுக்கு விருந்து செய்து அனுப்பிவிட்டார். அப்போது மீனாக்ஷியும் கூட விருந்தவள்தான். அவளப்போது கலியாணக்காரியங்களைச்செய்து முடிக்கும் சிரமம் தனக்கில்லாமற்போனதைக்கொண்டுச் சந்தோஷப்பட்டு அப்பெண்ணிடமிவள் சிறிதும் வாத்ஸல்யமில்லாதவளானதால் இந்தமட்டில் தன்னை விட்டதே நலமென்று களித்து அனுமதி கொடுத்து விட்டாள்.

அன்றைய தினம் இராத்திரியே சென்ற அத்தியாயத்திற்கண்ட சங்கதிகள் சம்பவித்தன. மறுநாட்காலையில் சுமார் 9 மணியாயிற்று. புருஷோத்தமய்யர் ஸ்நானஞ்செய்து ஜபம் முதலானவைகளை முடித்துக்கொண்டுக் காப்பியருந்தித்

தாராளமாய் காற்றுவரக் கூடிய ஓர் மேல் மாடியினறையில் ஒரு சாய்மான நாற்காலியிற் சாய்ந்திருந்து வர்த்தமான பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். அதற்குள் மீனாக்ஷியும் நல்லவாஸனைப்பொடி தேய்த்துக் குளித்துவிட்டு அழகிய பட்டாடையைத் தரித்து அன்னம்போல் மெல்ல நடந்து மாடி மேல் நோக்கிச்சென்றாள். அவளப்போது நெற்றியிலிட்டுள்ள கஸ்தூரி திலகம் அவளது முகத்தை கமலமென்றால் அது வண்டென்றும், சந்திரனென்றால் களங்கமென்றுஞ் சொல்லக்கூடிய சந்தேகத்தைத் தந்தது. அவளது அடர்ந்த கறுத்த கூந்தலிற்றோன்றும் ஜாதி புஷ்பத்தைப்பார்த்தால் இருள்கூட்டம் வெகுநாளாய்த் தவஞ்செய்து தனது பகைவனாகிய சந்திரனை ஜயிக்க வெண்ணி அவனது கலைகளிற் சிலவற்றைப்பறித்து வந்து தனது வசம் வைத்துக் கொண்டிருக்கிறதென்றும், அந்தச் சந்திரனுக்கு அக்கலைகளிருந்த விடம் சூனியமாகப்போய் அதன் வழியே ஆகாயம் தெரிவதை எல்லாரும் களங்கமென்றும் மானென்றும் முயலென்றுஞ் சொல்லுகிறார்களெனவும் ஒரு எண்ணம் உண்டாயிற்று.

புருஷோத்தமய்யர் இவ்வாறு சர்வாலங்கார பூஷிதாங்கியாய்வரும் தனது நாயகியைப்பார்த்து ஒருவாறுபிரமித்தார். அவளிதுவரையில் இம்மாதிரியுல்லாஸத்தையும் சிரமத்தையும் அபிநயித்துக்கொண்டு அவரருகிற் சென்றவளல்ல. அவரவளைக்கண்டவுடன் மனதில் ஒரு தினுசான எண்ணமெண்ணினார். "மதனன் தனதங்கத்தைப் பரமேசுவரன் நெற்றிக்கண்ணின் ஜ்வாலையில் ஹோமம் பண்ணிவிடுவதாய் உத்தேசித்துத் தனது வில்லை இவளது முகத்திலும் தனது பாணங்களை இவள்கூந்தலிலும் பத்திரப்படுத்திவிட்டுப்போயிருப்பானோ"வெனநினைத்தார். மேலும், இவளுடைய மந்தகா

நாண கதி விசேஷமானது இவள் தேகத்திலேதோ ஒரு சிரமம் இருப்பதாய்ச்சொல்லுகிறது. அதற்கென்ன காரணம்; வேலைக்காரிகளுக்குக் குறையொன்றும் மில்லையே என்று இவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கையில் மீனாக்ஷிகொஞ்சங் களைத்தவள்போல் இவரருகில்வந்து நாற்காலியின் கையைப் பிடித்து நின்று ஒருதரம் பெருமூச்சுவிட்டாள். இதைக் கண்ட புருஷோத்தமய்யர் அவளது புயத்தில் தனதொரு கையைவைத்துக்கொண்டு கண்மணி! எனதன்பிற்குரிய கரும்பே! என்னவிசேஷம்? உன்னை வேறொருத்தியாகக் காண்கிறேன்; உனதங்கத்தில் ஏதோ சிரமம் இருப்பதாக நினைக்கிறேன்; நீ யேதாவது வேலைசெய்யும்படி நேர்ந்ததா?

மீனா:—ஆம் தங்களைப்போலுள்ள அபிக்ஞர்களெல்லாம் இங்கிதக்ஞர்களல்லவா?

புருஷோ:—சரி என்னகாரணம்?

மீனா:—இன்றையதினம் காபிவேலை முழுமையும் நானே செய்தேன்.

புருஷோ:—ஏன் அப்படி?

மீனா:—ஏனப்படியென்றால் நான் பெண்ணாகப் பிறக்கவில்லையா? பெண்கள் உழைக்கிறதென்பதும் புருஷர்கள் உட்கார்ந்து சாப்பிடுவதென்பதும் சகஜந்தானே.

புருஷோ:—ஆம் சகஜந்தான். அதை மாற்ற யாரால் முடியும்? எத்தனையோ பேர்கள் இவைகளை மாற்ற முயன்றும் ஒன்றும் பயன்படுவதாய்த் தோன்றவில்லை. அனேக பெண்கள் மது சதாசாரத்தைவிட்டு நவீன நாகரிகம் புகுந்து மகிமையை இழந்து உலகத்தின் வாய்க்கிரையாகிறார்கள். அஃதிருக்கட்டும், வேலைக்காரி சங்கரி யெங்கே?

மீனு:— அவள் நேற்று இராத்திரி கறி நறுக்கிக் கையில் காயம் செய்துகொண்டிருக்கிறாள். அது கசிந்து கொண்டிருக்கின்றது. அவளை அதோடு வேலை செய்யச் சொல்லப் பிடிக்காததால் நானே செய்யும்படி நேர்ந்தது.

புருஷோ:— ஆபத்ஸம்பத் எல்லாருக்கும் உள்ளது தானே.

மீனு:—உள்ளதுதான், எனக்கு நேற்று இராத்திரி முதல் உடம்பெல்லாம் வலி; மனதில் ஒரு கவலை; அதோடு இன்று வேலையும் செய்யும்படி நேர்ந்தது.

புருஷோ:—அப்படியா? உனதங்கத்தைப் பார்த்தாலே உன் வலியை அது சொல்லுகின்றது. அது இருக்கட்டும். உனக்கென்ன கவலைக்குக் காரணம்? நானுனதிஷ்டப்படி யெல்லாம் நடந்துகொண்டிருக்க நீயேன் கவலையையடைய வேண்டும்.

மீனு:—ஆகா நல்ல வார்த்தை சொன்னீர்கள்; நீங்கள் எனதிஷ்டப்படி நடந்தால் எனக்குக் கவலையில்லைதான்; அது தான் முயற்கொம்பாக இருக்கிறதே.

புருஷோ:—கண்மணி! நீ அனுவசியமான புகாரெல் லாம் சொல்லுகிறாய்; இருக்கட்டும், இனியாவது உனதிஷ்டம் போல் நான் நடக்கத்தயாராயிருப்பதாய் நினைத்துக்கொள்; உன் கவலையின் விவரத்தைச்சொல்லு.

மீனு:—விவரமென்ன, நமது குழந்தை தர்மாம்பாளின் கலியாணத்தைப்பற்றித்தான் கவலை. என்ன நான் தள்ளி யும் அது என்னைவிட்டகன்ற பாடில்லை. தாங்கள் புருஷர் களாய்ப் பிறந்திருப்பதால் அது தங்களிடம் வராது.

புருஷோ:—கலியாணத்தில் உனக்கென்ன கவலையிருக்கிறது? நீ போய் ஸ்வஸ்தமாய் நாலுநாள் சம்மந்திபோல் சாப்பிட்டுவிட்டு வரவேண்டிய வேலைதானே உனக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

மீனு:—அதுதான் எனக்குக்கவலை; வேறென்ன? நம் குழந்தையை நமக்குச் சமீபமான விடத்தில் நமக்கிஷ்டமான ஒரு பிள்ளைக்குக் கொடுத்து நம் வீட்டில் சிறப்பாய்க் கலியாணத்தை நடத்தினுல் அது நமக்கு அழகும் பெருமையுமாகும்; நம் குழந்தைக்கு யாரோ ஒருவன் கலியாணம் செய்வதும் நாம் பரதேசிபோல் அங்கேபோய்ச் சாப்பிட்டு வந்துவிடுவதும் பெருமையென்று தங்களுக்குத் தோன்றுகிறது எனப்படி? நமக்குச் சொத்தில்லையா? மனுஷியர்கள் வேலைக்கு அகப்படமாட்டார்களா?

புருஷோ:—சரிதான், அப்பெண் பிறந்ததுமுதல் நமது வீட்டையே அறியாள்; அவள் அம்மானே வளர்த்தவர்; ஏராளமான நகைகளையும் போட்டிருக்கிறார். ஆகையால் அவள் கலியாணத்தையும் செய்ய அவர் பாத்தியப்பட்டவர்தாம்; உனக்கேனது விரோதமாய்த் தோன்றவேண்டும்?

மீனு:—எனக்கொன்றும் விரோதமில்லை; நமது கௌரவத்தை இழக்க எனக்கு மனம் வரவில்லை. மேலும் நாமிப்படி நடத்தினுல் மூத்தாள் பெண்ணுனதால் அந்தப் பெண்ணை ஆத்திலேகூடக் கலியாணம் பண்ணிக்கொடுக்க மனதில்லையென்று ஊரெல்லாம் என்னைத்தான் நிந்திப்பார்; தாங்கள் ரகசியம் ரகஸ்யமாய் எத்தனை ஆயிரம் பணம் கொடுத்தாலென்ன? தங்களையும் ஊரார் நிந்திக்கத் தவறமாட்டார்கள்.

புருஷோ:—அப்படியெல்லாம் விவேகிகள் நிந்திக்க மாட்டார்கள்.

மீனு:—உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் விவேகிக ளாகவேயிருப்பார்களா? என்னைப்போல் அவிவேகிகளும் இலருண்டல்லவா? அப்படியாவதென்ன? அந்தக் கலியா ணத்தை இங்கு கிருகத்தில் நடத்தினுலென்ன? தாங்கள் ஒன் றுக்கும் பயப்படவேண்டாம்; நான் கேட்டபடி பணத்தை மாத்திரம் கொடுத்துக்கொண்டிருங்கள; நாலுநாளில் கலியா ணத்தை முடிக்கிற சாமர்த்தியம் எனக்குண்டு.

புருஷோ:—உனக்கு எக்காரியங்களையும் நிர்வகிக்க சாமர்த்தியம் உண்டென்பது நானறிந்த விஷயந்தான். ஆனல், சம்மந்திகள் திருச்சியில் கலியாணம் நடத்தினுற்றுன் பெண்ணை கலியாணஞ் செய்துகொள்வதாய்ச் சொல்லு கிறுர்களாமே.

மீனு:—ஏனப்படி, அவர்களுக்கு நம்மகம் பிடிக்க வில்லையோ?

புருஷோ:—பிடிக்கவில்லை போல்தானிருக்கிறது.

மீனு:—அவர்களுக்கு நம் வீடு பிடிக்கவில்லை. எனக்கு அந்த வரனே பிடிக்கவில்லை.

புருஷோ:—ஏன் பிடிக்கவில்லை? உன் அக்காள்தானே உனக்குச் சம்மந்தியாக வருகிறுள்.

மீனு:—அதனுற்றுன் பிடிக்கவில்லை; என் அக்காளென் றல் எனக்கொன்று முயர்த்தியில்லை.

புருஷோ:—ஏனப்படி உனக்குமவளுக்கும் என்ன விரோதம்? போனவருஷங்கூட அவள் பெண் கலியாணத் திற்குப்போய் நான்கு நாளும் இருந்து சாப்பிட்டு வந் தாயே.

மீனு:—அதுமுதற்றான் எனக்கு அவளைக் கண்டாற் பிடிக்கிறதில்லை.

புருஷோ:—அப்பொழுதேதாவது நடந்ததோ?

மீனு:—நடக்கிறதென்ன? அவளெப்பொழுதும் அகம்பாவக்காரி; என்னை லட்சியம் பண்ணுவதேயில்லை; அதற்குக் காரணம் அவளுக்குப் பெண்ணும் பிள்ளையும் பிறந்திருப்பதும் எனக்கு அதில்லாமையுந் தான். மற்றச் சங்கதிகள் புருஷாளிடம் சொல்லத்தக்க விஷயங்களல்ல.

புருஷோ:—பிறந்த பிள்ளையுங்கூட போய்விட்டது போலிருக்கிறதே.

மீனு:— அது போகட்டும் பெண்ணிருக்கிறதோ இல்லையோ? அதையும் நல்ல இடத்தில் கொடுத்துவிட்டாள்.

புருஷோ:—அதிருக்கட்டும், இப்போதுன தபிப்பிராயத்தைச்சொல்லு?

மீனு:—என் அபிப்பிராயமா? நம் குழந்தை தர்மாம்பாளை அந்தப் பயலுக்குக் கொடுக்கக்கூடாது. அந்தக் கலியாணத்தை நமதுவீட்டிலும் நடத்தவேண்டும்.

புருஷோ:—ஆமிதை நீ நேற்றே சொல்லக்கூடாதோ? வந்த பிராமணனிடம் எல்லாம் சரியென்று சொல்லியனுப்பி விட்டேனே!

மீனு:—அந்தச்சமயத்தில் ஏதாவது சொன்னால் அந்த வீட்டில் பெண் நாட்டாமையென்றல்லவா வந்தவர்கள் சொல்லுவார்கள்; அது உங்களுக்குத்தானே குறைவு; அதனாற்றான் அப்போது சம்மதித்தவள்போல் பாவனை செய்தேன்.

புருஷோ:— இப்போதென்ன செய்யலாம், தும்மை விட்டு வாலேயா பிடிக்கிறது?

மீனு:—இப்போதென்ன கிணற்றின் ஜலத்தை வெள்ளம் கொண்டுபோய்விட்டது? பெண் நம்முடையது, கலியாணத்திற்கு நமதிஷ்டமா அவர்களிஷ்டமா?

புருஷோ:—நமதிஷ்டந்தான்; ஒருதரம் சரியென்று சொல்லிவிட்டு மறுபடியும் தகவல் சொல்வது அநாகரீகமாய் இருக்கும் என்று நினைக்கிறேன்.

மீனு:—என்ன அநாகரீகம்? முந்தியே வேறொருவரைப் பார்த்திருந்ததாயும் அவ்வரனைச் சேர்ந்த மனுஷியாள் அந்தச் சங்கரசாஸ்திரி வந்திருந்த சமயம் ஊரிலில்லாதபடியால் அவ்விஷயத்தைப்பற்றி முடியாத நிமித்தம் வந்தவருக்குச் சரியென்று சொல்லப்பட்டதென்றும், இப்போதவர்கள் வந்துவிட்டபடியாலும் இதற்கு முன் கொடுத்த வாக்கைத் தவறாமல் அதே வரனுக்குத் தர்மாம்பாளைக் கொடுக்கவேண்டியதும் கலியாணத்தை மதுரையிலேயே நடத்தவேண்டியதும அவசியமாயிருப்பதால் பெண்ணையும் பையன் சுந்தரேசனையும் உடனே இவ்விடம் அனுப்பவேண்டுமென்று ஒரு லெட்டர் எழுதிவிடுவோம்.

புருஷோ:—எழுதிவிடலாம், அதற்கு வேறொரு வரன் பார்த்தபிறகல்லவா ஆகவேண்டும்?

மீனு:—அதற்கென்ன வரன் கையிலிருக்கிறான், தங்களுக்குத் தெரிந்தவன்தான்.

புருஷோ:—சொல்லு எனக்குத் தெரியவில்லையே?

மீனு:—நான் சொல்லட்டுமா? பிறகு பெண்புத்தி யென்று தூஷிக்கப்படாது.

புருஷோ:—சரியாயிருந்தால் ஒப்புக்கொள்ளுகிறேன்.

மீனு:—சரித்தப்பான விஷயத்தை ஒரு காலும் நான் சொல்லத்துணியேன்? அதிலும் தங்களிடத்தில் சொல்ல மாட்டேன்.

புருஷோ:—அப்படியானாற் சொல்லு.

மீனு:—நம்வீட்டுக் கணக்குப்பிள்ளை சுந்தரமய்யர் இருக்கிறாரல்லவா? அவர்பிள்ளைக்குத்தர்மாம்பாளைக்கொடுத்து விடுவோமென நினைக்கிறேன்.

புருஷோ:—கிட்டுப்பயலுக்கா! அவன் நல்ல அழகு?

மீனு:—புருஷனுக்கு அழகு பார்க்கவேண்டியதவசிய மில்லையே; பெண்களுக்கல்லவா அழகெல்லாம் அவசியம்.

புருஷோ:—அழகிருக்கட்டும், மற்ற பாகங்களெல்லாம் சரியாயிருக்கின்றனவா?

மீனு:—எல்லாந் தங்களுக்கும் தெரியும்; ஆனாலும் தங்களுத்தரவுக்காகச்சொல்லுகிறேன். அவனுக்கு வயது பதினாறு; இங்கிலீஷ் படிக்கிறான். அவன் படிப்பில் நாமும் கொஞ்சம் அக்கரையெடுத்துக்கொண்டால் இன்னம் நான்கு வருஷத்திற்குள் பி. ஏ. முடித்துவிடுவான்.

புருஷோ:—அவனுக்குச்சொத்தென்னவிருக்கிறது?

மீனு:—நாம் வெறும் காவடிகளாயிருந்தாலல்லவா அவன் சொத்தைக்கவனிக்கவேண்டும்? எனக்குப் பெண்ணு மில்லை, பிள்ளையுமில்லை; நமது சொத்தில் ஒரு பாகியை தர்மாம்பாளுக்குச்சீதனமாய்க்கொடுத்துவிடுங்கள்; அவனுக்கும் பதினாயிர ரூபாய்க்குச்சொத்திருக்கிறது.

புருஷோ:—அப்படி அள்ளுக் கட்டியாவது அவனுக்கு நம் குழந்தையைக்கொடுப்பதில் உனக்கென்ன லாபம்?

மீனு:—லாபமா சொல்லுகிறேன்; அநேக பிரபுக்கள் நல்லவம்சத்திற்பிறந்த பிள்ளைகளுக்கு அவர்கள் ஏழையாயிருந்தாலும் பெண்ணையுங்கொடுத்துச்சொத்தையுங்கொடுக்கிறார்களென்பது தங்களுக்குத் தெரியாதா? இவன் நல்ல வம்சஸ்தன்; இப்படிப்பட்ட வரனுக்குக்கன்னிகாதானஞ்செய்தால் அந்தப் புண்யத்தால் எனக்கும் வம்சத்திற்கொரு குழந்தை உண்டாகுமோஎன்று நினைக்கிறேன். மேலும் எனக்குத்தற்காலத்திற்கொரு பிரயோஜன மிருக்கிறது. நானிப்படிச்சிலகாலங்களில் கஷ்டப்படும்படி நேரிடுவதால் அவள் நம் சமீபத்திலிருந்தால் அவளுடைய உதவியும் எனக்குண்டாகும்; அதுவே எனக்கு சர்வமான்யம் விட்டதுபோலாகும்.

வாசகர்களே! மேற்கண்ட மீனுக்ஷி சொற்களில் அநேக அம்சங்கள் சுத்தப்பொய் என்பது உங்களுக்கும் தெரிந்திருக்கலாம். அதிலும் சாவித்ரியின்பேரில் அவள் சுமத்திய குற்றம் உங்கள்மனதை நடுங்கச்செய்யும். அவளுக்கு மூத்தாள் பிள்ளையான தர்மனிடமிருக்குமன்பும், இவளுக்கு மூத்தாள் பெண்ணுகிய தர்மாம்பாளுக்குக் கிட்டுவை வரனுகத் தேடிக்கொடுப்பதினுல் வெளியாகிற குணமும் உங்களுக்குத் தெரியாதவையல்ல. பொதுவாய் மனதிலொன்றும் வாயிலொன்றுமாகப் பேசுகிறவர்களுக்கு "மனத்தினது முகத்திலென்று"சொல்லப்படும் பழமொழிப்படி முகத்திலோர் விகாரம் காணப்படுவதுண்டு.

அதில் மீனுக்ஷி தப்பிப்பிறந்தவள். தன தாதை நாயகனுடைய மனோரதப்படி அவனை மறு விவாகஞ்செய்

துகொள்ளும்படி விட்டுவிட்டால் எப்படியும் அவன் நம்மிடம் பூர்ணமான அனுராகத்தோடு இருக்கமுடியாதென்று நினைத்து பாழுங்கிணற்றிற் றள்ளுவதுபோலும், கிளியைப் பூனையினிடம் கொடுப்பதுபோலும், இரும்பில் வைரத்தை யிழைப்பதுபோலும் தர்மாம்பாளைக் கிட்டுப் பயலுக்குக் கொடுக்க ஏற்பாடுசெய்வதாய் சுந்தரத்தினிடம் இரவில் ஒப்புக்கொண்டதற்கு விரோதமில்லாமல் பரம சாத்வீகரும் வெளுத்ததையெல்லாம் பாலென்று நினைக்கிறவருமான புருஷோத்தமய்யரிடம் இவள் கெட்ட உபதேசம்செய்து கடைசியாய்க் கூனியென்கிற மந்தரையின் வார்த்தையால் கைகேயியின் மனம் கெட்டதுபோல் அவருடைய மனமும் கெட்டு, அவள் சொல்வதே சரியென்று நினைக்கும்படி இனிய சொற்களாலும் குறுக்கை தர்மாம்பாளிடம் அபாரமான பிரீதியை அபிநயித்தலாலும் சனாதங்கத்தின் தருக்கினாலும் செய்து தனதபீஷ்டத்தை முடித்துக்கொண்டாள்.

புருஷோத்தமய்யரும் "நமது பெண்கலியாணத்தைநமது வீட்டிற்செய்வதே நமக்குக்கௌரவமென்றும், அவர்கள் நிச்சயஞ்செய்திருக்கிறவரன் சிலாக்கியமாயினும் இவளுக்குவிரோதமாய் அவனுக்குப் பெண்ணைக்கொடுத்தால் வீட்டில் மானபங்ககரமான கலகங்கள் அடிக்கடி உண்டாகுமென்றும், சுந்தரன் நல்லவப்சலனாகையால் அவன் பிள்ளைக்குச்சொத்துடன் பெண்ணைக்கொடுத்தால் இறைபாஸாதகமுண்டென்றும் கிட்டுப்பயலுடைய படிப்பில்கொஞ்சம் சிரத்தையெடுத்துக் கொண்டால் அவனை எப்படியும் முன்னுக்குக் கொண்டுவந்து விடலாமென்றும் தீர்மானித்து, மந்திரியானம் மந்தரத்துடன் கலந்துகொண்டு திருச்சிக்கு லெட்டர் எழுதுவதாய் மீனாக்ஷிக்குச் சொல்லிவிட்டு அதைவிட்டெழுந்திருந்தார்.

# ஆறாவது ஆச்வாஸம்.

## அனுசிதாலோசனை.

புருஷோத்தமய்யர் எழுந்து காரியமாய்ப்போன அத்தக்ஷணம் அந்தாற்காலியில் மீனாக்ஷி உட்கார்ந்தாள். தனது மனோரதத்தை நிறைவேற்றின தெய்வத்தை ஒருவாறு மனதில் துதிசெய்தாள். தனது கெட்ட சுவபாவத்தையறிய சாமர்த்தியமற்ற புருஷோத்தமய்யர் புத்தியைச் சற்று இகழ்ந்தாள். அவரது புத்திக்கு இயற்கையாயுள்ள சாமர்த்தியத்தைக்கூட அபகரித்த தனது சாதுர்யத்தைச் சற்று தானேபுகழ்ந்தாள். தனது வாக்கியத்திற்கு அந்யதா சொல்ல முடியாமற் செய்வதற்கு காரணமான தனது லாவண்யத்தைச் சிலாகித்தாள். தனது மனோரதம் பூர்த்தியானபடியால் இனித்தனது ஜீவித காலம் முழுமையும் சுந்தரனுடைய சேர்க்கைக்குறைவில்லையென மகிழ்ந்தாள். தனது கடாக்ஷங்களுக் கடிமையாகாத புருஷனை இப்போதிருக்கும் பிரம்மாவுக்கு சிருஷ்டிக்கத் தெரியாதென்று நினைத்தாள். இனிச் செய்யவேண்டியதென்னவென்று தர்க்கித்தாள். உடனே அங்கிருந்தவோர் வேலைக்காரனையழைத்தாள். சுந்தரய்யரை இவ்விடம் வரச்சொல்லென்றாக்ஞாபித்தாள். இவ்வாறு மீனாக்ஷியும் புருஷோத்தமய்யரும் ஏகாந்தமாய்ப் பேசிக்கொண்டிருந்த சமாசாரத்தை மறைவில் நின்று கேட்டுக்கொண்டிருந்த சுந்தரன் தனது யஜமான் எழுந்து செல்வதற்குப் பூர்வக்ஷணமே தனதிடத்திற்குச் சென்று கணக்கு வேலையைப் பார்த்துவந்தான். மீனாக்ஷி கூப்பிடுவதாய் வேலைக்காரன் சொல்லவே பரபரப்புடன்

அவன் உடனே எழுந்திருந்து, யஜமானியிடம் போகவேண்டிய மரியாதையுடன் அவளருகிற் செல்லுமட்டும் போனான்.

இவனைப்பார்த்த மீனாக்ஷி மந்தஹாஸ முகத்துடன் "ஜயம்பெற்றாய் சுந்தரா" என்று இனிப்பான குரலுடன் சொன்னாள். சுந்தரனும் சற்றுவிலகி நின்றபடியே புன்முறுவலுடன் "எல்லா முங்கள் கிருபை" என்றான். மீனாக்ஷிக்குச் சுந்தரனிடத்தில் மனமடங்காக் காதலிருந்தபோதிலும் அதை வெளியோர் அறியாமலிருக்கவெண்ணிப் பகற்காலங்களில் தான் யஜமானி ஸ்தானத்தில் அமர்ந்தும், அவனைப் பிருத்திய ஸ்தானத்தில் நிறுத்தியுமே பேசுவது வழக்கம்.

அவனும் அதற்குக் கட்டுப்பட்டு நின்றபடியே கைகூட்டி வாய்மூடிப் பக்கம்பார்த்துத்தான் பேசுவதுவழக்கம். இவர்களுடைய அகிருத்தியம் வெளியர்காமலிருக்கும்பொருட்டே மீனாக்ஷியவனைத் தனது வீட்டிற் சாப்பிடக்கூடச் சொல்வதில்லை. மற்ற வேலைக்காரர்களை அனேகமாய் இவள் தன் வீட்டில் சாப்பிடச் சொல்வாள். இவர்களுடைய ரகஸியம் அந்த வீட்டில் வேலைசெய்து வரும் சின்னாத்தான் என்னும் சூத்திரஸ்திரீயல்லாமல் வேறொரு பிராணிக்குந் தெரியாது. அவளறுபது நாழிகையும் வீட்டோடிருந்துகொண்டு அவ்வப்போது எற்படும் தோற்றங்களுக்குத் தக்கபடி மீனாக்ஷியால் அனுப்பப்பட்டு சுந்தரனுக்குத் தௌத்தியம்செய்வாள். அவள் ஜாதியில் சூத்திரஸ்திரீயாயினும் அந்தஸ்தில் ஏழையாயினும் பார்வைக்கு ஒரு பிரபுவீட்டு ஸ்திரீபோலவே காணப்படுவாள். அதற்குக் காரணம் மீனாக்ஷியின் தயவே. மீனாக்ஷி தனக்காக வாங்கப்படும் விலையுயர்ந்த பட்டுப்புடவைகளைக் கொஞ்சநாளே தானுடுத்தி உடனே அவளுக்குக் கொடுத்துவிடுவாள். சில நகைகளையும் தன் கைப்பணத்தால் செய்து அவள் காதுமூக்குகளில் மாட்டியிருக்கிறாள்.

அவர் பசித்திருக்க மீனாக்ஷி பார்த்திராள். அவள் தன் வீட்டிற்கு ஒரு நிமிஷங்கூடப் போகாமல் மீனாக்ஷி வீட்டோடிருப்பதால் தனது கால க்ஷேபத்திற்காக அங்குள்ள ஒரு காரியஸ்தனையும் அமர்த்திக்கொண்டிருந்தாள். அவனுக்கு வயது முப்பது அல்லது முப்பத்திரண்டு இருக்கலாம்; அவனுடைய பன்னிரண்டு வயதுள்ள மகனை இங்கிலீஷ் படிக்கவைத்திருக்கிறாள். அதன் செலவுக்கு மீனாக்ஷிதான் பாத்தியம்.

இது நிற்க, சுந்தரத்தின் மறுமொழியைக்கேட்ட மீனாக்ஷி சரேலென்று நாற்காலியைவிட்டெழுந்திருந்து அவனைக் கைபிடித்திழுத்துக்கொண்டு ஓரறைக்குட்சென்று "சுந்தரா! எனதன்பிற்குரியகண்ணா! உன் காரியத்தை முடித்து விட்டேன்" என்று சொல்லி அவனைத் தழுவி முத்தமிட்டாள்

சுந்த:—கண்மணி! எனதருமைக்கிளியே! உன் சாமர்த்தியத்தை மெச்சுவதற்கு ஆயிரநாவுடைய ஆதிசேஷன்கூட அசமர்த்தன்; அப்படியிருக்க நானெம்மாத்திரம்?

மீனா:—என்ன நடந்தது தெரியுமா?

சுந்த:—எல்லாவற்றையும் நான் மறைவிலிருந்து கேட்டேன்.

மீனா:—சரி அதிருக்கட்டும். அவருன்னை மத்தியானம் கேட்பார். உன்கிட்டுவுக்குப் பலபேர் பெண்கொடுக்க உபத்திரவப்படுத்துகிறார்களென்று சொல்லிக் கொஞ்சம் பிகுவின் பேரில் நடப்புக்கொள். அதிக பிகுவும் செய்துவிடாதே.

சுந்த:—எனக்குத் தெரியாதா? உசிதம்போல் பார்த்துக்கொள்ளுகிறேன்.

மீனு:—சரி நாமிப்போது உத்தேசித்திருக்கிற காரியங்கள் சரியாய் முடியவேண்டுமானல் அந்த சுப்புமூண்டையினிடமகப்பட்டிருக்கும் நமது கடுதாசைச் சீக்கிரத்திலபகரிப்பதுதான் முதலாவது காரியம். காலமே அதைக் கேட்டு வாங்கிவிட்டாயா?

சுந்த:—அது தெரியாதோ உனக்கு? இராத்திரியே அவள் தனது சாமான்களுடன் பிள்ளையை யழைத்துக் கொண்டு வீட்டைவிட்டுப் போய்விட்டாள்.

மீனு:—அப்புறம்! இப்போதவளெங்கிருக்கிறுள்? அந்த மூண்டை நமது காரியத்தையும் கெடுத்து மானத்தையும் வாங்கிவிடுவாளோ என்னவோ தெரியவில்லையே; அடே அசடே சுந்தரா! நம் சிண்டவளிடம் மாட்டிக்கொண்டிருக்கையில் அவளை அடித்துத் தொந்தரவு செய்தாயே.

சுந்த:—கண்ணே மீனுக்ஷி! என்னபிரமாதம் வந்துவிட்டதென்கிறுய்?

மீனு:—பிரமாதமா? நேற்றிராத்திரி நம்மறைப் பக்கத்திலிருந்து யாரோ வெளியிற்போனதுபோல் புலப்பட்டது கூட அவளாகத்தானிருக்கலாமென நினைக்கிறேன்.

சுந்த.—ஆம், அவள்தான்; என்னவந்துவிட்டதென்கிறுய்.

மீனு:—வருவதைப்பற்றிப் பிறகு சொல்லுகிறேன். அவள்தானே அவ்வுருவம்.

சுந்த:—இதைப்பார் என்று சொல்லி தன் இடுப்பிலிருந்த ஒரு காகிதத்துண்டை எடுத்து மீனுக்ஷியிடம் கொடுத்தான். மீனுக்ஷி யதை வாங்கிப் படித்தாள். அதில் பின்வருமாறு காணப்பட்டன. அவையாவன:—

"இனிமேல் ஒருநாழிகூட உனக்கும் எனக்கும் சரிப் படாது. என்னுடைய சாமான்களையெடுத்துக்கிண்டு நான் போறேன். நீ உன் எஜமானருடைய பொண்ணைப் பிள் ளைக்கிக் கலியாணம் பண்ணிக்கிண்டு சுகமாயிரு. சுப்பு.

மீனு:—இது அந்த முண்டையின் எழுத்தா? இவள் நேற்று இராத்திரி இவ்விடம் வந்து நம் வார்த்தைகளை உற்றுக்கேட்டிருக்கிறாள்.

சுந்த:—ஆமாம், இதில் எழுதியிருக்கிற இந்தக் கலியா ணவார்த்தையால் தெரிகிறது.

மீனு:—எனக்குப் பயமாயிருக்கிறது. உனக்கென் னடா? புருஷனுக்கு மானமென்ன அவமானமென்ன?

சுந்த:—அப்படிச்சொல்லிவிடாதே; எல்லாருக்கு மான மும் அவமானமும் உண்டு: ஆனால் போகொன்றும் நேர்ந்து விடவில்லை,

மீனு:—உன் பேச்செல்லாம் சரியான பேச்சாகவில்லை. நம் கடிதம் அவளிடம் இருக்கிறது. நேற்று ராத்திரி அவ ளிங்கு வந்து நம் வார்த்தைகளைக்கேட்டுப்போயிருக்கிறாள். உன் பேரிலோ அவளுக்கு விரோதம் உண்டாயிருக்கிறது. ஆகையால் அவளெப்படியும் நம் ரகசியத்தை வெளிவிட்டு நாமிப்போது உத்தேசித்திருக்குங் காரியத்தையும் நடக்க வொட்டாமற் செய்வாள்.

சுந்த:—அப்படியெல்லாம் நடவாமலிருக்க ஒரு யோச னைசெய்திருக்கிறேன், நீ கவலைப்படாதே.

மீனு:—சொல்லுபார்ப்போம் அந்த யோசனையை.

சுந்த:—காரியத்தை முடித்துவிட்டு உனக்குச் சொல்லுகிறேன். ஸ்திரீகளிடம் இரகஸியத்தைச் சொல்லலாகாதல்லவா?

மீனு:—அக்கரையில்லை சொல்லு, எல்லாரையும்போல் என்னையுமொரு சாதாரண ஸ்திரீயாக நினைத்துவிடாதே.

சுந்தரனிதைக்கேட்டு அவள் காதிலேயேதோ சில வார்த்தைகளைச்சொல்லவே மீனுக்ஷி திடுக்கிட்டு,

அப்படியா! அது பிரமாதத்தில் வராமலிருக்கவேணுமே. காரிய முடிந்தால் எனக்கும் கவலை யொழிந்துவிடுந்தான்.

சுந்த:—ஏன் "முடிந்தால்" என்கிறாய்? கட்டாயம் முடிந்துவிடுமென்றே தீர்மானந்தான், நான் சொன்னபடி கூடவிருக்கமாத்திரம் ஒரு பேர்வழி வேண்டும்.

மீனு:—அதற்கு யோசிக்காதே, இப்போதே சின்னுத்தாயைக்கொண்டு பாஸ்கரனுக்கு பயங்கொடுத்துச்சரிப்படுத்தி உன் இஷ்டம்போல் அவனை வரும்படி செய்கிறேன்.

உடனே மணி பத்தடித்தது. இருவரும் வெளியே வந்து அவரவர்கள் காரியங்களை நோக்கிச் சென்றார்கள்; மீனுக்ஷி இன்று ஒரு நாளைக்கு ஹோட்டலில் சாப்பிடும்படிக்கும், நாளைக்குள் எத்தனை ரூபாயானாலும் ஒரு சமயக்காரனைத் தருவித்துக் கொள்ளும்படிக்கும் சுந்தரத்திற்குச் சொல்லிவிட்டு, தனது சாப்பாட்டிற்குச் சென்றாள்.

நேயர்களே! இவ்விருவரும் கடையாகத் தீர்மானித்த காரியம் இன்னது என்று தெரிவிக்காமலே மேலத்தியாயம் தொடங்கலாமாவென யோசிக்கவேண்டாம். எது அருவருப்

பைத்தரத்தக்க சுதாம்சமோ எதைக்கேட்பவர்களுக்குக்கூடப் பாரம் விளையுமோ அவ்வம்சங்களைக் கதையைவிட்டு விலக்குவதே உசிதம். ஆனாலும் அச்சம்பவம் நம் கதைக்கு ஓரங்கமாயிருப்பதால் நாம் சொல்லாமலே இந்த இருவருடைய ரகஸியமான தீர்மானத்தை மேலத்தியாயங்களில் நீங்களே அறியலாம். நாமின்னமும் மீனாக்ஷியின் வீட்டை விட்டுப் போகமுடியாமல் மற்றுமொரு முக்கியமானகாரியம் நேர்ந்தபடியால் அதைக் கவனிக்கிறோம்.

---

## எழாவது ஆச்வாஸம்

### துர்ஜனபிரவிருத்தி.

மணி பன்னிரண்டடித்தது. மீனாக்ஷி சாப்பிட்டுத் தாம்பூலம் போட்டுக்கொண்டு ஓரறையில் ஒரு மஞ்சத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறாள். அவள் மனதிலுள்ள அபாரமான கவலை சாப்பாட்டுக்கு இடந்தராவிடினும் இருக்கிறவர்களின் நயாதப்பிரார்த்தனையால் உட்கார்ந்து எழுந்திருந்தவளே யல்லாமல் பசியாரப் புசித்தவளல்ல. அவள் முகம் எப்போது முள்ள சோபையில்லாமல் வாடின தாமரைப்பூப்போலும் பகற்கால சந்திரனைப்போலும் அப்பொழுது விளங்கிற்று. இக்கஷ்டங்களெல்லாம் அவளந்தஸ்துக்குத் தகாதவையாயினும் அற்பமான காமசுகத்தைப் பெரிதாய்நினைத்து அருமையான தனது கற்பை யிழந்ததற்கு இதுதான் அவளுக்குக் கிடைத்தபலன். நிற்க. கவலையுண்டிருக்கும் மீனாக்ஷியிடம் திருடனைப்போல் நாற்பக்கமும் பார்த்துக்கொண்டு ஒரு ஸ்திரீ வந்து நின்றாள்.

மீனு:—என்னடி சின்னாத்தா! சரிப்படுத்திவிட்டாயா?

சின்னு:—என்னம்மா அப்படிச் சந்தேகமாய் கேக்கிறீங்க, நான் சொன்னு அவுங்க ரெண்டு சொல்ல மாட்டாங்களே.

மீனு:—இருக்கட்டுமடீ உன் பெருமை, உன்னிடம் கொடுத்த பவுனைக் கொடுத்தாயா? அவன் ஏதாவது ஆசேஷபித்தானு?

சின்னு:—அம்மா! கேளுங்க, அவுரு கிணத்தங்கரையிலே சோமன் தோச்சுக்கிட்டிருந்தாரு, நான் போனேன். நீங்ககொடுத்த 4-பவுனையும் கையில் வச்சு மூடினேன், என்னடி இன்னாரு. நீங்க சொன்னதை விடாமே சொன்னேன், பணத்தைக்கண்டவுடன் தடையே சொல்லலே. "சரி நான் சுந்தரக்சய்யரைக் கண்டு பேசிவிட்டுக் காரியத்தை முடித்து விடரேன், அம்மாளைக் கவலைப்படவேண்டாமின்னு சொல்லு" என்று சொன்னாரு.

மீனு:—உன் மனதிற்குச் சந்தேகமில்லையே.

சின்னு:—இல்லவே இல்லை.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் வாயிலில் ஒரு குதிரைவண்டி வந்து நின்றது. அர்சத்தத்தைக்கேட்ட மீனாக்ஷி சின்னாத்தாளை வண்டியில் யார் வந்திருக்கிறார்களென்று பார்த்துவரச்சொல்லி அனுப்பினுள். அவ்வாறே அவள் போய்த் திரும்பிவந்து, அம்மா! ஒங்க அண்ணன் வந்திருக்கிறாங்க என்றாள்.

இதைக்கேட்ட மீனாக்ஷி கொஞ்சம் பிரமித்தாள்; சற்று நேரத்திற்செல்லாய் தன் மனதை நல்ல நிலையில் நிறுத்திக்

கொண்டு அவளை வெளியிற் போகச்சொல்லிப் பக்கத்திலிருந்த ஜலத்தினால் முகத்தை ஒருதரம் துடைத்துக்கொண்டு முகத்தை மலரச்செய்துகொண்டு அவ்வறையின் வாயிற்படியிலிருந்துகொண்டே தனது தமையன் வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். பட்டாபிராமய்யரும் ஒரு தோற்பெட்டியைக் கையிலெடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தார். மீனாக்ஷி யவரை வரவேற்று உள்ளே அழைத்துப்போய் அவருக்குப் போஜனம் முதலானது செய்வித்து அவர் சாப்பிட்டவுடன் அவரை ஒரு ஊஞ்சற் பலகையிலுட்காரச் சொல்லி அருகிலொரு பெஞ்சியிற்றானு முட்கார்ந்து, அண்ணா! அகத்தில் மதினியும் குழந்தைகளும் சௌக்கியமா ? என்றாள்.

பட்டாபி:—ஆம். எல்லோரும் சௌக்கியம்.

மீனா:—என்ன இந்தத் தடவை முன்பின் ஒரு சங்கதியும் தெரிவிக்காமல் திடீரென வந்தது ?

பட்டாபி:—ஒன்றும் விசேஷமில்லாமையால் முந்தியே தெரியப்படுத்த நியாயமில்லாமற் போயிற்று.

மீனா:—விசேஷமில்லாமல் நீ யொருபோதும் வருகிற வழக்கமில்லையே; ஏதாவது காரியமிருக்கவேணும், ஆனால் எனக்கது சொல்லத் தகுமோ தகாதோ அதுதான் தெரியவில்லை.

பட்டா:—விசேஷமிருந்தால் தான் வரலாமோ ? சாதாரணமாய் உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாகாதோ.

மீனா:—ஆம், ஆம், வெகு தரம் அல்லவா என்னை நீ வந்து பார்த்துப்போனவர். ஏதோ காரியமிருக்கிறது. அது என்னிடத்திலோ, அல்லது உன் மாப்பிள்ளையிடத்திலோ.

பட்டா:—அவரிடம் எனக்கொரு காரியமுமில்லை. என்னைவிட அவரெனக்குப் பாத்தியம் ஜாஸ்தியோ?

மீனு:—அப்படியானால் வந்த காரியத்தைச் சொல்லக் கூடாதோ.

பட்டா:—என்ன காரியம் காரியம் என்கிறாய்; நானோ பெண்ணைப்பெற்றவள், தையோ பிறந்திருக்கிறது, நீ ஸ்வயமாய் அறிந்துகொள்ளக்கூடாதோ, என்னை அடிக்கடி கேட்கிறாயே.

மீனு:—கலியாணக் காரியமாய் வந்திருக்கிறேனென்று சொன்னாலென்ன, எப்போது கமலத்திற்குக் கலியாணம்?

பட்டா:—கலியாணச் சாப்பாடு சாப்பிடவும் புதுப் புடவை கட்டிக்கொள்ளவும், நீ தயாராகத்தான் இருக்கிறாய்.

மீனு:—மாப்பிள்ளையைத்தான் காணோமோ?

பட்டா:—அதுதான் கிராக்கியிலிருக்கிறது.

மீனு:—என்ன கிராக்கி மூன்று சுன்னம் போட்ட நோட்டில் பத்துநோட்டை நீட்டினால் வேண்டிய மாப்பிள்ளை; நீ செட்டாகக் கலியாணம் பண்ணப் பார்ப்பாய்.

பட்டா:—நானென்றும் செட்டுப் பண்ணவில்லை; கையில் பணமிருந்தாலல்லவா தாராளமாய்க்கொடுக்க; நீ யிப்போது பதினாயிரம் ரூபாய் கொடு, நானெப்படிக் கலியாணத்தை நடத்துகிறேன் பார்.

மீனு:—சரி, நான் சொன்னதற்காக என்னையே பணம் கேட்டுவிட்டாயோ? எனக்கிது அபராதமோ?

பட்டா:—நீ சொன்னதற்காக உன்னை நான் பணம் கேட்கவில்லை, ஸ்வபாவமாகவே அந்த எண்ணத்தோடுதான் இங்குவந்தேன்.

மீனு:—அண்ணு! நீ சொல்வது வேடிக்கையோ யதார்த்தமோ தெரியவில்லை. என்னிடத்தில் ஏது பணம் பதிநாயிரக்கணக்காகக்கொடுக்க, உன் மாப்பிள்ளையிடத்தில் அதற்கு இதற்கு என்று தப்பும் சரியுமாய்ச் சொல்லி வாங்கும் பணத்தில் ஏதாவது கையில் பத்தெட்டு இருக்கும், என்னை மகாராஜாவின் பட்டமகிஷியென்று நினைத்தாயோ?

பட்டா:—மீனு! நீ மகாராஜாவின் சம்சாரந்தான். உனக்கென்ன குறைவு. நீ எனக்குத் தங்கையல்லவா? நீ எனக்குக் கொடுக்க பாத்தியமில்லையா? நான் அதிக சொத்துள்ளவனாயிருந்தால் உன்னைக் கேட்பேனு?

மீனு:—ஆம், அண்ணு! நானொருத்திதான் உனக்குத் தங்கையோ? என்னைப்போல் இன்னம் மூன்று பேரிருக்கிறுர்களே, அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ரூ 2500 வாங்கிவா, நானுமப்படியே தருகிறேன்.

பட்டா:—அவர்கள் கொடாவிட்டால்.

மீனு:—ஏன் கொடுக்கமாட்டார்கள். ஒருத்தி உள்ளூரில் வாழ்க்கைப்பட்டுப் பெரிய பணக்காரியாயிருக்கிறுள். ஒருத்தி தாசில்தாருக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறுள். இன்னொருத்தி பெரிய பிரபுவான வக்கீலுக்கு வாழ்க்கைப்பட்டு ஜகத்தையே தனக்கீடில்லையென மதிக்கிறுள். அவர்களுக்கெல்லாமென்ன கேடு?

இதைப் படிக்கின்ற பிரியர்காள்! மீனுக்ஷி சொல்லிய மூவருகளுக்குள் கடைசியில்வந்தவள் சாவித்ரியென்று உங்க

னுக்கு ஸ்வயமாகவே தெரிந்திருக்கும். அவளைப்பற்றிச் சொல்லுங்காலத்தில் அவனுடைய முகம் சிவந்தது வார்த்தை கடுமையுடன் உதட்டைக் கடிக்கச்செய்துக்கொண்டே வெளியில் வந்தது. பட்டாபிராமய்யருடைய மனதிலே தைத்தது. அவனுக்கு அவளிடம் முன்னமேயே வெறுப்பிருப்பது உங்களுக்குத் தெரிந்தவிஷயமே. அதைக்கொண்டே காரியத்தைச் சாதிக்கலாமெனத் தீர்மானித்தான்.

பட்டா:—நீ சொன்ன மூவரில் முதலிற்சொன்ன இரண்டுபேரிடத்திலும் ஏதாவது வாங்கினாலும் வாங்கிவிடலாம், கடைசியில் சொன்ன ராஜாத்தியினிடத்தில் காலணாகூடக் கிடைக்காது.

மீனு:—ஏன் அவள் ரொம்ப ஏழையோ?

பட்டா:—ஏழையல்ல, அவள் அகம்பாவக்காரி. என்னையவள் ஒரு திருணத்திற்கும் கீழாக நினைக்கிறாள். சொத்தில்லாதவனென்றும் அநியாயமாய்ச் செலவுகளை அயோக்கியத்தனமாய்ச் செய்தவனென்றும் இன்னும் அநேகபொய்களைக் கற்பனைசெய்து இகழ்கிறாள்.

மீனு:—இகழ்வாள். அதிலென்ன சந்தேகம்; அவள் சபலைக் கனவிலும் எதிர்பாராத என்னையேயவள் மதிக்கிறதில்லையே. அவளிடம் பணத்தைக் கேட்கும் உன்னையா அவள் மதிக்கப்போகிறாள்.

பட்டா:—இவ்வளவு தெரிந்திருந்தும் அவள் பணம் கொடுத்தால் நானும் கொடுக்கிறேனென்கிறாயே.

மீனு:—ஆமாம், அதிருக்கட்டும், நீ எப்போது அவளிடம்போனாய், என்னகேட்டாய் அவள் என்னசொன்னாள், சொல்லு கேட்கிறேன்.

பட்டா:—சென்ற ஞாயிற்றுக்கிழமை நான் குளித்தலை யோனேன்; சாவித்ரிமாத்திரம் இருந்தாள்; அவள் புருஷன் ஊரிலில்லை; சாவகாசமாய் ராத்திரி எல்லாரும் சாப்பிட்டானபிறகு வந்தகாரியத்தைச் சொல்லும்படி தானகவே என்னைக் கேட்டாள். நான் பெண்ணைப்பெற்றவனுன தல் மானத்தைவிட்டு அவளுடைய மூத்தாள் குமாரன் தர்மனுக்கு என் பெண்ணைக் கலியாணம்பண்ணிக் கொள்ளும்படியான ஏற்பாட்டைப் புருஷனுடன் சொல்லிமுடிக்கும்படி கேட்டேன்.

மீனு:—என்னசொன்னுள் பதில்?

பட்டா:—அவனுக்குப் பதினுயிரரூபாய்வரையில் வரதக்ஷிணை வருவதாயிருப்பதால் உன்பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ள முடியாதென்று சொன்னுள்.

மீனு:—ஆமாம், இருபதினுயிரரூபாய்கூட வரதக்ஷிணை வரும்அவனுக்கு; 2 லக்ஷரூபாய்க்குமேல் கடனிருக்கிறதே தாயில்லையோ? தனது அந்தஸ்தைப் பிறர் அறியார் என்று எண்ணியிருக்கிறுள்போலும்.

பட்டா:—இதுமாத்திரமல்ல, அந்த மன்மதனுக்கொப்பான தர்மனுக்கு உன் கோணைமூஞ்சிக் கமலத்தையா கொடுக்கிறதென்று கேலியாகக்கேட்டதுதான் என்மனதை அறுக்கிறது. நம்மைச்சேர்ந்தவர்களே நம்மைத்தூஷித்தால் காரியம் எப்படியாகும்?

மீனு:—அவள் எதுவேணுமானுலும் அதையெல்லாம் தங்குதடையின்றிச்சொல்வாள்; அவளுக்குத்தன்னுடையது பிறருடையது என்னும் பேதமில்லை. அவ்வளவுகர்வமிருக்கிறது அவளுக்கு. சரி யப்புறம் என்ன நடந்தது சொல்லும்;

பட்டா:—பிறகு 10000ரூபாய் பணமாவதுகொடு, பொன்னேரி நிலங்களை உனக்கு எழுதித்தந்துவிடுகிறேனென்று கெஞ்சிக்கேட்டேன். அதற்கு ஒரு ரூபாய்கூடத் தன்னிடம் கிடையாதென்று சொல்லிவிட்டாள்.

மீனு:—சரிதான் அவளிடம் பணமில்லையோ? ஆம்படையானுக்குத் தெரிந்தும் தெரியாமலும் சேர்த்துவைத்திருக்கிற பணம் அவளிடம் சுமார் 20 அல்லது 30 ஆயிரத்திற்கு மேலாகவே இருக்கும். அவள் காலணாகூடக்கொடாள். மகா லுப்தை.

பட்டா:—பிறகு நான்போகட்டுமாவென்று கேட்டேன், போவென்றும் சொல்லிவிட்டாள். உடனே அவள் கணவனும் வந்துவிட்டான்; உனது மூத்தாள்பெண்ணைத் தனது பிள்ளைக்குக் கலியாணஞ்செய்து கொள்வதாய் அவர் நிச்சயித்துவந்ததாய்ச் சொன்னதின்பேரில் இரண்டு பேரும் கொக்கரித்தார்கள்; உடனே நான் வருத்தந்தாங்கமாட்டாமல் இரவே புறப்பட்டு ரெயிலேறித்திருச்சிக்கு வந்து இரண்டொரு மனுஷியர்களைப் பார்த்துவிட்டு இன்று இவ்விடம் வந்தேன், நீயாவது என் காரியத்தை முடித்து அனுப்பினால் சந்தோஷம்; அல்லது நீயும் அவளைப்போல் என்னைத் துரத்திவிட்டாலும் அதைக்காட்டிலும் சந்தோஷமாய் ஓடிப்போகிறேன்; எனக்கு மானம் பெரிதாயிருக்கிறது. பெண்ணுக்கோ வயதாய்விட்டது; இனி தற்கொலை செய்து கொள்ளவேண்டியதாய்த்தான் எனக்கு முடியும் போலிருக்கிறது.

மீனு:—என்னாலும் முடியாத காரியந்தான் இது. ஆனாலும் அவளுக்காகவாவது உன் காரியத்தை முடித்தனுப்பவேண்டியதவசியமாயிருக்கிறது. அவள் மூத்தாள் பிள்

ளைக்கு என் மூத்தாள் பெண்ணைக் கொடுக்கும் ஏற்பாட்டை மாற்றிவிட்டேன்; அந்தப்பயலுக்கு இனிக் கலியாணம் கடையில் தான்-

பட்டா:—ஆனாலந்தப் பெண்ணந்தப்பயலுக்கில்லையா? ரொம்ப சந்தோஷம், வேறெங்கே பார்த்திருக்கிறீர்கள் வரன், அவள் கொக்கரிப்பு எல்லாம் வீணாயிற்று?

மீனா:—யார் பார்க்கிறவர்கள்? இந்த வீட்டில் சுந்தரமய்யர் என்று ஒரு கணக்குப்பிள்ளை இருக்கிறார், அவர் நல்ல வம்சஸ்த்தர்; அவருடைய பிள்ளைக்கு வயதும்ஆகிறது. அவன் இங்கிலீஷ் படிக்கிறான்; சொத்தும் இருக்கிறது; அவனுக்கு அந்தப்பெண்ணைக்கொடுக்கிறதாயும் அவர்களை வரவழைத்து இந்த மீ 30உயே இந்த வீட்டிலேயே முகூர்த்தம் நடத்துவதாயும் ஏற்பாடு செய்துவிட்டேன்.

பட்டா:—அப்படியானால் நீ யெனக்கொரு காரியஞ் செய்யவேண்டும். உன் தமக்கையைப்போல் நீயும் நிராகரிப்பதாயிருந்தால் அதை நான் சொல்லாமலே ஊருக்குப் போகவேண்டும், சொல்லலாமா?

மீனா:—அண்ணா! அவள் தன்னால் முடிக்கக்கூடிய காரியத்தை உன் பேரிலுள்ள துவேஷத்தால் முடிக்கமாட்டேனென்றாள்; நானப்படிச் சொல்லத் தயாராகவில்லை; முடியுமானால் முடித்தேதருகிறேன், சொல்லு.

பட்டா:—அப்படி யொன்றும் அசாத்தியமான காரியத்தை நான் சொல்ல நினைத்திருக்கவில்லை. உன் மூத்தாள் குமாரன் சுந்தரேசனுக்கு நம் கமலத்தை வாழ்க்கைப்படுத்தி கொடுக்கவேண்டுமென்பது என் கோரிக்கை; நீ கொஞ்சம் என்பேரில் மனதுவைத்து அதைமுடிப்பதோடுகூட எனக்குக்

கலியாணச் செலவுக்குங் கொஞ்சம் (அதாவது அதிகமில்லை) 3000-ரூபாய் கொடுத்தால் போதும்; இந்தக் காரியம் ஒன்று தான் எனக்கிப்போது முக்கியம்; நான் சொத்திற் குறைந்தவனாக ஆய்விட்டபடியால் இம்மாதிரி வேறொரு வரனைத் தேடி அவனுக்கு வரதக்ஷிணை கொடுத்துக் கலியாணம்பண்ண அசக்தனாயிருக்கிறேன்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட மீனாக்ஷி கொஞ்சம் யோசிக்கலானாள். தனது தமையனிட மிருக்கும் அன்பாலும், சாவித்திரியினிடமுள்ள பொறாமையால் அவள் முடிக்காத காரியத்தைத் தான் முடித்ததாய்க் கீர்த்தியடைய எண்ணியிருப்பதாலும் இந்தக் காரியத்தை முடித்துவிட வேண்டியதாகவே தீர்மானித்தாள். இவள் சுமார் 1-மாசத்திற்கு முந்தி அந்தப்பெண் கமலத்தைப் பார்த்திருக்கிறபடியால் அவ்வளவு குரூபியான பெண்ணை மன்மதனுக்கொப்பான நமது சுந்தரேசனுக்கு எப்படிச் சேர்த்துவைப்பதென்று தயங்கினாள். ஆயினும் வெகு நாளாய்ச் சுந்தரேசனைத் தன் வலையிற் சிக்கும்படி செய்ய வெண்ணியிருக்கும் மீனாக்ஷி அவனுக்கு அழகில்லாத பெண்ணைக் கலியாணம் பண்ணிவைப்பதே நலமெனத் தீர்மானித்தாள். தனது கடாக்ஷவலையில் தன்னைப் பாணிக்கிரகணம் பண்ணின பரமஸாதுவிகரான புருஷோத்தமய்யரும், ஸ்வாமிக் ஆரோக்கியான சுந்தரனும் அகப்பட்டு விழிக்கிறதைக்கொண்டு எப்புருஷனையும் தன்வசமாக்கிக் கொள்ளலாமென்பது அவளது கருத்து. இக்காரணங்களைக் கொண்டு அவள் நமது சுந்தரத்திற்குத் தனது தமையன் பெண் கமலத்தைத் தன் கணவனிடம் சொல்லிக் கலியாணம் செய்து கொள்வதென்றே தீர்மானித்தாள். இந்தத் தைரியத்திற்குக் காரணம் புருஷோத்தமய்யர் இவளை நல்லவளென்றே நினைத்து இவளிஷ்டப்படி நடந்து வருவதேயாம்.

கடைசியாக மீனாக்ஷி அண்ணா! நீ சொல்வது அசாத்திய மான காரியம்; அவன் வயது வந்த பிள்ளை யானதால், பெண்ணினழகைக் கவனிப்பா னென்பது நிச்சயம். அது தான்கொஞ்சம் யோசனை.

பட்டா:—என்ன நம் கமலத்தைக் குரூபியென்கிறாயா? கொஞ்சம் கறுப்பு, வேறென்ன மூக்கில்லையா, முழியில்லையா கறுப்புப் பெண்கள் கன்னிகைகளாகவே இருக்கிறார்களா?

மீனா:—மூக்குமிருக்கிறது முழியுமிருக்கின்றது. மற்ற வைகளுமிருக்கின்றன; கறுப்புப்பெண்களுக்கும் கலியாண முண்டுதான்; அதற்காகச் சொல்லவில்லை; பொதுவாய்க் குடித்தனப்பெண்ணுக்கு அழகுவேண்டியதனுவசியம் என் பது எனக்குந் தெரியும்.

பட்டா:—தெரிந்திருந்தால் ஏன் கலங்குகின்றாய்? எப் படியாவது முடித்துவிடு; நான் தாமதமின்றி ஊர் போக வேண்டும்.

மீனா:—இருக்கட்டும், அவரிடம் சொல்லி எப்படியா வது கலியாணத்தை முடித்துவிடுகிறேன். ஆனால் நீ கேட் கும் பணம் கிடைப்பதரிது. இப்போது நல்ல செலவு காலம்.

பட்டா:—அப்படியானால் நான் கலியாணம் பண்ணிக் கரையேறுவதெப்படி?

மீனா:—(சற்றுநேரம் யோசித்து) இந்தக் கவலை வேண் டாம், நீ ஒரு காரியம் செய்துவிடு. நீ உன் பெண்ணையும் மற்றுமுன்னைச் சேர்ந்தவர்களையும் அழைத்துக் கொண்டு இவ்விடம்வந்து இந்த வீட்டுக் கலியாணத்தோடு உன் பெண் கலியாணத்தையும் நடத்திவிடு. நீ உன்னுடைய ஊரில் கலி

யாணம் செய்தால் சம்மந்திகளாக வரும் எங்களைச் சரிவர ஆராதிக்க உன்னால் சாத்தியப் படாது.

பட்டா:—இதற்கு நான் சம்மதிக்கிறேன்; உன் மகிஷி சம்மதிக்கவேண்டுமே, அவள் அடங்காப் பிடாரி யென்பது உனக்குத்தான் தெரியுமே.

மீனு:—சம்மதிக்காவிட்டால் அவள் பிறந்தகத்துக்குப் போய் பதினாயிர ரூபாய் வாங்கிவரச்சொல்லு?

பட்டா:—எப்படியாவது அவளைச் சரிப்படுத்துகிறேன். தற்காலச் செலவுக்கும் கலியாணத்திற்கு முந்தியே பெண்ணுக்குக் கொஞ்சம் நல்லதாய் வாங்கிக் கொடுக்கவேண்டிய புடவை ரவிக்கைகளுக்கும் சில சில்லரை நகைகள் செய்ய வேண்டியதற்கும் ஒரு ஆயிர ரூபாயாவது கொடு

மீனு:—இப்போது என் கையில் கொஞ்சங்கூடப் பண மில்லை. அவரைக்கேட்டால் என்ன சொல்லுவாரோ இந்தச் சமயம், அவர்மனதை மெதுவாய்ச் சரிப்படுத்தி உன் பெண் கலியாணத்தை முடிக்கவேண்டிய காரியமல்லவா ஒன்று பல மாயிருக்கிறது. அதோடு இதையும் சொன்னால் ஒரு காரியமும் முடியாது.

பட்டா:—பின் நானென்ன செய்யவேண்டும்? எனக்குக் கடன்கொடுப்பவர்கூட ஒருவருமில்லையே.

மீனு:—அப்படியானால் எனது கல்லிழைத்த முகப்பு வைத்த பவுன்மாலையைக் கொடுக்கிறேன், அது சுமார் 2000 ரூபாய் பெறும், அதைக் கொண்டுபோய் அடகுவைத்தா வ்து விற்றுவது காரியத்தை முடித்துக்கொண்டு கலியாணத் திற்கு 4-நாள் முன்னேயே இவ்விடம் வந்துவிடு.

இவ்வாறு சொல்லித் தன் கழுத்தில் அணிந்திருந்த பல ரத்தினங்களுமிழைத்த முகப்புள்ள பவுன்மாலையைக்கழற்றித் தமையன் கையில் கொடுத்தாள். பட்டாபிராமய்யரும் பரம சந்தோஷத்தோடு இரண்டு கைகளாலும் வாங்கித் தோற் பெட்டிக்குள் வைத்துப்பூட்டிவிட்டு, அம்மா மீனு! இப்போ துதான் உனக்கென்பேரிலிருக்குமிரக்கமும் பிரீதியு மித்த கையனவென்று எனக்குத்தெரிந்தது. நீசொன்னபடி செய்து அவனையும் சரிப்படுத்திக்கொண்டு சீக்கிரம் வந்துவிடுகிறேன். நீ சாயங்காலம் உன் பர்த்தாவோடு பேசிமுடிக்கும் விவரத் தைத் தெரிந்துகொண்டு ராத்திரி ரெயிலில் ஊருக்குப்போ கிறேன் என்றார்.

மீனு:—சரியந்தப்படியேசெய், நான்சொல்லுவதற்குஅவ ரொருநாளும் மாறுதல் சொல்ல மாட்டார். ஆனாலும், பார்த்துக் கொண்டு போகலாம். நான்கூட ஒரு விதமாய் யோசிக்கிறேன்.

பட்டா:—என்ன மறுபடியும் யோசனை ?

மீனு:—உனக்கொன்றுமில்லை, கலியாணங்களை நடத்த யாரையாவது ஒரு தகுந்த நிர்வாகியான புருஷனை மானே ஜராய் ஏற்படுத்திவிடலாமாவென்பதுதான்.

என்றிவ்வாறு சொல்லிவிட்டுப் பட்டாபிராமய்யருடைய அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்யவேண்டியதற்காகத் தன் கண வன் இருக்கும் இடந்தேடிப்போனாள். அப்போது புரு ஷோத்தமய்யர் போஜனம் சாப்பிட்டுவிட்டு வெற்றிலைபோட் டுக்கொள்வதற்காக ஒரு நாற்காலியில் சாய்ந்திருந்தார். வேலைக்காரன் நானாவித ஸுகந்த பாக்கு முதலான அங் கங்களுடன் வெற்றிலைத்தட்டைக் கொண்டுவந்து நாற்

காலியின் கையில்வைத்தான். மீனாக்ஷி முன்போல் தனக்குடன் கிட்டப்போய்த் தானே அவருக்கு அவ்வெற்றிலையை மடித்துக்கொடுத்தாள்.

புருஷோத்தமய்யருக்குத் தனதருமைக் காதலியான மீனாக்ஷி ஸதா ஸகலாபரணங்களுடனும் பிரகாசிப்பதிற்றான் ஆநந்தம். ஆகலால் எச்சமயமும் அவரவளைக் கண்டவுடன் ஒவ்வொரு நகையின் பிரகாசத்தையும் அந்நகையால் அவ்வங்கத்திற்குண்டான அழகையும் கவனிக்குந் தன்மையுடையவர். ஆகையால் இன்று இவளைக்கண்டவுடன் அவர் கண்களுக்குப் பவுன் மாலையில்லாக் கழுத்துப் பாழ்ங்கழுத்துபோல் புலப்பட்டது. அவருடனே அவளுடைய கழுத்தைச் சோதித்துப்பார்த்துவிட்டு பவுன்மாலை யெங்கே யென்று கேட்டார்.

அவளுடனே திடுக்கிட்டு 'நமது நகைகளிலிவர் இவ்வளவு கவனத்துடனிருக்கிறார்' என்று மலைத்து, 'அதன் முகப்பு ஒடிந்துபோய்விட்டதால் அதைச் சீர்ப்படுத்தத் தட்டான் வீட்டிற்கனுப்பி யிருக்கிறேன்' என்று விடை பகர்ந்தாள். பிறகு கொஞ்சகாலம் சமயோசிதமாய்ப் பேசிவிட்டுத் தனது பிரஸ்தாபத்தில் தன்தமையன்பெண் கலியாணத்தை யெடுத்துப்பேசி ஜாதகங்கள் சித்திரை வீதியிலுள்ள பாலக்காட்டு ஜோஸியரைக்கொண்டு பார்த்ததில் சரியாயிருக்கின்றனவெனச்சொல்லி பட்டாபிராமய்யருடைய தற்காலஏழ்மை ஸ்திதிக்கு நாம் இரங்க வேண்டியதவசியமென்றும், ஒன்றுக்குள் ஒன்றாக் கலியாணம் பண்ணிக்கொண்டால் மூத்தாள் இளையாள் விஷயமாகக்குடும்ப பேதமுண்டாகாதெனவும் இன்னும் அனேக உசிதமான காரணங்களையுஞ்சொல்லி நமது சுந்தரனுக்கு அவன் மருமகள் கமலத்தைக்கொடுத்

து கலியாணத்தைத் தர்மாம்பாள் கலியாணத்துடன் சேர்த்துச் செய்துவிடுவதென்று தீர்மானித்தாள்.

புருஷோத்தமய்யருக்கு அவள் சொல்லும் காரணங்களெல்லாம் அவளிடமிருக்கும் அனுராகப் பெருக்கால் உசிதமென்றே தோன்றினபடியால், குடித்தனப் பெண்ணுக்கழகு அவசியமில்லையென்று அவருமொப்புக்கொண்டு அவளிஷ்டப்படிச் சம்மதித்தார். கடைசியாக வல்லப சாஸ்திரிகளுக்கு விரோதமாய் நாம் வேறொரு வரனைத்தேடிப் பெண்ணைக்கொடுப்பதால் அவர் பெண்ணையும் பிள்ளையையும் இவ்விடமனுப்பவே மாட்டாரென்றும், ஆகையால் அந்த வரனைவிட்டு வேறுவரனுக்குத் தர்மாம்பாளைக் கொடுக்க உத்தேசித்திருக்கும் சமாசாரத்தை யவர்களுக்குத் தெரியப்படுத்தாமலே, நமது கௌரவத்திற்குக் குறைவு வாராதபடிக் கலியாணத்தை நமது வீட்டிலேயே நடத்தவேண்டியதவசியமாயிருப்பதால் தர்மாம்பாளையும் சுந்தரேசனையும் தேவதாப்பிரார்த்தனைகளுக்கு முந்தியே இவ்விடம் மதுரைக்கு அனுப்பிவிடவேண்டுமென்று திருச்சினாப்பள்ளிக்குக்கடிதம் எழுதிவிடவேண்டியதென்றும், குளித்தலை கோபாலசாமி ஐயர் கலியாணத்தை யுத்தேசித்துப் புறப்படுங்காலத்தில் அவர் பிள்ளைக்கு இந்தப் பெண்ணில்லையென்று தெரியப்படுத்தினாற் போதுமென்றும், முந்தியே இந்தச் சங்கதி யாவருக்குந் தெரிந்தால் அவர்களால் கலகமுண்டாகிக் கலியாணம் நின்றுபோய்விடுமென்றும், மீனாக்ஷி புருஷோத்தமய்யருக்குத் தனது தேனைப்பொழியும் மொழிகளாற் சொல்லி அவரைச் சம்மதிக்கச்செய்து அவ்விடத்தைவிட்டகன்றாள். வெகு சாதுர்யமாய் இவளைச் சுற்றிக்கொண்டிருந்த நாமும் மற்றொரு இடத்திற்குப்போவோம்.

---

# எட்டாவது ஆச்வாஸம்.

## அநபீஷ்ட சிரவணம்.

காலையில் மணி 8 ஆயிற்று. திருச்சிறுப்பள்ளியில் ஒருமாளிகையின் மேல்மாடியில் ஓரறையில் ஒரு சக்கர மேஜையின் நாற்புரங்களிலும் நான்கு நற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஒன்றில் நமது தர்மாம்பாள் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஒரு ஸம்ஸ்கிருதப் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். திறக்கப்பட்டிருந்த ஜன்னலின் வழியாய் குளிர்ந்த காற்று தேகத்துக்கு ஹிதமாக வீசிக்கொண்டிருந்தது. அதனாலவள் கூந்தலிற் சூட்டப்பட்டிருந்த ஜாதி புஷ்பத்தின் நறுமணம் அவ்வறை முழுமையும் வியாபித்திருந்தது. குணங்களேயல்லாமல் தோஷத்தைக் கண்டுபிடிக்கத்தெரியாத நமது தர்மாம்பாள் அப்புத்தகத்தைப் படிக்கும் காலத்தில், சில சமையம் சிரக்கம்பனமும், சில சமயம் அற்பமான மந்தஹாஸமும், சிறிதுகாலம் ஸ்தம்பம்போல் மலைத்து அசையாமலிருத்தலும் சிலகாலம்வாய்விட்டுக் கலகலவென்று படித்தலுமாக விருந்தாள்.

இவ்விப்பிரமங்களையும் சேஷ்டைகளையும் களிப்புடனும் வியப்புடனும் அவ்வறையின் வாயிற்படியில் நின்றபடியே ஒரு அழகிப்பையன் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனாலவனை யவள் கவனித்திலள். அதற்குக் காரணமவள் தனது மனதை முழுமையும் அப்புஸ்தகத்திலேயே வைத்திருந்ததுதான். அந்தப்பையன் சற்றுநேரம் நின்றுவிட்டுப் பிறகு ஓசையன்றிச் சமீபத்திற்போய், தர்மா! யாராவது வந்து இங்கிருந்து எதையாவது எடுத்துக்கொண்டுபோனாலும் நீ யறியாய்போலிருக்கிறதே?

தர்மா:—(திடுக்கிட்டு நாற்காலியிலிருந்து எழுந்திருந்து) அண்ணு! மன்னிக்கவேண்டும், புஸ்தகத்தைக் கவனித்துக் கொண்டிருந்ததால் இப்படிப்பட்ட பேச்சிற்குப் பாத்ர மானேன்.

சுந்த:—தர்மீ! ஞானிகளுடைய புத்தி அநிர்வாச்ய பிரம்மத்தினிடம் லயித்திருப்பதுபோல் உன் புத்தி இந்த கிரந்தத்தில் லயித்துவிட்டது. இப்படிப்பட்டகவனத்துடன் நீ இதுவரையில் ஒருநாளாவது வாசித்ததை நான் பார்த்த தில்லை. இன்று ஏதோ விசேஷமில்லாமலிருக்க நியாயமில்லை.

தர்மா:—ஒரு விசேஷத்தையும் நான் காணவில்லையே,

சுந்த:—சரிதான் தர்மீ! உன் தலைபாட்டமும், அடிக் கடி ஏற்படும் மந்தஹாசமும் அசையா நிலைமையும் சரீரபா ரவச்யமும் ஒரு விசேஷமுமில்லாமற்ருன் உண்டாயினவோ?

தர்மா:—(தலைகுனிந்து) அது என்னவோ எனக்குத் தெரியவில்லை.

சுந்த:—அஃதிருக்கட்டும். என்ன புஸ்தகம் பார்த்துக் கொண்டிருக்கிருய்?

தர்மா:—மாலதீமாதவம் பார்த்துக்கொண்டிருந்தேன்

சுந்த:—அதென்ன இத்தனை நாளாகவில்லாமல் இப் போது மாலதீமாதவம் பார்க்கத் தோற்றமுண்டாயிற்று?

தர்மா:—நாமிருவரும் வாசித்தகாலத்திற் பார்த்தது தான், பிறகு பார்க்கவேயில்லை, என்னவோ நேற்று நினைத் துக்கொண்டேன், இராத்திரி 5-வது அங்கம்வரையில் பார்த் திருந்தேன், பாக்கியை இப்போது படித்துக்கொண்டிருக் கையில் தங்கள் வரவு ஏற்பட்டது.

சுந்த:— இப்போது எந்த அங்கம் படிக்கிறாய்?

தர்மா:—ஏழாவது அங்கம் பார்த்துவருகிறேன்.

சுந்த:—சரி, மாதவனுக்கே வாழ்க்கைப்படுவதாய் நிச்சயம் கொண்டிருந்த மாலதியை அவள் தகப்பன், மற்றொருவனுக்கு நிச்சயிக்க மந்திரிஸ்தையான காமந்தகியின் சாமர்த்தியத்தால் மகரந்தனுக்கு மாலதி வேஷம்போட்டு அந்த மாப்பிள்ளைக்குக் கலியாணம் பண்ணிக்கொடுத்து அந்த வ்யாஜத்தில் மகரந்தனுக்கும் மதயந்திகைக்கும் இணக்கம் உண்டுபண்ணும் கதையைச் சொல்லும் அங்கமல்லவா ஏழாவதங்கம்?

தர்மா:—ஆமாம்.

சுந்த:—அதனாற்றான் அந்த அங்கத்தைப்படிக்கையில் உன்தேகம் தெரியாமலுனக்கானந்தம் உண்டாயிற்று. (கொஞ்சம் சிரித்துக்கொண்டு) நமது பிதாகூடத்தான் உன்னை தர்மனுக்கே கொடுத்துவிடுகிறதாக ஒப்புக்கொண்டு பதிலனுப்பிவிட்டாரே! ஏன் கவலைப்படுகிறாய்?

தர்மா:—(தலைகுனிந்தபடி மந்தஹாஸத்துடன்) என்ன அண்ணா! நீங்கள்கூடப் பரிஹஸித்தால்—

சுந்த:—ஏன் பரிஹஸிக்கக்கூடாது. நீ காலைவேளை புசிக்கவேண்டிய ஆகாரத்தையும் மறந்து, புஸ்தகத்தை அதிலும் மாலதீமாதவத்தை அதிலும் ஏழாவதங்கத்தைப் பார்த்துக்கொண்டிருந்தால் நானெனப்படி ஊகிக்கக்கூடாது.

தர்மா:—பிராதகால ஆகாரத்திற்கு வரவில்லையென அம்மாமி கோபத்தையடைந்திருப்பாளென இதனால் தோன்றுகின்றது.

சுந்த:—கிருகத்தில் கிருகக்கிருத்தியங்களுக்கொருவருமில்லாமல் அம்மாமி தனியாய்க் கஷ்டப்படுங்காலத்தில் நீ யவளுக்குதவியாய்க்கூட வேலைசெய்யாவிட்டாலும் யவளை வருந்தச்செய்தாயானால் அவள் சந்தோஷிப்பாளென நினைக்கின்றாயா? போ சீக்கிரத்தில், ஆகாரத்தைச் செய்துவிட்டுவா.

இதைக்கேட்ட தர்மாம்பாள் சமய சௌகரியங்களுக்குத்தக்கபடி நடந்துகொள்ள இடங்கொடாத தனது அஞ்ஞானத்தைப்பற்றி மனஸ்தாபத்தையடைந்து உடனே கீழிறங்கிப்போய் இவளது வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்த கௌரியம்மாளா லளிக்கப்பட்ட ஆகாரத்தையுண்டு "அம்மாமி நீ பிறருதவியில்லாமல்வேலைசெய்வதால் எனக்கு ஏதாவது வேலைகளைக்கொடு, நான் செய்கிறேன்" என்றாள். சுந்தரம், கௌரியம்மாள் தனியே வருந்துவதைப் பார்க்க முடியாமல் தர்மாம்பாள் சீக்கிரம்போய் ஆகாரஞ்செய்துவிட வேண்டுமென்று அவ்வாறு சொன்னதேயன்றி வாஸ்தவத்தில் தர்மாம்பாளிடத்தில் அவளம்மாமிக்கு எள்ளளவேனும் வெறுப்பில்லை. ஆகையால், கௌரியம்மாள் தர்மாம்பாள் வார்த்தையைக்கேட்டு "குழந்தாய் என்ன அப்படிப் பிரமாதமான சமயம் வந்துவிட்டது, உன்னைக்கூட வேலையில் ஏவும்படி; இப்போது நீ கவலையின்றி வாசித்துக்கொண்டிரு. நீ உன் புக்ககத்திற்குப் போனபிறகு நானங்கேவந்தேனானால் நீ வேலைசெய்து என்னை உட்காரவைத்துச் சாப்பிடும்படிசெய்" என விடையளித்தனள். இதைக்கேட்ட தர்மாம்பாள் களிப்புடன் மறுபடியும் மாடியைப்பார்க்கவருகையில் கொல்லைப்புரத்தில் இருந்த ஜானகியம்மாளுடன் வேறொரு விதவையம்மாள் பேசிக்கொண்டிருக்கக்கண்டு அவ்விடம்போய் அந்தப் புது அம்மாளிடம் சற்றுநேரம்

பேசிக்கொண்டிருந்துவிட்டு மறுபடியும் மாடிக்கு வந்து "அண்ணு! அம்மாவின் நநாந்தாவின் புத்திரி சுப்பு வந்திருக்கிருள்.

சுந்த:—மதுரையிலிருக்கிருளே அவளா?

தர்மா:—ஆமாம்,

சுந்த:—என்ன விசேஷமாய் வந்திருக்கிருள் தெரியுமா?

தர்மா:—அதையெல்லாம் நான் விசாரிக்கவில்லை, அவள் கொல்லைப்பக்கத்தில் அம்மாவுடன் பேசிக்கொண்டிருந்தாள், என்னைக்கண்டதும் என்னிடம்வந்து ஒரு சங்கதிசொன்ருள்.

சுந்த:—என்ன சங்கதிசொன்ருள்; எனக்கும் தெரியலாமோ அந்தச்சங்கதி?

தர்மா:—உங்களுக்குத் தெரியாமற்கூட எனக்கு ஒரு சங்கதியுண்டோ? நீங்கள் பேசுவதெல்லாம் விசித்திரமாகவே இருக்கின்றது.

சுந்த:—ஆனல் அந்தச்சங்கதியைச்சொல்லு?

தர்மா:—ஒரு சங்கதியுமில்லை, நம்மிருவரிடத்தில் பாமரகஸியமாய் ஒரு சமாசாரம் சொல்லவேண்டுமாம், அது அம்மாளுக்குக்கூடத்தெரியக்கூடாதாம், எப்போதுசௌகரியமென்று கேட்டாள். அண்ணுவைக்கேட்டு பதிற்சொல்லுகிறேனென்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்.

சுந்த:— அப்படியானல் இதுவே நல்ல சமயமெனநினைக்கிறேன். அம்மாளும் இங்கு வரக்கூடிய ஸ்திதியில் இருக்கவில்லை. கிராமாந்தாம் போயிருக்கும் மாமாவும் பன்னிரண்டுமணிக்குத்தான் வருவார்; அம்மாமிகிருககிருத்தியத்தில் ஆகுலையாயிருக்கிருள். உனக்கு என்னதோன்றுகிறது?

தர்மா:—எனக்கும் அப்படியே தான் தோன்றுகிறது அழைத்துவாலாமா அவளை?

சுந்த:—போ, சீக்கிரம் அழைத்துவா.

இதைக்கேட்ட தர்மாம்பாள் உடனே கீழிறங்கிச்சுப்புவை யழைத்துவரச்சென்றாள். அதற்குள் சுந்தரம் பின்வருமாறு மனதுக்கு வேலைகொடுத்தான். "சுப்புவுக்கு எங்களிருவரிடத்தில் மாத்திரம் சொல்லக்கூடியதான ரகஸியம் என்னவாக இருக்கலாம்; அவளுக்கு ஸாக்ஷாத் அம்மான் ஸம்ஸாரமாகிய அம்மாளுக்குக்கூடத்தெரியக்கூடாதென்பது விந்தையாய்த்தோன்றுகின்றது; அம்மாளாலல்லவா அவளுக்கு நாங்கள் உறவு; அப்படியிருக்க எங்களுக்குத் தனியாய்ச் சொல்லக்கூடியதானல் அதிலேதாவது விசேஷமிருக்கவேண்டும். நமது தகப்பனார்வீட்டில் கணக்குவேலைபார்த்துவரும் சுந்தரமய்யருக்குச்சமையல்செய்துபோட்டுக்கொண்டும் பிள்ளையைப்பள்ளியில்படிக்கவைத்துக்கொண்டும் இவள் மதுரையில் இருக்கிறாளென்று தெரியவருகிறது; அந்தச்சுந்தரய்யர் மேல் நம் அம்மாளுக்கு நல்லஎண்ணம்இல்லை; அவன்பெயரை எடுத்துவிட்டால் அவள் சீறிவிழுகின்றாள். நமக்குக் காரணம் விளங்கவில்லை. ஆகையால், மதுரையில் நமது வீட்டிலோ அல்லது இவளிருக்கும் சுந்தரய்யர் வீட்டிலோ ஏதாவது விசேஷம் நடந்தேயிருக்கவேண்டும்; அதுவும் எங்களிருவருக்கும் சம்மந்தப்பட்டதாயிருக்கவேண்டும்; அம்மாளுக்குத் தெரிந்தால் அவளுக்குப் பலமான மனஸ்தாபத்தையுண்டாக்கக்கூடியதா யிருக்கவேண்டும். வெளியிற்றெரிந்தால் மானப்போகக்கூடியதாயிருக்கவேண்டும்; அதனாற்றானிவள் நம்மிடம் ரகஸியம் சொல்லவந்திருக்கிறாள்" என்று யோசித்துக்கொண்டிருக்கையில், தர்மாம்பாள் முந்தியும்

சுப்பு பிந்தியும் வந்தார்கள். தர்மாம்பாள் மாடிக்குவரும் வழியிலுள்ள வாயிற்படியின் கதவைத் தாட்பாளிட்டுவந்தாள்.

சுந்தரம் சுப்புவைக்கண்டவுடன் நாற்காலியைவிட்டிறங்கி "சுப்பு வா? இப்படியுட்காரு" என்று ஒரு நாற்காலியைக்காட்டினன். "எனக்கு நாற்காலியிலுட்கார அந்தஸ்துமில்லை பழக்கமுமில்லை" என்றுசொல்லித் தரையிலுட்கார்ந்தாள். உடனே இவர்களும் தரையிலேயே உட்கார்ந்தவுடன் சுந்தரம் சுப்புவைப்பார்த்து, சுப்பு எப்போது வந்தாய்?

சுப்பு:—வந்து ஒருநாழிகையாச்சு.

சுந்த:—மதுரையிலிருந்துதானே?

சுப்பு:—மதுரையிலிருந்துதான்.

சுந்த:—எங்கள் கிருகத்தில் எங்கள் பிதா முதலானவர்கள் எல்லாரும் சௌக்கியந்தானே?

சுப்பு:—ஆம், எல்லாரும் சௌக்கியம்.

சுந்த:—எங்கள் பிதா நம் தர்மாம்பாள் கலியாணம் இவ்விடமே நடக்கலாமென்றும் தாங்களெல்லாரும் முந்தியே வந்துவிடுவதாயும் சங்கரசாஸ்திரிகளிடம் சொல்லியனுப்பியிருக்கிறார். அவரிவ்விடத்திற்கு எப்போது வருவாரோ அது உனக்குத்தெரியுமா?

சுப்பு:—முப்பதாந்தேதியல்லவா கலியாணமாம். இன்னிக்குத் தேதி பதிமூணுதானே என்ன அவசரம்.

சுந்த:—சரி, சௌகரியம்போல் வரட்டும், அவர்கள்வந்துதான் ஆகவேண்டுமெனக் கூடியகாரியமொன்றும் இவ்விடத்தில் இல்லை. அதிருக்கட்டும் நீ இவ்விடம்வந்த காரியம் ஏதாவதுண்டோ?

சுப்பு:—ஒருகாரியமுமில்லை. உங்களைப்பார்த்து வெகு நாளாணபடியால் பார்த்துப்போகலாமென வந்தேன்.

சுந்த:— இப்போதுதான் உனக்கு எங்கள்மேலுள்ள பிரீதி வெளியாயிற்று; நீ எப்போதும்போல் உனதத்தான் வீட்டில் தானே இருக்கிறாய்?

சுப்பு:—மூன்தாநாள் இராத்திரி வரையிலிருந்தேன்.

சுந்த:—இப்போது?

சுப்பு:—இப்போது புதுத்தெருவில் ஒருவீட்டில் குடியிருக்கிறேன்.

சுந்த:—அதற்குக் காரணம்?

சுப்பு:—காரணந்தான் ரகஸியம். அதைச்சொல்லவே இவ்விடம்வந்தேன். சொல்லச்சொன்னையானால் சொல்லுகிறேன்.

சுந்த:—சொல்லத் தடையில்லை சொல்லு?

சுப்பு:—சொல்லத் தடையொன்றுமில்லைதான், நான் சொல்லும் சமாச்சாரம் எக்காரணத்தாலும் உங்களிருவரைத்தவிர வேறொருவரையும் அணுகலாகாது. நீங்களும் பதரக்கூடாது. என்பேரிலும் மனஸ்தாபப்படக்கூடாது. அவ்வளவுக்குச் சம்மதமானால் சொல்லுகிறேன்.

சுந்த:—சுப்பு பயப்படாதே, நீ கேட்ட மூன்று வரன்களையும் தருகிறேன், தாராளமாய்ச் சொல்லு, நீயேன் அந்த வீட்டைவிட்டுப்போனாய்.

சுப்பு:—எனக்கும் சுந்தரனுக்கும் மூந்தாநாள் ராத்திரி சண்டை.

சுந்த:—சண்டைக்குக் காரணம்?

சப்பு:—அவன் நடத்தை எனக்குப்பிடிக்கவில்லை.

சுந்த:—ஏன் பிடிக்கவில்லை?

இதைக் கேட்டவுடன் சப்பு தன் மடியிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்துச் சுந்தரத்தினிடம் கொடுத்து, தர்மாம்பாள் காதிற்கு மாத்திரம் கேட்கும்படி மெதுவாய் "அதிலுள்ளதைப் படித்துப்பார்" என்று சொன்னாள். சுந்தரமதைப் பார்த்துப் பின்வருமாறு வாசித்தான்.

"எனதாசைக்கும் அருமைக்கு முரிய கண்ணாளனாகிய சுந்தரா! நீ யென்னை யுண்மையாய்க் காதலிப்பதற்குச் சாக்ஷியும் அகில லோகாந்தர்யாமியுமான ஈசுவரன் பின் காணப்பட்ட சில வரிகளை உன் பொருட்டெழுத என்னைத்தூண்டிய வைத்திருக்கிறார். நாமிருவரும் களிப்புடன் கூடிக்குலாவி ஆனந்த பரவசர்களாகவேண்டியதற்காக ஈசுவரன் இரவில் மூன்று மணிக்கு மேற்படாத காலத்தையே கொடுத்திருக்கிறார். நிலையற்ற இந்த யௌவனத்தைப் படைத்த ஈசனுக்கு அதைக் களிப்புடன் கழிக்கக் காலத்தை யமைக்க மனமில்லையோ அல்லது புத்தியில்லையோ தெரியவில்லை. ஆகையால் ஈசனை அதிக்கிரமித்து எமது யௌவனத்தை மிதமீறிய ஆனந்தத்துடன் கழிக்கவேண்டியதென்பது எனது சங்கற்பம்; நான் மேற்கூறிய மூன்று மணிகாலந் தவிர மற்ற காலங்களில் உனக்குமெனக்குமுள்ள காதலை எக்காலத்திலும் எத்தேசத்திலும் எவ்வகையிலும் காட்டிக்கொள்ளமுடியாமல், நான் யஜமானியாகவும் நீ வேலைக்காரனாகவுமே பாவித்துக் கொண்டு காலங்கழிப்பது என்மனதை வருந்தச்செய்கிறது; இந்த ஆயுளில் கொஞ்சமாவது நீயும் நானும் பகிரங்கமாய் இராப்பகல் என்ற பேதமில்லாமல் உல்லாசத்துடன் நமதிஷ்டப்படி வெளியிற்போகவும் வீட்டில் வந்து சுகித்திருக்கவும்

விரும்புகிறேன்; அதற்கு இந்தத்தாபகாலமாகிய வைகாசிமாசத்தைத் திருக்குற்றாலத்தில் நாமிருவரும் கழிப்பதே போதுமானது; எனது பிறந்த வீடு போகவேண்டியதாய்ப் போக்குச் சொல்லிவிட்டு நான் வந்துவிடுகிறேன்; இதற்கு நீ தக்ககாலத்தைக் குறிப்பிட்டு இன்றாத்திரி செல்லாமென்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அதற்குப்பிரதிப் பிரயோஜனமாக இத்துடன் எனது ஆயிர முத்தங்களையனுப்பியிருக்கிறேன்; இதற்குப்பதிலான முத்தங்களை யனுப்புவாயாக.

இப்படிக்குனது காதலி
மீனாக்ஷி.

இதை வாசித்த சுந்தரமும் கேட்ட தர்மாம்பாளும் அநேககாலம் அசைவற்றிருந்தார்கள்; மனசு பலபல என்னங்களை யெண்ணிற்று. உடனே இருவருக்கும் முகம் வியர்த்தது.

சுந்த:—இக்கடிதத்திற்கண்ட மீனாக்ஷியும் சுந்தரனும் யாரென்று நீ யறிவாயா?

சுப்பு:—நானெவ்விதமறியக்கூடும்? எழுதும்போதாவது கடிதம் சேர்ப்பிக்கப்படும் போதாவது நான் நேரிலேபார்த்திருந்தால் நிச்சயமாய் ஒருவரையாவது சொல்வேன்.

சுந்த:—இது எவ்விதம் உனக்குக் கிடைத்தது அதையாவது சொல்ல முடியுமா?

சுப்பு:—முடியாமல் என்ன? இந்தக் கடிதத்தை எனது அத்தான் சுந்தரன் தனது கைப்புத்தகத்தில் வைத்திருந்தான்; அவன் ஒருநாள் ஏதோ ஒரு அவசரமாய்த் தனதறையினின்றும் வெளியே போகும் போது இதை நழுவவிட்டுப் போய்விட்டான்; நான் அதைப் பிரித்துப்படித்துப் பார்த்துவிட்டு ஜாக்கிரதையாய் வைத்திருந்தேன்.

சுந்த:—இதிற்கண்ட சுந்தரன் அவனாகத் தானிருக்க வேண்டும், அல்லது இதே பெயருள்ள வேறு யாருக்காவது அனுப்பப்பட்டலெட்டர் தவறி இவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

சுப்பு:—நீ சொல்வது சரிதான், இந்தக்கடிதம் தபால் மூலமாய் கொடுக்கப்பட்டிருந்தால் அவ்வாறு நிச்சயிக்கலாம், அப்படியில்லையே.

சுந்த:—ஆம், இதில் முத்திரை ஒன்றையும் காணோம், விலாசமும் "எனது அருமைக் காதலன் சுந்தரம் கையில் கொடுப்பது" என்றெழுதியிருக்கிறது; இப்படி விலாசமிட்ட கடிதங்கள் போஸ்டாபீஸ் மூலமாய் டெலிவெரி செய்யப்படமாட்டா? ஆகையால் இதிற்கண்ட சுந்தரன் அவனே என்று நம்பவேண்டியதாயிருக்கிறது; மீனாக்ஷி யாரென்று கண்டுபிடித்தாயோ ?

சுப்பு:—அதுதானெப்படி முடியும் ?

சுந்த:—நீ சங்கோசப்படுகிறாய் சொல்ல, நாங்கள் உன் குழந்தைகளை தவிர வேறில்லை; மேலும், நீ சொல்ல வந்த சமாசாரங்களைத் தெரிந்து கொள்வதால் எங்களுக்கு ஹிதமிருக்கிறதென்பது எனது நம்பிக்கை. இருக்கட்டும், இந்தக்கடிதம் கிடைத்தபிறகு நீ என்ன செய்தாய்?

சுப்பு:—அப்படி வார்த்தையை யெடுத்துக் கொடுத்தாயானால் நான் சொல்வேன், புத்திசாலிகளுடன் பேசுவதில் இதுதான் சுகம்.

சுந்த:—சரி பிறகு சாவகாசமாய் என்னை ஸ்தோத்திரம் செய்யலாம், காரியம் கலங்கி நிற்கின்றது, எனது கேள்விக்கு விடையளி.

சுப்பு:-சொல்லுகிறேன் கேள். சிற்சில சமயங்களில் உன் வீட்டின் சில தஸ்தாவேஜிகள் சில ரிகார்டுகள் இந்த சுந்தரனிடம் தங்கியிருக்கும் வழக்கமுண்டு; அவைகளை இவன் இராப்போஜனமானபின்பு எடுத்துக்கொண்டு போவதுண்டு; அப்படி யெடுத்துக்கொண்டு போகக்கூடியவை யொன்றுமில்லாவிட்டாலும் பிரதிதினமும் ராத்திரி 10-மணிக்கு வெளியே போய் மறுபடி 3-மணிக்குத் திரும்பிவந்துவிட்டுத் திண்ணையிற் படுக்கிற வழக்கம். இவ்விஷயத்தில் எனக்குச் சந்தேகமிருந்தாலும் புருஷன் எப்படியிருந்தாலும் தகுமென்று மௌனமாயிருந்தேன். இந்தக் கடிதம் கிடைத்த மறுநாள் இரவில் வழக்கப்படி அவன் போஜனம் செய்து வெளியே போகும்பொழுது அவனறியாமலே அவன் பின் சென்று அவன் உங்கள் வீட்டிற்குப் போனதையும் அவனுக்காக வாயிற்படியில் காத்துக் கொண்டிருந்த மீனாக்ஷி எதிர்கொண்டுவந்து, கண்ணே முத்தேயென்று கொஞ்சி யழைத்துப் போனதையும் என் கண்ணாற்கண்டு திரும்பினேன். அன்று முதல் யஜமானத்துரோகியென்கிற காரணத்தால் எனக்கவனிடம் நல்லெண்ணமில்லை.

இச்செய்தியைக்கேட்டதும் சுந்தரத்திற்கும் தர்மாம்பாளுக்கும் முகம்சிவந்தது, உதடுதுடித்தது,நெற்றிவியர்த்தது, மார்பும் படபடத்தது; "அநியாயமாய் நற்குலத்திற்கு அழியாத அபகீர்த்தியைக் கொடுத்தனையா பாவி" என்று அலறினான் சுந்தரம். இதைப்பார்த்த சுப்பு அவனைத் தேற்றி மேலெவ்வளவோ சொல்லவேண்டிய விசேஷங்களிருக்க இம்மட்டிற்கேகேட்ட நீ இவ்வளவுகலங்கிநிற்கின்றாயே, நானெப்படி மீதி சமாசாரத்தைச் சொல்லுவேன் என்றாள்.

சுந்த:—சுப்பு! அநியாயமாய் மாசற்ற எங்கள்குலத்தைக் கெடுத்துவிட்டாளே பாவி யென்று துக்கமும் கோபமும்

என்னை மீறி வந்துவிட்டதை உன் வார்த்தைகளால் அடக்கிக்கொண்டேன்; மேலே சொல்லு. முந்தாநாளிரவில் நடந்த சண்டைக்குக் காரணம் என்ன?

சுப்பு:—அதையும் சொல்லுகிறேன், படபடப்பன்றிக் கேள்; அவன் பிள்ளையும் என்பிள்ளையும் 4-வருஷங்களுக்கு முன் 1-வது கிளாஸில் சேர்ந்து படித்து வந்தார்கள். இப்போது என் பிள்ளை 5-வது கிளாசில் படிக்கிறான். அவன் பிள்ளை 2-வது கிளாஸில் படிக்கிறான். இப்பொறாமையால் அவன் என் பிள்ளையைக்கண்டால் அகாரணமாகவே சீறிச்சீறி விழுவான். வாயில் வந்தபடி திட்டுவான்; சிற்சிலசமயம் அடிக்கவுமடிப்பான். நான் இச்சம்பவங்களை வெகு நாள் வரையில் பொறுத்தேவந்தேன்; முந்தாநாள் ராத்திரி வழக்கம்போல் என் பிள்ளை படித்துக்கொண்டிருக்கையில் திருமங்கலத்திலிருந்து வந்த யாரோ ஒருவன் அவனுக்குப் பெண்ணைத் திட்டம் செய்திருப்பதாயும், மறுவிவாகத்திற்குக் காலம் கேட்டுக்கொண்டு போக வந்ததாயும் சொன்னான்; அதைக்கேட்ட ஆநந்தத்தில் அவன் என்பிள்ளை உரக்க வாசிக்கிறானென்று பலவாறாக அதட்டிப்பேசி அவனை அடிக்கவும் போனான். அப்பொழுது நான் குறுக்கேவந்து சாந்தமாய்ச் சொன்ன சமாதானங்களை யவன் கேளாததைச்கண்டு "இனியென்பிள்ளை உன் தயவில் வாசிக்கவேண்டா மென்றும் இனி எங்களிருவரையும் நீ ரக்ஷிக்கவேண்டாமென்றும்" நான் சொன்னதற்கு, அவன் பல சகிக்கமுடியாத வார்த்தைகளைச் சொல்ல, நானும் கோபம் கொண்டு அவனுக்கு மீனாக்ஷிக்குமுள்ள ஸ்னேகத்தன்மையும் அந்தக்கடிதத்தின் சமாசாரத்தையும் ஒரு ராத்திரி நான் ரகஸியம் கண்டு பிடித்ததையும் வெளியிட்டுவிட்டேன். அதனால் அவன் கோபம் அடைய அவனிடமிருந்து 5-6-அடிகளையையும் உதையையும் வாங்கிக்கொண்டேன்.

சுந்தரம்:—சரி, பிறகு என்ன நடந்தது? கலியாணத்தைப் பற்றி என்ன ஏற்பாடு செய்தான்?

சுப்பு:—பிறகு வந்தவனுக்கு நான் நாளையதினம் நேரில் திருமங்கலம்வந்து பேசிக்கொள்ளுகிறேனென்று சொல்லியனுப்பிவிட்டு 11-மணிக்குமேல் அவன் வழக்கப்படி உங்கள் வீட்டிற்குப் புறப்பட்டான். நானும் அவனறியாமல் அவனுடன் போனேன். அன்று காலதாமதமாய் விட்டதால் மீனாக்ஷி வாயிலில் வந்து அவனை யெதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். இவன் போனதும் அவள் வந்து அழைத்துப் போகையில் வழக்கப்படி வாயிற் கதவைத் தாழ்ப்பாளிட மறந்து போய்விட்டபடியால் நானும் உள்ளே நுழைந்தேன்.

சுந்தரம்:—அப்படியா ? உள்ளே நடந்த விசேஷமென்ன ?

சுப்பு:—அங்கே நடந்த விஷயங்களைச் சொல்ல இப்போது சாவகாசமுமில்லை; அது நமக்கிந்தச் சமயம் அவசியமுமில்லை. காரியத்தை மாத்திரம் சொல்லுகிறேன். அது உனக்கிஷ்டமா ?

சுந்த:—சப்பு! தெரியவேண்டிய சங்கதி தெரிந்தாய் விட்டது, இனி வளர்த்தலால் என்ன பிரயோஜனம் ? காரியத்தை மாத்திரம் சொல்;

சுப்பு:—இருவரும் முதலில் கொஞ்சநேரம் கொஞ்சி பிறகு சுந்தரன், "துஷ்ட முண்டையான சுப்புவை வீட்டை விட்டுத் துரத்திவிடவேண்டுமென்றும், பிறகு அவனுக்குச் சமைத்துக்கொட்டத் திருமங்கலத்தில் பார்த்திருக்கிற பெண்ணைத்தான் கலியாணம் பண்ணிக்கொள்ளச்செலவுக்கு கொடுக்கவேண்டு" என்றும், தனது ஆசைநாயகியைக் கேட்டான்.

அதற்கவன் இவனுக்கு விவாகம் செய்து வைத்துவிட்டால் தன்னை மறந்துவிடுவானெனப் பயந்து அவனுடைய வீட்டிற்கு ஸ்திரீ சௌகரியம் வேண்டியதவசியமாயிருப்பதால் பெரிய பெண்ணாக ஒரு பெண்ணைப் பார்த்து அவனுடைய பிள்ளை கிட்டுவென்கிற அற்புத விக்கிரகத்திற்குக் கலியாணம் செய்து வைக்கவேண்டியதென்றெண்ணித் தன் எண்ணத்தைக்கூறப் பிறகு இருவரும் அப்படிப்பட்ட பண் தர்மாம்பாள் எனவே நிச்சயித்தார்கள்.

தர்மாம்பாள் (கண்ணீருடன்) "ஆ! என்னையா குழியிற் றள்ளப் பார்த்தார்கள்?" என்று சொல்லிக் கீழே விழுந்தாள். உடனே சுந்தரம் அவளை யெடுத்தணைத்து முகத்தில் ஜலத்தைத்தெளித்து, "தர்மீ! பயப்படாதே, உன்னை நானுள்ள வரையில் அப்படிப்பட்டவரனுக்குப் பாணிக்ரகணம் செப்ய விடம்கொடேன், தைரியமாயிரு, பாக்கியிருக்கிற சங்கதிகளையும் கேட்போம்" என்று தைரியப் சொல்லி சுப்புவைப்பார்த்து. பிறகு நடந்ததைச் சொல்லெனக் கேட்டான்.

சுப்பு:—பிறகு அந்தகாதகன் என் குற்றங்களைச்சொல்ல அதற்காக அவர்கள் மறுநாள் இராத்திரி என்னைக்கொலை செய்துவிடுவதாய்த் தீர்மானித்தார்கள்.

சுந்த:—பேஷ்! யோசனைகளெல்லாம், ரொம்ப நன்றாயிருக்கின்றன, பிந்தியமுடிவைச்சொல்லு?

சுப்பு:—நானுடனே நடந்த விஷயங்களைச் சுருக்கமாய் 4 வார்த்தைகளில் ஒரு சிறு துண்டுக்கடிதத்திலெழுதி அதையுங்கள் தகப்பனர் உட்கார்ந்து பேபர்வாசிக்கும் அறைக்குள் ஜன்னல் வழியாய் எறிந்து விட்டு வீட்டிற்குவந்து, முன்னமேயே புதுத்தெருவிற் பார்த்திருந்தவீட்டிற்கு என்சாமான்களுடனும் பிள்ளையுடனும் போய்விட்டேன்.

சுந்த:—சரி, நீ போனபின்பு எங்கள் வீட்டில் தீர்மானித்திருக்கிற சங்கதிகளையறிய இனி நான் முயலவேண்டுமே, அதையெப்படிச்செய்யலாம்?

சுப்பு:—அரைகுறையாய்த் தெரிந்துகொண்ட சமசாரத்தை உங்களிடம் சொல்லி உங்கள் மனதைக் கலக்கிவிட வந்த பேதையென்று என்னை யுங்களைப்போன்ற அறிஞர் கூட நினைத்தால் அறிவிலிகள் என்ன நினைப்பார்கள்?

சுந்த:—நானவ்வாறு உன்னை நினைக்கக்கூட விடமில்லை. உன்னை நல்ல புத்திமதியென்று அம்மாள் அடிக்கடிச்சொல்லியிருக்கிறுள், மேலேற்பட்டமுடிவுகளை நீயெவ்வாறு தெரிந்துகொண்டாய்?

சுப்பு:—சுந்தானும் மீனுக்ஷியும் தங்களிருவருக்குமுள்ள பரஸ்பரானுராகத்தைத் தங்களைத்தவிர வேறொருவரும்அறியாரென்று நினைத்திருந்தாலும், அவ்வீட்டில் வேலை செய்யும் ஒவ்வொருவரும் அறிவார். ஆனல், அவள் யஜமானியாயும் தாங்கள் பிருத்தியர்களாகவும் இருப்பதால் பஹிரங்கமாய்ச் சொல்லச் சங்கிக்கிறுர்கள். கேட்டதில்லையா நாம்? “பணக்கார அவிசாரி பந்தியில்! ஏழையவிசாரி சந்தியில்” என்று. இவ்விருவருக்கும் தௌத்தியஞ்செய்ய சின்னுத்தாள் என்று ஒரு சூத்திர ஸ்திரீ அவ்வீட்டிடனிருக்கிறுள்; அவளுக்கும் அவ்வீட்டுக் கார்யஸ்தர்களில் ஒருவனுகிய பாஸ்கரனுக்கும் அந்தரங்கநேசம் உண்டு. அவள் சம்மந்தமாய் அவ்வீட்டில் வேலைபார்த்துவரும் கனகசபைபிள்ளை என்கிறவனுக்கு அந்த பாஸ்கரனிடம் விரோதமுண்டு. அந்தக் கனகசபைபிள்ளை என் வீட்டிற்கெதிர் வீட்டிற் குடியிருக்கிறுன். அவனுக்கு விட்டில் ஸ்திரீ ஸாமக்ரிகுறைவு, அதனல் அவனுக்கு நான் சிற்சிலகாலங்களில் வீட்டில் மிகுந்த சாதத்தைப்போடு

வதும் தீர்த்தம்கொடுப்பதுமுண்டு. நான் சுந்தரனுடைய ரகஸியத்தையறிந்த பிறகு இந்தக் கனகசபைப்பிள்ளையைத் தந்திரமாய் உத்ஸாகப்படுத்தி அந்தவீட்டில் ஒவ்வொரு நாளும் நடக்கும் ரகஸியங்களை யறிந்து வந்தேன். நேற்றுக் காலமே அவனைக் கூப்பிட்டு மாலை 5 - மணிக்கு உங்கள் வீட்டில் நடக்கும் ஒவ்வொரு சங்கதியையும் எனக்கு விவரமாய்த் தெரியப்படுத்தவேண்டுமென்று சொல்லியிருந்தேன். அந்தப்படியவன் 5-மணிக்குவந்து சகல சமாசாரமும் தெரிவித்தபின் ராத்திரி 8-மணிக்கு என் பிள்ளை உமாகாந்தனை அவனுடன் வாசிக்கிற வேறொருபையன் வீட்டில் 2-நாள் இருக்கும்படியனுப்பிவிட்டு நான் ரெயிலேறி இவ்விடம் வந்தேன்.

சுந்த:—சரி! நீ சொல்வதை நம்ப இடமிருக்கின்றதென்று நிச்சயித்துக்கொண்டேன், இனிச்சொல்லவேண்டிய விஷயத்தைச் சுருக்கமாய்ச் சொல்.

சுப்பு:—சுருக்கமாயில்லாமல் விஸ்தாரமாய்ச் சொல்லக்கூடிய விஷயமிதுவல்ல வென்பது எனக்கும் தெரியும், சொல்லுகிறேன் ஸாவதானமாய்க் கேளுங்கள்; உங்கள் சிற்றன்னை மீனாக்ஷிக்குப் பட்டாபியென்றொரு தமயனிருப்பது உங்களுக்குத்தெரியுமல்லவா?

சுந்த:—ஆம் தெரியும், அவன்தானே சொத்தெல்லாம் வேசிகளுக்கிட்டழித்துவிட்டு இப்போது திண்டாடுகிறான்.

சுப்பு:—ஆம் அவனுக்கொரு பெண்ணிருக்கிறது. நானுமந்தப்பெண்ணைப் பார்த்திருக்கிறேன். அவளை வர்ணிக்க இதுசமயமுமல்ல, முடியவும்முடியாது. அவளழகைக்கண்டு சூர்ப்பணகியைத் தவிர ராவணனுக்கு மற்றொரு தங்கை

யிருக்கிறளெனவே சொல்லலாம்; அவளுக்கிப்போது 13 அல்லது 14 வயதிருக்கலாம்; அவளைப் பார்த்தவர்கள் அவளைப் பரிபக்குவமான பெண்ணென்றே சொல்ல அஞ்சார்கள். அவளுடைய பிதாவான பட்டாபிராமன் இப்பூமண்டலம் முழுமையும் அலைந்துபார்த்தும் ஒருவராவது அவளை விரும்பிக் கலியாணம் பண்ணிக்கொள்ள இசையவில்லை; கடைசியாகத் தர்மாம்பாளை இப்போது கொடுப்பதாய் நிச்சயித்திருக்கும் தர்மனுக்கு அவளைக் கொடுத்துவிடுவதாய்க் குளித்தலைக்குப்போய் ஸாவித்ரீ யென்னும் அவன் தங்கையிடம் கூடியமட்டில் கெஞ்சிப் பார்த்தானும்; அவள் நிராகரித்துவிட்டாளாம்.

ஸாவித்ரீயிடம் மீனுட்சிக்குக் கொஞ்சம் பொருமையுண்டு. அதையறிந்த அந்தத் தூர்த்தன் மீனுக்ஷியிடம்வந்து "எனதுபெண் கமலத்தை உனக்கு மூத்தாள் குமாரனை சுந்தரேசனுக்குக்கொடுத்துக்கலியாணஞ்செய்துவிடவேண்டும், எனப் பிரார்த்தித்ததின் பேரில், அவளும் எப்படியாவது ஸாவித்ரீக்கு விரோதமான காரியத்தை முடிக்க விரும்பி அவ்வாறே முடிப்பதாய்ச் சொல்லித்தனது பவுன் மாலையை அவனுக்குச் செலவுக்காகக் கொடுத்துவிட்டு, உங்களுக்குத் தகப்பனும் பரம ஸாத்விகஸ்வபாவத்துடன் "வெளுத்ததெல்லாம் பால்" என்று நினைக்கிறவருமான புருஷோத்தமய்யரிடம் தனுக்குடன் போய் அமிருதரஸதுல்யமான வார்த்தைகளால் அவரை மயக்கி, தர்மாம்பாளை கிட்டுப்பயலுக்கும் கமலத்தை உனக்கும் கொடுத்து இரண்டு கலியாணங்களையும் இம்மாதம் 30-யில் மதுரையிலே நடத்திவிடவேண்டியதென்றும் தீர்மானித்து புருஷோத்தமய்யர் சம்மதத்தையும் வாங்கிவிட்டாள்.

இவ்விஷயங்களை நான் கனகசபை பிள்ளையிடமிருந்து அறிந்தேன். உங்களுக்கு உடனே இவ்விஷயங்களைச் சொல்லி முன் ஜாக்கிரதை செய்ய உடனே இவ்விடம் வந்தேன். மேலும் சுந்தரன் பாஸ்கரன் என்ற இரண்டு மகா பாதகர்களும் நேற்று ராத்திரி என்னைக் கொலை செய்துவிடப்போகிறதாகவுந் தெரியவந்தது; அதற்காகப் பையனை அப்புறப்படுத்திவிட்டு நானும் அவ்விடத்தில் இராத்திரித் தங்காமல் இவ்விடம் வந்துவிட்டேன். எனக்கு ஒன் கவலையில்லை. உங்களைக் கொண்டு எவ்வித ஆபத்தினின்றும் தப்பலாமெனத் தைரியமுண்டு; நீங்களிருவரும் படித்து புத்திசாலித்தனத்தோடு நல்லொழுக்க முள்ளவர்களாயிருப்பதால் மாதிரு பிதுருவாக்கியத்திற்கு அந்யதா சொல்ல மாட்டீர்களென்ற நம்பிக்கையால் அந்தப்பட்டிமுண்டை இப்படியெல்லாம் உங்களிருவரையும் கெடுக்க ஏற்பாடு செய்துவிட்டாள். அதுவே எனக்குத் தாபத்தைத் தருகின்றது. இனி உங்கள் பதிலையெதிர் பார்க்கிறேன்; நான் சொல்லவேண்டிய விஷயம் சொல்லியாய்விட்டது.

இதைக் கேட்ட சுந்தரமும் தர்மாம்பாளும் தர்மாதர்மங்களையும் நியாயா நியாயங்களையுமறிந்த நமது பிதாவே இப்படி நம்மைக்கெடுக்க வேற்பாடு செய்தாரானல் நம் கதி பிறகெப்படியாகுமோ என்று தயங்கினர்கள்; ஸ்தம்பம் போல் நின்றார்கள். இனிச் செய்யவேண்டிய காரியமின்னதென்று மனதிற்றோன்றாமல் க்ஷணகாலம் மயங்கினர்கள்.

தர்மா:— அப்பா! என்னைக் கெடுத்ததல்லாமல் அண்ணாவையும் கெடுக்கவா யோசித்துவிட்டார்கள். ஐயையோ நாங்கள் எவ்விதம் இவ்வாபத்தினின்றும் மீளப்போகிறோம்;

அம்மா சுப்பு! பெண்ணாகப் பிறந்து அபலையாயும் அசக்தை யாயும் இருக்கிற என்னைத்தான் கழுத்தில் கல்லைக்கட்டி நடுச் சமுத்திரத்தில் தள்ள யோசித்தார்கள். புருஷர்களுக்கு சிரோ ரத்தினம்போல் விளங்கும் அண்ணாவுக்குக்கூட என்ன தைரியமாய் இவ்விதக் கேடு நினைக்க முயற்சித்தார்கள். அவர்களெண்ணம் இக்கலியுகம் கிருதயுகமாகமாறினும் நிறைவேறாது என்பது திண்ணம். நாங்களுத்தேசித்திருக்கிற உத்தமோத்தம வரனைத்தவிர வேறுவரன் தேவராஜனாக விருந்தாலும் நான் வாழ்க்கைப்பட உடன்படேன்; அண்ணாவும் என்னையப்படிக்கு விட்டுவிடமாட்டார்; அண்ணாவாலும் முடியாமற்போய்விட்டா லுயிரை மாய்த்துக்கொள்வேனேயல்லது அந்த மகானுபாவனைத்தவிர மற்றவனுக்கு என்கையைப் பிடிக்கக்கொடேன். அண்ணாவுக்கும் ஒரு பெண் நிச்சயமாய்த் தயாராயிருக்கிறது. அந்தக் கலியாணம் என் கலியாணத்தால் தடை செய்யப்பட்டிருக்கிறது. அந்தப்பெண்ணைவிட வேறொரு பெண் அண்ணாவின் கழுத்தில் மாலை போட நான் சம்மதிக்கமாட்டேன். அதற்கு ஒருவித இடையூறு ஏற்பட்டாலும் மாமாவைக்கொண்டு எப்படியும் சரிப்படுத்திக்கொள்ளவேண்டியதெனத் தீர்மானித்துவிட்டேன்.

சுப்பு:—அம்மா தர்மாம்பா! உனது அண்ணாவுக்குப் பெண் எவ்விடம் பார்க்கப்பட்டிருக்கிறது? இதுவரையில் எனக்குத் தெரியவில்லையே, அதைச் சொல்லு. நானும் தெரிந்துகொள்ளுகிறேன்.

தர்மாம்பாள் இதைக்கேட்டவுடன் சுந்தரத்தின் முகத்தைப்பார்த்தாள். அதையறிந்த சுந்தரம் நம் சுப்புக்குத் தெரியாத ரகஸியம் நமக்குள் ஒன்றும் வேண்டாம். ஸங்கி

நகமாக அவளுக்குச் சொல்லு. அவளும் நமக்கொரு சமயம் உதவியாக ஆனாலும் ஆகலாம்.

சுப்பு:—ஆனாலும் ஆகலாமென்று சந்தேகமாய்ச் சொல்லவேண்டாம், என் பிராணனுள்ளவரையில் உங்களுக்கனுகூலமான காரியங்களைச் செய்யத் தவறேன்.

தர்மா:—அப்படியானால் சொல்லுகிறேன்கேள். இந்த ஊரில் சுப்பராமய்யரென்று தாசில்தாரொருவ ரிருந்தார். சென்ற கார்த்திகை மாதத்தில்அவர் தாராபுரத்திற்கு மாற்றப்பட்டார். அவருக்கு இப்போதிருப்பவள் இரண்டாவது மனைவி. முதல் மனைவிக்கு ஒரு பெண்ணிருக்கிறாள். இந்த கிருகத்தில் நடந்தேறிய ஏதோ ஒரு விசேஷத்திற்கு மாமாவாலழைக்கப்பட்டு அவர் தன் ஸம்சாரத்துடனும் பெண்ணுடனும் வந்திருந்தார். அந்தப்பெண்ணுக்கு வயது சுமார் 10 அல்லது 11 தானிருக்கும்; அழகில் ரம்பை மேனகை முதலிய அப்ஸரஸ்திரீகளை ஜயித்தவள். வீணைவாசிப்பதில் ஸாக்ஷாத் சாரதாம்பாளே எனச் சொல்லவேண்டும்; குயில்போல் பேசுகின்றாள்; கிளிபோல் கொஞ்சுகின்றாள்; அன்னம்போல் நடக்கின்றாள், பாலியமானதால் வெட்கந் தெரியாமல் எல்லாருடனும் ரமணீயமாய் விளையாடிக்கொண்டிருந்தாள்; நன்றாகப்படித்துமிருக்கிறாள்; ஆனால் ஸம்ஸ்கிருதம் தெரியாதுபோலிருக்கிறது; அதுவும் சொல்லிக்கொடுத்தால் வந்துவிடும்.

அந்தப்பெண்ணின் பிதாவான தாசில்தார் அன்றுவின் ரூபத்தையும் குணத்தையும் வித்தையையும் சீலத்தையும் அறிந்து மகிழ்ந்து எங்களமாமாவிடம் போய் அன்றுவைத் தனது மாப்பிள்ளையாக்கிக்கொள்ளவேண்டுமெனப் பிரார்த்

கித்தார். பிறகு ஜாதகப்முதலானவை பார்த்துச் சரியாய் இருக்கின்றதெனத் தெரிந்ததின்பேரில் அண்ணு, அப்பெண்ணைத்தவிர மற்றப்பெண்களெல்லாம் சகோதரிகளென்று தீர்மானித்துவிட்டார் இதை நாளுருத்தியே யறிவேன்; என் மூலமாய் அண்ணுவின் அபிப்பிராயத்தை யறிந்த மாமாவும் சரியென்று சொல்லிவிட்டு என் கலியாணம் ஆனபிறகு அந்தக்கலியாணத்தை நடத்திவிடுவதாய்த் தீர்மானம் செய்திருக்கிறார். எங்கள் பிதா எவ்விதத்திலும் தனது அபிப்பிராயத்திற்கு விருத்தமாய் நடந்துகொள்ளமாட்டாரென்பது எங்கள் மாமாவின் கொள்கை. அந்த தாசில்தார் இந்தத் தைமீட்டை யில் இவ்விஷயத்தைப்பற்றித் ஒரு லெட்டரும் எழுதியிருக்கிறார், அதற்கு என் கலியாணம் முடிவு செய்யப்பட்டிருப்பதால் அதன் பிறகு இதற்கேற்பாடுசெய்யலாமென மாமா பதிலெழுதியிருக்கிறதாய்ச் சொன்னார், இது தான் சமாசாரம்.

சுப்பு:—சரிதான், அவர் ஸம்ஸாரம் இவ்விஷயத்தில் சம்மதிகொடுத்தாளா; உனக்குத்தெரியுமா?

தர்மா:—சுப்பு! அதைநானென்னவென்று சொல்வேன்; அந்த அம்மாளுக்கு சுமார் 20 அல்லது 22 வயதுதானிருக்கும்; உடம்பில் இனி இடமில்லையென்று சொல்லும்படி அணிந்துள்ள வைரமயமாக நகைகளின் டால் அடிக்கிறது. அழகில் அப்ஸரஸ் என்றே அவளைச்சொல்லலாம்; அவளுக்கும் 3 வயதில் ஒரு பெண்குழந்தையிருக்கிறது; அவ்வளவிருந்தும் தான் தாசில்தாருடைய பத்னீ யென்னும் பெருமை அணுவளவும் கூட இல்லாமல் எல்லாருடனும் கலகலவென்று பேசிக்கொண்டிருந்து கடைசியில் எங்கள் குழந்தையை உங்கள் கிருகத்திலே கொடுத்து இவ்வளவு படிப்பும் குணமும் சொத்தும், சீலமுமுள்ள உங்களை சம்பந்திகளாகச்செய்

துகொண்டோமாளுல் எங்கள் ஜன்மம் ஈடேறிவிடுமென்று சொல்லிப்போனுள். அவள் தன் பெண்ணுக்கும் மூத்தாள் பெண்ணுக்கும் பேதமறியாள் என நினைக்கின்றேன்.

சுப்பு:—அந்தம்மாள் யாரென்று உனக்குத்தெரியுமா?

தர்மா:—அந்த அம்மாளை எல்லாரும் கல்யாணி யென்று அழைத்தார்கள்; அந்தப்பெயர் அவளுக்குத்தகும்; அவ்வளவு தான் எனக்குத்தெரியும்; உனக்குத்தெரிந்தால் சொல். யாரவள்?

சுப்பு:—அவளா? அவள் உன் சிற்றன்னை மீனுக்ஷிக்கு அடுத்த தங்கை.

தர்மா:—அப்படியா? எனக்குத்தெரியாதே; ஆனலந்தக் கலியாணத்தை முற்றிலும் நம்பவில்லை.

சுப்பு:—குழந்தாய் தர்ம்மாம்பா! பயப்படாதே, கலியாணி மீனுக்ஷியைப்போல் குணமற்றவளல்ல; அவள் தகப்பனுருக்கு நான்கு பெண்கள். அவர்களில் மூத்தவள் உன் மாமியார். இரண்டாவது மீனுக்ஷி, மூன்றாவது கலியாணி, நான்காவது இரத்தினவல்லி யென்று உள்ளூரில் வாழ்க்கைப் பட்டிருக்கிறுள். இவர்களில் சாவித்ரியும் கலியாணியும் தவிர மற்றப்பேர்கள் மகாபாபிகள். ஆகையால் கலியாணியைப் பற்றிக் கவலைவேண்டியதில்லை; அவள் பரதேவதைக்கொப்பானவள். அது நமது சுந்தரத்திற்குச்சரியான சம்பந்தமே.

தர்மா:—சரி, அஃதிருக்கட்டும், இனி நாம் செய்து முடிக்கவேண்டிய காரியம் என்ன?

சுந்த:—நாமொன்று நினைக்கத் தெய்வமொன்றை நினைக்கின்றது. இதுவரையில் நான் என் பிதாவிடம் வைத்திருந்த

பக்தியை மறக்க வேண்டிய காலம் வந்துவிட்டதென்று நினைக்கிறேன்; ஆ! நானென்ன செய்வேன்; மகாபாபியாய் விட்டேன்; நான் மாத்திரம் கெட்டுப்போவதாயிருந்தாலும் என் பிதாவின் சொற்களை நான் அதிக்ரமிக்கமாட்டேன்; நம் தர்மிணியைக் கூடவல்லவா கெடுக்கவேண்டியிருக்கிறது.

தர்மா:—இனி நமது பிதாவென்றும் அவர் சொற்களை மீறி நடக்கலாகாதென்றும் மரியாதை பார்க்கச் சாத்தியமில்லை. அவர் ஸ்வபுத்தியுடன் சொன்னாலும் கேட்கலாம்; அதுவுமில்லை; ஆகையால், இனி நாம் அனுஷ்டிக்கவேண்டிய சாஸ்திரம் இதுவே.

குரோரப்யவலிப்தஸ்ய கார்யாகார்யமஜாநத: ।
உத்பதப்ரதிபந்நஸ்ய பரித்யாகோ விதீயதே ॥

சுந்த:—தர்மீ! நீ சொல்வது எனக்கு உசிதமாய்ப் படவில்லையென்றாலும், வேறு தர்மயுக்தமான வழி தெரியாதபடியால், சித்தம் கலங்குகின்றது; மேல்நடக்கவேண்டிய காரியம் இன்னதெனத்தெரியவுமில்லை.

தர்ம:—மேல் நடக்கவேண்டியதென்ன? நாம் மதுரைக்குப்போகாமல் இங்கேயே இருந்து நம் காரியங்களை முடித்துக்கொள்வோம்; அங்கே போனாலல்லவா அவ்வளவு அநர்த்தமும்.

சுந்த:—தர்மீ! நாம் மதுரைக்குப் போகாவிட்டால் நம்மைப்பலாத்காரமாய்க் கொண்டுபோக நமது பிதாவால் முடியும்; மேலும், நாமவரைப்பரித்யாகம் செய்துவிட்டால் அவருக்குள்ள சுமார் ஐந்நூறுலக்ஷம் பெறுமான சொத்துகள் வீணாகக் கண்டபேர் கொண்டுபோகும்படியாய்விடும், எனக்குச்சொத்தில் அதிகமான விருப்பமில்லையென்றாலும், உன்னை உத்தேசித்து அதில் கொஞ்சம் விருப்பமுண்டாகின்றது.

தர்மா:—எனக்காகத் தாங்கள் கஷ்டப்படவேண்டாம்; என்னைக்கட்டிக்கொள்ளும் மகாபுருஷன் என்னை ரக்ஷித்தே தீருவார். இனி மதுரையென்றும் அங்கு நமக்குப் பிதா ஒரு வர் இருக்கிறாரென்றும் எண்ணத்தைவிட்டு நம் காரியத்தை நாமே பார்ப்போம். மாதாவை யிழந்ததுபோல் பிதாவை யும் இழந்துவிட்டதாகவே பார்ப்போம்.

சுப்பு:—நானொரு விஷயம் யோசித்திருக்கிறேன்; அதை அந்தப்படி நடத்த உத்தேசித்துத்தான் நானிவ்விடம் வந்தி ருக்கிறேன், நீங்கள் தயவுசெய்து அந்தப்படி நடத்தவேண் டும். தர்மாம்பா! இவ்வளவு சிறு வயதில் இவ்வளவு புத்தி யும் படிப்புமுள்ள உன்னைக் கெடுக்க யோசித்த மகா பாவியைக் கெடுக்காவிட்டால் என் உயிர் இவ்வுடலிலிருப் பதில் யாதுபயன்?

சுந்த:—சுப்பு! நீ சொல்வது சுத்த ரஜோகுணவியாபார மாயிருக்கிறது. நமக்கு மோசம் செய்பவர்களுக்கு நாமும் மோசமே செய்யவேண்டுமென்று விதியுண்டா?

தர்மா:—அண்ணா! அதென்ன அப்படிச் சொல்லு கிறீர்கள். சுப்பு! உன் உத்தேசத்தைச் சொல், கூடியவரை யில் அதை யெப்படியாவது நிறைவேற்றப் பார்க்கிறோம்.

சுப்பு:—சுந்தரம்! சொல்லலாமா?

சுந்த:—சொல்லு கூச்சமில்லாமல், எப்படியாவது நீ இப்போது செய்திருக்கிற உபகாரத்திற்கு பிரதியுபகாரம் செய்யவேண்டியது எங்கள் கடமை.

சுப்பு:—எப்படியாவது வைத்துக்கொள், நான் சொல் லுகிறேன் கேள். கிட்டப்பயலை தர்மாம்பாள் பார்த்தாளா யும் அவளுக்கு வெறுப்புண்டாகுமென்று கலியாண லக் னம் வரையில் அவனை அவள் கண்ணிற் காட்டுகிற தில்லை

யென்றும் கலியாண முகூர்த்தத்தையும் ராத்திரியில் நடத்தி விடுகிறதென்றும் தீர்மானித்திருக்கிறார்களெனக் கேள்விப் பட்டேன். அது என் யுக்திக்கு இடம் கொடுக்கின்றது.

இதைக்கேட்ட இருவரும் "அவ்வளவு மோசமா செய்யத் துணிந்தார்கள்; சொல் உனது யுக்தியை" என்றார்கள்.

சுப்பு:—உங்களிருவரையும் சீக்கிரம் மதுரைக்கு வந்து சேரும்படி கடிதம் இன்றைக்காவது நாளைக்காவது வரும். அதில் தர்மாம்பாளுக்குக்கிட்டுப்பயலுடன் கலியாணமென்று எழுதியிராது. கலியாணத்தை மதுரையில் தனது வீட்டிலேயே தனது கௌரவத்தை யுத்தேசித்து நடக்கவேண்டியதாயிருக்கிறதென்றுமாத்திரம் எழுதப்பட்டிருக்கும்; சுந்தரத்திற்கும் கலியாணம் நிச்சயமாயிருப்பதாய் எழுதியிருக்கும். நீங்கள் அம்மட்டில் அதிகமென்றே நினைத்து இருவரும் மதுரைக்குப்போய் தகப்பன் சொல்லுக்கு மாறு சொல்லாதவர்களாகவே இருந்துகொண்டுக்கலியாணத்தினத் தன்றைக்கு இராத்திரி ஒருவருக்கும் சொல்லாமல்உளருக்கு வந்துவிடுங்கள்; தர்மாம்பாளுக்குப்பின் உதவிக்காக நான் அவ்விடத்திலொரு ஸ்திரீயை யேற்படுத்திவிடுகிறேன்; நீங்களிருவரும் ஊருக்குவந்தபிறகு நானொரு காரியத்தைச் செய்துவிடுவதாய் நிச்சயித்திருக்கிறேன்.

சுந்த:—அந்தக்காரியத்தை நாங்களும் கேட்கலாகா?

சுப்பு:—கேட்கலாம், நானிதுவரையிற் சொன்னபடி தவறாமல் நடத்துவதாய்ப்பிரதிக்ஞை செய்தால் மாத்திரம் நான் சொல்லமுடியும்.

சுந்த:—சுப்பு! நீ யென்ன எங்களிடத்தில் இவ்வளவு தூரம்சந்தேகிக்கிறாய்? கட்டாயம் நாங்கள் போய்வருகிறோம்; தர்மாம்பாளுக்கு ஏற்படுத்தப்பட்ட வரனை மாற்றினதாய்க்

கடிதத்தில் காணுவிட்டால் மாமா முதலானவர்களைக்கலியாணத்திற்கு முதல்நாள் வரும்படி சொல்லிவிட்டு நாங்கள் முந்தியே போய்விடுகிறோம்.

சுப்பு:—சரி, சேனுங்கள். நான் குடியிருக்கும் தெருவில் ஒரு அம்மாளுக்கு ஒரே பெண் இருக்கிறாள். அப்பெண்ணுக்குத் தகப்பனுமில்லை அண்ணன் தம்பிகளுமில்லை. அவளுக்கு வயது பன்னிரண்டு. அவளுடைய உயரம் பருமன் நடை குரல் முதலிய யாவும் தர்மாம்பாளை யொத்தன: அவளது முகத்தையும் நிறத்தையும் பார்க்காவிட்டாள் தர்மாம்பாள் என்றே சொல்லலாம்; சென்ற வருஷத்திலவள் விதவையாயினள். அவள் தாய்க்கு அவள் ஒரே குழந்தையானதால் சாஸ்திரத்திற்கு விரோதமானுலும், தன்னூரார் தன்னைத் தள்ளிவைக்கநேர்ந்தாலும், அவையெல்லாம்பொருட்படுத்தாமல் இந்நாள்நாகரீகத்தையனுசரித்து அப்பெண்ணைப் புனர்விவாஹம்செய்துக்கொடுத்து, அவள் வயிற்றில் குழந்தைகள் பிறக்க, அவைகளைப்பார்த்து மகிழவேண்டுமென எண்ணமிருக்கிறது. என் வார்த்தைப்படி நீங்கள் நடந்தீர்களானல் அப்பெண்ணைக் கிட்டுப் பயலுக்குத் தர்மபத்னியாகச் செய்துவிடுகிறேன்.

தர்மா:—சரிதான், அவர்கள், பெண்ணின் முகத்தைப் பார்த்துவிட்டால்?

சுப்பு:—அது ஒருநாளுமில்லை. உனக்கேற்பட்டிருக்கிற பட்டுப்புடவையையும் நகைகளையும் அவளைத்தரிக்கச் செய்துவிட்டால் போதும்; கலியாணப்பெண் ஸ்வபாவந்நிலேயே தலைகுனிந்துகொண்டுதானிருக்கும்; ராத்திரிகாலம் நாளும் அவளுக்கு முகத்தில் ஒருவிசமான பவுடரைத்தடவி உனக்குச் சமமான நிறமாக்கிவிடுகிறேன், அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம்.

தர்மா:—அண்ணா! கலியாணத்திற்கு என்ன செய்யப் போகிறாய்?

சுப்பு:—அதற்கும் பேர்வழி திட்டம்பண்ணியிருக்கிறேன்.

தர்மா:—அந்தப்பேர்வழியையும் சொல்லக்கேட்க ஆசையாயிருக்கிறது.

சுப்பு:—கல்லூரில் ஒரு பையன் இருக்கிறான் அவன் பேர் பலராமன். அவன் பரமஏழை; தாயுமில்லை, தகப்பனுமில்லை; வாசிப்பு நடக்கிற இடங்களில் மழைக்குக்கூட அவன் ஒதுங்கினதில்லை; அவனுக்கு வயதுசுமார் 30-க்கு மேலிருக்கும், ஆனாலும் அவன் குள்ளன்; நம்சுந்தரத்திற்குச்சமமான நிறமும் உயரமும் பருமனும் உள்ளவன்; முகமட்டும் நீண்டிருக்கும்; அவனுக்கு வெகுபாடுபட்டும் கலியாணம் செய்துகொள்ள ஒருவரும் பெண்ணைக்கொடுக்க இஷ்டப்படவில்லை, ஆனாலவன் நல்ல ஜாதி குலத்தினன்; என் புருஷன் வீட்டுக்குச் சுற்றிச்சுற்றி வந்தால் கொஞ்சம் பாத்தியமுள்ளவன்; அவனைத்தான் கோணமூஞ்சிக் கமலத்துக்கு நாயகனாக ஏற்படுத்தியிருக்கிறேன்.

இதைக்கேட்ட சுந்தரம் சிரித்து, சுப்பு இதெல்லாம் வெளியானவுடன் பிரமாதமான கலகமுண்டாகுமே அதற்கு யார் பாத்தியம்?

சுப்பு:—அங்குள்ளவர்கள்தாம் பாத்தியம்! நாமொருவருந்தான் அங்கிருக்கப்போகிறதில்லையே: அப்படிக்கு ஏதாவது நடந்தால் ஆயிரம் தலைகளுக்கு ஒரு மகாஸர்ப்பமாக விருப்பான் பலராமன்.

இவர்களிவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் மாடிப்படிகளில் யாரோ வருவதாய்ச் சப்தம்கேட்க, உடனே தர்மம்

பாயெழுந்து கதவைத்திறந்து பார்க்கையில், கௌரியம்மாள் ஒரு கடிதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு வந்தாள்; அவள் இம்மூவரையும் பார்த்து என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்களெனக்கேட்க "கலியாணம் மதுரையிலேயே நடக்கப்போகிறதாகச் சுப்பு சொன்னாள், அதைப்பற்றிக் கேட்டுக்கொண்டிருந்தேன் என்றான் சுந்தரம். கௌரியம்மாளுக்கு அவ்வளவாகக் கபடம் தெரியாததாகையால் இவர்களிங்கிதத்தையறியவிரும்பவுமில்லை, சந்தேகம் கொள்ளவுமில்லை. கலியாணம் மதுரையிலென்றதும், "ஹா! அதென்ன, உங்கள் மாமா இங்கு செய்வதாகவல்லவா கொட்டகைப்பந்தல்காரரைத் திட்டம்பண்ண லால்குடி போயிருக்கிறார்" என்றாள்.

"அதற்கென்ன, கலியாணம் மதுரையிலென்றால் கவலையேயில்லை" என்றான் சுந்தரம்.

உடனே கௌரியம்மாள் தன் கையிலிருந்த கடிதத்தைச் சுந்தரத்தினிடம் கொடுத்து "இது இங்கிலீஷில் எழுதப்பட்டிருக்கிறது, யாருக்கு வந்தகடிதம் பார்" என்றாள்.

சுந்தரம் அதைப்பார்த்துவிட்டு "மாமாவுக்கு மதுரையிலிருந்து எங்கள் தகப்பனார் எழுதியகடிதம் இது. குங்கும அடையாளமிட்டிருப்பதால் கலியாணத்தைப்பற்றியே இருக்குமென நினைக்கிறேன்" என்றான்.

கௌரியம்மாள், அதிலென்ன எழுதியிருக்கிறதென்று கேட்க "அதையுடைத்துப் பார்த்தாலல்லவா தெரியும். மாமாவன்றி அதையுடைக்க நமக்கெல்லாம் அதிகாரமில்லையென்று சொல்லிப்பத்திரமாய் அதைப்பெட்டியில் வைத்தான். பிறகு ஸ்நானம் முதலிய காரியங்களை யுத்தேசித்து அவரவர்கள் அவரவர்களுடைய விருப்பப்படிக் கலைந்தார்கள்.

# தர்மாம்பாள்.

## இரண்டாம் பாகம்.

### ஒன்பதாவது ஆச்வாஸம்.

### விபத்தரண ஸகாயம்.

குளித்தலை கோபாலசாமி அய்யர் ஏதோ ஒரு அநந்தரவார்ஜு விபாஜ்யத்தில் வாதியாயிருக்கிறாரென்றும் அதற்காகச் சுமார் லக்ஷ ரூபாய்வரையில் கடன்வாங்கி செலவழித்திருக்கிறாரென்றும் முன்னொரு சந்தர்ப்பத்தில் சொல்லியிருக்கிறோம். அவருக்கு அந்த விபாஜ்யம் ஜயித்தால் சுமார் 15 லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் கிடைக்கும்; அந்த விபாஜ்யம் அஸலில் அவருக்கனுகூலமானதின்மேல் பிரதிவாதிகளால் அப்பீல் செய்யப்பட்டு ஹைகோர்ட்டில் விசாரணைக்கு வந்திருந்தது. அதற்காக கோபாலசாமியய்யர் சென்னைக்குப்போயிருந்தார். அச்சமயத்தில் பட்டாபிராமய்யர் குளித்தலைக்கு வந்து தனது பெண் கமலத்துக்குக் கலியாணம் மதுரையில் நடக்கவேண்டியதாயிருப்பதால் முன்னமே செய்யவேண்டிய தேவதா பிரார்த்தனைகளை இராமாபுரத்திலேயே முடித்துக்கொண்டு கலியாணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பே மதுரை போகவேண்டியிருக்கிறதென்றும், அதற்காக 20உ செய்யவேண்டிய சுமங்கலிப்பிரார்த்தனைக்கு உன்னை அழைத்துப்போகவந்தேனென்றும் ஸாவித்ரியிடம் சொன்னார். அவள் அதைக்கேட்டுத்தனது பர்த்தா ஊரில்லாத சமயம் தான் பிறந்தகம்போவது அனுசிதமென்று யோசித்துப் பிறகு தர்மனுடன் கலந்து யோசனைசெய்தாள்.

ஸாவித்ரி:—அப்பா தர்மா! கலியாணத்திற்காக முந்தியே செய்யவேண்டிய ஸுமங்கலிப் பிரார்த்தனைக்கு நான் வரவேண்டுமென்று என் தமையன் அழைக்கவந்திருக்கிறார்: உனதபிப்பிராயமென்ன?

தர்ம:—அம்மா! கட்டளையிடுபவளைக் கேட்பதுபோல் கட்டளையின்படி நடக்கும் என்னைக்கேட்கிறாயே, உனதிஷ்டத்துக்கு மாறுவதுண்டோ?

ஸாவி:—நானதற்காகச் சொல்லவில்லை. உன் பிதாவின் உத்தரவன்றியில் நான் இவ்வீட்டைவிட்டு மற்றொரு இடத்திற்குப்போவது தகுதியன்று; அவரிப்போது இவ்விடத்திலில்லாமலிருப்பதால் அவருக்குப் பிரதிநிதியான உன்னைக்கேட்டு உனக்கது உசிதமாய்த் தோன்றினால் அவ்வாறு நடத்தலாமென்பது என் கருத்து.

தர்ம:—அம்மா! நீ சொல்வதைக் கேட்பதற்கு மாத்திரம் இப்பொழுது நான் கட்டுப்பட்டவனே தவிர அப்பாவுக்குள்ள அதிகாரத்தை எவ்விதத்திலும் செலுத்த நான் அர்ஹறன். ஆனாலும் நீ கேட்டதற்குப்பதிற்சொல்லாமலிருக்கலாகாதெனச்சொல்லுகிறேன்; நம்மகத்திலும் கலியாணத்திற்கு முன் தேவதா பிரார்த்தனைசெய்யவேண்டியதவசியந்தானே.

ஸாவி:—ஆம், செய்யவேண்டியதுதான். உன்பிதா வரவேண்டியதை யெதிர்பார்க்கிறேன்.

தர்ம:—அப்படியிருக்க நீ இப்பொழுது இராமாபுரம் போகவேண்டிய தவசியமாய்த் தோன்றின், போய் வருவதில் யாதொன்றும் எனக் காக்ஷேபமில்லை.

ஸாவி:—பிறந்த வீட்டில் நடக்கும் ஸுமங்கலிப் பிரார்த்தனைக்குப் பெண்கள் இருக்கவேண்டியதவசியமென்று ஸ்திரீ

ஸம்பிரதாயமறிந்தவர்கள் சொல்வார்கள். அதிலும் நான் புக்கபெண்ணானதால் அவசியம் இருக்கவேண்டியதெனச் சொல்வார்கள்; உங்கள் அப்பா வரச் சில நாட்செல்லும் போலிருக்கிறது; அதற்குள் நான் திரும்பிவந்துவிடுகிறேன்.

தர்மன்:—நீ போவதிலும் எனக்காக்ஷேபமில்லை, நீ தாமதிக்காமல் திரும்பிவந்துவிடுவாய் என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை. நீ இந்தச் சமயம் தனியாய் அவ்விடத்திற்குப் போவதில் எனக்குச் சங்கை கொஞ்சம் உண்டாகின்றது.

ஸாவி:—என்ன சங்கை? அதைஸங்கோசமின்றிச்சொல்.

தர்மன்:-சங்கோசமென்ன உன்னிடம்சொல்ல, சொல்லுகிறேன் கேள். கொஞ்ச நாளைக்குமுன் உன் தமையன் உன்னிடம் வந்து தன் பெண்ணை எனக்குக் கொடுப்பதாய்க்கேட்க, அதை நீ ஒப்புக்கொள்ளாததின்பேரில் உன்னைப் பணம் கேட்டு அதற்கும் நீ மறுத்து விட்டபடியால், அவருன் பேரில் மிகுந்த கோபத்துடன் போயிருக்கிறார். அவருடைய குணங்களும் செய்கைகளும் அவ்வளவாகத்திருப்திகரமாய்க் கேட்கப்படவில்லை; அதனால் உன்னை இந்தச் சமயம் தனியா யனுப்ப என்மனம் துணியவில்லை; அப்பா ஊரிலிருந்தால் நானுவந்து பின்றொடர்ந்து வருவேன்; கடைசியாக நான் சொல்வது அப்பாவந்தபிறகு நீ போவதுதான் உசிதம்; உன்னையனுப்பும் அதிகாரமும் அவருக்கேயுள்ளது. பிறகு உன் உசிதம் போல் நீ நடந்துகொள்வதில் எனக்குத் தடையொன்றும் இல்லை.

இதைக்கேட்ட ஸாவித்ரீ கொஞ்சம் யோசித்தாள். தானும்தனது தமையனும் முன்னொருநாள் இராத்திரி பேசிக் கொண்டிருந்ததை இவன் எங்கேயோ பதுங்கியிருந்து கேட்

மருக்கிறேனென்று தீர்மானித்தாள். ஆனாலும் தாய்வீட்டில் நடக்கும் ஸுமங்கலிப்பிரார்த்தனைக்குத்தான் போகாமலிருப்பது தவறென்றும் தன்வீட்டுக் காரியங்களை யுத்தேசித்துத் தான் சீக்கிரம் திரும்பி வந்துவிடுகிறேனென்றும் தர்மன் சந்தேகிக்கிறபடி யாதொன்றும் கெடுதல் சம்பவிக்க நியாயமில்லையென்றும் ஒருவாறு தீர்க்காலோசனை செய்து, மறுபடி தர்மனைப்பார்த்து "அப்பா தர்மா! நீ பயப்படாதே, இது வெள்ளைக்காரர் ராஜ்யம், ஒருவருக்கொருவர் கெடுதல்செய்யக்கூடிய காலமிதுவல்ல, இச்சமயம் நானவ்விடம் போகாமலிருந்தால் பலபேர் பல வார்த்தைகளைச்சொல்ல நேரிடும். உனது தகப்பனார் வந்தபிறகு போவதென்றால், அவர் வரும் சமயம் இன்னதென்று நிச்சயமாய்த் தெரியவில்லை. அவர் ஊருக்கு வரும் முன்னமேயே நான்போய் திரும்பி வந்து விடுவேன். அவர்ஸ்தானத்தில் நீ என்னையனுப்பவும் நியாயமுண்டு ஆகையால், நீ என்னைத்தடையில்லாமலனுப்பு" என்று நிர்ப்பந்தமாய்க்கேட்கும் சாவித்ரிக்குத்தர்மன் அனுமதிகொடுத்து. அவள் தமையனுடன் இராமாபுரத்திற்கனுப்பிவிட்டுத் தனது பிதாவின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

ஸாவித்ரீ ஊருக்குப்போனபிறகு ஒருவருமில்லாத அவ்வீட்டில் சமையற்காரனாலளிக்கப்பட்ட ஆகாரத்தைச் சாப்பிட்டு 5, 6 தினங்களை நமது தர்மன் சிரமப்பட்டுத் தள்ளினான். பிறகு ஒருநாள் காலையில் தனது ஸ்நானஸந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு கொஞ்சம் சிற்றுணவருந்தி ஏதோ ஒரு புத்தகத்தைக்கையிலேந்தி மஞ்சப் பலகையில் உட்கார்ந்தான். அவனுக்கு மனதிலே கவலையிருந்தாலும் புத்தகத்தையெடுத்தா லவையெல்லாமகலும் வழக்கமுண்டு. அன்று அவன் மனதிற் குடிகொண்டிருந்த கவலைகள் அவன் படிக்கும் புஸ்தகத்தில் ஒருவரிக்காவது அர்த்தத்தை மன

தில்வாங்க இடங்கொடுக்கவில்லை. புஸ்தகமும் கையுமாய் ஒரு திண்டிற் சாய்ந்து பின்வருமாறு சிந்திக்கலானான்.

"இன்றைக்குத் தையீ தேதி 22 ஆய்விடுகின்றது; 30உ கலியாணமென்றும், அதற்குப் புறப்பட முன்ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்றும், கலியாணம் திருச்சிறுப்பள்ளியி லேயே நடக்கிறதென்றும் காமேசுவரன் இவ்விடம்வந்து சொல்லிவிட்டுப்போய் ஒருவாரமாகின்றது. மற்றப்படி அப் பெண்ணைப்பற்றி அவன் சொல்லியிருப்பனயாவும் நமது பிதா அப்பெண்ணைப்பார்த்துவந்தவுடன் சொல்லிய விஷயங் களால் உண்மையெனவே விளங்குகின்றன. நான் நேரில் பார்த்ததிலும், மந்தஹாஸத்தா லழகிய உதடுகளும் ஆகர் ணாந்தம் நீண்ட கண்களுமுள்ள அவளது முகத்தில் பிரகா சிக்கும் ஒருவித சோபை அவளை நல்ல புத்திமதியென்றும், சித்திபாவதியென்றும், சீலவதியென்றும் விளக்குகின்றன. நாம் வெகுநாளாய் இப்படிப்பட்ட பெண்ணையே பாணிக்கிர ஹணம்செய்கிறதென்று நினைத்தபடி இப்பொழுது நேர்ந்தி ருப்பதைக் கருணாநிதியெனவும் தீனரக்ஷகனெனவும் சுருதி ஸ்மிருதி இதிகாஸங்களில் உத்கோஷிக்கப்பட்டிருக்கிறபடி பரமேசுவரனே முடித்துவைக்கவேண்டும். நற்காரியங்க ளுக்கு இடையூறுகள் அநந்தமென்று சொல்லியபடி அதற் கனேக அசந்தர்ப்பங்களுமிருக்கின்றனபோலும் தோன்று கின்றது.

அதாவது "இவ்விடம் வந்துபோன இராமபுரம்பட்டா பிராமணுக்கு நமது சிற்றன்னை எப்படியோ அப்படியே அப் பெண்ணின் சிற்றன்னையும் கங்கையே; அவனொரு பெரிய அயோக்கியன்; நம்மிடத்திலும் நம் சிற்றன்னையிடத்திலும் அவனுக்கு விரோதமுமிருக்கின்றது. நாம் கேள்விப்பட்ட

வரையில் மதுரையிலிருக்கும் அவனுடைய தங்கையும் அவ்வளவாக நல்லகுணமுள்ளவளல்லவென்று தெரியவருகிறது. அவனே தனது பெண்ணுக்கு மதுரையில் கலியாணம் நடத்துகிறேனென்றும் அதுவும் 30உ நடக்கிறதென்றும் சொல்லிப்போயிருக்கிறான். சென்ற வருஷத்தில் அப்பெண் நம் மகத்திற்கு வந்திருந்தபோது பார்த்ததில் அவளையும் மணம் புரிய வொருவன் இருப்பானோவென நினைக்க ஹேதுவாக இருக்கிறது. திருச்சியில் நமது கலியாணம் நடக்கும் தேதியாகிய 30உயன்றே மதுரையில் அவன் தங்கையின் வீட்டில் தன் பெண் கமலத்துக்கும் கலியாணமென்று அவன் சொல்லியிருப்பது அஸம்பாவிதமாயிருக்கிறது; அவன் தங்கையாகிய மீனாக்ஷியன்றியில் இவ்விரண்டில் ஒரு கலியாணமும் நடக்க நியாயமில்லையே; இதிலேதோ விசேஷமிருக்கின்றது; நாமதை யறிந்தே தீரவேண்டும்."

இவன், இவ்வாறு சிந்தைகளால் கட்டுண்ட அந்தக்காலத்தில் மற்றொரு விஷயத்திற்கு இடமில்லாமல் தவித்துக்கொண்டிருக்கையில் ஒரு வண்டிக்காரன் ஓடிவந்து பரபரப்புடன் திருச்சியிலிருந்து யாரோ ஒருவர் வந்திருக்கிறதாகவும் அவர் தர்மனை அவசரமாய்த் தேடுவதாயும்சொல்ல, உடனே எழுந்திருந்தான் தர்மன், பார்த்தான் காமேசவரனை, தொலைத்தான் கவலையை, உடனே அவனை கையிற்பிடித்தழைத்துக்கொண்டு வந்து முன்னிருந்த ஊஞ்சற்பலகையில் உட்கார்த்தி, அடியில் வருமாறு சொன்னான்.

"மித்திரமணே காமேசவரா! ஒருதேசத்தில் வெகுகாலமாய் மழையில்லாமல் எல்லாரும் தவித்துக்கொண்டிருக்கையில் பயிரிடுவதையன்றி வேறுதொழிலை யறியாத ஒரு குடியானவன் திடீரென்று மப்புக்காளமேகங்களும் சேர்ந்து வே

ண்டியமட்டில் வர்ஷித்தால் எவ்விதம் சந்தோஷமடைவானோ அவ்விதமிப்பொழுது நானுனது ஸமாகமத்தால் ஆனந்திக்கிறேன். உனது பெயருக்குத்தக்கவாறு நீ நடந்துகொள்கிறாய். காமங்களென்றால்-விருப்பங்கள், ஈசுவரனென்றால்-ஆளுபவன். ஆகவே எல்லாருடைய அபீஷ்டங்களையு முசிதப்படியளிப்பவனெனத் தாத்பரியமாகின்றது. அப்படிப்பட்ட பெயரை உனக்கிட்ட உன் தகப்பனாரை இப்பொழுதொருதரம் நமஸ்கரிக்கிறேன். எனது மாதாபிதாக்கள் ஒருவரும் இல்லாத இந்தவீட்டில் தனியே எவ்விதம் காலங்கழிப்போமென்று பரிதவித்துக்கொண்டிருந்த சமயத்தில் உன்னை நானிப்போதடைந்தது நிதியையடைந்ததுபோல் தோன்றுகின்றது" என்றிவ்வாறுபிரியவசனங்கள் கூறிக்காமேசுவரனுக்குப்பிராதகாலத்துக்குரிய ஆதித்யஞ்செய்தான்.

காமேசுவரனும் உண்டுகளித்துச் சற்றுநேரம் வேடிக்கையாய்ப்பேசிக் கடைசியாய் தர்மனைப்பார்த்து "தர்மமித்திரமனே! நான்வந்தது நிரம்ப சௌகரியமான காலமெனவே நினைக்கிறேன்" என்றான்.

தர்ம:—ரகே! ஆம் சௌகரியமான காலந்தான்; வீட்டிலொருவருமில்லாதபடியால் நாம் ஸ்வச்சந்தமாய் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால், உன் முகத்தைப் பார்த்தால் நீ யேதோ ஒரு முக்கியமான காரியார்த்தமாய் இவ்விடத்திற்கு வந்திருப்பாயென நினைக்கவேண்டியதாயிருக்கிறது. அப்படி யேதாவது இருந்தால் நீ யிந்தச்சமயம் தாராளமாகவே சொல்லலாம்.

காமே:—நண்ப! நீ புத்திசாலியாயும் இங்கிதங்களையறிந்தவனாயுமிருப்பதால் எனக்குக்கொஞ்சம்கூடக்காரியங்க

ளில் கவலையில்லை. நீ இப்போதே புறப்பட்டு 10-மணி டிரெயினில் என்னுடன் திருச்சிக்கு வரவேண்டும்.

தர்ம:—காமேசுவரா! நீயென்ன இப்படித் திடீரெனக் கூப்பிடுகிறாய்; என்ன விசேஷம், இவ்வளவு அவசரத்திற்கு?

காமே:—காரணத்தைச் சொல்லாமலா உன்னை யழைத்துப்போவேன்; புறப்படு சீக்கிரம், வண்டி தப்பாமற்போக வேண்டும்.

தர்ம:—அவசியம் நான் வரவேண்டுமோ? அகத்தில் ஒருவருமில்லை. அப்பாவரும் சமயம் இன்னதென்று நிச்சயிக்க முடியவுமில்லை.

காமே:—அதற்குக் கவலைப்படாதே; சாயந்திர வண்டியில் நீ திரும்பிவந்துவிடலாம்; அவர்வந்தால் இனி ராத்திரிவண்டியில் தானே வரவேண்டும்?

தர்ம:—சரி, வருகிறேன், விசேஷத்தைச் சொல்?

காமே:— நீ இதைவிட்டுப் புறப்பட்டாயானால் திருச்சி வரையில் சொல்லிக்கொண்டே வருவேன்.

இதைக்கேட்ட தர்மன் குமாஸ்தாவைக்கூப்பிட்டுத்தான் கொஞ்சம் அவசரகாரியமாய்க்கோட்டைக்குப்போய் சாயந்திரம் திரும்பிவந்துவிடுவதாய்ச் சொல்லி வீட்டை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும்படி ஏற்பாடுசெய்து, காமேசுவரனுடன் புறப்பட்டான். சொந்தமாயுள்ள குதிரைவண்டியைக்கூடக் கவனிக்காமல் ஒரு வாடகைவண்டியமர்த்திக்கொண்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றார்கள் இருவரும்.

வாசகர்களே காமேசுவரன் இவ்வளவு அவசரமாய்த் தர்மனையழைத்துப் போகவேண்டிய காரணத்தைப்பற்றிச் சற்றுக் கவனித்து விட்டு மேலேபோவோம்.

திருச்சியில் இந்தக்கலியாணம்தீர்மானமானபிறகு நமது காமேசன், பிரதிதினமும் அல்லது செளகரியப்படாவிட்டால் இரண்டுநாளைக்கொருதரமாவது சுந்தரம் தர்மாம்பாள் இவர்களை, அவர்களிலும் தர்மாம்பாளைக்கட்டாயம் பார்த்துப் பேசாமலிருப்பதில்லை. இவர்களுடன் மதுரையிலிருந்துவந்த சுப்பு பேசிக்கொண்டிருந்ததினம் சாயங்காலம் காமேசன் தர்மாம்பாள் வீட்டிற்குப்போனான்.

அப்போது சுந்தரம் தான் படிக்கும் காலேஜில் யாரோ ஒரு துரை பிரசங்கம் செய்வதாய் அழைப்புக் கிடைத்ததின்பேரில் அங்கே போயிருந்தான். தர்மாம்பாள் மாத்திரமிருந்தாள். அவள் காமேசுவரனைத் தனது ஸகோதரனைப் பாவித்துத்தனது அந்தரங்கமான அபிப்பிராயங்களை ஒளிக்காமலும் ஸ்வாபாவிகமான லஜ்ஜையைக்கூடப் பாராட்டாமலும் சொல்வதுண்டு. அதற்குக் காரணம் அந்தக் காமேசன் தனது தமையனுக்கும், தான் அடைய விரும்பியிருக்கும் பிராணநாதனான தர்மராஜனுக்கும் பிரியமித்திரனாகையாலும், தன் அம்மானுக்குப் பரம ஆப்தனாயிருப்பதாலும் அவனாலேயே இந்தக் கலியாணம் ஏற்பட்டிருப்பதை யவள் நன்றாக அறிந்துகொண்டிருப்பதாலும் அவளுக்கு அவனிடம் அவ்வளவு ஸ்வாதீனபாவம் உண்டாயிருந்தது.

அன்றைக்கு அவள் அந்தக் காமேசுவரனைக் கண்டவுடன் செய்யவேண்டிய நாகரிகமான மரியாதையைச் செய்து சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து பிறகு "என்னடியம்மா தர்மாம்பா! இன்றைக்கு உன்வதனம் ஆதபத்திலிருந் தப்பட்ட அம்புஜம்போல் வாடியிருக்கிறது" என்று கேட்க, அதற்கு தர்மாம்பாள், காலமே சுப்புவந்து சொன்ன சமா

சாரத்தை விடாமற்சொல்லித் தானும் சுந்தரமும் அவ்விதம் கலியாணத்தன்றை ராத்திரி மதுரையைவிட்டு வருகையில் தனது நாதனாகிய தர்மன் மதுரை ரெயில்வே ஸ்டேஷனி லிருக்கவேண்டுமென்றும், இந்தச் சங்கதியைத் தனது பிராணேசனிடம் காமேசனை முன்னிட்டுக் கொண்டு தனியிடத்தில் தானேநேரிற்சொல்லி அவனைத்தனது மனதாரப்பார்த்து ஆனந்தித்துப்பிறகு தான் மதுரைபோக வேண்டுமென்றும் சொல்லித்தனக்குவந்த கஷ்டத்தைக்குறித்துத் துக்கித்து அழுதாள்.

அதற்குக் காமேசன் அவளை இனிய மொழிகளால் சமாதானம் செய்து தர்மனைத்தானேபோய் அழைத்து வருவதாயும் சொல்லி வந்தான். பிறகு காமேசன் தன் சொந்தக் குடும்பக் காரியத்தின் தொந்தரவால் உடனே குளித்தலை போகமுடியவில்லை. கடைசியாய் தைமீ 23உ யன்று சுந்தரமும் தர்மாம்பாளும் மதுரைக்குப் போக நாள் பார்க்கப் பட்டிருக்கிறதென்று தெரியவந்ததும் 21உ ராத்திரியே தர்மாம்பாள் காமேசுவரனுக்கு இச்செய்தியைத் தெரிவிக்க, 22உ குளித்தலைபோய் அழைத்துவந்தான். வரும்போது நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் சொல்லித் தானழைத்துப்போகும் விஷயத்தையும் சொன்னான்.

தர்ம:—மித்ர! அவர்கள் அவ்வாறு அன்று இராத்திரி புறப்பட அசந்தர்ப்பமாய்ப் போய்விட்டால் கலியாணங்களெல்லாம் முடிந்தல்லவோ போய்விடும்.

காமே:—என்ன அசந்தர்ப்பம் நேரிடப்போகிறது. நானுமச்சமயம் அங்கிருப்பேனல்லவா? சுப்புவின்பிள்ளை உமாகாந்தனும் நாம் சொல்வதைக் கேட்கத் தயாராக இருக்கிறான். தர்மாம்பாளுக்கு வேண்டிய ஸ்திரீ ஸகாயத்திற்கும் சுப்பு விருக்கிறாள்.

தர்ம:—சரிதான். மானுஷபலம் நமக்குச் சரியாகவே இருக்கிறது, தெய்வபலமெப்படியோ? நாமிவ்விதமோசக்காரியங்களில் பிரவேசிக்கவேண்டாமே யென நினைக்கிறேன்.

காமே:—நீயெல்லாமறிந்தும் அறியாதவன்போல் பிதற்றுகின்றாய்; தெய்வ பலமில்லாவிடில் நீ யெவ்விதம் நடத்தினாலும் காரியம் நிறைவேறுவது முயற்கொம்புதான்; அவர்களை அவ்விதம் வஞ்சிக்காத பக்ஷத்தில் நம் கலியாணங்கள் எவ்விதம் நடைபெறும்.

தர்ம:—ஏன், எங்களுக்கிவ்விதமான கலியாணங்களில் இஷ்டமில்லையென்று சொல்லிவிட்டால்?

காமே:—உனது பிதா உனக்கிஷ்டமில்லாத காரியத்தில் உன்னைப் பிரவேசிக்கும்படி ஆக்ஞாபித்தால் நீ யவ்விதம் எனக்கிஷ்டமில்லையெனச் சொல்வாயா?

தர்ம:—சொல்லமாட்டேன், அவரப்படியென்னை ஆக்ஞாபித்தது தப்பிதமென்று அவரே அறிந்துகொண்டுத் தனது உத்திரவை மாற்றும்படியான எண்ணம் அவருக்குண்டாகும்படி நான் முயற்சி செய்வேன்.

காமே:—சரி, அப்படித்தான் இதுவும். பிதாவின் வார்த்தையைத் தட்டமுடியாமல் இவ்வுபாயத்தால் இச்சமயம் இந்த விபத்தைக் கடந்துவிட்டால், பிறகு தானாகவே அவர் இந்தக் காரியங்களை நடத்தும்படியாய்ச் செய்துக் கொள்ளலாமென்று உத்தேசம்.

இவ்வாறு இவ்விருவரும் பேசிக்கொண்டு மத்தியானம் 11½ மணிக்கு ரெயிலைவிட்டிறங்கி 12 மணிக்குக் குறிப்பிட்ட பங்களாவிற்கு வந்தார்கள்; அதனுட் புகுந்ததும் அங்கொரு அம்மாள் இவர்களை வாருங்களென்று எதிர்கொண்டழைத்து

ஸ்நானம் முதலான மத்தியான கிரியைகளுக்கு ஜலம் முதலியவைக் கொடுத்து போஜனம் செய்வித்தாள். பிறகு இவ்விருவரும் காற்றுவரக்கூடிய அதிவிசாலமான அறையில் உட்கார்ந்தார்கள்; அப்போது அந்தம்மாள் எதிரில் வந்து நிற்க, காமேசுவரன் அவளைப்பார்த்து ஜானகி! தர்மாம்பாள் எங்கேயிருக்கிறாளென்று கேட்டான்.

ஜானகி:—இங்கேதானிருக்கிறாள், உங்களிடம்வர வெட்கப்படுகிறாள்.

காமே:—ஜானகி! ஸ்திரீகளுக்கு லஜ்ஜை ஒரு பூஷணம் தான்; ஆனாலும், சில முக்கியமான காரிய காலங்களில் அதைப்பாராட்டக்கூடாது என்பது அவளுக்கே தெரிந்தவிஷயம்; அதிலும் உன்னுடைய ஸாஹசரியமிருக்கையில் அவள் தாராளமாய் இங்குவரலாம்;

இதைக் கேட்டவுடன் ஜானகியம்மாள் அவ்வறையை விட்டு வெளியில் வந்து அவ்வறையின் வாயிற்படிக்குச் சமீபமாய் நின்றுகொண்டு உள்ளே பேசும் பேச்சை கவனத்துடன் கேட்டுக்கொண்டிருக்கும் தர்மாம்பாளைக் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு உட்சென்றாள். அப்போதுமுதல் தர்மாம்பாளும் தர்மனும் வெகுகாலமாய் கோரப்பட்ட அன்யோன்ய தர்சனத்தை ஸங்கோசமின்றியில் அநுபவித்தார்கள். கூட இருவர் இருந்தமையால் வெட்கத்தால் கொஞ்சம் குனிந்தார்கள்;

பிறகு இவர்கள் நடக்கும் அதிகாரிகளை தவிர வேறில்லையாதலால் நாம் "வழியில் பணப்பை கிடக்கையில் குருடன் நடைபடித்து பார்த்தவன்போல்" அனேக நாளாய் அபேக்ஷித்த அமிர்தம் ஹஸ்தகதமாயிருக்கையிலும்கூட அருந்தாமல் விடக்கூடாதென்று நினைத்துத்துணிந்து பிரிந்

தார்கள். காது மூக்கு முதலான சகல துவாரங்களுக்கும் ரூபத்தைப்பார்க்கும் தன்மையைக் கொடுக்காத ஈசுவரனை அருமையறியாதவரென்று நினைத்தார்கள். தர்மாம்பாளின் கருமேகம்போன்ற கூந்தலின் அழகையும், அதைப்பின்னி அதனுட் செலுத்தியிருக்கும் புஷ்பங்களால் உண்டான அழகையும், இந்த அங்கத்தைப்பார் இந்த அங்கத்தைப் பார் என்று ஜாடையாகச்சொல்வதுபோல் பளீர் பளீர் என்று பிரகாசிக்கும் வைரபூஷணங்களால் சோபிக்கப்பட்ட மூக்கு காது முதலிய அங்கங்களால் அற்புதமாய் விளங்கு முகத்தையும், பாற்கடலிற் பரவியிருக்கும் பவழக்கொடிபோல் மந்தஹாசத்தால் மதிமயங்கச்செய்யும் அதரங்களையும், மற்ற கைகால் முதலிய சர்வாவயவங்களையும் தர்மன் கூச்சமற்றுப் பார்த்ததுபோல் அவளும் அவனுடைய ஸர்வாங்கங்களையும் பார்த்து, இருவரும் வாய்மொழியன்றியில் அசைவற்றிருக்கையில், ஜானகியம்மாள் காமேசுவரனைப்பார்த்து இனி நடக்கவேண்டிய சங்கதிகளை விவரிக்கலாமே என்றாள்.

காமே:—நமக்கொன்றும் பளுவில்லையே, சேர்க்கவேண்டியவர்களைச் சேர்த்துவிட்டோம், இனி அவரவர்கள் அவரவர்களின் மனதிலுள்ளவைகளைச் சொல்லிக்கொள்ளட்டும்; நாம் வேண்டுமானாலும் எட்டிப்போவோம் என்று சொல்லி, புன்முறுவலடைந்தான். இதைக்கேட்ட தர்மன் காமேசுவரா! உனது பரிஹாஸம் ஸார்வகாலிகமாக இருக்கிறதே என, ஜானகியம்மாள் தர்மனைப்பார்த்து தங்களை இங்கு வரவழைத்த காரியம் அத்யல்பமே தவிர பெரிதில்லை யானதாலும், தாங்கள் விசேஷக்ஞர்களானபடியால் தங்களுக்கு ஒரு விஷயத்தையும் அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை யாகையாலும், இப்போது சொல்லவேண்டிய இரண்டொரு வார்த்தையைச்சொல்லஎனக்கு உத்திரவுகிடைத்தால் சொல்கிறேன்,

என்றவுடன், தர்மன் அம்மா! என்னையும் குழந்தையாகவே பாவித்துக் கூச்சமற்றுச் சொல்லவேண்டிய விஷயத்தைச் சொல்லுங்களென்றான்.

ஜானகி:—தங்களுக்கு எனது குழந்தை தர்மாம்பாளைப் பாணிக்கிரஹணம் செய்துகொடுக்க நாங்கள் ஏற்பாடு செய்திருப்பதும், என் குழந்தையின் ஹிருதயம் தங்களிடத்தில் லயித்திருப்பதும், அந்தக் கலியாணம் ஒருவிதமாக மாறியிருப்பதும், அதற்கு நாங்கள் செய்திருக்கும் உபாயமும் காமேசுவர சாஸ்திரிகளால் தங்களுக்குத் தெரிந்திருக்கும்; அதற்கு மேல் சொல்லலாமா?

தர்ம:—ஆம், எல்லாமறிவேன். இவ்விஷயத்தில் நான் செய்யவேண்டிய காரியத்தைச் சொன்னால் அந்தப்படி நடக்கத் தயாராக இருக்கிறேன்.

ஜானகி:—என்னைப்போலுள்ளவர்கள் இந்தக் கலியாணங்களுக்கும் போகும் வழக்கமில்லாததால் நான் அக்காலத்தில் மதுரைக்கு வர நியாயமில்லை; என் ஸ்தானத்தில் எனது நாத்தனார் பெண் சுப்பு விருப்பாள், நீங்கள் செய்துகொள்ள வேண்டிய காரியங்களை நீங்களே ஒருவருக்கொருவர் சங்கேதம் செய்துகொண்டு குழந்தை தர்மாம்பாளும் தாங்களும் முப்பதாந்தேதிக்கு மறுநாள் இவ்விடத்திலிருக்கவேண்டும்.

காமே:—மித்ரமனே! நீ செய்யவேண்டியது வேறொன்றுமில்லை. 30-வ இராத்திரி 8-மணிமுதல் மதுரை ரெயில்வே ஸ்டேஷனில் தயாராக இருக்கவேண்டியது ஒன்றுதான் உன் காரியம்.

தர்ம:—மனுஷ்யயத்னத்தில் அவ்வாறு செய்யத்தவறமாட்டேனெனச் சொல்லத் துணிகிறேன்.

ஜானகி:—(தர்மாம்பாளைப்பார்த்து) குழந்தாய்! உனக்கேதாவது சொல்லவேண்டியதுண்டென்று சொன்னையே, சொல்லலாமிந்தச் சமயம்.

இதைக்கேட்ட தர்மாம்பாள் ஒன்றும் பதிலுரைக்காமல் தலைகுனிந்தபடி நிற்க, ஜானகியம்மாள் அவளைப்பார்த்து குழந்தாய்! உனது லஜ்ஜையே உனக்கு அலங்காரமாயிருக்கிறது. ஆனாலும் இந்தச் சமயம் உனக்குச் சொல்லவேண்டியதைச்சொல் என்றாள்.

உடனே தர்மாம்பாள் தனது மடியிலிருந்து ஒரு கடிதத்தையெடுத்துவெட்கத்தினால் தலைகுனிந்தபடியே ஜானகியம்மாள் கையிற்கொடுத்தாள்.

அதையவள் வாங்கிக்காமேசுவரனிடம் கொடுத்தாள். அவனதை மேல்பார்த்து, ஸகே தர்ம! உனக்கு விலாஸமிட்ட இந்தக் கடிதத்தை நானுடைத்து வாசிக்கலாமாவென்று கேட்டான்.

தர்ம:—அதற்கென்ன ஆக்ஷேபம்?

காமே:—உனக்கு ஏதாவது ரகஸியம் எழுதப்பட்டிருக்கும்?

தர்ம:—என் ஆத்மாவே நீயாகவிருக்க ஏனிப்படி கேட்கிறாய்.

காமேசன் மந்தஹாஸஞ்செய்துவிட்டு அதைப்பிரித்துப் பின்வருமாறுபடித்தான்.

வாசகர்களே! அக்கடிதம் கீர்வாணபாஷையில் எழுதப்பட்டிருந்தமையால் அச்சொற்களின்சுவை குன்றுதிருக்க விரும்பி அதையப்படியே வரைகின்றோம். அப்பாஷை விளங்காதவர்களை யுத்தேசித்து அதன் கருத்தைத் தமிழிலும் கீழாக குறிப்பிட்டிருக்கின்றோம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

க்ஷேமம், கடிதம்.

என் மனதின் ஆசையாகிற இளங்கொடி சுற்றிக் கொள்ளக் கற்பகத்தருப்போன்ற எனது பிராணநாதருக் கெதிரில் அன்பு அடக்கம் இவைகளுடன் செய்து கொள் ளும் விண்ணப்பம்.

காவேரிக்கரையின் படிகளுக்கு அலங்காரமாக விளங் கிக்கொண்டிருந்த தங்களை நான் பார்த்தபோதே, பரமதய வினும் தாங்கள் பிறருடைய கஷ்டத்தைக் கொஞ்சமேனும் கவனிக்காமல் என் மனதை அபகரித்தீர்கள். அது முதல் பலமான பிரயத்னம் செய்தும் அதை (தங்களால் அபகரிக் கப்பட்ட மனதை) மறுபடி யடைய என்னால் முடியவில்லை. முடிவில், அபகரிக்கப்பட்டுப்போன சொத்தை மறுபடியடைய "எனது கையைத்" தாங்கள் மந்திரத்துடன் பிடித்தீர்களானால் கிருதார்த்தையாய் விடுவேன் என்பதே உபாயமெனத் தீர்மா னித்தேன். அக்காரியத்திற்கு இடையூறிருப்பதும் அதை விலக்க உபாயமும் தங்களுக்குத் தங்கள் அருமைத் தோழராகிய காமேசுவரசாஸ்திரிகள் முகமாய்த் தெரிந்த விஷயமே. இவ்வி ஷயமாய் என்னைச்சேர்ந்தவர்கள் பிரார்த்திக்கார்களாயினும் நானும் பிரார்த்திக்கிறேன். அதாவது நாளது மாஸம் 30உ ராத்திரி மதுரை ரெயில்வே ஸ்டேஷனில் தாங்கள் அவசியம் வந்திருக்கவேண்டும். நானப்போது என் தமையன் ஸகிதமாய் தங்களிடம் வந்து சேருகிறேன்.

இந்தக் கடிதம் அபலைகளுக்கனுசிதமான தைரியத்தை முன்னிட்டு எழுதப்பட்டதாகவாவது, ஸ்திரீகளுக்கு முக்கிய அலங்காரமாகிய நாணத்தைவிட்டுப்பிதற்றப்பட்டதாகவாவது நினைக்கக்கூடாது. கேவலம் ஆபத்தாகிற கடலில் முழுகின எனக்கும், தன்னைச்சரணமாக அடைந்தவர்களிடத்தில் மிகு

ந்த வாத்ஸல்யம் உள்ள தங்களுக்கும் எப்படியாவது சேர்க் கையுண்டாக வேண்டுமென எழுதப்பட்டதனைக் [illegible] டுகிறேன்.

இப்படிக்கு,

தங்களையே உயிராகவுடைய

"தர்மாம்பாள்" எனப்படும் ஊழியக்காரி.

தர்மனுக்கு இக்கடிதத்தைக் கேட்கக் கேட்கச் சரீரத்தி லுண்டான விகாரத்திற்கோரளவில்லை. முகம் வியர்த்தது. உடம்பு சிலிர்த்தது. மார்பு படபடத்தது. மனது மயங்கி நின்றது. புத்தி [illegible]. இவைகளையெல்லாம் கவனித்த [illegible] தர்மனைப் பார்த்து "என்ன சார்! [illegible] போல் உனக்கிப்போது அவ்வளவு [illegible] றன. தைரியத்துடன் விடையளிப்பாய் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் எனக்கு யாதொரு [illegible] [illegible] என்றான். இதைக் கேட்ட ஜானகியம்மாள் மந்தஹாஸம் செய்தாள். தர்மாம் பாளும் தர்மனுடைய [illegible] தலைகுனிந்தபடி நின்றாள்.

இவைகளை யெல்லாம் கவனித்த தர்மன் உடனே தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு "அப்படியே செய்வேன்" என் றான். உடனே தர்மனுடைய [illegible] ஜான கியம்மாள் தர்மனைப் பார்த்துத் தங்களை இக்கடிதத்தைக் [illegible] இதற்கு மாத்திரமல்ல, வேறொரு காரியமுமுண்டு; அதா வது, தங்களைத் தவிர வேறொரு புருஷனுக்கும் கையைக் கொ டுப்பதில்லையென பெண்கள் [illegible] தர்மாம்பாளின் கொள் கையென்பது இப்போதைய கடிதத்தினால் தொண்டே தாங்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். தங்களது அபிப்பிராய

யும் அப்படியே இருக்கலாமென்று ஊகிக்கின்றேம். ஆன லால் தங்களுடைய தீர்மானமான அபிப்பிராயத்தைத் தங்கள் வாயால் கேட்டறிக்க விரும்புகிறேன்" என்றாள்.

தர்ம.—நீங்கள் ஊகித்தபடித் தீமையாய் இருக்கலாமென் று எவ்விதம் தீர்மானித்தீர்கள்.

ஜானகி.—நாங்கள் தீர்மானிக்கவில்லை. எவ்வளவு இருந் தாலும் புருஷர்கள் ஸ்வதந்திரர்கள். ஒரு காரியத்தைச் செய் யவும் செய்யாமலிருக்கவும் செய்யக் கருதியதை மாற்றவும் அவர்களுக்குச் சக்தியுண்டு.

தர்ம:—அப்படியெல்லாம் சந்தேகப்பட்டு மனங்குழம்ப வேண்டாம். நானும் உமது பெண்ணைத் தவிர வேறொருவர்கள் வினைகளைக் கைக்கொள் விருப்பமில்லையென்றே நிச்சயித்திருக்கி றேன் நம்புங்கள்.

ஜானகி:—மிகச் சந்தோஷம். ஒருகால் உங்களிருவர் கலியாணத்திற்கும் ஏதாவது விக்கினம் உண்டாகுமோ?

தர்ம:—அப்படியானால் உங்களுக்கென்ன கஷ்டம்? இவர் பெண்ணானாலும் இவ்வருஷம் எப்படியும் கலியா ணம் செய்தே தீரவேண்டியிருப்பதாலும் இவளை வேறு யாருக்காவது கொடுக்கவேண்டியதாகவே ஏற்படுமல்லவா?

ஜானகி:—அப்படிப் பொருந்தாதுமில்லை. எவ்வகை இடை யூறுகள் நேர்ந்தாலும் தன்னுறுதியைக்கொண்டும் பகவான் திருவருளைக்கொண்டும் ஆசைகளை விலக்கிக்கொண்டு எவ் வித அசந்தர்ப்பங்கள் நேர்ந்தாலும் பொருட்படுத்தாமல் தங்களுக்கே வாழ்க்கைப்படுவதாயும் அப்படி நேராவிடில் பிராணத்தியாகம் செய்வதாயும் இவளது தீர்மானம்.

ஸ்திரீ:—நியாயமில்லாவிடில் காய்ந்த தரையில் நடந்து வந்தவள் சேற்றையலம்பப் போகவும் மாட்டாய், நான் கேட்கவுமாட்டேன்.

தர்மா:—நீ என்னவோ மனதில் நினைத்துக் கொண்டு பேசுகிறாய்? என்னால் விடையளிக்க முடியாது.

ஸ்திரீ:—அடி யென் கண்மணி! உண்மையைச் சொல்லுகிறேன் கேள். நானுன்னைப் பரிகாசம் பண்ண இவ்விடம் வரவில்லை, தத்வமறியத்தான் கேட்கிறேன்; நீ என்னுடன் சாதாரணமாய் வந்ததும் அந்த யுவானை நீ கண்டு பிரமித்ததும் காலில் தூசுகூட இல்லாத சமயத்தில் காலிலுள்ள சேற்றையலம்ப அவனுக்கு மிகவும் சமீபத்திற் போய் நீ கவனித்துப் பார்த்துவந்தபிறகும் திரும்பித் திரும்பிப்பார்த்துக்கொண்டு வந்ததும் நானறிவேன்; நீ வயதான பெண்ணாகயிருப்பதால் நீயாகவே உத்தேசித்து ஒரு புருஷனை வரிக்கலாம்; ஆனால் அவன் நமது ஜாதி மதாசாரங்களுக்கு ஒத்தவனாக இருக்க வேண்டுமே என்பதுதான் என் கவலை; எப்படியுமுன்னை இவ்வருஷம் வாழ்க்கைப் படுத்தவேண்டியது அவசியமல்லவா?

தர்மா:—நானிவ்வளவு புஸ்தகங்களைப் படித்தும் குலகோத்திரம் தெரியாத ஒருவனிடம் மனதை வைப்பேனா? இருக்கட்டும் நீ அப்படி நினைக்கலாமா? அவர் நல்ல குலத்தினரென்றும் மஹா சற்குணங்களுள்ளவரென்றும் ஏராளமான சொத்துள்ளவரென்றும் நமக்குசிதமான ஜாதிவகுப்பைச்சேர்ந்தவரென்றும் முக்கியமாய் கீர்வாணபாஷையிலும் இங்கிலீஷிலும் கரைகண்டவரென்றும் குளித்தலை கோபாலசாமி அய்யரென்னும்வக்கீல்பிரபுவுக்கு புத்திரரத்தினமென்றும் நம் ராமேசுவர அண்ணாவுக்குப் பிரியஸ்நேகிதர் என்றும் அவர் வாக்கினாலேயே கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் சொன்னது முழுமையும் என்னை யுத்தேசித்தே என்று நான் கருதி அவரைப்பார்க்கவேண்டுமென்று வெகுநாளாய்

நினைத்திருந்தேன். இப்போது இருவரும் இணைபிரியாமல் நிற்பதைக்கொண்டும் அவரழகை யேற்கனவே நான் கேட்டதைக் கொண்டும் அந்த மகாபுருஷனாகத் தானிருக்கலாமென நினைத்துக் கவனித்தேன். அவர் நான் நினைத்த மகாபுருஷனேயானால் என்னைச் சீக்கிரத்தில் அவர் கையில் சேர்ப்பிக்க வழிதேடுங்கள்; வேறெந்தப் பாழுங்கிணற்றிலாவது தள்ளிவிடாதேயுங்கள்; என்னைக்காட்டிலும் வயதில் சிறிய பெண்களெல்லாம் கலியாணமாய் அதற்குசிதமான அழகான புடைவைக்கட்டுடன் திருமங்கல்யமும் கழுத்துமாய் பிரகாசிக்க நான் இந்தரீதியில் இருப்பது எனக்கு மிகுந்த வெட்கத்தை யுண்டுபண்ணுகிறது; இந்த அறையுண்டு நானுண்டு என்றிருப்பதற்குக் காரணமிதுவே.

ஸ்திரீ:—கண்மணி! எனக்குப் பரமசந்தோஷம்; இந்த விவரமறியத்தான் நான் இவ்வளவு தூரம் சிரமப்பட்டேன்; அவனைப்பற்றிய எல்லா விவரங்களையும் நீ யறிவாயா?

தர்மா:—எனக்குத்தெரியும். ஆனாலும், அண்ணா அவருடன் ஒரே கிளாஸில் படித்தவரானதால் அவரைக் கேட்டால் நன்கு விளங்கும்.

ஸ்திரீ:—ஆனால் சுந்தரத்தைக் கூப்பிடட்டுமா? அவனுடைய மனோபாவத்தையு மறிகிறேன்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்றவ்வறையில் சுந்தரமுந்தோன்றினான். நாம் முன்னத்தியாயத்திற் கூறிய சுந்தரேசனென்கிற நமது கதா நாயகியின் தமயனுக்கு வீட்டில் வழங்குகிற செல்வப் பெயர் சுந்தரமென்பது, ஆகையால், நாமும் அவனைச் செல்வத்துடனே வ்யவஹரிப்போம். நாம் முன்னத்தியாயத்திற் கூறியபடி காமேசுவரன் சுந்தரத்துடன் தனியாய்ப்போன காரணம் இன்னதென்று விவரம்சொல்லாமலே வாசகர்களுக்குக் கதா

அவன் சகோதரனுடைய சொத்தை யிழந்தவன், அயோக்யன், மனுஷ்யர்களிடம் தாரதம்யத்தைப் பாராமல் அக்ரமம் செய்பவன், இவனோ அமார் லக்ஷரூபாய்களுக்கு மேலான மதிப்புள்ள ஆபரணங்களுடனும் போயிருக்கிறான்; மூர்த்தியே அவனிடமிருந்து மணவுல்லதா நகைகேட்டு இவன் பறித்திருக்கிறான் இவைகளை யோசித்தால்; தர்மனுடைய பாக்யசீலமுமுள்ள இவன் இந்த ஆபரணங்களால் ஏதாவது ஹிம்ஸையை யடைந்திருக்கவேண்டும்; ஆனாலும் இந்த பயபேராசை மூர்த்தியே எனக்குண்டு ஆபரணங்களில் அவனுக்கு சர்வதா பிரீதியானதால் அவற்றைக் கழற்றி வைக்கவிட்டுப் போகச் சொல்ல அச்சமயம் என் மனது கொடுக்கவுமில்லை. எப்படியும் வருவன வந்தே தீரும்.

"[illegible] ஊழ்வினை யுருத்து வந்தூட்டும்"

"இலக்ஷ்மி விலகிவிட்டால் சேர்ந்ததைக் கொண்டுபோகும் போய்விடும் என்று சொல்லப்பட்ட பழமொழி சரியாகுது"

என்றிவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கையில், தபாற்காரனால் கொடுக்கப்பட்ட ஒரு கடிதத்தை வேலைக்காரன் வாங்கிக்கொண்டுவந்து தர்மனிடம் கொடுத்தான், தர்மன் அதைப் பரபரப்புடன் வாங்கி தபாலாபீஸ் முத்திரையைப் பார்த்தான். சென்னை மைலாப்பூர் தபாலாபீஸ் முத்திரை யிருந்ததைக் கண்டு, தமது தகப்பனார் எழுதிய கடிதமாகவே இருக்கவேண்டும் என்று நினைத்தான் உடனே கவரைக் கிழித்து அதைப் பிரித்து வாசிக்கலானான்.

கடிதம். மைலாப்பூர், சென்னை.

க்ஷேமம். தைமீ 28-ந் தேதி.

"என் அருமைச் செல்வச் சிரஞ்சீவியாகிய தர்மனுக்கு உனதன்புள்ள பிதாவின் ஆசீர்வாதம்—

சென்ற புதன்கிழமைதினம் நமது கேஸ் முடிவு சொல்லப்பட்ட சங்கதியை சந்தோஷத்துடன் தெரிவிக்க விசாரிக்கிறேன். அது நமக்கு ஜோதாவாய் முடிந்ததுடன் இதுவரையிலுள்ள செலவுகளையும் நாம் பிரதிவாதிக்குக் கொடுக்கும்படி தீர்ப்புச் சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கிதனால் ஒரு பெரிய ஆறுதலாய்த் தோன்றுகிறது. பிரிவிகௌன்ஸிலில் அப்பீலுக்கு ஹைகோர்ட்டில் உத்தரவு கிடைத்திருக்கிறது; நமது வக்கீல் ஜான் மாரிஸ்டன் என்பவர் எப்படியு மிந்த கேஸ் நமக்கு ஜெயமாய்ப் போகாதென்று உறுதியாய்ச் சொல்லி, தானே லண்டன் போய் வாதம் செய்வதாய் வகாலத்து வாங்கிக்கொண்டிருக்கிறார்; அதற்குப் போதுமான பணந் தயாரித்திருப்பது வேண்டியதாயிருக்கிறது; இனி நமக்கு தற்சமயத்தில் கடன் கிடைப்பது அரிதாயிருக்குமென்று நினைத்து இவ்விடத்தில் ஒரு பாங்கியில் ரூபாய் பதினையிரத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்; இவ்விடத்திய காரியங்களை ஒருவாறு முடித்துக்கொண்டுதான் நான் வருவதற்கில்லை; நீ இதற்காக அதிக கவலையை மனதிலடைந்து சரீரத்தில் வியாதியை வரவழைத்துக்கொள்ளாதே; "வருவன வந்தே தீரும்" என்பான சாஸ்திரத்தை நித்தியமனதில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று வல்ல சாஸ்திரிகளுக்கும் காமேசுவரனுக்கும் எழுதிவிட்டேன்; உன் தாயாருக்கு தைரியம் சொல்லி, நாளில்லாத காலத்தில் அனாவசியமாய்ச் செலவு செய்யவேண்டாம். நமது குடிக்காரர்களின் காரியங்களைச் சரியான காலங்களில் கவனித்து வரும்படி. கிருஷ்ணசாமி ஐயருக்கு மற்றொரு தடவை ஞாபகப்படுத்தவும்.

உனதன்புள்ள பிதா
கோபாலசாமி அய்யர்.

இக்கடிதத்தைப் படித்தவுடன் நமது தர்மனுடைய மனம் பட்டபாட்டிற்கோரளவில்லை. சற்றுநேரம் திக்பிரமம் பிடித்தவன்போல் உட்கார்ந்திருந்தான். குறைவு வந்துவிட்டபடியால் நாமினியெப்படி பழைய மதிப்புடன் வெளிச்செல்லலாமென்று துக்கித்தான். பிரதிவாதி தனது செலவுக்காக நிறைவேற்றி வரும்பக்ஷத்தில் நாமெவ்விதம் அவனுக்கு அதை செய்வதென்று தவித்தான். கடன் நிர்ப்பந்தங்களுக்காக நமது சொத்துக்களை விற்போமென்றாலும் இதையறிந்தவர்கள் நன்கிரயங்களுக்கு கேட்பாரோ என்று மயங்கினான். நமதன்னை இவ்விடம் இப்போதில்லையானதால் அவளுக்கிந்த துயரச்செய்தியைச் சொல்ல நேராததைப்பற்றி ஒருவாறு சந்தோஷிக்கிறோமென்றாலும் நமது பிதாவின் ஸங்கற்பத்திற்கு விருத்தமாய் நாமவளை யனுப்பிவிட்டோமேயென்று கலங்கினான். இவ்வளவோடில்லாமல் நமதுதாயைப்பற்றிய சமாசாரம் ஒன்றும் தெரியாதபடியால் இது நாமாகச்செய்துகொண்ட அனர்த்தமாகையால் புத்திமிகவும் தடுமாறுகின்றது என்று உருகினான்.

இவனிவ்வாறு துக்கக்கடலில் மீர் மனுஷ்யனுடைய தொழிலைச் செய்துகொண்டிருக்கையில், ஒருவர் திடீரென்று எதிரிற்றோன்றி, 'என்னப்பா தர்மா! எல்லாம் படித்தும் உலக நடைபற்றும் கர்மகதிகளை விலக்க முயலுகின்றவன்போல் தவிக்கின்றாய்? இந்தக் கேஸ் தோற்றுவிட்டதால் உனக்கு எப்போதுமுள்ள கௌரவமும்சொத்தும் குறைபடப்போகிறதில்லை; சொற்ப கடன்கள் ஏற்பட்டு விட்டனவே என்று சிந்திக்கவேண்டிய அவசியம். உனது தகப்பனார் இரண்டுமாசம் கொஞ்சம் அக்கறையுடன் தன் தொழிலை நடத்தினால் இதைப்போல் மூன்று பங்கு கடன்களானாலும் பயப்படாமல் ஒழித்துவிடலாம்; நீ கவலைப்படாதே" என்று

சொன்ன வார்த்தைகளைக் கேட்ட தர்மன் திடுக்கிட்டு எழுந்திருந்து, வாருங்கள் மிஸ்டர் கிருஷ்ணஸாமி அய்யர்! என்று கூப்பிட்டு உட்காரவைத்து என் மனக்கவலையால் தாங்கள் வந்ததைக்கூட நான் கவனித்தவனல்லன். அவ்விஷயத்தைப் பற்றி மன்னிப்பு கேட்கிறேன் என்றான்.

கிருஷ்ண:—அப்பா தர்மா! நீ யெனக்கு உபசாரம் செய்யவில்லையென்று நான் கோபிக்கவில்லை. உன் தகப்பனாரிடமிருந்து, கேஸ் தோற்றுப்போய்விட்டதென்று இப்போது தான் கடிதம் கிடைத்தது. அதில் உனக்குத் தைரியம் சொல்லும்படி எழுதியிருக்கிறது. அதைக்கண்ட உத்தரக்ஷணமே இங்கு வந்தேன்.

தர்ம:—தாங்கள் எங்களுக்குச் செய்யும் உபகாரத்திற்குப் பிரதி செய்ய நாங்கள் சக்தியற்றவர்களா யிருக்கிறோம்; எனக்குமிப்போதுதான் கடிதம் கிடைத்தது. அதில் தனது கோர்ட்டு வேலைகளைப்பற்றித் தங்களிடம் மற்றுமொரு தடவை ஞாபகப்படுத்தும்படி அப்பா எழுதியிருக்கிறார். தாங்களே தற்செயலாய் இவ்விடம் வந்துவிட்டீர்கள்.

கிருஷ்ண:—உங்களுக்கென்னாலாக வேண்டிய காரியங்களில் நானெப்போதும் ஊக்கத்துடனிருக்கிறேன். நானுங்கள் தகப்பனாரால் முன்னுக்கு வந்தவன். நான் சுமார் ஐந்து வருஷங்களுக்குமுன் வக்கீல் பரீட்சையில் தேறி இவ்விடம் வந்து கொஞ்சநாளிருந்து வக்கீல் வேலையின் தந்திரங்கள் தெரியாமையால்வரும்படி கிடைக்காமற்போனதுபற்றிஇனி நமக்கிந்த வக்கீல் தொழில் உதவாதென்று நினைத்து வேறு ஏதாவது வேலையில் சொற்பச்சம்பளத்திற்காக அமர்ந்துவிட ஏற்பாடு செய்துகொண்டிருந்தேன்; அப்போதுன் பிதா என்னைத்தடுத்துச் சிலதந்திரங்கள் சொல்லிக்கொடுத்து

கொஞ்சகாலவரையில் தன்னிடம் வைத்துச் சில்லரைக் கேஸ்களையென்னிடம் தள்ளிவிட்டார், பின்பெரிய கேஸ்களில் தான் கூட இருந்து என்னைப்பேசச்செய்தும் கடைசியாய் கொஞ்ச காலத்தில் என்னை ஒரு பிரபல வக்கீலாகச்செய்துவிட்டார். எனிப்போது ஏராளமாக வரும்படி யடைந்து வருவதோடு கிடைத்த முனிசிப்வேலையைக்கூட மறுத்துவிட்டேன். இவ்வளவும் உன் தகப்பனார் அனுக்ரகமே.

தர்மா:—சரி, நிரம்ப சந்தோஷம். என்னையுத்தேசித்து தாங்கள் இவ்வளவுதூரம் வந்ததைப்பற்றி நான் நன்றியுள்ளவளாயிருப்பேன்.

கிருஷ்ண:—[illegible] இந்த இடத்திற்கு வந்ததில் எனக்கு அவ்வளவாகத் திருப்தியில்லை. நீ [illegible] இந்தப் பட்டிக்காட்டு ஜனங்களிடத்தில் [illegible] உன்னை [illegible] ஒரு [illegible] அபேக்ஷையாக [illegible] கொண்டுவந்தேன். ஆகையால் [illegible] [illegible] வேண்டியதில்லை. [illegible] நிற்கு நான் என் தொழில் முறைமையில் ஓய்வடைந்து உன்னிடம் நின்று பேசவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

இவர்களிவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் ஒரு பையன் கையிலொரு சிவந்த வர்ண [illegible] யேந்திக்கொண்டு 'ஒரு தந்தி வந்திருக்கிறது அப்பருக்கு', என்று சொன்னதும், வாயில் காவலாயிருந்த வேலைக்காரன் அதை வாங்கிவந்து தர்மாளிடம் கொடுத்தான். தர்மன் அவரைக் கண்டதும் தந்தியெனத் தெரிந்துகொண்டு அதனுடனிருந்த ரசீதுக்காகிதத்தில் கையெழுத்துச் செய்து, இரண்டணா பணத்துடன் அந்த ரசீதை அந்தப் பையனிடம்

கொடுக்கச்சொன்னூரது. லக்கோட்டாவை உடைத்து அதிலுள்ள தந்திசமாசாரத்தைப் படித்தான்.

தந்தி. ஈரோட்.

காலை 7-மணி 15-நிமிஷம், ஜுலை 29-ந் தேதி

தர்மராஜ அய்யர்.

வக்கீல் கோபாலசாமி அய்யர்குமாரர்.

குளித்தலை.

"ஸாவித்ரீ மிகுந்த அபாய ஸ்திதியில் இருக்கிறாள். உடனே புறப்பட்டு ஈரோட் லக்ஷ்மி விலாச பங்களாவிற் பார்க்கவும் ரத்னவல்லி"

என்று எழுதியிருந்தது. இதைப் படித்தவுடன் தர்மனுடைய சித்தம் கலங்கிற்று. முகம் வெளுத்தது. கண்களில் நீர்பெருகிற்று, உடம்புசோர்ந்து சாய்ந்தான். 'ஐயோ! இனி நானென்ன செய்வேன்' என்று கூவினான்.

இவைகளெல்லாம் பார்த்திருந்த [illegible] 'தர்மா! ஏதாவது கஷ்டம் நேர்ந்ததா? அதை [illegible] தெரிவிப்பது [illegible] யோசிக்காதே [illegible] கஷ்டம் நேர்ந்தவுடன் முன்பின் யோசியாமல் [illegible] ஸ்திரீ [illegible]' [illegible] யோசிப்போம் என்றார்.

தர்மா:—ஐயா! நான் எனது தாயை பாலியத்தில் இழந்துவிட்டேன். பிறகு கொஞ்ச நாட்களுக்கெல்லாம் இவள் எனது தந்தையின் இருதயத்திற் குடிபுகுந்துவிட்டாள். அதுமுதல் அவள் என்னிடம் வைத்திருக்கும் அன்பிற்கும் அவள் என்னைச் சீராட்டி வளர்த்த அழகிற்கும் நான் ஏழு ஜன்மம் அவளுக்கு உழைத்தாலும் போதாது. அவள் எனக்கு மாற்றாந் தாய் என்பது சிலருக்கே தெரியும். இவள் என்னை நடத்தும்

விதத்தினுல் நான் தாயை யிழந்ததே எனது பாக்கியமென்று நினைத்திருக்கிறேன், இவளுக்கு, தன்வயிற்றில் பிறந்த குழந்தைகளைக்காட்டிலும் நானதிகமென்பது அனேக சமயங்களில் எனக்கு விளங்கியிருக்கின்றது.

கிருஷ்ண:—அப்படி யிருப்பதாற்ருன் உன் தகப்பனர் பேருக்கனுப்பவேண்டிய தந்தியை உன் பேருக்கனுப்பச் சொல்லி யிருக்கிருர் என்று நினைக்கிறேன்.

தர்மன்:—அப்படியுமிருக்கலாம்,

கிருஷ்ண:—தந்தியனுப்பியிருக்கிறது ஒரு ஸ்திரீயெனத் தோன்றுகிறது. ரத்னவல்லியென்பவள் யார்? உனக்குத் தெரியுமா? உனது தாய் ஊட்டிக்கு எக்காரியமாய்ப் போயிருக்கிருள்? ஊட்டியிலிருக்கும் "லக்ஷ்மீ விலாஸ்" என்கிற பங்களாவை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன்; அது கோயம்புத்தூரில் பெரிய மிட்டாதாராகிய ஜம்புலிங்கப்பருக்குச் சொந்தமென்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

தர்மன்:—எனது தாயாருக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் மூவருமுண்டு. அவள் சகோதரிகள் மூவரில் கடைசியானவளுக்கு ரத்னவல்லியெனப் பெயரென்று என் தாயார் சொல்ல வறிவேன்; அவளை மன்னார்குடியிலேயே கொடுத்திருக்கிறார்களென்றும் அவள் புருஷன் மிகுந்த சொத்துள்ளவரென்றும் கேள்வி. ஆனுல் எனக்கு அவர் பெயர் இன்னதென்று தெரியாது.

கிருஷ்ண:—ஒருகால் இந்த ரத்னவல்லி உன் தாயின் தங்கையாய் இருந்தாலும் இருக்கலாம். உனது தாயாரை ஊட்டிக்கு உனது பிதா அனுப்பினரா நீ யனுப்பினயா? யாருடன்கூட அவள் போனுள்?

தர்மன் இதைக்கேட்டு, பட்டாபிராமய்யர், வந்ததும் ஸாவித்ரி தனது பிறந்தகம் போகவேண்டுமென்று தன்னைக் கேட்டதும், தான் ஆக்ஷேபித்ததும் கடைசியாய் நிர்ப்பந்தத்தினால் அவளை அவள் தமையனுடன் சேர்த்தனுப்பியதும் ஆகிய இவற்றையெல்லாம் கிருஷ்ணஸாமிஐயரிடம் சொல்லிவிட்டுப் பட்டாபிராமய்யர் என்பவன் ஒரு பெரிய போக்கிரியானதால் அவனாலேயே அவளுக்கேதாவது விபத்து நேர்ந்திருக்கவேண்டுமென்றும், அவள் தங்கையாகிய ரத்னவல்லி தனது தமக்கையின்பரிதாபநிலைமை, அவளனுமதியின்பேரில் எனக்கு தந்திமூலமாய்த் தெரிவித்திருக்கவேண்டுமென்றும்'' போட்டியிருக்குங்காரணம் விளங்கவில்லையென்றுஞ்சொல்லி, மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் கேட்டான்.

கிருஷ்ண:—இவ்விஷயங்கள் எனக்கு மெத்த வியப்பை உண்டுபண்ணுகின்றன. ஆனாலும் மத்தியானம் ஒரு மணி வண்டியிற் புறப்பட்டால் 5-மணிக்குள் அவ்விடம் போய்விடலாம். அவளையுடனே யழைத்துவரக் கூடுமானால் இராத்திரியே இவ்விடம் வந்துவிடலாம்.

தர்மன்:—அவசியம் தாங்களும் என்னுடன் வரவேண்டும். மேலும் செலவிற்குக் கொஞ்சம் பணமும் தாங்களே எடுத்துவரவேண்டும்.

கிருஷ்ண:—பணம் கொண்டுவருகிறேன், நானெதற்குக் கூடவரவேண்டுமென்கிறாய் ?

தர்மன்:—ஆபத்காலங்களில் ஒருசகாயமிருப்பது சிலாக்கியமல்லவா ?

கிருஷ்ண:—சரியப்படியானால் இன்றைய தினமுள்ள கோர்டுக் காரியத்தை வேறொருவரிடம் ஒப்புவித்துவிட்டு பணத்துடன் 12-மணிக்கு வந்து சேருகிறேன்.

தர்மன்:—சரி தங்காமல் வரவேண்டுமென்று சொல்லி அவளை யனுப்பிவிட்டு, மிகுந்த மனக்குழப்பத்துடன் தானும் அறைக்குச் செல்ல எழுந்திருந்தான். அப்பொழுது ஒரு அபஸவ்ய கௌளியின் சப்தத்தைக் கேட்டு, நமக்கு இப்போது எந்த பாபகர்மம் பரிணமிப்பதற்கு வந்திருக்கிறது தெரியவில்லை, இப்போது சம்பவித்திருக்கிற கஷ்டம் எப்படிப்பட்ட முடிவிற்போய் நிற்குமோ அதுவுந் தெரியவில்லை, நாம் தொட்ட காரியமான வழக்குத் தோற்றது. பாரமான கடன்கள் பெருகிற்று. தாயாருக்கு ஆபத்து நேரிட்டது. இப்போது சொல்லிய கௌளியால் என்னும் ஏதாவது தீங்கு நேரிடுமோவென்று அஞ்சுகிறேன். இந்த பக்ஷமாய் மனோபதியை ராத்திரி மதுரைக்கு [illegible] அனுப்பியிருப்பதாய்ப் பிரதிக்ஞை செய்து வைத்திருக்கிறேன்; அதெப்படி நிறைவேறப் போகின்றது; அந்தப் பெண்ணின் [illegible] அசாத்தியமான காரியத்தில் பிரவேசித்திருக்கிறேன்; [illegible] பிரசவமாயினவளை [illegible]; அதனுக் கப்பொழுதைக்கு [illegible] நின்று [illegible] கொடிய விஷம்; [illegible] அநேகவித கஷ்டங்களுக்கே பாத்திரமான [illegible] இசைவிட்டால் [illegible] செய்வதென்னவென்று அறியேன்; [illegible] அவனுக்கும் [illegible] கஷ்டங்களை [illegible] என்று நினைக்கிறேன். தர்ப்பாக்கியசாலியாகிய எனக்கு அப்படிப்பட்ட ஆறுதும் அதற்குத்தக்க [illegible] அபரிமிதமான [illegible] பாவையில் [illegible] எப்படிக் கிடைக்கப்போகிறது. [illegible] தனக்குப் பயமாய் [illegible] யடைய [illegible] நேர்ந்தான், ஆனால் தெய்வம் அவ்வாறு அநேகமாய் சேர்த்துவைப்பதில்லை; எனக்குத் தன்

மனைவியின் அழகிலும் லஜ்ஜை முதலிய குணங்களிலும் குறையில்லை; தெருவில் இப்படிப்பட்ட அநேக பெண் களை அடையலாம், அவளுடைய ஸம்ஸ்க்ருதப்புத்தியைப் பார்த்த என் மனம் களிக்கின்றது; அல்லாமல் வல்ல பரமாத் மாவிற்கு அந்தப் பெண்ணை எனக்குச் சேர்க்க இச்சையிருந் தால் நான் எவ்விதத்தும் குறையாது போனதால் ஒன்றும் தவறிப்போகாது. காவலையிட்டாலும் அப்பெண்ணைச் சேர்ந்தவர்கள் தேசம் தேசமாய் அலைந்து அவளுக்குத் தக்க படி குணம் வித்யை அழகு முதலியவற்றால் நிரம்பின மாப்பிள்ளையைத் தேடி அவளைக் கொடுத்துவிடுவார்கள். எனக்கு மாத்திரம் அப்பெண்பணிபோல் பெண் கிடைப்ப தில்லை; ஆகையால் அப்பெண் கிடைக்காமற்போனால் விவா கத்தையே மறுத்துவிடுகிறேன் என்று சங்கற்பித்தவ புகவான் என்று மாதா பிதாக்களின் மனதிற் புகுந்தே மே லெழுந்த மனதை இவ்விதம் ஆலோசித்துக்கொண்டு தம் ம ஸ்ஜன அறைக்குச் சென்றான்.

---

## பதினோராம் ஆச்வாஸம்.

## துர்ஜன காரியம்.

இப்பிறவியில் நானென்வித தீவினையும் மனதாரச் செய்தவளல்ல; இது முற்பிறவியில் இயற்றப்பட்ட பாபத் திற்கே பலனாகும்; இப்போது நானிருக்கும் ஸ்திதியைநோக் கால் நான் பிறந்து வளர்ந்த செல்வமும் நான் வாழ்க்கைப் பட்ட விடத்தில் நானடைந்திருந்த பெருமையும் பொய்

யென்றே நினைக்கவேண்டியவளா யிருக்கிறேன். நான்
கண்ணை விழித்துப் பார்த்ததும் நிலைதெரியாமற் றனிக்கை
யில் கொஞ்சநேரம் கழிந்தவுடன் காபியும் கையுமாய்வந்த
ரத்னவல்லியைக்கண்டதும், அவர் என் வீட்டிலிருப்பதாக்
நீ கவலைப்படவேண்டாமென்று சொன்னதும், நாம் எல்
லாரோ நமது தங்கையின் வீட்டிலிருக்கிறோமே யென்று சந்
தோஷித்தது முழுமையும் நினைத்தாலிப்போது எனக்கு
நஞ்சாக விருக்கின்றது. குலத்தைக் கெடுக்கவந்த சண்டாளி
யை நினைத்தாலும் பாவம் வரும். கஷ்டம்! கஷ்டம்! நான்
படுக்கையிலிருப்பதை லக்ஷியம் செய்யாமல் என் கண்களுக்
கெதிரிலேயே தனக்கிசைந்த நாயகனுடன் தோளிற்கை
போட்டுக்கொண்டு போகிறாளே! பாவி ரத்னவல்லி! நீயேன்
நமது வம்சத்திற்பிறந்தாய். உனது கையால் தீர்த்தம்கூட
சாப்பிடாமலிருக்க நினைப்போமென்றாலும் பாவி உயிர்பதைக்
கிறதே; இங்கேன் என்னைக்கொண்டுவந்து போட்டிருக்கிறா
யென்று கேட்டால் தானுகத்தெரியுமென்கிறாயே, உனது
[illegible]தொழிலைக்கண்டு நான் மகிழவேண்டுமென்கிற எண்ணமா
உனக்கு? தமயனெனப்பெயர் வைத்துக்கொண்டிருக்கும்
அந்த துரோகி என்னையிப்படி வயிறெரியச் செய்தார்
இவர் இவ்விதம் என்ன நடக்கிறதும் யாருடைய தூண்டு
தலாலோ தெரியவில்லை. நானினி உயிர்தரித்திருப்பதைவிட
இறப்பதே மேலென நினைக்கிறேன். நானிந்த வியாதிக்கு
வந்த பிறகு சகல குணாகாரராகிய எனது பிராணநாதனையும்
ஜகன் மங்களமூர்த்தியான எனது குழந்தை தர்மனையும்
எப்படிப் பார்ப்பேன். குழந்தை தர்மனுக்கு 'தந்திகொடு,
தந்திகொடு,' என்று நான் பிரதிதினமும் சொல்லியும் என்ன
அவசரமென்கிறாள். எனக்குச் சொன்ன வார்த்தை கேட்க
வேலைக்காரனுமில்லை. கையிற் காலணாக்கூட காசுமில்லை,

பாய் நகைகளையுமிழந்தேன். இவ்வித ஸ்திதியிலிருக்கும் எனக்கு இவ்வூரில் நற்குணமுள்ள ஒரு தோழி கிடைக்க அவளால் எனக்கெவ்வித நன்மை கிடைத்துவிடுமோவெனப் பயந்து இந்தப்பாவி அவளை இவ்விடம் வரக்கூடாதென்று கண்டித்துவிட்டாளே. ஆயினும் ஒரு நாழிகையளவாவது அவளுடன் பேசிக்கொண்டிருந்தது எனக்குக் கொஞ்சம் ஆறுதலாயிருக்கிறது. கடைசியாய் அவள், தன் பெயர் ரத்னமென்றும் தர்மனுக்குத் தந்தி கொடுக்கிறேனென்றும் சொல்லிப்போயிருக்கிறாள். அவளவ்வாறு செய்திருந்தால் குழந்தை தர்மனைப் பார்க்கலாமென்று நினைக்கிறேன்-

என இவ்வாறு புலம்பிக்கொண்டு லக்ஷ்மீவிலாச பங்களாவின் ஓரறையில் ஒரு மாது படுக்கையில் படுத்தபடி கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தாள்.

அப்போது இடுப்பில் சுமார் 200 ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள உயர்ந்த ஜரிகைப்பட்டாடையுடனும் மிருந்த பளபளப்புள்ள பொன் ஜரிகையிட்ட ரவிக்கையுடனும், காது மூக்கு கை கால் முதலிய சர்வாங்கங்களிலும் விலைமதிக்கப்படாத சிமைக்கமலங்களிழைத்த பூஷணங்களுடனும் ஒய்யாரமான நடையுடனும் அகங்காரத்தை விளக்கும் பார்வையுடனும் கோவைப்பழத்தைப் பழிக்கவல்லமையுள்ள உதடுகளில் தாம்பூலதாரணத்தால் உண்டான விசேஷச்சிவப்புடனும் ஸ்திரீகளுடைய மனதைக்கூட ஒருவாறு பிரமிக்கச் செய்யும் சக்தியுள்ள திவ்ய சௌந்தரியத்துடனும் கூடிய சுமார் 20 வயதுள்ள ஒரு யுவதி அவளுடைய படுக்கையினருகிற்சென்று கம்பீரமான குரலுடன் "என்னடி அக்கா! பொம்மனாட்டிகளெல்லாம் நீலிகளென்று புருஷாள் சொல்வதற்குத்தக்கவாறு நீயெப்போதும் கண்ணீர்சொரிந்துகொண்டே

யிருக்கிறாயே. நீயென்ன காட்டில் விடப்பட்டிருக்கிறாயா! சிறையி லடைக்கப்பட்டிருக்கிறாயா? ஏனிப்படி மாய்மாலம் செய்கிறாய்? உன் சகவாசம் ஆகாதென்று தெரிந்திருந்தும் அர்த்தபாலியின் வேண்டுகோளால் சனியனை வரவழைப்பதுபோல் உன்னை இவ்விடம் தருவித்துக்கொண்டேன். உன் குணமறிந்துதானே உன் வீட்டைக் குறித்து நான் இழவுக்கும் வருவதில்லை; கலியாணத்திற்கும் வருவதில்லை. உனக்கிருந்த அகம்பாவத்தைச் சொல்லப்போமா? அடங்கிவிட்டார். உன் தேகத்தில் இருந்த பளபளப்பும் நக்ஷத்திரங்களைப் போல உடம்பு முழுவதும் மின்னிக்கொண்டிருந்த நகைகளும் அபாரமான கர்வத்தை யுனக்குண்டாக்கிக்கொண்டிருந்தன? அவையெல்லாம் இப்போதெங் கிருக்கின்றன பார்த்தாயா? அபரிமித கர்வத்தை யடைந்தவர்களை யடக்க அருள் நிறைந்த கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை நீ மறந்திருந்தாய்'' என்றிவ்வாறு இராமபாணங்களைப்போல வார்த்தைகளை இச்சிறுமி தொடுத்துக்கொண்டிருக்கையில் பக்கத்திருப்பவள், பின்னும் பெருகிவரும் நேத்திர ஜலத்தை முன்றானையாற் றுடைத்துக்கொண்டிருந்தவளாய்த் துயருடன் "அம்மா ரத்னவல்லி! எனக்கிப்படி ஆபத்து எங்கிருந்து வந்ததோ எனக்கே தெரியவில்லை. ஆயினும் இப்படிப்பட்ட ஆபத்காலத்தில் நீ யெனக்கு உதவிசெய்ததற்கு ஈசனுனக்குக் கிருபைபுரிவாராக. நீ க்ஷேமமாய் இருப்பாய். நான் பிறந்த பொல்லாத வேளையென்று உனக்குத் தெரிந்திருந்தும் நீ யெனக்காக அனாவசியமாய்க் கஷ்டப்படவேண்டாம். என் குழந்தைக்கு ஒரு கடிதமாவது போட்டு அவனை வரவழைத்து என்னை யவனிடம் ஒப்புவித்துவிட்டாயானால் உன் பாரம் நீங்கிவிடும். தயவுசெய்து இனிமேலாவது அப்படிச் செய்துவிடு'' என்றாள்.

அதற்கு ரத்னவல்லி, "என்னடி நீ மெத்த பேச்சுக்காரி யான்; எனக்கு நன்றாகத் தெரியுமுன்னை; நிறுத்து குழந்தையாம், கடிதமாம், பெற்றுவளர்த்தவள் மாதிரிதான். இரு இரு உன் நல்லாம்படையான் வருவான்" என்று மூர்க்கமாயும் படபடப்பாயும் கம்பீரமாயும் சொல்லிவிட்டு எழுந்திருந்து போய்விட்டாள்.

நேயர்களே! இவ்வுத்தமியும் இக்கொடுமைக்காரியும் யாவரென்று நாம் சொல்லாமலே நீங்களறியக்கூடும். படுக்கையில் இருப்பவள் குளித்தலை வக்கீல் கோபாலசாமி அய்யர் தர்மபத்னி ஸாவித்ரீ. அவளோடு பேசியவள் அவளது கடைசித் தங்கை ரத்னவல்லி. ஆனாலிவர்கள் ஈரோடு லக்ஷ்மி விலாஸ பங்களாவுக்கு வந்த காரணமும், நமது ஸாவித்ரீயின் தற்கால ஸ்திதிக்குக் காரணமும் உங்களுக்கு விளங்க நியாயமில்லை. அதைக் கூறுகிறோம்.

குளித்தலையிலிருந்த ஸாவித்ரியை அவளது குமாரனாகிய நமது தர்மனுடைய அனுமதியின்பேரில் பட்டாபிராமய்யர் அழைத்துப்போனாரென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமே. அவன் அவளை இராமாபுரம் கொண்டுபோய்ச் சேர்த்தபிறகு 2-3-நாள் வரையில் மதிப்புடனும் மரியாதையுடனும் எல்லாரும் நடத்திவந்தார்கள். ஒருநாள் மத்தியானம் வீட்டிலுள்ள எல்லாரும் வேலையின்றிப் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் பட்டாபிராமய்யரின் பத்னீ ஸாவித்ரியிடம் வந்து, கணவனையிழந்திருக்கிறாளென்பதையும் மதிக்காமல் உயர்ந்த ஒரு ஆஸனத்திலமர்ந்து; "அம்மா! நம்ம கமலக்குட்டியை உங்கள் பிள்ளைக்குக் கலியாணம் செய்து கொள்ளக்கூடாதென்று நீங்கள் சொல்லிவிட்டபிறகு நாங்கள் அவனுக்குக் கன்னியாமடம் கட்டிவிடவில்லை. உங்கள்

தயவால் அவளுக்கும் உன் பிள்ளையைக் காட்டினாய். 100-பங்கு உயர்த்தியான பிள்ளைக்குக் கலியாணம் நிச்சயமாயிருக்கிறது" என்றாள்.

இதற்கு ஸாவித்ரி பதிற்சொல்லுமுன்னமே அருகிலிருந்த ரத்னவல்லி, "அடியே மன்னி, நீயென்ன பேத்தலோ? அவளுக்குப்பிள்ளை ஒன்றுவைத்த பொழுதோ, அவளுக்குப் பிறந்த பிள்ளை அன்னிக்கே போய்விட்டது. மூத்தாபிள்ளையைக் கொஞ்சுகின்றாள். அவன் அழகாயிருப்பானும். அவளோடே எப்போது பார்த்தாலும் சிரித்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கிறாளாம். அது என்ன ஸ்நேகமோ தெரியவில்லை" என்றாள். கூடவிருந்த மீனாக்ஷி "என்ன ஸ்நேகமாவது? அவன் சிறுபிள்ளை, நல்ல அழகுடையவன். வேறென்ன வேண்டும், கிழவனுக்கு அதிலும். அடிக்கடி ஊருராய்த் திரியும் தொழிலாளனுக்கு வாழ்க்கைப்பட்ட ஸ்திரீகளுக்கு" என்று சொன்னவுடன், எல்லாரும் குலுங்க நகைத்தார்கள். பாவம் ஸாவித்ரிக்கு இச்சொற்கள் காய்ச்சின நாராசம் போற் காதிற் புகுந்தன. பதிற்சொல்ல புத்திக்கு ஒன்றும் தோன்றவில்லை. சரீரம் படபடத்தது, மார்பு துடித்தது. முகம் வேர்த்தது. கண்கள் சிவந்தன, புருவங்கள் உயர்ந்தன, கண்ணீர் தொண்டையையடைத்தது. அவளுக்குத் துணையாய் அவள் பக்ஷத்தில் பேசுகிறவர்கள் அங்கு ஒருவருமில்லை. அங்குப் பக்கத்தில் அவளும் அவளுடைய இரண்டாவது தமக்கையாகிய கமலாவுமே நற்குணமுடையவர்கள், கலியாணத்திற்கு அவர்கள் சமாசாரமே அறியாதபடியால் அவளைத் தேடி வரவில்லை, ஆகையால் பாவம் ஸாவித்ரி பாக்கியமே தனியாய்க் கண்ணீர் பெருக்கிக்கொண்டு பட்டாபிராமய்யரைப் பார்த்து, "அண்ணா என்னை யிப்படி யவமானப்படுத்த வெண்ணிக்கொண்டுதான் உமங்களிப்பிரார்த்தனை யென்று போய்

சொல்லி இவ்விடம் அழைத்து வந்தாயோ?" என்றாள். அதற்கந்த அயோக்யன், "இம்மட்டுமா உனக்கவமானம், இன்னம் எவ்வளவோ சிரிப்பாச் சிரிக்கப் போகிறாயே தெரியாதா வுனக்கு?" என்றான்.

ஸாவித்ரி:—ஏனண்ணா நானென்ன தப்பிதம் செய்தேன் உனக்கு.

பட்டா:—தப்பிதமா, அன்று ராத்திரி நானுன்னைப் பெரிய பிரபுவாக வைத்து எவ்வளவு கெஞ்சினேன். முகங் கொடுத்துப் பேசினையா? எனக்கப்போது எவ்வளவு அவமானமாயிருக்கும், என்ன நான் சொத்திற் குறைந்தாலும் உனக்குத் தமயன்தானே. அதை நீ நினைத்தாயா?

ஸாவித்ரி:—அண்ணா நீ யதைக் குற்றமாக நினைத்து அதற்காக என்னை யவமானப்படுத்துவது நியாயமல்ல, உன் பெண்ணை என் பிள்ளைக்குக் கொடுப்பதானால் நான்மாத்திரம் சம்மதித்தால் காரியம் தீர்மானமாய்விடுமா?

மீனா:—தீர்மானமாகட்டும் அல்லது ஆகவேண்டாம், நீ நமது அண்ணா பெண்தானே என்று சம்மதித்துவிட்டால் மற்றவர்கள் சம்மதியாமல் என்ன செய்வார்கள். அகமுடையானைத்தான் ஆடு என்றால் ஆடும்படிக்கும், பாடு என்றால் பாடும்படிக்கும் செய்து வைத்திருக்கிறாயே.

பட்டா:—அவ்விதம் இவளுக்கு மற்றப்பேர்கள் கட்டுப்பட்டதாகவே வேண்டாம், இவள் சரிதானென்று சொல்லிவிட்டால் மற்றப்பேர்களையும் நானெப்படியாவது சரிப்படுத்திக்கொள்ளுகிறேன், அப்படி முடியாவிட்டால் நான் வந்த வழியாய்த் திரும்பிவிடுகிறேன். இவளே மறுத்தால் பின் என்ன காரியத்தை யாரைக் கேட்கிறது?

ஸாவித்ரி:—ஒரு வயிற்றிற் பிறந்தவர்களான நமக்குள் பாதகமில்லையென்று நான் சொன்னேன், நான் மறுத்த தற்கே உனக்கிவ்வளவு ரோஷம் உண்டாயிருக்கிறதே, காரியம் முடியாதென்று நிச்சயமாய்த் தெரிந்திருக்கையில் நீ மற்றவர்களைக் கேட்டு அவர்கள் மறுத்து அனாவசியமாய் நீ கேவலப்படவேண்டாமென்று நினைத்தேன்.

மீனா:—உனக்கு ஜோஸியங்கூடத் தெரியும்போலிருக்கிறது. அதனாற்றான் நீ காரியம் முடியாதென்று தீர்மானித்து விட்டாய்.

ஸாவித்ரி:—எனக்கு ஜோஸியம் தெரியாது. உனது மூத்தாள் பெண்ணைக் கொடுப்பதாய் அவள் அம்மான் முதலியவர்கள் வந்து கேட்டுப் பேசித் தீர்மானமாயிருக்கிறது. அதனாற் சொன்னேன்.

மீனா:—எங்களகத்துப் பெண்ணைக் கொடுப்பதற்கு யார் வருவது யார் கேட்பது யார் தீர்மானிப்பது? பானைக் கல கலவென்று கொட்டிக் கலியாணம் செய்து கொடுப்பவள் நானோ நீயோ? நல்லது, அந்தப்பெண்ணை நீ உன் பிள்ளைக்குக் கலியாணம் செய்துகொள்ள உன்னால் முடியுமா? சூரியன் தெற்கு வடக்காகப் போனாலும் உன் அகம்பாவத்தையும் துணிச்சலையும் நானறிந்திருந்தும் அந்தப் பெண்ணை உன் வீட்டிற் கொடுப்பேனா? அவளுக்கு நான் தங்கம்போன்ற ஒரு மாப்பிள்ளையைத் திட்டம் செய்திருக்கிறேன்; நாளது மீ-30-ந் தேதி முகூர்த்தம் மதுரையில் என் வீட்டில் நடக்கிறது. அன்றைக்கே நம் கமலத்தையும் என் மூத்தாள் பிள்ளைக்குக் கொடுத்து கலியாணம் நடக்கிறது. வந்திருந்து பார்த்துவிட்டு வயிற்றெரிச்சலுடன் போய்ச்சேரு.

ஸாவித்ரி:—எனக்கென்ன வயிற்றெரிச்ச லிருக்கிறது. என் பிள்ளைக்கும் வேறெந்தப் பெண்ணாவது வந்து கலியாணமாய்விடும். ஏன் வார்த்தையைக் கொட்டுகிறாய்.

பட்டாபி-பத்னி:—உன் பிள்ளைக்கா கலியாணமாய் விடும்? பிள்ளையாருக்குக் கலியாணமான மறுநாள்தான்.

ஸாவி:—இனி இதற்குமேல் பதிற்சொல்ல எனக்குச் சக்தியில்லை. அண்ணா! என்னை யழைத்துக்கொண்டு வந்தது போல் ஊருக்குக் கொண்டுபோய் விட்டு விட்டாயானால் உனக்குக் கோடி புண்யமுண்டு.

பட்டாபிராமய்யர்:—(பதிலுரைக்கவில்லை)

பட்டா-பத்னி—நீயென்ன குழந்தையோ, கொண்டுபோய் விடுவதற்கு, நாலுபுருஷர்களை நீ கொண்டுபோய் விடுவாயே. உன்னுடன்கூடவர இங்கொருவருக்கும் ஒழிவில்லை.

ஸாவி:—(கண்ணீர்ததும்ப) அப்படியானால் என்னைக் கோயம்புத்தூர் ரெயில்வே ஸ்டேஷன் வரையில் யாரையாவது வரச்சொல்லி டிக்கெட்டு வாங்கிக்கொடுத்து ரெயிலேற்றி விட்டுவிட்டால் நானெப்படியாவது ஊர்போய்ச் சேருகிறேன்.

பட்டாபி-பத்னி:—அதெல்லாம் சரிப்படாது. ஒருவரும் வரமுடியாது. நீயுமிந்தவிடத்தைவிட்டுப்போகலாகாது. அப்படிப் போகவேண்டுமானால் உன் நகைகளையெல்லாம் ஒரு திருகாணிகூடப் பாக்கியில்லாமல் கழற்றிவைத்துவிட்டுப் போ. அவைகளையெல்லாம் என் பெண்ணுக்குப் போட்டுக் கன்னிகாதானம் செய்துகொடுக்கிறார்.

ஸாவி:—(கண்ணீர்விட்டாள்.)

பட்டா:—ஸாவித்ரீ! அவள் சொல்வதற்காக நீ கவலைப்படாதே. நாளையதினம் நானுன்னை ஊரில் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்.

பட்டாபி-பத்னி:—என்னசொன்னே, நான் போகக்கூடாதென்கிறேன். நீ கொண்டுபோய் விட்டுவிடுகிறேனென்கிறாய். வெட்கமில்லையோ? குழந்தைபோல் ஊர்நாய்த்திரிய ஆசையிருக்காப்போலிருக்கிறது.

பட்டா:—ஏ காளி உன்வாயைத்திறவாதே; உன்னையார் கேட்டார்கள்.

பட்டாபி-பத்னி:—என்னசொன்னே, நான்காளியா. உன்னைப் பிடுங்கித்தின்கிறேன் பாரு—என்று சொல்லி அலங்கோலமாய் எழுந்திருந்துவந்து கணவன் கன்னத்தில் ஓங்கியொரு அறை அறைந்தாள். அதற்குள் ஸ்ரீஜோதி எழுந்திருந்துவந்து விலக்கிவிட்டாள். உடனே ஸாவித்ரியைத்தவிர மற்ற நால்வரும் தனியே ஓரிடத்திற்குப்போய் என்னவோ குசுகுசுவென்று பேசிக்கொண்டிருந்து சற்றுநேரத்திற்கெல்லாமொருவிதத் தீர்மானத்துக்கு வந்து மறுபடியும் ஸாவித்ரியினிடம் வந்துசேர்ந்தார்கள்.

அப்போது ஸ்ரீஜோதி ஸாவித்ரியைப்பார்த்து "அம்மா கோபித்துக் கொள்ளாதே. கூடப்பிறந்த தமயன் பெண்ணுக்கு கலியாணமாகாமல் அவன் தவிக்குங் காலத்தில் உன் அகமுடையானுக்குச் சிபார்சுசெய்து எப்படியாவது அந்தக்கலியாணத்தை முடித்துவைக்காமல் மறந்து அவனை ஊருக்குத் திருப்பியனுப்பிவிட்டாயே, என்று ஒரு மனஸ்தாபமிருந்ததை வேடிக்கையாய்ப்பேசித் தீர்த்துக் கொண்டுவிட்டோம். உன்னைப்போல் நானும் முடியா

தென்றுசொல்லிவிட்டால் அந்தப்பெண்கதி நிர்க்கதியாய் விடுமேயென்று பயந்து என் கணவனிடம் வெகு பிரயாஸப்பட்டுச் சொல்லி, எனது மூத்தாள் பிள்ளைக்கு நம் கமலத்தைக் கொடுத்துவிடுவதாய்த் தீர்மானஞ்செய்து அந்தக்கலியாணச் செலவு கூட அண்ணாவுக்குச் செய்ய சக்தியில்லாதபடியால் கலியாணத்தையும் என்வீட்டிலேயே செய்துவிடுவதாய்த் தீர்மானித்து, அதற்காகத் திருச்சியில் நடக்கிற பெண் கலியாணத்தைப்பற்றி அதை பெண்வீட்டில் நடத்தவேண்டும் என்று என்புருஷனுடன் வெகுநேரம் மன்றாடிக் கடைசியாய் அப்படியே தீர்மானமாகும்படி செய்தேன். மேலும் எங்கள் பெண்ணை உன்பிள்ளைக்கே கொடுத்து உன்னை சம்பந்தியாக்கிக்கொள்ள எனக்கு மெத்த சந்தோஷந்தான். ஆனால் என் பர்த்தா தனக்கு அநேகவிஷயங்களில் உதவியாயிருப்பவரான உயர்ந்தகுலத்திலுதித்த அந்த ஊர் சுந்தரமய்யர்பிள்ளைக்குத்தான் தனதுபெண் தர்மாம்பாளைக்கொடுப்பதாய் அவராகவே தீர்மானித்துவிட்டதால் நானதைமாற்றியுன்பிள்ளைக்குக்கொடுக்கும்படி செய்யமுடியவில்லை. ஒருகாரியத்தில் அவர் என்னிஷ்டப்படி முடித்தாராகையால் மற்றொருகாரியத்தில் அவரைவிட்டுப் பிடிக்கவேண்டியதாயிற்று. உன்பிள்ளைக்கு லக்ஷம்பேர் பெண்களைவைத்துக்கொண்டு கொடுக்கத் தவஞ்செய்கிறார்கள். இதன்றிக,

கலியாணம் ஆகிறவரையில் உன்னை ஊருக்கு அனுப்பக் கூடாதென்றும் கலியாணகாலத்தில் உனது நகைகளிற்சிலவற்றைத் தனது பெண்ணுக்கு அலங்கரித்துப்பார்த்துக் கலியாணமானபிறகு உன்னிடம் அவைகளைக் கொடுத்து ஊருக்கு அனுப்பவேண்டுமென்றும் மன்னி நினைத்திருக்கிறாள். நீ ஊருக்குப்போகவேண்டுமென்று அழுகிறபடியால் உன்னை ஊருக்குக்கொண்டுபோய் விட்டுவிட்டு உனது புருஷனையும்

பிள்ளையையும் கலியாணத்திற்கு நேரிலழைத்துவிட்டு வர வேண்டுமென்பது அண்ணாவின் அபிப்பிராயம். இதைப்பற்றித்தான் உள்ளே தர்க்கம் நடந்தது. கடைசியில் அண்ணாவினிஷ்டப்படியே தீர்மானமாயிற்று. நீ உனது மூட்டைகளைக் கட்டிக்கொண்டு தயாராகயிரு. நாளை தினம் காலை 8 மணி வண்டியில் புறப்படலாம். நம் ரத்னமும் ஏதோ கோர்ட்டுக்கு வரவேண்டுமென்று சொல்லுகிறான். எல்லாரும் போகலாம்" என்று சாந்தமாயும் மிருதுவாயும் மலர்ந்தமுகத்துடன் சொல்லி முடித்தாள்.

வெளுத்ததெல்லாம் பாலென்று நினைக்குந் தன்மையுள்ள கபடமற்ற ஸாவித்ரியும் அது முழுவதையும் உண்மையெனவே நினைத்தாள். தன்னுடன் முன்னமே அவர்கள் பேசிக்கொண்டிருந்தகாலத்தில் அவர்களுடைய நிலைமையையும் இப்போதவர்களிருக்கும் ரீதியையும் நடுவில் அவர்கள் தனக்குக் காதுகேட்காமல் ஏதோ பேசிக்கொண்டிருந்ததையும் யோசித்தால் எப்படிப்பட்ட மூடருக்கும் கூட ஏதோ விசேஷமிருக்கிறதென்று புலப்படும். எப்போதும் நன்மார்க்கமே தவிர கோணலை தெரியாத நமது ஸாவித்ரிக்கு அத்தோற்றங்களே உண்டாகவில்லை. பிறகு அந்நாள் வரும் ஸாவித்ரியிடம் பழைய பரியாசத்துடன் அன்றைய தினப் பாக்கியைத் தள்ளினார்கள். குறிப்பிட்டபடி மறுநாள் காலையில் ஸாவித்ரியும் பட்டாபிராமய்யரும் ரத்னவல்லியுடன் கொஞ்சம் சிற்றுண்டி செய்துகொண்டு கோயம்புத்தூர்வந்து ரெயில்வண்டியிலேறினார்கள். பட்டாபிராமய்யர். தான் அதிகமதிப்புள்ள இரண்டு ஸ்திரீகளையழைத்துப்போவதால் தனக்குத் தனி கம்பார்ட்டுமெண்டு வேண்டுமென ஸ்டேஷன்மாஸ்டரைக் கேட்டு அவ்வாறே இருபக்கமும் முறிலும் மூடப்பட்ட ஒரு தனியறையில் மூவரும் உட்கார்ந்து

வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டு பிரயாணம்செய்தார்கள். வண்டி ஈரோட்டுக்கு அடுத்த முன் ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்டவுடன் ஸாவித்ரி தற்செயலாய்த் தனக்கு வயிற்றில் ஏதோ சொற்பவலியுண்டாயிருக்கிறதென்றும் கொஞ்சம் தாகமாயிருக்கிறதென்றும் சொன்னாள். உடனே பட்டாபிராமய்யர் தன் சட்டைப்பையிலிருந்த ஒரு சீசாவையெடுத்து "இதிலுள்ள ஷர்பத்தைப் பாதிசாப்பிடு, வயிற்றுவலியும் தீரும் தாகமும் அடங்கும்" என்று சொல்லிக் கொடுத்ததும் ஸாவித்ரி "அது என்னமருந்தோ என்னமோ ஈரோடு சமீபித்துவிட்டது; அங்குபோயாவது வெந்நீர் சாப்பிட்டால் எல்லாம் நின்றுவிடும்" என்று சொல்ல, அண்ணாவின் ஜாடையை யறிந்துகொண்ட ரத்னவல்லி அதைவாங்கி அவளைத் தன்மேல் சாற்றிக்கொண்டு பலாத்காரமாய் புகட்ட அந்தப் பாப்பரப்பில் சீசாவிலிருந்தமருந்து முழுமையும் புகட்டிவிட்டாள். அதுகுடிக்க இன்பமாயிருந்தபடியால் ஸாவித்ரி முழுமையும் சாப்பிட்டுவிட்டாள். உடனே மயங்கிக் கீழ்விழுந்தாள். அந்தக்ஷணமே பட்டாபிராமய்யர் அவளணிந்திருந்த நகைகள் முழுமையும் ஒரு திருகாணியும் மீதிவைக்காமல் ரத்னவல்லியின் சகாயத்தைக்கொண்டு கழற்றித் தன் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவிட்டார். ஈரோட்டுக்கு வந்ததும் பிரக்ஞையற்றுக்கிடந்த ஸாவித்ரியை இருவரும் தூக்கிக்கொண்டு காரணங்கேட்ட ஸ்டேஷன்மாஸ்டருக்கு அவளுக்கு எப்போதும் வழக்கமாய் ஒரு மயக்கவியாதியுண்டென்று சொல்லி வண்டியிலேறி ரத்னவல்லிக்குச் சொந்தமான லக்ஷ்மிவிலாஸ பங்களாவிற்கு வந்துசேர்ந்தார்கள்.

பட்டாபிராமய்யர் ஸாவித்ரியை மயக்கம்தெளிந்தபிறகும் ஒருவரும் பாராமல் இருக்க ஏற்பாடு செய்துவிட்டு, அவள்

தன் நகைகளெங்கேயென்று கேட்டால் 'நீ மயக்கமாயிருக்கை யில் திருடர்கள் கொண்டுபோய்விட்டார்கள்' எனச் சொல்லி யவளை ஆளவிலேயேற்றி ஊருக்கு அனுப்பும்படி ரத்னவல் லிக்கு ஏற்பாடு செய்துவிட்டுப் ஊருக்குப் போய்விட்டார். பிறகு நடந்த சங்கதிகளெல்லாம் உங்களுக்குத் தெரிந்த வையே.

---

## பன்னிரண்டாவது ஆச்வாஸம்.

### அஸதீ விஜயம்.

இப்பொழுது ரத்னவல்லி தனது லக்ஷ்மீவிலாஸ பங்களாவில் ஓரறையில் மெல்லிய மெத்தையால் உறைபோடப்பட்ட ஒரு சாய்மான நாற்காலியிற் படுத்துக்கொண்டு, தனது தற்கால ஸ்திதியையும் அதற்குக்காரணமான தனது சாமர்த்தியத்தைப்பற்றிக் களிப்புடன் தன்னை மெச்சிக்கொண்டிருந்தாள்.

நேயர்களே! இப்போது இந்த ரத்னவல்லியின் பூர்வ சரிதம் நமது கதையின் மேல்பாகத்திற்குக் கொஞ்சம் அவசியமாய் இருப்பதால் அவளைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை நீங்கள் அன்புடன் எதிர்பார்க்கும் போதே தெரிவித்துவிடவேண்டுமென நினைத்து, இப்போதே கூறுகின்றோம்.

பட்டாபிராமய்யர் தனது தந்தை இறந்தபிறகு தனது நான்கு தங்கைகளையும் ஒவ்வொருவருக்கும் இரண்டாயிரத்திற்குக் குறைப்படாமல் வரன்களைச் சம்பாதித்து வருஷத்

துக்கு ஒருத்தியாகக் கலியாணஞ்செய்து கொடுத்தாரென்பதை யிதற்குமுன் ஒருதரம் சொல்லியிருக்கிறோம். ரத்னவல்லியைமாத்திரம் அவ்வாறுசெய்யவில்லை. இவளொருத்தியே கலியாணத்திற்கு பாக்கியாகவிருக்குங்கால் இவளுடைய தாய் தனதருமைப்பெண்ணை ஒரு சிறு பையனுக்கு கன்னியாதானஞ் செய்யவேண்டுமெனக் கருதி பட்டணப்பிராமணர் எந்தவரனைப் பார்த்துவந்தாலும் அது அப்படி இது இப்படியென்று தோஷஞ்சொல்லி எல்லாவரன்களையும் நிராகரித்துவிட்டாள். ஆனிமாதம் தேதி பதினைந்தாய்விட்டது. ரத்னவல்லி வயதுள்ள சிறுமியாயினும் தனது சரீரவளமையால் அப்போது யுவதிபோல் காணப்பட்டாள். பாக்கியிருக்கிற உத்தராயணம் 15 நாளுக்குள் பெண்ணை எவனுக்காவது கட்டிக்கொடுக்காவிட்டால் பெண் புஷ்பவதியாய் விடுவாளென்னும் பயம் தாயாருக்கு அப்போதுண்டாய் விட்டது.

இப்போதுள்ள பண்டிதர்களைக் காட்டிலும் விசேஷமான படிப்பும் கூர்மையானபுத்தியும் அக்காலத்திய பண்டிதர்களுக்கிருந்தாலும் பிராமணப்பெண்களை ருதுவான பிறகு விவாகஞ்செய்துகொடுக்கலாமென்று ஸ்வப்னத்திலும் வாதிப்பவர் ஒருவருமப்போது கிடையாது. இந்நாள் பண்டிதர்களும் வாதங்களைச்சொல்லுகிறார்களே தவிர தங்கள் பெண்களை சாஸ்திரப்படி 8-வது வயதிற் கலியாணஞ்செய்துகொடுக்கத் தவறுகிறார்களில்லை. நிற்க.

இதுவிஷயமாய் பயந்து கவலையுற்ற ரத்னவல்லியின் தாயார் தனது பெண்ணுக்கு அவசரமாய் வரனைத் தேடச் சொன்னதில் ஒன்றும் சௌகரியப்படாமல் கடைசியாய் உள்ளூரில் சுமார் 5 அல்லது 6-லக்ஷ ரூபாய்க்குக் குறை

பாதகிசாத்துக்குடையவரான ஜம்புலிங்கமய்யர் என்னும் 55 வயதுள்ள பிராமணிற்கு ரூபாய் 5000 கன்யாசுல்கம் வாங்கிக்கொண்டு நான்காவது தாரமாக ரத்னவல்லியைக் கலியாணம் செய்துகொடுத்தார்கள். அந்தம்மாள் பத்துத்தேற்றுப கலியாணமான மூன்றுமாதத்திற்கெல்லாம் ரத்னவல்லி புஷ்பவதியாகிக் கணவன்வீடுபோய்ச்சேர்ந்தாள்.

அதோகொரப் பிறந்த வூரில் வாழ்க்கைப்பட்ட பெண்கள் தங்கள் கணவன்வீட்டு ஜனங்களைத்தவிர வூரிலுள்ள மற்றவர்களுக்கு மரியாதை காட்டுவதில்லையென்பது நமதுநாட்டின் வழக்கமல்லவா, அவ்வாறே ரத்னவல்லியும் உள்ளூரில் வாழ்க்கைப்பட்டிருப்பதாலும்—
[illegible]
“பதிவிரதையான தன்னுடைய பத்தினி, கிழவனுக்கு, அவன் பிராணனிலும் அதிகமானவள்” என்னும் பழமொழிக்கிணங்கத் தனது கணவன் தன்னை எக்காலத்திலும் அருமையாய்க் கொஞ்சுகின்றபடியாலும் தனது சரீரத்தில் இடங்கொள்ளாமல் வைரமயமான நகைகளை அளவின்றி அணிந்திருப்பதாலும் இளம்பருவத்தின் [illegible] பெண்களைப்போல் வெட்கம், பயம், மரியாதை, இவைகளைப் பாராட்டாமல் தனக்கிஷ்டப்படி [illegible] எக்காலத்திலும் போவதும் தெருத் திண்ணைகளில் [illegible] உட்கார்ந்து பேசிக்கொண்டு [illegible] போவதும் [illegible] [illegible] போவதும் [illegible] [illegible] இருந்தாள். ஜம்புலிங்கமய்யரோ தாம் [illegible] [illegible] அவள் [illegible] [illegible] [illegible] [illegible] அவளை [illegible]

தை யுத்தேசித்தும் கண்டிக்காமலேவிட்டுவிட்டார். அதனு லவள் வரவர அதிக தைரியத்தையடைந்து துஷ்டஸ்திரீகளின் ஸகவாஸத்தால் குலஹானிகரமான செய்கைகளைச் செய்யவாரம்பித்தாள். அவள் தனதிச்சைக்கிசைந்த புருஷனைக் காரஸமாய் தனதில்லத்திற்கழைப்பித்து அவனுடன் கெட்டபோதுக்கு விபஸாரவார்த்தைகளைப்பேசுவாள், ஜம்புலிங்கப்பர் அதைப்பார்த்தாலும் அவளுக்கு இது பிறந்த ஊராகையால் அவள் அப்படித்தான் பாலியம்முதல் பேசிக்கொண்டிருக்கிறாளென்று அலக்ஷியமாய் விட்டுவிடுவார்.

அவருக்கு முதல் மனைவிகளிடம் பிறந்த பெண்கள் நீலாம்பாள், கோகிலாம்பாள், விசாலாக்ஷி, கனகவல்லி என நால்வருண்டு. அவர்களில் கடைசிப்பெண்ணாகிய கனகவல்லியைத்தவிர மற்றமூவரும் அழகிற்போல குணங்களிலும் சிறந்தவர்கள், அவர்கள் தங்க மதிப்பும் சொத்தும் நிறைந்தவிடங்களில் வாழ்க்கைப்பட்டு நல்லவர்களெனப் பெயருடன் சுகமாய் வாழ்கின்றார்கள். அவர்கள் எப்போதாவது பிறந்தகத்திற்கு வந்தாலும் தாங்கள் வாழ்க்கைப்பட்ட ஊரிலிருப்பதுபோலவே அடங்கி யொடுங்கித் தங்களது குரல்கூட புருஷர்கள் காதில் விழாமல் காலந்தள்ளுவார்கள். அவர்கள் தங்கள்பிதுர்க்கிரகத்திற்கு எப்போதாவது வருங்கால் அப்போது தங்கள் சிற்றன்னையாகிய ரத்னவல்லியின் தைரியத்தையும் நடவடிக்கைகளையும் பார்த்துப்பயந்து தங்கள் பிதாவிடம் ஜாடையாச்சொல்லித் தங்கள் குலத்திற்கு அபகீர்த்திவராமற் காக்கவேண்டுமெனப் பிரார்த்திப்பார்கள். ஜம்புலிங்கமப்பருக்குத் தனது பெண்கள் சொல்லுங்காலத்தில் தனது மனைவியின் சேஷ்டைகள் முழுமையும் பிசகென்று தெரிந்தாலும் அவளைக் கண்டிக்கவேண்டிய எண்ண

யிருந்தாலும் உள்ளே பொறாமையுடன் தனது மனைவியின் ஸர்வாங்கத்திலும் 'பளீர் பளீர்' என்று ஆபரணங்கள் ஜ்வலிக்க சோலைக்கிளி போன்ற அதரங்கள் மடிப்படி சிவக்க வாய்நிறைய தாம்பூலத்துடனும் எதிரில் வந்தாளானால் அவர் எல்லா வற்றையும் மறந்துவிடுவார்.

இவருடைய கடைசிப் பெண்ணாகிய கனகவல்லியோ பொன்றால் கனகவல்லியென்றே (பொற்கொடி) சொல்லத்தக்கவள். அவள் ரத்னவல்லியைப்போல் ஒரு கிழவனுக்கே பாழ்விட்டு அதிகமான சொத்துமில்லாமலிருந்ததால் அவள் வருஷம் 1-க்கு ஆறுமாதம் தகப்பன் வீட்டிலிருந்தாள். ரத்னமானது கனகத்துடன் சேர்ந்தாற்றான் விசேஷ யோக்கியதையடையுமென நினைத்ததைப்போல ரத்னவல்லி கனகவல்லிக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் உபதேசித்து நாளாக நாளாக அவளையும் தன்னைப்போ லாக்கிக்கொண்டு தனதிஷ்டத்திற்கு அவளை இணங்கச் செய்துகொண்டு அவளிஷ்டத்திற்கும் தானிணங்கி இருவரும் ஒற்றுமையாயிருந்தார்கள். கனகவல்லிக்கு விசேஷமான நகைகள் இல்லாதபடியால் தனது நகைகளிற் சிலவற்றை யவளுக்குப் போட்டும் மினுக்கச்செய்வாள்.

இப்படியிவர்கள் சுகமாகவிருந்து வருகையில் பலநாட் கிருடன் ஒருநாளைப்போலவாக என்றாய் இருவருக்கும் ஒரு காலக்கிலிருந்தது. அப்போது இவர்கள் ராமேக்கூழ் எளியிலிருந்து பார்த்து ஏகாலியமாய் காலம் கழிப்போம். நமக்குச் சொத்தில் சுதந்தர பாக்கியம் இல்லாமையால் இல்லாமல் இப்படிக் கடக்கவேண்டியதாயிருக்கிறது. என்று யோசித்து இருவரும் ஒப்புவிக்கமைப்படியே, குளிர்ந்த சமயம் பார்த்து "தங்களுக்கு வர வர வயதாய்விடுவதால் எமது குடும்பத்துக்கு ஒருவித ஏற்பாடு செய்யாவிட்டால்

பிறகு நாங்கள் கஷ்டப்படுவோம்; நமது குலம் விளங்க ஒரு பிள்ளை நமக்கில்லை. ஆகையால் தாங்கள் சொத்தை எங்களுக் கெழுதிக் கொடுக்காமற் போய்விட்டால் ஒரு சமயம் தெய்வ கதி கெடுதலாய் ஏற்பட்டால் நாங்கள்தான் தவிக்கும்படி நேரிடும்; தங்களுடைய மற்றப் பெண்கள் நல்ல சொத்துள்ள வர்களாகவிருப்பதால் அவர்களுக்குக் கவலையில்லை'' என்று இவை முதலான பல உசிதமான வார்த்தைகளைப் பல நாளாகச் சொல்லிவந்தார்கள்.

ஜம்புலிங்கமய்யரும் தமது கிழத்தனத்தினால் தாமொரு விதமான ஏற்பாடும் செய்யாமல் தற்செயலாய் பரகதியை யடைய நேரிட்டால் தமது இளம் பருவமுடைய மனைவியும் ஏழையும் சிறுமியுமான பெண்ணும் கஷ்டப்படும்படி நேரிடு மென நினைத்துத் தமது சொத்துக்களில் கனகத்துக்கு மூன்றிலொரு பங்கையும், இரண்டு பங்கைத் தமது மனை விக்குமாக அடியில்கண்டபடி இனும் சாஸனம் செய்துகொ டுத்து அவளிஷ்டமானபடி ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்துக்கொள்ளும்படியும் தஸ்தாவேஜிகளை முடித்தார். தமது சொந்தச்செலவுக்கென்று ஐம்பதினாயிரம் ரூபாய்களை ரொக்கமாய்த் தம்கையில் வைத்துக்கொண்டார்.

## உயில்.

1916ளு மேமாதம் 18உக்குச் சரியான அநலளு வைகாசிமீ 2உ கோயம்பதூர் ஜில்லா இராமபுரத்தில் இருக் கும் சேதுமாதவய்யர்குமாரர் ஜம்புலிங்கமய்யர், பிறர் தூண் டுதலில்லாமலும், சுயேச்சையாயும், சுவபுத்தியோடும், நல்ல நினைவோடும் எழுதிவைத்த உயில்சாஸனம் என்னவென்றால்,

எனக்கு விருத்தாப்பியதசை நேர்ந்துவிட்டதால் நான் இனி வெகுகாலம் ஜீவித்திருக்கமுடியாது. எனக்குப் பெண்

களைத்தவிர வேறு ஆண் ஸந்ததியில்லாததால் என்னுடைய ஏராளமான ஸ்தாவர ஜங்கமசொத்துக்களை என் தாயாதிகளான அநந்தரவார்ஸுகள் அபகரித்துப் போகாமலிருக்கவேண்டி அடியிற்கண்டபடி என் ஆஸ்திகளை அநுபவிக்கத்தக்க வார்ஸுகளை யேற்படுத்துகிறேன்.

எனக்குச் சொந்தமான 6 லக்ஷம் ரூபா மதிப்புள்ள ஸ்தாவர ஜங்கமசொத்துகளை மூன்றுபாகமாகப்பிரித்து, ரொக்கம் சுமார் ரூபா ஐம்பதினாயிரத்தை என் ஜீவகாலபரியந்தம் என் செலவுக்குவைத்துக்கொண்டு, பாக்கியுள்ளதில் மூன்றில் ஒருபங்கை என் குமாரத்திகளில் சுவல்ப ஐவேஜுள்ள கனகவல்லியடையவேண்டியது. பாக்கி இரண்டு பாகத்தை எனது இளையபாரியாள் ரத்நவல்லியடையவேண்டியதுடன், என் ஜீவன் நற்கதியடைவதற்கு, என் மரணத்துக்குப்பிறகு என்னுடைய உத்தரகிரியைகளைச்செய்வதற்கு யோக்கியமானவனும், என் பாரியாள் ரதனவல்லிக்கு இஷ்டமானவனுமான ஒரு குமாரனை சுவீகாரஞ்செய்துகொள்ள வேண்டும். சொத்தையடைந்த என் பெண்ணும், பத்நியும் ஸ்வேச்சா விநியோகமாய் அந்தச்சொத்துகளை ஆண்டநுபவிக்கவேண்டியது. என் பெண்சாதியின் மரணத்துக்குப் பிறகு அவள் எடுத்துக்கொண்ட சுவீகாரபுத்திரன், சொத்தை ஸர்வஸ்வதந்தரத்துடன் அடையவேண்டியது. இவ்விதம் என் ஸ்வேச்சாபுத்தியோடு இந்த உயிலை எழுதிவைத்தேன்.

(ஒப்பம்) ஜம்புலிங்கமய்யர்.

இவ்வாறு தஸ்தாவேஜுகள் முடிந்து ஆறுமாதகாலமாகிறது. தஸ்தாவேஜுகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட மறுநாள் முதல் இவ்விருவரும் ஜம்புலிங்கமய்யரைப்பற்றி மதிப்பதை நிறுத்திவிட்டார்கள். ஏரவர அவருக்குச் சரியான

காலங்களில் உணவுகூட துர்லபமாகிவிட்டது. அவர்கள் தங்களுக்கு இஷ்டப்பட்ட புருஷர்களை பஹிரங்கமாகவே வீட்டிற்கு வரவழைத்துச் சுகித்தார்கள்.

இவைகளையெல்லாம் காலக்ரமமாய் நன்கறிந்த ஜம்புலிங்கமய்யர், தம் புத்திக்குறைவால் இந்த துஷ்டைகளுக்குச் சொத்துக்கள் முழுமையும் தத்தம் செய்ததைப்பற்றி, மிகவும் துயரமடைந்தார். தமக்கு வயதான காலத்தில் தமது பணிவிடைக்குத் தன் கையிலுள்ள பணத்தைக்கொண்டு யாரையாவது ஏற்படுத்திக்கொண்டால் அவர்களையும் இந்த இரண்டு துஷ்டைகளும் துரத்திவிடுவதைப் பார்த்துத் தவித்துக்கொண்டிருந்தார். இவருடைய மூத்த பெண்கள் மூவரும் ஒரு விசேஷத்தை யுத்தேசித்து இவர் வீட்டிற்கு வந்தார்கள். அப்பொழுது அவர்கள் இங்குள்ள சம்பவங்களைப்பார்த்து மிகவும் மனவருத்தப்பட்டு ஒரு ஏகாந்தமான சமயம் பார்த்துத் தங்கள் தந்தையிடம் வந்து அவர்களில் மூத்தவள்—

நீலா:—அப்பா தாங்களிப்போதிருக்கும் ஸ்திதியும் நமது வீட்டிருக்கும் கோலாகலமும் எங்கள் மனதை மிகவும் வருத்துகின்றன.

ஜம்பு:—குழந்தைகாள்! என் புத்திக்குறைவால் நான் கஷ்டப்படும்படி நேரிட்டதைப்பற்றி நான் யாரிடம் சொல்லி முறையிடுவேன்.

கோகி:—அப்பா! இப்படியெல்லாம் நேரிடுமென்று நினைத்தே நாங்கள் தங்களிடம் பலதடவைகளிற் சொல்லியிருந்தும் தாங்கள் அவளைக் கண்டிக்காமல் விட்டதினுல் அல்லவா இப்படியாயிற்று.

விசா:—இதெல்லாம் சொல்லிப் பிரயோஜனமென்ன! நம்முடைய சொத்து நம்மிடமிருந்தால் எல்லோரும் நமக்கு பயப்படுவார்கள். சென்ற வருஷத்தில் நாங்கள் வந்திருக்கும்போது தங்களுக்கிவ்வளவு அவமதிப்பு வந்திருந்ததா என்ன?

நிலா:—என்னடி விசாலம்! சொத்து சொத்து என்கிறாயே, புருஷனைச் சொத்தில்லாதவனென்று அவமதிக்கும் ஸ்திரீகளை ராக்ஷஸிகளென்று பெரியோர்கள் சொல்ல நாம் கேட்டதில்லையா?

கோகி:—இப்போது இந்தப் பழைய புராணமெல்லாம் நமக்கேன், இன்னும் அரைநாழிகைக்கெல்லாம் வெளியிற் போயிருக்கிற அவ்விருவரும் வந்துவிடுவார்கள்; நாம் சீக்கிரத்தில் இவருக்காக வேண்டிய யோஜனையை முடிக்க வேண்டும்.

விசா:—கோகிலம்! ஒன்றுக்கும் அவசரப்படாதே; இப்போது இரவு 8 அல்லது 9 மணியிருக்கும்; சாப்பிட்டபின் அவர்கள் வெளியிற்சென்றிருக்கிறார்கள்; இனிமேல் 12-க்கோ ஒரு மணிக்கோ அல்லது பொழுதுவிடிந்தோ வரப்போகிறார்கள். ஆகையால் நாம் அவசரப்படாமல் நிதானமாயோசித்து ஒருகாரியத்தை முடிக்கவேண்டும்.

நிலா:—நிதானமா என்ன யோசனை நமக்கிருக்கிறது? நாம் எந்த ராஜ்யத்தைப் பிடிக்கப்போகிறோம்; இனி இந்த வீட்டில் இவனை ஒரு க்ஷணமேனும் வைத்திருக்க எனக்கு மனமில்லை, உங்களபிப்பிராயமென்ன?

கோகி:—இவனிந்த வீட்டில் இருக்கும்போதே அவ்விருவரும் இப்படி நடந்துவருகிறார்கள், இவனையும் அப்புறப்படுத்திவிட்டால்...

நீலா:—என்னடீ கோகிலம்! இப்போதில்லாத துஷ்ட கார்யம் அப்போது என்ன உண்டாய்விடப்போகிறது?

விசா:—இப்போது இவர்கள் பஹிரங்கமாய் காரியங்களை நடத்தினாலும் வருகிறவன் கொஞ்சம் ஸங்கோசப்படுகிறான். பிறகு தாராளமாய் வருவான்.

நீலா:—போகிறது, அவனாவது கஷ்டமில்லாமல் வரட்டுமே, இந்தப் பாவிகள் குலத்திற்குக் கெட்ட பெயரை வாங்கிக்கொடுத்துவிட்டார்கள். அது இனிமேல் ஒருநாளும் மறையப்போகிறதில்லை.

கோகி:—அது போகட்டும், முடிவான காரியத்தைச் சொல்லுங்கள். அப்பா! தங்களுக்கு இவ்வீட்டைவிட்டு எங்களில் யாருடைய வீட்டிலாவது வசிக்க இஷ்டமிருக்கிறதா?

ஜம்பு:—சொத்தை முழுமையும் இந்தச்சண்டாளிகளுக் கெழுதிக் கொடுத்துவிட்டு உங்கள் வீட்டில் நான் வந்திருப்பது அழகாயிருக்குமா?

கோகி:—அதற்காகத் தாங்கள் கவலைப்படவேண்டாம். சொத்தில்லாமல் தாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்ததினால் நாங்கள் தங்களை அவமதிப்போமென்று நினைக்கவேண்டாம், எங்களுக்குச் சொத்தி லபேக்ஷையில்லை. ஏதோ பூர்வ புண்ய வசத்தால் தாங்களெங்களை நல்ல இடங்களிற் கலியாணம் செய்து கொடுத்துவிட்டீர்கள், எங்களுக்கு இது வரையில் தங்களாசிர்வாதத்தால் ஒரு குறைவும் பகவான் வைக்கவில்லையென்பது தாங்களறிந்ததே.

விசா:—எனது அன்புள்ள பிதாவே! எங்கள் வீடுகளில் ஒவ்வொருத்தி அகத்திலும் இரண்டு மாதம் மூன்று

மாத விதமாய்த் தங்களுக்கு வசிக்க இஷ்டமா? அல்லது நிரந்தரமாய் ஒருத்தி வீட்டிலேயே இருக்கவேண்டுமென அபிப்பிராயமா ?

நீலா:—என்னடி விசாலம்! நீ யுக்தி யுக்தியாய்ப் பேசுகிறாய், பத்துலக்ஷ ரூபாய் சொத்துக்குப் பிரபுவாக இருந்தவரை வாரச்சாப்பாட்டுக்குப் போகச்சொல்லுகிறாய், நீங்களொருவரும் அவர் பாரத்தைச் சுமக்கவேண்டாம், அவர் என் வீட்டிலேயே வசிக்கட்டும்; நானே அவருக்குப் பணிவிடை செய்கிறேன், அவசியமான காலங்களில் நீங்களும் வந்திருந்து அவரைக் காப்பாற்றுங்கள்.

கோகி:—என்னடி அக்கா! அப்பா உனக்கொருத்திக்கே சொந்தமெனத் தீர்மானித்துவிட்டாய்போலும், நீகுடிக்கிற வெண்ணெயை நாங்களும் கொஞ்சம் கொஞ்சம் குடிக்கலாகாதா ?

நீலா:—அப்படி அப்பா எனக்கு மாத்திரம் சொந்தமென்று நான் நினைத்துச் சொல்லவில்லை. நீங்கள் சிறுபெண்கள்; அகத்தில் மாமியார் நாத்தனார் இன்னும் சில பெரியோர்கள் இருக்கிறார்கள், நீங்கள் அவர்களுக்கிசைந்து நடப்பீர்களா? ஒருநாட்போல் பிரதிதினமும் இவருக்குக் காலலம்பஜலம் முதலானது கொண்டுவந்து கொடுத்துப் பணிவிடை செய்வீர்களா என்று சொன்னேன்.

விசா:—எங்கள் மாமியார் நாத்தனார் முதலியவர்கள் இவரையேன் அழைத்துக்கொண்டுவந்து வைத்திருக்கிறாயென்று கேட்பார்களென்று பயப்படுகிறாயா?

நீலா:—அப்படி யில்லை, இவரைப்போல் இன்னும் பத்துப்பேர் வந்திருந்தாலும் அவர்கள் வருத்தப்படமாட்டார்

கள். அவர்களுடைய பெருந்தன்மை எனக்குத்தெரியும், நீங்கள் தான் அதிக சிரமம் அடையவேண்டியதாய் நேரிடும், கடைசியில் அ...த்துக்கொள்ளும்படியும் நேரிடும்.

கோகி:—உனக்கு மாமியார் நாத்தனார் இல்லாத பெருமையால் நீ இப்படி எங்களைப் பேசுகிறாயோ? நீயும் கடைசியாய் அலுத்துத்தான் போவாய்; நீயும் வீட்டுக்கு ஒண்டிக்காரிதானே.

நீலா:—என்பெருமையை நீதான் அறிந்தாய்; நீ அதிக சமத்தோ யில்லையோ? அதிருக்கட்டும், நான்ஒண்டிக்காரியாயிருந்தாலும் நம் குட்டி நாகம்மாளை இவருக்கென்றே ஏற்படுத்திவிடுவேன்; எனக்கு ஒன்றையும் காட்டிக்கொடாமல் இவருடைய வேலைகள் முழுமையும் முடித்துக்கொடுக்க சமத்துண்டு அவளுக்கு. அவள் புக்ககத்துக்குப்போக இன்னம் 2-வருஷம் செல்லும்; அதுவரையில் எனக்குக் கவலையில்லை; அதற்குள் ஸரஸ்வதிக்கு வயதாய்விடும், பார்த்துக்கொள்கிறேன்.

விசா:—சரியப்படியானால் நாங்களும் அடிக்கடி வந்து பார்த்துவிட்டு ஏதாவது விசேஷகாலங்களிலவரை எங்கள் கிருகத்திற்கு அழைத்துப்போகலாமோ இல்லையோ?

நீலா:—திவ்யமாய் அழைத்துப்போகலாம், அழைத்துக்கொண்டுபோய் ஒருமாதம்இரண்டுமாதம் வைத்துக்கொண்டு உங்களாசைதீர இவருக்கு சிசுருஷைசெய்து மறுபடிகொண்டு வந்து விட்டுவிடுங்கள். அதிகநாள் வைத்துக்கொண்டிருந்தீர்களானால் உங்களுக்கு எப்போதும் பிரியமாயிருந்தாலும் உங்கள் மாமியார் முதலானவர்களுக்கு ஒருகால் அலுப்புண்டாகும். எனக்கானால் என் அகத்திற்கு நானே யஜமானி,

உங்கள் அத்திம்பேர் இங்குள்ள சமாசாரங்களைக் கேள்விப் பட்டு நம் அப்பாவிடத்தில் மிகுந்த பச்சாதாபத்துடனிருக் கிறார். ஆகையால் இவர் எத்தனைநாள் எங்களகத்திலிருந் தாலும் அவாள் அதைப் பொருட்படுத்த இடமில்லை. எனக் கும் வயதுமுற்றிய குழந்தைகள் இருக்கிறார்கள். இவருடைய காரியத்தை அவர்களைக்கொண்டு நான் பார்த்துக்கொள் வேன். நீங்கள் பச்சைப்பிள்ளைத் தாய்கள், இன்னமும் பெற வேண்டும், வளர்க்கவேண்டும். ஆகையால் ஆக்ஷேபமின்றி இவரை என்னிடம் விட்டுவிடுங்கள், நான் நாளையதினம் இவரையழைத்துக்கொண்டுபோகிறேன்.

இவர்கள் மூவரும் இவ்வாறுபேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த ஜம்புலிங்கமய்யருடைய மனதுக்கு ஒருபுறம் துக்கமும் ஒருபுறம் அடங்காத சந்தோஷமும் உண்டாயின. "சற்றேறக்குறைய ஒரு ஜமீனுக்குச் சமான மான நிலைமையிலிருந்த நமக்கு இந்தப்பெண்கள் இரக்கம் காட்டி ரக்ஷிக்கும்படியான நிலைமையுண்டாய்விட்டதே" என்ற துக்கம் ஒருபக்கமுண்டானாலும், நாம் ஸத்புத்ரிகளைப் பெற் றோமென்ற சந்தோஷம் அவர்மனதிலிருந்துகொண்டு சகல துக்கங்களையும் நீக்கிவிட்டது. கடைசியாய் அவர்கள் ஒருவித மான தீர்மானத்துக்கு வந்ததின்மேல் "குழந்தைகளே! நானி ங்கிருக்க உங்களுக்கும் பிரியமில்லை; எனக்கும் பிரியமில்லை தான்; ஆனாலும் ஏராளமாய் ஆண்டனுபவித்த நான் ஒருவர் வீட்டில் வந்திருப்பதென்றால் மனங்கொஞ்சம் லஜ்ஜை யடை கின்றது. ஆகையால் என்னை வேறொரு இடத்தில் வைத்துக் காப்பாற்றினால் உங்களுக்குக் கீர்த்தியில்லையா?

நீலா:—அப்பா! அப்படிச் செய்வதில் எங்களுக்கொரு ஆக்ஷேபமுமில்லை. ஆனால் நாங்கள் மூவருமில்லாத ஓரிடத்

தில் தங்களை வசிக்கச்செய்தோமானால் ஒரு குடும்பத்திற் குள்ளாகப்பட்ட நாங்கள் தங்களுக்கு நேரில் பணிவிடை செய்வது ஸாத்தியமாகாது. அப்படிச் செய்வது இப்போது போல் வருஷத்திற்கு ஒருநாளல்லது இரண்டுநாளே யாகும். வேலைக்காரர்களைக்கொண்டு தங்கள் காரியங்களைச் செய் தால் எங்களைப்போல் தங்களுசிதப்படி அவர்கள் நடக்க மாட்டார்கள். அப்போது தாங்கள் சிரமப்படுவதைப் பார்த்து இச்சமயம்போல் நாங்கள் வருத்தப்படவேண்டியதாகத் தான் நேரிடும். ஆகையால் தபவுசெய்து எங்கள் பிரார்த் தனைக்கிணங்கி என்வீட்டில் வந்து வசித்தால் எங்கள் கவ லை நீங்கிவிடும்; தாங்கள் என் வீட்டிலிருப்பதைப் பார்த்துத் தங்கள் மாப்பிள்ளை பரமப்ரீதியாயிருப்பார். இனி தாங் களாவது நாங்களாவது எக்காரணத்தை முன்னிட்டும் இந்த ஊர் வரவேண்டாம், இந்த முண்டைகள் எக்கேடு கெட்டுப் போகட்டும்.

இதைக்கேட்ட ஐம்புலிங்கமய்யர் தமக்கு வேறு மார்க் கமில்லாததை யோசித்துச் சரியென்று சொல்லிவிட்டார். வெளியிற்போன கனகமும் ரத்னமும் இவர்கள் நினைத்தபடி நேரம் கழித்துவராமல் அரைமணி நேரத்திற்கெல்லாம் திரும்பி வீடுவந்து சேர்ந்தார்களென்றாலும் இவர்கள் தனி யாய் அறையிற் பேசிக்கொண்டிருந்ததை ஒற்றுக்கேட்டு விட்டு இவர்கள் கலேகிற தருணத்தில் தாங்களும் தங்கள் படுக்கையறைக்குச் சென்றார்கள். இவர்களுக்கு அவ்விரு வர் வந்ததும் ஒற்றுக்கேட்டதும் யாதொன்றும் தெரியாது.

மறுநா ளுதயத்தில் இப்பெண்கள் மூவரும் தங்கள் பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்ததையும் நீலாம்பாள் தனது மூட்டைகளுடன் தன் தகப்பன்மூட்டை

களையும் கட்டுவதைப் பார்த்த ரத்னவல்லி, மனதில் ஒருவாறு களிப்படைந்திருந்தாலும் வெளிக்குக் கடுங்கோபத்தைக் காட்டி "நீலா! ஒங்கப்பா இங்கே ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டு கஞ்சிக்கு விதியில்லாமல் தவிக்கிறார்; நீயாவது அழைத்துக்கொண்டுபோய் வைத்துக் காப்பாற்று" என்று கடுமையாய்ச் சொல்லிவிட்டு ஜம்புலிங்கமய்யரைப்பார்த்து, "கிழமே! இந்தச் சிறுக்கிகள் வார்த்தைகளை நம்பி இந்த வீட்டைவிட்டுப் போனாயோ நீ சீரழிந்து கஷ்டப்படுவாய், பிறகு இந்தவீட்டில் வரவிடுவேனென்று சொப்பனத்திலும் நினைக்காதே, ஜாக்கிரதை, இப்பவே யோசித்துக்கோ" என்று கம்பீரமாய்ச் சொன்னாள்.

இதைக்கேட்ட ஜம்புலிங்கமய்யர் கண்ணீர்விட்டாரே தவிர வேறு ஒன்றும் பதிலளிக்கவில்லை.

நீலாம்பாள் மிகவும் பொறுமையுள்ளவளாகையால் 'இவள் சொல்வதைச் சொல்லிக்கொண்டிருக்கட்டும், நாம்நம் காரியத்தைப்பார்ப்போம், நம்மோடிருக்கு வந்து இவள் ஒன்றையும்சொல்லப்போகிறதில்லையே' என்றுமௌனமாயிருந்தாள்.

விசாலாட்சிக்கு மனதில் ஜாஸ்தியான ஆக்ரகமிருந்தாலும் சிறு பெண்ணானதால் விடையளிக்க தைரியமில்லாமற்போய்விட்டது.

கோகிலம் மாத்திரம் ஆத்திரத்துடன் ரத்னவல்லியைப் பார்த்து "அவரை இவ்விடத்தில் நிமாசதிரம் சீரழியவிடபாத்தியமுண்டு, எங்களுக்கு மாத்திரம் இல்லையென்று எப்படிச் சொல்லத் துணிந்தாய்? உன்னைப்போலவே எங்களையும் நினைத்துவிட்டாய் போலும்? உன்னிடம் சீரழிவதைவிட எங்களிடம் சீரழிவது அவருக்கு அதிகமான மானபங்கமில்லை,

ஜாக்கிரதை; எங்களெதிரில் இனி யவரை, ஒருபேச்சுப்பேசாதே; இதுவரையில் அவருன்னிடம்பட்டதுபோதும், அவரிங்கிருப்பது, உனக்கு இடைஞ்சலென்று எண்ணித்தான் நாங்களழைத்துப் போகிறோம்" என்று படபடவென்று சரமாரியாய் வார்த்தைகளைப் பொழிந்தாள்.

இந்த வார்த்தைகளைக்கேட்ட ரத்னவல்லி தனது மனதில் "நமதுநாயகன் இதைவிட்டுப்போவது நமக்கு நல்லதே தவிர வேறில்லை, நாமினி ஜாஸ்தியாய்ப் பேசினால் நாம் நமது மானத்தை இழக்கவேண்டியதாயிருக்கும்" என்று நினைத்து, கோகிலாம்பாளைப் பார்த்து "என்னடி கோகிலம்! ரொம்ப பதட்டக்காரியாயிருக்கிறாயே, அவரெண்டுபேருக்குமில்லாத அப்பா உனக்கு மாத்திரம் வந்து விட்டாரோ. எனக்கு அவரைப்பேச சுவாதீனமில்லையோ?" என்றாள்.

நீலாம்பாள்:—அம்மா! நீயதைச் சொன்னாலும் நம் காரியத்தில் நாம் கண்ணாகவிருக்கவேண்டுமென்று நான் பொறுமையாயிருக்கிறேன். விசாலத்திற்குத்தைரியம் போதவில்லை. கோகிலம்தான் படபடப்பாய்ப் பேசுகிறாள். அதற்காக நீயெங்களைப் பிரித்துவைக்காதே. உனக்கு இதுமாத்திரமல்ல, இன்னம் ஜாஸ்தியாய்க்கூட அவரைப்பேச பாத்தியமுண்டு.

கோகி:—ஏனென்றால், அவளுடைய சாஸ்திரப்படி அவள் தனது அகமுடையானை எதுவேணுமானாலும் பேசலாம்; அதிலும் அவர் பத்துலக்ஷ ரூபாய் சொத்துக்களை இவளுக்குக் கொடுத்துவிட்டாரோ யில்லையோ இப்போது இன்னம் ஜாஸ்தியாய்க்கூடப் பேசலாம்.

நீலா:—வேண்டியமட்டில் பேசட்டும். அவரிவ்விடம்விட்டு நம்முடன் வந்துவிட்டாரானால் எப்படி இம்மாதிரி

வார்த்தைகளைக் கேட்கப்போகிறாய்; நீ உன்காரியத்தைப் பார், நாழிகையாய்விட்டது, புறப்படவேண்டும். விலாசம்! வாசலிற் பார்; கருணாநிதி வண்டி கொண்டுவந்து விட்டானா?

இதைக்கேட்ட ரத்னவல்லி "ராத்திரி பேசிக்கொண்டிருந்த வார்த்தைகளைக் கேட்டேன், அழைத்துப்போங்கள், இதற்குத்தக்கவாறு எனக்குநடத்தத்தெரியும். இந்தக்காற்று எவ்வளவுகாலந்தான் வீசும், மறுபடி என்காலடியில்தான் வந்து விழணும்" என்றுசொல்லிக்கொண்டேஉள் சென்றாள். கோகிலாம்பாளும் "உன்னாலியன்றதை வஞ்சனையின்றி பார்த்துக் கொள்; இனி எக்காலத்திலும் எக்காரணத்தைக்கொண்டும் நாங்களாவது இவராவது உன்னையணுகமாட்டோம்" என்று சொல்லிக்கொண்டே வண்டிக்கு வந்தாள்.

ஜம்புலிங்கமய்யரும் தமது சொந்தப்பணமாகிய 50000 ரூபாயில் செலவழிந்தது போக பாக்கி 40000 ரூபாய்க்குள்ள தஸ்தாவேஜிகளை யெடுத்துக்கொண்டு புறப்பட்டார்; நீலாம்பாள் தன் தகப்பனருடன் தமது ஊராகிய ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தாள். இவளது புருஷனான பத்மநாப ஐயர், தனது மாமனார் ஜம்புலிங்கமையரைக்கண்டதும், முந்தியே இவரிடம் பச்சாத்தாபங்கொண்டிருந்தவராதலால் பரம ஆதரவுடனும் ஸந்தோஷத்துடனும் அவரை வரவேற்று உபசரித்தார். ஜம்புலிங்கமையரும் தனது துக்கங்களைக்கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து ஸுகமாக அங்கு வசித்துவந்தார். கோகிலமும் விசாலமும் தங்கள் தங்கள் வீடு போய்ச்சேர்ந்தார்கள்.

பிறகு ரத்னவல்லியும் கனகவல்லியும் நிஸ்ஸங்கோசமாய்த் தங்கள் காரியங்களை நடத்திவந்தார்கள். கொஞ்சநாளில் அதாவது ஒருமாதத்திற்குமுன் இருவருக்கும் அற்ப

மான மனஸ்தாபம் நேரிட்டதால் இனிச்சேர்ந்திருந்தால் அது முற்றிவிடுமென நினைத்துக் கனகவல்லி இராமபுரத்திலும் ரத்னவல்லி ஈரோட்டிலும் வசித்துக்கொண்டு வேலைக்காரர்களைக்கொண்டும் காரியஸ்தர்களைக்கொண்டும் தங்கள் பூமிகளைப் பார்வையிடச்செய்துவந்தார்கள்; வந்த வரும்படிகள் இவர்கள் செலவிற்குக் கட்டவில்லை; ஆதலால் மேலாகக்கடன்கள் வாங்கியும் செலவு செய்துவந்தார்கள்.

கனகவல்லி இவ்வாறு இராமபுரத்தில் இருந்து வரும்போது இவள் கணவன் இராமபுரம் வந்து சிற்சிலநாள் தங்கித் தனது மனைவியிடம் மானத்தை விட்டுக் கேட்டுத்தனது செலவிற்காக ஆயிரம் இரண்டாயிரம் என்று ரூபாய்கள் வாங்கிக்கொண்டு போவான்.

ஈரோட்டில் வசிக்கும் ரத்னவல்லி தனது மனதிற்கிசைந்தவர் யாரென்று தேடி அவ்வூர் போலீஸ்இன்ஸ்பெக்டர் குப்புஸாமி ராயனை ஆசைநாயகனாகத் திட்டஞ்செய்து கொண்டு அவனுடன் ஸஹித்துவந்தாள் இப்பொழுது இவள் தமையன் ஸாவித்திரியிடம் அவமானப்பட்டு வந்து தன்னிடம் அழுததைப்பார்த்து மனமிரங்கித்தன் இனத்தில் வரன்களில் லாமையால் மீனாக்ஷியிடம் போகும்படி சொல்லிக் கலியாணத்திற்காக 2000 ரூபாய் கொடுப்பதாயும் பெண்ணுக்கு ஏதாவது நகைபோடுவதாயும் வாக்களித்தாள். அந்தப்படி ஸாவித்திரியும் மீனாக்ஷியும் வந்திருந்தபோது தானுமங்கேபோய் ரூபாயும்கொடுத்து கோணமுஞ்சிக்கமலத்திற்கு 2000 ரூபாய் பெறுமானமுள்ள ஒருஜோடி வைரத்தோடும் 1000 ரூபாய் பெறுமான ஒருபுல்லாக்கும் கொடுத்துவிட்டு ஸாவித்ரியுடன் லக்ஷ்மி விலாஸ பங்களாவுக்கு வந்துசேர்ந்தாள். இனிபிரகிருதத்தைப் பார்ப்போம்.

## பதின்மூன்றாவது ஆச்வாஸம்.

### ஜிதேந்திரியத்துவம்.

பரம துரோகியான நமது தமையன் பணத்தாசையின் மிகுதியால் நம்மை ஒரு கிழவனுக்குத் தள்ளி யனியாயமாய் நமது வாழ்நாட்கள் முழுமையும் பாழாக்கினுனென்றாலும் நம் சுய புத்தியால் நாம் இம்மட்டும் முன்னுக்கு வந்து சுகத்தை யடைந்து வருகிறோம். "புத்தியுள்ளவனே பெரியவன்" எனச் சொல்லப்படுகின்ற அபியுக்த வாக்யத்தை விணுக்காதவள் நானொருத்தியேயென வென் நினைக்கலாகாது. நமது செலவுகளுக்கும் உடையாண் முதலிய காரியங்களுக்கும் கவலையில்லாமல் சொத்து முழுமையும் நம் வசத்தில் வந்துவிட்டது. நமது காரியங்களுக்கு விக்னமாய் இருந்துவந்த கணவனையும் மகராஜிகளான அவன் பெண்கள் அழைத்துப் போய்விட்டார்கள்; கனகவல்லிக்கும் நமக்கும் சரிகம் ஒரேவிதமா யிருந்தபோதிலும் ஒரு இடத்தில் சேர்ந்திருப்பது எப்படியும் மனஸ்தாபத்தைக் கொடுக்குமென்று தனியாயும் வந்துவிட்டோம்; நமது இச்சைக்கிசைந்த நாயகனுகிய இங்கிருக்கிற குப்புஸாமி ராயரும் இவ்விடத்தை விட்டு மாற்றப்பட்டால் வேலையை விடுவதேதவிர என்னை விடுவதில்லையென பிரதிக்ஞை செய்து கொடுத்துவிட்டார். ஆ, ஆ, அவருடைய ரூபத்தை நானென்னவெனப் புகழுவேன். இவரைப் பாராதவர்களல்லவா பதிவிரதா தர்மம் என்பதைப் புகழ்கின்றார்கள்; இவரைக் கண்டு மோகித்து இவரைப் பிரார்த்திக்கின்ற அநேக பட்டணப்போன்ற பெண்களிருந்தாலும் அவர்களை மதிக்காமல் இவர் நம்மிடம் அன்புட னிருப்பதைப்பற்றி நமது அதிர்ஷ்டத்தை மெச்சவேண்டியதாயிருக்கிறது. இனி பாக்

யான நமது வாழ்நாட்களை இப்படியே இவருடன் கூடிக் குலாவியே கழித்தோமானல் நாமே புண்யசாலி யென்று சொல்லலாம்.

ஆனல், நமக்கொரு காரியசேஷமிருக்கிறது; அதாவது, நமது ஸாவித்ரியின் மூத்தாள் பிள்ளையை எல்லாரும் அழகில் நிகரற்றவன் என்று சர்வஜன ஸாதாரணமாய்ச் சொல்லுகிறார்கள்; அதை நான் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் நமது தமையன் அவனைப்பற்றி வர்ணிப்பதைக் கேட்டால் மனம் குளிர்ந்துபோகிறது. அப்படி யிருப்பது வாஸ்தவமானல் அவனை பொருகரமாவது கட்டியணைந்தாற்ருன் நமது ஜன்மம் வீணுகாமற் போகும்; இதற்காகவேதான் ஸாவித்ரியை இங்கே அழைத்து வைத்திருக்கிறேன்; எப்படியும் அவன் இவளை யழைக்க இவ்விடம் வருவான்; அவனுக்குக் காலமே ஒரு தந்தியும் கொடுக்கச்சொல்லி யிருக்கிறேன்; அவன் வந்ததும் நான் கேள்விப்பட்ட விஷயம் சரியாயிருந்தால் எப்படியும் எனதிஷ்டத்தைப் பூர்த்திசெய்து விடுகிறேன். ஸ்திரீகளின் மந்தஹாஸமுள்ள முகத்தை அதிலும் எனது முகத்தைக்கண்டு மயங்காத புருஷனும் உலகத்திலுண்டோ? - என்றிவ்வாறு மனதில் யோசித்துக் கொண்டு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தாள் ரத்னவல்லி. எதிரில் காஸ்விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதின் வெளிச்சத்தின் பிரதிபலிப்பால் அவள் தேகத்திலுள்ள வைர நகைகள் 'பளீர் பளீர்' என்று மின்னிக்கொண்டிருந்தன; கடிகாரம் டங் டங் என்று எட்டடித்தது.

அச்சமயம் வேலைக்காரன் ஒருவன் அவள் சமீபம் ஓடிவந்து "அம்மா! குளித்தலையிலிருந்து ஒரு அய்யரு வந்திருக்காரு, அவர் தாயார் இங்கிருக்காங்களாம், உள்ளே வரணும்,

இக்கராரு" என்றதும், ரத்னவல்லிக்குண்டான அவாவிற்கோரளவில்லை. உடனே 'அவனை உள்ளே வரச்சொல்' என்று அவனுக்கு உத்தரவிட்டாள். தான் தனது இருப்பிடத்தை விட்டெழுந்திருக்காமல் அவன் உள்ளே வருவதைக் கவனத்துடன் நோக்கினாள். அவன் தன் தாயாரைப் பார்க்கப்போவதில் இடைஞ்சல் செய்யக்கூடாதென்றும் அவளருகில் அவனுடன் பேசத்தனக்கு சௌகரியப்படாதென்றும் கருதி ஒரு வேலைக்காரியைவிட்டு அவனுக்கு ஸாவித்ரி படுத்திருக்குமிடத்தைக் காட்டச் சொன்னாள்.

அவ்வாறே தர்மன் அவ்விடத்தைக் குறித்துப் போய்க் கொண்டிருந்தான். அவனைப்பார்த்தாள் ரத்னவல்லி. மலைத்தாள் ஒருக்ஷணம்; நினைத்தாள் மனதில், "மன்மதன் மன்மதனென்று ஒருவனுண்டென்றும் அவனழகிற் சிறந்தவனென்றும் புகழ்கின்றார்களே; இவனைக்காட்டிலும் அவன்மேலானவனென்றும் இவனைக்கண்டவரும் கூறுவார்களா! இவனைப்பற்றி அன்று சொன்னவையெல்லாம் அதிசயோக்தியென்றே நினைத்திருந்தேன்; இப்போது அவன் சொன்னது மெய்யென்று நினைக்கிறேன். இவனைக் கட்டியவளைய பாக்கியமுள்ள பெண்ணே பெண். மற்றவர்களெல்லாம் குலத்திற்குப் புண்ணே" என்றிவ்வாறு சிந்தித்து, எழுந்திருந்தாள்; அவனருகிற்செல்ல யத்தனித்தாள்; தானிருந்த இடத்தைவிட்டு ஒரு அடிகூட வைக்கச் சக்தியற்றவளாய்த் துடித்தாள்; தானிருந்த இடத்தை விட்டுத் தனது சரீரம் போகாமலே தானவனை யணுகி யணைந்து முத்தமிட்டதுபோல் நினைத்தாள்; தன்னையவன் திரஸ்கரித்ததுபோல் துக்கித்தாள்; தன்னையவன் மறுபடி யழைத்ததுபோல் ஆனந்தித்தாள்; அவன் தன்னைப் பிரார்த்திப்பதுபோல் நகைத்தாள்; அவன் தன்னைவிட்டு ஓடிப் போனதுபோல் பிரமித்தாள்; சகல சொத்தும் பறிகொடுத்

தவள்போல் கலங்கினாள்; அடிபட்டவள்போல் அழுதாள்; வெகுதூரம் வெயிலில் நடந்தவள்போல் வாடினாள்; வைத்த வஸ்துவைக் காணாதவள்போல் அவ்வறை முழுமையும் தேடினாள்.

இவளிப்படி மூளை சிதறுண்டிருக்க, தர்மனோ கவலை யென்கிற கடலில் மூழ்கினவனாய் வேலைக்காரி காண்பித்த இடம்போய் ஸாவித்ரியைப் பார்த்தான்; அடியற்ற மரம்போல் விழுந்து அப்பா வென்றலறினான்; உன்னை யிந்த ஸ்திதியிற் பார்க்கும்படி நேர்ந்தது எனது எவ் வினையின் பயனோ வென்று கூவினான். உடனே ஸாவித்ரி மெல்ல எழுந்துட்கார்ந்து தர்மன்கையை யெடுத்துத்தன் கண் களில் வைத்துக்கொண்டு "அப்பா தர்மா! நான் பூர்வஜன் மத்திற்செய்த பாபத்தின் பலனையனுபவிக்கிறேன்; மஹா தன் யனான உன்னைக் கண்டதனால் இப்பொழுதிருந்த துக்கத்தை யிழந்தேன்; இனி நமக்கு பகவான் அநுக்கிரகம் செய்வார்; பயப்படாதே" என்றாள்;

உடனே தர்மன் ஸாவித்ரியை ஆபாதமஸ்தகம் பார் வையிட்டுவாடின முகத்துடன் "அம்மா! இதென்ன கோலம் உனக்கு ? உனக்கென்ன வியாதி ? உன் உடம்பிலிருந்த நகைகளெங்கே ? எல்லாவற்றையும் விவரமாய்ச் சொல்; மேல் நடக்கவேண்டிய விஷயங்களையும் சொல்" என்றான். அதற்கு ஸாவித்ரி "மகாபுத்திமானாகிய உனது வார்த்தை யைத் தட்டி என் தமையனுடன் நான் வந்ததற்கு இத் தப்பலனை நான் அனுபவிக்கிறேன். இனி உன் வார்த் தைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றும் நீ யெனக்கு குழந்தையானாலும் உன்னைத் தெய்வத்தைப்போல் பெரு மையாய் நடத்தவேண்டியதென்றும், எனக்கு இந்த ஸ்திதி

யே கற்பித்தது. உன்னைக்கண்டவுடனே எனக்கிருந்த வியாதியும் துர்பலமும் நீங்கிவிட்டன. இப்போது எனக்குப் பத்துமைல் நடந்துபோகக்கூடத் தைரியமுண்டாயிருக்கிறது, நீ என்னைக்கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்க ஒருபாகம் இருக்கிறது, சாவகாசமாய்ச் சொல்லுகிறேன், இப்போதே இந்த இடத்தை விட்டுப் புறப்பட ஏற்பாடு செய்” என்றாள்.

தர்மன்:—சரி யப்படியே செய்கிறேன். உனது தங்கை ரத்னவல்லி யெங்கிருக்கிறாள்? அவளனுப்பிய தந்திசமாசாரத்தினால்தான் நீ இவ்விடமிருப்பதை நானறியலாயிற்று; அவளைப் பார்த்துவிட்டு ஊருக்கு ராத்திரி 2-மணிவண்டியில் புறப்படுவோம்.

ஸாவித்ரி.—(திடுக்கிட்டு) அவளுனக்குத் தந்தி கொடுத்தாளா? எப்படியாயினும் ஆகட்டும், அவளை நீ. தனியே பார்க்கலாகாது.

தர்மன்:—ஏனம்மா அப்படிச் சொல்லுகிறாய்? உனக்குத் தங்கையென்ற முறையைக்கொண்டு எனக்கு அவளும் தாயல்லவா? மேலும் ஆபத்காலத்தில் உன்னை இங்கு வைத்துக் காப்பாற்றிக்கொண்டு எனக்குத் தந்தியும் அனுப்பியிருக்கிறாள்; நானிதுவரையிலவளைப் பார்த்ததுமில்லை; ஆகையால், நீ இவ்விஷயத்தில் தடைசெய்யவேண்டாமென நினைக்கிறேன்.

“ஐயோ! இவருக்கு இவளுடைய குணந்தெரியாத்தான் இப்படிச்சொல்லுகிறான். இச்சண்டாளி ஒரு பச்சை போகினியாயிற்றே, இவரைப்பார்த்தால் அவளிவனைக் குட்டு - மயக்கி இவரை ஹிம்ஸித்தாளானால் நானென்ன

செய்வேன்? இவனிணங்கானென்பது நிச்சயம். அதனால் அவன் என்ன கெடுதி செய்வானோ தெரியவில்லையே என்று ஸாவித்ரி பலவாறுயோசித்து, கடைசியாய்த் தர்மனைப்பார்த்து "அப்பா குழந்தாய்! நீ எனக்குக்குழந்தையானாலும் பெளவன வயதடைந்தவனாயிருப்பதால் நான் சொல்ல கொஞ்சம் ஸங்கோசப்படுகிறேன். அவள் நடத்தை யெனக்குப் பிடிக்கவில்லை; நீயவளிடத்தில் ரொம்ப ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்" என்றாள்.

அதற்குத் தர்மன் "அம்மா! நானென்ன காரியமென நினைத்தாய்? அவளெனக்குத் தாயில்லையா? என் விஷயத்திற்கூட உனக்கேனிப்படி புத்திபேதம் உண்டாயிற்று" என்று முகம் சிவக்கச் சொன்னான். அதற்கு ஸாவித்ரி "அப்பா! உன்னை நான் அஜிதேந்திரியன் என்று சொல்லவில்லை. அவளுடைய குணத்தை நான் நன்கறிந்திருப்பதால் சொன்னேன்; போய் ஜாக்கிரதையாய்ப் பேசி ஊருக்குப்போக உத்தரவு வாங்கிவா; அவளை இவ்வீட்டிற் கெஜமானி" என்றனுப்பினாள்.

தர்மனுடனே முன்கூடவந்த வேலைக்காரியைப்பார்த்து 'உன் யஜமானியை நானிப்போது பார்க்க வலமாமென்று கேட்டுவந்து பதில்சொல்லு' மென்றதும், உடனே அவள் ரத்னவல்லியினிடம் போய் இச்செய்தியைச்சொல்ல, அவளுடனே பரமானந்தத்திலாழ்ந்து அவனையழைத்து வரும்படி சொல்லியனுப்பிவிட்டு, அவ்வறையின் வாயிற்படியில் நின்றுகொண்டு தர்மனை யெதிர்பார்த்தாள். அவன் வந்ததும் "அப்பா வரவேணும், என்று உன்னையழைத்துப்போய் ஒரு நாற்காலியில் உட்காரவைத்தாள். தர்மன் அவளழகையும் அலங்காரத்தையும் நடையையும் உடையையும் அவளுடைய நேத்திரங்கள்

தன்னை நோக்கும் விதத்தையும் பார்த்துக் கதை தாய் சொன்னது சரியாய் இருக்கலாமென நினைத்தான். பிறகு "அம்மா நீங்கள் கொடுத்த தக்க காலமே கிடைத்தது. என் அன்னையை இவ்விடம் வைத்து ரக்ஷித்து எனக்கும் சரியான காலத்தில் சமாசாரம் தெரியப்படுத்தினதற்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்; இதற்கு என்னால் செய்யக்கூடிய பிரதி உபகாரத்தில் உங்களுக் கபேட்சையிருந்தால் செய்யத் தயாராயிருக்கிறேன் என்றான்.

ரத்ன:—இந்த வார்த்தை சத்தியமா?

தர்மன்:—சந்தேகமில்லை, நானிதுவரையில் லெக்காரனைதாகிலொன்றும் பொய் மொழிந்ததில்லை.

ரத்ன:—உனது தாயைப் பார்த்தாயா?

தர்மன்:—பார்த்தேனம்மா.

ரத்ன:—அவளை நீ யிப்போதிருக்கும் ஸ்திதிக்குக் காரணமென்னவென்று கேட்டாயா?

தர்மன்:—கேட்டேன், ஊருக்குப் போகும்போது சாவகாசமாய்ச சொல்கிறேன்

ரத்ன:—அக் காரணத்தைச் சுருக்கிச் சொன்னால் கேட்பாயா?

தர்மன்:—தடையில்லை, கேட்கத் தயாராயிருக்கிறேன்.

ரத்ன:—உடன் அன்னையைக் குளிப்பதற்குக் கொண்டு போய்விட உத்தேசித்த அவர் தமையன் அவளை யழைத்துக்கொண்டு இராமபுரம் விட்டுப் புறப்பட்டு ரெயிலேறி வருகையில், உனது தாய்க்கு திடீரென ஒரு மயக்கமுண்டாய் கீழே விழுந்தாள். நானும் எனது வேலைக்காரியாகிய செல்லமும் கூடவே வந்தோம்; அப்படி மயக்கமுற்றிருந்தவ

யழைத்துக்கொண்டு குளித்தலை போக முடியாதென நினைத்து. அவளைத் தூக்கிக்கொண்டு ஈரோட்டில் இறங்கி, அவளையும் அவள் தமையனையும் ஒரு வண்டியிலேற்றி நானும் எனது வேலைக்காரியுமொரு வண்டியிலேறிக்கொண்டோம். என் வண்டியிற் கட்டியிருந்த குதிரை உயர்ந்ததாகையால் என் வண்டி இந்தப் பங்களாவுக்கு முந்திவந்துவிட்டது.

பிறகு ஒருமணி நேரம்வரையில் அவ்விருவருமிருந்த வண்டி வாராததால் சந்தேகமான மனதுடன் ரெயில்வே ஸ்டேஷன் வரையிற் றேடச்செய்தேன், ஒன்றும் புலப்படவில்லை. நானுடனே பத்துப்பேர் ஆட்களைத் தருவித்துச் சுற்றுக்கால் 5-மைல் வரையில் எல்லாவழிகளிலும் தேடச்செய்ததில், இரவு 2-மணி சுமாருக்கு இரண்டுபேர் திரும்பிவந்து இவ்விருவரும் ஒரு மரத்தடியில் பிரக்ஞைபற்று விழுந்து கிடந்தார்களெனத் தெரிவித்தார்கள். நானுடனே ஒரு வண்டியையனுப்பி நான்குபேர் ஆட்களைக்கொண்டு அவ்விருவரையும் இவ்விடத்திற்கு வரவழைத்தேன்; பிறகு ஒருமணி நேரத்திற்கெல்லாம் எங்கள் தமையனுக்குப் பிரக்ஞைவர, "வண்டிக்காரன் இருட்டினால் வழிதப்பி போட்டிவிட்டதாயும் நால்வர் திருடர்வந்து வண்டியைநிறுத்தியேதோ ஒரு ஸீஸாவைத் திறந்து இரண்டுபேர் முகத்திலும் காட்டியதாயும் பிறகு ஒரு சங்கதியும் தெரியாதென்றும்" அவரைக்கொண்டு தெரிந்துகொண்டேன்.

பிறகு இவளைப் பார்த்ததில் தேகத்தில் அணிந்திருந்த ஒரு நகையும் புலப்படவில்லை. ஆனால் உடம்பில் ஒருவிதமான காயமும் இல்லையேயென்று சந்தோஷித்து, போனாற் போகட்டும் திருடர்கள் நகைகளுடன் போனார்களே, இதுவே போதுமென்று நினைத்து அவளுக்குக்

களைப்புத் தீரும்படி காபி கஞ்சி பால் முதலியவற்றைக் கொடுத்துவந்தேன். ஒரு இங்கிலீஷ் வைத்தியரையுங் கூப்பிட்டு பார்க்கச்சொன்னேன்; இவளுக்கு மறுநாள் பிரக்ஞை வந்தது.

உடனே நடந்தவற்றை யிவளுக்குச் சொன்னால் இவள் பயப்படுவாள் என நினைத்து, இது வரையிற் சொல்லாமலிருந்தேன். இவள் தனக்குப் பிரக்ஞை வந்த நாழிகை முதல் ஊர் ஊர் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறாள். நானவளை நேரிலாவது எனது பிராமண வேலைக்காரர்களைக் கொண்டாவது ஊருக்கனுப்பியிருக்கக்கூடுமானாலும் நாளிது வரையிலுன்னைப் பார்க்காதவளாதலால் இந்த வ்யாஜத்தைக் கொண்டு உன்னையும் பார்த்துவிடலாமென நினைத்து, "உனது தாயார் சௌக்கியமாயிருக்கிறாள். பதறவேண்டாம். இவ்விடம் வந்து அவளை யழைத்துப்போகவும்' என்று தந்தியனுப்பினேன். நீயும் வந்துவிட்டாய், இதுதான் சுருக்கமான சமாசாரம் - என்றாள்.

இதைக்கேட்ட தர்மன் "எல்லா முண்மையாயிருக்கலா மெனத்தோன்றுகிறது; ஆனால் தந்தியிலிவள் சொல்லுகிறபடி எழுதவில்லை. ஒருகால் இவளொருவிதம் சொல்ல தந்தி யடிக்கப்போனவர்கள் ஒருவிதம் அடித்திருக்கலாம் என யோசித்து மறுபடியும் ரத்னவல்லியைப் பார்த்து (நீ என் தாயார் விஷயத்தில் இவ்வளவு சிரமப்பட்டதைப்பற்றி நான் மிகுந்த நன்றியுள்ளவனாயிருக்கிறேன். இனி உன் பாரத்தைக் கழித்து எனது மாதாவை நானழைத்துக் கொள்ளுகிறேன்', என்னுடன் அனுப்புங்கள்" என்றான்.

ரத்னா:—சரி நீ யொப்புக்கொள்வதில் ஆக்ஷேபமில்லை. ஆனால் நீயெனக்கு வாக்களித்தபடி எனது அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்துவிட்டு நீ யவ்வாறு செய்யவேண்டும்.

இதைக்கேட்ட தர்மனுக்குக் கொஞ்சம் மனங்கலங்கி பீதியுண்டாயிற்று. இவளது மாதிரியையும் சொற்களையும் கேட்டால் நமது அம்மா சொன்னபடி இவள் நம்மை அகாரியத்தில் நிர்ப்பந்திப்பாள்போல் தோன்றுகிறது. இருக்கட்டும், மேலே பேசிப்பார்ப்போம் எனத்தீர்மானித்து! "அம்மா! என்ன காரியம் உனக்கென்னாலாகவேண்டும் ?" என்றான்.

ரதன:—நான் யாரென்றும் எனது அந்தஸ்து எப்படிப்பட்டதென்றும், தெரிந்துகொண்டிருக்கிறாயா? அதை நீயறிந்தபிறகுதான் எனக்காகவேண்டிய காரியத்தைச் சொல்லவேண்டும்.

தர்ம:—அம்மா நீங்கள் என் தாயாருக்குத் தங்கையெனநினைக்கிறேன், உங்களந்தஸ்து இன்னதென்று நானறியேன்.

ரத்ன:—என்னை நீ யிதுவரையில் பார்த்திருக்கிறாயா ?

தர்ம:—இல்லை.

ரத்ன:—என்னைப் போல் அழகும் ஆபரணங்களுமணிந்த பெண்களையாவது பார்த்திருக்கிறாயா ?

தர்ம:—ஆம், நானநேகரைப் பார்த்திருப்பேன்.

ரத்ன:—பார்த்திருப்பது நிஜமானால் அநேகரில் இரண்டொருவரையாவது இப்போது சொல்லமுடியுமா ?

தர்ம:—முடியாது.

ரத்ன:—ஏன்?

தர்ம:—ஒரு ஸ்திரீயைப் பார்த்தால் மறுபடி யவளுடைய வனப்பை மனதிற்குக் கொண்டுவரக்கூடிய ஸம்ஸ்காரத்தை யுண்டுபண்ணும்படி உற்று நோக்கும் வழக்கம் எனக்கில்லை.

ரத்ந:—அப்படியானால் அநேகரைப் பார்த்திருப்பதாய் மாத்திரமெப்படிச்சொன்னாய்.

தர்ம:—நான் வெகு ஊர்களில் வெகு பேர்களைப் பார்த்திருக்கிறேனாகலால் இப்படியுமிருக்கலாமென நினைக்கிறேன்.

ரத்ந:—அநுமான தர்க்கந்தானே.

தர்ம:—ஆம், ஆனால் அது சரியாகவுமிருக்கும்.

ரத்ந:—ஒருகாலிருக்காது.

தர்ம:—ஏனிருக்க நியாயமில்லை.

ரத்ந:—மற்ற பேர்களும் நானாகவே யிருந்தால் நீ என்னைப்போலுள்ள ஸ்திரீகளைப் பார்த்திருக்கக் கூடும்.

தர்ம:—ஆனால் தனக்குத்தானே நிகரென்று அனன்வயாய் சொல்லப்படுகிறதுபோல் தோன்றுகிறது.

ரத்ந:—ஆம் அதற்கென்ன தடை?

தர்ம:—தடையொன்றுமில்லையா? ஒருவருக்குத் தன் அழகைத் தானே அறியமுடியாதென்பதுதான் தடை.

ரத்ந:—அப்படியானால் தன்னழகை யெப்படித்தான் அறிவது?

தர்ம:—எதிரிலிருப்பவர் பார்த்துச்சொல்லித் தான் அறியவேண்டும், அல்லது நிலைக்கண்ணாடியிற் கொஞ்சம் அறியலாம்.

ரத்ந:—எனக்குக் கொஞ்சமாக அறிந்துகொள்ளுகிற பிரியமில்லை.

தர்ம:—அப்படியானால் எதிரிலிருந்து பார்த்தவர் சொல்லத்தான் தெரிந்துகொள்ளவேண்டும்.

ரத்ன:—எனக்கிப்போது யார் எதிரிலிருக்கிறார்கள்.

தர்ம.—(சுற்றிப்பார்த்துவிட்டு) நான்தான் இருக்கிறேனென நினைக்கிறேன்.

ரத்ன:—நீ சொல்லத்தான் தெரிந்துகொண்டேன்.

தர்ம:—நானொன்றும் சொன்னதாய்த் தெரியவில்லையே, நானென்னசொன்னேன், அதைச் சற்றுத் தயவுசெய்துசொல்லவேண்டும்.

ரத்ன:—என்னைப்போல் அழுதும் அதற்கேற்ப ஆபரணங்களுமமைந்த ஸ்திரீ வேறொருத்தி இல்லையென்று நான் சொன்னாய்.

தர்ம:—எனக்கப்படிச்சொன்னதாக ஞாபகம் இல்லையே.

ரத்ன:—உனது வாய்ச்சொன்னாலல்லவா உனக்குத் தெரியும்.

தர்ம:—சொல்லும் சக்தி வாய்க்கேதவிர வேறெந்த இந்திரியத்துக்குமுண்டோ ?

ரத்ன:—உண்டு.

தர்ம:—எனக்குத் தெரியவில்லையே.

ரத்ன:—தெரியச்சொல்லுகிறேன் கேட்கிறாயா.

தர்ம:—புதுவிஷயத்தைச் சொல்வதைக்கேட்டு ஆனந்திக்கத் தயாராயிருப்பதில் தடையென்ன ?

ரத்ன:—ஸ்தூலஞானம் உள்ளவர்களுக்கு வாயினாற் சொல்லவேண்டும், ஸூக்ஷ்மஞானமுள்ளவர்களுக்கு மற்ற இந்திரியங்கள் ஸூசனம் செய்யும், நான் ஸூக்ஷ்மஞானமுள்ளவள்.

தர்ம:—அப்படியானல் எனது புலன்களுக்குள் எது உனக்கு ஸந்தோசனம் செய்தது.

ரத்ன:—எந்த இந்திரியம் ரூபத்தையும் லாவண்யத்தையும் அறிய வல்லமையுள்ளது?

தர்ம:—நேத்திரேந்திரியம்.

ரத்ன:—அதுதான் எனக்கு ஸந்தோசனம் செய்தது.

தர்ம:—ஆனல் எனது கண் உனது அழகையும் அதைப் பெருகச்செய்யும் ஆபரணங்களையும் போக்கியானந்திக்கின்றதென்று உங்களபிப்பிராயமோ?

ரத்ன:—ஆம், அப்படித்தானென நினைக்கின்றேன், (என்று சொல்லி உதட்டிற்குள் சிரித்துப் பவளக்கொடியிற் சந்திரிகைவிழுந்த சோபையை ஜயித்தாள்).

தர்ம:—அதற்கென்ன காரணமென நீங்கள் நினைக்கிறீர்கள்.

ரத்ன:—அக்காரணம் உனக்கே தெரியும்.

தர்ம:—எனக்குத் தெரியவில்லையே ஆதலால் அஞ்ஞானமென்கிறீயோ?

ரத்ன:—அப்படித்தானிருக்கலாமென நினைக்கிறேன்.

தர்ம:—அது எவ்வாறு புலப்பட்டது.

ரத்ன:—என்மனம் சொல்லிற்று.

தர்ம.—எப்படி யதனுற் சொல்லமுடியும்.

ரத்ன:—நான் உன்னைப் போலுள்ளவர்களையும் உன்னைக்காட்டிலும் அதிகமான அழகுவாய்ந்த புருஷர்களையும் எத்தனையோ பேர்களைப் பார்த்திருக்கிறேன், அவர்களிடத்தில் என் மனதுக்கு அபிருசி உண்டாகவில்லை. அதற்

குக் காரணம் அவர்கள் என்னைக்கண்டு மோகிக்காமைதான்; உன்னைக்கண்டதும் என் மனம் ராகாமிருத பயோநிதியில் மூழ்கிவிட்டது. அதனால் உனது கண்கள் என்னை மதுராகத்துடன் பார்க்கின்றனவென்றறிந்துகொண்டேன்.

தர்ம:—சிவ-சிவ-(என்று காதைமூடிக்கொண்டு) நீ உன் மனது மயங்கினதைக்கொண்டு என் கண்களும் மயங்கியிருக்குமென்று தவறாக நினைத்துவிட்டாய், இனி அந்த எண்ணத்தை விட்டுவிடு.

ரத்ன:—நானெவ்விதம் விடுவேன், நான் வெகுநாளாய்ப் பார்க்கவிரும்பிய புருஷ ரத்தினத்தை யின்று பார்க்க நேர்ந்தும் நான் ஆசையுடன் உன்னை யொருதரமாவது அணைந்து ஆனந்திக்காவிடில் என்னிலும் அதமமான பெண்களுண்டோ ?

தர்ம:—அம்மா, நான் ஸ்வபாவத்திலேயே பரஸ்திரீகளைத் தாயாக மதிப்பவன். அதிலும் எனது தாய்க்கு நீ தங்கையாதலால் தர்மப்படி நீ எனக்குத் தாயாகிறாய்; ஆகையால் உனது மனோரதம் என்னால் பூர்த்திசெய்யப்படுமென்று கனவிலும் நினையாதே.

ரத்ன:—என் அழகுவாய்ந்த துரையே தர்மா! இதெல்லாம் தப்புப்புகல். ஸாவித்ரியோ உனக்குச் சொந்தத் தாயல்ல, அப்படியிருக்க அவளுக்குத் தங்கை யென்கிற முறைமையைக் கொண்டு என்னைத் தாயென்பதெல்லாம் வேண்டாததற்குரிய வார்த்தையேதவிர வேறல்ல.

தர்ம:—அம்மா நீ யெவ்வளவு சொன்னாலும் என் சித்தம் தர்மம் பிசகி நடக்க இடந்தாராது.

ரத்ன:—என் ஆசையே கண்ணாளா! ஒரு ஸ்திரீ மன்மததாபம் பொறுக்காமல் தன்னை பிரார்த்திக்கும்போது அவளை மறுத்துவிட்டால் அது அதர்மமல்லவா? இப்போது என்னை நீ கைவிட்டாயானால் என் விரஹதாபம் பொறுக்கமுடியாமல் கட்டாயம் மாண்டுபோவேன். அந்த ஸ்திரீஹத்திதோஷம் யாரைப்பிடிக்கும்?

தர்ம:—அந்த தோஷம் என்னை ஒருநாளுமடையாது. நீ சொல்லும் சாஸ்திரமெல்லாம் ஸ்வஸ்திரீ விஷயமே தவிர, பரஸ்திரீ விஷயமல்ல.

ரத்ன:—அது தர்மமானாலும் சரி, அதர்மமானாலும் சரி, நான் உன்னை பரியாமல் விடமாட்டேன்.

தர்ம:—அப்படி அசாத்தியத்தை கவனிக்காமலாவது நீ செய்யவாரம்பித்தால் நீ யடையும் லாபமென்ன? துச்சமான காமசுகத்தை யடைவதுதானே, அதை உனது கணவனிடத்திலேயே அடைவாய், என் விஷயமாகவாவது நீ வீண் பிரயாசத்தொழிலை மறந்துவிடு.

ரத்ன:—என் பிராணகாந்தா! கவனமாகக் கேள், என் கணவன் ஒரு கிழவன், அவனுக்குக் கிழக்காலம் வயதாயிற்று, அவனால் எனது ஆசைகளுக்கு வேண்டிய சுகத்தை யடைய முடியாமையால்தான் நானிவ்விதம் உன்னைக் கெஞ்சுகிறேன்; மேலும், கணவனுக்கு எவ்வளவுதானாவது உபயோக சாமர்த்தியம் இல்லாமற்போனபோது மகாபதிவிரதைகளான ஸ்திரீகள் இதர புருஷசம்பர்க்கத்தால் குமாரர்களைப் பெற்றிருக்கின்றது உனக்குத் தெரியாதா? அப்படிப்போல் என்னையும் நினைத்து அதர்மம் என்னும் வார்த்தையைவிட்டுவிடு.

தர்ம:—நீ சொல்லும் சமாசாரம் பெண்கள் பெரியவளாவதற்கு முன் விதவைகளாய் விட்டால் அவர்களை மறுபடி கலியாணம் பண்ணிக்கொடுப்பதுபோல் பூர்வயுக தர்மம்; அதெல்லாம் இக்கலியுகத்தில் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது; இக்கலியில் ஒரு ஸ்திரீக்கு ஒரே புருஷன் தான். அவன் இருந்தாலும் இறந்தாலும் சக்தனாலும் அசக்தனாலும் அவனொருத்தனே; வேறு புருஷனை மனதினாற்கூட அவள் விரும்பலாகாது.

ரத்ன:—ஆனால் சிறுவயதிற்கு வாழ்க்கைப்பட்ட பெண்கள் சுகமில்லாமல் சாகவேண்டியது தானே?

தர்ம:—ஆம், அவர்களுடைய ஜன்மாந்தர பாக்யம் அவ்வளவு தான்.

ரத்ன:—பாக்யமென்பதை நானொப்புக்கொள்ள மாட்டேன், அது கண்ணுக்குத்தெரியாத பதார்த்தம்.

தர்ம:—ஆம் கண்ணுக்குப்புலப்படாதது தான், ஆனால் அநுமானப்பிரமாணத்தால் ஒப்புக்கொள்ளவேண்டும்.

ரத்ன.—அனுமானத்தாலாவது ஒப்புக்கொள்ளும்படி என்ன நிர்ப்பந்தம்.

தர்ம:—நிர்ப்பந்தமா, கேள், நீ ஈசுவரனொருவருண்டென்று ஒப்புக்கொள்ளுகிறாயா இல்லையென்கிறாயா?

ரத்ன:—இல்லையென்று எப்படிச்சொல்லலாம். தானாகப் பொழுதுவிடிகிறது அஸ்தமிக்கிறதே.

தர்ம:—இவ்விதம் இராப்பகல்களைத் தவறாமல் பிரவர்த்திக்கச்செய்பவன் ஒருவன் இருக்கவேண்டும், அவன் மனுஷியனாகவிருக்கமுடியாதென்ற அனுமானத்தால் ஈசுவரனை ஒப்

புசிக்கொள்வதுபோல், அதிர்ஷ்டம் என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். அதெப்படியெனில். ஒரே தாய்தகப்பனுக்குப் பிறந்த இருவரில் ஒருவர் மேன்மையான ஸ்திதியிலிருக்கிறதும் மற்றொருவர் இரந்து நடப்பதும் நாம் பார்க்கிறோமல்லவா? அதற்குக் காரணம் ஜன்மாந்தர பாக்கியத்தைத் தவிர வேறொன்றைக் கூறலாம். அப்படி நீயும் மகா பாக்கியமில்லாதவளென்று இச்ஜன்மத்தில் அகாரியத்திற்பிரவேசியாமலிருந்தாயானால் மறு ஜனனத்தில் ஏராளமான சுகத்தையடையலாம். நளாயனி என்கிற மாது தனது பர்த்தா ரோகியாய் இருக்கையிலும் தன் சுகத்திற்குதவாதவனாயிருந்தாலும் தனது கற்பைக் காப்பாற்றிக்கொண்டதனால் சந்தோஷித்த பரமசிவனுடைய அனுக்கிரகத்தினால் அவள் மறுஜன்மத்தில் துர்க்கையின் அம்சத்துடன் பிறந்து ஐந்து மகாபுருஷர்களுடன் களித்து சுகத்தையடையவில்லையா? அவளைப்போல் நீயுமிரு. மேலும் பால்பாக்கியமில்லாதவன் வீட்டுக்குப் பால் வாங்கிவந்து வைத்திருந்தாலும் அதைப் பூனை குடித்துப்போவதுபோல் இந்தப்புருஷசங்கமம் உனக்கு ஸ்திரமாயும் சுகமாயும் கிடைக்காது. உனக்குப் பாபத்தை விளைவிக்க நிந்தைக்காலமே கிடைக்கும்.

ரத்ன:—இந்த தர்மோபதேசமெல்லாம் என் காதில் நுழையாது. எனக்கிப்போதிருக்கும் காமத்தீயானது உன்னை யொருதரமாவது முத்தமிட்டாலொழிய அணையாது. மேலும் இப்போது நீ வீண் பிடிவாதத்தினால் மறுத்தாலும் இதற்காக மறுபடி பச்சாத்தாபத்தைக் கட்டாயமடைவாய்.

தர்ம:—(நகைத்து) அடா மாபாவி! இதென்ன புதிர் போடுகிறாய். இம்மட்டிலாவது இந்த அதர்மத்தினின்றும் நீங்கினேன் என்று களிக்கவேண்டியதாயிருக்கப் பச்சாதாபப்படுவதுமுண்டோ?

ரத்ன:—உண்டு, அதற்குக காரணமிருக்கிறது.

தர்ம:—அதென்ன காரணம்?

ரத்ன:—நீ யறியா எனது அங்கங்களில் ஜ்வலிக்கின்ற நகைகள் சுமார் லக்ஷரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ளவை. இதைப்போல் இரண்டு பங்குள்ள நகைகள் எனது பெட்டிக்குள்ளிருக்கின்றன. மேலும் எனது புருஷனுக்குச்சொந்தமான சுமார் 5-லக்ஷரூபாய் பெறுமானமுள்ள ஸ்தாவர சொத்துக்களை நான் அவரிடம் ஸ்வேச்சா விநியோகார்த்தமாக உயில் சாஸனம் வாங்கி பனுபவித்து வருகிறேன், எனக்கு வார்சுகள் ஒருவருமில்லை. எல்லாவற்றையு முனக்கே கொடுத்து உன்னோடு சுகமாயிருப்பதே எனது உத்தேசம்.

தர்ம:—இவ்வளவுதானு? வேறென்னவோ காரணமென்றிருந்தேன், பணத்திற்காகப் பாவத்தொழிலைச்செய்பவன் நானல்லவென்பதை உறுதியாய் நினை. அல்லது இந்தவார்த்தைகளெல்லாம் என், நாழிகையாய் விட்டது, நான் உனக்கு இவ்விதக்காரியத்திற்கு எவ்விதத்திலும் உடன்படேன், எனக்கு உத்தரவு கொடு. வெயிலுக்குப் புறப்படவேண்டும், (என்று எழுந்திருந்தான்.)

ரத்னவல்லியும் உடனே தானுமெழுந்து அருகிற்சென்று தர்மன் கையைப்பிடித்துக்கொண்டு 'என்துரையே, என் துரையே' என்று சொல்வதற்குள் தர்மன் கையைத் திமிரிக்கொண்டு ஸாவித்ரியிருக்குமிடம் சென்றான். அப்போது ரத்னவல்லி வாயிற்படியின் பக்கத்தில் நின்றுகொண்டு 'தர்மா இது சரியா' என்று கேட்டாள். 'ஆம் இதுவே ஸத்யம்' என்று விடையளித்தான் தர்மன். உடனே ரத்னவல்லி தடியாலடிக்கப்பட்ட ஸர்ப்பம்போல் கோபங்கொண்டு, அடே பிரஷ்டா

அடே பதரே, நீ இதற்குத் தக்கபலனை யநுபவிப்பாய் என்றுசொல்லி மறுபடி உட்சென்று உட்கார்ந்து யோசித்தாள்.

"நம்மைக் கட்டிய கணவன் சரியாயில்லாமையால் அல்லவா இந்த நாயையும் பேயையும் நல்லவார்த்தை சொல்லும்படியாயிற்று" என்று ஒருக்ஷணம் தனது விதியை நொந்துகொண்டாள். தன்னையிவ்வாறு கிழவனுக்குப் பணத்திற்காகத் தள்ளினது முதலான அநேக அவமானங்களுக்கு ஆளாக்கின தமையனை ஒருதரம் வைதாள். நம் தளுக்குக்கு மயங்காதவனே புவியில் இல்லையென்று நான் நினைத்திருந்ததற்கு விரோதமாய் நிற்கும் இத்தட்டியல் தைரியம் என்ன தைரியம் என்று ஒரு நிமிஷம் தர்மனைப் புகழ்ந்தாள். இத்தகைய சுத்தபுருஷனைக் கட்டிய பதியாக இக்காயம் ஏது ஆத்மாவிற்கு காயமேதுமில வெற்றிலேயெனக் கொண்டநேய தன்னை பிகழ்ந்தாள்; கடைசியாக இப்படிப்பட்ட நமது மோகதாபத்தைத் தணிக்காமல்போகும் இந்தப் பாவிப்பயலுக்கு ஏதாவது தக்க சிக்ஷை செய்யவேண்டுமெனத் தீர்மானித்து, தனது வேலைக்காரி செல்லத்தைக் கூப்பிட்டாள்.

இதற்குள் ஜாமணி பத்தாயிற்று; அதற்குள் தர்மன் அவ்வேலைக்காரி செல்லத்தைக் கூப்பிட்டு அவள் கையில் 5-ரூபாய் பணம் கொடுத்து, ஸாவித்திரியின் தற்கால ஸ்திதியின் உண்மையான காரணத்தைக் கேட்க, அவள் இராமாபுரத்தில் ஸாவித்திரிக்கும் அவளது தமையன் முதலான நால்வருக்கும் நடந்த சம்பாஷணையையும் அவர்கள் ரெயிலேறி வந்ததும் ரத்னவல்லி மயக்கமருந்து புகட்டினதும் நகைகள் களவாடப்பட்டதும் லக்ஷ்மீவிலாஸ பங்களாவில் ஸாவித்திரியை அடைத்துவைத்ததும் அருகிலுள்ள ரத்னமென்கிற மடையன் இவனைப் பார்க்கவொட்டாமல் தடுக்கப்பட்டதும்

அவள் தந்திகொடுப்பதாய் ஒப்புக்கொண்டு போனதும் ஆகிய இவ்விஷயங்களை யொன்றும் ஒளியாமல் விஸ்தார மாய்ச் சொல்லிவிட்டாள்.

இதைக்கேட்ட தர்மன் தனக்குக்கிடைத்த தந்தி, இங்கு வரக்கூடாதெனத் தடுக்கப்பட்ட ரத்னவல்லியம்மாளால் அனுப்பப்பட்டதென்று தீர்மானித்துக்கொண்டு, ஸாவித்ரி யைப் பார்த்து "அம்மா! நீ துயரப்படாதே, நகைகளைக் களவாடியவன் அவைகளைக் கழற்றமுடியாமல் கைகால்களைத் துண்டிக்காமல் விட்டதே நமக்குப் பெரும நன்மை செய்த தாகும்; இந்நகைகளைப்போல இரண்டு பங்கு நகைகளை நானுனக்குச் செய்துபோடுகிறேன், கவலைப்படாதே, மெல்ல எழுந்திரு, ஊருக்குப் புறப்படுவோம்", எனவும் ஸாவித்ரீ பரமசந்தோஷத்துடன் "வத்ஸா தர்மா! நான் நகைகளைக் குறித்து விசனப்படவில்லை. இனி எனக்கு நகைகளென். ஈசுவர கிருபையால் நீ நல்ல உத்தியோகத்திலமர்ந்து நான் கோரின பெண் கிடைக்காமற்போனாலும் உனக்கனுகுண மான அகமுடையாள் வாய்த்து அவளுக்கு நீ வேண்டிய நகைகளைச் செய்துபோட்டாயானல், அதையே நான் பத்து லக்ஷ்ரூபாய் நகைகளைப் போட்டுக்கொண்டதுபோல் நினைப் பேன். ஆனால் நான் நினைத்தபெண் உனக்குக் கிடைக்கா மற் போனதுபற்றி என் மனம் ஆறாது" என்று சொல்ல, அதற்குத் தர்மன் "அம்மா நீ உத்தம ஸ்திரீயானதால் உனது கொள்கையை பகவான் மாற்றமாட்டார், பயப்படாதே, கார ணத்தைப் பின்னாலுரைக்கிறேன், ஊருக்குப்புறப்படு" என்று சொன்னான். உடனே இருவரும் வெளியில் வந்து ஒரு குதிரை வண்டியைப் பிடித்துக்கொண்டு சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரத்திற் கப்பாலுள்ள ரெயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு வந்து ரயிலேறி குளித்தலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

ரத்னவல்லிக்குப் பிரமை தெளிந்தபின் செல்லத்தைக் கூப்பிட அவள் எதிரில் வந்து நின்றாள்.

ரத்ன:—எங்கேடீ அந்த ரெண்டுபாவிகளும்.

செல்ல:—மௌனமாய் நின்றாள்.

ரத்ன:—என்னடீ பேசாமல் நிக்கரே அவர்கள் உனக்கேதாவது வாக்கட்டை போட்டுவிட்டார்களோ ?

செல்ல:—எவுங்க ரெண்டுபேருங்க, எனக்குப் புரியவில்லேங்க.

ரத்ன:—என்னடீ மோசக்காரி! புரியவில்லேயா, அங்கே படுத்துக்கிடந்தாளே அந்தச் சிறுக்கியும் அவளைப் பார்க்க வந்தானே அந்தப்பயலுமடீ,

செல்ல:—அவுங்களா அவுங்க போய்ட்டாங்க.

ரத்ன:—எங்கேயடீ போய்விட்டார்கள் ?

செல்ல:—எங்கேயோ, ஊருக்குப்போகணுமெனு சொல்லிக்கிட்டிருந்தாங்க.

ரத்ன:—ரயிலுக்கா, பார்க்கிறேன் போவதை. ஏண்டீ அவர்களை என் உத்தரவன்றி வெளியில் விட்டாய். சரி இருக்கட்டும், வாசலிலிருக்கும் சட்டையனையும் கருப்பனையும் அழைத்துவா என்றாள்.

அவ்வாறே அவள் உடனே போயழைத்ததும் அவ்விருவரும் வந்தார்கள். பிறகு ரத்னவல்லி அவர்களிடத்தில் ஐந்துபவுன் எடுத்துக்கொடுத்து "இப்போதுதான் என் வீட்டிலிருந்த சுமார் 30-வயதுள்ள ஒரு அம்மாளை இவ்விடமிருந்து அவள் மகனுகிய இருபது வயதுள்ள ஒரு பயல் வெளியிலழைத்துக்கொண்டுபோகிறுனும். நீங்கள் ஓரோட்டமாய் ஓடி அவர்கள் வண்டியைக் கண்டுபிடித்து வண்டிக்காரனிடம் ஒரு பவுனைக்கொடுத்து வண்டியைக் காட்டுமார்க்கமாய் ஓட்டச்சொல்லி, நீங்கள் அங்கே போய் அவ்விரு

வரையும் கைப்புடைத்து அதேவண்டியில் வாரிப்போட்டுக் கொண்டு அரைமணி நேரத்திற்குள் இங்கே வந்துசேர வேண்டியது" எனக் கட்டளையிட்டாள்.

அதற்கு இருவரும் 'உயிரைவச்சுத்தாளேங்க', என்று கேட்க, 'அடே யவர்களைக் கொல்லாதேயுங்கள்' என்றாள். உடனே அவர்கள் புறப்பட்டு ஓடோடியும் வந்து ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கால்மைலுக்கிப்பால் ஒரு வண்டியும் அதனுள் மேற்கண்ட குறிப்புப்படி வயதுள்ள ஒரு பெண்ணும் பையனுமிருக்கக்கண்டு, வண்டிக்காரனைச் சரிப்படுத்தினார்கள். இரவு காலமாகையால் வண்டியிலிருந்தவர்கள் தூக்கக் கலக்கத்தினால் ஒன்றையும் கவனிக்கவில்லை. வண்டி குறிப்பிடப்பட்டவிடத்துக்கு வந்தவுடன், கட்டயனும் கருப்பனும் ஒரு புதரிலிருந்து வருவதுபோல்வந்து வண்டிக்காரனையடிப்பதுபோல் பாவனை செய்தவுடன், அவன்'ஐயோ! செத்தேன்' என்று சொல்லிக் கீழேவிழுந்தான். உடனே வண்டிக்குள்ளிருந்த மனிதன் வண்டியிலவைத்திருந்த தடியைக் கையிலெடுத்துக்கொண்டு கீழிறங்கி அவ்விருவரையும் நொறுக்கிக் கீழேதள்ளிவிட்டு நீங்கள் யாரென விசாரித்தான். இவர்கள் அடிதாங்கமாட்டாமல் தவிக்கிறபடியால் மறுபடி அடி விழுமென்று பயந்து நடந்த விஷயங்களை வெளியாகச்சொல்லித் தாங்கள் வண்டி மாறுபாடாய் வந்துவிட்டதால மன்னிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள்.

அதற்கு அந்த மனிதன் "மகன் தாயை யழைத்துப் போனால் அந்தக்குச்சுக்காரிக்கு இவ்வளவு ஆத்திரம் ஏன்? அவளுக்கு அந்தப்பையன் இணங்கவில்லைபோலத் தெரிய வருகிறது, அதுதான் ஆத்திரத்திற்குக் காரணம், அவர்களை தெய்வம் தப்புவித்தது, அவர்கள் அகப்பட்டிருந்தால நீங்கள்

அவர்களைச் சட்னியாய்ச் செய்திருப்பீர்கள். நல்லது, எங்களை வெளியிலுக்குப்போகவொட்டாமல் கெடுத்ததற்காக அவ்விருவருக்கும் செய்யச்சொன்ன சிக்ஷையை அவளுக்கே செய்கிறேன் என்று அந்தக் குச்சுக்காரிக்குச் சொல்லுங்கள், அவள் போலீஸ் இன்ஸ்பெக்டரை ஆசை நாயகனாக வைத்திருப்பதால் கோர்ட்டில் நியாயம் கிடைக்காது. அவள் தேகத்தை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளச் சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு, வண்டிக்காரனைப்பார்த்து, அடேய்! நீ யிவ்விதமான வேலைகளுக்கு உடந்தையாயிருந்தாயானால் உன் தலை இராது என நினைத்துக்கொள்" என்று சொல்லிவிட்டு அடிபட்ட இருவரையும் வண்டிக்காரனைக்கொண்டு அதே வண்டியில் தூக்கிப்போடச்சொல்லி லக்ஷ்மீவிலாஸ பங்களாவிற்கு அனுப்பிவிட்டு, தன்னுடன் வந்த ஸ்திரீயுடன் கால்நடையாய்க் கொஞ்சதூரம் சென்று வேறுவண்டி பிடித்துக்கொண்டு டவுனுக்குச் சென்றான்.

பங்களாவின் வாசலில் வண்டியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ரத்னவல்லி, வண்டிவந்து நின்றதும் சந்தோஷமாய் வண்டியினருகிற்சென்று உடைந்த மண்டைகளும் முறிந்த கைகால்களுமாயிருந்த தானையும் [illegible] ஆட்களை வெளிச்சத்திற்பார்த்துத் திடுக்கிட்டு சங்கதியை விசாரிக்கையில் அவர்கள் நடந்தவை யாவற்றையும் சொன்னதுடன் வண்டியிலிருந்த மனிதன் சொன்ன சொற்களை மாற்றாமலும் சொல்லிமுடித்தார்கள். உடனே ரத்னவல்லி மகா பயத்தையடைந்து வண்டிக்காரனைக் கொண்டு அடித்த மனிதன் [illegible] ஜமீன்தார் [illegible] தேவரின் மகனென்றார். [illegible] [illegible] [illegible] ஆட்கள் [illegible] தெரிந்து கொண்டு, [illegible] நியாயம் [illegible]

த்து அவர்களை வீட்டிற்கனுப்பிவிட்டுத் தனதறையிற்சென்று படுக்கையிற் படுத்தாள். தனக்கு ஆபத்து நிச்சயமாய் வந்துவிடுமென்று நடுங்கினாள்.

பிறகு அவள் பயத்தால் நெடுநேரம்வரை தூக்கமில்லாமல் புரண்டுகொண்டே "நான் எனக்கென்றேற்பட்ட கணவனுடன் ஊரிலுள்ளவர்களைப்போல் வாழ்ந்துவந்தேனானால் எனக்கிவ்வித ஆபத்துகள் வருமா, அவர் கிழவராக விருந்தாலும் என்னைப் பிறர் தொடவிடக் கொடுப்பாரா, அவருக்கவ்வளவு சொத்துத் தானில்லையா? நான் அற்பமான சுகத்தைப் பெரிதாய் நினைத்துச் செய்யவொண்ணாக் காரியங்களைச் செய்துவருவதால் எனக்கிப்படி நேர்ந்திருக்கிறது. சொந்தமான ஒருகணவனைவிட்டு அவனைக்காட்டிலும் அழகிலும் பலத்திலும் சிலாக்கியமான எத்தனை புருஷர்களைப் பிடித்தாலும் அவர்கள் தங்களுடைய ஸௌகத்தையனுபவித்து மாத்திரம் போகிறார்களே தவிர, நமது கஷ்டங்களுக்குப் பாத்தியப்படுபவன் பலவீனனாயிருந்தாலும் சொந்தக்கணவன் ஒருவனே. மகா உத்தமியான ஸாவித்ரிக்கு நான்செய்த துரோகத்திற்கும், தர்மாத்மாவான அவளது பிள்ளையை நான் காமித்ததற்குமே பலனிதுதான். 'தர்மமே ஜயிக்கும்' என்கிற லோகவசனப்படி தர்மத்தைக் கடவாத அவ்விருவரும் ஒருவிதமான கஷ்டமுமில்லாமற்போய்ச் சேர்ந்தார்கள். அதர்மத்திற்கிடமாகிய நான் துன்பத்திலகப்பட்டுக்கொண்டேன்; நாளையதினம் நானிங்கிருந்தால் சர்வ சொத்துக்களையுமிழந்து எலும்பு நொறுங்க அடிப்படவேண்டி வரும்"—என்றிவ்வாறு யோசித்துக்கொண்டு இரவைக் கழித்து மறுநாளுதயத்தில் பதினாயிரம் ரூபாய் தாகு கொடுத்துக் கர்சிக்குளம் ஜமீன்தாரரிடம் லக்ஷரூபாய் செலவுக்குக்கடன் வாங்கிக்கொண்டு சாயங்காலம் புறப்பட்டு இராமாபுரம் போய்ச் சேர்ந்தாள்.

இவள் தன் கணவனுடைய சொத்துக்களில் 3 பங்கு சொத்துக்களை உயில் சாஸனம் வாங்கும்போது அவைகளின்மீது லக்ஷரூபாய்வரையில் கடன்களிருந்தன. பிறகு இந்த ஆறுமாதத்திற்குள் 3-லக்ஷரூபாய் கடன்வாங்கியிருக்கிறாள். இதில் லக்ஷரூபாய்க்கு நகைகளை வாங்கியிருக்கிறாள், மற்றபணமெல்லாம் துர்மார்க்கச் செலவிற்குத்தான். இவள் வீதம் சொத்துக்கள் முழுமையும் 5-லக்ஷரூபாக்குமேல் பொறுகது.

இங்கே ரத்னவல்லியின் நிலைமை இப்படியிருக்க சனகவல்லியின் நிலைமையைப் பற்றிச் சற்று கவனிப்போம். இவளுக்குப் பணத்தில் கொஞ்சம் கார்பண்யஸ்வபாவம் உண்டு. அதனால் அவள் கணவன் அடிக்கடிவந்து தன்னைப் பணம் கேட்பதைப் பார்த்து பணம் கொடுக்க மனம் பொறாமல் அவரைத் தனது சர்வசொத்துக்களையும் விற்றுவரச்சொல்லிக் கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுத்துத் தீர்த்துத் தனது தகப்பனிடமிருந்து கிடைத்த தனது வீதம் சொத்துக்களைத் தனது கணவனைக்கொண்டு பார்த்து வரும்படி செய்து அவரை இராமபுரத்தில் தனது வீட்டோடுவைத்துக் கொண்டாள். அப்படியிருப்பதால் அவளுக்குப் பரநாயக சங்கமத்திற் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டதாலும் அதற்கு ஏராளமானபொருள் போய்விடுவதாலும் அவ்விஷயத்தில் கொஞ்சங்கொஞ்சமாய் வெறுப்படைந்து கடைசியாய் 'நமது பாக்கியம் அவ்வளவுதான்' என நினைத்து துர்மார்க்கத்தை விட்டுக் கணவனுடன் வாழ்ந்துவந்தாள்.

# பதினன்காவது ஆச்வாஸம்.

## அதர்க்கித துக்கானுபவம்.

தர்மராஜனும் ஸாவித்ரியும் டிரெயினில் வரும்போதே, ஸாவித்ரீ வீட்டைவிட்டுப் புறப்பட்டது முதல் தனக்கு நேர்ந்த சுகதுக்கங்களைச்சொன்னள். தர்மனும் அவள் ஊருக்குப்போனபிறகு தான் திருச்சிராப்பள்ளிக்குப்போய் வந்த சங்கதிகளையும் ஹைகோர்ட்டில் கேஸ் அபஜயமடைந்ததையும் அதன்மேல் அப்பீல் விஷயமாய் தன் தகப்பனர் சென்னையில் தங்கியிருக்கும் காரியத்தையும் கடன்களுக்குச் சீக்கிரம் ஏதாவது ஏற்பாடு செய்யாவிட்டால் சகலசொத்துக்களும் போய்விடுமென்பதையும் இன்றைபதினமாகிய தைமீ 30-உ ராத்திரி 8-மணிக்குத் தானவசியமா மதுரை ஸ்டேஷனிலிருக்க வேண்டுமென்பதையும் சொல்லி, அம்மாளை வீட்டில் விட்டுவிட்டு அடுத்த டிரெயினில் மதுரைக்குப்போக வேண்டுமென்றும் கூறினன். அவ்வாறே செய்வதென்று தீர்மானித்துக் கொண்டு, இருவரும் குளித்தலையி லிறங்கினர்கள்.

இறங்கினவுடன் ஒருவண்டியைப் பிடித்துக்கொண்டு வீட்டுக்குப்போனதும் வீடு பூட்டப்பட்டிருந்தது. பூட்டில் ஸர்க்கார்ஸீல் வைக்கப்பட்டிருந்தது. காவற்காரன் வேலைக்காரன் ஒருவனையுங் காணவில்லை ஸாவித்ரீ இது இன்ன காரணமென்று தெரியாதபடியால் மயங்கினள். தர்மன் இதைப்பார்த்துவிட்டு 'அம்மா கடன்காரர்கள் வீட்டைஜப்தி செய்திருக்கிறார்கள் நாமிந்தப் பூட்டைத்தொட்டோமானல் தண்டிக்கப்படுவோம். ஆகையால் இதற்கிப்போது செய்யக்கூடிய பரிகாரம் ஒன்றும் இல்லை. நமக்குப் பரம ஆப்தராகிய கிருஷ்ணஸாமிய்யர் வீட்டிற்குப்போவோம். அவர்நேற்று

உன்னையழைக்கத்தானும் வருவதாகவே இருந்தார். ஆனால் புறப்படும் சமயத்தில் ஏதோ அவசரகாரியமாய் வரமுடியவில்லையென்று சொல்லியனுப்பிப் பணத்தைமாத்திரம் எனக்குச்செலவிற்கனுப்பினார் அவரைக்கொண்டுதான் இவ்வாபத்துக்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும்' என்று சொல்லி, அந்த வீட்டிற்கு வண்டியை ஓட்டச்சொன்னான். அங்கே போனதும் அந்த வீடும் வெளிக்கதவு பூட்டப்பட்டிருந்தது. அடுத்த வீட்டில் விசாரித்ததில் தஞ்சாவூரில் கொடுத்திருக்கும் அவர்பெண் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டதாய் தந்தி வந்ததின்பேரில் அவர் சம்சார சகிதமாய்த் தஞ்சாவூருக்குப் போயிருப்பதாய்த் தெரியவந்தது.

இதைக்கேட்ட ஸாவித்ரிக்கு வந்ததுயரத்திற்களவில்லை. அவள் தர்மனைப்பார்த்து "அப்பா தர்மா! நான் மிகுந்த துரதிர்ஷ்டக்காரியென்பதற்கு வேறு ஸாக்ஷிவேண்டுமோ? பரமத்துரோகியான தமையனால் என்னுடைய லக்ஷரூபாய்நகைகளும் அபகரிக்கப்பட்டதும், நானுயிருந்து பன்றுபயதும் மெதுவாக வீட்டில்வந்து நமது துக்கத்தையாற்றிக்கொள்வோமென்றால் வீடுமுதலான சகல சொத்துக்களும் ஜப்தி செய்யப்பட்டிருப்பதும், அப்பீல் நம்பர் தோற்றதும், இப்போது குந்தக்குச்சில்லாமல் தவிப்பதும், ஆகிய இக்கஷ்டமெல்லாம் என்னால் நேர்ந்ததே தவிர வேறில்லை. எனது துர்பாக்கியத்தால் நீயும் உன் தகப்பனாரும் மிகுந்த கஷ்டமனுபவிக்கவேணும்போல் தோன்றுகிறது. ஆகையால் நீ என்னை ஒரு காட்டிற்கொண்டுபோய் விட்டுவிட்டு திரும்பிப்பாராமல் வந்துவிட்டாயானால் நீங்களாவது சுகப்படுவீர்கள்" என்றாள்.

உடனே தர்மன் "அம்மா கஷ்டம்வந்த வேளையில் வருந்தாமல் அதை நிவர்த்திக்க வழி தேடுவதே நமக்கு அழகு.

நீ கவலைப்படாதே, நாமிந்தக் கஷ்டத்தைப் பிரார்த்தித்தா வந்தது அப்படிப்போல் நல்லகாலம் வருகையில் சுகமும் அப்படியே வருமென்பதிற் சந்தேகமில்லை"—என்றான்.

இவ்வாறு தர்மன் அவளைத்தேற்றிவிட்டு வேறு சில சிநேகிதர் வீட்டை நோக்கிச்சென்றான். அவர்களெல்லாம், நேற்றுவந்த கோர்ட்டுச் சேவகர்கள், ஸாவித்ரியம்மாள் ஏராளமான நகைகளும் பணங்களு முள்ளவளாதலால் அவளிருக்கும் வீட்டை ஐப்திசெய்யவேண்டுமென்று தேடினபடியால் "எங்கள் வீட்டில் நீங்களிருந்தால் அதனால் எங்கள் வீடும் ஜப்திசெய்யப்படும்" என்றுசொல்லி இடங்கொடுக்கச் சம்மதிக்கவில்லை.

தர்மன் பாலியமுதல் வேறு ஊர்களிலிருந்துகொண்டு படித்துவந்தவனைகையால் குளித்தலையில் அநேகமாய் அவனுக்கு ஒருவரையும் தெரியாது ஸாவித்ரீ சில ஸ்திரிகளைப்போல் வீடுவீடாய்ப்புகுந்து வம்புபேசாமல் தன் வீட்டில் தன்காரிய முண்டு தானுண்டென்று இருந்தவளாதலால் அவளுக்கு அங்கே கிழக்கு மேற்குத் தெரியாது. இப்படியிவர்கள் தங்க இடமில்லாமல் களித்துக்கொண்டேயிருந்தபடியால் மணி 10-க்கு மேலாய் விட்டது. வெயிலாலும் பசியாலும் களைத்து நிற்கையில் அங்கு ஒரு பிராமணன் வந்தான். இவன் உயர்ந்த ஒற்றை நாடியான கருத்தமேனியுடனும் பார்வைக்கு பயங்கரமான முகத்துடனும் கூடிய சுமார் முப்பது வயதுள்ளவனாகவும் காணப்பட்டான். அவன் தர்மனைபபார்த்து'ஐயா நீங்கள் வக்கீல கோபாலசாமி ஐய்யர் புத்திரனோ, பார்த்தால் அப்படித் தோன்றுகிறது' என்றான். அதற்கு தர்மன் ஆமென்றுசொல்லிக்கொண்டு தற்கால விருத்தாந்தங்களைச் சொல்ல, அதற்கந்தப் பிராமணன்'அடடா! இதற்காகவா இந்த வெயி

யில் இப்படியலைந்து களைத்தீர்கள்; என் வீட்டிற்கு வரக் கூடாதா, எனக்கு உங்கள் பிதா ரொம்ப வேண்டியவர், கிடக் கட்டும், இனியாவது தாமதிக்காமல் நம்வீட்டிற்குப் போ வோம்' எனக் கூறி ஒரு வண்டிபிடித்து இவர்களை ஏற்றிக் கொண்டு தானும் அதிலேறிக்கொண்டு ஒரு முடுக்கில் ஒரு சிறிய வீட்டிற்குக்கொண்டுபோய் இறக்கி, அவர்களுக்குவேண் டிய சாமான் வாங்கிக்கொடுத்துச் சமையல்செய்து சாப்பிடும் படி சொன்னான். இன்றைபதினம் இம்மாதிரி நேர்ந்ததற்கு ஸாவித்ரியும் தர்மனும் அடைந்த மனவருத்தத்திற்கு அள வேயில்லை. பிறகுசமையல்செய்து சாப்பிட்டார்கள்.

பிறகு ஸாவித்ரி அச்சிறுவீட்டைச் சுற்றிப் பார்த்ததில் அதில் இவர்களைத்தவிர வேறொருவருமில்லை. இதிற் சொற்ப சந்தேகமடைந்த ஸாவித்ரி "அப்பா தர்மா! இவ்வீட்டிலிருக்க எனக்குப் பிடிக்கவில்லை ஏனென்றால், இவ்வீடு ஏதோ ஒரு முடுக்கிலிருக்கின்றது; இவ்விடத்தில் ஜனஸஞ்சாரமுமில்லை; இவ்வீட்டிற்குடையவனை அந்தப் பிராமணன் நம்மை இங்கு கொண்டுவந்துவிட்டுப்போன பிறகு அவரைக்காணக் கிடைக்கவில்லை. இவ்வீட்டிலோ நம்மைத்தவிர வேறொரு வருமில்லை. அந்தப் பிராமணன்முகத்திலோ பயங்கரமான ஒரு தேஜஸ் காணப்படுகிறது; ஆகையால் நாமினி இராத்திரி கூட இங்கிருப்பதென்றால் ஏதாவது இன்னமும் விபத்துண் டாகுமோ என்று சந்தேகிக்கிறேன்; ஆகையால் நீ எவ்வித மாவது நம்முடைய குமாஸ்தா கிருஷ்ணய்யரையாவது சாமாவய்யரையாவது கண்டுபிடித்து அவர்கள் வீட்டிற்கு நாம்போய்த் தங்கும்படி ஏற்பாடுசெய்யவேண்டும் நீ ஜாக்கிர தையாய்ப்போய் 6 - மணிக்குள் திரும்பிவந்துவிடு" என்று சொன்னான். இதைக்கேட்ட தர்மன் இவள் சொல்வது உசி தமானகாரியந்தான், நமக்கு எவ்விதத்திலும் பரிச்சயமில்லா

தவன்வீட்டில் இவளைவைத்துக் காப்பாற்றுவது கஷ்டந்தா னெனத் தீர்மானித்து "அம்மா நீ சொல்வது சரியே எனக்கு மப்படித்தான் தோன்றுகிறது. நான் கோர்ட்டுக் கலைவதற் குள் கோர்ட்டுவாசலுக்குப் போய் நமது குமாஸ்தாக்களைக் கண்டுபிடித்து அவர்கள்வீட்டைத் தெரிந்துகொண்டுவருகி றேன்" என்று சொல்லித்தனது உடுப்புகளைமாட்டிக்கொண்டு புறப்பட்டான்.

அவனிருந்தவிடம் வண்டி கிடைக்கக்கூடியவிடமாக இல்லாததால் கொஞ்சதூரம் நடந்துவந்து ஒரு வண்டி பிடித்துக்கொண்டு கோர்ட்டுவாசலுக்குப்போய் குமாஸ்தாக் களில் ஒருவரையாவது பார்க்கக்கிடைக்காமல் வெகுநேரம் வரையில் விசாரித்துக்கொண்டு கோர்ட்டைச் சுற்றிச்சுற்றி வந்தான். மணி 4 அடித்தது. அச்சமயம் குமாஸ்தா கிருஷ் ண ஐயர் எங்கேயோவிருந்து வந்ததைப்பார்த்து தர்மன் அவரையணுகி, தான் தனது தாயுடன் காலமே வந்ததும் தங்க இடமில்லாமற்தவித்ததும் பிறகு ஓரிடமகப்பட்டதும் தற்காலமிருக்கும் அவ்விடத்தில் வசிக்க இஷ்டமில்லாததும் சொல்லி வருத்தப்பட்டான்.

கிருஷ்ணய்யர்:—(மிகவும் மனவருத்தப்பட்டு) அப்படி யானால் வைகைநல்லூரிலிருக்கிற நமது ஜாகைக்கு வரக்கூ டாதா, அம்மாளுக்குத்தெரியுமே நான் அங்கேயிருப்பது; சரி போனது போகட்டும், இன்று இராத்திரி நம் ஜாகைக் குப் போய்விடுவோம்.

தர்மன்:—ஐயா! இதென்ன திடீரென நமது வீடுமுத லானவைகள் ஜப்திசெய்யப்பட்டிருக்கிறதே காரணமென்ன?

கிருஷ்ணய்யர்:—நமது வழக்கு ஹைகோர்ட்டில் நம க்கு விரோதமாய்முடிந்ததும், கடன்காரர்களிற் சிலர் உடனே

கோர்ட்டில் தாவாசெய்து அறிக்கை ஜப்தி வாரண்டுடன் நேற்று சாயங்காலம் இவ்விடம்வந்தார்கள். வீட்டிலுள்ள வேலைக்காரனை வெளிப்படுத்தி வீட்டையும் சகலமான பூஸ்திதிகளையும் ஜப்தி செய்துவிட்டார்கள். நேற்று உங்கள் தகப்பனார் இல்லாமலிருந்தது ரொம்ப நல்லகாலம், இருந்தால் அவரும் வாரண்டில் பிடிபட்டிருப்பார்.

இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு பையன் கையிலொரு தந்திக்கவரை யெடுத்துக்கொண்டு தர்மனிடம் வந்து 'ஐயா நீங்கள்தான் வக்கீல் கோபாலசாமி ஐயர் குமாரர் தர்மராஜ ஐயரோ?' என்று கேட்டான் அதற்கு தர்மன் 'ஏன் அவரைத்தேடுகிறாய்?' என்று கேட்க அவன், 'அவருக்கொரு தந்திவந்திருக்கிறது' என்றான். தர்மன் மிகுந்த பரபரப்புடனே அதைவாங்கிப் பிரித்துப்பார்த்தான்.

தந்தி.

நான் திருநெல்வேலியில் ஜயிலுக்கு அனுப்பப்படும் தருவாயிலிருக்கிறேன், நீ உடனேவந்து நெல்லையப்பன்கோயில் வடக்குவீதியில் என்னைப்பார்க்கவேண்டும்.

கோபாலசாமி ஐயர்.

இதைவாசித்த தர்மனுக்குப் பிரக்ஞையில்லை முகத்திற் களைகுறைந்தது. தனக்கு ஒன்றன்மேல் ஒன்றாக வந்துகொண்டிருந்த விபத்தைப்பற்றி ஒருவாறு கண்ணீர்விட்டான். இக்க்ஷணத்தில் கிருஷ்ணய்யர் இவனைப்பார்த்து 'ஏன் தாங்கள் வருத்தப்படவேண்டும், தர்மத்தைவிட்டு விலகாத ஸ்வபாவமுள்ள தங்களுக்கும் தங்கள் பிதாவுக்கும் எவ்விதமானவிபத்தும் சம்பவிக்காது. பூர்வகர்மவசத்தால் ஒருநாள் வந்தாலும் சூரியனைக்கண்ட பனிபோல் தானாகவே நசித்துப்போகும், புத்தியை ஒருவிதமாய் ஸமாதானம்

செய்துகொண்டு சீக்கிரம் ரெயிலுக்குப்புறப்படுங்கள்; திரு
நெல்வேலிக்குப்போகவேண்டிய வண்டிவர இன்னம் அரை
மணி நேரந்தானிருக்கிறது, அது தப்பினல் நாளையதினம்
8 மணிக்குத்தான் வண்டி'' என்றார்.

தர்மன்:—(மனங் கலங்கி) ஐயா திருநெல்வேலிக்குப்
போகவேண்டிய வண்டியோ வர இன்னம் அரைமணியிருக்கி
றது; பேர் ஊர் தெரியாதவனுடைய வீட்டில் அம்மாளிருக்
கிறாள்; அந்த முடுக்கு இவ்விடமிருந்து ஒருமைல் இருக்கி
றது. அவ்விடம்போய் அவளைத் தங்கள் வீட்டிற்கனுப்பிவிட்டு
நான் ரெயிலடி போகவேண்டுமே என்ன செய்வேன்

கிருஷ்ணய்யர்:—நீங்கள் பயப்படவேண்டாம்; ரயில் தவ
றாமல் போங்கள்; நான் தங்கள் தாயாரை என் அகத்திற்கு
அழைத்துப்போய் என் தாயாரிடம் ஒப்புவித்துவிடுகிறேன்,
அவர்களிருவரும் அடிக்கடி உங்கள்வீட்டில் கண்டுபேசியிரு
க்கிறார்கள். தாங்கள் கவலைப்பட வேண்டாம்.

தர்மன்:—ஐயா தாங்களப்படிச்செய்தால் அது எனக்
குப் பரமோபகாரமாகும். ஆனல் 5 மணிக்குள் என்னை
வரும்படி கேட்டுக்கொண்டதால் அதிக தாமதமாய்ப்போ
னல் அவள் அழுதுகொண்டிருப்பாள், சீக்கிரம் தாங்கள்
போய் அழைத்துப்போகவேண்டும்.

கிருஷ்ணய்யர்:—அதெல்லாம் எனக்குச் சொல்லவேண்
டியதில்லை, கோர்ட்டில் ஒருகேஸ் ஆர்குமெண்டிருக்கிறது,
அது நடந்தால் வக்கீலுக்கு நான் சில நோட் கொடுக்கவேண்
டியதாயிருக்கும், அப்படி நேர்ந்து எனக்கு ஒருகால் தாமத
மாகி நான்போகாவிட்டாலும் என் குமாஸ்தாப்பையனையா
வது அனுப்பி அழைத்துப் போகச் சொல்லுகிறேன்; நீங்கள்
கவலையின்றிச் செல்லுங்கள்; சிலவிற்குப் பணமிருக்கிறதா?

தர்மன்:—என் தற்காலஸ்திதி தெரிந்தும் இப்படிக் கேட்டால் நானென்ன சொல்வேன்?

இதைக்கேட்ட கிருஷ்ணய்யர் உடனே தனதுசட்டைப் பையிலிருந்து 25 ரூபாய் பணத்தை யெடுத்துக்கொடுத்து “சீக்கிரம்போய காரியத்தைத் தெரிந்துகொண்டு நாளையதி னம் விவரமாய் எனக்குத் தந்திகொடுக்கவேண்டும்; இன்னம் ஏதாவது பணம் வேண்டுமானாலும் அனுப்புகிறேன்” என்று சொல்ல, தர்மன் அவருடைய நற்சமய உபகாரத்திற்குமகிழ் ந்து அவருக்கு நன்றிகூறிவிட்டு ரெயிலடிக்குவந்து டிக்கட்டு வாங்கிக்கொண்டு வண்டியிலேறினான்.

---

## பதினைந்தாவது ஆச்வாஸம்.

### பதிஸமாகமம்

“ஐந்து மணிக்குள் கட்டாயம் வந்துசேரவேண்டுமென நான் சொன்னதற்குச்சரியென்று சொல்லிப்போனவன் மணி 8-க்குமேலாகியும் இன்னமும் வரவில்லையே. இந்த முனிசிபல் டவுனில் எங்கும் விளக்குகள் போடும் வழக்கமில்லையோ? அல்லது இந்த முடுக்கில்மாத்திரம் வெளிச்சம் வேண்டாமென்று தவிர்க்கப்பட்டிருக்கிறதோ? இருட்டின் மிகுதியால் வாசலிற்போய் குழந்தை வருகிறானாவென்று பார்க்கக்கூட பயமாயிருக்கிறது. மையிருட்டில் எதிரில் மனிதன்வந்தாற்கூட தெரியவில்லையே. போனவனுக்கு ஏதாவது எதிர்பாராத இக்கட்டுநேராத பக்ஷத்தில் இதுவரையில் வராமலிருக்கமாட் டானே; ஐயோ! என் அருமைத் தர்மமூர்த்திக்கு என்ன

விபத்து நேர்ந்ததோ; இக்குடிசையில் இவ்விராப்பொழுதை நானெப்படித் தள்ளுவேன், பொழுது விடிந்தாலல்லவோ மானத்தைவிட்டாவது வெளியிற்போய் அவனைப்பற்றி விசாரிக்கலாம்; ஐயோ ஈசா! என்னை இப்படிவிடவா நினைத்திருந்தாய், எந்த ஊரில் நான் ராஜபத்னிபோல் மகுடமுடனும் அலங்காரத்துடனும் வீதிகளைக் கண்ணுற்கூடக்காணாமல் காலந்தள்ளினேனோ அதே ஊரில் தெருத்தெருவாய் வெயிலில் அலைந்து தங்க இடமில்லாமல் இராத்திரி இக்குடிசையில் என்னைக் கதறும்படிசெய்தாயே? நான் நன்றாயிருந்தகாலத்தில் கூடியமட்டில் பிறருக்கு உதவிபுரிந்துகொண்டிருந்தேனே தவிர, பாமரம்பழமாயிருக்கவில்லையே; எனக்கேன் இப்படி ஒன்றுமேலொன்றாக அநர்த்தங்களையுண்டாக்கித் தருகின்றாய்?" என்றிவ்வாறு ஸாவித்ரி கதறிக்கொண்டு அவ்வீட்டின் ரேழிக்கும் முற்றத்திற்குமாக அலைந்துநின்றாள்.

இப்பொழுது யாரோ கதவைத்தட்டுவதுபோல் தொனி கேட்டவுடனே இவள் நமது தர்மன்தான் வந்திருப்பானென்று நினைத்துக் கதவைத்திறந்தாள். உடனே இருட்டோடிருட்டாக ஒரு உருவம் தோன்றிற்று. ஸாவித்ரீ பயந்து கைவிளக்கைக்கொண்டுவந்து பார்ப்பதற்குமுன் அவ்வுருவம் உள்ளே வந்துவிட்டது. அதை உற்றுநோக்குங்கால் காலமே அழைத்துவந்த பிராமணனென்று ஸாவித்ரீ யறிந்துகொண்டாள்.

பிராம:—அம்மா! நான்சற்றுக் காரியமாய்ப்போனவன் அஸ்தமனத்துக்குமுன் வந்து உங்களைப்பார்க்க நேரவில்லை. மத்தியானம் சாப்பிட்டீர்களா? ஏதாவது குறையுண்டா?

ஸாவி:—ஐயா! நல்லசமயத்தில் உதவிபுரிந்த உங்களுக்குப் பகவான் கிருபைசெய்வாராக. ஏதோ மத்தியானம் சாப்பிட்டோம்; எங்களுக்கென்ன குறை சொல்லவிருக்கிறது.

பிராம:—அம்மா! ஏன் மிகவும் துக்கங்கொண்டாடுகிறாய்.

ஸாவி:—வெளியிற்போன பையன் இன்னும் வரவில்லை. அதுதான் கவலையாயிருக்கின்றது.

பிராம:—இவ்வளவுதானே, இதென்ன காடாமலையா? எனிப்படியழவேண்டும். எனக்கிது பிடிக்கவில்லை.

ஸாவி:—எங்களுக்கு இப்போது நல்லகாலமில்லை; ஆகையால் 5-மணிக்குவருவதாய்ச் சொல்லிப்போனபையன் இதுவரையில் வராததைக்கொண்டு எனக்கு தாங்கமுடியாத துக்கமாகத் தானிருக்கின்றது, அதனாலுங்களுக்கென்ன?

பிராம:—எனக்கென்னவா, இருக்கட்டும் அவனை நீயென்னகாரியார்த்தமாய் வெளியிற்போகச் சொன்னாய்?

ஸாவி:—எங்கள் குமாஸ்தாக்களில் யாரையாவது கண்டுபிடித்து அவர்கள் வீட்டையாவது தெரிந்துகொண்டு வரச் சொன்னேன்.

பிராம:—அம்மா நீ வெளுத்ததெல்லாம்பாலென நினைத்துவிடுகிறாய், அவர்கள் துரோகசிந்தையை நீயறியாய்.

ஸாவி:—(திடுக்கிட்டு) அவர்களைப்பற்றி நானிதுவரையில் விகற்பமாய் நினைக்க இடமில்லை, உமக்கேதாவது தெரிந்தால் சொல்லும், எவருக்கும் ஒருசமயம் புத்தி கெடுகிறதுண்டு.

பிராம:—உங்கள் குமாஸ்தாவாகிய அந்த கிருஷ்ணய்யனுக்கு உன் கணவன் ஏதோ பணங்கொடுக்கவேண்டுமாம்; அதை வசூலிக்கவிடவில்லை ஆனதினால் உன் பிள்ளைக்கு "உன் தகப்பனார் திருநெல்வேலியில் ஜயிலில் இருக்கிறார், உன்னை யுடனேயழைத்துவரும்படி தந்திவந்திருக்கிறது உடனே போ" என்று சொல்லிச் செலவுக்கும் பணம் கொடுத்து அனுப்பிவிட்டான்.

ஸாவி:—சரி யிருக்கட்டும், அதனால் பணமெப்படி வருலாகும்.

பிராம:—அது தெரியாதா உனக்கு? நீ யிப்போது சமத்தாய் உன் நகைகளையெல்லாம் பத்திரப்படுத்தியிருப்பது அவனறியான். இராத்திரி உன்னை வீட்டிற்கழைத்துப்போய் உன் மேலிலுள்ள நகைகளைக் களைந்துகொண்டு உன்னைத் துரத்திவிடுவதாய்த்தான் உத்தேசம்.

ஸாவி:—ஐயோ! அப்படியா அந்தப்பாவி நினைத்துவிட்டான், அவனுக்காக என்னையழைக்கத்தான் நீர் வந்தீரா?

பிராம:—அம்மா என்னை நீயப்படி நினைக்கவேண்டாம், அவனால் அனுப்பப்பட்ட பையனுக்கு 'அப்படிப்பட்ட ஸ்திரீ இங்கொருவருமில்லை' என்று சொல்லி இப்போதுதான் விரட்டிவிட்டு வந்தேன்.

ஸாவி:—ரொம்ப சந்தோஷம், என் குழந்தையை நீர் பார்த்தீரா? அவனிப்போது எங்கிருக்கிறான்?

பிராம:—நானவரை ரெயில்ஸ்டேஷனிற் கண்டேன். அவர் சகலத்தையுஞ்சொல்லி திருநெல்வேலிக்குப் போவதாய்ச் சொன்னார். நான் அதையெல்லாம் பொய்யென்று சொல்லியும் நம்பாமல் "அப்படிக்கு அங்கொன்றுமில்லாமலிருந்தால் நாளைதினம் சாயங்காலம் வந்துவிடுகிறேனென்று என் தாயாருக்குச் சொல்லவேண்டும்" என்று சொல்லிவிட்டு ரெயிலேறிப்போய்விட்டார். எனக்கு வெளியில் வேறுவேலையிருந்தும் உன்னை ஒண்டியாய் இங்கிருக்கவிடக்கூடாதென்று இங்குவந்தேன்; ஆகையால் கவலைப்படாதே. இந்தா, இந்தப் பாலையருந்து; வெற்றிலைவாங்கிவந்திருக்கிறேன் தாம்பூலதாரணம செய்துகொள்; நாளைதினம் உன்பிள்ளை வந்துவிடுவான்; பிறகு தகுந்த இடத்தில் உன்னைக் கொண்டுபோய்ச்

சேர்த்து விடுகிறேன்—என்று சொல்லிப் பாலையும் வெற்றிலைப்பாக்கு வகையறாவையும் கையிற்கொடுக்கப்போனான்.

இதைக் கேட்ட ஸாவித்ரிக்கு உடம்பு நடுநடுங்கிப் போயிற்று. 'இந்தப்பாபி நம்மிடம் ஏதோ கெட்ட எண்ணங் கொண்டவன்போல் தோன்றுகிறது; காலமே எங்களைக் கண்டவுடன் அப்படிப்பட்ட எண்ணங்கொண்டுதான் இத் தனிக்காவற்போன்ற சிறுகுடிசைக்கு எங்களை அழைத்தான் என்று நினைக்கிறேன். இவனென்னிடங்கொண்ட துர்எண்ணத்திற்காகவே நமது குழந்தை தர்மனை இராத்திரி இவ்விடம் வராமல் பொய்யாக வேதாவது ஏற்பாடுசெய்திருக்க வேண்டும், ஐயோ நானிப்பொழுது நிர்க்கதியாய்விட்டேனே, இவ்விரவை எனெப்படிக் கடப்பேன்; இந்த துராத்மா பலாத்காரம் செய்யாமலிருக்க வேண்டுமே, ஹே பகவன்! வாஸுதேவ! நிர்க்கதியாய் மானமிழக்கும் தருணத்தில் திரௌபதியைக் காப்பாற்றிய உமக்கு என்னை இத்தருணம் காக்கவேண்டியகடமையிருக்கிறதென்று நான் சொல்லாமலே, எனது அந்தர்யாமியாகிய உமக்குத் தெரியும்', என்று மனதிற் சிந்தனைசெய்துவிட்டு "ஐயா பாலும் தாம்பூலமும் கணவனைவிட்டுப் பிரிவடைந்த ஸ்திரிகள் அருந்தலாகாதென்று நான் கேட்டிருக்கிறேன், ஆகையால் நீங்களெனக்கு அவ்விதமான உபசாரங்களெல்லாம் செய்யவேண்டாம் என்றாள் ஸாவித்ரி.

பிராம:—நீசொன்ன சாஸ்திரத்தைக் கணவனையிழந்த ஸ்திரீகள்கூட அனுஷ்டிக்கவில்லையே; நீதானா அதற்குப்பாத்திரம், யோசிக்காதே. எத்தனையோ விதவைகள் எட்டுச்சேர் பாலை 2 சேராகக்காய்ச்சிக் குடித்துவிட்டு ஒருமணிநேரம் ஓய்த்து ஏலக்காய் ஜாதிபத்திரி முதலான வாசனைத் திரவியங்களுடன் அரைக்கவுளி வெற்றிலையைப் போட்டுக்கொண்டு

மெத்தையிற்படுக்கிறார்கள். அப்படியிருக்கப் புருஷனுள்ள பெண்கள் தெய்வ சங்கர்ப்பத்தால் அவனைவிட்டுப் பிரிந்தி ருக்க நேரிடுங்கால் இவைகளை யுபயோகிப்பது பிசகில்லை.

ஸாவி:—என் வார்த்தையை வளர்க்கவேண்டும். எனக் கிஷ்டமில்லையென்றால் விட்டுவிடவேண்டியதுதான் நியாயம்.

பிரா:—சரி விட்டுவிடுகிறேன். உன்னிஷ்டத்திற்கு மாறு சொல்லவில்லை. இன்னொன்று கேட்கவேணுமென நினைக் கிறேன். கேட்கலாமா உன்னை?

ஸாவித்ரி:—தர்மத்துக்கும் நியாயத்திற்கும் விரோத மில்லாமல் கேட்கவேண்டியதிருந்தால் கேட்கலாம்.

பிரா:—நான் தர்மத்துக்கும் நியாயத்திற்கும் விரோத மாய் ஒன்றும் கேட்கவில்லை; நானின்று உங்களுக்குச்செய்த உபகாரத்திற்குப் பிரதியுபகாரத்தை யபேக்ஷிக்கிறேன்.

ஸாவித்ரி:—நானிப்போது உமக்குப் பிரதியுபகாரம் செய்யச் சக்தியுள்ளவளாக இல்லை. நான் மறுபடியும் நல்ல ஸ்திதியிலிருக்கும்படி பகவான் கிருபைசெய்தால் அப்போது உமது சௌகரியத்தைச் செய்வேன்.

பிரா:—ஆமாம். அக்காலத்தை யார்கண்டாரோ? இப் போது உன்னிடம் உள்ளதைக் கேட்டால் கொடுக்கக்கூ டாதோ?

ஸாவித்ரி:—என்னிடம் இப்போதொன்றுமேயில்லை.

பிரா:—ஏதொன்றுமில்லையென ஒளிக்கிறாய். உனது அங்கத்தை ஒருதரம் அனுபவிக்கக்கொடுத்தால் நான் அதனுமேல நன்றியறிவேன். ஆகையால் கண்மணி! உன்னிடம் இல்லாத வஸ்துவா இது?

இதைக்கேட்ட ஸாவித்ரி "அடேபாவி! இதற்காகவா காலமே என்னை இந்தத் தனிக்காவலுக்கு நிகரான குடிசையிற்கொண்டடைத்து இராத்திரி என் பிள்ளை இங்கே வராமல் என்னவோ தந்திரம்செய்து பகலெல்லாம் எங்கேயோ போனவன்போற் பாசாங்குசெய்து இரவு இங்கு வந்தாய்; அடே துரோகி! ஸ்வப்பனத்திலும் நானுனக்கு இணங்குவேனென்று நினையாதே. என்மானத்தையும் காப்பாற்றி உன்மானத்தையும் ரக்ஷித்துக்கொள். ஜாக்கிரதை"—என்றாள்

பிரா:—என்னடி மாயக்காரி! சிறப்புகிறாய். நானுன்னைப்போல் பதிவிரதம் பேசுகிற பெண்களெத்தனையோ பேர்களை நாணங்கெடப் பார்த்திருக்கிறேன். என் அதிகப் பேச்சுப்பேசுகிறாய், நீ உனது மானத்திற்கு பங்கம்பட்டுவிடுமென்று பயப்படவேண்டாம். இந்த வீட்டில் நம்மிருவரைத்தவிர வேறில்லை. நீயும் நானும் சுகமாயிருந்து அனந்தரக்ஷணமே நான் வெளியிற்போய்விடுகிறேன். ஆகையால் நம் சங்கதியை யறிவார் ஒருவருமில்லை. வீணில் என்னை மறுக்காதே.

ஸாவித்ரி:—ரகசியமாய் விபசாரம் செய்துகொண்டு, பார்ப்பவருக்குப் பதிவிரதையாய்த் தோன்றும்படி புருஷர்களைக்கண்டால் வீதியில் அசாமல்தூரம் ஒதுங்கிப் போகும் பெண்மணிகளில் ஒருவளாக என்னை மதியாதே. நான் ஈசுவரனுக்குப் பயந்துநடப்பவள்.

பிரா:—ஈசுவரனுக்கும் பயப்படுகிறேனென்று நன்றாய்த் தெரிகிறது. ஏனென்றால் ஒரு தடியனிடம் போய்ச்சேர்ந்து ஈசுவரனையுமிழுத்துவிட்டு வந்திருக்கிறாய்; நான் அப்படிப்பட்ட அசேபாக்யனல்ல. என்னை நீ பொருதாம் முத்தமிட்டபாக்கியத்திற்குமுன்போல் உன் தப்பத்தை நகைநால்

நிரப்பிவிடுவேன். சந்தேகமில்லை. வேணுமானாலும்பார்—என்று ஒரு சிறுபெட்டியைத்திறந்து அதுநிறையப்பளபளாவென்று மின்னும்படியான நகைகளைக் காட்டினன்.

லோலி:—பத்துப்பணத்திற்கு வசப்படாத பதிவிரதை யுண்டோ, என்றபடி பணத்திற்கும் நகைகளுக்கும் ஆசைப் பட்டு அகாரியம் செய்பவள் நானல்ல. ஆகையால் நீ இதைக்காட்டினும். பத்துப்பங்கு ஜாஸ்தி நகைகளைப்போட் டாலும் நான் உனக்கு இணங்குவேனென்று நினையாதே. இப்படிப்பட்ட அகாரியத்தைச் செய்யாமற் பிச்சையெடுத் துண்டாலும் அது எனக்கு மேன்மையே. ஆகையால் இவ் வெண்ணத்தை படியோடு அகற்றிவிடு—என்று சொல்லி அந்த இடத்தைவிட்டு அப்புறம் சென்றாள்.

அந்தக் காதகனும் கூடச்சென்று முன்னாலே நின்று 'ஹே சுந்தரி! எனது ஆசைக்கிசைந்த கிளியே! பஞ்சபாணன் பாணவிநாதித்த பொற்கொடியே, என் கண்மணி! மெருகிட்ட தங்கம்போல் பளபளவென்று பிரகாசிக்கும் உனது அங்கத் தை இந்தனி வீட்டில் இவ்வேளையில் பார்த்தபிறகும் நான் தர்மத்தையும் நியாயத்தையும் கவனிக்கலாமோ; ஹே! சவுந் தரியத்திற்கு அதிதேவதைபோன்ற மயிலே! காரிருளைப்பழிக் கும் உனது கூந்தல். இவ்வாறு அலங்கோலமாய் அலைய என் மனம் சகிக்குமோ; கருணைகூர்ந்த கடவுள், கையிற்கொடுத்த அமுதத்தை வாய்க்கொடாமற்செய்து கொள்வேனோ? தர்ம மானாலும் அதர்மமானாலும் உன்னையொருதரமாவது காடா லிங்கனம் செய்யாமல் மன்மதபாணங்களால் இவ்வுயிரை மாய்த்துக்கொள்வேனோ?' என்று பிதற்றிக்கொண்டு ஞாலக் நாய் அவள் கையைப் பிடிக்கப் போனான்.

அவளுடனே சற்று விலகிக் கொண்டு "அடேபாவி! என்னைத் தொடாதேடா" என்று கூச்சலிட்டாள்.

இச்சமயம் தெருவில் யாரோ பேசிக்கொண்டு போவதாய் காதில் சத்தம் கேட்டது. இப்பொழுது ஓடிப்போனால் தப்பலாமென நினைத்த ஸாவித்ரி, தனது அணிமணிகளைக் கூட எடுக்காமல் வாசலில் ஓடினாள். அந்த அயோக்கியனும் விரைவாய்ப் பின்தொடர்ந்தான், எனினும் வாசலில் வந்தவர்கள் பிடித்துவந்த போலீஸ்காரர் ஆகையால் பயந்து தனது வீட்டு வாயிற்படியில் நின்றான். ஸாவித்ரீ இந்தக் குறையறிந்துகொண்டு அவர்கள் பின்னேயே மெதுவாய் சத்தம் செய்யாமல் சற்று நடந்து சந்து திரும்பினவுடன் காவேரிக்குப் போகும் ஒத்தையடிப் பாதையின் வழியே சென்று படுகைக்காட்டில் நுழைந்துவிட்டாள். அந்த துரோகிப்பிராமணனும், போலீஸ்காரர் போனபின் அவ்வழியேவந்து மலைபோலிருக்கிற காவேரிக்கரையின்மீதேறிக் கையிற்கொண்டுவந்த லாந்தல் வெளிச்சத்தைக்கொண்டு, என்ன பார்த்தும் நல்ல இருட்டில், அடர்ந்த அந்தக் காட்டில் ஒளிந்துகொண்டிருக்கிற ஸாவித்ரியை அவன் கண்டுபிடிக்கக் கூடவில்லை. அவள்மாத்திரம் இவன்கையில் வெளிச்சமிருந்ததால் இவன் வந்ததும் தேடினதும் மறுபடி திரும்பிப்போனதும் கண்டுகொண்டாள். இச்சண்டாளன் மறுபடி வந்து வருவானென்று நினைத்துக் கொஞ்சநேரம் அங்கேயேயிருந்தாள். அவள் நினைத்தபடியே அந்தக் கிராதன் மறுபடி ஒரு வெளிச்சத்தைக் கைக்கொண்டு காவேரிக் கரைக்குவந்து சுற்றுமுற்றும் பார்த்து அரைமைல்தூரம் கிழக்கேயும் அரைமைல் மேற்கேயும் போய்ப்பார்த்துவிட்டு "மெலிந்த சரீரமும் பயந்த ஸ்வபாவமும் உடைய அவள் இப்படிப்பட்ட இடங்களுக்கு வந்திருக்கமாட்டாள், அந்தப் போலீஸ்காரர்கள் உதவியைக் கொண்டு டவுனுக்குள் எங்காவது போயிருப்பாள்" என்று புலம்பிக்கொண்டே திரும்பினான்.

இவன் வந்துபோனதையும் புலம்பினதையும் கவனித்த ஸாவித்ரி இன்றைக்கு பகவான் நம்மை தப்பிக்கச் செய்தார்' என்று அக்காட்டைவிட்டு வெளிக்கிளம்பி கை கால்களிலும் மற்ற அங்கங்களிலும் அநந்தமான முட்கள் தைத்து, கொம்புகளில் மாட்டின புடவை கிழிந்து, உடம்பெல்லாம் இரத்த காயத்துடன் கரைக்கு வந்தாள் கிழக்கும் மேற்கும் பார்த்தாள், "இப்படிப்பட்ட அந்தகாரத்தில் என் ஜன்மத்திலும் நான் வெளிவந்ததில்லையே, இன்றைக்கு என்னவித தைரியத்தைக்கொண்டுநான் போவேன். ஐயோ பகவானே! என் அருமைப் புத்திரனான தர்மனை அந்தப்பாவி என்ன செய்துவிட்டானோ, அல்லது குமாஸ்தா கிருஷ்ணய்யர் தான் திருநெல்வேலிக்கு அனுப்பிவிட்டாரென்பது பொய்யோ? என் அருமைக் கண்மணியான தர்மா! உன்னுடைய கதி இன்னதெனத்தெரியாமல் நானிவ்விடம் விட்டு எப்படிப் போவேன். அந்தப்பாவி என்னையே சுற்றிக்கொண்டிருப்பதால் நான் இன்றை இராத்திரி இவ்வூரிலிருந்தால் எப்படியும் என்னைக் கண்டுபிடித்து ஹிம்ஸிப்பான் அதோ மறுபடியும் வெளிச்சம் தெரிகிறதே. அந்தப்பாவி இங்கே திரும்பவும் வந்தாலும் வருவான். நான் இனி இவ்விடமிருந்தால் பிராணத்தை யிழக்க நேரிடும். ஆகையால் இந்தக் கரையோடு கிழக்கே போய்க்கொண்டிருக்கிறேன்; எவ்விடத்தில் பொழுதுவிடிகிறதோ அவ்விடத்தில் வேறுயோசனை செய்து கொள்ளுகிறேன்" என்று கிழக்கே நடந்தாள்.

ஸாவித்ரி, தனக்கு நேரக்கூடிய விபத்தை நினைத்துப் போகிறபடியால் கால்வலி தோன்றாமலும் இருட்டென்ற பயமில்லாமலும் நடந்தாள். நடந்தே வழக்கமில்லாதவள் இன்றைக்கு வெகுதூரம் நடந்துபோனதால் கால்களிரண்டும் இரத்தம் குழம்பி கோவைக்கனிபோற் சிவந்துவிட்டன.

முட்களை வதைத்துக்கொண்டாள். இருட்டில் வழிதெரியாமல் அநேக இடங்களில் இடறிக்கொண்டு கால்களில் இரத்தக்காயங்களை உண்டாக்கிக் கொண்டாள். கடைசியாய் உடம்பெல்லாம் வியர்த்துக் கால்கள் சோர்ந்து ஒரு அடிகூட நடக்க முடியாமல் கரையில் விஸ்தாரமான இடத்தில் ஒரு மரத்தடியில விழுந்தாள்; தனது கதியைப்பற்றி தெய்வத்தை நொந்துகொண்டாள். களைப்பின் மிகுதியால் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டாள்.

மணி ஐந்தாயிற்று. இருட்டு கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்படுகின்றன. அதைக்கண்டு, சூரிய கிரணங்கள் தம்மையும் இருட்டென்றே நினைத்து அழித்துவிடுமோ வென்று பயந்து தங்களை இன்னாரென்று சொல்லிக்கொள்வதுபோல் காக்கைகள் "கா, கா" வென்று கூச்சலிட்டன. அத்தருணத்தில் நித்திரையில் மூழ்கிக் கிடந்த ஸாவித்திரியின் அருகில் ஒரு சன்யாசி நின்றுகொண்டு கவனத்துடன் பார்த்து, அவளை எழுப்ப நினைத்து 'யாரங்கே மரத்தடியில் படுத்து நித்திரைசெய்வது? எழுந்திரு' என்று சொன்னார். அதற்கவள் விழித்துக்கொள்ளவில்லை. மறுபடி பக்கத் தாவி கையைத் தட்டினார், அதிலுமெழுந்திருக்கவில்லை. ஒரு சிறு மண்கட்டியை எடுத்து மேலே எறிந்தார் அப்போதும் தூக்கம் கலையவில்லை. அவர் உடனே 'இதென்ன உயிரோடிருக்கிறாளோ இறந்துவிட்டாளோ' என்று சந்தேகித்தார். அடிக்கடி கண்ணீரைக் காஷாய வஸ்திரத்தால் துடைத்துக்கொண்டார். பிறகு அதிசமீபத்திற் போய் நாற்புறமும் பார்த்துவிட்டு நாசி த்வாரத்தில் விரலை வைத்துப் பிராண ஸஞ்சாரமிருக்கிறதோ வெனப்பார்த்தார். சுவாசம் இருக்கிறது கண்டு அவளது தோளில் தட்டியெழுப்பினார்.

உடனே யவள் திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்தாள். "நல்ல தூக்கத்திலிருந்த நம்மை யாரோ தட்டியெழுப்பினாற் போலிருந்ததே" என்று சுற்றிலும் பார்க்கையில், அம்மரத் தடியில் ஒரு யதீசுவரர் நிற்கக்கண்டாள். காலமே விழித்ததும் துறவியைக் கண்டால் அந்ததினத்தின் பலன் நல்லதல்லவெனச் சொல்லுகிறார்களே; ஐயோ! நமக்கென்னென்ன துக்கம் இன்று சம்பவிக்க விருக்கிறதோவெனப் புலம்பிக் கொண்டு அவரிடம் வைத்த கண்ணையெடுத்து பூமியில் வைத்துக்கொண்டு நிற்கமுடியாமலே நின்றாள்.

யதீசுவரர்:—பெண்ணே! நீயார்? உன் தேசமெது? நீ மணந்த புருஷன் எவன்? அந்தப்பாவி இப்போது எங்கிருக் கிறான்? உன் உடம்பெல்லாம் காயங்களாகவும் உன் புடவை யெல்லாம் இரத்தக்கறைகளாயிருக்கக் காரணமென்ன? உனக்கேன் உடம்பில் இவ்வளவு சோர்வு? நீ இம்மரத்தடி யில் வந்து தனியாய்ப் படுக்கக் காரணமென்ன? ஸ்திரீகள் அதிலும் உன்னைப்போன்ற அழகுள்ள தருணிகள் இப்படித் தனியாய்வந்து படுக்க நியாயமில்லையென நீ யறியாயோ?

ஸாவித்ரீ:—(அவர் பாதங்களிற்பணிந்து) ஸ்வாமி! என் விருத்தாந்தம் ஒரு பெரிய புராணத்திற்கொப்பாயிருக்கும்; என்னாலிந்த சமயம் சொல்லமுடியாது. உடம்பு வலி தாங்க வில்லை, கால்கள் நிற்கமுடியவில்லை. தாங்களும் யதிகளான தால் இப்பெண்பாவியின் கதையைக் கேட்டால் யாராவது ஏதாவது நினைப்பார்கள். என் துக்கத்தைக் கருணாகரனான பகவானொருவனே தீர்க்கவல்லவன்; நானிருந்த ஸ்திதிக்கும் இப்போது நானிருக்கும், விதத்திற்கும் இனி நான் உயிரோ டிருக்க நியாயமில்லை. ஆகையால் வெளிச்சம் அதிகமாகும் முன் காவேரியிலிறங்கி சரீரத்யாகம் செய்துகொள்ளுகிறேன். தயவுசெய்து எனக்கனுமதி கொடுத்து அனுப்பவேணும்.

யதிராஜன்:—ஹே ஸ்திரீயே! ஆத்மஹத்திசெய்துகொண்டால் பேசாசாய்ப் பிறந்து அலையவேண்டும், நான் யதியானுலும் உனது துக்கத்தைத் தீர்க்கவல்லவன் என்னிடம் பொய் மொழியாமல் நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விடையளிப்பாயானல் நானுன்னை யெப்படியும் சுகிக்கச்செய்ய முடியும் உன்னால் நிற்கமுடியாவிட்டால் உட்கார்ந்து சொல்.

இதைக் கேட்டாள் ஸாவித்ரி அந்த யதியினுடைய முகம் தன்னையே உற்று நோக்குவதையும், அவர் கண்களில் நீர் ததும்புவதையும் கவனித்தாள். "நான் இவரைப் பூர்வாசிரமத்தில் அடிக்கடி பார்த்திருப்பேன் போல் நினைக்கிறேன். ஏனென்றால் இவர் முகம் எனக்குப் புதிதாய்க் காணப்படவில்லை. இவரிருக்கும் மாதிரியைப் பார்த்தால் இவரெக்காரணத்தாலோ நம்மிடம் அனுதாபமுள்ளவர்போல் தோன்றுகிறது. ஆனால் கெட்டதான அபிப்பிராயமிருப்பதாய்த் தோன்றவில்லை. நமது கதையை இவரிடம் தப்பாமற் சொன்னல் ஒருகால் இவர் நமக்கு உதவிபுரிந்தாலும் புரிவார்; இவருடைய உதவியால் நமது பர்த்தாவையாவது தர்மனையாவது காண நேர்ந்தால் என் கஷ்டம் தீருமே" என நினைத்து ஸந்யாசியைப்பார்த்து 'ஸ்வாமி! என்னிடம் தங்களுக்கு அவ்வளவு கருணையிருந்தால் தங்களுக்கிரவிருகு நான் மாறுசொல்லவில்லை தாங்களும் உட்காரவேண்டும்; என்று சொன்னாள். அப்படியே அவருமுட்கார ஸாவித்ரீ, தன் பெயர் இன்னதென்றும், தனது புருஷன் பெயரைச் சொல்லாமலே மாமனார் பெயரைச்சொல்லி அவருக்குத்தான் மாட்டுப்பெண்ணென்றும், தனது பர்த்தா குளித்தலையில் வக்கீலாயிருக்கையில் தான் சுகமாய் வாழ்ந்ததும் சொல்லித் தன்னைத் தனது தனயன் ஸுமங்கலிப் பிரார்த்தனை செய்யவேண்டுமென அழைத்துப் போனதுமுதல் தான் இப்போது மரத்தடியில் படுத்திருந்தவரையில் ஒரெழுத்துகூட விடாமல்

மத்திமத்தியில் சற்று கண்ணீர்விட்டும் சற்று ஸ்தம்பித்து இருந்தும், சற்று யோசிப்பதுபோல் யோசித்தும், சற்று கேட்பவருடைய கண்ணீரையும் முகவாட்டத்தையும் கவனித்தும், தனது கதையைச்சொல்லி முடித்தாள்.

இதைக்கேட்ட சன்யாஸி மெய்மறந்து உடம்பு நடுங்கிக் கண்ணீர் சொரிந்து, 'ஸாவித்ரீ உன்னை நான் இக்கோலத்திற் பார்க்க என்னபாவம் செய்தேனோ' என்று அவளைக் கட்டிக் கொண்டு அழுதார். உடனே ஸாவித்ரி அதிகமாக நடுக்கமுற்று அவரை யுற்று நோக்கியதும் தனது பர்த்தாவென அறிந்துகொண்டு தானும் கோவென் றலறினள். இப்படி அற்பகாலம் இருவரும் அழுதானபிறகு ஸாவித்ரீ 'பிரபோ! தாங்களிக்கோலமான காரணமென்ன? இவ்வாச்ரமத்திலிருக்கிற காலத்தில் என்னை யனுதுவதும் என்னுடன் பேசுவதும் தர்மவிருத்தமென்பார்களே?'' என்று கேட்டாள்

அதற்கவர் "பிரியே! நான் வாஸ்தவத்தில் ஸன்யாஸம் கொள்ளவில்லை, அனுகூல தர்மபத்னியாகிய உன்னுடன் சேர்ந்து இல்லற தர்மத்தை நடத்துவதைவிட நான் ஸன்யாஸத்தைப் பெரிதாக நினைக்கவில்லை நான் எப்போதும்போல் இருந்தால் எப்படியும் கடன்காரர்களின் வாரண்டுக்குத்தப்ப முடியாதென நினைத்து, எனது சிகை, எக்ஞோபவீதம் இவைகளைப்பரிஹரிக்காமல் வடதேசத்துஸன்யாஸியென்று பெயர் வைத்துக்கொண்டு சட்டையையும், முக்காடையும் எடுக்காமல் தமிழைக்கொச்சை கொச்சையாய்ப் பேசிக்கொண்டும், ஸம்ஸ்கிருதத்தையே பெரும்பாலும் உபயோகப் படுத்திக் கொண்டு, உன்னையும் தர்மனையும் தேடித்திரிகிறேன். உன்னைக் கண்டவுடன் என் கவலை முக்காலே அரைக்காலும் நீங்கிவிட்டது. குழந்தை விஷயமாய்க் கொஞ்சம் கவலையிருந்தாலும் அவன் கூடியசிக்கிரத்தில் எப்படியாவது ஸப்

மாஜிஸ்டிரேட்டாக வந்து விடுவான், பிறகு கவலையேயில்லை; அவனைப்பற்றி நமது ஜில்லா கலெக்டர் மதுரை திருநெல்வேலிக் கலெக்டர்களுக்கு ரொம்ப பலமாய் எழுதியிருக்கிறார். இனி நான் ஒரு நாள் கூட இந்த பிரிடிஷ் எல்லையில் இருக்கலாகாது; இருந்தால் கடனுக்கு வகை சொல்ல முடியாமல் ஜெயிலுக்குப் போகும்படி நேரிடும்; நானில்லாவிட்டால் சொத்தைக் தலைக்குக் கொஞ்சமாய் எடுத்துப்போவார்கள். நாமாகவே நியாயமான விலைக்கு நமது சொத்துக்களை விற்றுக் கடன் கொடுத்தால் கால் பாகம் சொத்து மீருமானாலும் நமக்கு இது லாபமில்லை. நமக்கு அதிர்ஷ்டம் உண்டானால் இதைப்போல் பத்துப்பங்கு சொத்தானை நாம் சம்பாதித்துக் கொள்ளலாம்" என்று சொல்லி யவனியனைத்துக் கொண்டு கலமனூர் ஸ்டேஷன் வந்து சேர்ந்தார்.

உடனே இருவரும் ரயிலேறி ராத்திரி புதுச்சேரி வந்து சேர்ந்து, தங்கள் வசமிருந்த சிறு நகைகளை வைத்துக் கொண்டு இரண்டொருநாளை காலக்ஷேபம் செய்தார்கள்.

பிறகு கோபாலசாமி ஐயர், தனக்கு ஏதாவது உத்யோகம் கிடைக்குமா வென்று விசாரித்துக் கடைசியில், அந் நகரத்தில் பட்டர் துண்டு சீசு என்ற கூட்டத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சீமைச்சாமான் கிடங்கில் மாதம் ரூ 30 சம்பளத்திற்கு அமர்ந்து. அதைக்கொண்டு ஸாவித்ரியுடன் செட்டாகவும்; தர்மமாகவும், கௌரவமாகவும், காலக்ஷேபம் செய்து வந்தார்.

# பதினேழாவது ஆச்வாஸம்

## நியாய ஸ்தலம்

---

"சுப்பு! திருச்சியில் சொன்னபடி நீ மதுரையிலிருந்து கொண்டு என்னுடன் வேறொரு ஸ்திரீயை அழைப்பித்திருந்தாயானால் என்கதி என்ன ஆகும்?"

சுப்பு:—குழந்தாய் தர்மாம்பா! நமக்கு இப்படியெல்லாம் இக்கட்டு வருமென்று நான் சொப்பனத்தில் கூட நினைக்கவில்லையே.

தர்மா:—சுப்பு! ஆபத்தும் ஸம்பத்தும் நாம் நினைத்துத்தான் வருமென்று இதுவரையில நீ நினைத்திருந்தாயோ?

சுப்பு:—இல்லை. நாம் செய்த குற்றமென்ன? நமக்கு வந்திருக்கிற ஆபத்தும் அவமானமும் என்னவென்று நினைத்தால் மனமுருகிப் போகிறதெனக்கு.

தர்மா:—நாமிந்த ஜன்மத்தில் யாதொரு குற்றமும் செய்யவில்லையென்று நம் மனதுக்குத் தெரிந்திருந்தாலும் பூர்வ ஜன்மத்திற் செய்த பாபத்தின் பலனை யனுபவிக்க நாம் ஆக்ஷேபிக்க முடியுமோ?

சுப்பு:—நீ படித்தவளாயிருப்பதால் சொல், கேட்கிறேன். பாவத்தைச் செய்தால் நாகம் நரகமென்று ஓரிடமிருப்பதாயும் அவ்விடத்திற்கு மனிதரைக் கொண்டுபோய் ஹிம்ஸிப்பதாகவும் சொல்லுகின்றார்களே, அப்படியிருக்க மறு ஜன்மத்திலும் அந்தப்பாபம் தொடர நியாயமுண்டோ! ஒரு குற்றத்திற்கு இரண்டு தரம் சிக்ஷை செய்வது நியாயமாகுமோ!

தர்மா:—தம்மா சுப்பு! ஒரு பாபத்திற்கு இருதரம் சிக்ஷை கிடையாது. ஆனால் இதுவரைகை புலஸ்டு. இப்போதைய ராஜாங்கத்திலும் சில குற்றங்களுக்குச் சிரச் தண்டனையும் அபராதமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சில குற்றங்களுக்கு இரண்டிலொன்று மாத்திரம் குறிப்பிடப்படுகிறது. அதுபோல் சிலபாபங்களுக்கு நரகானுபவம் மாத்திரம் ஏற்பட்டிருக்கிறது; சில பாபங்களுக்கு நரகத்திலும் கஷ்டப்பட்டு மறுபிறப்பிலும் கஷ்டப்படும்படி சேர்க்குவிக்கும்; சிலவற்றிற்கு மறுஜன்மத்தில் மாத்திரம் கஷ்டமுண்டாகும். நாமிப்போது பாபத்தின் பலனை யனுபவிப்பது மாத்திரம் நிச்சயம். அது எப்படிப்பட்ட பாபமோ நமக்கு அறியச் சக்தியில்லை.

சுப்பு:—இது இருக்கட்டும், நமது நிலைமையைப்பற்றி யோசிப்போம். இந்த ஜெயிலறையில் இன்னும் எத்தனைநாள் வசிக்கவேண்டியதோ தெரியவில்லையே?

தர்மா:—புதிதாய் ஒரு சப்மாஜிஸ்டிரேட்டு வந்திருக்கிறாராம். பழய கேஸ்கள் அதிக பாக்கியிருக்கின்றனவாம், அவையெல்லாம் ஒழிந்தபின் நம் கேஸ் விசாரிக்கப்படும். அதற்குள் அவசரப்பட்டால் அந்த இன்ஸ்பெக்டர் சொன்னபடி நடந்தால் இப்போதே வெளிப்பட்டுவிடலாம். அதற்கு நீ சம்மதப்படுவாயா?

சுப்பு:—சிவ-சிவ, அவனுக்கு நீயும் வாழ்க்கைப்பட்டு நானும் பெண்டாகவிருந்தாலல்லவா நம்மை விடுவிப்பான். அதற்கு நீ ஒருகால் உடன்பட்டாலும் படலாம். நீ கன்னிகை. என்னையும் சம்மதிக்கச்சொல்ல எப்படித் துணிந்தாய்.

தர்மா:—சுப்பு! நானா உடன்படுவேன். அப்படியானால் நேற்றே நாமிவ்வறையைவிட்டு நீங்கிவிடலாமே. நானும்

சம்மதிக்கமாட்டேன். நீயும் சம்மதிக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை, இப்போதிருக்கிற ஸ்திதியை உனக்குச் சொன்னேனே தவிர வேறில்லை.

சுப்பு:—தர்மாம்பா! நானொரு யோசனை சொல்லுகிறேன், அதாவது அவன் இப்போது ஒருதரம் இந்த அறைக்கு வருவான், எப்படியும் நம்மையவன் கைவசப்படுத்திக்கொண்டு விடலாமென்று நினைத்துத்தான் நமக்கு ஆசாரமாயும் அதிசிலாக்கியமாயும் ஆகாரம் கொடுத்துவருகிறான், இன்னும் எத்தனைநாட்செல்லுமோ நம் கேஸ் விசாரணைக்கு வர; ஆகையால் இன்று அவன் வந்து நம்மைக் கெஞ்சி வரன் கேட்கையில் 'இந்த கேஸ் முடிந்தானபிறகு பார்த்துக்கொள்வோ' மென்று அரைவார்த்தையாகச் சொன்னோமானால் கேஸாகுமட்டும் சுகமாய் முடியும்; மற்றும் அதுவரையில் கஷ்டமிராது, பிறகு தப்பித்துக்கொள்ள எத்தனையோ வழியிருக்கிறது.

தர்மா:—ஒருதரம் வரித்தவரைத்தவிர மற்றொருவனை வரிப்பதாக வேடிக்கையின் பொருட்டுக்கூட வாக்கினால் கூற நான் துணியேன்.

சுப்பு:—அம்மா குழந்தாய், நீ ஒன்றும் சொல்லவேண்டியதவசியமில்லை, நானொப்புக்கொள்கிறேன், நீ கன்னிகைக்குத்தக்கபடி வெட்கத்துடனிருந்தாற் போதும், இல்லாவிட்டால் நமக்கொருசமயம் மானபங்கம் நேர்ந்தாலும் நேரும், நீ அணிந்திருக்கிற நகைகளும் பறிமுதலாய்விடும்.

தர்மா:—என்னமோ, பின்னுக்குக் கெடுதியில்லாமல் ஜாக்கிரதையாயிரு.

என்றிவ்வாறு நமது தர்மாம்பாளும், சுப்புவும் தூத்துக்குடி ஜெயிலில் அறையில் அடைக்கப்பட்டுப் பேசி

ளுக்கு ஸ்வயமாகவே தெரிந்திருக்கும். அவளைப்பற்றிச் சொல்லுங்காலத்தில் அவளுடைய முகம் சிவந்து வார்த்தை கடுமையுடன் உதட்டைக் கடிக்கச்செய்துகொண்டே வெளியில் வந்தது பட்டாபிராமய்யருடைய மனதின்மேல் தைத்தது. அவனுக்கு அவளிடம் முன்னமேயே வெறுப்பிருப்பது உங்களுக்குத் தெரிந்தவிஷயமே. அதைக்கொண்டே காரியத்தைச் சாதிக்கலாமெனத் தீர்மானத்துடன்:-

பட்டா:—நீ சொன்ன மூவரில் முதலிற்சொன்ன இரண்டுபேரிடத்திலும் ஏதாவது வாங்கினாலும் வாங்கிவிடலாம், கடைசியில் சொன்ன ராஜாத்தியினிடத்தில் காலணாகூடக் கிடைக்காது.

மீனு:—ஏன் அவள் ரொம்ப ஏழையோ?

பட்டா:—ஏழையல்ல, அவள் அகம்பாவக்காரி. என்னையவள் ஒரு திருணத்திற்கும் கீழாக நினைக்கிறாள். சொத்தில்லாதவனென்றும் அநியாயமாய்ச் செலவுகளை அயோக்கியத்தனமாய்ச் செய்தவனென்றும் இன்னும் அநேகபொய்களைக் கற்பனைசெய்து இகழ்கிறாள்.

மீனு:—இகழ்வாள். அதிலென்ன சந்தேகம்; அவள் தயவைக் கனவிலும் எதிர்பாராத என்னையேயவள் மதிக்கிறதில்லையே, அவளிடம் பணத்தைக் கேட்கும் உன்னையா அவள் மதிக்கப்போகிறாள்.

பட்டா:—இவ்வளவு தெரிந்திருந்தும் அவள் பணம் கொடுத்தால் நானும் கொடுக்கிறேனென்கிறாயே.

மீனு:—ஆமாம், அஃதிருக்கட்டும், நீ எப்போது அவளிடம்போனாய், என்னகேட்டாய் அவள் என்னசொன்னாள், சொல்லு கேட்கிறேன்.

பட்டா:—சென்ற ஞாயிற்றுக்கிழமை நான் குளித்தலை போனேன்; சாவித்ரிமாத்திரம் இருந்தாள்: அவள் புருஷன் ஊரிலில்லை; சாவகாசமாய் ராத்திரி எல்லாரும் சாப்பிட்டானபிறகு வந்தகாரியத்தைச் சொல்லும்படி தானாகவே என்னைக் கேட்டாள். நான் பெண்ணைப்பெற்றவனாதல் மானத்தைவிட்டு அவளுடைய மூத்தாள் குமாரன் தர்மனுக்கு என் பெண்ணைக் கலியாணம்பண்ணிக் கொள்ளும்படியான ஏற்பாட்டைப் புருஷனுடன் சொல்லிமுடிக்கும்படி கேட்டேன்.

மீனா:—என்ன சொன்னாள் பதில்?

பட்டா:—அவனுக்குப் பதினாயிரரூபாய்வரையில் வரதக்ஷிணை வருவதாயிருப்பதால் உன் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ள முடியாதென்று சொன்னாள்.

மீனா:—ஆமாம், இருபதினாயிரரூபாய்கூட வரதக்ஷிணை வரும் அவனுக்கு; 2 லக்ஷரூபாய்க்குமேல் கடனிருக்கிறதோ தா இல்லையோ? தனது அந்தஸ்தைப் பிறர் அறியார் என்று எண்ணியிருக்கிறாள்போலும்.

பட்டா:—இதுமாத்திரமல்ல, அந்த முன்மகனுக்கொப்பான தர்மனுக்கு உன் கோணமூஞ்சிக் கமலத்தையா கொடுக்கிறாயென்று கேலியாகக்கேட்டதுதான் என் மனதை அறுக்கிறது. நம்மைச்சேர்ந்தவர்களே நம்மைத் தூஷித்தால் காரியம் எப்படியாகும்?

மீனா:—அவள் எதுவேணுமானாலும் அதையெல்லாம் தங்குதடையின்றிச்சொல்வாள்; அவளுக்குத் தன்னுடையது பிறருடையது என்னும் பேதமில்லை. அவ்வளவு கர்வமிருக்கிறது அவளுக்கு. சரி யப்புறம் என்ன நடந்தது சொல்லு;

இவர்களை இன்றே விசாரணை செய்துவிட்டுக்கேஸை முடிக்க வேண்டுமென்றும், அதை யவர்களுக்குச் சொல்லி அவர்களின் ஸாக்ஷிகளைக் கேட்டு ஃப்மாஜிஸ்டிரேட்டுக்குச்சொல்லி சம்மன் போட்டு வரவழைக்க வேண்டுமென்றும், பெரிய இனிஸ்பெக்டர் ஜெயிலுக்குள் வந்தார்.

அவர் வரும்போதே இங்கு நடந்த கூச்சலைக் கேட்டு, "யாரங்கே? பயப்படாதேயுங்கள்" என்றுசொல்லிக்கொண்டு ஒரு கான்ஸ்டேபிள் வழி காட்ட, அவ்விடம் வந்தார்; இவர் பரம யோக்கியர்; கவர்ன்மெண்டில் அநேக பரிசுகளைப் பெற்றவர்; சகலமான கனதனவான்களும் தன்னை மதிக்கும்படி நடந்துகொள்ள இஷ்டமுடையவர்; சாந்தர், ஸுசீலர், ஈசுவர பக்தியுள்ளவர், தனது புத்திரனாயினும், பத்னியாயினும் இன்னும் யாராகவிருந்தாலும் தனது உத்தியோக முறையில் நியாயந் தவராதவர். இவர் வேலையில் சமர்த்தராக இருந்ததோடு சுத்தராயு மிருப்பதால், கீழுத்தியோகஸ்தர்களுக்கு இவரைக்கண்டால் திகில்தான் இவர் இந்த ஜெயிலுக்குள் வர நியாயமே யில்லையெனத் தீர்மானித்து, அந்த அயோக்ய ஸப்இனிஸ்பெக்டர் அவ்வளவு தைரியமாய் அக்ரமம் செய்தான். இப்பொழுது இவரைக் கண்டவுடன் கருடனைக் கண்ட பாம்புபோல் வீர்யமெல்லாமொடுங்கி, பிரமித்து நின்றான்.

அவனைப்பார்த்து பெரிய இனிஸ்பெக்டர் "நீர் படிப்பில் ஓங்கினவரும், வயதில் சிறியவரும், வேலையில் கெட்டிக்காரருமாக இருப்பதால். நடத்தையிலும் நல்லவராயிருப்பீரென்று நினைத்து நான் உம்மை எவ்வளவோ முன்னுக்குக் கொண்டு வந்து விடலாமென நினைத்திருந்தேன். நீர் இப்படி 'அநாதையாய் ஜெயிலி லடைபட்டிருக்கிற அபலைகளை பலாத்காரம் செய்பவரென்று தெரிந்திருந்தால் உம்மை இவ்வளவு, நான்

முன்னமேயே வீட்டிற்கனுப்ப ஏற்பாடு செய்திருப்பேன். இருக்கட்டும், உம்மோடுபேச இதுசமயமல்ல" என்று சொல்லிவிட்டு, ஸ்திரீகளைப்பார்த்து, "அம்மா! நீங்கள் யார்? எந்த ஊர்? உங்கள்பேரில் ஏற்படுத்தப்பட்ட திருட்டுக்குற்றத்தை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? விசாரிக்கவேண்டிய ஸ்திரீ கைதிகளை ஒருவாரத்திற்குமேல் அனாவசியமாய் ஜெயிலில் அடைத்துவைக்கக் கூடாதென்று நேற்றுக் கிடைத்த கலெக்டர் துரையவர்களின் உத்திரவினால் இன்று உங்கள் கேஸை விசாரிக்க மாஜிஸ்டிரேட்டிடம் ஏற்பாடு செய்திருக்கிறேன். புது மாஜிஸ்டிரேட்டு மகாசமர்த்தர்; உங்களுக்குள்ள ஸாக்ஷிகளைக் குறிப்பிட்டுச் சொன்னீர்களானால் அவர்களுக்குடனே சம்மனனுப்பி, இன்று மத்தியானம் 3-மணிக்கு விசாரிக்க ஏற்பாடு செய்யலாம்; இதற்காகவே தான் நானிவ்விடத்திற்கு வந்தேன்" என்றார்.

சுப்பு:— ஸ்வாமி! தாங்கள் நல்ல ஸமயத்தில் வந்தீர்கள்; எங்களுடைய மானம் தங்களால் தக்கினதைப்பற்றி மிகுந்த நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்; எங்கள் பேரில் சாட்டப்பட்டிருக்கிற குற்றத்தை நாங்கள் செய்யவில்லையென மறுக்கிறோம்; ஆனால் இந்த ஊரில் எங்களுக்கு ஒருவரையும் தெரியாது. ஆகையால் யாரை நாங்கள் சாக்ஷியாகக் கோர முடியும்?

பெரிய இனிஸ்:—அவையெல்லாம் இருக்கட்டும்; உங்களுடைய பூர்வசரிதம் என்ன? இங்கு வந்த காரணம் என்ன? உங்கள்பேரில இத்திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டதற்குக் காரணம் என்ன? அதைச் சொல்லுங்கள்.

சுப்பு:—ஐயா! தங்கள் முகவிலாஸத்தைப் பார்த்தால் தாங்கள் தர்மம் தவறாத பிரபுவென விளங்குகிறது, ஆகையால் எங்கள் சமாசாரத்தை நான் சொல்லிவருகிறேன்.

அதற்குமேல் தங்களுடைய உசிதம்போலச் செய்யுங்கள்; எங்களுடைய ஊர் மதுரை. மதுரையில் புருஷோத்தம ஐயர் என்று ஒரு பிரபு இருக்கிறார். அவருடைய முதலாவது பத்னியின் பெண் இவள்; இவளுடைய தாய், தனது பிறந்தகமாகிய திருச்சி வல்லப சாஸ்திரியார் வீட்டில் இவளை ஈன்ற ஏழாம் நாள் சிவலோகத்தையடைந்தாள்; இவளை, கணவனையிழந்து தனது தமயன் வீட்டுடன் இருக்கும், இவளுடைய சிறியதாயார் ஜானகியம்மாள் வளர்த்தாள்: இவள் எக்காலத்திலும் எவ்வித முகாந்தரத்திலும் மதுரையிலிருக்கும் தகப்பன் வீட்டைப் பார்த்தவளல்ல. இவளுடைய தமையன் பெயர் சுந்தரேசன்; இவர்களிருவரையும் இவர்களுடைய மாமா வல்லப சாஸ்திரிகள் படிக்கவைத்துக் காப்பாற்றி வந்தார்; இவளுக்கு இப்போது ஸம்ஸ்கிருதத்தில் நல்ல ஞானமுண்டு; இவளைக் குளித்தலை கோபாலஸாமி ஐயர் குமாரன் தர்மராஜனுக்குக் கலியாணம் செய்து கொடுப்பதாய் வல்லப சாஸ்திரிகள் பேசி முடித்து, இவள் பிதாவிற்கும் சொல்லியனுப்பி அவருடைய அனுமதியின்பேரில் திருச்சியில் கலியாணம் நடத்த ஏற்பாடாயிற்று.

புருஷோத்தம ஐயருடைய இளைய ஸம்சாரத்தின்பெயர் மீனாக்ஷி; அவ்வீட்டில் எனது அத்தைபிள்ளை சுந்தரம் என்பவன் காரியஸ்தன்; அவன் ரூபவான்; தாரமிழந்தவன், மீனாக்ஷியும், ரூபத்தில் சுடற்றவள், இருவருக்கும் நேசம் உண்டாயிற்று. பிறகு அந்த சுந்தரத்தின் தூண்டுதலினால் மீனாக்ஷி தனது பர்த்தாவை எப்படியோ திருப்திசெய்வித்து, அழகு, குணம், படிப்பு, இவைகள் ஒன்றுமில்லாத சுந்தரத்தின் பிள்ளை கரிக்கிட்டுவுக்கு இந்தப் பெண்ணைக் கொடுக்கிறதென்றும்; தனது தமையன் இராமாபுரம், பட்டாபிராம ஐயர் குமாரத்தியான காளிகாதேவிபோன்ற கமலத்தை

இந்தப் பெண்ணினுடைய தமையன் சுந்தரனென்று சரியான பேரமைந்த சுந்தரத்திற்குக் கல்யாணம் செய்துகொடுக்கிறதென்றும் தீர்மானித்து அதற்குப் புருஷோத்தம ஐயரைச் சம்மதிக்கச்செய்து, இரண்டு முகூர்த்தங்களையும் மதுரையில் தன் கிரஹத்தில் நடத்துவதாய் ஏற்பாடு செய்தாள். அக்கலியாணத்திற்காகவே இப்பெண்ணும் இவள் தமையன் சுந்தரமும் மதுரைக்குப் போகும்படி நேரிட்டது.

இளையாள் வார்த்தையைக்கேட்டு மூத்தாள் பெண்ணையும் பிள்ளையையும் கெடுக்க உத்தேசித்த புருஷோத்தமஐயர் ஏற்பாட்டிற்கு, இவர்களிருவரும் இணங்காமல், கலியாணத்திற்கு முதல்நாள் இரவு 8-மணிக்கு ரெயிலேறித்திருச்சிக்குப் போய்விடுவதாகப் புறப்பட்டார்கள்; இந்தப் பெண்ணுக்கும் எனக்கும் கொஞ்சம் பந்துத்துவம் உண்டு. அதாவது இவளை வளர்த்த சிறியதாய் ஜானகியம்மாள் எனக்கு அம்மான் ஸம்ஸாரம்; எனக்கும் என் அத்தான் சுந்தரத்திற்கும், மேற்கண்ட மீனாக்ஷி சம்மந்தத்தை நானறிந்து கண்டித்த விஷயமாய் மனஸ்தாபம் ஏற்பட்டது. அதனால் நானும் மதுரையை விட்டு திருச்சிக்குப் போகவேண்டியிருந்தது. ஆகையால் நானிவளுக்குத் துணையாகவந்தேன். இவள் தமயனுக்குக் காமேசுவரனென்ற ஒரு சிநேகிதனுண்டு. அவர்களிருவரும் நாங்களிருவருமாய் ரெயிலேற ஸ்டேஷனுக்கு வந்தோம். தெரியாமல் நாங்கள் தூத்துக்குடிபோகும் வண்டியில் ஏறிவிட்டோம்; அவர்கள் திருச்சிக்குப்போகும்வண்டியில் ஏறியிருக்கலாமென்று நினைக்கிறோம் திருச்சி ஜங்க்ஷன் கட்டடத்தை, வண்டி நிற்குமிடமெல்லாம் கவனித்து வந்த நாங்கள், கடைசியில் தூத்துக்குடிவந்து எங்கள் தவறுதலைத் தெரிந்துகொண்டு இன்று இவ்விடம் யாராவது ஒருவர் வீட்டில் சமையல்செய்து சாப்பிட்டுவிட்டு நாளை வண்டி

யில் திருச்சிக்குப் போவோமென நினைத்து ஒரு வீட்டைத் தேடிப்போனேனும்; அது வக்கீல் பசுபதி ஐயர் வீடு. மத்தியானம் சாப்பிட்டு ராத்திரியும் ஆகாரம்செய்து சிரமத்தினல் படுத்துத் தூங்கிவிட்டோம். இராத்திரி திருடர்கள் வந்து சொத்துக்களைக் கொண்டுபோன சமாசாரம் எங்களுக்குப் பொழுதுவிடிந்த பிறகுதான் தெரியும்.

திருட்டுப்போன சமாசாரம் போலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே இந்த ஸப்இன்ஸ்பெக்டரும், வேறு சில போலீஸ்காரர்களும் அவ்விடம் வந்து விசாரித்து, நாங்கள் இவ்வூருக்குப் புதிதாய் வந்திருக்கிறோமெனத் தெரிந்துகொண்டு,எங்கள் பேரில் அத்திருட்டுக் குற்றத்தைச் சாற்றி, எங்களை ஜெயிலுக்கு இழுத்தார். இதைக் கண்ட அவ்வீட்டுக்காரரான பசுபதிஐயர் இவரைப் பார்த்து 'ஐயா! இவர்கள் பேரில் எள்ளளவும் சந்தேகமில்லை; ஆகையால் இவர்களை விட்டுவிடுங்கள்' என்று எவ்வளவு சொல்லியும் கேளாமல், இவ்விடத்தில் கொண்டுவந்து அடைத்திருக்கிறார். ஆனால் ஆகாரம் முதலானவைகளைப் பிராமணனைக்கொண்டு போடும்படி செய்திருக்கிறார். ஏதோ எங்கள் காலவித்யாஸத்தினல், அனாதைகளான எங்களை வசப்படுத்திக் கொள்ளலாமென்ற துர் எண்ணத்தால் அகார்யம் செய்ய எத்தனித்தார். அச்சமயம் தெய்வம்போல் தாங்களே வந்துவிட்டீர்கள். இதுதான் எங்கள் விருத்தாந்தம். இனிமேல் தாங்கள் செய்யும் ஆக்ஞைக்கு உட்படத் தயாரயிருக்கிறோம்'—என்றாள்.

பெரிய இன்ஸ்:—ஓய்! தியாகராஜ ஐயரே! இவர்கள் கேஸுக்கு ஏதாவது சாக்ஷி யகப்பட்டதா ?

தியாக:—இதுவரையிலில்லை.

பெரிய இன்ஸ்:—அம்மா! நீங்கள் பயப்பட வேண்டிய தில்லை. உங்கள் பேரில் குற்றம் ஏற்படாது. இப்போதே வக்கீல் பசுபதி ஐயருக்குச் சம்மன் அனுப்பி 'உங்கள் மேல் சந்தேகமில்லை' என்று அவரைக்கொண்டு சொல்லும்படி ஏற்பாடு செய்கிறேன். உங்களைக் கேட்டால் எங்களுக்கு அவர் தான் சாக்ஷியென்று சொல்லுங்கள். ஸப்மாஜிஸ்டிரேட் மிகவும் நல்லவர், தர்மசிந்தனையுள்ளவர், உங்களை விடுதலை செய்துவிடுவார்—என்று சொல்லிவிட்டு, தியாகராஜ ஐயரைப் பார்த்து 'நீர் இவ்வித துர்க்குணத்தை இன்றுடன் விட்டு விடுவீரானால் கூடிய சீக்கிரத்தில் உயர்ந்த பதவிக்கு வரலாம்; போம்; இன்று உம்மை மன்னித்து விட்டேன். இவர்களுக்கு வழக்கம் போல் ஆகாராதிகளைச் செய்வித்து 3 மணிக்குக் கோர்ட்டுக்கு அழைத்து வாரும்' என்று கட்டளையிட்டு விட்டுப் போய்விட்டார்.

பெரிய இன்ஸ்பெக்டர் சென்றவுடனே தியாகராஜ ஐயர் ஈப்புவைப் பார்த்து 'அம்மா! புத்திப் பிசகினால் உங்களுக்கு நான் குற்றஞ் செய்துவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். நீங்கள் எனக்குச் சகோதரி; இந்தப் பெண் என்னுடைய பெண்; வழக்கம்போல் உங்களுக்கு ஆகாரம் வரும், சாப்பிட்டு இருங்கள், நான் 3 மணிக்கு வந்து உங்களைக் கோர்ட்டுக்கு அழைத்துப் போகிறேன்' என்றார்.

தர்மா:—கோர்ட்டில் பலபேர் முன்னிலையில் நாங்கள் நிற்க அவமானமாக இருக்குமே, அப்படி அங்கு போகாமல் எங்களைத் தப்பிவைக்க வேறு வழியில்லையோ?

தியாக:—குழந்தாய்! குற்றவாளிப் பட்டியில் சேர்த்த பிறகு உங்களைக் கோர்ட்டில் விசாரிக்காமல் அனுப்ப முடி

யாது; ஆனால் காரொரு ஸௌகரியம் செய்விக்கிறேன். (அதாவது) கோர்ட்டில் ஒருவருமில்லாத சமயத்தில் உங்களை விசாரித்து சீக்கிரம் வெளிப்படுத்துகிறேன்.

இவ்வாறு சொல்லிவிட்டு இவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார் போலீஸ் ஸப்இன்ஸ்பெக்டர் தியாகராஜய்யர்:

மணி மூன்றடித்தது. ஸப்மாஜிஸ்ட்ரேட் டிபன்செய்து விட்டு மறுபடி கச்சேரிக்குவந்தார். கச்சேரி வாசலில் ஏராளமான ஜனங்கள் தங்கள் தங்கள் கேஸ் விஷயமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்; "புதிதாய் வந்த ஸப்மாஜிஸ்டிரேட் தர்மராஜ ஐயர், தர்மமே மூர்த்திகரித்து வந்திருக்கிறதென சொல்லத்தக்க குணமுடையவர். கேஸில் அபஜயமடைந்தவர்கள்கூட வாழ்த்துகிறார்களென்றால் இவருடைய சாமர்த்தியத்தை என்னவென்று சொல்லலாம். இவருக்கு முந்தினவர் வியாதியால் மூன்றுமாசகாலம் விசாரிக்கமுடியாமல் போட்டு வைத்திருந்த கேஸ்களைப்பத்துநாளில் ஒழித்துவிட்டார். இன்னும் 2-நாள் போனால் இவருக்குக் கச்சேரியில் வேலையே இருக்காதெனத் தோன்றுகிறது; இவருடைய புத்திக்கும் வேலைத் திறமைக்கும் ஏன் இவரை ஒரு ஜில்லா கலெக்டராக நியமித்திருக்கக்கூடாது" என்று ஜனங்கள்பேசிக்கொண்டிருந்தார்கள். இச்சமயம் தியாகராஜ ஐயர், சுப்பு தர்மாம்பாள் இவர்கள் சகிதம் ஒருவண்டியில் வந்திறங்கி, தனியாய் சப்மாஜிஸ்டிரேட்டாருடன் ஏதோ இங்கிலீஷில் ரகஸியமாய்ப் பேசிவிட்டு இவ்விரு ஸ்திரீகளையும் ஒரு ரூமில் இருக்கச்சொல்லி, அதற்கு ஒரு சேவகனைக் காவல் வைத்தார்.

மணி $4\frac{1}{2}$ ஆயிற்று சப்மாஜிஸ்ட்டிரேட்டு கச்சேரியில் அன்றைதினம் குறிக்கப்பட்ட கேஸ்களெல்லாம் விசாரித்து முடிந்தன. கூட்டங்களெல்லாம் கலைந்தன. கச்சேரிவாசலில்

வக்கீல் பசுபதி ஐயரும், பெரிய இனிஸ்பெக்டர் வெங்கடராமய்யரும் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்திருக்கிறார்கள்; தியாகராஜய்யர் உள்ளே நின்றுகொண்டிருக்கிறார். நமது சுப்பு தர்மாம்பாள் கேஸ் விசாரணை துடங்கிற்று. இவ்விரு குற்றவாளிகளையும் விசாரணைக்கூண்டில் நிருத்தினார்கள். மாஜிஸ்டிரேட்டார் இரண்டாவது குற்றவாளியாகிய தர்மாம்பாளைப் பார்த்தார். சற்று ஸ்தம்பம்போல் உட்கார்ந்திருந்தார், சற்று தலைகுனிந்தார், கொஞ்சம் கண்ணீருதிர்த்தார், 'நாமன்று மதுரைக்குக் குறிப்பிட்ட காலத்திற் போயிருந்தால் இவளை இப்படிப்பட்ட தசையில் நாம் பார்க்க நேரிடாது' என்று நினைத்தார்; கண்களைத் துடைத்துக்கொண்டார். கடைசியாக 'இது கச்சேரியானதால் இங்கு நடக்கவேண்டிய காரியங்களை நடத்திவிட வேண்டியதுதான்;பிறகு பகவத்கிருபைபோல் நடக்கட்டும்' என்று துணிந்தார். தர்மாம்பாளும் மாஜிஸ்ட்டிரேட்டாரைப் பார்த்தாள்; கொஞ்சம் ஸந்தேகித்தாள்; மறுபடி பார்த்தாள்;மனங்கலங்கினாள், தலைகுனிந்தாள், கண்ணீர்சொரிந்தாள். சுப்பு இந்த மாஜிஸ்ட்டிரேட்டை முன் பார்த்தவளல்ல;இவளிவ்விருவரின் முகங்களையும் கவனித்து சற்றி யோசித்து ஒருவாறு நிச்சயித்தாள். பெரிய இனிஸ்பெக்டர், கோர்ட்டாருடைய தற்கால தசையை நிதானமாய் கவனித்தார்; தானும் கொஞ்சம் வருத்தத்தைக் காட்டிக் கண்ணைத்துடைத்துக்கொண்டு, கோர்ட்டாரைப் பார்த்ததும் கோர்ட்டார் 'கேஸ் நடக்கலாம், என்றார். உடனே பெரிய இனிஸ்பெக்டர், சுப்புவைப் பெயர் ஊர் முதலியவைகளை தர்மாம்பாளுக்கும் சேர்த்துக்கேட்டு, கோர்ட்டு குமஸ்தாவைக் கொண்டு பதியவைத்துவிட்டு 'அம்மா இந்த ஊர் வக்கீல் பசுபதிஐயர் வீட்டில் நடந்த களவில் நீங்களிருவரும் சம்மந்தப்பட்டிருப்பதாய் அநுமானிக்கப்படுகிறது. நீங்கள் குற்

## எட்டாவது ஆச்வாஸம்.

### அநபீஷ்ட சிரவணம்.

காலையில் மணி 8 ஆயிற்று. திருச்சிறுப்பள்ளியில் ஒருமாளிகையின் மேல்மாடியில் ஓரறையில் ஒரு சக்கர மேஜையின் நாற்புரங்களிலும் நான்கு நற்காலிகள் போடப் பட்டிருந்தன. ஒன்றில் நமது தர்மாம்பாள் உட்கார்ந்து கொண்டு ஏதோ ஒரு ஸம்ஸ்கிருதப் புஸ்தகத்தைப் படித் துக்கொண்டிருந்தாள். திறக்கப்பட்டிருந்த ஜன்னலின் வழி யாய் குளிர்ந்த காற்று தேகத்துக்கு ஹிதமாக வீசிக்கொண் டிருந்தது. அதனாலவள் கூந்தலிற் சூட்டப்பட்டிருந்த ஜாதி புஷ்பத்தின் நறுமணம் அவ்வறை முழுமையும் வியாபித் திருந்தது. குணங்களையல்லாமல் தோஷத்தைக் கண்டு பிடிக்கத்தெரியாத நமது தர்மாம்பாள் அப்புத்தகத்தைப் படிக்கும் காலத்தில், சில சமையம் சிரக்கம்பனமும், சில சமயம் அற்பமான மந்தஹாஸமும், சிறிதுகாலம் ஸ்தம் பம்போல் மலைத்து அசையாமலிருத்தலும் சிலகாலம்வாய் விட்டுக் கலகலவென்று படித்தலுமாக விருந்தாள்.

இவ்விப்பிரமங்களையும் சேஷ்டைகளையும் களிப்புட னும் வியப்புடனும் அவ்வறையின் வாயிற்படியில் நின்றபடி யே ஒரு அழகியபையன் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனா லவனை யவள் கவனித்திலள். அற்குக் காரணமவள் தனது மனதை முழுமையும் அப்புஸ்தகத்திலேயே வைத்திருந் ததுதான். அந்தப்பையன் சற்றுநேரம் நின்றுவிட்டுப் பிறகு ஓசையன்றிச் சமீபத்திற்போய், தர்மா! யாராவது வந்து இங்கிருந்து எதையாவது எடுத்துக்கொண்டுபோனாலும் நீ யறியாய்போலிருக்கிறதே?

இப்படி இவர்கள் கலங்கி நிற்கும்போது, இனிஸ்பெக்டர் வெங்கடராமய்யர் மாஜிஸ்ட்ரேட்டாருடன் கொஞ்சம் இங்கிலீஷில் பேசிவிட்டு, உடனே வெளியேவந்து "அம்மா நீங்கள் கவலைப்படவேண்டாம்; என் பங்களாவில் ஒருவருமில்லை. இராத்திரி வேண்டிய சேவகர்களைக் காவலிருக்கச் சொல்லுகிறேன்; சாப்பாட்டுக்கு வேண்டிய சகல சாமான்களும் அங்கிருக்கின்றன, இரவுபொழுது அங்கிருந்துவிடுங்கள், பொழுதுவிடிந்ததும் உங்களைத்தக்க துணையுடன் நீங்கள் போகவேண்டிய ஊருக்கனுப்புகிறேன்" என்று சொல்லி, ஒரு குதிரைவண்டியில் இவ்விருவரையும் ஏற்றி ஒரு சேவகனையும் கூட அழைப்பி, நான் அரைமணிக்குள் அவ்விடம்வருகிறேன்' என்றும் சொல்லியனுப்பினர்.

இவர்கள் அந்த பங்களாவுக்குப் போனதும், அங்கிருந்த வேலைக்காரனுடன் இவர்களுடன் கூடவந்த சேவகன் ஏதோ சொன்னான். உடனே அவர்கள் இவர்களுக்குவேண்டிய உபசாரங்களைச் செய்தார்கள். நிற்க;

ஸப்மாஜிஸ்டிரேட்டார் இந்தக் கடைசி கேஸ் முடிந்ததுடன், பைத்தியம் பிடித்தவர்போல் முன்பின் தெரியாமல் சற்றுநேரம் நாற்காலியிலேயே உட்கார்ந்திருந்தார்; மணி 5½ ஆயிற்று; ஏதோ சிந்தித்தோ எப்படியோ ஒருவிதம் முடிவு செய்துகொண்டு நாற்காலியிலிருந்து எழுந்திருந்தார். அந்தருணத்தில் ஒரு போலீஸ் சேவகன் ஓடிவந்து, சலாம் செய்து, ஒரு சிறிய நியூஸன்ஸ் கேஸ் விசாரிக்கவேண்டுமென்றான்; அதற்கு மாஜிஸ்டிரேட்டார், மணி 5½ ஆய்விட்டது இனி சாத்தியப்படாது, என்றார். உடனே சேவகன் பயந்து வணங்கி. குற்றம் செய்தவர்கள், தாங்கள் வேறு ஜில்லாவாசிகளென்றும் இராத்திரியே அவர்கள் அவசரமாய் ஊருக்குப்

போகவேண்டுமென்றும் சொல்வதால் தயவுசெய்து இதை விசாரிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான், மாஜிஸ்ட்ரேட்டார் தாக்ஷிண்யமும் தயவுமுள்ளவராகையால் இதற்கிணங்க, சேவகன் சார்ஜ் செய்யப்பட்ட இருவரையும் கொண்டுவந்து நிறுத்தினான்.

அவ்விருவரையும் மாஜிஸ்டிரேட் பார்த்தார். உடனே முன்போலவே ஸ்தப்தராகிக் கண்ணீருதிர்த்தார். இன்ஸ்பெக்டர் வெங்கடராமய்யரும் இவர்களில் ஒருவரைக் கண்கொட்டாமல் பார்த்தார். வந்த இருவரும், 'இவ்வினிஸ்பெக்டரையும், மாஜிஸ்டிரேட்டையும் நாம் அநேகந்தடவைகளில் பார்த்திருப்பது போல் தோன்றுகிறதே' என்று கவனத்துடன் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள்.

உடனே விசாரணை நடந்தது. ஒவ்வொருவருக்கும் மாஜிஸ்டிரேட்டால் அரை ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அவ்விருவரும் உடனே அத்தொகையைச் செலுத்திவிட்டு, கோர்ட்டுக்கு வெளியே வந்தார்கள். இதற்குள் இன்ஸ்பெக்டர் வெங்கடராமஐயரும் முன்போலவே மாஜிஸ்டிரேட்டுடன் சற்று நேரம் ஏதோ பேசிவிட்டு, கோர்ட்டுக்கு வெளியே வந்தார்.

அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்த இருவரில் ஒருவரைப் பார்த்து இன்ஸ்பெக்டர், 'நான் உங்களை வெகுவாய்ப் பார்த்திருப்பேன் போல் தோன்றுகிறது. உங்களுக்குப் பிரியமானல் இன்றிரவு என்னுடைய ஜாகையில் இருவரும் தங்கியிருந்துவிட்டு, காலைசகாலையில் நீங்கள் போகவேண்டிய இடத்திற்குப் போகலாம்' என்றார்.

அதற்கிருவரும் சம்மதித்து, இன்ஸ்பெக்டரைப் பார்த்து, 'ஐயா! எங்களுக்கொரு சந்தேகமிருக்கிறது. அதைத்

தாங்கள் தயவு செய்து நிவர்த்தி செய்தால் தங்களிஷ்டப் படி நடக்கக் காத்திருக்கிறோம்' என்றார்கள்.

வேங்கடராம ஐயர்:—'எனக்கும் உங்களுடன் பேச வேண்டிய விஷயங்கள் அதிகமாயிருக்கின்றன. ஆகையால் எல்லாச் சந்தேகங்களையும் எனது ஜாகைக்குப் போய்த் தீர்த்துக்கொள்வோம்; நீங்களிருவரும் இப்போதே செல்லுங்கள்; நான் இன்னும் அரைமணி நேரத்தில் உங்களிருவரையும் சந்திக்கிறேன்;'

இருவரும்:—சரி, அவ்வாறே செய்கிறோம்.

வேங்கட்டராம ஐய்யர்:—யாரங்கே ?

உடனே ஒரு ஸேவகன் ஓடிவந்து வணங்கினன். 'அடே ஒரு வண்டி கொண்டுவா' என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவனும் அவ்வாறே ஒரு வண்டி கொண்டுவர இவர் அதில் இவர்களை ஏற்றி, சேவகனைப் பார்த்து, 'இவர்களை நமது பங்களாவிற்குக்கொண்டுபோய் விட்டுவிட்டு வா' என்று அனுப்பிவிட்டார்.

பிறகு மாஜிஸ்டிரேட்டு வெளியே வர, இன்ஸ்பெக்டர் அவரைப் பார்த்து, 'ஸார் ! அவ்விருவரையும் நமது பங்களாவிற்கு அனுப்பிவிட்டேன். நாமும் போவோமே' என்றார்.

மாஜிஸ்டிரேட்:-'நாம் இப்பொழுதே போகவேண்டாம்; பீச்சுக்குப் போய் சற்று நேரம் உலாவிவிட்டுப் பிறகு செல்வோம்'

போலீஸ் இனிஸ்பெக்டர்:—சரி அப்படியே யாகட்டும்.

உடனே இருவரும் ஒரு வண்டி கொண்டுவரச் சொல்லி அதிலேறிக்கொண்டு கடற்கரை சென்றார்கள்.

## பதினேழாம் ஆச்வாஸம்.

### இஷ்டஜன ஸமாகமம்:

தூத்துக்குடி ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் நாற்புறங்களிலும் புஷ்பச்செடிகள் நிறைந்த தோட்டத்தின் மத்தியில் தெற்குமுகமாய் ஓரழகிய பங்களா நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்திவேளையில் மலரும், மலர்களின் வாசனையானது அக்கட்டடம் முழுமையும் வியாபித்திருந்தது. அக்கட்டடத்தின் முதலாவது அறையில் நமது தர்மாம்பாளும் சுப்புவும், ஓரழகிய பெஞ்சியிலுட்கார்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

தர்மா:—சுப்பு! சப் இனிஸ்பெக்டரைப்போல் பெரிய இனிஸ்பெக்டரும் சபலபுத்தியுள்ளவராகவே இருப்பாரென்று நீ நினைக்க இடமில்லை. அவர் முகம் நம்மை பிரேமையுடனும் அனுதாபத்துடனும் அடிக்கடி அவலோகனம் செய்ததை நீ கவனிக்கவில்லைபோலிருக்கிறது. அப்படிப்பட்ட முகவிலாஸமுள்ளவர்கள் ஒருகாலும் அகாரியத்தில் பிரவேசிக்கமாட்டார்கள்; மேலும் நமக்கின்று நல்லகாலம் வந்திருக்கின்றதுபோல் தோற்றமுண்டாகிறது. ஆகையால் இனி நமக்கு விபத்தில்லையென நினைக்கிறேன்.

சுப்பு:—தர்மி! நீ சொல்வதெல்லாம் உசிதமாகவே இருக்கிறது. ஆனாலும் நாமிப்போது செய்யவேண்டிய காரியம் ஒன்றுண்டு. அதாவது, அந்தப் பெரிய இனிஸ்பெக்டரை நானும் பார்த்திருப்பேன்போல் தோன்றுகிறது. அவரும் நம்மைக்கண்டு கண்ணீர்விட்டதைக்கொண்டு அவர் நமக்குச் சமீபபாத்தியமுள்ளவராக விருக்கவேண்டுமென்று நினைக்

றேன். ஆகையால் அவரை நாமின்னாரென்றறியவேண்டி யது அவசியம். மேலும், கச்சேரி செய்துகொண்டிருந்த சப் மாஜிஸ்டிரேட்டும் நம்மைக்கண்டு மிகவும் வருத்தமடைந் தார்; நீயும் அவரைக்கண்டு துக்கத்தையும் வெட்கத்தையும் பாராட்டினாய்; ஆகையால் நீங்களிருவரும் ஒருவருக்கொரு வர் வெகுநாளாய் சினேகமுடையவர்கள்போல் நான் நினைத் தேன்; யாரவர்? உனக்கு அவர் எவ்விதமான சினேகமுள் ளவர்; இதை நீ சொல்லியே தீரவேண்டும்.

தர்மா:—சுப்பு! இதிலென்ன உனக்கவ்வளவு நிர்ப்பந் தம். அநாதையாய் ஒரு சிறு பெண் இம்மாமிரி ஜெயிலி லிருந்து இப்போது கோர்ட்டில் நிற்கிறாளேயென்று தயாள குண சிரேஷ்டராகிய அந்த மகா புருஷன் என்னைப்பார்த்து அனுதாபப்பட்டிருக்கலாம். பெரிய உத்தியோகத்தி ள்ள சம்பந்தமில்லாத ஒருவர்கூட நம்மிடம் இவ்வளவு அனுதா பம் காட்டுகிறாரே என்று நானும் அனுதாபப்பட்டிருக்லாம். இதிலென்ன, ஒரு விசேஷமுமில்லையே.

சுப்பு:—அச்சமயம் உனக்கு ஒரு அன்யாதிருசமான லஜ்ஜா விசேஷம் உண்டாயிற்றே அதேன்?

தர்மா:—இதென்ன நீ யிப்படி கேட்கிறாய்? நீயுமொரு பெண்பாலல்லவோ? ஸ்திரிகளுக்கு லஜ்ஜையே ஆபரண மென்றல்லவோ சொல்லப்படுகிறது. ஒரு பெரிய உத்யோ கஸ்தருக்கெதிரில்-அதிலும் கச்சேரியில்—ஒரு சிறுபெண்ணா கிய நான் வெட்கப்படுவது உனக்கு ஒரு ஆச்சரியமாய்த் தோன்றக் காரணமில்லை.

சுப்பு.—அம்மா! நீ நன்றாகப்படித்தவள், பேச்சில் கெட் டிக்காரி, நீ எதையும் மாற்றிப்பேசும் சமத்துள்ளவள்,

உன்னோடு பேச என்னால் முடியாது, நீ என்ன சொன்னாலும் என் மனது தெளியவில்லை. நீ சொல்லுகிற மகா புருஷனை நான் பார்த்ததில்லை. அச்சமயம் உங்களிருவரின் கண்களும் பரஸ்பரம் போக்கு வரவு செய்து கொண்டதில் எனக்கு ஒருவிதமான தோற்றம் உண்டாயிருக்கிறது. அது நீ சொல்லும் வார்த்தைகளால் நீங்கவில்லை. நீ கனுவன்றைக்குக் காவேரியில் சென்று காலையலம்பப் போகையில் பார்த்த புருஷமணி இவர்தானென நினைக்கிறேன்.

தர்மா:—(சற்று புன் முருவலுடன்) இதென்ன? புதிதாய் புதிர்போடுகிறாய், உனக்கிதெல்லாம் சொன்னது யார்?

சுப்பு:—எனது அம்மாமி சொன்னாள்.

தர்மா:—அம்மாவா சொன்னாள்! அவள் வாய் ஓட்டை வாயாச்சுதே, (என்று சொல்லிப் புன்சிரிப்புடன் தலைகுனிந்தாள்)

இதைக்கண்ட சுப்பு அவளை இருகரத்தழுவி "குழந்தாய் என்னிடம்கூட நீ இதைச் சொல்ல வெட்கப்படுவாயென்று நான் நினைக்கவில்லை. உனக்கு உடம்புடன்கூடப் பிறந்ததான இந்த லஜ்ஜையே, உன்னை உத்தம ஸ்திரீயாக்கி உன் மனோபீஷ்டங்களை நிறைவேற்றுமென நினைக்கிறேன். இப்படிப்பட்ட பெண்ணைப்பெற்ற தகப்பன் புண்யசாலியென்றாலும், ஏதோ முன்செய்த பாவத்தால் அவர் ஒரு அயோக்ய ஸ்திரீயினிடமகப்பட்டுக்கொண்டு உனதருமையை அறியவில்லை. அதுபோனாலும் உனக்குக் கூடப்பிறந்த தமையனாகிலும் நீ நினைத்தபடி உசிதமான வரனுக்கு உன்னையெப்படியாவது கொடுத்தே தீரவேண்டுமென்று தீவ்ரமாயிருப்பது என்மனதுக்கு ஆஹ்லாதத்தை கொடுக்கின்றது" என்று சொன்னாள்.

இவர்களிப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் வாசலில் ஒரு வண்டிவந்து நின்றது; அதிலிருந்து இருவர் கீழிறங்கினார்கள். இவ்விருஸ்திரீகளும் அவர்களை ஜன்னல் வழியாய் கவனித்தார்கள். தர்மாம்பாளுக்கு உடம்பு பதறிற்று. உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு, கால்கள் தானாக எழுந்திருந்தது. கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகவாரம்பித்தது. உடனே வாசலுக்குவரப் புறப்பட்டாள். எதிரில் வந்த வாலிபனைக் கண்டு கட்டிக்கொண்டு, அண்ணாவென்று கதறினாள். அவனும் இவளைக்கட்டிக்கொண்டு கதறினான். உடனே கூடவிருந்த மற்றொருவர், இவர்களைப் பிரித்துவிட்டு, "என்னடா சுந்தரம், புருஷனாகப் பிறந்த நீ கூட இப்படி அழுகிறாய்? அவள்தான் அபலை, எந்தெந்தயிடத்தில் எவ்வெவ்வித கஷ்டங்களை யனுபவித்தாளோ அழுகிறாள்; துக்கத்தை யடக்கிக்கொள்" என்று சொல்லி; தர்மாம்பாளைப் பார்த்து, "வத்ஸே! தர்மாம்பா! நீகூட இப்படிக்கேவலம் அவிவேகினியாய் கதறுகிறாய், கண்ணைத்துடைத்துக்கொள்" என்று சொன்னார். பிறகு எல்லாரும் முன் இருந்த அறைக்குச் சென்றார்கள்.

தர்மாம்பாள்:—அண்ணா, எங்களை யிப்படி அநாதைகளாய், நினைக்கக்கூடாத கஷ்டங்களுக்கு ஆளாக்கிவிட்டு நீங்களிருவரும் எங்கேயோ போய்விட்டீர்களே, ஐயோ! நாங்கள்பட்ட பாட்டிற்கும் அடைந்த அவமானத்திற்கும் அளவேயில்லை. அதுவும் நாங்கள்தான் என்னசெய்ய முடியும். பிராரப்தபலனை அனுபவிக்காமல் தள்ளினால் விடுமா? அதிருக்கட்டும்; நீங்களிருவரும் அன்றைதினம் இராத்திரி எந்த வண்டியிலேறினீர்கள்? எங்கே போனீர்கள்? இதுவரை இன்றைக்கெப்படி வந்தீர்கள்? உங்கள் சமாசாரத்தை நன்றாய்ச் சொல்லுங்கள்? பிறகு எங்கள் சங்கதியைச் சொல்லுகிறேன்.

சுந்தரம்:—வத்ஸே, தர்மீ! எங்கள் கதை அவ்வளவு அவசியமாய் கேட்கத்தக்கதில்லை; அநாதைகளாயும் அபலைகளாயும் உள்ள நீங்கள்பட்ட கஷ்டங்களைத் தெரிந்துகொள்ள நிரம்ப இச்சையுள்ளவனாயிருக்கிறேன்.

இப்படியிவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அவ்வறையிலிருந்த கடியாரம் 'டங், டங்' என்று அடித்தது. அந்தக்ஷணத்தில் வாசலில் வண்டியிலிருந்து இருவர் இறங்கினார்கள்; அவர்களைப் பார்த்ததும், இவ்வறையிலுள்ள நால்வரும் பிரமித்தார்கள். அவ்விருவரில் ஒருவருக்குச் சுமார் 40-வயதிருக்கலாம். தடித்த சரீரமும் மலர்ந்த முகமும் களங்கமற்ற பார்வையுமுடையவர் அவர். மற்றொருவருக்கு வயது 20, அல்லது 22 இருக்கலாம்; அவருடைய மெலிந்த சரீரம் மெருகிட்ட தங்கத்தைத்தோற்கச்செய்தது. உருண்ட முகமும் கொஞ்சம் ஸங்கோசத்தால் அடங்கிய பார்வையும் கனவிலும் காணமுடியாத ஓர் விசித்ர முகதேஜஸ்ஸும் அவரை மகா உத்தம புருஷரெனச்சொல்கிறது. இவ்வறையில் உள்ள நால்வரும் பிரமம் தெளிந்து எழுந்திருப்பதற்கு முன்னமே வாசலிலிருந்து அவ்விருவரும் அவ்வறையிற் புகுந்தனர்

அவர்களைக்கண்டவுடன், நமது தர்மாம்பாள் பரபரப்புடன் எழுந்திருந்து, தனது கடாக்ஷங்களாகிற நீலோத்பல புஷ்பங்களால் அவ்விருவரில் இளைஞரின் சரீரத்தை யலங்கரித்துக்கொண்டு அவ்வறையின் ஓர்புறத்தில் தலைகுனிந்து நின்றாள். அவளுக்குச் சகாயமாக சுப்புவும்போய் நின்றாள். உள்ளே வந்த இருவரில் இளைஞராகிய உத்தமன், அங்கு நிற்கின்ற எல்லாரையும் ஒருதரம கடாக்ஷித்து "ஆ! என் பிரியஸக, தர்மேச" என்று சொல்லி அவன் கையைப் பிடித்துக்கொண்டு மேல்சொல்ல முடியாமல் நின்றான்.

காமேசவரனும் சற்று நிதானித்து, "என தன்புள்ள தர்ம! உன்னை நான் பார்ப்பேனோவென்று ஏங்கிப்போன என் கண்களுக்கு நீ இன்றைக்கு அமிர்தாஞ்சனமளித்தாய்; இந்த தினமே ஸுதினம், இப்பொழுதுதான் இந்த ஜன்மத்தை ஸபலமென நினைக்கிறேன். வா, எல்லாரு முட்காருவோம்; இவ் இஷ்டஜன ஸமாகம ஸுகத்தை ஸம்பூர்ணமாய் அனுபவிப்போம்" என்று சொல்லவும், தர்மன் சுந்தரத்தைப் பார்த்து, "மித்ர! நான் செய்த குற்றத்தைப்பற்றி மன்னிக்க வேண்டும். தைவஸங்கற்பம் அநேகவிதமாய் மாறி என்னை வெகுவாகக் கஷ்டப்படுத்திவிட்டதனால் அப்படி நான் செய்யும்படி நேர்ந்தது" என்று சொன்னான், சுந்தரம் "வயஸ்ய! உன் குடும்பத்திற்குண்டான ஒருவித கிலேசத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டதும் என் மனம் பட்டபாட்டிற்களவே யில்லை. எல்லாம் ஈசன் செயல்; நாமென்ன செய்யலாம்! என் அருமைத் தங்கையாகிய தர்மாம்பாளை உன்னைத்தவிர மற்றொருவன் தொடாமலிருக்க நாங்கள் செய்த ஏற்பாட்டை ஒருவாறாய் பகவான் நிறைவேற்றினாரென்றாலும் அதனால் ஒவ்வொருவருக்கும் பிரிந்து உண்டாகிய கஷ்டத்தைச் சொல்லி முடியாது. வா எல்லோரும் உட்கார்ந்து அவரவர்கள் சரித்திரத்தைச் சொல்லிக்கொள்வோம்" என உடனே எல்லோரும் ஜமக்காளத்திலுட்கார்ந்தார்கள்.

உடனே காமேசவரனும், சுந்தரமும், தர்மனுடன்கூட வந்த பெரியவனைப் பார்த்து, அஞ்சலிபந்தத்துடன் "ஐயா! தாங்கள் இன்று எங்களுக்குச் செய்த உபகாரத்தால் நாங்க ளெல்லாரும் ஒன்று சேர்ந்து ஆனந்திக்கிறோம்; தங்களைப் பலதடவை பார்த்திருப்போமென்று மாத்திரம் அறிகிறோம்; ஆனால் தங்களை இன்னாரென்று தெரிந்துகொள்ளச் சக்தியற்றவர்களா யிருக்கிறோம்; இக்குற்றத்தை மன்னித்து தாங்கள்

தங்களை பெங்களுக்குத் தெரியப்படுத்தி, அவ்வளவாக்கதையும் நாங்கள் அநுபவிக்கச் செய்யவேண்டும்' எனப் பிரார்த்தித்தான். அதற்கவர் "நீங்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சமாசாரங்களைச் சொல்லி முடித்தபின், என் சமாசாரத்தையும் நான் சொல்லுகிறேன்" என்றார். பிறகு காமேசுவரன் சுப்புவைப் பார்த்து "உங்கள் சமாசாரத்தைச் சொல்"லென அதற்கவள், சரியென்று ஒப்புக்கொண்டு, தர்மாம்பாளும் தானும், மதுரை பிளாட்பாரத்தில் சுற்றிச்சுற்றியும் ஒருவரையும் காணாமல் கடைசியாய் அவர்கள் தாமாகவே வந்துவிடுவார்களென்று நினைத்து வண்டியேறினதும், அது தூத்துக்குடியிற் கொண்டுவந்து விட்டதையும், தூத்துக்குடி ஸ்டேஷன்மாஸ்டர் நீங்கள் தவறி வந்துவிட்டபடியால் மறுதினம் ரயிலில் திரும்பிப் போகலாமென்று சொன்னதின்பேரில் சமையல்செய்து சாப்பிடவேண்டியதற்காக வக்கீல் பாரதி ஐயர் வீடு சென்றதும், இராத்திரி திருட்டுப்போனதும், போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் தங்களை ஸப்ஜெயிலில் அடைத்து வைத்ததும், அவருடைய கெட்ட எண்ணமும், கடைசியாய் பெரிய இன்ஸ்பெக்டரால் சுகமடைந்ததும், கோர்ட்டில் விசாரணையானதும், இந்த பங்களாவுக்குப் பெரிய இன்ஸ்பெக்டரால் அனுப்பப்பட்டுவந்ததும் ஆகிய விருத்தாந்தங்களை ஒன்றுகூட விடாமற் சொன்னாள். இதைக்கேட்டு எல்லோரும் வருத்தப்பட்டார்களென்றாலும் தர்மனும் சுந்தரமும் ஒரு முகூர்த்தகாலம் பிரக்ஞையற்றவரானார்கள். இதைப்பார்த்த தர்மாம்பாளும் கண்ணீருதிர்த்தாள். அப்பொழுது அந்தப் பெரியவர் எல்லாருக்கும் சமாதானம் செய்து தர்மாம்பாளையும் சுப்புவையும் உட்காரச் சொல்லி வற்புறுத்தினார். அதற்கு சுப்பு, தர்மாம்பாள் முகத்தைப் பார்த்துவிட்டு, நீங்களெல்லாம் இருக்கும்

டத்தில் நாங்க ளுட்காருவது அழகல்ல; அதிலும் இங்கிருக்கிறவர்களில் ஒருவரை யுத்தேசித்து எவ்வகையிலும் தர்மாமபாள் உட்காரமாட்டாள். நானிவ்விடமில்லாத பக்ஷத்தில் இந்த இடத்திற்கூட நிற்கமாட்டாள். ஆகையால் எங்களை நிர்ப்பந்திக்க வேண்டாம்; நாங்கள் நிற்பதுதான் எங்களுக்கழகு" என்று சொல்லிவிட்டுக் காமேசுவரனைப் பார்த்து, நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்தபிறகு என்ன செய்தீர்கள்: இவ்விடம் எப்படி வந்தீர்கள்? என்றும் கேட்டாள்.

காமேசுவ:—நாங்கள் அன்று இரவில் மதுரை ரெயில் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் தர்மன் வந்திருப்பானென நினைத்துத் தெற்கும் வடக்குமாக 4,5, தரம் போய் வந்தோம். பிறகு ஸ்டேஷனுக்கு வெளிவிராண்டாவி லிருப்பானோ வென்று வெளியிற்போய்ப் பார்த்தோம்; பிறகு வெயிட்டிங் ரூமிலிருப்பானோவென்று நினைத்து அங்குபோய்ப் பார்த்தோம்; அவ்விடத்திலும் காணப்படவில்லை. பிறகு மறுபடி பிளாட்பாரம் வந்து உங்களைத் தேடினதில் காணாமல் சற்று, கலங்கினோம். அதற்குள் சுந்தரம், நாம் சொன்னபடி அவர்கள் ஸ்திரீகளின் வண்டியில் ஏறியிருப்பார்களென்றுசொல்ல, நாங்கள் உடனே அந்த வண்டியினருகேபோய்ப் பார்த்தோம்: உங்களைப்போல் இருவர் அங்கே சேர்ந்து உட்கார்ந்திருப்பதைக் கண்டு, கூப்பிடுவதற்குமுன் வண்டி நகர ஆரம்பித்துவிட்டது: உடனே நாங்கள் ஒரு வண்டியிலேறிக்கொண்டோம்; திருச்சி ஜங்ஷனில் இரவு 3-மணிக்கு இறங்கிப் பெண்கள் வண்டியில் பார்த்ததில் அங்கே ஒருவரையும் காணாவில்லை, நீங்கள் இறங்கி எங்களைத் தேடிக்கொண்டு போயிருப்பீர்களென நினைத்து ஸ்டேஷனுக்கு வெளியே வந்து பார்த்தும் காணாமல், நீங்கள் இடந்தெரிந்தவர்களாகையால் தாங்களாகவே வண்டியமர்த்திக்கொண்டு போயிருப்பீர்களென

நிர்ணயித்து நாங்களும் வீட்டிற்குவர, அங்கு உங்களைக் காணாததோடு இந்த விஷயத்தைஎங்களால் கேள்விப்பட்ட ஜானகிக்கு பதில் சொல்லமுடியவில்லை. உடனே அடுத்த டிரெயினில், சுந்தரம் மதுரைக்குவந்து பிளாட்பாரத்தில் விசாரித்ததில், ஒரு கைம்பெண்ணும் ஒரு சிறு பெண்ணும் பிளாட்பாரத்தில் 'அண்ணா அண்ணா' வென்று கூவிக்கொண்டிருந்ததாயும் கடைசியில் அவர்களை வண்டியேற்றிவிட்டதாயும் சமாசாரம் அறிந்து வந்தான். இதைக்கேட்ட ஜானகிக்கு, அழுது முகமெல்லாம் வீங்கிப்போய்விட்டது. உடனே பாமாவும் அம்மாமியும் வந்தால், நாங்கள் தர்மாம்பாளைத் தேடிப்போயிருப்பதாய்ச்சொல்லி கவலைப்படாமலிருக்கும்படி ஜானகிக்குச் சொல்லிவிட்டு, நாங்களிருவரும் தர்மனைப் பார்த்துவிட்டுப்போகக்கருதி ரயிலேறிக் குளித்தலை போனேம். அங்கே அவனுடைய வீடு பூட்டியில் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து, விசாரித்தோம்; ஒன்றும் புலப்படவில்லை, பிறகு அவர்களுடைய குமாஸ்தா கிருஷ்ண ஐயரைக் கண்டு கேட்டதில் அவர். கோபாலசாமி ஐயருடைய சகல சொத்துக்களும் ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றனவென்றும், அவருடைய ஸம்ஸாரம் ஸாவித்ரியம்மாளும் தர்மனும் நேற்றுத்தான் கோயம்புத்தூரிலிருந்து இவ்விடம் வந்தார்களென்றும், தங்க இடமில்லாமல், காலையும் பாராமல், யாரோ கொத்துக்காரன் ஜாகையில் வசிக்கையில், மாலை என்னைக் கண்டு தர்மன் பேசிக்கொண்டிருக்கையில், அவன் தகப்பனர் திருநெல்வேலியில் ஜெயிலுக்குப் போகும் தருவாயிலிருப்பதால் உடனே வரவேண்டுமென்று கிடைத்த தந்தியால் தர்மன் திருநெல்வேலிக்குப் போயிருக்கிறனென்றும். அவன் போகையில் அவனால் ஒப்புவிக்கப்பட்ட அவன் தாயாரை பாதுகாக்கவா நான் அனுப்பின மனிதன் அவனிட

இல்லையென்று வந்துவிட்டதாயும், மறுபடி நானே நேரில்
காலையிலவ்விடம்போய்ப்பார்த்ததில் அவளைக் காணவில்லை.
பிறகு எவ்வளவு தேடியும் ஒரு ஸமாசாரமும் தெரியவில்லை
யென்றும், பரமயோக்கியரும், ஸத்யந் தவறாதவருமான
கோபாலசாமி ஐயருக்கு இப்படிப்பட்ட கஷ்டம் வரக்கூடா
தென்றும், அவர்களின் குடும்பத்திற்காக மிகவும் துக்கிக்
கிறேனென்றும், சொன்னார்:—

இதைக்கேட்டதும் தர்மன் ஹா! வென்று கீழேவிழுந்து
'ஐயோ என் தாயாரையும் நானிழக்க நேரிட்டதே; அன்றி
ரவு அவளை யார் என்ன செய்தார்களோ தெரியவில்லையே'
என்று கதற, அதற்குக் காமேசுவரன் 'ஸகே, தர்ம! அவசரப்
படாதே, மேலே நான் சொல்வதையும் கவனமாய்க்கேட்டுவா,'
என ஆற்றி மறுபடி சொல்லத் தொடங்கினான்.

பிறகு நாங்கள் திருநெல்வேலி போய் தர்மனைப் பார்
த்துவரவேண்டியது என்று தீர்மானம் செய்துகொண்டோம்.
தர்மாம்பாள் சுப்புவுடன் ஒருகால் மதுரையிலேயே தங்கி
விட்டாளோவென்று நினைத்து மறுபடி மதுரைபோனோம்.
அங்கே புருஷோத்தம ஐயர் வீட்டின் சங்கதிகளை விசாரித்த
தில் கலியாணங்கள் இரண்டும் நடந்தேறிவிட்டனவென்றும்,
வீட்டில் சண்டையும் குழப்பமுமாயிருக்கிறதென்றும், தர்மா
ம்பாளையும் சுந்தரத்தையும் எப்படியும் கண்டுபிடித்துக் கொ
ண்டுவரத்திருச்சிக்கு மனுஷியாளை யனுப்பியிருக்கிறார்களெ
ன்றும் தெரிந்துகொண்டு, இவர்கள் அங்கில்லையென்று தீர்
மானித்து, திருநெல்வேலிக்கு வந்தோம். அங்கே யெங்க
ளுக்கு யாதொரு தகவலும் தெரியவில்லை. நாங்கள் அங்கி
ருந்த ஸ்வதேசமித்திரன் ரிபோர்டர், சாமிநாதய்யரிடம் எங்க
ளுடைய சகல சங்கதிகளும் சொல்லி, தர்மாம்பாளைப் பற்றி

யாவது, தர்மனைப்பற்றியாவது சமாசாரம் தெரிந்தால் உடனே தந்தி கொடுக்கும்படி சொல்லிவிட்டு மறுபடி திருச்சிக்கு வந்தோம். அதற்குள் மாசிமீ 5-தேதியாய்விட்டது. வல்லப சாஸ்திரிகளும் அவர் தர்மபத்னியும் மறுநாள் ஊருக்குவந்து ஜானகியால் நடந்த விருத்தாந்தங்களைத் தெரிந்துகொண்டு இருவருமாய் தர்மாம்பாளைத்தேடப்போயிருக்கிறார்களெனத் தெரிந்தது. உடனே நான் எனது கிருகத்திற்குப் போனேன்; என்பேருக்கு வந்திருந்த அநேக லெட்டர்களை என் பிதா என் கையில் கொடுத்து இத்தனைநாள் அலைந்தும் ஒருவரையும் கண்டுபிடிக்காமல் வந்ததற்கு என்னைக் கோபித்துக்கொண்டார்; நானெப்படியும் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்காமல் விடுகிறதில்லையென அவருக்குப் பிரதிக்ஞை செய்துவிட்டு லெட்டர்களையெல்லாம் பார்த்தேன்: அப்போது அவைகளிலொன்று கோபாலசாமியய்யர் எழுதிய லெட்டராகவிருந்தது. என்பேருக்கு வந்திருந்த மற்ற லெட்டர்களையெல்லாம் அப்படியே எறிந்துவிட்டு முற்கூறிய கோபாலசாமியையருடைய லெட்டரைப் பிரித்துப்படித்தேன். அதைப் படித்தவுடன் என் மனம் பட்ட தாபத்தை இந்த ஒரு நாவால் சொல்ல முடியாது:—

இதைக்கேட்ட தர்மன் அழுதுகொண்டே காமேசா! 'அந்த லெட்டர் இப்போது உன்கையிலிருக்கிறதா' என்று கேட்க, அதற்கு காமேசுவரன், "அதைக் கொண்டுவராமலே அதைப்பற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபிப்பேனோ? அவ்வளவு அசடா நான்?" என்று சொல்லித் தன் பெட்டியிலிருந்து அந்த லெட்டரை யெடுத்து தர்மன் கையிற்கொடுத்தான். அங்குள்ளவர்களெல்லாரும், ஏகமனதாய் அதைக்கேட்பதில் ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள், தர்மன் அதைப் பின்வருமாறு படித்தான்.

## கடிதம்

சி. காமேசனுக்கு, காமேசன் கிருபையால் ஸகலாபீஷ்டமுண்டாகத்தக்க அநேக ஆசீர்வாதம். க்ஷேமம். எனது ஸர்வ சொத்துக்களும் கடன்காரர்களால் ஜப்திசெய்யப்பட்டிருப்பதும், நான் தற்காலம் அவ்விடம் வந்தால் அவமானம் ஏற்படுமென்பதும் உனக்குத் தெரிந்திருக்கலாம்; என் ஸம்ஸாரம் ஸாவித்ரி யிருந்த, அதாவது சொல்லிமுடியாத கஷ்டதசையிலிருந்த காலத்தில், நான் தற்செயலாய் அவள் காவேரியில் விழும் தருணத்தில் சந்தித்தேன். இப்போது இருவரும் புதுச்சேரியில் சுகமாய் வசிக்கிறோம். நான் இவ்விடத்தில் பட்லர் அண்டு கோ. வில் மீ 1-க்கு ரூ 30-க்கு ஒருவேலை பார்த்து தற்காலம் ஜீவனம்செய்து வருகிறேன்: இச்செய்தியைக் குழந்தை தர்மனுக்குச் சொல்லி அவன் வருத்தப்படாமலிருக்கும்படி நீ சமாதானம் செய்யவேண்டியது. அவனை, நம் ஜில்லா கலெக்டரைப் பார்த்து சீக்கிரத்தில் ஒரு வேலை ஒப்புக்கொள்ளும்படி சொல்லவேண்டியது. மற்றப்படி க்ஷேமங்களுக்கு எழுதவும்.

| | | |
|---|---|---|
| மாசி மீ 1-உ. புதுச்சேரி. | } | உன்னிடத்தில் நம்பிக்கையுள்ள கோபாலசாமி ஐயர். |

இதைப் படித்த தர்மனுக்குக் கண்களிலிருந்து அருவி போல் ஜலம் பெருகிற்று. "குமாஸ்தா கிருஷ்ணையர் என் தாயாரைக் காணவில்லையென்று சொன்னதற்கும், அவள் சொல்லமுடியாத கஷ்டத்தால் காவேரியில் விழும் தருணத்தில் அவளைக் கண்டதாக என் பிதா எழுதுவதற்கும் சரியான பொருத்தமிருக்கிறது. அவள் எவ்வித கஷ்டத்தை எவ்விடத்தில் எப்படி அனுபவித்தாளோ தெரியவில்லையே," என்று சொல்லித் தர்மன் அழுகையில்; காமேசுவரன் 'தர்மா!

ஏன் வருந்துகிறாய்? இப்பொழுது அவர்களிருவரும் சௌக்கியமாயிருப்பதாய்த் தெரிகையில் சந்தோஷப்படாமல், நடந்துபோன சங்கதியைக் குறித்து ஏன் வியசனிக்கிறாய்; பாக்கிக் கதையைக் கேள்" என்று அவனது துக்கத்தை ஆற்றி மறுபடியும் சொல்லுகிறான்.

பிறகு நான் புத்திக்கலக்கத்துடன் சாயந்திரம் உட்கார்ந்திருக்கையில் திருநெல்வேலியிலிருந்து, முன் சொன்னபோர்ட்டர் சாமிநாதய்யரிடமிருந்து தந்தி வந்தது. அதில் உடனே வரும்படி மாத்திரம் எழுதியிருந்தது. இதைச் சுந்தரத்திற்குக்காட்டி, இருவருமாய் இராத்திரி வண்டியிலேறி மறுநாள் திருநெல்வேலிக்கு வந்து சாமிநாதய்யரைப் பார்த்தோம். அவர் அகப்படவில்லை. சமீபத்திலிருந்த வேறொரு ஊருக்குப் போயிருந்ததாய்த் தெரிய வந்தது. நாங்களிருவரும் அவர் வரவை எதிர் பார்த்துக்கொண்டு இரண்டு நாள் அங்கேயே தாமதித்தோம். பிறகு அவரும் வந்தார். சங்கதி விசாரிக்க, அவர் "திருநெல்வேலியில் கோபாலசாமி அய்யர் என்று ஒருவரும் ஜெயிலுக்குப் போகவில்லை யென்றும், அவருடைய பிள்ளை அவரை மீட்பதற்காக வந்தவர், தனது தகப்பனார் அகப்படாதபடியால் வேறு வேலையாய்ப் போய் விட்டாரென்றும் சொல்லி, தூத்துக்குடியில் வக்கீல் பசுபதி அய்யர் வீட்டில் நடந்த களவில் வாஸ்தவத்தில் கொஞ்சமும் சம்பந்தப்படாத சுமார் 30 வயதுள்ள ஒரு கைம்பெண்ணும் 12 வயதுள்ள ஒரு கன்னிப்பெண்ணும் ஜெயிலில் அடைபட்டிருக்கிறார்கள், இச்சமாசாரம் எனக்கு 1—5 நாள் முந்தியே தெரியவந்தது. அவர்கள் அநேகமாய் உங்களால் தேடப்படுகிற ஸ்திரீகளாக இருக்கலாமென்று நான் நினைத்தேன். ஆனாலும் உடனே உங்களுக்குத் தெரிவிக்க என்னுடைய வேலைத்தொந்தரவால் முடியவில்லை. நீங்கள் தூத்

துக்குடி போய் விசாரியுங்கள். அங்கே புதிதாய் தர்மராஜ ஐயரென்று ஒரு ஸப் மாஜிஸ்டிரேட் வந்து 10 நாட்களாகின்றதாம்; அதற்குள் அவருடைய குணங்களையும், நுட்பமான புத்தி சாதுர்யத்தையும் அவ்வூர் ஜனங்கள் புகழ்கின்றனர். மேலும் இவ்வூரில் ஒரு மாதம் ஸ்பெஷல் டியூடியிலிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடராமய்யர் என்னும் பிரபு இப்பொழுது அந்த ஊரில் சீப் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கின்றார்: ஆகையால் அவ்விருவரையும் போய்ப் பாருங்கள், உங்கள் காரியம் அனுகூலமாகும்.' என்று சொன்னார். நாங்களுடனே அவருக்கு வந்தனமளித்துவிட்டு, இவ்விடம் வருவதற்காக நேற்றிரவு ரயிலடிக்கு வந்தோம். வண்டி தவறிவிட்டது. இன்று காலை பத்து மணிக்கு வண்டியேறி நாலு மணிக்கு இவ்விடம் வந்து சேர்ந்து ரயில்வே ஸ்டேஷனுக்குக் கீழ் புறம் ஒரு புளிய மரத்தடியில் நாங்கள் உட்கார்ந்தோம். உடனே ஒரு சேவகன் நியூஸென்ஸ் கேஸில் சார்ஜ் செய்தான். பிறகு எங்களுடைய வேண்டுகோளின் பேரில் உடனே ஸப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆஜர் செய்தான். பிறகெங்களிருவருக்கும் அரை ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட, அதைச் செலுத்திவிட்டு, இந்த மகானுபாவனுடைய கிருபையால் இங்கு வந்து சேர்ந்து, இஷ்டஜன ஸமாகமத்தால் ஆனந்த பரிதர்களாகின்றோம். திருநெல்வேலியில் ரிபோர்ட்டர் சாமிநையர் சொன்ன ஸப்மாஜிஸ்டிரேட்டும், போலீஸ் இன்ஸ்பெக்டரவர்களும் நீங்களிருவரும் தானென நான் ஊகிக்கிறேன்"—என்று சொல்லி முடித்தான்.

அதற்கு அந்த மகாபிரபுவும் 'ஆம்! நான்தான் அந்த வெங்கடராமையன், என்று விடையளித்தார். இதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த தர்மாம்பாள் 'ஐயோ! என் பொருட்டு இவர்கள் இவ்வாறு கஷ்டப்பட்டார்களே, இவர்

களுக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன்'' என்று குப்புவிடம் ரகசியமாய்ச் சொல்லி அழுதாள்.

பிறகு தர்மன் "என்னுடைய கதை மிகுந்த ஆபாசமானபடியால் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்" என்று சொல்லி, அவன் தை மீ 29 தேதி குளித்தலையில் வீட்டில் உட்கார்ந்திருக்கையில் பட்டணத்திலிருந்து, கேஸ் தோற்றுப்போன சமாசாரமுள்ள லெட்டர் கிடைத்ததும், ஈரோட்டிலிருந்து தந்தி வந்ததும், கிருஷ்ணஸ்வாமி அய்யருக்குக் கூடவர முடியாமல் ஆபத்து நேர்ந்ததும், தான் ஈரோட்டுக்குப் போனதும், அவ்விடத்தில் ஸாவித்ரி இருந்த ஸ்திதியும், ரத்னவல்லி தன்னை நிர்ப்பந்தித்ததும், தந்திரமாய் அதைவிட்டுப் புறப்பட்டு ஸாவித்ரியுடன் குளித்தலைக்கு வந்ததும், அங்கே தங்க இடமில்லாமல் தவித்ததும், கடைசியில் ஒரு குடிசையிற் றங்கினதும், சாயந்திரம் கிடைத்த தந்தியால் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்ததும் ஆகிய சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லிவிட்டு, மறுபடியும் சொல்லுகிறான்.

"எனக்குக் கிடைத்த தந்தியிற் குறிப்பிட்டபடி, நெல்லையப்பன்கோவில் வடக்கு வீதி முழுமையும் விசாரித்து ஒரு தகவலும் தெரியவில்லை. கடைசியில் எனக்கு வந்த தந்தி என் தாயாரை விட்டு என்னைப் பிரிக்கவேண்டிப் ப்ரயத்னித்தார் யாரோ அனுப்பிய கற்பனைத் தந்தியென இப்பொழுது தெரிகிறது. பிறகு ராத்திரி ஒரு கிளப்பில் சாப்பிடப்போனேன். அப்பொழுது அந்த வேளைக்கு நான் மதுரை ரெயில் ஸ்டேஷனி லிருக்கவேண்டியிருக்க, இப்படி நான் இவ்விடத்தில் அல்லாடும்படி நேரிட்டதே; என் வாக்குப் பொய்யாகவல்லவா ஆய்விட்டது, என்ற துக்கத்துடன் சாப்பிட உட்கார்ந்தேன். அங்கே, நான் F. A. கிளாஸில் படிக்கும்போது அந்த காலே

ஜில் B. A. கிளாஸில் படித்துக் கொண்டிருந்த ஆத்மனுதாசன் என்பவன் என்னுடன் கூடச்சாப்பிட்டான். அவன் அங்கே கலெக்டராபீஸில் ஹெட் கிளர்க்கு. அவனோடு பேசிக்கொண்டிருக்கையில், அவன் என்னைப்பார்த்து "தர்மா! திருச்சி கலெக்டர் உன் விஷயமாய் எழுதியிருந்ததைப் பார்த்து, இந்த ஜில்லா கலெக்டர், உன்னைப் பரீக்ஷார்த்தமாய் ஸப் மாஜிஸ்டிரேட்டாக நியமித்து, தற்காலம் தூத்துக்குடியில் போட்டிருக்கிறார். உனக்கு ஆர்டர் எழுதித் தயாராக இருக்கிறது. நாளையதினம் தபாலில் போடுவார்கள். நீ நாளையதினம் காலை கலெக்டரை நேரில் பார்த்தால் ஆர்டரைக் கையில் கொடுப்பார். வேலையை உடனே ஒப்புக்கொள்ளலாம். இரண்டு மாதம் சீக்காயிருந்த தூத்துக்குடி சப்மாஜிஸ்டிரேட் இறந்து போய் ஒரு மாதமாயும் இதுவரை ஒருவரையும் நியமிக்காமல் வேலை வெகுவாக பாக்கி யிருக்கின்றது. நீ சீக்கிரம் போய் வேலையை ஒப்புக்கொள்' என்று சொன்னான்,

அதைக்கேட்ட நான், எனது தற்கால குடும்ப ஸ்திதிக்கு நான் வேலையை ஒப்புக்கொண்டால்தான் ஜீவிக்கலாமென்று நினைத்து, காலமே கலெக்டரைப்பார்த்து சன்னத்து வாங்கிக்கொண்டு, அதற்கு மறுநாள் முதல் இவ்விடத்தில் வேலைபார்த்து வருகிறேன். பிறகு இந்த பங்களாவை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு ஒரு பரிசாரகனையும், ஒரு வேலைக்காரனையும் வைத்துக்கொண்டு காலங்கழிக்கிறேன். இத்தனை நாளாக மாதாபிதாக்களின் வாஸஸ்தானம், க்ஷேம சமாசாரம் இவைகளொன்றும் தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கையில், ஹே மித்ர! உன்னால் அவர்களுடைய க்ஷேம சமாசாரத்தையும் அறிந்தேன். உங்கள் எல்லோரையும் கண்டேன். ஆனந்தங்கொண்டேன்" என்று முடித்தான்.

உடனே இனிஸ்பெக்டர் வெங்கடராமய்யர் சொல்லுகிறார். "என் கதையையும் கேளுங்கள், நானிருப்பது வடபாதிமங்கலம்; மங்களம்மாமி கௌரியம்மாள் என் தங்கைதான். நான் 19-வது வயதில் பீ, ஏ, பரீக்ஷைக்குப் போனேன்; அது தவறிவிட்டது. அதனால் என் தாயார் அதிகமாய் கோபித்துக்கொண்டாள் அப்போது என் பிதா இறந்துபோய் 8-மாசமாயிருந்தது. தாயாருடைய கோபத்தை சகிக்கமாட்டாமல் ஓடிப்போய்விட்டேன்.

அப்போது என் தம்பி சிவராமனுக்கு வயது 16. என் தங்கை கௌரிக்கு வயது 13. அவள் அப்போது புஷ்பவதியாகவில்லை; நான் ஓடிப்போய் ஹைதராபாத்தில் படித்து மறுபடி பீ, ஏ, பாஸ்பண்ணி அவ்விடத்திலேயே போலீஸ் டிபார்ட்மெண்டில் சுமார் 18 வருஷகாலம் வேலையாயிருந்தேன்; அங்கேயே எனக்குக் கலியாணமாயிற்றென்றாலும் இதுவரையில் எனக்கு சந்ததியுமுண்டாகவில்லை. இரண்டு வருஷங்களுக்குமுன் நமது ஜன்மதேசத்தில் கொஞ்சநாள் வசிக்கவேண்டுமென நினைத்து ஹைதராபாத் ஸம்ஸ்தானத்தின் சர்வீஸை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு மாற்றிக்கொண்டு கஞ்சம் ஜில்லாவில ரஸல்கொண்டாவில் போலீஸ் இனிஸ்பெக்டராக 6-மாசகாலமிருந்தேன். பிறகு கிருஷ்ணா ஜில்லாவுக்கு வந்தேன்; பிறகு வட ஆற்காடு ஜில்லாவிற்கு வந்து இப்போது சேலத்தில் மாற்றப்பட்டு, திருநெல்வேலியில ஸ்பெஷல் டியூடியில் ஒருமாதமிருந்து இப்போதுதான் ஒரு வாரமாய் இந்த ஊருக்கு மாற்றப்பட்டிருக்கிறேன்; இன்னமும் என் ஸம்ஸாரம் சேலத்திற்றானிருக்கிறாள்; இந்த தர்மராஜய்யர் என்னை நிஷ்காரணமாகவே நேசித்து என்னைத் தன்னுடனிந்த கட்டத்தில் இருக்க வேண்டிக்கொண்டார். அவருடைய குணங்களுக்கு ஆசைப்பட்டு அவருடனிருக்கச்

சம்பதித்தேன். இந்தக்ஷணம் வரையில் நானுயிருடனிருப்பது எனது மாதாவுக்காவது தம்பி தங்கைகளுக்காவது தெரியாது. இப்போது உங்களைக்கொண்டு நான் என்னை வெளிப்படுத்திக் கொண்டேன்" என்று சொன்னார்.

இதைக்கேட்ட சுப்பு அண்ணா திருவையாற்றில் உங்கள் சிறியதாயார் மங்களம் என்று ஒருத்தி யிருந்தாளே தங்களுக்குத் தெரியுமா?

வெங்க:—தெரியும் அவளுக்கு இரண்டு பெண்களும் ஒரு பிள்ளையுமிருந்ததே.

சுப்பு:—இருந்தது வாஸ்தவந்தான்; சின்னப் பெண்ணாகிய நானொருவளே இப்பொழுது மிச்சம், மற்றபேர்கள் இல்லை.

வெங்க :—அப்படியா! உனக்கேதாவது சந்ததிகளுண்டா? நீ எவ்விடத்தில் வாழ்க்கைப்பட்டவள், நான் உன்னை 7-அல்லது 8-வயதில் பார்த்திருப்பேன், இப்போது நீ வேறுவிதமாய் இருக்கிறாய்.

சுப்பு:—எனக்கொரு பையனிருக்கிறான், அவன் மதுரையில் ஐந்தாவது பாரத்திற் படிக்கிறான்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் வாசலில், வண்டியிலிருந்து இறங்கி இரண்டுபேர் தம்பதிகளாக உள்ளே வந்தார்கள். அவர்கள் உள்ளே வந்ததும் அந்த அம்மாள் தர்மாம்பாளைக் கட்டிக்கொண்டு தேம்பித்தேம்பி யழுதுவிட்டு, மற்றவர்களைப் பார்த்ததில் பரமானந்தத்தை யடைந்தாள். சுந்தரமூர் தர்மாம்பாளும் புதிதாய்வந்த புருஷ ஸ்ரேஷ்டருக்கு நமஸ்கரித்தார்கள். தர்மன் எழுந்திருந்து அவ்விருவருக்கும் நல்வரவுகூறி உட்காரவைத்து வெங்கடராமய்யரைப் பார்த்து "ஸார், இந்த அம்மாள் தங்கள் தங்கை கௌரி. இந்த மகா

த்மா அந்த அம்மாளுக்கு பர்த்தா இவ்விருவரின் குணங்களும் வாக்குக்கெட்டாதவை" என்று சொல்ல, கௌரியம்மாள் முன்பின் அறியமாட்டாமல் விழித்தாள். உடனே தர்மன் விவரஞ் சொல்ல, கௌரி கண்ணீருடன் தமையனுக்கு நமஸ்கரித்தாள், வல்லப சாஸ்திரிகளுக்கு எல்லாரும் தங்கள் தங்கள் விருத்தாந்தத்தைச் சுருக்கமாய்ச் சொல்லி, அவரிங்குவந்த காரணத்தைக் கேட்டார்கள்.

வல்லப சாஸ்திரிகள்:—நான் உங்களைப் பலவிடங்களில் தேடிவிட்டு நேற்று ஊருக்கு வந்து விசாரித்ததில் திருநெல்வேலி பேபர் ரிபோர்டரிடமிருந்து சமாசாரம்வந்தது, காவேசுவரன் அவ்விடம் போயிருக்கிறனென்று அவன் தகப்பனர் சொல்லக்கேட்டு நேற்று ராத்திரி திருநெல்வேலி போனேன்; அவ்விடத்தில் பேபர் ரிபோர்டர் சாமிநாதய்யர் தூத்துக்குடி ஸப்-மேஜிஸ்டிரேட் வீட்டுக்குப்போய் விசாரித்தால் தெரியுமென்று சொல்ல, இன்றைக்கு பத்தியானம் புறப்பட்டு தூத்துகுடிக்கு ௫-மணிக்கு வந்து இந்த பங்களாவை விசாரித்துக்கொண்டு இங்கு வந்தேன்; பார்க்கவேண்டியவர்களெல்லாரையும் பார்த்தேன். 20 வருஷமாய் தேசாந்திரம் ஓடிப்போன மைத்துனனையும் பார்த்தேன், என்றார்.

இப்படி எல்லாரும் பரஸ்பரம் இஷ்டயோகமத்தால் பேராநந்தத்தை யடைந்து வெகுநேரம் வரையில் பேசிக்கொண்டிருந்து, எழுந்திருந்து ஸ்நானம் முதலானது செய்து, எல்லாரும் சாப்பிட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் அன்றிரவு அடைந்த ஆனந்தத்திற்கு பிரம்மானந்தம்கூட நிகராகாதெனச் சொல்லலாம்.

# பதினெட்டாம் ஆச்வாஸம்.

## துர்ஜன சிக்ஷணம் I.

மதுரையில் புருஷோத்தம ஐயர் ஓரறையில் நாற்காலியில் சார்ந்துகொண்டிருக்கிறார். அவர் முகம், வெய்யலில் போடப்பட்ட செந்தாமரைபோல் வாட்டமுற்றிருந்தது. காலமே மணி 7-அடித்தது. வேலைக்காரன் இவருடைய காலண்டையில் நின்று காலைக் காரியங்களுக்கு எழுந்திருக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தான். புருஷோத்தம ஐயர் அவனுக்கு. இன்னம் ஒரு மணி கழிந்த பின் கூப்பிடு, என்று கட்டளையிட்டனுப்பிவிட்டு ஆராத்துபரத்தைக் காட்டும் முகத்துடன் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

"ஐயோ! களங்கமற்ற நமது வம்சத்தை இந்தப்பாவியின் சம்பந்தத்தால் அழியாத அபகீர்த்தியில் மூழ்கச்செய்தேன், அந்த பாவிப்பயல் இப்படி யஜமான துரோகியென்று அறிய, எனக்குச் சாமர்த்தியமில்லாமற் போயிற்றே. இவளுடைய பவுன் மாலையை அந்தப் பாவிப்பயல்தான் கொண்டுபோய் விற்றுச் சாப்பிட்டிருக்கவேண்டும்; இனி நாம் எவ்வித பரிகாரம் செய்து நமது குலத்தை நரகத்திலிருந்து உத்தாரணம் செய்யலாம், செய், இந்தப் பாவியை இவ்வீட்டைவிட்டுத்துரத்தி, இந்தப் பயலுக்கும் தக்க சிக்ஷை ஏற்படுத்தாமலிருக்கலாகாது; அல்லது நாமிந்த வீட்டைவிட்டுப் போய்விடவேண்டும். ஹா! இதென்ன யோசனை? நமது சொத்தை ஆள திவ்யஸற்குணம் நிறைந்த புத்திரனும், நமது வாத்ஸல்யத்தைக் காட்ட ஒரு அபூர்வமான பெண்ணுமிருக்கையில் நாமிந்த வீட்டைவிட்டுப் போவது மிகவும் உசிதப்பிசகு,

# எட்டாவது ஆச்வாஸம்.

## அநபீஷ்ட சிரவணம்.

காலையில் மணி 8 ஆயிற்று. திருச்சிறுப்பள்ளியில் ஒருமாளிகையின் மேல்மாடியில் ஓரறையில் ஒரு சக்கர மேஜையின் நாற்புரங்களிலும் நான்கு நற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஒன்றில் நமது தர்மாம்பாள் உட்கார்ந்து கொண்டு ஏதோ ஒரு ஸம்ஸ்கிருதப் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். திறக்கப்பட்டிருந்த ஜன்னலின் வழியாய் குளிர்ந்த காற்று தேகத்துக்கு ஹிதமாக வீசிக்கொண்டிருந்தது. அதனாலவள் கூந்தலிற் சூட்டப்பட்டிருந்த ஜாதி புஷ்பத்தின் நறுமணம் அவ்வறை முழுமையும் வியாபித்திருந்தது. குணங்களேயல்லாமல் தோஷத்தைக் கண்டு பிடிக்கத்தெரியாத நமது தர்மாம்பாள் அப்புத்தகத்தைப் படிக்கும் காலத்தில், சில சமையம் சிரக்கம்பனமும், சில சமயம் அற்பமான மந்தஹாஸமும், சிறிதுகாலம் ஸ்தம்பம்போல் மலைத்து அசையாமலிருத்தலும் சிலகாலம்வாய்விட்டுக் கலகலவென்று படித்தலுமாக விருந்தாள்.

இவ்விப்பிரமங்களையும் சேஷ்டைகளையும் களிப்புடனும் வியப்புடனும் அவ்வறையின் வாயிற்படியில் நின்றபடியே ஒரு அழகியபையன் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனாலவனை யவள் கவனித்திலள். அற்குக் காரணமவள் தனது மனதை முழுமையும் அப்புஸ்தகத்திலேயே வைத்திருந்ததுதான். அந்தப்பையன் சற்றுநேரம் நின்றுவிட்டுப் பிறகு ஓசையன்றிச் சமீபத்திற்போய், தர்மா! யாராவது வந்து இங்கிருந்து எதையாவது எடுத்துக்கொண்டுபோனாலும் நீ யறியாய்போலிருக்கிறதே?

யென்றும் கலியாண முகூர்த்தத்தையும் ராத்திரியில் நடத்தி விடுகிறதென்றும் தீர்மானித்திருக்கிறார்களெனக் கேள்விப் பட்டேன். அது என் யுக்திக்கு இடம் கொடுக்கின்றது.

இதைக்கேட்ட இருவரும் "அவ்வளவு மோசமா செய்யத் துணிந்தார்கள்; சொல் உனது யுக்தியை" என்றார்கள்.

சுப்பு:—உங்களிருவரையும் சீக்கிரம் மதுரைக்கு வந்து சேரும்படி கடிதம் இன்றைக்காவது நாளைக்காவது வரும். அதில் தர்மாம்பாளுக்குக்கிட்டுப்பயலுடன் கலியாணமென்று எழுதியிராது. கலியாணத்தை மதுரையில் தனது வீட்டிலேயே தனது கௌரவத்தை யுத்தேசித்து நடக்கவேண்டியதாயிருக்கிறதென்றுமாத்திரம் எழுதப்பட்டிருக்கும்; சுந்தரத்திற்கும் கலியாணம் நிச்சயமாயிருப்பதாய் எழுதியிருக்கும். நீங்கள் அம்மட்டில் அதிகமென்றே நினைத்து இருவரும் மதுரைக்குப்போய் தகப்பன் சொல்லுக்கு மாறு சொல்லாதவர்களாகவே இருந்துகொண்டுக்கலியாணத்தினத்தன்றைக்கு இராத்திரி ஒருவருக்கும் சொல்லாமல்உளருக்கு வந்துவிடுங்கள்; தர்மாம்பாளுக்குப்பின் உதவிக்காக நான் அவ்விடத்திலொரு ஸ்திரீயை யேற்படுத்திவிடுகிறேன்; நீங்களிருவரும் ஊருக்குவந்தபிறகு நானொரு காரியத்தைச் செய்துவிடுவதாய் நிச்சயித்திருக்கிறேன்.

சுந்த:—அந்தக்காரியத்தை நாங்களும் கேட்கலாகா?

சுப்பு:—கேட்கலாம், நானிதுவரையிற் சொன்னபடி நீ தவறாமல் நடத்துவதாய்ப்பிரதிக்ஞை செய்தால் மாத்திரம் நான் சொல்லமுடியும்.

சுந்த:—சுப்பு! நீ யென்ன எங்களிடத்தில் இவ்வளவு தூரம்சந்தேகிக்கிறாய்? கட்டாயம் நாங்கள் போய்வருகிறோம்; தர்மாம்பாளுக்கு ஏற்படுத்தப்பட்ட வரனை மாற்றினதாய்க்

வேண்டுமெனக் கருதி, மீனாக்ஷி அக்காலத்தி லிருக்கக்கூடிய அறைக்குட் சென்று பார்த்தார்; நாயிகா நாயகர்களிருவரும் ஒரே சயனத்தில் காடாந்தகாரமாய் நித்திரை செய்வதைக் கண்ணுற்றுக் கண்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு வந்து தனதறையில் நாற்காலியிற் படுத்துக்கொண்டார். அந்த மீனாக்ஷியினறையில் சின்னாத்தாளுக்கு கவனம்ஜாஸ்தி. யாரானாலும் உள்ளே போகவிடாள், புருஷோத்தமையரை என்ன செய்ய முடியும்? அவர் திரும்பி வந்தவுடன் அவள் அவ்வறையினுட் சென்று சங்கதியைத் தெரியப்படுத்தி முன் ஜாக்கிரதை செய்துவிட்டாள். உடனே மீனாக்ஷி திடுக்கிட்டு, சுந்தரன் கையிலோர் நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து "கொஞ்சகாலம் எங்காவது ஒரு தூரதேசத்திற்குப் போ" என்று உத்திரவு கொடுத்தனுப்பினாள்.

அவனென்னவென்றால், "விபசாரத்தில் பயப்படவேண்டியவர்கள் ஸ்திரீகளே தவிர புருஷனுக்கு என்ன பயம்? வேறுமானால் அந்த வீட்டில் இனிநமக்கு வேலை கொடுக்க வேண்டாம் "என் பெண் பொல்லாதது உன் பிள்ளையை அடக்கு" என்பது போல் நம்மை என்ன செய்யலாம்; நமக்குச் சாப்பாட்டிற்கு வேண்டியதை நாம் சம்பாதித்துக்கொண்டோம், நமது பிள்ளையைவிட்டு நம்மவன் தேசாந்தரம் போக வேண்டும்" என்று யோசித்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போய்விட்டான். அவனுக்குச் சமையல் செய்துபோட மீனாக்ஷியின் சொந்தச்செலவில் ஒரு பரிசாரகன் நியமிக்கப்பட்டிருந்தான். அதனால் அவன் சுகமாயிருக்கலாமென நினைத்திருந்தான்.

சுந்தரத்தை யழைத்துவர அனுப்பப்பட்ட வேலைக்காரன் திரும்பிவந்து, அவனில்லை வெளியிற் போய்விட்டா

யென்று சொன்னான். உடனே புருஷோத்தம ஐயர் 'அவனை அவன் வீட்டிற்பார்த்து அழைத்துவா' என்று சொல்லி, மறுபடியும் அனுப்ப, அவன் சென்று திரும்பிவந்து "வீட்டில் இருக்கிறதாயும், இப்போது வரமுடியாதென்று சொன்னதாயும் சொன்னான். உடனே புருஷோத்தம ஐயருக்குக் கண்கள் கோபத்தாற் சிவந்தன. அவருத்தம புருஷராகையால் கோபத்தை மனதில் அடக்கிக்கொண்டு தான் காலையாகாரத்தை முடித்துக்கொண்டு வெளியிற் போகவேண்டிய ஏற்பாடாகப் புறப்பட்டார். அப்போது உள்ளேவரும் போலீஸ் இனிஸ்பெக்டரைக் கண்டார். எதிரில் வந்தவரை அவருடைய உடுப்பைக்கொண்டும் பின்வரும் போலீஸ் சேவகனைக்கொண்டும் போலீஸ் இன்ஸ்பெக்டரென்று தெரிந்துகொண்டு, அவருக்குத் தக்கபடி மரியாதைசெய்து தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு இருவரும் உட்கார்ந்தார்கள்.

புருஷோ:—வந்த விசேஷம் தெரியவில்லையே?

வெங்கட:—தங்களைப் பார்க்கவே வந்தேன்.

புருஷோ:—என்னை ஏதாவது காரியார்த்தமாய்ப் பார்க்கவந்தீரா, அல்லது ஸாதாரணமாகவா?

இன்ஸ்:—போலீஸ் உத்யோகத்திலிருக்கும் எனக்கு அநாவசியமாய் தங்களைப் பார்க்க எங்கே ஒழியப்போகிறது. காரியார்த்தமாகத்தான் வந்தேன்; அந்தக் காரியத்தை நாமிருவரும் தனியாய்ப் பேசிக்கொள்ள வேண்டும்.

புருஷோ:—இப்போது நாமிருக்கும் அறை தனியான அறைதான், இங்கே என்னுத்தரவன்றியில் காற்றுக்கூட நுழையாது. தாராளமாய் தாங்கள் வந்த காரியத்தைச் சொல்லலாம்.

இனிஸ்:—எனக்கு, போலீஸ் டிபார்ட்மெண்டில் இனிஸ்பெக்டர் உத்தியோகம். என் பேர் வெங்கடராமய்யர். நானிப்போது தூத்துக்குடியில் வேலைபார்த்து வருகிறேன். இந்த டவுன் புதுத்தெருவில் சென்றதை மீ 13-உ ராத்திரி நடந்த இரட்டைக் கொலை விஷயமாய் குற்றவாளியைப் பிடிக்க என்னை ஸ்பெஷல் ட்யூட்டியாக அனுப்பியிருக்கிறார்கள். அதுவிஷயமாய் தங்களிடம் கொஞ்சம் பேசவேண்டியதாயிருக்கிறது.

இதைக்கேட்ட புருஷோத்தமஐயருக்கு அச்சமயத்தில் உண்டான ஆனந்தத்திற் களவேயில்லை. தானாகவே இச்செய்தியைப் போலீஸாருக்கு வெளியிட்டு, சுந்தரனை சிக்ஷிக்கச் செய்யக்கருதிய இவருக்கு இவ்விதம் நேர்ந்தது கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் தோன்றிற்று. உடனே அவரைப்பார்த்துத் தன்மனதை யடக்கிக்கொண்டு 'அக்கொலை விஷயமாய் என்னிடத்தில் என்ன பேசவேண்டும்' என்றார்.

வெங்க:—நான் சொல்லப்போகும் சமாசாரம் எப்படிப் பட்டதாயினும் தங்களுக்கு அது ஆயாஸத்தைத். அல்லது, அவமானத்தைக் கொடுக்கக்கூடியதாயினும், பொருட்படுத்தாமல் எனக்கு ஸகாயம் செய்யவேண்டும். தாங்களவ்விதம் செய்வதாய் எனக்கு வாக்களித்தபிறகே நான் சொல்லத் துணிவேன்.

புருஷோத்தமய்யர் இதைக்கேட்டு, "இவருக்கு நடந்த சங்கதியெல்லாம் தெரிந்தே யிருக்கிறதுபோல் தோன்றுகிறது. நாமே இவருக்கு எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் நமக்கு ஒரு தீங்குமின்றியில் அவ்விரண்டு காரியங்களையும் இவரே தீர்த்துவிடுவார்' என்றாலோசித்து.—

புரு:—ஐயா தாங்கள் கேட்கிறபடியே தங்களுக்கு வாக்களித்தேன், என்ன நேர்ந்தாலும் எனக்குத் தெரிந்தமட்டிலும், என்னால் முடிந்தமட்டிலும் நான் தங்களுக்குதவிசெய்கிறேன், என்னைமட்டில் தாங்களாவது வேறு எந்த உத்தியோகஸ்தராவது இவ்வீட்டைவிட்டு வெளியிற் கூப்பிடாமல் தாங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும்.

வேங்க:—சந்தோஷம்; தங்கள் இஷ்டப்படியே செய்கிறேன். கொலை செய்யப்பட்டது யாரென்றறிவீர்களா?

புருஷோ:—சுப்பு வென்ற ஒரு பெண்பாலும் அவள் பிள்ளையுமா யிருக்கவேண்டுமென நினைக்கிறேன்.

வேங்க:—சிவசிவ! அவ்விருவரும் உயிரோடிருக்கிறார்கள்; வேறொரு கைம்பெண்ணும் வேறொரு பையனும் கொல்லப்பட்டவர்கள்.

புருஷோ:—நானப்படி நினைக்கவில்லையே, இதோ பாருங்கள் (என்று சொல்லி சுப்பு எழுதின சடிதத்துண்டை யெடுத்துக் கொடுத்தார்.)

வேங்க:—(வாங்கி வாசித்துப் பார்த்து) இது நல்ல தஸ்தாவேஜி; என்னிடமிருக்கவேண்டும் (என்று மடியில் சொருகிக்கொண்டு) ஐயா, அவனுத்தேசம் அப்படித்தான், நடந்தது வேறுவிதம், தன்னைக் கொல்லப்போவதாய் தெரிந்த பிறகும் தானந்தவிடத்தில் இருப்பாளோ?

புருஷோ:—எப்படித் தப்பினாள்?

வேங்க:—அப்படியிருக்கட்டும்; இக்கடிதம் தங்களுக்குக் கிடைத்தபிறகும்கூட அவ்விரு மகா பாதகர்களையும் எவ்விதம் வீட்டில் வைத்துக்கொள்ளத் தாங்கள் துணிந்தீர்கள்.

புருஷோ:—இன்று காலமேதான் அவர்களை ஒரு படுக்கையில் பார்த்தேன்; இக்கடிதமும் கிடைத்தது; நானாகவே

போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரம் பிள்ளையைப்பார்க்கப் புறப் பட்டேன்; தாங்கள் எதிர்ப்பட்டீர்கள்; இனி நடந்ததைச்சொ ல்லுங்கள்.

வெங்கட்டராமய்யர் சொல்லுகிறேன் கேளுங்கள் என்றுசொல்லி, மீனாக்ஷியின் லெட்டர் சுப்புவுக்குக்கிடைத்த தும், சுப்பு ரகஸ்யம் கண்டுபிடித்ததும், சுப்புவுக்கும் சுந்தர னுக்குமுண்டான கலகமும், அன்று ராத்திரி சுப்பு சுந்தரத் திற்குத் தெரியாமல் அவனைப் பின்தொடர்ந்து அவர்களிரு வருக்குள் நடந்த நிர்மானத்தை யறிந்துகொண்டு இத்து ண்டை எழுதிக் கச்சேரி உள்ளில் போட்டதும், கனகசபை பிள்ளையால்சங்கதி தெரிந்துகொண்டு ராத்திரியே சுப்பு, தன் பிள்ளையை அப்புறப்படுத்திவிட்டு, தான் திருச்சிக்குப்போன தும், அன்றிரவு சுப்பு குடியிருந்த அரைவாசலிற் படுத்தி ருந்த அவ்வீட்டு ஸ்திரீயையும் பையனையும் சுந்தரனும் வேறொருவனுமாய்ச் சேர்ந்து கொலைசெய்ததுமான விஷய த்தைச் சொன்னார்.

புருஷோ:—சுந்தரனே சேர்ந்துபோய் கொலை செய்தா னென்பதற்கு என்ன ருஜூ?

வெங்க:—இவர்களிருவரும் கொலைசெய்துவிட்டுத் திரு ம்பிவருகையில், ஒரு போலீஸ் சேவகன் சுந்தரன் ஓடுவ தைக்கண்டு அவன் வேஷ்டியைப் பிடித்தான். வேஷ்டியை விட்டுவிட்டு அவன் ஓடிப்போய்விட்டான். அவ்வேஷ்டியில் "சுந்தரன்" என்று மசியால் எழுதப்பட்டிருக்கிறது. அதில் ஏராளமான இரத்தக் கறைகளிருக்கின்றன. மேலும் வாயில் திண்ணையை யடைத்துக் கொலைசெய்தபோது பார்த்திருந்த அவ்வீட்டிலுள்ள இரண்டு ஸ்திரீகளும் சுந்தரனுடைய அங்க அடையாளங்களைச் சொல்லுகிறார்கள்.

புருஷோ:—அப்படியானால் இத்தனைநாளாய் ஏன் இந்த கேஸ் வெளியாகவில்லை?

வெங்க:—சுப்பு இவ்விடமில்லாததால், தங்கள் வீட்டிலுள்ள சுந்தரன் தான் கொலைசெய்தானென்று சொல்ல முடியவில்லை. அவளைக்கண்டு எல்லாவற்றையுந் தெரிந்துகொண்டு பிறகு D, I. G. உத்திரவைபடைந்து இவ்விடம் வந்தேன்.

புருஷோ:—தாங்கள் சுப்புவை எங்கு கண்டீர்கள்.

வெங்க:—தூத்துர்குடியில் எனது ஜாகையில்

புருஷோ:—அவ்விடம் அவள் வரக் காரணம் யாது?

இதற்கு வெங்கட்டராம ஐயர், சுப்புவும் தர்மாம்பாளும் இவ்விடம் விட்டுப் புறப்பட்ட காரணமும், இவ்விடம் விட்டுப் புறப்பட்டது முதல் அவர்களுக்கு நேர்ந்த விபத்தும் தானதை நிவர்த்திசெய்ததும், இப்போதவர்கள் சுகமாய் திருச்சியில் வல்லபசாஸ்திரிகள் வீட்டிலிருப்பதும் ஆகிய இச் செய்திகளைச் சொல்லித் தனக்கு ஒரு முறையில் சுப்பு தங் கையென்றும் சொன்னார்.

இதைக்கேட்ட புருஷோத்தம ஐயர், கண்ணீர்சொரிந்து என் குழந்தை தர்மாம்பாள் இம்மட்டிலாவது தங்களால் விபத்தாகிற கட்டைத்தாண்டி சுகமாயிருப்பது கேட்டு ஆநந்திக்கிறேன். தாங்கள் என் குழந்தையைக் காப்பாற்றினதற்கு தங்களுக்கு நான் அடிமையாக வேண்டுமென்றாலும் தடையில்லை. அப்படிப்பட்ட, அழகிலும் கல்வியிலும் நிகரற்ற என் குழந்தையைப் படுகுழியில் தள்ள யத்தினம்செய்த என்னைத் தாங்கள் என்ன சிட்சை செய்தாலும் சம்மதம்; என் குழந்தை சந்தோசமும் இருக்குமிடம் தெரிந்துவிட்டால் இன்னமும் ஆநந்திப்பேன்'' என்றார்.

உடனே வெங்கட்டராமையர், சுந்தரம் காமேசன் இவர்களின் சங்கதியைச் சொல்லி "தாங்கள் மாப்பிள்ளையாய்க் கோரிய தர்மராஜு ஐயர் சப்மாஜிஸ்திரேட் வேலையாயிருக்கிறாரென்றும், அவர் வீட்டில்தான் எல்லாரும் ஒன்றுசேர சேர்ந்திருக்கின்றனரென்றும்" சொல்லி முடித்தார்.

புருஷோ:—(வெங்கடராமையரைக் கட்டிக்கொண்டு) தாங்கள் எனக்குச் செய்திருக்கும் உபகாரத்திற்கு, நான் பிரதி செய்யச் சக்தியற்றவனாயிருக்கிறேன். நானும் எனது சொத்துக்களும் தங்களுடையதே, அந்த மகாத்மா தர்மராஜு ஐயருக்கு என் குழந்தை தர்மாம்பாளை எப்படியாவது அந்த மாசம் கலியாணம் செய்து கொடுக்க விரும்புகிறேன்.

வெங்க:—நான் சம்பாதித்திருக்கிற சுமார் லக்ஷ ரூபாய் சொத்தைத் தங்கள் பெண்ணின் வயிற்றிற் பிறக்கும் குழந்தைகளில் ஒன்றை யன்றுடையதாகச் செய்துகொண்டு அதற்குக் கொடுக்கப்போகிறேன்; இது நிற்க. தாங்களிப்பொழுது என்னை என்ன செய்யச்சொல்லுகிறீர்கள்?

புருஷோ:—நானென்ன சொல்ல வேண்டியிருக்கிறது! இரண்டு குற்றவாளிகளையும் பிடித்துக் கொள்ளுங்கள்; உங்கள் இஷ்டப்போல் சேனை நடத்துங்கள், நான் மன்னித்து விட்டேன், ஒன்றுக்கும் ஆக்ஷேபிக்கவில்லை; சுந்தரன் ஆன் வீட்டிலிருக்கிறான், நான் கூப்பிட்டதற்கு நிராகரித்து விட்டான், தாங்கள் தங்கள் சேவகனைக்கொண்டு பிடித்துக்கொண்டு வரச் சொல்லவேண்டும்.

உடனே வெங்கடராமையர் தன்னுடன் கூட வந்த சேவகனுக்குச் சில சமாசாரங்கள் சொல்லி, சுந்தரனைப்பிடித்துக் கொண்டுவரும்படி அனுப்பினார். பிறகு மீனாக்ஷியை யழை

த்துக்கொண்டுவரும்படி ஒரு மனுஷ்யனை, புருஷோத்தம ஐயர் அனுப்ப, அவன் போய்த்திரும்பி வந்து மீனாக்ஷியின் அறை உட்புரம் தாப்பாளிட்டிருப்பதாயும் ஜன்னற் கதவுகள் சாற்றப்பட்டிருப்பதாயும், கூப்பிட்டதற்கு பதிலில்லையென்றும் சொன்னான். உடனே இவர்கள் போய் கதவைப்பெயர்த்து உள்ளே போய்ப் பார்க்கையில், மீனாக்ஷி கயிற்றில் தொங்கிக்கொண்டிருந்தாள். அவளை யிவர்கள் பார்த்து "நாக்கு முந்தியே இவளை தெய்வம் சிக்ஷித்துவிட்டது" என்று சொல்லி அவ்வறையை வெங்கட்டராம ஐயர் சோதித்தார். அவ்விடத்தில் ஊஞ்சற் பலகையில் ஒரு காகிதம் அகப்பட்டது; அதையெடுத்து வாசித்தார், அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

"பலநாட்திருடன் ஒருநாளகப்படுவான்" என்றபடி இன்றையதினம் நான் செய்துவரும் அகாரியத்தை என்பர்த்தா நேரில் கண்டார்; நான் நேசித்த சுந்தரனைத் திருப்தி செய்விப்பதன்பொருட்டு, சுப்புவையும் அவள் பிள்ளையையும் தொலைசெய்யச் சொன்னேன்; அது வேறுவிதமாய் முடிந்தது. கர்மாப்பாளைக் கெடுக்கப்பார்த்தேன், அவளும் தப்பினாள். இன்றையதினம் நான் போலீஸில் அகப்பட்டு மானமிழந்து பிறகு உயிரை இழக்கவேண்டியதாய் நேர்ந்துவிட்டது. இனி யவர்கள் செய்யும் சிட்சையை நானே செய்துகொள்ளலாமென நினைத்துத் தற்கொலை செய்துகொண்டேன், இத்துடன் என் குற்றங்கள் நீங்கியதாக நினைத்துச் சுந்தரனை மன்னிக்கலாமென்று நினைக்கிறேன்" பாவி மீனாக்ஷி.

இந்த லெட்டரையெடுத்துக்கொண்டு வாசலில் வருவதற்குள் கைவிலங்குடன் சுந்தரன் எதிரில் நின்றான். புருஷோத்தம ஐயரைக் கண்டவுடன் அந்த துஷ்டன் "நான் தங்களுடைய அன்னத்தைச் சாப்பிட்டு அன்னமிட்ட பிதாவின்

ஸப்சாரமாகிய மாதாவை யிச்சித்த பாவத்திற்கு எனக்குத் தக்க சிக்ஷைகிடைக்கும்; நான் பிறருக்கு நினைத்த துரோகத்தால் என் பிள்ளைக்கு ஒருவிதவை தர்மபத்னியாயிருக்கிறாள். அவளைத் தாங்கள் ரக்ஷிக்கவேண்டும். நான் போகிறேன்" என்று சொன்னதும், காருண்யமே உருக்கொண்ட புருஷோத்தம ஐயருக்குக் கண்களில் நீர் ததும்பிற்று. உடனே அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டான்.

தர்மசாஸ்திரங்களில் விபசாரிக்கு உத்தரகிரியை உடனே கிடையாதென்றிருப்பதால், மீனாக்ஷியை மூட்டைப் பூச்சியைப்போல் பொசுக்கினார்கள். சுந்தரனுடைய வாக்குமூலத்தால் பாஸ்கரனையும் சின்னத்தாளையும் கேஸில் பிடித்தார்கள். கனகசபைப் பிள்ளை சாக்ஷிசொன்னான், சுப்பு மதுரைக்கு வந்து சாக்ஷி சொன்னாள். சுப்பு குடியிருந்த வீட்டிலிருந்த ஸ்திரீகளும் சாக்ஷி சொன்னார்கள். செஷன் ஜட்ஜு சுந்தரனுக்குக் கொலை தீர்ப்பும் பாஸ்கரனுக்கு 10-வருஷம் த்வீபாந்தர சிக்ஷையும், சின்னத்தாளுக்கு 5-வருஷம் கடுங்காவலும் ஏற்படுத்தினார். புருஷோத்தம ஐயர் நேரில் திருச்சிக்கு வந்து தான் செய்த குற்றத்திற்கு எல்லாரையும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, தர்மாம்பாளையும் நந்தகோபனையும் தானே அழைத்துவந்து மதுரையில் கொஞ்சநாள் வைத்துக்கொண்டு, நந்தனைச் சாஸ்திரம் எம். ஏ. படிப்பதற்காக திருச்சிக்கனுப்பிவிட்டார். தர்மாம்பாளும் சுப்புவும் கொஞ்சநாள் மதுரையில் புருஷோத்தம ஐயரால் ஊக்கத்துடன் போஷிக்கப்பட்டு வசித்தார்கள்.

# பத்தொன்பதாம் ஆச்வாசம்.

## துர்ஜன சிக்ஷணம் II.

"உன் ஏற்றச்சால் போன்ற வயிற்றிற்கும், அதிலிருந்து வந்த பெண்கட்டைக்குமாகவே" நான் செய்த அக்கிரமங்களுக்களவேயில்லை. எவ்வளவு செய்தும் பத்திரகாளிபோல் சீறுகிறாயே தவிர எனக்குச் சுகமில்லை. எது செய்தால்தான் உனக்குத் திருப்தி? சொல்லடி! ரத்னம்? நான் ஏதாவது இவளுக்கு குறைவாய்ச் செய்கிறேனா என்று, பட்டாபிராம ஐயர் சொன்னார்.

ரத்னவல்லி:—மன்னி! நீ அண்ணாவை யடிக்கடிவருந்தச் செய்யாதே, அவன் எவ்வளவோ பாடு படுகிறான்.

காமா:—ஆமாண்டீ ரத்தினம், ரொம்ப பாடுபட்டுத்தான் ரொம்ப அருமையும் பெருமையுமாகப் பெற்று வளர்த்த ஒரு பெண்ணைக் குலகோத்திரம் தெரியாமலும் காலணாவுக்குகூட ஜீவனி யில்லாமலும் மழைபிடிக்குகூடப் பள்ளிக்கூடத்திலொதுங்காமலும் உள்ள ஒரு 40-வயசுத் தடியனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தார். நீயும்கூடச் சொல்லமாட்டையா? உன்னாலே வந்ததுதானே, இந்த குடும்பத்துக்கு தீங்கு.

பட்டாபிராமய்யர்.—அவளிடத்திலேன் உன் ஆத்திரத்தை காட்டுகிறாய், அவள் உனக்கு எத்தனையோ செய்தாள் காளி தூரதிர்ஷ்டம் கல்லும் காற்றிற் பறக்கிறது.

காமா:—நானா துரதிர்ஷ்டக்காரி, [illegible] டமெல்லாம் பாலாகப் பெருக்குமே.

பட்டாபி:—ஆமாம், பெருகிறது பார், ஏராளமாய் லக்ஷக்கணக்கான சொத்துக்கள் நீ வந்தது முதல் கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்து, இப்போது சுத்தமண்டலமாய் விட்டது. உன் அதிர்ஷ்டத்தைப்பார் ஆறாகப் பெருகிறது.

காமா:—என்னைக் கலியாணம் பண்ணிக் கொடுக்கும்போதும் நான் வந்தபோதும் எல்லாம் நன்றாகத்தானிருந்தது. அப்புறம் நீ துர் வியாஜ்யங்கள் செய்தாய். குச்சுக்காரிகளுக்கு அழித்தாய். எல்லாம் ஒழிந்தது. அது தொலைபட்டும். அந்தப்பயல் நேத்திமுதல் இங்கே வந்தகடக்கானே என்னத்திற்கு.

பட்டாபி:—நீதான் கேளேன். அருமையான மாமியாரையும், அற்புதமான பெண்டாட்டியையும் பார்த்துப்போக வந்திருப்பான்.

காமா:—ஆமா - இந்த அழகனுக்கு மாமியார் ஒண்ணு ஆம்பட்டாள் ஒண்ணு, கெட்ட கேட்டுக்கு.

ரத்னா:—அன்று அதிருக்கட்டும், மதுரையில் நடந்த இரண்டு கலியாணங்களும் இரண்டு விதமாக ஆய்விட்டனவே. அதென்ன காரணம் யார் அப்படிச் செய்தார்கள்?

பட்டாபி:—நிஜத்தைச் சொல்லுகிறேன், நம்ம மீனாக்ஷி சுந்தரியென்கிற ஒரு ஆசை நாயகனை வைத்துக்கொண்டிருக்கிறாள். அவள் பிள்ளைக்குக் கலியாணமாகவேண்டியதற்காக தன் பர்த்தாவை எப்படியோ சரிப்படுத்தி அவன் மூத்தாள் பெண்ணை அந்தப்பயலுக்குக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்து விட்டாள். இதன் மத்தியில் நான் போய் அவளுடைய மூத்தாள் பிள்ளைக்கு நம் கமலத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி கோட்டில் அதையும் முடித்தாள். அந்தச் சுந்தரனுக்கு

அம்மங்காள் சுப்புவென்று ஒரு முண்டை யிருக்கிறாள். அவளுக்கும் சுந்தரனுக்கும் விரோதம், அந்த மூலமாய் அவளுக்கு மீனாக்ஷியிடத்திலும் வைரமுண்டு. ஆகையால் மீனாக்ஷி செய்த காரியத்தை யெப்படியாவது கெடுக்கவேண்டுமென்று அந்தச் சுப்புவென்கிற முண்டை செய்த காரியம் இது.

ரத்ன:—நல்ல கெட்டிக்காரி, அவள் இவ்வளவு தூரம் வேலை செய்துவிட்டாளே.

பட்டாபி:—உம்; இருக்கட்டும், நான் விட்டேனா அந்த முண்டையை! ரூபாய் பதினாயிரமானாலும் அந்த முண்டையைக் கொன்றுவிடவேண்டுமென்று மீனாக்ஷி சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

இப்போது வாசல் திண்ணையிலிருந்து ஒருவன் பதிற் சொல்லுகிறான் "இன்னும் மீனாக்ஷியின் பேச்சு ஏன்? அவள் தூக்குப்போட்டுக்கொண்டு பிராணனைவிட்டாள். அவளாசைநாயகனும் நேற்று சர்க்காரால் கொலை தூக்கப்பட்டான்."

இதைக் கேட்டவுடன் எல்லாரும் திடுக்கிட்டெழுந்திருந்து: "என்னடா 'பலராமா உளருகிறாயோ? நிஜம்தானோ?" என்று கேட்டார்கள்.

பலராமன்:—எனக்கென்ன பைத்தியமா உளர; உள்ளதைச் சொன்னேன், சந்தேகமுண்டானால் மதுரைக்குப் போய்ப் பார்த்து வாருங்கள்.

பட்டாபி:—உனக்கெப்படித் தெரியும்?

பலராம:—நான் நேற்றுத்தான் மதுரையிலிருந்து இவ்விடத்தை யுத்தேசித்துப் புறப்பட்டேன்.

பட்டாபி:—என்ன காரணம்?

பலரா.—சுப்புலவையும் அவள் பிள்ளையையும் கொலை செய்ய, மீனாக்ஷியால் அனுப்பப்பட்ட சுந்தரன், அவளுக்கு பதில் வேறு யாரோ இருவரைக் கொன்றுவிட்டான்; கேஸ் கிளம்பிற்று, மீனாக்ஷி காணாக மாண்டாள். சுந்தரன் தூக்கு மரத்தில் தொங்குகிறான். (இதைக் கேட்டவுடன் எல்லாரும் வருத்தப்பட்டார்கள்.)

காமா:—என்டா; கடியா! இந்த எழவைச் சொல்லத் தான் இங்கு வந்தாயோ?

பலரா:—எவளுடைய பலத்தினால் குதிக்கிறீர்களோ அவள்கதியைச் சொல்லி உங்கள் கொட்டம் அடங்கிற்றென்று சொல்லிப்போக வந்தேன்.

காமா:—என்னடா, பாவி பழிகாரா! நாங்கள் என்னடா கொட்டமட்டிருக்கிறோம்?

பலரா:—ஒரு நாழிகைக்கு முன் என்னைப்பற்றி என்னென்ன பேச்சுப் பேசினீர்கள்?

காமா:—என்னடா பேசினோம். உனக்குப் படிப்புமில்லை, பணமுமில்லையென்று சொன்னேன்.

பலரா:—என் பெண் எம்மட்டில் படித்திருக்கிறது. உனக்கு எத்தனைகோடி ரூபாய்க்குச் சொத்திருக்கிறது? எனக்குத்தெரியாதோ உன்னை; மரியாதையாய் என் அகமுடையாளை என்னிடமனுப்பிவிடு.

காமா:—என்ன சொன்னே, அம்பட்டயானா, அவளை உன்னிடத்தில் வாழவா நான் விடுவேன்.

பட்டாபி:—பின்னே யாருக்குக் கட்டி கொடுக்கப் போகிறாய்?

காமா:—அடே சண்டாளா! அதெல்லாம் ஒங்க கூட்டத்துக்கு வழக்கம்; ஆம்படயானை விரட்டிவிட்டு தனக்கிஷ்டமான புருஷனை வச்சுக்கின்டு, என் தங்கை ஊர் சிரிக்கிறாளோ உன் தங்கை சிரிக்கிறாளோ? கெடுத்தாயே பாவி அநியாயமாய் என் குழந்தையை, இந்த தரித்திரனிடத்திலா என் குழந்தையை விடுவேன்.

பலரா:—அதிகபபேச்சு பேசினல் பல்லு முப்பத்திரண்டையும் உதிர்த்துவிடுவேன்: பவுனும் மோகராவுமாகக்கொட்டித்தானே கிடக்கிறது உன் வீட்டில்.

உடனே காமாட்சி "என்னடா தடிபயா சொன்னே?" என்று சொல்லி, ஹாவென்று கத்திக்கொண்டு பலராமனை வாசலில் பிடித்துத் தள்ளினள். அவனுடனே அவளைக் கீழே தள்ளிக்காலாலும் கையாலும் அடித்து வீழ்த்தும்போது, பட்டாபிராமய்யர் விலக்கிவிடவந்து தானும் பத்தடி வாங்கிக்கொண்டு "என்னடா நாயே தரித்திரப்பயலே! இங்கே என்னிடம்கூட வாலாட்டுகிறாய், ஒழிப்போ மரியாதையுடன், தரித்திரப்பொணமே" என்று வாசலில்தள்ளினர், அதற்குப்பலராமன் "அடே அப்பப்பதரே,நீ தரித்திரனே,நான் தரித்திரனே பார்ப்போம் வா" என்று மாமனாரை வாசலிலிழுத்துவந்து அங்குநின்றுகொண்டிருந்த சேவகனிடம், "இவர்தான்பட்டாபிராமய்யர், பிடித்துக்கொள்" என்று காட்டினன். உடனே சேவகன் "ஐயா! உங்களுக்கு ரூ. 1500-க்குஒருவாரண்டுவந்திருக்கிறது; வாதி ஆனைக்கூர்சொக்குவாண்டையான்; வாருங்கள் கோர்ட்டுக்கு" என்று கூப்பிடவே, பட்டாபிராமய்யர் மனங்கலங்கினன்; அவன்பேரில் இதுவரையில் வாரண்டு வந்ததேயில்லை. இவ்விதம் பட்டாபிராமய்யர் வாரண்டில் அகப்பட்டவுடன் காமாக்ஷியும் ரத்தினவல்லியும் அழுதார்கள்.

அப்போது பலராமன் காமாக்ஷியைப் பார்த்து, 'ஏ! வண்டி, என்னை; தரித்திரனென்று சொன்னாயே, உங்கள் வீட்டில் கொட்டிகிடக்கிற பொகாரக்குப்பலிலிருந்து இந்தக் கடன்காரனுக்குக் கடன் கொடு பார்ப்போம், என்க.

இதைக் கேட்ட காமாக்ஷி, ரத்னவல்லியைப்பார்த்து என்னடீ செய்கிறதிப்போது? உங்கண்ணனெஜமானிக்குப்போகச் சம்மதமா உனக்கு?' என்று கேட்க, அதற்கு ரத்தினவல்லி, "மன்னி நானென்ன செய்வேன்; என்னிடத்தில் ஒன்றுமில்லையே" என்றாள்.

வாசகர்களே! இந்த ரத்னவல்லியிடம் ஏராளமான நகைகளும் பணங்களுமிருந்தனவென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதால் இவளிப்போது தன்னிடத்தில் ஒன்றுமில்லையென்று சொல்வது உங்களுக்குப் பொய்யெனத் தோன்றும். அது அப்படியல்ல; இரத்தினவல்லி சொன்னது உண்மையே. ஏனென்றால் ஈரோட்டில் ஸாவித்திரியையும், நம்மனையும் அடிக்கும்படி ரத்தினவல்லியால் அனுப்பப்பட்ட ஆட்கள் தவறுதலாய் மாடாபுரம் ஜமீன்தாருடைய ஏஜண்டின் வண்டியைத் தாக்கி மண்டையுடைத்து வந்தது உங்களுக்குத் தெரியுமல்லவா? அந்த ஏஜண்டு சொல்லியனுப்பிய வார்த்தைகளை நினைத்து பயந்து மறுநாள் ரத்தினவல்லி ஈரோட்டிற்கு வந்து, அவ்விடத்தில் கனகத்தின் வீட்டில் இருக்க முடியாமல் தனது தமையன் வீட்டிலிருந்தாள். பிறகு இரண்டு நாளைக்கெல்லாம் பட்டாபிராமய்யர் தன் குடும்பத்துடன் கலியாணத்திற்குப் போயிருந்த காலத்தில் ஒருநாள் இராத்திரி பல கள்ளர் வீட்டிற்குள் புகுந்து, பட்டாபிராமய்யரால் அபகரிக்கப்பட்ட ஸாவித்திரியின் நகைகளையும் ரத்தினவல்லி கடைசியாய் கடன் வாங்கி வைத்திருந்த ரூபாய்

களையும், அவள் மேலே போட்டுக்கொண்டிருந்ததும் பெட்டியில் வைத்திருந்ததுமான சகல நகைகளையும் எடுத்துக்கொண்டு, அவளை நையப்புடைத்துச் சென்றனர். அன்று வாங்கின அடிகளால ரதனவல்லி மூன்றுநாளைக்கு எழுந்திருக்கவில்லை. கனகம் சாப்பாடு கொண்டுவந்து போட்டாள். ரதனவல்லிக்குத்தற்காலம் சரீரத்தில் திருகாணி கூடக் கிடையாது. பட்டாபிராமய்யருக்கும் இரத்தினவல்லிக்கும் கடன் கொடுப்பார் கிடையாது. ஏனென்றால் அவர்கள் ஏற்கனவே வாங்கியிருக்கிற கடன்கள் வட்டியும் முதலுமாக அவர்களுக்குள்ள சொத்துகளுக்கு மேலாய்விட்டன. அப்படியிருந்ததினால் காமாக்ஷி கணவனைப்பார்த்து 'இப்போதென்ன வழி' யெனக்கேட்டாள். அதற்கு அவர், இனி என்னவழி? உன் நகைகளையாவது, குழந்தை கமலத்தின் நகைகளையாவது அடகுவைத்துப் பணம் வாங்கி கொடுத்துத்தான் சேவகரை யனுப்பவேண்டும், என்று சொன்னார்.

காமாக்ஷி:—எனக்கு வெகு ரொம்ப நகைகளை லக்ஷக்கணக்கான ரூபாய்க்குப் போட்டிருக்கிறீரோ இல்லையோ அதை யடகுவைக்க? என்னமோ போனதுபோக திருமங்கலியம் கொடியும் கம்மலும் காரையும் தான் பாக்கியிருக்கிறது; அதையும் தலைக்கவழித்தேடாதே; குழந்தை கழுத்தில் இருப்பதை வாங்கிவிட்டால், பிறகு அவளுக்குச்செய்து பூட்டப்போகிறீர்களே? வேண்டுமானால் உன் தங்கை மீனாக்ஷியிடம் வாங்கி வைத்திருக்கிற பவுன் மாலையை விற்றுப்பணத்தைக் கொடுத்து மீண்டுவா, இல்லாவிட்டால் ஜெயிலுக்குப்போ.

இதற்குள் கோர்ட்டு சேவகன் "வா, ஐயா! இனி மெனக்கிட முடியாது" என்று இழுத்தான். இதைக்கேட்ட பட்டாபிராமஐய்யர், "சரி அந்தப்பவன் மாலையைக்கொண்டுவா,

என்று சொல்லக் காமாக்ஷி அதைக் கொண்டுவந்து கொடு த்து, 'நானும் கோயம்புத்தூருக்கு வருகிறேன். இவைகளித்துக் கடனை கொடுத்து விட்டு பாக்கியை நான் கொண்டு வருகி றேன்; இல்லாவிட்டால் எல்லாவற்றையும், நீயே தாவு செய்து விடுவாய்' என்றுசொல்லி வீட்டில் பலராமனையும் ரத்தினவல்லி யையும் கமலத்தையும் வைத்துவிட்டுத் தனது கணவனுடன் கோயம்புத்தூர் போனாள். அங்கே ஒரு காசுக்கடை தேடி அங்கிருந்த வியாபாரியினிடம் இந்தப் பவழமாலையை யெடு த்துக்கொண்டு சரியான கிரயம் கொடுங்களென்று நகையைக் கொடுத்தார்கள். அப்போது அவ்விடத்தில் நின்றுகொண்டி ருந்த போலீஸ் சேவகன் அந்த நகையைப் பார்த்தவுடன் நெருங்கிவந்து "நமது ஸ்டேஷனுக்கு வந்திருக்கிற அடை யாள ஜாப்தாப்படி இந்த நகை சரியாய் இருக்கும் போலிரு க்கிறது" என்று சொல்லி, ஓ செட்டியாரே! இது சந்தேகப் பட்ட நகை போலிருக்கிறது. அதைச் சோதித்துப் பாரும். அதில் M. P. என்ற இரண்டு எழுத்து எங்காவது செதுக்கப் பட்டிருக்கிறதா பாரும் என்றான்.

உடனே செட்டியார் நகையைப் பிரட்டிப்பிரட்டிப்பார் த்துவிட்டு முகப்புக்குப் பின்புறத்தில் M. P. என்ற எழுத்து கள் இருக்கக்கண்டு "இதோ இருக்கின்றன அந்த எழுத்து கள்" என்றார். உடனே போலீஸ் சேவகன்; 'ஓய், ஐயரே! இந்த நகை மதுரை புருஷோத்தம ஐயருடையது, உமக்கெப்ப டிக்கிடைத்தது' என்றுகேட்டான். அதற்குப் பட்டாபிராம ய்யர் "அவர் ஸம்ஸாரம் என்னுடைய தங்கை, அவள் என க்கு இதைக்கொடுத்தாள்" என்று சொன்னார். அதற்குச்சே வகன் "உமக்குத் தங்கையா கொடுத்தாள், அவள் போயிருக் கிறாள் யமலோகத்திற்கு, நீயும் அங்கேபோய் கேட்டு வர லாம். புருஷோத்தம ஐயர் இந்த நகை களவு போயிருப்ப

தாய் போலீஸில் பதியவைத்திருக்கிறார், வா ஸ்டேஷனு
க்கு" என்று சொல்லி இழுத்தான். பட்டாபிராம ஐயர்,
,,மீனாக்ஷி செத்துப் போய்விட்டாள். இனி யெனக்கு மதுரை
யில் ஆதாரம் இல்லை நீ திரும்ப ஊருக்குப் போ. மாப்பிள்
ளையை அழைக்காமல் பெண்ணை யவனிடம் விட்டுவிடு, என்
கதியைப்பற்றி நீ கவலைப்படாதே, நான் எப்படியாவது ஆகி
றேன்" என்று காமாக்ஷியை ஊருக்குத் திரும்பி யனுப்பிவி
ட்டு, தான் சேவகர்களுடன் ஸ்டேஷனுக்குப் போனான்.
காமாக்ஷி தாங்கவொணாத் துக்கத்துடன் திரும்பி ராமாபுரத்
திற்கு வந்து நடந்த சமாசாரத்தை மாப்பிள்ளைக்கும் பெண்
ணுக்கும் உரைத்தாள். பிறகு 10 நாளுக்குள் ரத்னவல்லி
பட்டாபிராமய்யர் இவர்களுடைய நிலங்களையும் பட்டாபி
ராமையர் வீட்டையும் கடன்காரர்கள் ஜப்திசெய்து இவர்
களை வெளியேற்றி விட்டார்கள்.

உடனே பலராமன் மாமியாரைப்பார்த்து "தேவபிரபு
வின் பத்னியே! தரித்திரப்பயலுக்கு பெண்ணை கொடுத்தோ
மென்று என்னையிகழ்ந்தீர்களே, நான் தரித்திரனல்ல, நானொரு
பிரபுவினிடத்தில் கிராமக்காரியம் பார்க்கிறேன். மீ 1-க்கு
ஐந்து கலம் நெல்லும் 5-ரூபாய் பணமும் சம்பளமாகக்
கிடைக்கின்றது. என் ஸம்ஸாரமும் நானும் வயிராரச்சாப்பிடு
வோம், நீ கதியில்லாமலிருப்பதால் உனக்கும் அங்கே வந்தி
ருந்தால் சாதம் போடுவோம். அதிக கர்வம கொண்டவர்
களையும் அதிகமான அபசாரம் செய்பவர்களையும் கடவுள்
தண்டிக்காமல்விட்டார், என்பதற்கு நீயும் இந்த ரத்னவல்
லியும் திருஷ்டாந்தம். நீங்களிருவரும் செல்வச்செருக்கினால்
பரமஸாதுவான ஸாவித்ரியை என்னபாடு படுத்தினீர்கள்.
அவள் நகைகளையெல்லாம் அபகரித்துக்கொண்டு இந்த துஷ்
டை, அவளையும் அவள் பிள்ளை தர்மனையும் அடிக்கவும் எற்

பாடு செய்தாள். 'தர்மம் தலைகாக்குமென்றபடி' அவர்கள் தப்பினார்கள். நீங்கள் கஷ்டத்துக்கு ஆளானீர்கள், தர்மபுத்திரனுக்கொப்பான அந்த சர்மன் ஒரு குறைவுமன்றியில் இப்போது தூத்துக்குடியில் சப்ரேஜிஸ்டிரேட்டாக இருக்கிறான். தர்மாம்பாளும் அவனுக்கே வாழ்க்கைப்படக் சார்ந்திருக்கிறாள். நீங்கள் ஸாவித்ரியின் நகைகளை அக்கிரமமாய் அபகரித்ததினால் அவைகள் உங்களுக்குத் தக்காமற் போனதோடு, இருக்கிற நகைகளையும் பணங்களையும் ஒழித்துக்கொண்டு போயின, உதையும் கிடைத்தது. உங்களுக்குக் கஷ்டகாலம் தயாராகவிருப்பதால் மீனாக்ஷியின் பவுன்மாலையைக் கலியாணத்திற்குப் போகும்போது கையிலெடுத்துப் போனீர்கள்; அதையும் இவ்விடத்திலே வைத்துவிட்டுப் போயிருந்தால் எல்லா நகைகளோடு அதையும் கள்வர் கொண்டு போயிருப்பார்கள். இப்போது ஜெயிலுக்குப் போகவேண்டியதில்லை. இப்படியெல்லாம் உங்களுக்குத் தாழ்மை வந்திருக்கப்பிறரை இகழ்வது மூடத்தனத்திலும் மூடத்தனமே. இப்போது என்ன செய்வாய், கட்டின புருஷனும் ஜெயிலுக்குப் போய்விட்டான். சோற்றுக்கு விதியில்லாமல் சகல சொத்துக்களும் போய்விட்டன. நிற்கவும் நிழலில்லை. இப்படிப்பட்ட ஸ்திதியிலுள்ள உனது பெண்ணை எவனிலும் பணக்காரன் மணக்க நியாயமுண்டோ? பெண்ணுக்காவது நல்ல அழகிருந்தால் ரத்னவல்லியைக் கட்டினதுபோல் யாராவது ஒரு பணக்காரக் கிழவன் தாலிகட்டுவான்.

ஆகையால் இனியாவது தஞ்சாவூர் சாவடைபோலுள்ள உனது வாயைத் திறந்து காட்டாமலும் உன் காளித்தன்மையை களிப்புடன் வெளியிடாமலும் மானமாய் காலம் தள்ளு; அப்படி மானமாய் காலக்ஷேபம் செய்ய விதியில்லாமற்போனால் நாயைப்போல் சொன்னதை கேட்டுக்கொண்டு என் வீட்டோடு

ருந்தாயானால் கௌரவமாய்த் தின்றுகொண்டு காலம் தள்ளலாம்" என்று சரமாரியாய்ப் பொழிந்துவிட்டு "கிளம்புடீ உன்புடவையை யெடுத்துக்கொண்டு ஊருக்கு, என்று தனது மனைவிக்குக் கட்டளையிட்டான். கமலம் அழகில் குறைந்தவளாயினும் புத்தியில் குறைந்தவளல்ல, ஆகையால் அவனுடனே ஆக்ஷேபமின்றி, தனது துணி முதலிய சாமான்களை யெடுத்துக்கொண்டு சீக்கிரத்தில் வெளிப்புறப்பட்டாள். இவ்வளவு வார்த்தைகளையும் மகாதுக்கத்துடன் கேட்டுக்கொண்டிருந்த காமாக்ஷிக்கு, பதில் சொல்லவாயில்லாமல் கண்ணீர் சொரிய கலங்கி நின்றாள். ரத்னவல்லி திக்பிரமை கொண்டவள் போல் தூணோடு தூணாய்ச் சாய்ந்துவிட்டாள். பலராமன் கமலத்தை யழைத்துக்கொண்டு நடந்தடி நடந்தவுடன், காமாக்ஷி கண்ணீர்விட்டு "நானினி என்ன செய்வேன்" என்று கதறினாள். இதைக் கண்ட பலராமன் மனமிரங்கி கமலத்தைப்பார்த்து உன் தாயாரையும் அழைத்துக்கொண்டுவா, அவள் கொஞ்சநாள் உன்னோடு இருக்கட்டும், பிறகு யோசித்துக்கொள்வோம்" என்று சொல்ல, அந்தப்படி கமலமும் மிருதுவான குரலுடன் "அம்மா நீ அழாமே என்னுடன் வந்திரு, அப்பாவுக்கு கஷ்டம் தெளிந்து அவர் வந்த பிறகு பார்த்துக்கொள்வோம், எனக்கும் மாமியார் நாத்தனார் ஒருவரும் துணைக்கில்லை, உன் மாப்பிள்ளை வெளியிற்போனால் நானொண்டியாய் தானிருக்கவேண்டியதாயிருக்கும்" என்று சொல்ல, காமாக்ஷி கொஞ்சம் ஆறுதலடைந்து தானும் தன்னுடைய துணிமணிகளை யெடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

பலராமன் அவர்களை யழைத்துக்கொண்டு, கல்லூர் போய், தனது பிரபுவிடம் தனக்குண்டாயிருக்கிற பாரத்தைச் சொல்லி, அவரால் சொற்ப பிரயோஜனமுமடைந்து சுகமாக ஜீவித்து வந்தான். கொஞ்சநாளைக்கெல்லாம் கமலம் புஷ்பவதி

யானாள். பலராமன் லௌகிகத்தைக் கலக்காமல் சுத்தவைதீகமாய் ருதுசாந்தி கலியாணம் செய்துகொண்டு, சமயோசிதப்படி எள்ளென்பதற்கு முன் எண்ணெயைக் கொடுத்துகொண்டு கணவன் மனதுக்குத் திருப்தியை யுண்டாக்கும் தனது மனைவியுடன் வாழ்ந்துவந்தான். காமாக்ஷியும் தனது மாப்பிள்ளைக்குப் பயந்து தனது குணங்களை வெளியிடாமல் அடங்கியிருந்து கொண்டு காலக்ஷேபம் செய்து வந்தாள். அவளிருந்து வரும் தன்மையும் குடும்பத்தில் சாமான்களை ஜாக்கிரதையாய் அதிக வ்யயமில்லாமல் காலக்ஷேபம் செய்து வருவதும் பலராமனுக்கே வியப்பையுண்டாக்கிற்று. கொஞ்சநாள் கழித்து பட்டாபிராமய்யருக்கு 5 வருஷம் தண்டனை ஆயிற்றென்று கேட்டு எல்லாரும் விசனப்பட்டார்கள்.

ரத்னவல்லியோ வென்றால் கையிற் காசுமில்லாமல் 'பயப்படாதே' யென்று சொல்ல மனுஷியாளு மில்லாமற் போனபின்பு தானாகவே சிந்திக்கிறாள்.

பலராமன் சொன்னது ரொப்ப சரி; ஸாவித்ரியால் எனக்கென்ன கெடுதி, நானேன் அவளுடைய நகைகளை யபகரிக்கஉடந்தையாயிருந்தேன்? என்னுடைய துர்பார்க்கச் செயலுக்கு, தர்மன் கட்டுப்படாவிட்டால் அதற்காக அவனை அடிக்க சொல்லலாமா? அப்படிச் செய்ததால் அல்லவா எனது ஸர்வசொத்தையும் கள்வர்கொண்டு போனார்கள். இதெல்லாமிருக்கட்டும், தாலிகட்டின அகமுடையான் தரித்திரனானாலும் தெய்வமென்றே சொல்லுகிறார்கள். அதிலும் நான்கு லக்ஷ ரூபாய் பொருமான சொத்துக்களையும் கொடுத்த மஹாத்மாவை, சோறுபோடாமல் விரட்டினேன். அவருக்கு உத்தமமான பெண்களிருந்ததால் அவர் சுகமாயிருக்கிறார். கனகவல்லியை நானெவ்வளவு கெடுத்தும் அவள் அவருடைய பெண்

ஞானதால் வழிக்கு வந்து சுகமாயிருக்கிறாள்; என்கதி யிப்போது நிற்கதியாயிற்று; இச்சிறு வயதில் உயிருடன் கணவனையிழந்தேன்; என் பொல்லாத்தனத்தால் சகல சொத்துக்களையுமிழந்தேன். இனி பிச்சைவாங்கிப் பிழைக்கவேண்டியது தான்" என்றிவ்வாறு ரத்தினவல்லி யோசித்து, கொஞ்சநாள் கனகத்தின் வீட்டில் இருந்தாள். பிறகு கடன்காரர்களின் காலில் விழுந்து "எல்லாச் சொத்துக்களையும் நீங்கள் பங்குபோட்டு எடுத்துக்கொண்டு, என் காலக்ஷேபத்திற்கு ஏதாவது கொடுங்கள்" என்று கெஞ்சிக்கேட்டு, அவர்கள் இரகத்தினுல் கொடுத்த 1000-ரூபாய்ப்பணத்தை வைத்துக் கொண்டு ஒரு சிறு குடிசையிற் குடியிருந்து கொண்டு கஷ்டஜீவனம் செய்து வந்தாள். அதன் பிறகு அவள் பதிவிரதை தானெனச் சொல்லலாம்.

---

## இருபதாம் ஆச்வாசம்.

---

### உபஸம்ஹாரம்.

ஜானகி! அவள் தான் குழந்தை, ஒரே பிடியாய் நிற்கிறாள், நீகூடக் குழந்தையா? நீ கொஞ்சங்கூட யோசிக்க மாட்டேனென்கிறாயே. அவன் நினைத்திருக்கிறவரன் எனக்கும் பிடித்துத்தானிருந்தது. இப்போது கொஞ்சம் அதிர்ப்தியாயிருக்கிறது. ஸர்வ சொத்துக்களும் போய்விட்டன. மானத்தைவிட்டு, தாய் தகப்பன்கள் பிமெஞ்சி இலாக்காவில் வசிக்கிறார்கள். இவனுக்கோ உத்தியோகம் கிடைத்து மூனு நாட்களுள் அது போய்விட்டது; இத்தனையும் போராமல் பையனிருக்குமிடமே தெரியவில்லை; அவனைத் தேடிப் பெ

ண்ணையெப்படிக் கொடுக்கலாம்; அவர் தகப்பனே ‘நீ எங்கே கொடுத்தாலும் சரி, நான் 10000மோ, 20000மோ செலவு செய்து கலியாணம்செய்து கொடுக்கிறேன்’ என்கிறார். நானொருவன் இவ்விஷயத்தில் இரவும் பகலுமாகத் தூக்கமின்றித் தவிக்கிறேன்; பெண்ணுக்கு வயதாகிவிட்டதே; ஆனிமாதம் பிறந்துவிட்டதே - என்று உன் மனதில் உதிக்கவில்லை. ஏதாவது ஒரு வரனை நான் குறிப்பிட்டால் குழந்தை சம்மதிக்கவில்லையே என்கிறாய்; இதொரு பெரிய புதுமை, உன்னைக் கலியாணம் செய்து கொடுக்கையில் உன் சம்மதத்தைக் கேட்டுத்தான் கலியாணம் நடந்ததோ; எல்லாம் நீ கொடுக்கிற இடத்தினால் அந்தக் குட்டிக்கு இவ்வளவு தைரியம்; இன்றைக்கு அஸ்தமனத்திற்குள் நீ இதற்கொரு ஸம்விதானம் செய்யாதபக்ஷத்தில் நான் வேறொருவரனைக் கண்டுபிடித்து, நாளைய தினமே கலியாணத்தை நிச்சயம் செய்து விடுவேன்” என்று, ஜானகியைப் பார்த்து வல்லபசாஸ்திரியார் சொன்னார்.

ஜானகி:—அண்ணா! தாங்கள் என்பேரில் கோபித்துக் கொள்ளக்கூடாது. குழந்தைதானென்னசெய்வாள்; அவளுக்கு அதே வரனுக்கு வாழ்க்கைப்படவேண்டுமென்று எண்ணந்தான். ஆனால் தெய்வ ஸங்கல்பம் அப்படியில்லை போலிருக்கிறது. அப்படியிருந்தால் சொத்துதான் ஏதோ போய்விட்டது; ஆன உத்யோகங்கூடப் போகவேண்டுமோ? நமக்குப் பிராப்தமில்லையென்றே நானும் நினைக்கிறேன்; படிப்பைநம்பிப் பெண்ணை கொடுப்போமென்று முன் நான் யோசித்தது தப்பிதமெனத் தோன்றுகின்றது. இன்றைக்கல்லது நாளைக்குள் நமது மாஞ்சி காமேசுவரன் வந்துவிடுவான். உடனே ஒரு ஏற்பாடு செய்துவிடுவோம்.

வல்லப:—அவனெங்கே போயிருக்கிறான்!

ஜானகி:—எனக்குத் தெரியாது அவன் போயிருக்கிற இடம்.

வல்லப:—அது தெரியாமல் எப்படிச் சொல்லத் துணிந்தாய் இன்றைக்கு நாளைக்கு வந்துவிடுவானென்று?

ஜானகி:—அவனை ஒரு வாரத்திற்குமுன் கண்டேன். அவன் தனது மித்ரன் தர்மனைத் தேடிப்போவதாயும், அடுத்த சனிக்கிழமை அவன் வீட்டில் ஏதோ விசேஷமாகையால் வெள்ளிக்கிழமை இராத்திரி, கட்டாயம் வந்துவிடுவதாயும் சொன்னான். இன்று வியாழக்கிழமை யானதால் அப்படிச் சொல்லத் துணிந்தேன்.

சாஸ்திரிகள்:—அப்படியானால் ஆகட்டும்; இன்னுமொரு நாள்தானே பார்ப்போம்; சுந்தரத்தைக் கூப்பிடு; இவ் விஷயத்தில் அவன் அபிப்பிராயத்தையும் கேட்போம்.

ஜானகியம்மாள், சரியென்று எழுந்திருப்பதற்கு முன் அந்த ஸ்தானத்திற்கு சுந்தரம் வந்து நின்றான்.

ஜானகி:—அப்பா சுந்தரம்! காபி சாப்பிடப் போனவனுக்கு எனித்தனை தாமதம்; என்ன செய்தாய், மாமா உன்னைப் பார்க்கவேண்டுமென்கிறாரே.

சுந்த:—ஆகாரமானதும் அம்மாமியுடன் சற்று பேசிக்கொண்டிருந்தேன்.

வல்லப:—அவளுடன் என்ன பேசிக்கொண்டிருந்தாய்?

சுந்த:—என்ன பேச்சு நம்மகத்தில்? எப்போதும் தர்மாம்பாள் கலியாணப்பேச்சுதான்.

வல்லப:—அதுதானே கேட்க நானும் விரும்புகிறேன்; நான் ஏதாவது சொன்னால் அச்சமயம் 'சரி சரி' யென்று சொல்லிவிடுகிறாள் அவள். பிறகு பக்கத்தில் தனதபிப்பிராயத்தை

மாறுதலாய்ச்சொல்லுகிறாள்: ஆகையால், அதையும் தெரிந்து கொள்ள வேணுமென்று நினைத்திருந்தேன்; அவனுடன் என்ன பேசிக்கொண்டிருந்தாய்; உண்மையைச் சொல்.

சுந்த:—என்ன மாமா! நானென்றைக்காவது பரிஹாஸமாகவாயினும் பொய் சொன்னதுண்டா?

சாஸ்திரிகள்:—அடே உன் யோக்கியதையைப் பிரகடனம் செய்ய இது காலமல்ல; கேட்டதற்கு பதில் சொல்.

சுந்த:—நான் ஆசாரம் செய்து எழுந்திருந்தவுடன் "எல்லாரும் சேர்ந்து குழந்தையை எவ்விடத்தில் கொடுப்பதாய்த் தீர்மானித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

வல்லப:—ஜானகி பார்த்தாயா உன் மன்னியின் தைரியத்தை? நாமெல்லாரும் சேர்ந்து குழந்தையை எங்கோ ஒரு கிணற்றில் தள்ள நினைத்திருப்பதாயும் அவளவனைக் காப்பாற்ற உத்தேசித்திருப்பதாயும் அவள் நினைவு.

ஜானகி:—அப்படி நினைக்கக்கூடாது; மன்னிக்குக் கபடமே தெரியாது, குழந்தையை எப்படியாவது தான் நினைத்தபடி நல்ல இடத்தில் கொடுக்க வேணுமென்று தாத்பர்யம்; அதை நாகரீகமாய்க் கேட்கத் தெரியாதவளுக்கு.—

வல்லப:—சரி, சரி, வேலிக்கு ஓணான் சாக்ஷி, நீ மேலே சொல் சுந்தரா. நீயவனுக்கு என்ன உத்தரமளித்தாய்?

சுந்த:—என்னைக் கேட்காமலா, உனக்குத் தெரியாமலும் நாங்கள் எங்கே அவளைக் கொடுத்துவிடப் போகிறோம் என்றேன், அதற்கு, "ஏற்கெனவே நிச்சயித்தவரை என்ன தோஷத்தைக்கொண்டு தள்ளினீர்கள்" என்று கேட்டான்.

வல்லப:—பார்த்தாயா ஜானகி! அவனுக்கு அவ்வரன் மேலேயே குறியிருக்கிறது. இந்தக்குட்டி அவனிடம் போய்

அழுதிருப்பாள், என்று நினைக்கிறேன்; அப்படியுண்டோ தர்மாம்பா ?

இதைக் கேட்ட தர்மாம்பாள் மந்தஹாஸத்துடன் தலை குனிந்து நின்றாள்.

வல்லப:—சுந்தரா! இவள் சொல்லிவிடுவாள்; நான்மாத்திரமில்லாம லிருக்கவேண்டும்; சரியிருக்கட்டும் என்ன நீ பதிலுரைத்தாய் ?

சுந்த:—"அவனுக்குச் சர்வ சொத்துக்களும் போய்விட்டனவென்றும், கிடைத்த உத்தியோகமும் தவறிவிட்டதென்றும், மாமா அஸம்மதப்படுகிறார்" என்றேன்.

வல்லப:—போட்டாயா பழியை என்மேல்; போடு போடு, நான் சுமக்கிறேன்; உங்களுக்கெல்லாம் அவளை நிர்த்தனனுக்குக் கொடுத்து, அவள் காது மூக்கில் ஒன்றுமில்லாமல் ரூ. 2½-க்கு மதுரைப் புடவை கட்டிக்கொண்டு வந்தால் பார்க்க சம்மதம்தான் போலிருக்கிறது. பிறகு அவளென்ன சொன்னாள், ஒளியாமற் சொல்லு.

சுந்த:—"அந்தப் பையனுக்குச் சொத்தில்லை யென்று தானே மாமாவுக்கு அதிருப்தி; எங்கண்ணா நம்ப தர்மாம்பாளுக்கு லக்ஷரூபாய் சொத்து கொடுக்கத் தயாராயிருக்கிறார்; அது போராதோ? நன்றாக ஸம்ஸ்கிருதம் வாசித்த நமது குழந்தையை, ஸம்ஸ்கிருதமே தெரியாத ஒரு மூடனுக்கு, சொத்திருக்கிறதென்று கொடுத்துவிட்டு இவளுடைய அருமையறியாமல் அவன் இவளை வருந்தச்செய்தால் அதை நான் பார்த்து ஸஹியேன் என்றாள்.

வல்லப:—ஸம்ஸ்கிருதம் வாசிக்காதவனெல்லாம் மூடனென்றே அவளுடைய ஸித்தாந்தம்போலிருக்கிறது.

ஜானகி:—ஆம் அவனுத்தேசம் அப்படிதான்; கொஞ்சம் அவளையும் அனுசரித்தால் நமக்கென்ன தோஷம்?

வல்லப:—ஸ்வயம் சொத்தில்லாதவனுக்கு, என்னசொத்துக்கொடுத்தாலும் மதிப்பு வருமா? அவளபிப்பிராயப்படியே ஸம்ஸ்கிருதம் படித்தவனும், சொத்துள்ளவனும் ஜகத்திலேயே மாப்பிள்ளை கிடைக்காதா? சரி, அவளைக்கூப்பிடு, இவ்விடத்தில், உன் உத்தேசப்படி நடத்த முடியாதென்று முடிவுசொல்லி விடுகிறேன்'

ஜானகி:—அண்ணா! தங்களுக்கிஷ்டமில்லாதபோனால் அவளுக்கு அதைச் சொல்லவேண்டிய தவசியமில்லை. தங்களிஷ்டப்படி நடத்தினால் தானாகவே தெரிந்து கொள்வாள்.

வல்லப:—சரி என்னிஷ்டத்திற்கு அனுகுணமாக நடத்தலாமோ இல்லையோ சொல்லடா சுந்தரம்! உன்னுடைய அபிப்பிராயத்தைப்.

சுந்த:—தங்களுடைய இஷ்டம்போல் நடத்தும் விஷயத்தில் என் அபிப்பிராயம் என் அபேக்ஷிக்க வேண்டும்?

வல்லப:—என் பிரவிருத்தியில் உனக்கும் சம்மதமில்லையென்கிறாயா? நீங்களெல்லாம் ஸ்வபக்ஷத்திலுள்ள தார்ப்பலத்தையறியாமல், பரபக்ஷத்தை ஆக்ஷேபிப்பவர்கள். வருங்காலத்தை நோக்க உங்களுக்குச் சாமர்த்தியமில்லை; உங்களையனுசரிப்பதற்காக குழந்தையை தரித்திரனுக்குக்கொடுத்துப் பிறகு அவளையும் துக்கிக்கவிட்டு நானும் துக்கிக்கேன். இவ்வாறு சொல்லி விட்டு வல்லபசாஸ்திரியார் அவ்விடத்தைவிட்டு எழுந்து போனார். அவருடைய அவ்வித சித்தாந்தத்தைப் பார்த்த தர்மாம்பாளுக்கு, புத்திகலங்கி கண்களில் நீர் ததும்பிற்று. சுந்தரமும் கண்கலங்கி நின்றான். இவர்களைக்

கண்ட நாராயணய்யரும் கொஞ்சம் கலங்கி, இவர்களை ப்பார்த்து "குழந்தைகாள், ஏன் வருந்துகிறீர்கள்; நமக்கு அந்த வரன் கிடைத்திருந்தால் அவனுக்குக் கிடைத்த உத்தியோகம் ஏன் போகவேண்டும்; அப்படிப்பட்ட குணநிதியான பர்த்தா உனக்குக் கிடைக்காமற் போன விஷயத்தில் என்னைக் காட்டிலும் உனக்கென்ன வருத்தம்? உங்கள் மாமா சொல்வதும் யுக்தமாகத்தான் இருக்கிறது. அவனுக்குப் போன உத்தியோகம் மறுபடி கிடைத்தாலும் என்ன சுகம்? நாளைக்கு உனக்கு நாலு பெண்ணும் பிள்ளையும் பிறந்து நீ ஸம்ஸாரியாக ஆய்விட்டிருந்து இந்தமாதிரி உத்தியோகம் போனால் நீ என்ன செய்வாய்; அப்போது நீ நல்லதங்காளைப்போலக் குழந்தைகளைப் பறித்துக்கொண்டு இந்த நாளை வரவேண்டும்; இதற்குத் தீர்ப்பட்டவரை உன்மாமா பார்க்கமாட்டார். கவலைப்படாதே" என்று ஸமாதானஞ் சொல்லி எல்லாரும் கலைந்தார்கள். வல்லபசாஸ்திரிகள் மறுநாளே மனைவியாரை யனுப்பி, திருவையாற்றில் 40-வேலி நஞ்சைபூமியுள்ளவனும் ஸம்ஸ்கிருதத்தில் நல்ல வ்யுத்பத்தியுள்ளவனுமான ஒரு பையனுக்கு தர்மாம்பாளைக் கொடுப்பதாய்ப்பேசி 5000-ரூபாய் வரதக்ஷிணையும், ரெண்டாயிர ரூபாய் நகை, செலவுமாய் நிச்சயித்து ஆனியீ 20உ சோமவார சுப லக்கினத்தில் விவாஹமுகூர்த்தம் வைத்து, புருஷோத்தமனுக்கும் சொல்லியனுப்பப்பட்டு, மதுரையில் விவாஹம் நடக்கவேண்டிய காரியங்கள் நடந்துவந்தன.

ஆனி 12-உ யாயிற்று. 13உ காலமே ஸ்ரீரங்கத்திலிருந்து வரும் ஒரு பிராமணனும் அவர் ஸம்ஸாரமும் வல்லபசாஸ்திரிகள் வீட்டில் அன்னையபரினம் சமைத்துச் சாப்பிட இறங்கினார்கள். அவர்கள் சாப்பிட்டுவிட்டு மத்தியானம் உட்கார்ந்திருக்கையில் வல்லப சாஸ்திரிகள் அவர்களை

யாரென்று விசாரித்தார். அந்தபிராமணர், ஒரு கடிதத்தை சாஸ்திரிகளிடம் கொடுத்து, "நாங்கள் ராமேசுவரமிருந்து திரும்பி வருகையில் ராமநாதபுரத்தில் 4-நாள் தங்கினோம்; அங்கோர், மகா தேஜோநிதியாகிய ஸன்யாசி வசிக்கிறார், அவரை நாங்கள் பிரதிதினமும் சேவித்து வந்தோம்; "நாங்கள் கோயம்புத்தூர் வாசிகளென்றும், என்பேர் நடராஜனென்றும், எனது சம்சாரமாகிய இந்த ஸ்திரீ குளித்தலை வக்கீல் கோபாலசாமி ஐயர் பெண்ணென்றும் அவள் பேர் ஸரஸ்வதியென்றும், மதுரையில் ஒரு நாளும், திருச்சியில் இரண்டு நாளும் தங்கி, நாங்கள் ஊருக்குப் போகிறோமென்றும். அவர் கேட்டதின்பேரில் என் விருத்தாந்தங்களைச் சொன்னேன்; கடைசிநாள் இந்தக்கடிதத்தை திருச்சியில் ஆண்டார் வீதியில் வசிக்கும் வல்லப சாஸ்திரிகளிடம் கொடுத்து அந்த வீட்டிலேயே வசித்துவிட்டுப்போகவேணுமென்று சொல்லிக் கடிதத்தை என்னிடம் கொடுத்தார். நாங்களிங்கே வந்தபிறகு உங்கள் கிருகத்திலுள்ள சீலமும், ஆசாரமும் எங்கள் மனதை யின்னும் 10 நாளிருக்கும்படி தூண்டுகின்றது; அதிலும் உங்கள் மருமாளான இந்தப்பெண் ஸம்ஸ்கிருத புஸ்தகங்களைப் படித்தலும், அர்த்தம் சொல்லுதலும் எங்களை ஆனந்த ஸமுத்திரத்தில் மூழ்கச் செய்கின்றது, என்று சொன்னார்.

சாஸ்திரிகளும், கோபாலசாமி ஐயர் மாப்பிள்ளை யென்றதும், ஒருவிதமான பிரேமாவேசமுள்ள கடாக்ஷத்தால் அவரையும், அதிவிவேகியான அவர் சம்சாரத்தையும் பார்த்துவிட்டு, "பாரந்த ஸன்யாசி! நமக்கு ஏன் லெட்டர் எழுதவேணடும்" என்று சொல்லிக்கொண்டே கடிதத்தைப் படித்தார்; அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"பூர்வாசிரமத்தில் நமது அத்யந்த பிரிய சிஷ்யனான ஸ்ரீ வல்லபனுக்கு ஸர்வாபீஷ்டமுமுண்டாக நாராயணஸ்மரணம், உனது ஸஹோதரியின் புத்ரியான தர்மாம்பாளுக்கு நீ நிச்சயித்த மாப்பிள்ளையான தர்மன் என்னிடம் வந்தான்; நான் ஆசீர்வதித்தேன்; அவனுக்கு. கொஞ்சம் நவக்ரக வைகுண்யமிருந்தது. ஒரு வாரத்திற்குள் அவனுக்குப் போன உத்தியோகம் திரும்பிவரும்; அவனுடைய நஷ்டமான சொந்த சொத்துக்களும், அதைப்போல் பத்துமடங்கு சொத்துக்களும் கிடைக்கும்; அவன் ராமேசுவர ஸ்நானஞ் செய்து ஊர் வருகையில் நீ உபசரிக்கவேண்டும். அவனே நமது தர்மாம்பாளுக்கு உசிதமான பர்த்தா" இப்படிக்கு; யோகானந்த ஸரஸ்வதி, (பூர்வாசிரமத்தில்):—கிருத்திவாஸ சாஸ்திரிகள்.

இதைப்படித்த வல்லப சாஸ்திரிகளுக்கு, புத்தி கலங்கி உடம்பு ஸ்தம்பித்தது. இதைப்பார்த்த நடராஜ சாஸ்திரிகளும், ஸரஸ்வதியம்மாளும் "ஐயோ! நாமேதோ துக்க ஸமாச்சாரம் கொண்டுவந்தோமோ" என்று வருத்தப்பட்டார்கள்; ஜானகி கௌரி முதலானவரும் "என்ன ! என்னவென்று" கேட்கலானார்கள்; வல்லப சாஸ்திரிகள் அக்கடிதத்தை எல்லாருக்கும் படித்துக்காட்டி, நடராஜசாஸ்திரிகளைப் பார்த்து, தர்மாம்பாளை தர்மனுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்ததையும், இப்போது வேறு மாப்பிள்ளையை நிச்சயித்திருப்பதும், தனது ஆசாரியரால் தனக்கிப்போது கிடைத்திருக்கும் ஆக்ஞையும் சுருக்கமாய்ச் சொல்லி, 'ஐயோ நான் அவசரப்பட்டு வேறொரு மாப்பிள்ளையை நிச்சயம் செய்துவிட்டேனே, ரூபாயும் ஆயிரம் அவர்களுக்கு கைமாட்டி விட்டேனே' யென்று கலங்கினர்.

நடராஜ சாஸ்திரி:—எனக்கிப்போது தாங்கள் சமீப பந்துவாக ஆய்விட்டபடியால் தைரியமாய்ப் பேசுகிறேன்; மன்னிக்கவேண்டும். என் மைத்துனனுக்கு இந்தப் பெண்ணைக் கொடுப்பதாக உத்தேசித்தது மாத்திரம் தைவசித்தம் என்றே சொல்லத்தக்கது. இவளுக்கும் வேறு மாப்பிள்ளை அர்கனல்ல: அவனுக்கும் வேறு பெண் அருமையல்ல, இந்த ஆயிரரூபாய்ப் பணத்துக்காகத் தாங்கள் யோசிக்கவேண்டாம்; தங்கள் பிரபுத்துவத்துக்கு இது ஒரு பெரிதல்ல: தர்மனை சிறு பிள்ளை யென்றாலும், கோபாலசாமி ஐயராவது, தனக்கு வந்த இவ்வாபத்தை எனக்குக் கொஞ்சம் தெரிவித்திருந்தாராகில் நானே சகலமான கடன்களையும் கொடுத்து அவரை யிப்படிக் கஷ்டப்படாமற் செய்வேன்; மகா மானியானதால் அவரப்படிச் செய்யவில்லை; தாங்கள் யோசிக்காமல் முதலிலுத்தேசித்த காரியத்தை மாற்றாமல் முடியுங்கள்; அப்படித் தாங்கள் மனங்கலங்கினால் நானே ஒரு லக்ஷரூபாய் என் மைத்துனனுக்குக் கொடுக்கிறேன்.

வல்லப:—நான் பணத்தைப் பெரிதாக நினைக்கவில்லை; 1000-ரூ. போனாலும் போகட்டும்; அவர்கள் துஷ்டர்கள், வியாஜ்யம் வம்புகளை இழுத்துவிடுவார்கள். இதுதான் கலக்கத்தின் காரணம்; இனி எப்படியானாலும் துணிந்துவிட்டேன், என் மருமானைத் தங்கள் மைத்துனன் பத்தினியென்றே நினைத்துக்கொள்ளுங்கள்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடன் தர்மாம்பாள், அந்தாம், கௌரி, ஜானகி, ஸரஸ்வதி ஆகிய இவர்களின் மனதில் உண்டான ஆனந்தத்தை நாம் சொல்லாமலே எல்லாரும் அறிந்துகொள்வார்கள். அப்போது கௌரியம்மாள்

தர்மாம்பாளைக் கட்டி முத்தமிட்டு, 'வத்ஸே! இன்றுதான் உன்னைக் களிப்புடன் பார்க்கிறேன்' என்றாள். பிறகு எல்லாரும் சிரித்த முகமாய் ஸரஸ்வதியம்மாளை வெகுவாக உபசரித்து, எல்லோரும் சந்தோஷத்துடன் குதூஹலத்தை யடைந்தார்கள்.

இந்த சமயத்தில் காமேசுவரன் திடீரென்று தோன்றி வல்லப சாஸ்திரிகளிடம் வந்து, அவர் வாவென்று உபசரிப்பதற்கு முன்னமே: "நான் என் ஸ்னேகிதன் தர்மனை அழைத்துவந்திருக்கிறேன், அவன் வேலையை யிழந்தவனென்று நீங்கள் அவனை யவமதிக்காமல் உபசரிக்கவேண்டும்; அவனுக்குப் போன வேலையை மறுபடியும் நீக்கினநாள் சம்பளத்துடன் கொடுக்க வேண்டியதென்று கலெக்டரிடமிருந்து நேற்றுதான் உத்திரவு வந்தது. அவனிங்குவர லஜ்ஜையை யடைகிறான்; நான் நிர்ப்பந்தப்படுத்தி யழைத்து வந்தேன்" என்று சொல்லவே, எல்லாரும் சந்தோஷித்து, "தயாராயிருக்கிறோம் அவரை யுபசரிக்க" என்று சொன்னார்கள். காமேசுவரனும் தர்மனும் வந்தார்கள். தர்மாம்பாளைத் தவிர மற்றவர்களெல்லாரும் அவரவர்களுசிதப்படி தர்மனை வரவேற்று உபசரித்தார்கள். தர்மன் தனது தமக்கையைப் பார்த்தவுடன் பரம ஆதரவுடன் அவளிடம் போய் நமஸ்கரித்து குசலத்தை விசாரித்து நீங்களிருவரும் இங்கிருப்பதாய் முந்தாநாள் ராமநாதபுரத்தில் ஸ்ரீ யோகானந்த ஸ்வாமிகள் சொன்னார்கள்; நேற்று திருநெல்வேலி போய் கலெக்டரிடம் வேலையை மறுபடியும் உத்திரவு வாங்கிக்கொண்டு இன்று மத்தியானம் இவ்விடம் வந்தேன்" என்றான்.

ஸரஸ்வ:—அப்பா தர்மா! இவ்வளவு கஷ்டங்களையும் எங்களுக்குச் சொல்லாமல் நீங்களே யனுபவித்ததில் எனக்கு

மிகவும் துக்கம்; நம்ம தம்பி இந்தப் பிரமாத கடனுக்காக புதுச்சேரி போகவேண்டுமா? நாங்கள் கொடுக்கவே முடியாத கடனா இது? இவ்வாபத்துக்குக்கூட உதவாத எங்கள்பணம் எதற்கிருக்கிறது? நமது கஷ்டகாலம் உங்களுக்கப்படித் தோன்றவில்லை; நல்லது உனக்கு மறுபடி வேலை கிடைத்த தைப்பற்றி ரொம்ப சந்தோஷம்.

உடனே நடராஜ சாஸ்திரிகளும் தர்பனைப் பின்வருமாறு உபசரித்துப் பேசினார்.

வல்லப:—காமேசுவரா! இத்தனை நாளாய் எங்கே போயிருந்தாய்?

காமே:—நான் தர்பனைத் தேடிக்கொண்டு, தூத்துக்குடி திருநெல்வேலி முதலிய அநேக இடங்களிலும் தேடிவிட்டு பலனில்லாமல் நேற்றுதான் ஊருக்கு வந்தேன்; இன்று அவன் தன்செயலாய் வந்து சேர்ந்தான்.

வல்லப:—அனாவசியமான கேள்வி கேட்கிறேனென்று கோபிக்கக்கூடாது. இவ்வளவு குணசீலனா யிருக்கிற இவருடைய கீர்த்தி வேலை ஒப்புக்கொண்டு 10-நாட்களுக்குள்ளேயே நாசதுர்முடி நிறைந்திருந்தது. அப்படிப்பட்டவருக்கு வேலைபோகக்காரணம் என்ன?

காமே:—காரணமா! நான்தான் காரணம் அவர் வேலையையிழக்க.

வல்லப:—(சிரித்துக்கொண்டு) அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்?

காமே:—சொல்லுகிறேன்; சொல்லுகிறேன்; நமது தர்மாம்பாளும், அப்பவும் [illegible] திருட்டுக் கேஸில் அகப்பட்டு, இவ

கோர்ட்டில் விசாரணைக்கு வந்து விடுதலையடைந்த சங்கதியுங்களுக்குத் தெரியுமல்லவா; அவ்விஷயத்தில் அவ்விடத்திய ஸப் இனிஸ்பெக்டர், அதாவது, இவர்களிருவரையும் தொந்தரவு செய்தவர்; "நல்ல திருட்டுக் குற்றவாளிகளை தனதிஷ்ட ஜனங்களென்று இவர் விடுதலை செய்துவிட்டார்" என்று, காரணங்களையும கற்பனை செய்து சப் கலெக்டருக்கு ஒரு பெட்டிஷன் எழுதியிருந்தார். துரை புதிதானபடியால், "உத்தியோகம் கிடைத்த கொஞ்ச தினங்களுக்குள் இவ்வளவு பெரிய புகாரை சம்பாதித்துக் கொண்டவன் வேலைக்காகான்" என்று இவரை மறு உத்திரவு வரையில் ஸஸ்பெண்டு செய்துவிட்டார். இந்த பேபர் பெரிய கலெக்டருக்குப் போனவுடன் அவர் நம்பர் கட்டை வரவழைத்துப் பார்த்து இவரை வேலையிலிருந்து நீக்கினது தப்பென்று எழுதி, வீட்டிலிருந்த நாளுக்குக்கூட சம்பளத்துடன் வேலை கொடுக்கத் தயாராயிருக்கையில், இவர் தற்செயலாய் ராமேசுவரமிருந்து திருநெல்வேலி போய் கலெக்டரைப் பார்க்க அவர் உத்திரவைக் கையிற் கொடுத்தார், புதன்கிழமை இரவு தூத்துக்குடி போகவேண்டுமாம்.

இதைக்கேட்டவுடன் எல்லாரும் ஆனந்தித்தார்கள். இந்த சமயத்தில் யாரோ சப்பாத்துக்காலுடன் வருவதாய்ச் சத்தம் கேட்டது. யாவரும் மலைத்துப்பார்த்தார்கள். உடனே இனிஸ்பெக்டர் வெங்கட்டராம ஐயர் ஒரு ஆள்தலையில் ஒரு பெட்டியைத் தூக்கிவரச்செய்து முன்னே இவரும் பின்னே அந்த ஆளுமாக வந்தார். எல்லாரும் வெகு விமரிசையாய் அவரை வரவேற்று உபசரித்தார்கள். அவர் பெட்டியைக் கீழே வைக்கச்சொல்லிவிட்டு தர்மனைப்பார்த்து "மிஸ்டர் தர்மராஜ ஐயர்! தங்களுடைய தாயார் நகைகளைக் கண்டுபிடிக்க முயன்று கொண்டிருந்தேன். கோயம்புத்தூ

தில் ஒரு வேலைக்காகப் போயிருக்கையில் உமது தாயாரின் தங்கை ரத்தினவல்லி பைத்தியம் பிடித்து, தெருத் தெருவாய்த் திரிவதைக் கண்டேன்; அவளைப்பற்றி விசாரித்ததில் உன் தாயார் நகைகளை அவளும் அவளுடைய தமையனும் திருடினார்களென்றும், அந்த நகைகளை ரத்தினவல்லியின், 2-3-லக்ஷ ரூபாய் நகைகளுடன் கள்வர் கொண்டுபோய் விட்டார்களென்றும், அதனால் இவளுக்கு சர்வசொத்துக்களும் போய் பைத்தியம் பிடித்தலைகிறாளென்றும் கேள்விப் பட்டேன். பிறகு அக்கள்வர்களின் உளவை விசாரித்ததில் மாடாபுரம் ஜமீன்தாரின் ஏஜெண்டு கண்ணுசாமி தேவருடைய ஆட்களாக விருக்கவேணுமென நிச்சயித்து அவரைத் தேடிச்சென்றேன். அவரிடம் டிபார்ட்மெண்டு நகல்களை விட்டுவிடும்படியாகக் கேட்டதில், அதற்கவர், 'ரத்தினவல்லி செய்த கெட்ட காரியத்திற்காக இது பதிலாகச் செய்யப் பட்டதென்றும், ஆளுக்கடங்க முடியாதென்றும், தர்மத்துக் குக்கட்டுப்பட்டுக் கொடுப்பதாகவும், அவ்வளவு நகைகளும் அன்றைய ராத்திரி அடிபட்டிருந்த ரத்னவல்லியின் தமக்கையும் அவள் புத்திரனுமே அடையவேண்டுமென்றும் அந்தப்படி சம்மதமானால் அவருடைய, அதாவது ரத்தினவல்லியின் தமக்கை புத்திரனுடைய கையெழுத்தின்படி முழு நகைகளுக்கும் ரசீது வரவேண்டுமென்றும் நகைப்பெட்டியைத் தங்கள் ஆட்கள் வசமே அனுப்பப்படுமென்றும் சொல்லி. அதற்கு நான் சம்மதித்து இப்பெட்டியுடன் இங்குவந்தேன். காமேசுவர சாஸ்திரிகள் வீட்டில் விசாரித்து, பிறகு இங்கு வந்தேன். பெட்டியைத் திறந்து பார்த்து உமது நகைகளை பொறுப்புகொண்டு ரசீதுபோட்டுக் கொடுக்கவேண்டும்" என்று சொன்னார்.

இதைக்கேட்ட தர்மன் வெங்கட்டராம ஐயரைப்பார்த்து "ஸார், என் விஷயத்தைப்பற்றி தாங்கள் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காக நான் மிகவும் கிருதக்ஞனாயிருக்கிறேன்; ஆயினும் ஒரு சங்கதி தங்களுக்கு நான் விக்ஞாபனம் செய்ய வேண்டியதாயிருக்கிறது.—அதாவது, தங்களுத்திரவுப்படி என் தாயாருடைய நகைகளை நானெடுத்துக் கொள்ளவும் ரசீது கொடுக்கவும் தடையில்லை. ரத்னவல்லியின் நகைகளையும் நானெடுத்துக் கொண்டால் ஸ்வர்ணஸ்தேயம் என்கிற மகாபாதகத்திற்கு நான் ஆளாக ஆய்விடுவேனே என்று பயப்படுகிறேன்" என்றான். இதை கேட்ட அங்குள்ளவர்களனைவரும் தர்மனுடைய உதாரமான குணத்திற்கு மெச்சினார்கள். இப்படிப்பட்ட பர்த்தாவை யடைய நான் எத்தனை கோடி ஜன்மாந்தரங்களில் எவ்வளவு புண்யம் செய்திருக்க வேண்டுமோ தெரியவில்லை, யென்று தர்மாம்பாள் மனப்பூரித்தாளே தவிர ஸ்திரீகளின் இயற்கைப்படி 2-லக்ஷரூபாய் நகைகள் வீணாகப்போகின்றனவே யென நினைக்கவில்லை.

வெங்க:-இப்பெட்டியிலுள்ள பூரா நகைகளையும் தமக்கே கொடுக்கவேண்டுமென்று இப்பெட்டியை கொடுத்தவர் சொல்லியிருக்கிறார்; அந்தப்படி செய்வதாய் நானும் ஒப்புக்கொண்டு விட்டேன். இதிலுள்ள முழுநகைகளுக்கும் தாமே ரசீது கொடுப்பதாய் சம்மதித்தாலொழிய இப்பெட்டியைத்திருப்பி யனுப்ப வேண்டியது தான்,

தர்மன்:—அதற்காக என்னைப்பிறருடைய சொத்தைக் கொள்ளையடிக்கச் சொல்லலாமா தாங்கள் ?

காமே:—அடே தர்ம, நீ இதிலுள்ள முழுநகைகளுக்கு ரசீது கொடுத்து எல்லாவற்றையு மொப்புக்கொண்டு உன் தாயார் நகைகளை மாத்திரம் ஸ்வீகரித்துக்கொள்; பாக்கியை

என்னிடம் கொடுத்துவிடு; நான்பெற்றுக் கொள்ளுகிறேன். அவளுடைய புருஷன் என் மாமியார் வீட்டில் அதாவது அவருடைய முக்தபெலன்ஜின் வீட்டில் வசிக்கிறார்.

தர்ம:—உனக் கென்னபாக்கியம், அந்நகைகளிலிருப்ப தாய் நான் நினைத்த அவைகளை உன்னிடம் ஒப்புவிப்பேன்?

காமே:—என்ன பாக்கியமோ! அந்த ரத்னவல்லி என்னு மாமியாருக்கு ஸபத்னியாகா அவளுக்குத் தான் பாக்கியம் கிடைத்திருக்கிறது. பிறகு என் மாமியாரும் என் ஸம்ஸாரமும்தான், அந்நகைகளுக்கு பாத்தியஸ்தர்கள். இவ்வளவு சொன்னால் போதாதோ? வார்த்தை சர்ப்பமேடைக்கூட வேறுமோ? நீ நியாயாதிபதியானதால் அதைக்கொடுத்துக் கொடுக்க வேண்டியதுதான்.

தர்ம:—அப்படியானால் எனக்கு யாதொரு ஆக்ஷேபமு மில்லை. உனக்காக நானே தந்து கொடுக்கிறேன்—என்று சொல்லிப்பெட்டியைத் திறந்தான். கோமுட்டிபோலுள்ள ஆயிர போல் வைரநகைகள் பளிர் என்று மின்னின. இப்படிப் பட்ட நகைகளைப் போட்டிருந்தவளா இவனுடைய தாயார்? என்று சிலர் ஆச்சரியப்பட்டார்கள். 'இப்படிப்பட்ட நகை கள் கிடைத்தும் விஷயத்திற்கூட இவன் தர்மத்தைப்பார்க் கிறானே' என்று சிலர் தர்மனைக் கொண்டாடினார்கள்.

உடனே தர்மன் தன் தாயாரின் நகைகளைத் தனியாய் எடுத்துச்சோதித்துப்பார்த்ததில், ஒரு திருகாணிகூட, குறை யாமலிருந்ததைப்பார்த்து, மாடபுரம் ஜமீன் ஏற்றவுடை பொருவாறு புகழ்ந்து, வெங்கட்டராம ஐயர் சொல்லியபடி அந்நகைகளுக்கும் ஜாப்தாபோட்டு தந்து கொடுத்தான். நகைப்பெற்றுக்கொண்டு வெங்கட்டராம ஐயரை மன்னிப்பு கேட்டுக்கொண்டு வந்த ஆட்கள் போய்விட்டார்கள். உடனே

காமேசுவரன், எல்லா நகைகளையும் பெட்டியிலடக்கம் செய்து வல்லபசாஸ்திரிகளிடம் ஒப்புவித்து விட்டு "ஸகே தர்ம! நீ தர்மத்தை கைவிடாமல் பகவானை நம்பியிருப்பதால் உனக்கபகாரம் செய்தவர்களொவ்வொருவரும் சிக்ஷையடைந்தார்கள். அதாவது, பார் உனக்கு, தர்மபாலைக் கொடுக்கக்கூடாதென்றும் அவளைத் தன் பிள்ளைக்குக்கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்றும் நினைத்த சுந்தரன், தூக்கப்பட்டான். அதற்கு உடந்தையாயிருந்த மீனாக்ஷி மானமிழந்து, தற்கொலை செய்து கொண்டாள். உன் தாயாரின் நகைகளைத் திருடின பட்டாபிராமன் 5-வருஷம் கடுங்காவலுக்குப்போனான். உன்னையும் உன் தாயாரையும் அடிக்கயத்னம் செய்த ரத்தினவல்லி பயித்தியமானாள். இவைகளெல்லாம் "தர்மமே ஜயிக்கும்" என்பதற்குக் குறிகளென்று சொல்லலாம். இப்போதுனக்கு மேன்மேல் உண்டாகும் நன்மைகளைப்பார்த்தால் உனது மாதா பிதாக்களையும் கூடிய சீக்கிரத்தில் நான் நல்ல ஸ்திதியில் பார்க்கமுடியுமென நினைக்கிறேன்." என்றான். இவர்களிவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் ஒரு பையன் வெகு வேகமாய் ஓடி வந்தான்.

காமேசுவரன் அவனைப்பார்த்து "என்னடா கலியாணராமா! இவ்வளவு வேகம்" என்று கேட்க, அதற்கந்தபையன் "உங்கள் பேருக்கொரு தந்தி வந்திருக்கிறது. உங்கள் அப்பா அதை வெகு சீக்கிரத்தில் உங்களிடம் கொடுத்து அதிலென்ன விஷயமென்று கேட்டுவரச்சொன்னார்" என்று சொல்லி ஒருலகோட்டாவைக் காமேசனிடம் கொடுத்தான். எல்லாரும் பரபரப்படைந்தார்கள். காமேசுவரன் அதைக்கவலையுடன் பிரித்து மனதோடு படித்துப்பார்த்து விட்டு மலர்ந்த முகத்துடன் 'தர்மா! உனததிர்ஷ்டமே அதிர்ஷ்டம், இதைப்பார், என்று சொல்லி அவன் கையிற் கொடுத்துவிட்டு வல்லபசாஸ்

திரிகளைப்பார்த்து" சாஸ்திரிகளே தந்தி சமாசாரம் உங்களைப் பொறுத்தது தான்; தற்காலம் புதுச்சேரியிருக்கும் தங்கள் சம்பந்தி குளித்தலை கோபாலசாமிஐயர் அனுப்பிய தந்தி. இது அவருடைய அநந்த வார்சுகேஸ் பிரிவிகௌன்ஸிலில் அவருக்கு ஸாதகமாய்த் தீர்ப்பாய் விட்டதாய் நேற்று அவருக்குத்தந்தி வந்திருக்கிறதாம், நாளை தினம் ஸம்ஸார ஸஹிதமாய் இவ்விடம் வருகிறாராம்; அவருக்கிப்போது பதினைந்து லக்ஷ ரூபாய்க்கு மேற்பட்ட பொருமானமுள்ள சொத்துக்களும் கிடைத்துவிட்டன. தைவாதீனமாய் அவருடைய பழய சொத்துக்களும், இது வரையில் ஏலம் போடப்படவில்லை. நாளைக்கே கடன் தொகைகளைக்கோர்ட்டில் கட்டிவிட்டால்எல்லாசொத்துக்களும்மறுபடிகிடைத்துவிடும்,என்றான். இவ்வார்த்தையைக் கேட்டவுடன் எல்லாரும் சந்தோஷித்தார்கள். ஸரஸ்வதி தர்மாம்பாளைக்கட்டிகொண்டு, அம்மா உனது அதிர்ஷ்டம் தான் இவ்வளவு பெருக்கும், என்று சொன்னாள். இவ்வாறு ஒன்றின் பின்னொன்றாகக்கிடைத்த சந்தோஷ சமாசாரங்களைப்பார்த்து ஆனந்தித்து வல்லபசாஸ்திரிகள் 'எனது புத்தி மோசத்தால் இப்படிப்பட்டவரை விட்டு யாருக்கோ நம்குழந்தையைக் கொடுப்பதாய் யோசித்ததை, எனது ஆசாரியரே முதல் முதலில் நிவர்த்தித்தவராகையால் அவருக்கு முதலில் நமஸ்கரிக்கிறேன்' என்று சொல்லி, எல்லாருக்கும் கற்கண்டு சர்க்கரை தாம்பூலம் முதலானவைகளை வழங்கி, சபையைக் கலைத்தார். ஸரஸ்வதி தர்மாம்பாளுக்கும் தர்மனுக்கும் நடக்கவேண்டிய கலியாணத்தையனுபவித்துவிட்டுப் பிறகு ஊருக்குப்போகிறதென்று தனது பர்த்தாவின் அனுமதிபெற்று அவருடன் தனது பிதாமாதாக்களின் வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

காமேசுவரன் தனக்குப் புதிதாய்க் கிடைத்த நகைகளில் சுமார் 20 ஆயிரம் ரூபாய் பொறுமான இரண்டொரு பெரிய நகைகளை, தர்மாம்பாளுக்கு இனுமாகக்கொடுத்தான். பாக்கியை, ஸ்ரீரங்கத்திலிருக்கும் தனது மாமியாராகிய நீலாம்பாளிடம் சேர்த்து, அவைகளை 4 பங்குகளாகப்போட்டு அவளுக்கொருபங்கும், அவளுடைய 3 பெண்களுக்கு மூன்று பங்குமாகப் பிரித்து, அவர்களில் மூத்தபெண்ணாகிய தனது சம்ஸாரத்தின் பாகத்தைத்தானே வீட்டிற்கு கொண்டுவந்து சேர்த்தான். அவன் ஸம்சாரம் ஸ்ரீரங்கத்தில் புநஷப்பிரஜையைப்பெற்று சௌக்கியமானவளென்பதை இதுவரையில் நமக்கு விவரிக்கச்சாவகாசமில்லாமற் போனதைப்பற்றிவாசகர்கள மன்னிக்கவேண்டும். வல்லபசாஸ்திரிகள் திரும்பமன்றுடியும் அது அவ்வளவு நாகரீகமாகாதென்று சொல்லி தர்மன் ராத்திரி காமேசுவரன் வீட்டிற்குப்போய்விட்டான்.

வல்லபசாஸ்திரிகள் திருவையாற்றில் நிச்சயித்தவரை எப்படி நிராகரிக்கலாமென்று யோசித்துக் கொண்டிருக்கையில் மறுநாள் திருவையாற்றிலிருந்து ஒரு ஆள் வந்து ஒரு கடிதத்தைக்கொடுத்தான். இதில் தங்களுக்கொரு ஆசௌசம் வந்துவிட்டதால் 20உ முகூர்த்தம் நடத்த முடியாதென்றும் வேறு முகூர்த்தத்திற்றான் கலியாணத்தை நடத்தவேண்டுமென்றும் அப்படிக்கு சம்மதமில்லாவிட்டால் வாங்கின பணத்தைத்திருப்பி கொடுத்து விடுகிறோமென்றும் தாங்கள் வேறொரு பெண் பார்த்து கலியாணம் செய்து கொள்கிறோமென்று எழுதியிருந்தது.

அந்த லெட்டரைப்படித்ததும், வல்லபசாஸ்திரிகளுக்கு, அதிலுள்ளஎழுத்துகள் அனைவற்றும்அமிருதபிந்துக்களாகத் தோன்றின. இவர் "பெண்ணுக்கு இத்தவருஷமேகலியாணம்

நடத்தவேண்டியதவசியமா யிருப்பதால் 20-க்கு மேற்பட்டு எங்களுக்குக் கலியாணம் நடத்த சௌகரியமில்லையென்றும், ஆகையால் வேறு பிள்ளையைப் பார்த்துக் கலியாணம் செய்து விடுவதாயும், லெட்டரில் கண்டபடி பணத்தை யனுப்பிவிடும் படியும் லெட்டர் எழுதிக்கொடுத்து சங்கர சாஸ்திரியென் பவரைத் திருவையாற்றிற்கனுப்பி பணத்தை வசூல் செய்துவி ட்டார்.

குறிப்பிட்ட தினத்தில் கோபாலசாமி ஐயர் திருச் சிக்கு வந்தார். அவருடைய கேஸ் ஜயித்துவிட்ட ஸங்க தியை யறிந்த கடன்காரர்களெல்லா மவரிடம் வந்து "நாங் கள் செய்த ஜப்தியை ரத்துசெய்துகொள்ளுகிறோமென்றும், தங்களுக்குச் சௌகரியமான காலத்தில், கடன் தொகைகளைத் தங் களிஷ்டம்போல் பெற்றுக்கொள்ளுகிறோமென்றும் சொன் னார்கள். ஆயினும் கடனை வைத்துக்கொண்டு குடித்தனம் செய்ய இஷ்டமில்லாத கோபாலசாமி ஐயர், தனக்குப் புதி தாகக் கிடைத்த பூமிகளில் தூரத்திலிருந்த சில பாகங்களை விற்பதாய்ப் பேசி 2-லக்ஷ ரூபாய் வாங்கி கடன்களைக் கொடு த்துத் தீர்த்தார். பிறகு ஸரஸ்வதி, நடராஜ சாஸ்திரிகள் தர் மன் இவர்களுடன் குளிக்கரைக்கு வந்து. முன்னைவிட அதி கப் பெருமையாயும் சுகமாயும் வசித்துவந்தார். ஸாவித்ரி திருச்சியிலிருக்கும்பொழுதே தர்மனால் கொடுக்கப்பட்ட தனது நகைகளை யணிந்து அவனுடைய சமாசாரங்களைக் கேட்டு, அவனை மெச்சி வல்லப சாஸ்திரிகள் வீட்டிற்கு மறு நாள் வந்து தர்மாம்பாளைப்பார்த்து சந்தோஷித்து அவளைக் கட்டி முத்தமிட்டாள்.

பிறகு தர்மன், தனது தாயார் அடைந்த கஷ்டங்களைக் கேட்டு மிகவும் வருத்தமுற்றனென்றாலும் அவளுக்கும் தனக் கும் ஆதாரத்தையும் பெண்ணை அந்தக் குக்கவிட்டுப்

பிராமணனை வரவழைத்து, அவனுக்குப் புத்திமதிகளைச்சொல்லி, எங்கள் கஷ்டகாலம் உன் மனதில் அப்படியெல்லாம் தோன்றச்செய்ததெனச் சமாதானப்படுத்தி அவன் பயத்தை நீக்கியனுப்பினான். மதுரையில் ஆனிமீ 20௳ கலியாண முகூர்த்தத்திற்காக வேண்டிய காரியங்களையெல்லாம் புருஷோத்தம ஐயர் நடத்திவந்தார். இதனிடையில் தாராபுரமிருந்து கலியாணியும் சுப்பராம ஐயரும் வல்லப சாஸ்திரிகளிடம் வந்து, அவர்கள் பெண்ணை, சுந்தரனுக்குக் கொடுப்பதென்றும் முகூர்த்தம் ஆனிமீ 30௳ நடத்துகிறதென்றும் தீர்மானித்துக்கொண்டு மதுரைக்குப் போய் புருஷோத்தம ஐயருக்கும் அவ்விஷயங்களைச் சொல்லி அவருடைய அனுமதியையும் பெற்றுத் தாராபுரத்தில் கலியாணத்திற்காக காரியங்களை நடத்திவந்தார்கள். இவ்விரு கலியாணங்களிலும் வரசுல்கம் வாங்குகிறதில்லை யென்றும், இஷ்டமிருந்தால் அப்பணத்திற்குப் பெண்ணுக்காவது பிள்ளைக்காவது நகைகள் போட்டுவிடுவதென்றும் இத்தக்ஷிண தேசத்தில் இப்போது வழக்கத்திலிருக்கிற, இந்த துர் வழக்கத்தை நாமனுசரிக்கவேண்டாமென்றும் தீர்மானமாயிற்று. அதனால் தர்மாப்பாளுக்கு ஜானகியின் நகைகளும், காமேசுவரனால் கொடுக்கப்பட்ட நகைகளும், தவிர புருஷோத்தம ஐயரால் போடப்பட்ட மீனாக்ஷியின் நகைகளில் ஒரு பாதியும் கிடைத்தது. மற்றொரு பாதியை சுந்தரத்திற்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் கல்யாணியின் பெண்ணுக்கு புருஷோத்தம ஐயர் போட்டார். சுப்பராமய்யரும் புருஷன் தரிக்கக்கூடிய நகைகளெல்லாம் சுந்தரத்திற்கு ஏற்கனவே இருந்தபடியால் தனது பெண்ணுக்கு ரூ. 5000-க்கு நகை செய்து கொடுத்தார். மகா வைபவத்துடன் தர்பனுக்கும் விவாகம் சாஸ்திரப்படி நடந்தது. வதூவரர்கள் இருவரும் ஸம்ஸ்கிருதத்

தில் விசேஷ பாண்டித்யமுள்ளவர்களாகையால் சகலமான மந்திரங்களின் தாத்பரியங்களையும் அறிந்து, நமது வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் எவ்வளவு மகிமையென்று களிப்புற்றார்கள். தர்மாம்பாள் அழகிலும் ஆபரணங்களிலும் வித்தையிலும் வல்லபனது பிரேமையிலும் ஈடற்றவளாயினும், சர்வஸ்திரிஜன ஸாதாரணமான கர்வத்தை யடையாமல் விநயத்துடனும், வெட்கத்துடனும், கலியாண கோலங்களை யனுபவித்தாள். புருஷோத்தம ஐயர், தான் பிறந்தது முதல் இதைத் தவிர வேறு கலியாணம் செய்ய நேராதபடியால் சிலவை யார்பாய்ச் செய்து வெகு விமர்சையாய் கல்யாணத்தை நடத்தி, சம்பந்திகளுக்கு வஸ்திரங்களினாலும் ஆபரணங்களினாலும் பணங்களினாலும் ஏராளமான மரியாதைசெய்து ஊருக்கனுப்பினார். அதிரூபமான அழகும், ஆடையாபரணங்களு மடைந்த வதூவரர்களை சகல ஜனங்களும் பார்த்து ஆநந்தித்து ஆசீர்வதித்தார்கள். குளித்தலையில் கிருகப் பிரவேசக் கலியாணமும் வெகு சிறப்பாய் நடந்தேறிற்று. சுந்தரத்தின் கலியாணம் தாராபுரத்தில் பிரபலமான ஆனந்தத்துடன் நடந்தது.

புருஷோத்தம ஐயர், வல்லபசாஸ்திரிகள் கோபாலசாமி ஐயர், காமேசுவரன் வெங்கடராம ஐயர் ஆகிய இவர்கள் சுப்புவின் சாமர்த்தியத்திற்கு மெச்சி அவள் குமாரனுக்கு லக்ஷ ரூபாய் சொத்துக்கொடுத்து காமேசுவரன மச்சினி ஸரஸ்வதியென்கிற பெண்ணையடுத்த வருஷம் கலியாணம் செய்வித்து, அவனுக்கு மேன்மேலும் படிக்க உதவிசெய்தார்கள். தர்மனுக்கு ஒருவருஷம் கழித்து தாசில்வேலைக்கு உத்தரவு கிடைத்தது. பிறகு மூன்றுவருஷம் கழித்து தர்மனைத் திருச்சினப்பள்ளியில் டிப்டி கலெக்டராக ஏற்படுத்தினார்கள்.

அதற்குள் தர்மாம்பாள் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றனள். அவள் தன் வீட்டு வேலைக்கு வேண்டிய மட்டில் வேலைக்காரர்களும் வேலைக்காரியும் இருந்தபோதிலும், தனது பர்த்தாவுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைத் தானே குறைவன்றியில் செய்துகொண்டு ஒழிந்தவேளையில் தர்மசாஸ்திரங்களையும், புராணங்களையும் பார்த்துக்கொண்டு, தன்னிடத்தில் பிரேமை நிதியான தனது பர்த்தாவுடன் நிர்வாண பாஷையிலேயே விவகாரம் செய்துகொண்டு இல்லறசுகம் இப்பாகதியில்லையென்று சொல்லும்படி சகல சுகங்களையும் அநுபவித்துக்கொண்டு தனது நூல் தனது பர்த்தாவைத்தவிர மற்ற புருஷர்களுக்குத் தெரியாமல் பிராசீன சாஸ்திரப்படி ஸ்திரீ தர்மங்களை ஒழுங்காய் நடத்தி வந்தனள். அவளுக்கு த்ரிமூர்த்திகள்போல் மூன்று புருஷப்பிள்ளைகளும் ஸாக்ஷாத்தான மாயையோ வெனச்சொல்லத் தகுந்த ஒரு கன்யாரத்னமும் பிறந்தன. அவைகளில் ஒரு குழந்தையை வல்லபசாஸ்திரிகள் தன் புத்ரனாகச்செய்து கொண்டார். ஜானகியம்மாள் தர்மாம்பாளைவிட்டு ஒருக்ஷணமேனும் இருக்க சக்தியற்றவளாதலால், அவளுக்குத் தனது பணத்தையும் கொடுத்து அவளுடன்கூட இருந்தே தன் ஆயுளை தள்ளினள். ஸாவித்ரி தனது சொந்தப்பெண்ணின் வயிற்றிற் பிறந்த குழந்தைகளையும் தர்மனுடைய குழந்தைகளையும் குளித்தலைக்குக் கொண்டாடி வைத்துக்கொண்டு தாலாட்டி சீராட்டி வளர்த்து அழைத்துவந்தாள். சந்தரம் M. A. பாஸ் செய்துவிட்டு அநேக வேலைகள் கிடைத்தபோதிலும் அவைகளை யெல்லாம் மறுத்துவிட்டு ஒரு டிப்டி கலெக்டருக்குப் பூராவாக வேலை கொடுக்கக்கூடிய தனது குடும்பத்தைத் தானே சீருடன் பார்த்துக்கொண்டு, முன்னிலும் மூன்றுமடங்கு ஜாஸ்தியான

வரும்படி யடைந்துகொண்டும்; தனது பிதாவுக்கு வேண்டிய பணிவிடைகளைத் தானேசெய்துகொண்டு, தனது தர்மபத்னியுடன் தர்மங்களையும் இல்லற சுகங்களையும் அனுபவித்துக்கொண்டும், மதுரையில் பெருங் கீர்த்தியுடன் வாழ்ந்து வந்தான். அவனுக்கும் மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும் பிறந்தன. அவற்றில் ஒன்றை வெங்கடராம ஐயர் தனது புத்திரனாக்கிக்கொண்டு தானும் மதுரையில் ஒரு வீடு வாங்கிக்கொண்டு சர்க்காரில் பென்ஷன் பெற்று சுகமாய் வாழ்ந்து வந்தார். சுப்புவின் குமாரனும் பி-ஏ-பி. எல். பரீக்ஷையிற்றேறி திருச்சியிலேயே பெயர்பெற்ற வக்கீலாக விளங்கி வந்தான்.

ஓம், தர்மோ ஜயதி.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| குலசேகரன் | 0 | 10 | ராஜாமணி | 0 | 8 |
| ஸரஸா | 0 | 10 | புத்திமானே பலவான் | 0 | 8 |
| நீலகண்டன் | 0 | 10 | புஷ்பகாந்தி | 0 | 8 |
| ராமமூர்த்தி | 0 | 10 | பீஷ்மவிஜயம் | 0 | 8 |
| புதியவனத்துக்குழந்தை | 0 | 10 | வேலையின்கூலி | 0 | 6 |
| ரோஜா | 0 | 10 | சீனிவாசன் | 0 | 6 |
| சிவானந்தன் | 0 | 10 | தேவராஜன் | 0 | 6 |
| ரஞ்சித்சிங் | 0 | 10 | நித்யானந்தன் | 0 | 6 |
| சற்குணசந்திரன் | 0 | 10 | மூன்று வைரங்கள் | 0 | 5 |
| சத்யசீலன் | 0 | 10 | சதாரத்னம் | 0 | 5 |
| ஏகம்பஞ்சகதம் | 0 | 10 | ஒரு பெண்வேலை | 0 | 5 |
| பதுமநிதி | 0 | 10 | மணவினைக்கெடுத்தது | 0 | 5 |
| ராமநாதன் 1-ம் பாகம் | 0 | 10 | காணாமற்போனவர் | 0 | 5 |
| ஷை 2-ம் பாகம் | 0 | 10 | சந்திரானனு | 0 | 5 |
| வனமீராஜா | 0 | 10 | ஸகோதரவாஞ்சை | 0 | 4 |
| மாலினீமாதவம் | 0 | 10 | தாக்ஷாயணி | 0 | 4 |
| வனஜாக்ஷி | 0 | 8 | புவனசுந்தரி | 0 | 4 |
| குணசுந்தரன் | 0 | 8 | வீணை | 0 | 4 |
| கோகர்ஜான் | 0 | 8 | கமலாம்பிகை | 0 | 4 |
| மேகவர்ணன் | 0 | 8 | தசகுமார சரித்திரம் | 0 | 4 |
| குணசுந்தரி | 0 | 8 | ஸர்தார்சிங் | 0 | 3 |
| ஞானசுந்தரம் | 0 | 8 | க்ஷத்ரியரமணி | 0 | 2 |

## பிரபோத சந்திரோதயம். விலை அணா 10.

### ப்ரம்மஸ்ரீ ராஜாசாஸ்திரியாரால் இயற்றப்பட்டது.

இந்நாடகம் ஸம்ஸ்கிருத பாஷையில் ஸ்ரீகிருஷ்ணமிச்ரர் என்பவரால் இயற்றப்பட்டது. இதன் மகிமையை [illegible] புகழ்ந்து [illegible] மாந்தர்களுக்கு [illegible] உபோதத்தை [illegible]. நிதி விவேகம், சாந்தம், கருணை முதலியவைகளும், மோகம் லோபம் முதலியவைகளுமே பாத்திரங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. எளிய தமிழில், [illegible] தமிழ் நாட்டு [illegible] அறியக்கூடியபடி எழுதப்பட்டிருக்கிறது.

## தத்வஸங்க்ரஹ இராமாயணம். 3 8 0

இது ப்ரஹ்மஸ்ரீ ராஜாசாஸ்திரியாரால் ஸமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

1. ஸ்ரீமத்ராமாயணம், பாத்மபுராணம், ஸ்ரீபாகவதம், கூர்மபுராணம், விஷ்ணுபுராணம், தர்மகண்டம் பூர்வபாகம், அகஸ்தியஸம்ஹிதை, ஹிரண்ய கர்பஸம்ஹிதை, ராமதாபி நீ உபநிஷத், மஹாபாரதம் இவைகள் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே ஸ்ரீராமபிரானாக அவதரித்தார் என்று கூறுகின்றன.

2. உத்தரதர்மகண்டம், காவேரிகண்டம், சேஷதர்மம், முதலியவை ஸ்ரீசங்கரரே ஸ்ரீராமராக அவதரித்தாரென்று கூறுகின்றன.

3. ஸ்ரீமத்ராமாயணம், பிர்ம்ஹாண்டபுராணம், ஸங்க்ரஹராமாயணம், பிர்ம்ஹபுராணம் முதலியன பிரமனே ஸ்ரீராமனாக அவதரித்தாரென்று கூறுகின்றன.

4, ஸ்காந்தபுராணம், கருடபுராணம், முதலியன சிவ விஷ்ணுக்களிருவரும் ஸ்ரீராமராக வந்ததாகக் கூறுகின்றன.

5. நிர்வாணகண்டம், ஸ்ரீமத்ராமாயணம், விஷ்ணுபுராணம், ஸ்காந்தம், பாத்மபுராணம், பிர்ம்மாண்டபுராணம் முதலியன, மும்மூர்த்திக்கும் அதீதராகிய பரம்பொருளே ஸ்ரீராமனாக அவதரித்ததென்று கூறுகின்றன.

இவ்வாறு ஸ்ரீராமாவதாரத்தை க்ரந்தங்கள் பலவாறாகக் கூறுகின்றபடியால், ஸந்தேகம் பலவாறு நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இதனை நீக்குவதன்பொருட்டு இந்நூல் வெளிவந்ததாகும்.

இந்த கிரந்தத்தை வடநாலில் இயற்றியவர் ஸ்ரீராம ப்ரம்ஹாநந்த ஸரஸ்வதிஎன்னும் மஹான். இவர் இதில் ஸ்ரீராமன் மும்மூர்த்திஸ்வரூபனென்று தத்வார்த்தங்களோடு விவரிக்கின்றார். இதுபற்றியேஇதற்குத் தத்வஸங்க்ரஹராமாயணமெனப் பெயர்கொடுக்கப்பட்டது.

## பக்தமாலா வசனம் விலை ரூபா 3 8 0.

இது மஹாராஷ்ட்ர பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. 192 விஷ்ணுபக்தர்களின் சரித்திரமடங்கியது. இதைப்படிப்பவர் யாராயினும் அவருக்கு பக்தி உண்டாகுமென்பதில் ஐயமில்லை.